
ஐயம் தெளிதல்

1



தெளிவிப்பவர்:
ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஐயம் தெளிதல்

(முதல் பகுதி)

प्रज्ञानं ब्रह्म

தெளிவிப்பவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை - 639 115
திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம்
1997

தபோவனத் தொடர் *178*

முதல் பதிப்பு 1997 3,000

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது

விலை ரூ. 60-00

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

15-4

பொருளடக்கம்

முகவுரை

தர்ம சக்கரம் இதழில் "சந்தேகம் தெளிதல், ஸத் ஸம்பாஷணை" என்னும் தலைப்புகளில் அன்பர்களுடைய சந்தேகங்கள் சுவாமி சித்பவானந்தரால் தெளிவிக்கப்பட்டு வந்தன. அவைகளையெல்லாம் தொகுத்து **"ஐயம் தெளிதல்"** என்னும் நூல் வடிவில் மூன்று பகுதிகளாக சுவாமிஜியின் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக வெளிவந்துள்ளன. முதல் பகுதி *1997*-ஆம் ஆண்டு மார்ச் மாதம் *30*-ஆம் தேதி கோவையில் நிகழ்ந்த சுவாமி சித்பவானந்தரின் நூற்றாண்டு விழாத் துவக்க நாளன்று வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து மற்றப் பகுதிகளும் வெளியிடப்பட உள்ளன. ஒரே விஷயத்தைப் பற்றிய பல கேள்விகள் பல சமயங்களில் கேட்கப்பட்டவைகளுக்குத் தகுந்த விடைகளையெல்லாம் ஒன்றுதிரட்டி இந்நூலில் தரப்பட்டிருக்கிறது. உதாரணமாகப் பிரார்த் தனையைப் பற்றிப் பலர் பல கேள்விகள் கேட்டிருப்பர். அக்கேள்வி களையும் அக்கேள்விகளுக்குரிய விடைகளையும் "பிரார்த்தனை" என்னும் தலைப்பில் இந்நூலில் தரப்பட்டிருக்கின்றன. இந்நூலின் பொருளடக்கத்தில் தலைப்புகள் தரப்பட்டுள்ளன. வாசகர்கள் பொருளடக்கத்தைப் படித்தால் தங்களுக்கு எவ்விஷயத்தில் ஐயம் இருக்கிறதோ அவ்விஷயம் அந்தத் தலைப்பில் உள்ள பகுதியில் விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சொல்லுக்குப் பொருள் தெரியாவிட்டால் அகராதியைப் புரட்டிப் பார்த்து அதற்குரிய பொருளைத் தெரிந்து கொள்கிறோம். நமக்கு ஏற்படும் ஐயங்களைப் போக்கிக் கொள்வதற்கு இந்நூலைப் புரட்டிப் பார்த்தால் தெளிவு கிடைக்கும். வாழ்க்கையில் அவ்வப்பொழுது வரும் ஐயப்பாடுகளைப் போக்கிக் கொள்வதற்கு இந்நூல் மக்களுக்கு நன்கு உதவும் என்பது ஐயமில்லை.

- சுவாமி நித்தியானந்த

தத்துவ விசாரம்

கேள்வி: *(1)* பரஞானம் என்றால் என்ன?

பதில்: பரஞானம், அபரஞானம் என ஞானம் இரு வகைப்படும். பிரபஞ்சம் அல்லது இயற்கையைப் பற்றிய ஞானத்திற்கு அபரஞானம் என்று பெயர். மெய்ப்பொருளைப் பற்றிய ஞானத்திற்குப் பரஞானம் என்று பெயர். வேதங்கள், ஆகமங்கள், பௌதிக விஞ்ஞானம் ஆகிய அனைத்தும் அபர ஞானத்தைச் சேரும்.

ஐம்பொறிகளின் மூலம் மனதைப் புறவுலகில் செலுத்திப் பெறுகின்ற ஞானம் அபரஞானம் ஆகும். ஐம்பொறிகளுக்கும் அப்பால் உள்ளதைத் தெரிவிக்கின்ற ஞானம் பரஞானம் ஆகும். அபரம் என்றால் கீழானது. பரம் என்றால் மேலானது.

பல ஜன்மங்களில் மனதைப் புறவுலகில் செலுத்திப் பெற்ற ஞானம் உள்ளத்தில் புதைந்து கிடக்கிறது. மனதை ஐம்பொறிகளின் மூலம் உலகில் செலுத்தி உலகில் உள்ள பொருள்களின்மீது ஒருமுகப்படுத்தும்போது அப்பொருளைப் பற்றிய இரகசியம் எல்லாம் நமக்கு விளங்குகிறது. பௌதிக விஞ்ஞான அறிவு இவ்வாறுதான் நமக்கு வந்துள்ளது. எதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கின்றோமோ அதைப்பற்றிய அறிவு நமக்கு ஏற்படும். "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்" என்பது இவ்வுண்மையை விளக்கும். உலக சம்பந்தமான யாவும் கீழானவையாகின்றன. அவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பெறுகின்ற ஞானமும் கீழானது ஆகின்றது. எனவே அதை அபரஞானம் என்று பகர்கின்றோம்.

உலக சம்பந்தமான பதிவுகளையெல்லாம் உள்ளத் திலிருந்து அகற்ற வேண்டும். அப்பொழுதுதான் மனதிலுள்ள உலகவாசனை அகலும். "சித்தமலம் அறுவித்து" எனத்

திருவாசகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சித்தமலம் என்பது சித்தத்திலுள்ள உலகவாசனையாகும். சித்தத்திலுள்ள உலக வாசனை நீங்க நீங்க ஆத்ம சொரூபத்தைப் பற்றிய உணர்வு உண்டாகிறது. அந்த உணர்வுக்குத்தான் பரஞானம் என்று பெயர். உலக விஷயங்கள் அடங்கியுள்ள நூல்களைக் கற்கும் போது உலகவாசனை உள்ளத்திலிருந்து ஒருபோதும் போகாது. எனவே உலகச் சிந்தனையை உணர்த்தும் நூல்களைக் கற்று உலகப் பொருள்களில் பற்றுதலை மிகுதிப்படுத்துகின்ற கல்வி மான்களைவிட உலகப்பற்றை ஒழிக்கும் வைராக்கிய புருஷர்கள் உத்தமர்களாகிறார்கள். இதனைத் தாயுமானவர், "கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்" என்று பகர்கின்றார். உலகப்பற்றை வளர்த்துக் கொண்டிருக்கும் கல்விமான்கள் ஒருக்காலும் பரஞானத்தைப் பெறமுடியாது. உலகப்பற்றை ஒழிக்கும் ஒழுக்கம் நிறைந்த உத்தமர்களே பரஞானத்தைப் பெறமுடியும். பரஞானம் மெய்ப்பொருளைப்பற்றிய உணர்வு ஆகும். இதனை வள்ளுவர்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

எனக் கூறியுள்ளார். பரஞானம் ஏற்படுகின்ற அளவு அதைப்பற்றிய சிந்தனையும் துன்பமும் அடியோடு அகலு கின்றன. உலகஞானம் அல்லது அபரஞானம் உலக இன்ப துன்பத்தை வளர்த்துக்கொண்டே இருக்கும். மெய்ப்பொருளைப் பற்றிய பரஞானம் உண்டாகும்பொழுது உலக இன்பமும் துன்பமும் நமக்கு இல்லை. "ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்" என்னும் கோட்பாடு இதனை விளக்குகிறது. பர ஞானம் நம் பாரதத்துக்குரிய சொத்தாகும். நம் பாரதத்திலி ருந்துதான் பரஞானம் மற்ற நாடுகளுக்குச் சென்றிருக்கிறது. சுவாமி விவேகானந்தர் பரஞானத்தைத்தான் மேநாட்டினருக்கு எடுத்து வழங்கினார். பரஞானம் ஒற்றுமையை வளர்க்கிறது. உலக உயிர்கள் யாவும் ஒன்றின் தோற்றமே என்பதைப் பர ஞானத்தின் மூலம்தான் அறியமுடியும். உலகியல் ஞானம் வேற்றுமையை வளர்த்துக்கொண்டே போகும். பரஞானத்தை ஒதுக்கிவிட்டு அபரஞானம் என்னும் உலகியல் அறிவை

வளர்ப்பவர் உள்ளத்தில் புதைந்துள்ள சிறுமைகள் யாவும் தலையெடுக்கின்றன. அதன்மூலம் காமமும் குரோதமும் பொறாமையும் வளர்ந்து மனித சமுதாயம் அல்லல்படுகிறது. பரஞானத்தை உண்டாக்கும் ஒழுக்கம் நிறைந்த உயர் கல்வியே நமக்கு வேண்டப்படுவது ஆகின்றது.

கேள்வி: *(2)* பெருநெறி, சிறுநெறி ஆகியவைகளை எப்படிப் பாகுபடுத்துவது?

பதில்: இக்கேள்வியை வேறொரு பாங்கில் பகருமிடத்து எதைச் சன்மார்க்கம் என்றும் எதைத் துன்மார்க்கம் என்றும் பகர்வது என முடியும். இன்னும் ஒருவிதத்தில் இயம்புமிடத்து எதைத் தூய ஒழுக்கம், எதைத் தீய ஒழுக்கம் எனப் பாகு படுத்தலாம் என்பதாக முடியும். நல்லொழுக்கமும் கெட்டொழுக் கமும் எல்லா நாடுகளிலும் ஒரே பாங்கில் இல்லை. அதற் கேற்றபடி சன்மார்க்கமும், துன்மார்க்கமும் ஒரே அளவையை அடிப்படையாகக் கொண்டிருக்கமாட்டா. ஆதலால் பெருநெறி, சிறுநெறி என்பனவற்றைப்பற்றியே அபிப்பிராய வித்தியாசம் இருக்கும். ஆதலால் அனுஷ்டானத்திலும் மாறுபாடு இருக்கும். இரண்டொரு சான்றுகள் எடுத்துக்கொள்ளுவோம். பாதரட்சை அணிந்துகொண்டு தேவாலயங்களுக்குள் நுழையலாகாது என்பது ஆசியாக் கண்டவாசிகளுக்கு நல்லொழுக்கமாகிறது. பாதரட்சை அணிந்துகொண்டுதான் தேவாலயங்களுக்குள் புகவேண்டு மென்பது ஐரோப்பிய நாடுகளுக்கு நல்லொழுக்கமாகிறது. சகோதரர்களின் சந்ததிகளுக்கிடையில் மணம்புரிந்து கொள்ள லாகாது என்பது இந்திய ஐதிகம். சகோதரர்களின் சந்ததி களுக்கிடையில் மணம்புரிந்து கொள்ளுதல் குற்றமில்லை யென்பது அரேபிய நாட்டு ஐதிகம். இத்தகைய வேறுபாடு களைத் தேசாச்சாரம் என்று சொல்லலாம். பெருநெறியென்றோ, சிறுநெறியென்றோ இவைகளைப் பற்றி இயம்புவது எளிதன்று.

இனி, வேதாந்த பூர்வமாகச் சன்மார்க்கத்தையும் துன் மார்க்கத்தையும் பாகுபடுத்துதற்கு வேறு ஓர் அளவையுண்டு. வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் மனிதன் தன்னை உயர்நிலைக்கு எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறான். தான் அடைந்துள்ள நிலை யினின்று அவன் கீழ்நிலைக்குப் போகலாகாது. மனம், மொழி,

மெய் என்னும் திரிகரணங்களைப் படைத்தவனாக மனிதன் இருக்கிறான். இம்மூன்று கரணங்களுள் ஸ்தூலமாயிருப்பது மெய் அல்லது உடல். அதைவிடச் சிறிது சூட்சுமமாயிருப்பது மொழி அல்லது சொல். இன்னும் சூட்சுமமாயிருப்பது மனம் அல்லது உள்ளம். உடலைப் பலஹீனப்படுத்துவது துன்மார்க்கம். உடலை உறுதிபடைத்ததாக ஆக்குவது சன்மார்க்கம். உடலை அசுசியாக்குவது துன்மார்க்கம். உடலைத் தூயதாக வைத் திருப்பது சன்மார்க்கம். மீதூண்கொடுத்து அல்லது உண வைக் குறைத்து உடலை வாழ்க்கைக்குத் தகுதியற்றதாகச் செய்வது துன்மார்க்கம். அளவுடன் அதற்கு உணவும் ஓய்வும் கொடுத்து முறையாக அதை வேலையில் ஈடுபடுத்துவது சன் மார்க்கம். இனி, சொல்லைக் கையாளுதலிலும் முறையொன்று உள்ளது. வாக்குத் தெளிந்ததாக இருக்கவேண்டும். உண்மை யையே பேசவேண்டும். உண்மையையும் மற்றவர்களைத் துன் புறுத்துகிற பாங்கில் பேசலாகாது. இன்சொல் பேசுதல் வேண்டும். இப்படிச் செய்வது பேச்சுக்குரிய பெருநெறியாகிறது. பொய், புன்மொழி ஆகியவற்றைப் பேசுவது சிறுநெறி; பிறரைத் துன்புறுத்துகிற பாங்கில் பேசுவதும் சிறுநெறியாகும். பிறரைக் கண்டிக்கவேண்டிய இடத்திலும் பொருந்திய பாங்கில் பேசிக் கண்டிக்கலாம். ஆக, சொல்லைச் சரியாகக் கையாளுதல் பெருநெறியாகிறது. இனி, மனதைப் பற்றிய கோட்பாடு இவ்விரண்டிலும் மேலானது. உள்ளத்தில் நல்லெண்ணமே உதயமாகவேண்டும். நல்லெண்ணம் மனிதனை உயர்நிலைக்கு உயர்த்துகிறது. வாய்திறந்து பேசாதிருந்தாலும் கெட்ட எண்ணம் உள்ளத்தில் உதிக்குமாகில் அது மனிதனைப் பாழ்படுத்துகிறது. உள்ளத்தில் உதிக்கிற நல்ல எண்ணத்தை மனிதன் தாராளமாகப் பிறரிடம் எடுத்து இயம்பலாம். கெட்ட எண்ணமோ பிறரிடம் தெரியப்படுத்துவதற்குத் தகுதியற்றதாகிறது. எண்ணத்துக்கு ஏற்ற வாறு மனிதன் மேன்மையுறுகிறான் அல்லது கீழ்மையுறுகிறான்.

இனி, பெருநெறி எது என்பதைச் சுருக்கமாகக் கூறலாம். மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களைப் பயன்படுத்து தலில் மனிதன் மேன்மையுறுவானாயின் அது பெருநெறியாகிறது. அப்படியல்லாது கீழ்மையுறுவானாயின் அது சிறுநெறி ஆகிறது. யாண்டும் தன்னை உயர்நிலைக்கு எடுப்பது பெருநெறியாம்.

கேள்வி: *(3)* ஆன்மிகத்தின் பயன் என்ன?

பதில்: உலகச் செயல்கள் எல்லாம் பயன் கருதிச் செய்யப்படுகின்றன. உலகச் செயல்களைப் பயன் கருதாது பகவான் பொருட்டுச் செய்யும்பொழுது அது ஆன்மிகம் எனப்படும். உலகப்பற்றை வளர்ப்பது உலகாயதம். உலகக் காரியங்களைப் பற்றுடன் செய்தால் அவை உலகப்பற்றை வளர்த்துத் துன்பத்துக்கும் மயக்கத்துக்கும் நம்மை ஆளாக்கு கின்றன.

ஆன்மா என்பது உடலுக்கும் உள்ளத்துக்கும் அப்பால் உள்ளது. ஆன்மா பொறி புலன்களுக்கு எட்டாதது. அது மனதுக்கு அப்பாற்பட்டது. புலன் நுகர்ச்சியைக் கடந்து அருள் உணர்ச்சியை மனதில் உண்டாக்கும்பொழுதுதான் ஆன்ம தரிசனம் கிடைக்கும். ஆன்ம தரிசனம் பெறுவதைத்தான் ஆன்மிகம் என்கின்றோம். ஆன்மிகம் ஒப்பற்ற உயர்ந்த நிலையாகும். ஆன்மிகத்துக்கு மேல் உயர்ந்த நிலை இல்லை. உயர்வற உயர்நலத்தை நல்குவது ஆன்மிகம். 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்ற நிலையை ஆன்மிகத்தால் பெறலாம். ஆன்மிக வாழ்க்கைக்கு நிகரான வாழ்க்கை எதுவும் இருக்கமுடியாது. பேரறிவையும், பேரின்பத்தையும், பேராற்ற லையும் ஆன்மிகத்தின் மூலம் பெறலாம். சாந்தி, அடக்கம், அமைதி, அருள்நிலை ஆகியவற்றை ஆன்மிகம் நல்குகின்றது. ஆன்மிக வாழ்வு வாழ்கின்றவன் அழியாப் பெருவாழ்வை அடைகின்றான். மரணமிலாப் பெருவாழ்வு அவனுக்கே சொந்தம். ஆன்மிக வாழ்வு வாழ்பவன் ஆசைக்கு அடிமைப்படுவதில்லை. சிற்றியல்பையும் சிற்றுணர்வையும் கடந்து பேரியல்பையும் பேருணர்வையும் பெறும் தெய்வீக மனிதனாக ஆன்மிக வாழ்வு வாழ்பவன் மாறி அமைகின்றான்.

எல்லா உயிர்களும் இன்பத்தையே நாடுகின்றன. உண்மை யான இன்பத்தைப் பெறாது போலி இன்பத்தைப் பெற்று அதுதான் இன்பம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றன. உண்மையான இன்பம் ஆன்மிக இன்பமேயாகும். ஆன்மிக வாழ்வின் மூலம்தான் உண்மையான பேரின்பத்தைப் பெற முடியும். விஞ்ஞான வளர்ச்சியின் மூலம் ஜடசக்தியை நன்கு பயன்படுத்திப் பிரபஞ்ச வாழ்வை வசதி நிறைந்த வாழ்வாக

இன்று அமைத்துக் கொண்டுள்ளனர். இதில் மேநாட்டினர் சிறந்து விளங்குகிறார்கள். விஞ்ஞான வளர்ச்சியடைந்துள்ள மேநாட்டினர் நிம்மதியான வாழ்வு எங்குக் கிடைக்கும் என அலைந்து திரிகின்றனர். நிம்மதியான வாழ்வுக்காக இந்தியாவை நாடி வருகின்றனர். ஆன்மிகத்தின் மூலம்தான் சாந்தியையும், நிம்மதியையும் பெறமுடியும் என்பதை மிகப் பழங்காலத்திலேயே நம் முன்னோர்கள் கண்டுபிடித்து விட்டனர்.

கேள்வி: *(4)* ஆன்மா, மெய்யறிவு, ஆன்மிகம் இவற்றிற் குரிய விளக்கம் யாது?

பதில்: பச்சைநிறக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்ப்பவனுக்கு எல்லாப்பொருள்களும் பச்சையாகத் தோன்றும். சிவப்புநிறக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்ப்பவனுக்கு எல்லாம் சிவப்பு நிறமாகத் தோன்றும். கண்ணாடியினுடைய வர்ணத்திற்கு ஏற்பப் பொருள்களிடத்து வர்ணத்தைக் காண்கின் றான். உண்மையில் இவன் காண்கின்ற வர்ணம் இவன் அணிந்துள்ள கண்ணாடியில் இருக்கிறதே தவிர இவன் காண்கின்ற பொருள்களிடத்து இல்லை. ஆனால் வர்ணக் கண்ணாடியை அணிந்திருப்பவன் தான் காண்கின்ற வர்ணம் பொருள்களிடத்து இருப்பதாக உணர்கின்றான். அணிந்திருக் கின்ற வர்ணக் கண்ணாடியை எடுத்துவிட்டு நிறமற்ற கண்ணா டியை அணிவானானால் பொருள்களிடத்து நிறத்தைக் காண மாட்டான். மனம் என்னும் கண்ணாடியைக் கொண்டுதான் நாம் உலகைக் காண்கின்றோம். ஆகையால் மனத்திலுள்ள உபாதிகளுக்கு ஏற்பப் பொருள்கள் நமக்குக் காட்சி தருகின்றன. மனிதன் என்னும் உபாதியை மனதிலிருந்து அகற்றிவிட்டால் நாம் மனிதனைக் காணமாட்டோம். ஆணாகத் தென்படுவதும் பெண்ணாகத் தென்படுவதும் ஒரே பொருள். இன்னும் பெண் ணிடத்து மனம் பல வேற்றுமைகளைக் காண்கிறது. ஒரு பெண்ணை ஒரு மனம் மனைவியாகக் காண்கிறது. அதே பெண்ணை மற்றொரு மனம் தாயாகக் காண்கிறது. அதே பெண்ணை மற்றொரு மனம் மகளாகக் காண்கிறது. ஓர் ஆணை ஒரு மனம் கணவனாகக் காண்கிறது. அதே ஆணை மற்றொரு மனம் தந்தையாகக் காண்கிறது. அதே ஆணை

மற்றொரு மனம் மகனாகக் காண்கிறது. இத்தனை காட்சிகளும் மனதிலுள்ள உபாதிகளேயாம். மனதில் உள்ள உபாதிகளை அகற்றும்பொழுது இக்காட்சிகள் எல்லாம் மறைந்துபோய்விடும். அப்பொழுது உலகில் ஒரே ஒரு பொருளைத்தான் காண்கின் றோம். அந்தப் பொருளுக்குத்தான் ஆத்மா என்று பெயர். இந்த ஆத்மாதான் உண்மையில் இருக்கிறது. இந்த ஆத்மாவை அறிகின்ற அறிவுக்குத்தான் மெய்யறிவு என்று பெயர்.

மனதிலுள்ள உபாதிகளை அகற்றுவதற்குரிய ஒழுக்கமான வாழ்வும் விவேக வைராக்கியத்துடன் கூடிய வாழ்வும் ஆன்மிகம் எனப்படுகிறது. ஆத்மாவை அறிவதற்குரிய ஆன்மிக வாழ்விலி ருந்து ஆத்மாவை அறியும் மெய்யறிவு உண்டாகிறது.

கேள்வி: *(5)* ஒருவன் எப்போது ஞானியாவான்?

பதில்: இக்கேள்வியானது வெளிச்சம் எப்பொழுது உண் டாகும் என்று கேட்பதை ஒத்திருக்கிறது. இருள் நீங்கினால் வெளிச்சம் வரும். அதுபோன்று அக்ஞானம் நீங்கினால் ஞானம் வரும். அக்ஞானி சரீரத்தைத் தன்மயமாக உணர்கிறான். ஞானியோ ஆத்ம சொரூபத்தைத் தன்மயமாக உணர்கிறான். சரீர உணர்வைக் கடந்து சொரூபத்தை உணரும்பொழுது ஒருவன் ஞானியாகின்றான்.

ஸத் சித் ஆனந்தம்தான் சொரூபம் ஆகும். சொரூபத்தைப் பற்றி நினைக்கும்பொழுது மனது சதா ஆனந்தத்தில் இருக்கிறது. ஆகையால்தான் 'ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்' என்ற கோட்பாடு வந்தது. சரீரத்தைப்பற்றி நினைக்கும் பொழுது மனதில் காம சம்பந்தமான உணர்வு ஏற்படுகிறது. அவ்வுணர்வு சொரூபத்தை மறைத்து மனதைக் கீழ்நிலைக்கு எடுத்துச் செல்கிறது. சிற்றின்பத்திலிருந்து மனதை விலக்கி எடுத்துச் சொரூபத்தில் வைப்பதே ஞானம் பெறுவதற்கு உபாயமாகும். பிரம்மச்சரியம் என்னும் மகா விரதத்தைக் கடைப்பிடிப்பவர் ஞான நிலைக்குப் போகின்றார்.

கேள்வி: *(6)* புத்தர் பரப்பிய மதத்திற்குப் புத்த மதம் என்றும், மகமது பரப்பிய மதத்திற்கு மகமதிய மதம் என்றும் பெயர் வந்துள்ளன. ஹிந்து மதம் என்று பெயர் வரக்

காரணம் என்ன? விளக்கியருள வேண்டுகிறேன்.

பதில்: உலகிலுள்ள பல மதங்கள் அந்தந்த மத ஸ்தாபகர்களுடைய பெயரால் அமைந்தவைகள். மதங்களுள் மிகப் பழையது ஹிந்துமதம். ஆனால் பழங்காலத்தில் அதற்கு ஒரு பெயரும் கிடையாது. நாளடைவில் அது சனாதனதர்மம் என்னும் பெயர் பெற்றது. எக்காலத்துக்கும் உரிய வாழ்க்கை நெறி என்பது அதன் பொருள். நாளடைவில் இந்தியாவுக்குள் வேறு பல மதங்கள் வந்தபிறகு இந்தத் தாய்மதத்துக்கு ஹிந்துமதம் என்னும் பெயர் வந்தது. இந்தியாவில் தோன்றி இந்தியாவிலே இருப்பதால் இதற்கு இப்பெயர் அமைந்துள்ளது. இப்பழைய மதத்தின் விளக்கத்துக்குப் பல பெரியார்கள் தொண்டு புரிந்திருக்கின்றனர். ஆனால் அப்பெரியார்களுடைய பெயரை அடிப்படையாகக் கொண்டு ஹிந்துமதம் உருவெடுத்ததன்று. தத்துவங்களை அடிப்படையாகக்கொண்டு அது உருவெடுத்துள்ளது. ஆகையினால்தான் அதற்கு அமைந்துள்ள பெயரும் சனாதனதர்மம் என்னும் பொதுப்பெயராகும். கணிதத்தில் இந்தியர்களுடைய கணிதம் என்றும், அயல் நாட்டவர்களுடைய கணிதம் என்றும் வேறுபாடு இல்லை. கணிதத்தில் வல்லவர் எத்தனை பேர் அந்த சாஸ்திரத்தைப் பெருக்கினாலும் அது கணித சாஸ்திரம் என்றே பெயர் பெற்றுள்ளது. இந்தியப் பெருமக்கள் எத்தனையோ பேர் சனாதனதர்மத்தை வளர்த்து அதற்கு விளக்கம் கொடுத்தனர். அப்படி இருந்தும் அது சனாதனதர்மம் என்றே பெயர்பெற்றுள்ளது. அவதார புருஷர்கள், ரிஷிகள், ஞானிகள், யோகிகள், பக்தர்கள் கணக்கற்றபேர் ஹிந்துமதத்துக்கு உரியவர்களாக இருந்திருக்கின்றனர். அவர்களுடைய ஜீவிதங்களும், போதனைகளும் ஹிந்துமதத்துக்குப் பேராதரவு தந்து வருகின்றன. ஆயினும் மனிதனை முன்னணியில் வைக்காது தத்துவங்களை முன்னணியில் வைப்பதே ஹிந்துமதத்தின் போக்கு. அதனால்தான் எல்லா மதங்களுக்கிடையில் சமரசம் காண்பது ஹிந்துமதத்துக்கு மிக எளியதாகிறது.

கேள்வி: ***(7)*** **தர்ம சக்கரம், விஜய வருடம் பங்குனி இதழில் 85-வது பக்கத்தில் अहं ब्रह्मास्मि என்று பகரலாகாது**

எனக் கண்டிக்கிறது. ஒரு வருஷத்துக்கு முன்பு இவ்விடம் வந்திருந்த ரிஷிகேஷ் ஸ்ரீ மஹேசுவரானந்த மஹராஜ் அவர்கள் நான்கு மஹா வாக்கியங்களைத் தினந்தோறும் துயிலெழும்போதும், இரவு படுக்கப்போகும் முன்பும் தியானிக்க வேண்டியது என்று சொன்னார்கள். அந்நான்கு மஹா வாக்கியங்களாவன:

1. प्रज्ञानं ब्रह्म 2. अयमात्मा ब्रह्म 3. तत्वमसि 4. अहं ब्रह्मास्मि

1) பிரக்ஞான பிரஹ்ம 2) அயம் ஆத்மா பிரஹ்ம 3) தத்வமஸி 4) அஹம் பிரம்மாஸ்மி - இவ்விதமாகத் தினந்தோறும் செய்துவருகிறேன். நான் செய்வது சரியா?

பதில்: தேகாத்ம புத்தியுடைய ஒருவன் சரீரத்தைத் தான் என்று உணர்கிறான். சரீர உணர்வைக் கடந்த நிலை ஒன்று உண்டு. தலைவலி படைத்தவன் தலையைப்பற்றியே நினைக்கிறான். அந்நோய்க்கு ஆளாகாதவன் தன்னிடத்துள்ள அங்கங்களில் சிறந்தது தலை எனினும் அவன் அதைப்பற்றி நினைப்பதில்லை. அதேபாங்கில் சீரிய மன நிலையை அடைந் தவர்கள் உடலை உடைத்திருந்தும் உடல் உணர்வு கொள்ளாது இருக்கின்றனர். நம்மைச் சார்ந்திருக்கும் நிழலை நாம் பொருள்படுத்தாது இருக்கிறோம். மனபரிபாகம் அடைந்த வர்கள் அங்ஙனம் உடல் உணர்வு கொள்ளாதிருக்கின்றனர். அத்தகையவர்கள் 'அஹம் பிரம்மாஸ்மி' என்னும் மஹா வாக்கியத்தை ஓதி அக்கருத்தில் நிலைபெற்றிருக்க அருகதை உடையவர்கள். அதனால் அவர்கள் மேல்நிலைக்குப் போய்க் கொண்டே இருக்கின்றனர். ஆனால் உடல் உணர்வில் கட் டுண்டு கிடப்பவர்கள் 'அஹம் பிரம்மாஸ்மி' என்னும் மஹா வாக்கியத்தை ஓதுவதால் ஒரு நன்மையும் அடைந்துவிட மாட்டார்கள். 'நாராயணா' என்றும் 'சிவ சிவ' என்றும் கிளிப்பிள்ளை சொல்லிக்கொண்டிருக்கும். பூனையைக் கண்ட தும் 'கர் கர்' என்று கத்தும். உடல் உணர்வில் கட்டுண்டிருப் பவர்கள் மஹா வாக்கியம் ஓதிக்கொண்டிருப்பதற்கிடையில் கடவுள் நாமத்தை ஓதும் கிளியின் நிலையில்தான் இருக் கிறார்கள். தேகாத்ம புத்தி உடைத்திருப்பவர்கள் சோஹம், சிவோஹம் என்று சொல்லுவதற்குப் பதிலாகத் தாஸோகம் என்று சொல்லுவது மிக நன்று என்று ஸ்ரீராமகிருஷ்ண

பரமஹம்சர் எச்சரிக்கை செய்திருக்கிறார். உடல் உணர்வு இருக்கும் பரியந்தம் தன்னைப் பிரம்ம சொரூபம் என்று எண்ணுதற்குப் பதிலாகக் கடவுளின் தொண்டன் என்று எண்ணிக் கொள்வது மிகச் சிறந்தது. அதனால் அந்த சாதகனுக்கு எல்லா நன்மையும் உண்டாகிறது என்பது அதன் கருத்து. நான் கடவுளின் குழந்தை, நான் கடவுளின் தொண்டன்-இவைபோன்ற கருத்துக்கள் எல்லார்க்கும் பயன்படும். மஹாவாக்கியத்தின் கோட்பாடோ உயர்ந்த நிலைக்குப் போனவர்களுக்கு மட்டும் பயன்படும்.

கேள்வி: *(8)* உபநிஷத் வாக்கியங்களாகிய மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆச்சார்ய தேவோ பவ, அதிதி தேவோ பவ என்னும் ஆப்த மொழிகளோடு மூர்க்க தேவோ பவ என்று புதிதாக இணைத்து விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள்ளார். அப்படியானால் மூர்க்கனைத் தண்டிக்கக் கூடாதா?

பதில்: மூர்க்கன் ஒருவன் செய்கின்ற அடாத செயலைக் குறித்து அரசாங்க வர்க்கம் அவசியம் நடவடிக்கை எடுக்க வேண்டும். முறைதவறி நடப்பவர்கள்மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் தீங்கு வளர்ந்துகொண்டே போகும். ஆனால் அதிகார வர்க்கம் செய்கின்ற தர்மத்தைத் துறவியர்கள் செய்யலாகாது. (Resist not evil) தீமையை எதிர்க்காதே என்னும் கோட்பாடு யதி தர்மம். இது அலாதியாகத் துறவியர்களுக்கே உரியது. அரசாங்கம் மட்டுமன்று; கிரஹஸ்தாச்ரம தர்மமும் தீமையை எதிர்த்தலேயாம். தீமையை எதிர்த்து அதைத் தண்டித்து அடக்கி வைப்பது இவ்வுலக வாழ்க்கைக்குரிய கடமையாகும். துறவறத்தைக் கையாண்ட அப்பர் சுவாமிகளும் மாணிக்கவாசகரும் இன்னல்கள் பலவற்றிற்கு ஆளானார்கள். இன்னல்கள் புரிந்தவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று தெய்வத்திடத்தும் அவர்கள் பிரார்த்தனை பண்ணவில்லை. தங்களுக்கு வந்த துயரத்தைப் பொறுமையாக ஏற்றுக்கொண்டு அத்துயரத்தினின்று அவர்கள் மீண்டார்கள். இம்முறையை உலக மக்கள் எல்லாரும் கையாள முடியாது. கையாள வேண்டுமென்று சாஸ்திரமும் ஆணையிடவில்லை.

விவேகானந்த சுவாமிகள் உபநிஷதங்களில் அடங்கியுள்ள நான்கு ஆப்த வாக்கியங்களை அனுசரித்துத் துக்கீ தேவோ பவ; தரித்திர தேவோ பவ; மூர்க்க தேவோ பவ என்னும் மூன்று முதுமொழிகளை இணைத்துள்ளார். நரர்களை நாராயண சொரூபமாகக் கருதி அவர்களுக்குப் பணிவிடை பண்ணுவது தலைசிறந்த நரயக்ஞம் அல்லது மானுட சேவை என்று விவேகானந்த சுவாமிகள் வற்புறுத்தியிருக்கிறார். துக்கத்தில் அழுந்திக் கிடக்கின்ற ஒருவனை அனுதாபத்தோடு அணுகி அவனுக்கு முறையாகப் பணிவிடை பண்ணினால் அதனால் அவன் பெரிதும் ஆறுதல் அடைகிறான். அதற்கு மாறாகப் பழவினைப் பயனாக அவன் துக்கத்தில் அழுந்திக் கிடக்கிறான் என்னும் மனப்பான்மையுடன் அவனை விட்டு ஒதுங்கிப் போவது பக்தன் ஒருவனுடைய பாங்கு ஆகாது. பக்தன் ஒருவன் யாண்டும் துக்கப்படுபவர்களுக்கு முறையாக ஆறுதல் வழங்கவே முயன்று வருகிறான். இனி 'தரித்திர தேவோ பவ' என்பது வறுமை நோயில் வருந்துகிற ஒருவனுக்கு நேர்மையான உழைப்பு முறையும், பொருத்தமான மனப்பான்மையும் வழங்குவது நல்ல மானுட சேவையாகிறது. அத்தகைய மானுட சேவையே யோகியின் மனதைப் பண்படுத்துகிறது. அடுத்த படியாக மூர்க்கன் என ஒதுக்கப்படுபவன் அறிவிலியாக விருக்கலாம் அல்லது முரடனாகவிருக்கலாம். நரசேவையே நாராயண சேவை என்னும் கொள்கையில் உறுதிபடைத்திருக்கும் யோகி மூர்க்கனைக் கண்டு ஒதுங்குவதில்லை, அல்லது அவன்மீது கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதில்லை. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம்.

விவேகானந்தர் காலத்தில் பவ ஆஹாரி பாபா என்னும் சான்றோர் ஒருவர் இருந்தார். சமைப்பதற்கு அவர் ஒரே பித்தளைப் பாத்திரம் வைத்திருந்தார். அதை ஒரு திருடன் வந்து திருடினான். திருடிக்கொண்டு போகிற வேளையில் பவ ஆஹாரி பாபா அவனைச் சந்திக்க நேர்ந்தது. உடனே பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டுத் திருடன் ஓட்டம் பிடித்தான். அந்தப் பாத்திரத்தைக் கையில் தூக்கிக்கொண்டு பவ ஆஹாரி பாபா அவனைப் பின்தொடர்ந்து ஓடினார். பாத்திரமும் கையுமாகப் பிடித்து தன்னைப் போலீஸ்காரனிடம்

ஒப்படைக்கத் துரத்திக்கொண்டு வருகிறார் என்று எண்ணி மிகவேகமாகத் திருடன் ஓடினான். இந்தச் சான்றோரோ அவனை விடவில்லை. துரத்தி ஆளைப் பிடித்துக்கொண்டார். இருவரும் விரைந்து மூச்சு வாங்குவது ஓய்வு அடையும் வரையில் பவ ஆஹாரி பாபா காத்திருந்தார். பின்பு அன்போடு அவர் பகர்ந்ததாவது: "அன்பா, எப்பொழுது இந்தப் பாத்திரத்தில் நீ பற்றுவைத்தாயோ அப்பொழுதே இந்தப் பாத்திரம் உனக்குரியது ஆயிற்று; அது எனக்குரியது அன்று; தயவுசெய்து இதை எடுத்துக்கொண்டுபோ." பவ ஆஹாரி பாபாவின் தூய மனப்பான்மையும், உள்ளன்பும் அந்தத் திருடனுடைய மனதை அக்கணமே மாற்றிவிட்டது. அவன் இயம்பியதாவது: "பெரியோய், எனக்கு இப்பொழுது புத்தி வந்தது. திருடுகிற இப்பொல்லாத செயலை இனிச் செய்ய மாட்டேன்." கெட்டவனை நல்லவனாக்குவதற்கு இது அன்பு முறை. எல்லாராலும் இதைக் கையாள முடியாது. எனவே மூர்க்க தேவோ பவ என்னும் கோட்பாட்டை மனபரிபாகம் அடையாதவர்கள் கையாண்டால் அது கேடாய் முடியும்.

கேள்வி: *(9)* கடவுள் தாமே உயிர்கள் அனைத்துமாய் இலங்குகிறார் என்பது கோட்பாடு. அப்பெரிய பொருள் எந்தப் பந்தபாசத்திலும் கட்டுப்பட்டதன்று. அத்தகைய நித்திய முக்த வஸ்துவினின்று வந்துள்ள ஜீவர்களாகிய நாம் ஏன் கட்டுண்டவர்களாக இருக்கின்றோம்? தங்கத்தினின்று வருவதெல்லாம் தங்கம்தானே? அங்ஙனம் கடவுளிடத்திருந்து வந்துள்ள உயிர்களனைத்தும் கடவுள் போன்று எதிலும் கட்டுப்படாதவைகளாகத்தானே இருக்கவேண்டும்? நமக்குப் பந்தபாசம் எப்படி வந்தது? அருள்கூர்ந்து விளக்கியருள வேண்டுகிறேன்.

பதில்: ஈசுவரன் மாயாசகிதராயிருக்கிறார். ஜீவர்களாகிய நாமும் மாயாசகிதர்களாக இருக்கிறோம். ஈசுவரனோ மாயைக்கு அதிபதியாக இருக்கிறார். ஜீவர்களாகிய நாமோ மாயையில் கட்டுண்டவர்களாக இருக்கிறோம். இந்தப் பந்த பாசம் நமக்கு எங்கிருந்து எப்படி வந்தது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஈசுவரன் பஞ்ச கிருத்திய வடிவினராக இருக்கின்றார்.

சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் ஆகிய பஞ்ச கிருத்தியங்களும் அவருக்குச் சொந்தம். அவை களை முறையே படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்று இயம்புகின்றோம். இந்தப் பஞ்ச கிருத்தியங் களை நிகழ்த்துதற்கிடையில் இவைகளில் எவ்விதத்திலும் கட்டுண்ணாதவராக இறைவனிருக்கிறார். மற்று ஜீவர்களாகிய நாமோ இந்த ஐந்து வினைகளிலும் கட்டுண்டவர்களாக இருக்கிறோம். ஜீவர்கள் அனைவரும் இந்த ஐம்பெரும் செயல் களில் கட்டுண்ணாதவர்களாக இருப்பார்களானால் பிரபஞ்சத் தோற்றத்திற்கு இடமில்லை. மறைத்தலுக்கும் அருளுதலுக்கும் இயற்கையில் சான்றுகள் எடுத்துக்கொள்வோம். விதை ஒன்ற னுள் ஒரு மரத்தின் பாங்குகளாகிய புஷ்பம், பழம் முதலி யன மறைந்து கிடக்கின்றன. முறையாக வளர்ந்து அம் மகிமைகள் தோற்றத்திற்கு வரும்பொழுது அச்செயலை அருளல் எனலாம். இங்ஙனம் ஸ்தாவர உலகில் மறைத்தலும் அருளலும் இடம்பெற்று இருக்கின்றன. பறவை உலகில் முட்டையினுள் உயிர்த்தத்துவம் மறைந்திருக்கிறது. முட்டைகளை அடைகாத்துக் குஞ்சுபொரித்து வளர்த்து வருவது ஈசன் செயல். தக்க தருணத்தில் பறவைகள் அழகு வாய்ந்தவைகளாகவும் இனிய ஓசை வடிவெடுத்தவைகளாகவும் இலங்குகின்றன. இச்செயல் களில் மறைத்தலும் அருளலும் சேர்ந்து அமைந்துள்ளன. இதே பாங்கில் விலங்குகள் குட்டிபோட்டு அவைகளை வளர்த்து மேல்நிலைக்குக் கொண்டுவருகின்றன. அந்தந்த உயிர்வகைகள் தத்தம் இயல்புகளினின்று சிறிது காலம் மறைந் திருந்து பின்பு அவைகளைப் பெறுகின்றன. அவைகள் பரிண மித்து மானுட நிலையை எட்டும் வரையில் பிரகிருதியிலேயே கட்டுண்டவைகளாக வாழ்ந்து வருகின்றன.

மானுட நிலையை எட்டும்பொழுது பிரபஞ்ச வாழ்வுக்குரிய முன்னேற்றம் உச்சநிலையை அடைகிறது. மானுடப் பிறவியில் ஜீவர்கள் எண்ணிறந்த ஜனன மரணத்துக்கு ஆளாகி வரு கின்றனர். அத்தனை பிறவிகளில் படிப்படியாக மனபரிபாகம் வந்தமைகிறது. மனதின்கண் உண்டாகிற முன்னேற்றமே மானுடப் பிறவியின் நோக்கமாகும். பல பிறவிகளுக்குப் பிறகு பிரபஞ்ச வாழ்வின் குறைபாடுகள் மனிதனுக்கு விளங்கு

கின்றன. மரணமிலாப் பெருவாழ்வு பிரபஞ்சத்தின்கண் இல்லை. மண்ணுலக வாழ்வில் இன்பத்தைவிடத் துன்பம்தான் அதிகரித் திருக்கிறது. இந்திரியங்கள் மூலமாகப் பெறுகின்ற சுகங்கள் எல்லாம் துன்பங்களாக முடிவுறுகின்றன. இத்தகைய அனுபவம் மேலோங்குதற்கேற்ப உலகப்பற்றுக் குறைகிறது. தெய்வ நாட்டம் படிப்படியாக மேலோங்குகிறது. பரநாட்டத்திற்கேற்ப அந்தக் கரண சுத்தியும் அதிவிரைவில் வந்தமைகிறது.

மேலும், நிகழ்கிற முன்னேற்றத்தை ஒரு உபமானக் கதையின் வாயிலாகப் பரமஹம்சதேவர் விளக்குகிறார்: 'தாயும் குழந்தையும் குலாவி விளையாடுகின்றனர். விளையாட்டுக் கிடையில் தாய் திடீரென்று வேண்டுமென்றே தன்னை மறைத்து வைத்துக் கொள்ளுகிறாள். குழந்தையோ இங்கும் அங்கும் தேடிப்பார்த்துத் தன் தாயைக் கண்டுபிடிக்கமுடியாத நிலையில் இருக்கிறது; கோவென்று அது கதறி அழுகிறது. அதன் அழுகையில் தாய் ஒருவித இன்பம் காண்கிறாள். ஆனால் நெடுநேரம் தன் குழந்தையை அந்தப் பரிதாபகரமான நிலையில் வைத்திருக்க அவள் விரும்புவதில்லை. திடீரென்று குழந்தையின் முன் தோன்றி அதை மகிழ்விக்கிறாள். இங்கு மறைப்பிலும் அருள் நிலையிலும் உள்ள இனிமை உலக வாழ்க்கையின் மூலமாகக் காட்டப்படுகிறது. இதே செயல் பாரமார்த்திகப் பெருவாழ்விலும் நிகழ்கிறது. 'யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய், ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே' என்னும் கோட்பாடு பக்குவம் அடைந் துள்ள ஒவ்வொரு ஆத்ம சாதகனிடத்தும் நிகழ்கிறது. 'மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்' என்னும் கோட்பாடு நிறைவேறுகிறது. இது சிருஷ்டியின் மகிமை, இறைவன் வேண்டுமென்றே தன் சொரூபமாயுள்ள ஜீவர்களிடத் திலிருந்து தன்னை மறைத்து வைக்கிறான். அருள் நாட்டத்தின் வாயிலாகப் பக்குவமான சாதகர்களுக்குத் தன் சொரூபத்தைக் காட்டி அருளுகிறான். மறைத்தல், அருளல் என்னும் இரண்டு செயல்களுக்கும் உட்பட்டவர்களாக ஜீவர்களை இறைவன் வைத்திருப்பதால் பிரபஞ்ச வாழ்வு என்னும் உலக நாடகம் நடைபெறுகிறது. இந்த நாடகம் இறைவனுக்கும் அவனுடைய மெய்யடியார்களுக்கும் இன்பமூட்டுகிறது.

கேள்வி: *(10)* கடவுள்தான் எல்லாமாக இருக்கிறார். அப்படியானால் கடவுளை வழிபடும் பக்தன் யார்?

பதில்: கடவுள்தான் எல்லாமாய் இருப்பது பாரமார்த்திக உண்மை. அவ்வுண்மையை அனுபூதியில் கண்டறிந்த நிறை ஞானிகள் அங்ஙனம் பகர்ந்து இருக்கின்றனர். ஆனால் அப் பேருண்மையை அனுபூதியில் அடையப்பெறாத நம்மவர் களுக்குக் கடவுள் வேறு, நாம் வேறு. அதே நிலையில்தான் கடவுளை வழிபடுகிற பக்தன் இருக்கிறான். நாம் இருக்கின்ற நிலையில் கடவுளை வழிபடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் இப்பேருண்மையை நமக் கேற்றவாறு பகர்ந்து இருக்கிறார். அதாவது நாராயணனே அனைத்துமாக வடிவெடுத்து இருக்கிறான். உயிர்களோடு நீ இணக்கம் கொள்ளும்பொழுது நாராயணனோடு இணக்கம் கொள்ளுவதாக மனதுக்குள் பாவனை பண்ணிக்கொள். பிறகு அந்த வடிவத்தில் இருக்கும் நாராயணனுக்கு ஏற்றவாறு நீ இணக்கம் கொள். புலிநாராயணனுக்குப் பக்கத்தில் போகாதே. போக்கிரி நாராயணனுக்கு எட்ட இருந்துகொண்டு நமஸ்காரம் பண்ணு. அவனோடு இணக்கம் கொள்ளவேண்டாம். பக்தன் ஒருவனுக்குப் புகட்டியுள்ள நல்லறிவு ஆகிறது இக்கோட்பாடு. பக்தன் யாருக்கும் தீங்கு செய்யலாகாது. யாரையும் அலட்சியப் படுத்தலாகாது உயிர்கள் அனைத்தையும் தெய்வசொரூபமாகப் பாராட்டுவதால் பக்தன் மனபரிபாகம் அடைந்து வருகிறான். பக்தன் தானே கடவுளிடத்திருந்து வந்தவன் என்று தத்துவ விசாரத்தின் மூலமாக அறிகிறவிடத்தும் அவன் தன்னைத் தெய்வத்துக்கு அடிமையாக வைத்துக்கொள்கிறான். பக்தன் ஒருவனுடைய மனப்பான்மை இங்ஙனம் பகரப்பெறுகிறது. நான் கடவுள் என்னும் கற்கண்டைச் சுவைக்க விரும்புகிறேன். நானே கற்கண்டு ஆக எனக்கு விருப்பம் இல்லை. இப்பக்த னுடைய மனப்பான்மை கடவுளை ஆள்பவனாகவும், தன்னை ஆளப் பெறுபவனாகவும் வைத்துக்கொள்கிறது. யாண்டும் இறைவனைச் சார்ந்திருப்பதில் அவன் பரமானந்தம் அடை கிறான். தனக்கு நலனே நிகழ்ந்தாலும் சரி, கேடே நிகழ்ந்தாலும் சரி, நலன் கேடு ஆகிய இரண்டும் கலந்து நிகழ்ந்தாலும் சரி, எல்லாம் ஈசனுடைய செயல் என்று பக்தன் கருதுகிறான்.

தனக்கு வாய்த்த கேட்டைக் குறித்துப் பக்தன் குறை கூறுவது இல்லை. தனக்கு வாய்த்த நலனைக் குறித்துப் பக்தன் உவகை கொள்வதுமில்லை. செயல்கள் அனைத்தையும் கடவுளின் செயல்களாக அவன் பொருள்படுத்துகிறான்.

பக்தனுடைய பக்திக்குச் சிறந்த விளக்கம் ஆயர்பாடியில் தோன்றிய கோபிமார்கள் வாயிலாக வெளியாகிறது. கண்ணனை அவர்கள் கடவுளாகக் கருதினவர்கள் அல்லர். தங்கள் அன்புக்குரிய அருமைச் செல்வன் என்றே அவர்கள் அவனைப் பொருள்படுத்தினர். நாள் செல்லச்செல்ல அவன்பால் அவர் களுடைய அன்பு வளர்ந்துகொண்டே போனது. அந்த அன்பின் முதிர்ந்த நிலையொன்று இறுதியில் அவர்களுக்கு வாய்ப்ப தாயிற்று. கண்ணன்பால் அவர்கள் படைத்திருந்த கரைகாணாத அன்பின் விளைவாக அவர்கள் அனைவரும் கண்ணன் மயம் ஆய்விட்டனர். கோபியர்களாக இருந்தவர்கள் அத்தனைபேரும் கிருஷ்ணன் மயம் ஆயினர். அது பக்தியின் விளைவு, அது அத்வைத நிலை. பக்தன் தன்னைக் கடவுளுக்குப் புறம்பானவன் என்று துவக்கத்தில் வைத்துக் கொண்டிருந்தாலும் இறுதியில் அவன் கடவுளில் ஒன்றுபடுகிறான். ஒன்றுபட்டான பிறகு கடவுளே அனைத்துமாய் இலங்குகின்றார் என்னும் உண்மையை அவன் சுவானுபூதியில் கண்டறிகிறான். ஆதலால் பக்தனுக்கு ஜீவவியக்தி இருக்கும் வரையில் அவன் கடவுளுக்குப் புறம் பானவன். ஜீவவியக்தியைத் துடைத்தான பிறகு கடவுள் சொரூபம் ஒன்றே அவன்பால் எஞ்சியிருக்கிறது.

கேள்வி: *(11)* ஜீவர்கள் பிரம்மத்தின் சிறு பொறிகள். நாம் பிரம்மம்தான் என்றால் பிரம்மத்தைப் போலல்லாது ஜீவன் ஏன் துன்பப்படுகிறது? ஒருவன் நிரந்தர இன்பத் திலும் நிரந்தர துன்பத்திலும் இருப்பதில்லையே. ஆகவே, நாம் பிரம்மம் என்றால் ஆனந்தம் இல்லையே. ஆகவே இறைவன், உயிர், பாசம் என்ற முப்பொருள் உண்டு; ஒன்றே அல்ல. முடிவில் இருப்பவை முப்பொருளா அல்லது ஒரு பொருளா?

பதில்: ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பைப் பலவிதமான உபமானங்களைக் கொண்டு

விளக்கியிருக்கிறார்கள். உபமானத்தில் ஏகதேச உண்மைதான் கிடைக்கும். முழு உண்மையைப் படிப்பதாலும், கேட்பதாலும், ஸம்வாதம் செய்வதாலும் தெரிந்துகொள்ள முடியாது. ஆராய்ச்சி ஓரளவுக்கே உதவும். பரமாத்மாவைத் தீ என்றும் ஜீவாத்மாவைப் பொறி என்றும் சொல்லுவதில் உண்மையில் முழு விளக்கம் வருகிறதில்லை. பொறி ஆனது தீயைவிட்டுப் பிரிந்துபோய் விடுகிறது. பிறகு அணைந்தும் போய்விடுகிறது. ஆனால் ஜீவனோ பரம்பொருளை விட்டு எக்காலத்திலும் பிரிந்து போனதில்லை, இனி பிரியப் போவதுமில்லை. அவன் அக்ஞான நிலையிலிருக்கின்றபொழுது தனக்குத் தனி வியக்தி இருக்கிறது என்று எண்ணிக்கொள்கின்றான். ஜீவன் துன்பப்படுவதற்குக் காரணம் இந்த அக்ஞானமேயாம். ஆகவே அவனிடத்து ஜீவபோதம் இருக்கும் பரியந்தம் இறைவன், பாசம், உயிர் என்ற வேற்றுமையும் இருக்கிறது. பாசம் வெறும் கற்பிதம் என்பதை ஞானோதயம் உண்டாகும்பொழுது ஜீவன் தெரிந்து கொள்கின்றான். அப்பொழுது அவன் மனதை விட்டுப் பாசம் அல்லது மலம் அகன்று விடுகிறது. 'சித்தம் மலம் அறுவித்துச் சிவமாக்கி' என்பது ஆன்றோர் அனுபவம். இரண்டு சிவங்கள் இருக்கின்றன என்பது அல்ல. சிவம் ஒன்றுதான் யாண்டும் உளது. ஜீவனிடத்து அக்ஞானம் இருக்கும் பரியந்தம் அவனுக்கு இன்பதுன்பம் முதலிய இருமைகள் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. அக்ஞானம் அகன்றான பிறகு ஜீவபோதம் போய்ப் பரத்தில் ஒன்றாய்விடுகிறான். கடலை அடைந்த நதி தன் பெயரையும் வடிவத்தையும் இழந்து கடல் ஆய்விடுவது போன்றது அது. நதியானது கடலுக்கு அப்பாலிருந்து பிறகு கடலை வந்து சேருகிறது. ஜீவனோ அக்ஞானத்தில் இருக்கும் பொழுதும் பரம்பொருளிடத்திலேயே இருக்கிறான். பரம் பொருளுக்கு அன்னியமாக கணப்பொழுதாவது இவன் இருந்தது கிடையாது. ஞானம் என்பது தனக்குத்தான் அவன் கற்பித்துக் கொண்ட சிறுமையை அகற்றுதலாம். அலை கடலிலேயிருந்து, கடலிலே உருண்டு, கடலிலே ஒடுங்குவது போன்று ஜீவன் பரம்பொருளிலேயே இருந்து விதவிதமான அனுபவம் பெற்றுத் தன் யதார்த்த சொரூபத்தை ஞானத்தில் அறிந்து ஜீவபோதம் என்னும் வியக்தியைக் கலைத்துவிடுகின்றான். அப்படிக்

கலைகின்ற ஜீவன் கடைசியாகப் பகரும் சொல் 'நான் கெட்டவா பாடித்தெள்ளேணங் கொட்டாமோ.' முக்தியில் முப்பொருளும் இருக்கின்றதென்று மாணிக்கவாசகர் போன்ற மேலோர் மொழிவதில்லை. உயிர், மலம், இறைவன் என்னும் மூன்று பொருள்களை ஜீவன், ஜகத், பரம் என்று வேதாந்தம் பகர்கிறது. காண்போன், காணப்படுபொருள், காணுதல் ஆகிய மூன்றுக்கும் ஞாதா, ஞேயம், ஞானம் என்பன பரிபாஷைகளாம். இவை திரிபுபடி எனப்படுகின்றன. காணப்படுபொருள் யாவும் காண்பவனது காட்சியில் அடங்கிவிடுகின்றன. கடைசியில் காண்போன் என்னும் மெய்ப்பொருளே எஞ்சியிருக்கிறது. பிரம்மம் என்பது அதுவே. ஜீவனும் ஜகத்தும் அதில் லயமாகி விடுகின்றன.

கேள்வி: *(12)* அறிந்தோ அறியாமலோ உயிர்களனைத்தும் பரநாட்டத்திலேயே ஈடுபட்டிருக்கின்றன என்பது கோட்பாடு. ச்ரேயஸை நாடுகின்றவன் மேன்மையுறுகிறான். ப்ரேயஸை நாடுகின்றவன் கீழ்மையுறுகிறான் என்பது உபநிஷதக் கோட்பாடு. இவ்விரண்டு கோட்பாடுகளுக்கிடையில் முரண்பாடு இல்லையா?

பதில்: உயிர்களனைத்தும் பரநாட்டமே உடைத்திருக்கின்றன என்பது உண்மை. அது எப்படி என்று பார்ப்போம். நிலையற்றவைகளை ஒதுக்கி வைத்துவிட்டு நிலையுற்றவைகளை அவைகள் நாடுகின்றன. மீனுக்கு நிலையுற்ற இடம் நீர். நிலம் அதற்கு உதவாது. மீனை எடுத்து நிலத்தில் போட்டால் அது துள்ளிக்குதித்து நீரை எட்டி அதில் அது நிலைத்திருக்கிறது. பறவை ஒன்றைப் பிடித்துக் கூட்டில் அடைத்து வைத்தால் அது தன்னை விடுவித்துக்கொண்டு வானத்தில் பறந்து செல்ல முயலுகின்றது. வனத்தில் வாழும் விலங்கொன்றை வீட்டில் பிடித்து வைத்திருந்தால் மீண்டும் அது வனத்துக்கே ஓட முயலுகின்றது.

ஒவ்வோர் உயிரும் அதற்குச் சொந்தமான இடத்திற்குப் போகவே விரும்புகிறது. கடைசியாகப் பிரபஞ்ச வாழ்க்கையில் எவ்வுயிரும் நிலைத்திருக்க விரும்புவதில்லை. ஏனென்றால் அது அநித்தியமானது. அநித்தியமான இருப்பிடம் மரணத்தில்

முடிவுறுகிறது. மரணத்தை எவ்வுயிரும் விரும்புவதில்லை. எல்லா உயிர்களும் மரணமிலாப் பெருவாழ்வையே நாடி அலைகின்றன. மரணமிலாப் பெருவாழ்வு பரத்தின்கண் உளது. அடுத்தபடியாக உயிர்களனைத்தும் ஆனந்தத்தை நாடியலைகின்றன. துன்பம் தருபவைகளினின்று அவைகள் விலகிக் கொள்ளுகின்றன. மரணமிலாப் பெருவாழ்வும் பேரானந்தமும் பரத்தின் பாங்கு களாம். அத்தகைய பாரமார்த்திகப் பெருநிலையையே உயிர் களனைத்தும் நாடுகின்றன என்பது வெளிப்படை.

ச்ரேயஸ், ப்ரேயஸ் ஆகிய இரண்டுக்குமிடையில் ச்ரேயஸ் மேலானது. பரநாட்டமே ச்ரேயஸ் எனப் போற்றப்படுகிறது. ப்ரேயஸ் என்பது பஞ்சேந்திரியங்கள் மூலமாகப் பெறுகிற பிரபஞ்ச இன்பம். பாரமார்த்திகப் பெருநிலையைப் பிரபஞ் சத்தில் தேடியலைகிறவன் ஏமாற்றமடைகிறான்; துன்புறுகிறான். அவனுடைய நாட்டம் தோல்வியாக முடிகிறது. பிரபஞ்ச வாழ்வே அதற்குச் சான்றாகிறது. பஞ்சேந்திரியங்களை அடக் கிப் பிரபஞ்ச அதீதத்திலிருக்கும் பரம்பொருள் நாட்டம் பூணுவது ச்ரேயஸ். உயிர்களனைத்தும் பாரமார்த்திக நாட்டம் படைத்திருக்கின்றன என்பது வெளிப்படை. அப்பாரமார்த் திகத்தைப் பிரபஞ்சத்தில் தேடுவது ப்ரேயஸ். அதில் தோல்வி உண்டாகிறது. அப்பெருநிலையைப் பரம்பொருளிடத்துத் தேடுவது ச்ரேயஸ். அதில் மனிதன் மேன்மையுறுகிறான், வெற்றியடைகிறான். சரியான வழியில் போகிறவனுக்கு வெற்றி; சரியில்லாத வழியில் போகிறவனுக்குத் தோல்வி. ஆதலால் முரண்பாடு இல்லை.

கேள்வி: *(13)* 'ஓம் சிவாய நம' என்று சதா மனதால் தியானிக்கிறோம். 'சிவாய நம' என்றால் நான் சிவமாகவே இருக்கிறேன் என்று பொருள் சொல்லப்படுகிறது. தான் தேகம் அல்ல என்றும் தான் அறிவு சொரூபம் என்றும் தேகத்தைக் குறித்துக் கூறப்படுகிறது. ஆனால் நான் என்னும் சொல் தேகத்தைக் குறிக்கிறது. தேகத்தை நான் என்று பொருள்படுத்தியே நாம் வாழ்ந்து வருகிறோம். நாம் தேகம் அல்லவென்று சிறிது நேரம் எண்ணிவிட்டுப் பிறகு நாம் தேகமாகவே இருந்து வருவது எப்படி ஆத்ம

சாதனமாகும்? இதில் என்ன நன்மையுண்டாகும்? அருள் கூர்ந்து இதை விளக்கும்படி வேண்டுகிறேன்.

பதில்: 'சிவாய நம' என்பது ஆத்ம சாதனத்திற்குரிய ஒரு சிறந்த மந்த்ரம். மந்த்ரத்திற்கும் சாதாரண சொல்லுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. சாதாரண சொல்லை எவ்வளவுதான் உச்சரித்து வந்தாலும் அது நம்மிடத்தில் மாறுதல் எதையும் செய்யவல்லதன்று. ஆனால் மந்த்ரத்திற்கோ அருள் சக்தியுண்டு. 'சிவாய நம' என்று எவ்வளவுக்கெவ்வளவு உச்சரிக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நம் மனது திருந்தியமைகிறது. மனம் திருந்தி அமைவது எடுத்த எடுப்பில் நமக்குத் தெரியாது. சாதனத்தில் ஆழ்ந்து சென்ற பிறகே அது விளங்கும். நமக்கு விளங்காத நிலையிலும் உண்மையில் அது நம்மைப் பண்படுத்தி வருகிறது. இரயில் வண்டியில் நாம் தூங்கிக் கொண்டு போகிறபொழுதும் பிரயாணம் போய்க் கொண்டேயிருக்கிறோம். அதுபோன்று பொருள் உணராது இறைவனுடைய நாமத்தை உச்சரித்துக் கொண்டிருக்கிற பொழுதும் அது நம் மனதைப் பண்படுத்துகிறது.

'சிவாய நம' என்னும் சொல்லுக்கு நான் சிவமாகவே இருக்கிறேன் என்பதல்ல பொருள். சிவனுக்கு நமஸ்காரம் என்பதுதான் இந்த மந்த்ரத்தின் பொருள். ஆனால் அதன் பொருள் தெரியாது நான் சிவமே என்று எண்ணுவது பிசகு ஆகாது. அது சிவனுக்குச் செய்த அபராதமும் ஆகாது. குழந்தையொன்று தன்னை ராஜா என்று சொல்லுகிறது. அந்தச் சொல்லுக்கு ஏற்ற பிரகாரம் அது நடித்து விளையாடுகிறது. அதையெல்லாம் பார்த்துப் பெரியோர்கள் குழந்தையிடம் குற்றம் சாட்டமாட்டார்கள். அதன் மனப்பான்மையையும் விளையாட்டையும் மெச்சுவார்கள். தன்னை ராஜாவாக எண்ணி விளையாடுகிற சிறுவனுக்கு ராஜாவின் தன்மை கொஞ்சங் கொஞ்சமாக வருகிறது. மனிதன் எண்ணுகிற எண்ணத்திற்கேற்றவாறு அவனுடைய வாழ்வு மாறியமைகிறது. மேலான எண்ணங்களையும் தெய்வீக எண்ணங்களையும் ஆழ்ந்து எண்ணுவதற்கேற்ப மேன்மையும் தெய்வீகமும் மனிதனுக்கு உண்டாகின்றன. ஆத்மசாதகன் ஒருவன் தெய்வத்தின் தொண்டனாகத் தன்னைக் கருதலாம். தெய்வத்தின் குழந்தையாகவும்

தன்னைக் கருதலாம். தான் மனிதன் அல்லன், தெய்வம் என்றும் தன்னைக் கருதலாம். அப்படிக் கருதுவதற்கேற்ப மனிதனது தன்மை திருந்தி அமைகிறது. தன்னை ஒரு பைத்தியக்காரனாகப் பாசாங்கு பண்ணிக் கொண்டிருப்பவனுக்கு உண்மையாகவே மனக்கோளாறு வந்து விடுகிறது. தன்னைக் கடவுளின் தன்மை வாய்க்கப் பெற்றவன் என்று கருது வதற்கேற்ப அவன் சாதனத்தில் மேல்நோக்கிப் போகிறான்.

பரிபக்குவம் அடையாத நிலையில் மனிதன் தன்னைத் தேகம் என்றே கருதிக்கொள்கின்றான். அது மனிதனுடைய அக்ஞானநிலை. அக்ஞானத்திலிருக்கின்றபொழுதும் தன்னைத் தேகம் அல்ல என்றும் தான் ஆத்மசொரூபம் என்றும் எவ் வளவுக்கெவ்வளவு தனக்குத்தானே ஞாபகமூட்டிக் கொள்கின் றானோ அவ்வளவுக்கவ்வளவு சாதனத்தில் அவன் விரைந்து மேல்நோக்கிப் போகின்றான். புளியம்பிஞ்சில் மேல் ஓடும் உள்ளேயிருக்கின்ற சதையும் கொட்டையும் ஒன்றாக இருக் கின்றன. பின்பு அது முதிர்ந்து பழுக்கின்றபொழுது மேல் ஓடு வேறு, பழம் வேறு, கொட்டை வேறு இப்படிப் பிரிந் தமைகிறது. மனிதனுடைய அக்ஞான வேளையில் புளியம் பிஞ்சின் நிலையில் அவன் இருக்கிறான். பக்தி சாதனம் தீவிரமாகப் பண்ணுவதற்கு ஏற்ப உடல் உணர்ச்சியைக் கடந்து ஆத்ம உணர்ச்சியை மனிதன் எட்டுகிறான். இந்தச் சாதனம் மிகச் சிரமமானது எனினும் திரும்பத்திரும்ப இதைச் செய்து வருவதால் உடல் உணர்ச்சியைத் தாண்டி அருள் நிலையை அவன் எட்டுகிறான். ஆதலால் சர்வகாலமும் 'நமசிவாய' என்று உச்சரித்து வருவது பெரும் நலன் தரும். மற்ற அலுவல்களெல்லாம் செய்து கொண்டிருப்பதற்கிடையிலும் மனதில் 'நமசிவாய' என்றோ அல்லது அதற்கு ஒப்பாக இருக்கிற வேறு ஏதாவதொரு மந்த்ரத்தையோ சதா உச்சரித்து வருவது பெருநலன் விளைவிக்கும்.

கேள்வி: *(14)* மனம் என்னும் சொல்லால் எது குறிக்கப் படுகிறது?

பதில்: பழம் ஒன்றைக் கடையில் வாங்குகிறோம். ஆனால் வாங்கியபடி உண்பதற்கு அதை உபயோகப்படுத்துவதில்லை.

புறத்திலிருக்கும் தோலை அப்புறப்படுத்துகிறோம்; சுளையை உண்பதற்கு வைத்துக்கொள்ளுகிறோம். சுளைக்கும் மேல் தோலுக்கும் இடைநிலையில் பழத்தின் அம்சம் ஒன்று உண்டு. அந்த அம்சத்தை வேண்டுமானால் உண்ணலாம். வேண்டாமென்றால் புறக்கணித்துவிடலாம். பழத்துக்கு நிகர் மனிதன். அதன் உள்ளிருக்கும் சுளைக்கு நிகர் ஆத்மா. புறத்தில் இருக்கும் தோல் போன்றது உடல். இடையில் உள்ள வஸ்துவுக்கு நிகர் மனது. புறத்தில் ஜட உடலோடும் அகத்தில் ஆத்மாவோடும் அது மாறி மாறி இணையவல்லது. உடலோடு சேர்ந்திருக்கிறபொழுது அது ஜடப்பொருள். ஆத்மாவோடு சேர்ந்திருக்கிறபொழுது அதற்கு உணரும் தன்மை வருகிறது. இன்ப துன்பங்களை எது உணருகிறதோ அது உள்ளம் அல்லது மனம். வாழ்வையும் மரணத்தையும் எது கருத்தில் வாங்குகிறதோ அது மனம்.

கோட்டை ஒன்றுக்கு வெளிப்பக்கம் அகழி இருக்கிறது. அதைத்தாண்டி வெளியே வருவதற்கு மடக்குப் பாலம் ஒன்றிருக்கிறது. அந்த மடக்குப் பாலத்தை உள்ளே திருப்பிக் கொண்டால் வெளி உலகுக்கும் கோட்டைக்கும் தொடர்பு ஒன்றும் இல்லாது போய்விடுகிறது. அந்த மடக்குப் பாலத்துக்கு நிகர் மனம். அதன் துணைகொண்டே மனிதன் புறவுலகைப் பொருள்படுத்துகிறான். அப்படி அவன் பொருள்படுத்துதற்கு உபகரணமாகப் பஞ்சேந்திரியங்கள் அமைந்திருக்கின்றன. பஞ்சேந்திரியங்கள் வாயிலாகச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்து விதங்களில் புறவுலகம் பொருள்படுத்தப் படுகிறது. இந்த ஐந்து விதங்களில் பொருள்படுத்தாவிட்டால், புறவுலகம் இருந்தும் பொருள்படுத்தாத மனிதனுக்கு அது இல்லாது போய்விடுவதற்கு நிகராகிறது. மனது ஐம்பொறி களோடு சேருமிடத்தே அவைகளின் தொழில் பூர்த்தியாகிறது. நாவால் சுவைக்கிறோம். அப்படிச் சுவைப்பதற்கிடையில் மனது நாவோடு பொருந்தியிராவிட்டால் சுவைத்தது இன்னதென்று தெரிவதில்லை. காதோடு மனம் பொருந்தியிராவிட்டால் கேட்டது இன்னதென்று விளங்குவதில்லை. ஐம்பொறிகளுக்கும் அதிபதியாயிருந்து அவைகளின் செயல்களைப் பொருள் படுத்துவது எதுவோ அது மனது. மனம் செயலற்றுப் போகு

மிடத்துப் புறவுலகே காட்சியினின்று மறைகிறது. இங்ஙனம் உள்ளும் புறமும் இருப்பவைகளை எது பொருள்படுத்துகிறதோ அது மனது.

கேள்வி: *(15)* ஜீவாத்மா, பரமாத்மா இணக்கம் என்ன பாங்கில் அமைந்துள்ளது?

பதில்: பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து அதன் நடைமுறையை முறையாகச் சாதித்து வருபவன் பரம்பொருள் அல்லது ஈசுவரன். உலகுக்கு அதிபதியாயிருப்பவன் ஈசன். இதே உலகில் கட்டுண்டு கிடப்பவன் ஜீவாத்மா. உலகில் கட்டுண்டு கிடந்தாலும் ஈசன் அல்லது பரமாத்மனுக்குப் புறம்பானவன் அல்லன் ஜீவாத்மா. ஈசனைக் கடலோடு ஒப்பிட்டால் ஜீவாத்மாக்கள் அக்கடலில் தோன்றும் அலைகளுக்கு நிகர் ஆவார்கள். மரம், செடி, கொடிகள் ஆகிய ஸ்தாவரங்களும், புழு, பூச்சி, பறவை, விலங்கு, மக்கள் ஆகிய ஜங்கமங்களும் ஜீவாத்மாக்களேயாம். எண்ணிறந்த வடிவங்களிலிருக்கும் ஜீவாத்மாக்களனைத்தும் இயற்கையில் கட்டுண்டு இருக்கின்றன. அப்படிக் கட்டுண்டு இருப்பதற்கிடையிலும் ஈசனையே அவையாவும் சார்ந்திருக்கின்றன. அலைகள் கடலைச் சார்ந்திருப்பதற்கு நிகர் உயிர் வகைகள் ஈசனைச் சார்ந்திருப்பது.

ஜீவாத்மாவின் யதார்த்தநிலை பரமாத்மாவுக்குரிய ஸத் சித் ஆனந்த சொரூபமாம். யாண்டும் அழிவற்றிருப்பது ஸத். தன் சொரூபத்தைத் தானே அறிவது பேரறிவு அல்லது சித். தன்னில் தான் திருப்தியடைந்திருப்பது ஆனந்தம். இத்தகைய ஸத் சித் ஆனந்தம் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் பொது. ஆனால் அறியாமையினால் ஜீவாத்மன் சச்சிதானந்தத்தைப் புறவுலகமாகிய பிரபஞ்சத்தில் தேடித் திரிகிறான். பிறவிகள் பல எடுத்துத் தன் முயற்சியில் தோல்வியடைந்த பிறகு சச்சிதானந்த சொரூபம் புறத்தில் இல்லை; அகத்தில் இருக்கிறது என்பதை ஜீவாத்மன் அறிய வருகிறான். அந்த அறிவு உறுதி பெறுவதற்கேற்பப் புறவுலகப் பற்றுக் குறைகிறது. பரமனுடைய சொரூபத்தை ஜீவாத்மன் தன் அகத்தில் நாடுகிறான். அந்த நாட்டத்திற்கு அருள்தாகம் என்று பெயர். அருள்தாகம்

ஓங்குதற்கேற்பவும் ஜீவாத்மன் ஆத்ம பரிபாகம் அடைகிறான்.

"அற்றது பற்று எனில் உற்றது வீடு" என்பது கோட்பாடாகும். பல பிறவிகளில் தன்னுடைய பிரபஞ்ச வாழ்வைப் பலப்படுத்துதல் பொருட்டு ஜீவாத்மன் அதில் பற்று வைத்திருந்தான். இப்பொழுது பரமனிடத்துப் பற்றுதல் ஓங்குதற்கேற்ப அவன் புரிகின்ற செயல்களனைத்தும் பரமாத்மாவின் பெருமையின் பொருட்டேயாம். அத்தகைய முயற்சி கர்மயோகம் என்னும் பெயர் பெறுகிறது. ஜீவாத்மனுடைய பரம்பொருள் நாட்டம் ஓங்குதற்கேற்ப ஐம்பொறிகளின் வேகமும் தானாகவே தணிகிறது. பொறிவாயில் ஐந்தையும் அவன் அறவே அடக்கியாண்டு வருகிறான். அத்தகைய முயற்சி ராஜயோகம் என்னும் பெயர் பெறுகிறது. ஜீவாத்மன் தன்மீது வைத்திருந்த பற்றுதலும், உலகத்தின் மீது வைத்திருந்த பற்றுதலும் தெய்வப்பற்றாகத் திருந்தியமைகிறது. பரமனிடத்து வைத்திருக்கின்ற பேரன்பு பக்தியோகம் என்னும் பெயர் பெறுகிறது. கடைசியாக ஜீவனும், ஜகத்தும் பரமனுடைய தோற்றங்களாயிருப்பதால் தன்னையும் ஜகத்தையும் ஈசன் மயமாகவே ஆத்மசாதகன் கண்டு பழகுகிறான். அத்தகைய பயிற்சி ஞானயோகம் என்னும் பெயர் பெறுகிறது. இங்ஙனம் இந்த நான்குவித யோகங்களையும் முறையாகக் கையாண்டு ஜீவாத்மன் பிரபஞ்ச வாழ்க்கையினின்று விடுபட்டுப் பரத்தில் ஒன்றுபடுகிறான். அப்படி ஒன்றுபடுவது கடலில் தோன்றிய அலை கடலிலே மீண்டும் ஒடுங்குவதற்கு ஒப்பானதாகும். ஜீவாத்மன் பரத்தில் ஒன்றுபட முயல்வது சாதனையாகும். சாதனையின் மூலம் தன்னைப் பரசொரூபமாகத் திருத்தியமைத்து இறுதியில் ஜீவாத்மன் பரத்தில் ஒன்றுபட்டு முக்தியடைகிறான்.

கேள்வி: *(16)* சங்கரர், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்றார். இராமானுஜரோ பரமாத்மா உடையவன்; ஜீவாத்மா உடைமை என்றார். இதில் எது உண்மை?

பதில்: இக்கேள்விக்கு விடைசொல்ல வருமிடத்து மத்வாச்சாரியாருடைய கொள்கையையும் இதனோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். மத்வாச்சாரியார் கொள்கைப்படி ஜீவாத்மா வேறு,

பரமாத்மா வேறு. இக்கொள்கைக்கு த்வைதம் என்று பெயர். இராமானுஜாச்சாரியார் கொள்கைப்படி ஜீவாத்மன் பரமாத் மாவுக்கு உறுப்பு அல்லது அவயவம் அல்லது மேனி ஆகிறது. இக்கொள்கைக்கு விசிஷ்டாத்வைதம் என்று பெயர். சங்கராச் சாரியார் கொள்கைப்படி ஜீவாத்மன் என்பது கற்பனையாக உண்டுபண்ணிக்கொண்ட தனி வியக்தியாம். தன்னை ஜீவன் என்று சொல்லுகின்ற பொழுதும் ஜீவன் பரமாத்மாவுக்குப் புறம்பானதன்று. இக்கொள்கைக்கு அத்வைதம் என்று பெயர். இம்மூன்று கொள்கைகளும் உண்மையே. அக்ஞானத்தில் இருக்கிறபொழுது ஜீவாத்மா வேறு, பரமாத்மா வேறு. ஏகதேசம் ஞானம் பெற்றிருக்கிற பொழுது ஜீவாத்மா பரமாத்மாவின் அம்சம். நிறைஞானத்தில் ஜீவன் இல்லை, பரமாத்மாவே யாண்டும் உள்ளது. கடலில் எண்ணிறந்த அலைகள் இருக் கின்றன. அங்ஙனம் பிரபஞ்சத்தில் கணக்கற்ற ஜீவர்கள் இருக்கி றார்கள். யானை என்னும் ஜீவன் குதிரை என்னும் ஜீவன் ஆகாது. இது த்வைதமதம். அலைகள் அனைத்தும் கடலின் அம்சங்கள். கடலுக்குப் புறம்பாக அலைகள் இருக்கமுடியாது. இது விசிஷ்டாத்வைதம். அலைகளுக்குத் துவக்கம் உண்டு, முடிவு உண்டு. ஆனால் கடல் நீர் எப்பொழுதும் இருக்கிறது. நாம ரூபத்துக்குப் புறம்பாக அலைகளில்லை. அங்ஙனம் நாமரூபத்துக்குப் புறம்பாக ஜீவன் இல்லை. இதுவே அத்வைதம் எனப்படுகிறது.

கேள்வி: *(17)* நான்கு யோகங்கள் யாவை? அவற்றை விளக்கவேண்டுகிறேன்.

பதில்: கர்மயோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞான யோகம் என்பன நான்கு யோகங்களாகும். நாம் செய்கின்ற செயலின் பயனில் பற்று வைக்காது செய்கின்ற செயலுக்குக் கர்மயோகம் என்று பெயர். புலன்களின் வழி மனது புறம் போகாது தடுத்து நிறுத்தி மனதை உள்ளே இழுத்து உயர்ந்த லட்சியத்தின்பால் அதை ஒருமுகப்படுத்துவது ராஜயோகம் எனப்படும். உடல் உணர்வைத் தெய்வீக உணர்வாக மாற்றி அமைப்பது பக்தியோகம் எனப்படும். விவேகத்தைப் பயன் படுத்தி அநித்தியத்திலிருந்து நித்தியத்தைப் பிரித்தெடுத்து அந்த

நித்தியத்தின்பால் மனதைச் செலுத்துவது ஞானயோகம் எனப்படும்.

இந்த நான்கு யோகங்களையும் அனுஷ்டிப்பதன் மூலம் நம்மிடத்திலுள்ள ஆற்றலையும் அன்பையும் அறிவையும் வளர்க்கலாம். கர்மயோகமும் ராஜயோகமும் ஆற்றலை வளர்க்கத் துணைபுரிகின்றன. பக்தியோகம் நம்மிடத்தில் பேரன்பை வளர்க்கத் துணைபுரிகிறது. ஞானயோகம் நம்மிடத்தில் ஆன்ம அறிவை வளர்க்கத் துணைபுரிகிறது. நம்மிடத்தில் உள்ள மகிமைகளையெல்லாம் வெளிப்படுத்துவதற்கு இந்த நான்கு யோகங்களும் துணைபுரிகின்றன. இவற்றுள் ஒன்றைக் கடைப் பிடித்தோ, ஒன்றுக்கு மேற்பட்டதைக் கடைப்பிடித்தோ அல்லது நான்கையும் கடைப்பிடித்தோ நம்மை நாம் உயர்த்திக் கொள்ளலாம். நான்கு யோகங்களும் வாழ்க்கையில் கலந்தே இடம் பெறுகின்றன. நமக்கு அமைந்த கடமையைத் தெய்வத் திற்காகச் செய்து வருவோமானால் கர்மபலனில் உள்ள பற்று நீங்கிவிடும். அப்பொழுது அது கர்மயோகமாகிறது. காமத்தையும், காசு ஆசையையும் வளர்ப்பதற்காக அன்றிக் கடவுள் பக்தியை வளர்ப்பதற்காக நமக்கு அமைந்த கடமையைச் செய்வோமானால் அது பக்தியோகம் எனப்படும். நித்தியம், அநித்தியம் எது என்று அறிந்து நித்தியப் பொருளினிடத்துச் சிந்தனையைச் செலுத்தி வருவோமானால் அது ஞானயோகமாகும். ஒழுக்க வாழ்வு வாழ்ந்து நாள்தோறும் தவறாது தியானப்பயிற்சி செய்வோமானால் அது ராஜயோகம் எனப்படும். இதில் நாம் ஒன்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கு அனுசரணையாக மற்ற யோகங்களை அமைக்கலாம். நாம் முக்கியத்துவம் கொடுத்துள்ள யோகம் கர்மயோகம் என்றால் நாம் அனுஷ் டிக்கின்ற யோகத்துக்குக் கர்மயோகம் என்று பெயர்.

பகவத்கீதையில் முதல் ஆறு அத்தியாயங்கள் கர்ம யோகத்தையும், ராஜயோகத்தையும் தெளிவாக விளக்குகின்றன. பகவத்கீதையில் ஏழாவது அத்தியாயத்திலிருந்து பன்னிரண்டாம் அத்தியாயம் முடிய பக்தியோகம் விளக்கப்பெறுகிறது. கடைசி யாக உள்ள ஆறு அத்தியாயங்கள் ஞானயோகத்தை விளக்கு கின்றன.

மனதைத் தெய்வத்தின்பால் நிலைநிறுத்துவது யோகம்

எனப்படும். ஜீவாத்மன் தன்னைப் பரமாத்மாவோடு இணைக்கும் பொழுது அது யோகம் எனப்படுகிறது. ஜீவாத்மன் தன் செயலின் மூலம் தன்னைப் பரமாத்மாவோடு இணைக்க முயன்றால் அது கர்மயோகம் எனப்படும். ஜீவாத்மன் தன்னை உணர்வின் மூலம் பரமாத்மாவோடு இணைய முயல்கிறபொழுது அது பக்தியோகம் எனப்படும். ஜீவாத்மன் தன் அறிவைப் பயன்படுத்திப் பரமாத்மாவோடு இணைய முயல்கிறபொழுது அது ஞானயோகம் எனப்படும். ஜீவாத்மன் ஒழுக்கத்தின் மூலம் தன்னைப் பரமாத்மாவோடு இணைக்க முயல்கிறபொழுது அது ராஜயோகம் எனப்படும். செயல், உணர்வு, அறிவு, தன்னடக்கம் இவற்றின் மூலம் ஜீவாத்மன் தன்னைப் பரமாத்மாவோடு ஐக்கியப்படுத்துவதற்கு நான்கு யோகங்களை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டும். இதில் எது உயர்ந்தது? எது தாழ்ந்தது? என்ற கேள்விக்கு இடமில்லை. ஆரம்பத்தில் அவைகள் வேறுபட்டனவாகத் தென்படினும் முடிவில் அவைகளுக்கிடையில் வேற்றுமையைக் காணமுடியாது. நான்கு யோகங்களில் எதை அனுஷ்டித்தாலும் அது நம்மை உலக பந்தத்திலிருந்து விடுவித்து முக்தி என்னும் பெருநிலையில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது.

கேள்வி: *(18)* நீங்கள் ஆங்கிலத்தில் "Ramakrishna Lives Vedanta - இராமகிருஷ்ணர் வேதாந்த வாழ்வு வாழ்கிறார்" என்னும் நூல் ஒன்றை இயற்றியிருக்கிறீர்கள். அப்புஸ்தகத்தில் Vedanta severely leaves to itself the mythological doctrine of the incarnations of God - **பகவான் அவதார மூர்த்திகளாக வருகிறார் என்று புராணங்கள் புகட்டுகிற கோட்பாட்டை வேதாந்த தர்சனம் சிறிதேனும் பொருள்படுத்துவதில்லை என்று கூறியிருக்கிறீர்கள். பகவத்கீதை என்னும் வேதாந்த சாஸ்திரத்தை நீங்கள் சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்திருக்கிறீர்கள். அதில் ஒரு சுலோகமும் அதன் மொழிபெயர்ப்பும் வருமாறு:**

अवजानन्ति मां मूढा मानुषीं तनुमाश्रितम् ।
परं भावमजानन्तो मम भूतमहेश्वरम् ।।

என்னுடைய பரசொருபத்தையும், நான் உயிர்களுக்

கெல்லாம் ஈசனாயிருப்பதையும் அறியாத மூடர்கள் ஒரு மானுட வடிவம் எடுத்தவன் என்றெண்ணி என்னை அவமதிக்கின்றனர்.

பகவத்கீதை பிரஸ்தானத்ரயத்தில் ஒன்று. அதாவது அங்கீகரிக்கப்பட்டுள்ள முடிவான வேதாந்த சாஸ்திரங்கள் மூன்றினுள் ஒன்று ஆகிறது. அவதார வாதத்திற்கு பகவத் கீதையில் வேண்டியவாறு பிரமாணம் இருக்கிறது. அப்படி இருந்தும் அதை வேதாந்த தர்சனம் ஆதரிக்கிறதில்லை என்று கூறுகிறீர்கள். இந்த முரண்பாட்டிற்கு விளக்கம் தரும்படி வேண்டுகிறேன்.

பதில்: உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரங்கள், பகவத்கீதை ஆகிய இம்மூன்று சாஸ்திரங்களையே ப்ரஸ்தானத்ரயம் என்கின்றோம். இம்மூன்றினுள் முடிவான பிரமாணம் உபநிஷ தங்களே. உபநிஷதங்களைத்தான் உண்மையில் வேதாந்தம் என்கின்றோம். வேதங்களின் அந்தம் ஆக அவைகள் அமைந் திருப்பதால் அவைகள் வேதாந்தம் எனப்படுகின்றன. மறைமுடி என்பது அவைகளுக்கு மற்றொரு பெயர். உபநிஷதங்களுக்கு நிகரான பிரமாணம் வேறு ஒன்றுமில்லை. உபநிஷதங்களில் அடங்கியுள்ள தத்துவங்களைப் பாகுபடுத்திப் பகர்வது பிரம்ம சூத்திரங்கள் அல்லது வேதாந்த சூத்திரங்கள் என்னும் நூல் ஆகும். இனி, பகவத்கீதையோ உபநிஷதங்களின் சாரம் எனப் படுகிறது. ஆயினும் பகவத்கீதையை ஸ்மிருதி என்று சொல்லுவது வேதாந்திகளின் ஐதிகம். உபநிஷதங்களைச் சுருதி என்பதும் பகவத்கீதையை ஸ்மிருதி என்பதும் வேதாந்த சம்பிரதாயக்காரர்கள் எல்லாருடைய போக்கு எனலாம். சுருதி, ஸ்மிருதி ஆகிய இவ்விரண்டுக்குமிடையில் எங்கேயாவது அபிப் பிராய வித்தியாசம் இருக்குமாகில் ஸ்மிருதியே இரண்டாந் தரத்துக்குத் தள்ளப்படுவது ஆகும். சுருதி எப்பொழுதுமே முதன்மை ஸ்தானம் பெற்று வருகிறது. மதவாதிகள் எல்லார்க்கும் ஒப்பமுடிந்த முடிவு இதுவேயாம். உபநிஷதங் களில் அவதார வாதத்திற்கு இடமில்லை. அவதார மூர்த்தி களைப் பற்றிய பேச்சுக்கும் ஆங்கு இடமில்லை. அதிகாரி புருஷர்கள் என்னும் ஒரு கூட்டத்தாரைப் பற்றிய பேச்சுக்கு ஆங்கு இடமுண்டு. அதிகாரி புருஷர்கள் என்பவர்கள் நிறை

ஞானிகளாகி வேதாந்த தத்துவங்களையெல்லாம் தங்கள் வாழ்க்கையின் வாயிலாக விளக்குபவர்களாம். மக்களுள் முயற்சியால் யார் வேண்டுமானாலும் அதிகாரி புருஷன் ஆகலாம். முயன்று தகுதி வாய்க்கப் பெற்றவர்கள் சங்கீத வித்வான்கள் ஆவது போன்றும், நல்ல கலைஞானிகள் ஆவது போன்றும், மருத்துவ நிபுணர்களாவது போன்றும் யார் வேண்டுமானாலும் அதிகாரி புருஷன் ஆகலாம். ரிஷிகள் எல்லாரும் அதிகாரி புருஷர்கள். ரிஷி ஒருவருடைய நிலையை அடைவது யாருக்கும் தனி உரிமை ஆகாது.

பகவத் கீதை ஸ்மிருதியாயிருப்பதால் புராணக் கோட்பாடுகளையும் அது தன்னகத்து அடக்கிவைத்திருக்கிறது. புராணங்களில் பகர்ந்துள்ள அவதார தத்துவத்திற்குப் பகவத் கீதை ஆதரவு தருகிறது. அதை முன்னிட்டுப் பகவத்கீதைக்கும் உபநிஷதங்களுக்கும் இடையில் முரண்பாடு இருக்கிறது என்று முடிவு கட்டலாகாது. வேதாந்த தர்சனத்தில் இன்னும் முற்றும் பரிபாகம் ஆகாதவர்களுக்கு அவதார வாதத்தை வேண்டியவாறு விரித்து எடுத்துப் புகட்டலாம். புராணங்கள் அப்படிச் செய்திருக் கின்றன. ஆனால் அப்படிப் புகட்டுதலில் குறைபாடு ஒன்று புராணக்கதைகளுள் புகுந்திருக்கிறது. அக்குறைபாட்டை அகற்றி வைத்துவிட்டு அவதார மூர்த்திகளின் மகிமைகளை எவ்வளவு வேண்டுமானாலும் விரித்துக்கொண்டு போகலாம். புராணங்கள் பகருகிற ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீ ராமன் போன்ற மூர்த்திகள் வாழ்ந்த வாழ்வில் வேதாந்தத்துக்கு வேண்டியவாறு விளக்கம் காண்கிறோம். அவர்களுடைய குணாதிசயங்கள் ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் உரியவைகளாம். அவர்களுடைய குணாதிசயங் களை மனனம் பண்ணுகின்ற அளவு சாதகர்கள் மனபரிபாகம் அடைகின்றனர்.

பின்பு, புராணங்கள் விவரித்துக்கூறுகின்ற அவதார மூர்த்திகளைப்பற்றிய வேறு சில கொள்கைகள் ஆத்ம சாதகர் களுக்குப் பயன்படாதவைகளாயிருக்கின்றன. ஆத்மசாதகர்களைப் பலவீனப்படுத்தும் கோட்பாடுகளும் அவைகளில் அடங்கியிருக் கின்றன. அத்தகைய பகுதிகளை ஒதுக்கி வைப்பது முற்றிலும் அவசியமாகிறது. புராணங்கள் புகட்டுகின்ற அனைத்தையும் முடிவான பிரமாணங்களாக எடுத்துக்கொள்ளலாகாது. சிறந்த

தத்துவங்கள் அவைகளுள் பொதிந்திருக்கின்றன. பொருளற்ற புன்மைகளும் அவைகளுள் புதைந்திருக்கின்றன. வேதாந்த தர்சனத்தை நன்கு அறிந்திருப்பவர்களே புராணங்களிலிருக்கின்ற தத்துவங்களுக்கும் பொருளற்ற கற்பனைகளுக்குமிடையில் பாகுபாடு காணமுடியும். கற்பனைகளுள் சில மனிதனுடைய உள்ளத்தில் குருட்டு நம்பிக்கையையும் பலவீனத்தையும் ஊட்டக்கூடியவைகளாக இருக்கின்றன. அப்பகுதிகளை மக்களுக்கிடையில் வேதாந்திகள் பரப்பலாகாது. உறுதிப்பாடும் ஒழுக்கமும் தன்னம்பிக்கையும் நிறைந்துள்ள சீரிய கோட்பாடுகளையே பொதுமக்களுக்கிடையில் பரப்பவேண்டும்.

புராணங்களில் புகட்டப் பெற்றுள்ள பொருந்தாத கோட்பாடுகள் சிலவற்றை ஈண்டு சான்றாக எடுத்துக்கொள்வோம். அவதார மூர்த்திகளாக வருவது அலாதியாகப் பகவானுடைய திருவிளையாடல் எனப் புராணம் புகட்டுகிறது. எத்தனையெத்தனையோ ஜீவகோடிகளாக இப்பொழுது தோன்றிக் கொண்டிருப்பவரும் பகவானே என்னும் கோட்பாட்டைப் பின்னணிக்குத் தள்ளிவிடலாகாது.

நல்லார் சிலர் வைகுண்டவாசியிடம் சென்று தாங்கள் படும் துயரத்தைக் குறித்து விண்ணப்பம் செய்ய அவர்களுடைய துயரத்தைத் துடைப்பதற்கும் தீயவர்களைத் தகர்த்துத் தள்ளுதற்கும் திருமால் மண்ணுலகில் பிறந்து வருகிறார் என்னும் போதனை மக்களுக்கிடையில் பலவீனத்தை உண்டுபண்ணுகிறது. மனிதனுடைய முயற்சியும் ஈசனுடைய அருளும் சேர்ந்திருக்கவேண்டும் என்பது வேதாந்தக் கோட்பாடு. முயற்சி ஒன்றும் எடுத்துக்கொள்ளாது பலவீனனாகப் பகவானிடம் முறையிடுவது புராணக்கோட்பாடு. அது ஆத்ம சாதகனுக்கு ஏற்புடையதாகாது. திருமால் அவதார மூர்த்தியாக வருவது உண்மையென்றால் தனியாக இந்தியாவில் தோன்றுவது போதாது. தமது சிருஷ்டியாகிய ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய எல்லாக் கண்டங்களிலும் அப்போதைக்கப்போது அவர் அவதரித்து வந்து ஆங்காங்குள்ள மக்களையெல்லாம் அவர் பண்படுத்தியிருப்பாராகில் புராணம் பகருகிற அவதார மூர்த்தியை அப்பொழுது முற்றிலும் போற்றலாம். ஆனால் தசாவதாரங்களுள் ஒன்பது அவதாரங்கள் இந்தியாவில்

மட்டும் தனியாக வந்தது எதற்காக? அப்படி வந்த பிறகும் இந்தியாவினுடைய லௌகீக, வைதீக நிலைகள் பாராட்டு தற்குரிய பாங்கில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன என்று இயம்புதற்கு இடமில்லை. அவதாரமூர்த்திகள் தோன்றாத பிறநாடுகள் சிலவற்றுள் பண்பாடும் நாகரிகமும் பாராட் டுதற்குரிய பாங்கில் மேலோங்கியிருக்கின்றன. இவைகளை யெல்லாம் கணக்கிலெடுத்துப் பார்க்குமிடத்து சமயத்தின் பெயரால் பொருந்தாத எதையெதையோ மக்களுக்கிடையில் போதிப்பது முறையாகாது. அவதாரமூர்த்தி என்னும் கோட் பாட்டை அதிகாரி புருஷன் என்னும் நிலையில் வைத்துக் கொண்டால் தெய்வத்தைப் பற்றியோ சமுதாயத்தைப் பற்றியோ பிறகு குறைகூறுதற்கு இடமொன்றுமில்லை.

நாராயணமூர்த்தி நல்லாரைப் பாதுகாப்பதற்கே தசாவ தாரங்களாக வந்துள்ளார் என்பது புராணக் கொள்கை. ஆனால் வேதாந்தத்தின்படி அவதார மூர்த்திகள் என்போர் அகண்ட சச்சிதானந்தத்தில் உருவெடுக்கிற பெரிய அலைகளாவர். அத்தகைய மூர்த்திகள் தோன்றிவருகிற காலங்களில் சமுதா யங்களிலுள்ள வாழ்க்கைப் பிரச்னைகள் பலவற்றை அகற்றி வைக்கின்றனர். பின்பு, புராணங்களில் சொல்லியுள்ள மத்ஸ்ய அவதாரம், கூர்ம வதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம் முதலியவைகள் சரித்திர பூர்வமான நிகழ்ச்சிகள் அல்ல. இயற்கையில் ஓயாது நடைபெற்று வருகின்ற வாழ்க்கை வரலாறுகளை உருவகப்படுத்தி அறியுமிடத்து இந்த அவதார மூர்த்திகள் ஆகின்றனர். இவ்வுண்மையைப் பாமரர், பண்டிதர் ஆகிய எல்லோரும் அறிந்திருப்பது அவசியமாகிறது.

புராணக் கோட்பாட்டின்படி நாராயண மூர்த்தியே சிறப் பாகப் பரசுராமர் என்னும் அவதாரமாக மண்ணுலகில் வந்தவ ராகக் கருதப்படுகிறது. அதே காலத்தில் தசரதராமன் என்னும் மற்றோர் அவதாரமாக அவர் மண்ணுலகுக்கு வந்ததாகவும் சொல்லப்படுகிறது. இந்த இரண்டு அவதார மூர்த்திகளுக் கிடையில் போராட்டம் நிகழ்ந்ததெல்லாம் பாராட்டுதற்குரிய பெருஞ்செயல் ஆகாது. மற்ற ஜீவர்களைப் போன்று பரசுராம னையும் கருதுமிடத்துக் குழப்பத்துக்கு இடமில்லை. ஆனால் புராணக்கோட்பாட்டை அனுசரித்து அவரை ஓர் அவதார

மூர்த்தியென்று இயம்புதல் வேதாந்தக் கோட்பாட்டுக்கு ஒத்து வராது.

புராணங்கள் பகருகின்ற முதல் எட்டு அவதாரங்களும் ஜீவர்களின் பரிணாமத்திற்கு நல்ல விளக்கங்கள் ஆகின்றன. அந்த அவதார மூர்த்திகளைப் பரிணாமத்திற்கு எடுத்துக் காட்டாக வைத்துக்கொண்டால் அது வேதாந்த தர்சனத்திற்கு ஒத்ததாகிறது. ஆனால் புராணங்கள் பகருகிறபடி அவர்களை நாம் ஏற்றுக்கொண்டால் யுக்தியோடு அது முரண்படுகிறது. அதற்கு ஒரு சான்று எடுத்துக்கொள்வோம். தசரதராமன் நரோத்தமன். முற்றிலும் பண்பாடடைந்துள்ள நரன் ஒருவன் ஏக பத்தினி விரதம் கொண்டிருப்பதுதான் முறை. அதற்குத் தசரதராமன் நல்ல எடுத்துக்காட்டு ஆகிறான். பின்பு, கிருஷ்ணா வதாரமாக வந்து அதே நாராயண மூர்த்தி ருக்மிணி, சத்திய பாமா என்னும் இரண்டு மனைவிமார்களை ஏற்றுக்கொள்வது பரிணாமத்தோடு முரண்படுகிறது. நாராயண மூர்த்தி பரிணா மத்தில் ஒருபடி மேலே போவதற்குப் பதிலாகப் பலபடி கீழே இறங்கி வந்துவிடுகிறார். இக்காரணங்களையெல்லாம் முன்னிட்டே புராணங்கள் பகருகிறபடி வாய்த்துள்ள அவதார வாதம் முடிந்த உண்மையல்ல என நாம் முடிவுகட்ட வேண்டி யதாகிறது. வேதாந்தக் கோட்பாட்டின்படி வாய்த்துள்ள அவதார தத்துவங்களே யுக்திக்கும் இயற்கையின் நடைமுறைக்கும் ஒத்திருக்கின்றன.

பகவான் கீதையில் தம்முடைய பர சொரூபத்தைப் பற்றிப் பகர்கிற கோட்பாடு வேதாந்தத்தின்படி பிரம்ம ஞானிக்கும் பொருந்தும். ஆதலால் அப்போதனை அலாதியாக அவதார மூர்த்திக்குரியதென்று நாம் பொருள்படுத்த வேண்டிய தில்லை.

கேள்வி: *(19)* கர்மயோக நூலில் "தேச கால நிமித்தத்துக்கு அப்பாலாக இருந்து அவ்வெல்லைக்கு உட்பட்டபின் சித்தமாக மாறிய பொருள் மீண்டும் அவ்வெல் லையைக் கடக்கும் பொழுது, பந்தத்தினின்று நீங்கியதாகும். பந்தம் நீங்கிய நிலையிலிருந்து வந்து பந்தத்தைப் பற்றிய தாதலின், மறுபடியும் பந்தம் நீங்கிய நிலையை அடையும்

ஆற்றலும் அதற்கு உண்டு" என்று இருக்கிறது. இங்கு ஜீவனைப் பற்றிக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. காரண மின்றிக் காரியம் இல்லையென்பது மாற்றமுடியாத நியதி அன்றோ? ஜீவன் பந்தம் நீங்கிய நிலையிலிருந்தபோழ்து அது நியதிக்குட்படாததன்றோ? அங்ஙனமிருக்க அவ்வுயர் நிலையிலிருந்த பொருள் ஜீவனாகக் கீழிறங்கக் காரணம் யாது?

பதில்: விவேகானந்த சுவாமிகள் இயற்றிய கர்மயோகத்தின் "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்னும் ஏழாவது அதிகாரத் தில் இரண்டாவது பத்தியின் முடிவில் இங்குச் செப்பிய வாசகம் அமைந்திருக்கிறது. பந்தத்திற்கு உட்படாத ஆத்மா எப்படி பந்தத்தில் உட்பட்டதாகிறது என்பது இக்கேள்வியின் சுருக்கம். இது மிகமிகப் பழைய கேள்வி. என்றென்றும் எல்லார்க்கிடையிலும் இக்கேள்வி எழுந்துகொண்டே இருக்கும். தீர்க்கதரிசிகள் இதற்குத் தரும் விடை ஒன்றே. பந்தத்தில் இருக்கும் பரியந்தம் இக்கேள்விக்குத் தகுந்த விடையைத் தரமுடியாது. பந்தம் நீங்கியபின் இக்கேள்வி எழுவது கிடையாது. ஒரு சான்றின் மூலம் இது விளக்கப்படுகிறது. மனிதன் கனவு காண்கிறான். கனவில் யாரோ அவனைத் துன்புறுத்து கிறார்கள். கனவு கண்டுகொண்டிருக்கும் வேளையில் அவனுக்குத் துன்பம் எங்கிருந்து வந்தது என்னும் கேள்விக்குக் காரணகாரிய பூர்வமாக விடை கண்டுபிடிக்க இயலாது. கனவினின்று எழுந்துகொண்ட பிறகு இக்கேள்வியை யாரும் கேட்பதில்லை. இதே விடையைத்தான் இக்கேள்விக்கு நாம் சொல்லமுடியும்.

கேள்வி: *(20)* கர்மத்தில் ஞானம் இருக்கிறது; ஞானத்தில் கர்மம் இருக்கிறது. விளக்கம் என்ன?

பதில்: ஐரோப்பாவிலிருந்த ஆதிமனிதர்களுக்குச் சமைப் பதைப் பற்றிய ஞானம் இல்லை. அவர்கள் பச்சை மாமி சத்தைப் புசித்து வந்தார்கள். ஒருதடவை அவர்கள் வளர்த்து வந்த பன்றிகளிருந்த குடிசை தீப்பற்றிக்கொண்டது. அதில் தீய்ந்துபோய்ப் பன்றி ஒன்று மாண்டு போயிற்று. தீய்ந்துபோன மாமிசத்தைப் புசித்துப் பார்த்தார்கள். அதில் சுவை அதிகம்

இருந்ததைக் கண்டார்கள். அந்த ஞானம் அவர்கள் கையாண்ட கர்மத்தின் விளைவாம். எப்பொழுதெல்லாம் சுவையான பன்றி மாமிசத்தைப் புசிக்க விரும்பினார்களோ அப்பொழுதெல்லாம் பன்றிகள் இருந்த குடிசைக்குத் தீ வைத்தார்கள். நாளடைவில் குடிசைகளுக்குத் தீ வைக்காமல் பன்றியைக் கொன்று தீயில் சுடலாம் என்ற ஞானம் அவர்களுக்கு வந்தது. இச்செயலில் கர்மத்தின் விளைவாக ஞானமும் பிறகு ஞானத்தைப் பயன் படுத்திக் கர்மத்தை முறையாகச் செய்யவும் அவர்கள் கற்றுக் கொண்டார்கள். இக்கேள்விக்கு விடை இந்நிகழ்ச்சியில் இருக்கிறது.

தத்வபூர்வமாகப் பார்க்குமிடத்துப் பிரபஞ்ச வாழ்வு கர்ம மயமானது. அந்தக் கர்மத்தைச் செய்துகொண்டு போகப்போக அதினின்று வருகின்ற அனுபவம் ஞானமாக வடிவெடுக்கிறது. பிறகு அந்த ஞானத்தைக் கையாண்டு வினையின் விளைவை மேன்மைப்படுத்தலாம்.

பௌதிக விஞ்ஞானிகள் கர்மத்தின் வாயிலாக இயற்கை யில் அமைந்துள்ள மேலான கோட்பாடுகளை அறியவந்தார்கள். மேலான கோட்பாடு என்னும் ஞானத்தைப் பயன்படுத்திக் கர்மத்தை நன்கு சாதிக்கும் திறமை இப்போது உலகத் தவர்களுக்கிடையில் இருக்கிறது.

பிரபஞ்ச வாழ்வு கர்ம சொரூபமானது. எவ்வளவு காலம் வாழ்ந்திருந்தாலும் கர்மத்தில் உள்ள கேட்டை அகற்றி நலத்தை மட்டும் பெறமுடியாது என்னும் ஞானம் பேரறிஞர்களுக்கு வந்தது. பிரபஞ்சத்துக்கு அப்பால் உள்ள நிலையில் நலமும் இல்லை; கேடும் இல்லை. பேரானந்தமே எஞ்சியிருக்கிறது என்னும் முடிவுக்கு நிறைஞானிகள் வந்தார்கள். இங்ஙனம் கர்மத்தின் வாயிலாகப் பிரபஞ்சத்தின் பாங்கை அறிந்து கொள்ளும் ஞானம் அவர்களுக்கு வந்தது எனலாம். அந்த ஞானத்தைப் பயன்படுத்திக் கர்மாதீதத்துக்குப் போவதற்கான முறையை அவர்கள் கண்டறிந்தார்கள். இதுவே முடிந்த நிலையில் கர்மத்தின் விளைவாக ஏற்படும் ஞானத்தைக் கொண்டு, கர்மத்தை நன்கு ஆற்றவோ கர்மாதீதத்துக்குப் போகவோ மனிதனுக்குச் சாத்தியம் என்னும் பேரறிவை ஞானிகள் பெறலாயினர்.

கேள்வி: *(21)* தங்களது தினசரி தியானம் என்னும் நூலின் முதல் பக்கத்தில் அடங்கியுள்ள விஷயத்தில் எனக்கு ஐயம் ஒன்று உண்டாகிறது. வாழ்வை இனியதாக்குவது அன்பு. குடும்ப வாழ்வை மேன்மைப்படுத்துவது அன்பு. உலக வாழ்க்கையைச் சுவைக்கச் செய்வது அன்பு. அழகற்றதற்கு அழகூட்டுவது அன்பு. இதெல்லாம் எனக்கு விளங்குகிறது. கஷ்டங்களையெல்லாம் மீளச்செய்வது அன்பு. இது எனக்கு விளங்கவில்லை. கருணைகூர்ந்து இதை விளக்க வேண்டுகிறேன்.

பதில்: மாணாக்கன் ஒருவன் தனது அறிவை வளர்ப்பதில் ஊக்கம் மிக வைக்கவேண்டும். அந்த ஊக்கத்தை அன்பு என்று இயம்புவது பிழையாகாது. கணக்குப் போடுதலிலும் பாடம் படிப்பதிலும் கஷ்டம் மிக உண்டு. ஆனால் அறிவுத் துறையில் அன்பு வளர்வதற்கு ஏற்பக் கஷ்டத்தைப் பொருள் படுத்தாது கணக்கைத் திரும்பத்திரும்பப் போடவும் விளங்காத பாடத்தைத் திரும்பத்திரும்பப் படிக்கவும் மாணாக்கன் ஒருவன் முந்துகிறான். கல்வியில் அவனுக்கு அன்பு அதிகரிக்குமளவு, கற்பதில் உண்டாகிற கஷ்டத்தை அவன் பொருள் படுத்துவதில்லை.

ஏழைத் தந்தை யொருவன் தன் மைந்தனைக் கற்றவன் ஆக்கத் தீர்மானிக்கின்றான். மைந்தனுடைய கல்விக்காகவென்று செலவழிப்பதற்குப் போதிய செல்வம் அவனிடம் இல்லை. ஆனால் அதற்கு வேண்டிய செல்வத்தை ஈட்டுதற்பொருட்டுப் புதிய உத்தியோகம் ஏதாவது ஒன்றை அவன் எடுத்துக் கொள்கிறான். அந்த உத்தியோகத்தைச் செய்வதற்குப் போதிய அளவு அவகாசம் இல்லை; ஆற்றலும் இல்லை. ஆதலால் அது கஷ்டம் நிறைந்ததாய் இருக்கிறது. ஆனால் மகன்மீது வைத்துள்ள அன்பை முன்னிட்டுக் கஷ்டத்தை அம்மனிதன் பொருள்படுத்துவதில்லை. மைந்தன் நன்கு கல்வி பயின்று சிறந்த முன்னேற்றம் அடைந்து வருகிறான். அதைப் பார்க்கிற தந்தைக்கு மகன் மீது அன்பு அதிகரிக்கிறது. அந்த அன்பின் வேகத்தால் தனக்கு உண்டாகிற கஷ்டங்களையெல்லாம் பொருள்படுத்தாது பாடுபட்டுப் பொருளைச் சம்பாதிக்கின்றான். அன்பின் வேகத்துக்கு ஏற்பக் கஷ்டத்தின் கொடுமை

அம்மனிதனது உள்ளத்தில் புகுவதில்லை. இதற்குச் சான்றாக இராமாயணத்தில் வரும் ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்கொள்ளலாம்.

சீதாபிராட்டியின் மீது ஸ்ரீராமன் வைத்த அன்பு தெய்வீக அன்பு ஆகும். வனவாசம் செய்துகொண்டிருந்த பொழுது தனது பேரன்புக்குரிய சீதையை இழக்கும்படி இராமனுக்கு ஏற்பட்டது. காணாமற்போன சீதையைக் கண்டுபிடிப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் இராமன் பட்ட கஷ்டம் இவ்வளவு அவ்வள வல்ல. இராமன் மீது அன்பு வைத்திருந்த சுக்ரீவன் முதலாயி னோர் பட்ட கஷ்டமும் அளப்பரியதாகும். அப்படிக் கஷ்டப் பட்டவர்களுள் யாருக்குமே தனது கஷ்டத்தை முன்னிட்டு மனத்தளர்ச்சி உண்டாகவில்லை. பட்ட கஷ்டமெல்லாம் ஒரு பொழுதும் கஷ்டமாக மனதில் தோன்றவில்லை. அன்புதான் அதற்கெல்லாம் காரணமாயிற்று. எல்லாருடைய வாழ்விலும் ஏதேனும் ஒரு விதத்தில் கஷ்டம் வந்து வாய்க்கிறது. ஆனால் உயிர் வாழ்ந்திருப்பவர்கள் வாழ்க்கையில் கொண்டுள்ள லட்சியத்தில் அன்பை வளர்ப்பதற்கு ஏற்ப அவர்கள் படுகிற கஷ்டங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோன்று மறைந்து பட்டுப்போகின்றன. ஆக, அன்பு ஒன்றுதான் மாந்தர் படுகின்ற கஷ்டங்களையெல்லாம் பொருள்படுத்தாதிருக்கச் செய்கின்றது.

கேள்வி: *(22)* ஆன்மிக வாழ்க்கையில் ஒன்றும் தெரியாதிருப்பதும் ஞானம். எல்லாம் தெரிந்திருப்பதும் ஞானம். இதற்கு விளக்கம் தேவை.

பதில்: இக்கேள்விக்கு விடையாக முதலில் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். ஒரு புஸ்தகத்தில் என்ன எழுதப் பட்டிருக்கிறது என்பதைக் காரிருளில் படிக்க முடியாது. அதே விஷயத்தை நண்பகல் சூரியப் பிரகாசத்திலும் படிக்க முடியாது. ஏனென்றால் காரிருளிலோ மிகப் பிரகாசமான வெளிச்சத்திலோ கண் வேலை செய்யாது. கண் வேலை செய்யாதிருப்பது விளைவு. அதற்குக் காரணமாய் இருப்பவை முரண்படுகிற இரண்டு சூழ்நிலைகள். ஒன்று மிகைப்பட்ட வெளிச்சம்; மற்றது மிகைப்பட்ட இருள். இந்த நெருக்கடியை முன்னிட்டுக் கண் தெரியாமைக்குக் காரணமாயிருக்கின்ற இருளையும் வெளிச்சத்தையும் ஒரே பாங்குடையவைகள்

என்று நாம் முடிவுகட்டலாகாது. அவை இரண்டும் அறவே ஒன்றோடொன்று முரண்பட்டிருக்கின்றன.

இனி, இக்கேள்வியில் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு மற்றொரு சான்று சொல்லவேண்டும். குழந்தை ஒன்று மனதற்ற நிலையிலிருக்கிறது. ஆதலால் அக்குழந்தையிடம் தெய்வீகச் சாந்நித்தியத்தைத் தெளிவுற நாம் காண்கிறோம். ஆனால் அது தெய்வீகச் சாந்நித்தியம் என்பது அக்குழந்தைக்குத் தெரியாது. இனி, சான்றோர் ஒருவரின் பாங்கை ஆராய்வோம். மனதற்ற நிலையில் இருப்பவர் சான்றோர். அதன் விளைவாக அவரிடம் தெய்வீகம் வெளிப்படையாகத் திகழ்கிறது. அந்தத் தெய்வீகத்திலேயே அச்சான்றோர் திளைத்திருக்கிறார். இதுவே சான்றோருக்கும் குழந்தைக்கும் இடையில் உள்ள வித்தியாசம். மனதற்ற நிலை இருவருக்கும் பொதுவானது. ஆயினும் அந்நிலையில் திகழ்கிற தெய்வீகத்தைக் குழந்தை அறியாது; சான்றோர் அறிகிறார்.

ஆகவே இக்கேள்வியில் கேட்டுள்ள தெரியாத நிலையும் தெரிந்த நிலையும் ஒன்றாகத் தென்படினும் வெளிச்சமும் இருளும் போன்றவை ஞானியின் நிலையும் குழந்தையின் நிலையும். மனதற்ற நிலை குழந்தைக்கும் ஞானிக்கும் பொது. ஆனால் பரிபாகத்தில் குழந்தையினிடம் இன்னும் மனது வடிவெடுக்கவில்லை. ஆனால் சான்றோரோ வடிவெடுத்து வந்துள்ள மனதைத் தாண்டி மேல்நிலைக்குப் போயுள்ளார்.

கேள்வி: *(23)* நம்மிடத்திலேயே இருக்கிற இன்ப துன்பம் புறத்தேயுள்ள பொருள்களிடத்தேயிருந்து வருவதாக எண்ணி மனிதன் மயக்குறுகிறான். இதை உண்மையல்ல என்கிறார்கள். எடுத்துக்காட்டாக சர்க்கரையைத் தின்றால்தானே இனிப்பு உண்டாகி இன்பம் உண்டாகிறது. மேலும் மேலும் உண்டால்தான் அது தெவிட்டுகிறது. அந்த இனிப்பை அந்த சமயத்தில் அவன் ஏற்க அசக்தனாக இருக்கிறானே ஒழிய சர்க்கரையில் இனிப்பு இருந்து கொண்டேதானிருக்கிறது. இதைப்போல உலகில் பொருள் களிடத்து இன்பம் இருந்துகொண்டே வருகிறது. பொருள் களிடத்து இன்பம் இன்றேல் உலகிலே பேரின்பப்

பொருளும் ஒன்று இருக்க முடியாதென்கிறார்கள். இவற்றில் எது, எது வரையில், எவ்வகையில் உண்மை? இவைகளின் மெய்ப்பொருள்கள் என்ன?

பதில்: உலகப் பொருள்கள் இன்பம் தருவனவாகவோ அல்லது துன்பம் தருவனவாகவோ அமைந்துள்ளன என்பது உலக நடைமுறையை ஒட்டிப் பார்க்குமிடத்து முற்றிலும் உண்மையே. சர்க்கரை போன்ற பொருள்கள் பொதுவாக எல்லார்க்கும் இன்பம் தருகிறது. எட்டிக்காய் போன்றது யாவர்க்கும் கசக்கும் தன்மையது. சர்க்கரை இனிக்கும் தன்மையது எனினும் அதனிடத்திருந்து அதன் இனிப்பை வாங்கிக்கொள்ள ஒருவன் ஆயத்தமாக இருக்கின்ற அளவே அது இன்பம் தருகிறது. தித்திக்கும் பண்டங்களைக் கண்டு வெறுப்படைகின்ற மக்களும் இருக்கின்றனர். அத்தகையவர் களுக்குச் சர்க்கரை இன்பம் தருவதன்று. காய சித்தியின் பொருட்டு எட்டிக்காயைச் சிறிது சிறிதாகச் சுவைத்துப் பழகு கின்றவர்களும் உண்டு. அத்தகையவர்களுக்கு எட்டிக்காய் துன்பம் தரும் பொருள் அன்று. என்ன மனப்பான்மையுடன் ஒரு பொருளை நுகர்கின்றோமோ அந்த மனப்பான்மைக்கு ஏற்ப அதனிடத்திருந்து வரும் அனுபவம் இன்பமாகவோ, துன்பமாகவோ மாறக்கூடும்.

பொதுப்பட எல்லா உயிர்களுக்கும் இன்பம் தரும் பண்டங்களைப் புசித்து உயிர்வாழ்வது வாழ்வின் இயல்பு. அப்பொருள்களிலுள்ள சுவையை ரசித்து உண்பதும் உலக இயல்பு. பின்பு யோகியாக முயலுகின்ற ஒருவன் பொறிவாயில் ஐந்தையும் அவித்தும் அடக்கியும் பழகுதல் வேண்டும். உதாரணமாகச் சர்க்கரையைப் புசிக்கின்ற பொழுது அதன் தித்திப்புக்கு அவன் வசப்படலாகாது. அதற்கு வசப்பட்டவன் அப்பொருள் கிடைக்காவிட்டால் துன்புறுகிறான். நாவடக்கம் பழகாதவன் பாகற்காய் போன்றதைப் புசிக்கும்பொழுது அது கசக்கிறதென்று வெறுக்கின்றான். வெறுப்பின்றி அதை உண்டு பழகுவானாகில் உடலுக்கு அது நலன் தருகிறது. தித்திப்புப் பண்டத்தில் விருப்பமும் கசப்புப் பண்டத்தில் வெறுப்பும் கொள்ளாது உணவை உண்டு பழகுபவனே சுவை என்னும் பொறிவாயிலை அவித்தவன் அல்லது அடக்கியவன் ஆகின்றான்.

இங்ஙனம் ஐம்பொறிகளையும் அடக்கியாளக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். அப்படிக் கற்றுக்கொள்ளுதலினின்று நலமொன்று பிறக்கிறது. மனதுக்குள்ள பேராற்றல் அப்பொழுது ஆத்மசாதகனுக்கு விளங்குகிறது. சர்க்கரை, பாகற்காய் போன்ற புறப்பொருள்களில் இன்பதுன்பத்துக்கு ஏதுவான சுவைகள் பொருந்தியிருக்கின்றன என்பது உண்மையெனினும் நாம் அவைகளைப் பொருள்படுத்துகின்ற அளவுக்கே அவைகள் நமக்கு இன்பத்தையோ துன்பத்தையோ வழங்குகின்றன. அவைகளைப் பொருள்படுத்தாது புறக்கணித்துப் பழகியிருப் பவனுக்கு இன்பமும் துன்பமும் புறப்பொருள்களிடத்து இல்லை. நாம் அவைகளிடத்து அங்கீகரிக்கும் அளவுக்கே இன்பமும் துன்பமும் இருக்கின்றன என்னும் பேருண்மை அனுபவப் பூர்வமாக விளங்கும். ஆத்ம சாதனத்தில் முன்னேறியவன் புறவுலகிலுள்ள எதனிடத்திருந்தும் இன்பத்தையோ, துன்பத் தையோ ஏற்றுக் கொள்ளுதலில்லை. ஏற்பதிகழ்ச்சி என்பதன் கோட்பாடு இதுவேயாம். தன் மனதை வென்றவன் புறவுல கையும் வென்றவன் ஆகின்றான். தன் மனதுக்கும் புறவுலகுக் கும் சம்பந்தப்படாது தானே இன்ப சொரூபம் என்பதைப் பிறகு அவன் அறிந்துகொள்கின்றான். தான் இன்ப சொரூபம் என்பதை அறிந்தான பிறகு தானும் தன் தலைவனும் ஒன்று என்பதை அறிகின்றான். அத்தகைய அனுபவம் வந்த பிறகு உலகிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் அமைந்த குணங்க ளெல்லாம் பரம்பொருளினிடத்திருந்து வந்தவை என்பது விளங்குகிறது. அத்தகைய ஞானக்காட்சி வந்த பிறகு உலகம் வேறு, பரம்பொருள் வேறு என்ற பேத உணர்வு போய்விடு கிறது. எல்லாம் அவன் மயம். அனைத்தும் ஆனது அவனே. அந்த அனுபவத்தினின்றுதான் தெவிட்டாத பேரின்பம் பிறக் கிறது. அந்நிலையைவிட்டுக் கீழிறங்கி உலகக்காட்சியைக் காணும் பாங்குக்கு வந்துள்ள ஜீவர்களுக்கு நிலையற்ற இன்பங்கள் தருபவைகளாக உலகப் பொருள்கள் தென்படுகின்றன. ஆக, உலகப் பொருள்களிடத்திருந்து வருகின்ற இன்பங்களும் உண்மையில் பரம்பொருளினிடத்திருந்து வருகிற இன்பமேயாம். அவ்வின்பம் தடைப்படுவதாக உணருங்காலத்தில் அது துன்பம் என்னும் பெயர் பெறுகிறது.

காண்போன் காணப்படுபொருள் மயமாக உள்ள உலகக் காட்சியில் இன்பமும் துன்பமும் கலந்திருக்கின்றன. காண்போன் காணப்படு பொருளிடத்திருந்து தன்னை விடுவித்துக் கொள்ளுதல் சாதனம். காணப்படு பொருளுக்கு இன்பத்தையோ துன்பத்தையோ தருபவன் தானே என்பது சாதனம் முதிர்ந்தவனுக்கு விளங்குகிறது. தலைவனில் தான் இரண்டறக்கலத்தல் சாதனம் பூர்த்தியான இடம். ஆங்குக் காண்போன் காணப்படு பொருள் இல்லை. எல்லாம் பேரானந்தப் பரம்பொருள் சொரூபம். ஒரு படித்தரத்திலுள்ள அனுபவத்தை மற்றொரு படித்தரத்திலுள்ள அனுபவத்தோடு கலக்கிக் குழப்பமடையலாகாது. மொத்தம் மூன்று படித்தரங்கள் இருக்கின்றன. கீழான படித்தரத்தில் உலகம் வேறு தான் வேறு என்ற உணர்வு உண்டு. அந்நிலையில் சர்க்கரை போன்ற பொருள் இன்பத்தைத் தருகிறது. எட்டிக்காய் போன்றது துன்பத்தைத் தருகிறது. இரண்டாவது படியில் மனது பொருள்படுத்துதற்கு ஏற்ப இன்பமும் துன்பமும் அமைகிறது. உயர்ந்த ஞானப்படியில் எல்லாம் ஒரு பொருளின் தோற்றமேயாம்.

கேள்வி: *(24)* அத்வைதத்துக்குத் தெளிவான விளக்கம் யாது?

பதில்: த்வைதம் என்றால் இரண்டு. அத்வைதம் என்ற சொல்லுக்கு இரண்டு அல்ல என்பது பொருள். கடவுள் வேறு, உலகம் வேறு என்பது மக்களின் பொதுவான எண்ணம். நீர் ஆவியாகி எங்கும் வியாபித்திருக்கிறது. மலை உச்சியில் அது உறைபனியாக இருக்கிறது. உறைபனியைக் கண்ணால் காணலாம். அதற்கு வடிவம் உண்டு. ஆனால் ஆவி கண்ணுக்குப் புலனாகாது. ஆவி என்பது ஒரு வஸ்து; உறைபனி என்பது மற்றொரு வஸ்து என்று சொல்லக்கூடாது. இரண்டும் நீர் என்ற ஒரே வஸ்துவாகும். அங்ஙனம் உலகம் வேறு கடவுள் வேறு அன்று. உலகம் நமக்குக் கட்புலனாகிறது. கடவுள் நமக்குக் கட்புலனாகாதவர்.

மங்கிய வெளிச்சத்தில் பார்க்கிறபொழுது கயிறு பாம்பாகத் தென்படுகிறது. விளக்கு வெளிச்சத்தில் பார்க்கிறபொழுது பாம்பு அன்று கயிறு என்பது புலனாகிறது. கயிறும் பாம்பும் இரண்டு

வஸ்துக்கள் அல்ல. அவை அத்வைத வஸ்து. அக்ஞான நிலையில் பாம்பாகத் தென்படுகிறது. பாம்பாகத் தென்படுகிற பொழுதும் உண்மையில் அது கயிறே. விளக்கு வெளிச்சத்தில் அதனுடைய உண்மையான நிலை தெரியவருகிறது. நமக்கு இப்பொழுதுள்ள அக்ஞான நிலையில் உலகமாகத் தென்பட்டுக் கொண்டிருக்கிறது எதுவோ அதுவே ஞானம் வரும்பொழுது பிரம்மம் என்பது தெளிவாகும்.

ஜீவர்களாகிய நாம் அத்வைதிகள். மாறுபடும் இரண்டு கருத்துக்களில் நாம் ஏககாலத்தில் இருப்பதில்லை. மகிழ்ச்சியில் இருக்கும்பொழுது துக்கம் இல்லை. துக்கத்திலிருக்கும் பொழுது மகிழ்ச்சி இல்லை. அயர்ந்த உறக்கத்தில் சொப்பனாவஸ்தையோ ஜாக்ரதாவஸ்தையோ இல்லை. சொப்பனத்தில் சுழுத்தி அவஸ்தையோ ஜாக்ரதாவஸ்தையோ இல்லை. ஜாக்ரதத்தில் சுழுத்தி அவஸ்தையோ சொப்பனாவஸ்தையோ இல்லை. ஜாக்ரதம், சொப்பனம், சுழுத்தி ஆகிய மூன்று அவஸ்தை களையும் நாம் நாள்தோறும் அனுபவிக்கின்றோம். ஆனால் இந்த மூன்றையும் ஒன்று சேர்த்து நாம் அனுபவிப்பதில்லை. ஒரு வேளையில் ஏதோ ஒன்றைத்தான் அனுபவிக்கின்றோம். அனுபவிக்கும் ஒரு அவஸ்தை மற்ற இரண்டையும் அகற்றி விடுகிறது.

நாம் ஆழ்ந்த ஆத்ம சொரூபத்தில் லயித்திருக்கும்பொழுது சரீர போதம் நமக்கு இல்லை. உடலைப்பற்றிய உணர்வு உறுதிப்பட்டிருக்கும்பொழுது ஆத்மீக உணர்வு நமக்கில்லை. ஜீவபோதத்திலிருக்கும்பொழுது பரபோதம் இல்லை. பரபோதத்திலிருக்கும்பொழுது ஜீவபோதம் இல்லை. பிரகிருதி சம்பந்தமான உணர்வை ஒதுக்கி வைத்துவிட்டு ஆன்மிக உணர்வில் ஆழ்ந்திருக்கும்பொழுது நாம் பரம்பொருளுக்கு அந்நியமானவர்கள் அல்லர் என்பதை நிலைநாட்டுகிறோம்.

பூமியும் சூரியனும் ஒரே வஸ்து. சூரியன் பிரகாசம் வாய்ந்தது. பூமி ஆறிப்போய்ப் பிரகாசத்தை இழந்துள்ளது. நவரத்தினம் பிரகாசமுடையது. ஆனால் மற்ற கற்களுக்குப் பிரகாசமில்லை. நவரத்தினங்களும் மற்ற கற்களும் கல்வகை களைச் சேர்ந்தவையே.

ஓர் உதாரணம் கொண்டு த்வைதம், விசிஷ்டாத்வைதம்,

அத்வைதம் ஆகிய மூன்றையும் தெளிவாக விளக்கலாம். உணவு இலையில் பரிமாறி வைக்கப்பட்டிருக்கிறது. நாம் உண்ணுவதற்கு முன்பு உணவு நமக்குப் புறத்தில் அந்நியமாக இருக்கிறது. அப்பொழுது உணவு வேறு நாம் வேறாக இருக்கிறோம். இது த்வைதம். உணவை உண்டதும் புறத்தி லிருந்த உணவு நம்மிடத்தில் இடம்பெற்று விடுகிறது. அப் பொழுது உணவு நமக்கு அந்நியமாக இல்லாது நம்மிடத்தில் ஒரு பகுதியாக இருக்கிறது. இது விசிஷ்டாத்வைதத்துக்கு விளக்கமாகும். உணவு உண்டு ஐந்து அல்லது ஆறு மணிக்குப் பிறகு உணவு ஜீரணமாகி இரத்தமயமாகி விடுகிறது. அப் பொழுது உணவை நம்மிடத்திலிருந்து பிரிக்கமுடியாது. அது நம் மயமாகி விடுகிறது. அது அத்வைதம்.

அத்வைதம் நம்மைப் பலவானாக்குகிறது. ஆத்மன் பலஹீன னால் அடையப்படுவது அன்று என்பது உபநிஷத வாக்கியம். மனத்தளர்வை உண்டுபண்ணும் கோட்பாடு மனிதனைக் குருட்டு நம்பிக்கையில் ஆழ்த்துகிறது. அத்தகைய நிலையிலிருந்து விலக்கி ஆண்மை படைத்தவர்களாக நம்மை அத்வைதம் ஆக்குகிறது. ஆன்ம பலம், அறிவு பலம், உடல் பலம் ஆகிய எல்லாவிதமான பலத்தையும் அத்வைதம் ஒன்றே வழங்க வல்லது. அத்வைதக் கொள்கையினின்றே மனிதன் சரியான சன்மார்க்கி ஆகின்றான். நாம் அடைகின்ற பெருமைக்கோ, சிறுமைக்கோ நாமே பொறுப் பாளி என்கிறது அத்வைதம். "ஆத்ம சொரூபமாகிய எனக்கு மரணம் இல்லை; அச்சம் இல்லை. ஜாதிபேதம் எனக்கு இல்லை. அன்னையோ தந்தையோ ஆத்மசொரூபியாகிய எனக்கு இல்லை. நான் எப்பொழுதாவது பிறப்பெடுத்தவன் அல்லன். எனக்கு உற்றார் உறவினர் இல்லை. குரு சிஷ்யன் என்கின்ற வேற்றுமையும் ஆத்மசொரூபத்தில் இல்லை. சிதானந்த ரூபம், சிவோஹம் சிவோஹம்." இத்தகைய பிரார்த்தனையை நாம் ஓயாது மனனம் பண்ணிக்கொண்டிருக்க வேண்டுமென்று அத்வைத வேதாந்தம் புகட்டுகிறது. இத்தகைய எண்ணத்தையே மற்றவர்களுக்குப் புகட்டவேண்டும். இந்த எண்ணத்தில் நாம் ஊறி இருக்கும் அளவு நமக்குப் பலம் வருகிறது. ஆரம்பதசை யில் நம்மில் சிலர் இந்த லக்ஷியத்தைவிட்டுப் பலதடவை வழுவி விடலாம். ஆனால் இதில் முயல்கின்றவளவு மேலும் மேலும்

வலிவு உண்டாகும். இவ்வுயர்ந்த எண்ணம் நம் உள்ளத்தில் ஆழ்ந்து உறைந்துவிடவேண்டும். நம் இரத்தக் குழாய்கள் வழியாக இப்பிரார்த்தனை பாய்ந்து கொண்டிருக்கவேண்டும். உடலிலும் உள்ளத்திலும் நாம் சிதானந்த ரூபம் என்னும் ஒரே எண்ணம் உருவெடுத்துவிடவேண்டும். அப்பொழுது மனத்தகத்து இருக்கும் மயக்கம் தானே மறைந்துபோய்விடும். ஆத்ம சொரூபத்தின் சுயம்பிரகாசம் ஒன்றே எஞ்சி இருக்கும்.

இருப்பது ஒன்றே. ஒரு பொருளே பல பொருள்களாகக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த ஒரு பொருளை ஆத்மன் என்றும், பிரக்ஞானம் என்றும், பிரம்மன் என்றும் பகர்கிறோம். அலை வேறு; கடல் வேறு அல்ல. அலை கடலுக்கு அந்நியமானது அன்று. கடலுக்கு அந்நியமானது போன்று அது தோன்றுவதற்குக் காரணம் நாமரூபம் என்னும் அத்தியாசத்தை ஏற்றுக்கொண்டதேயாகும். இல்லாததை இருப்பது போன்று ஏற்றுவிக்கப்பட்ட காட்சிக்கு அத்தியாசம் என்று பெயர். அலை என்கின்ற வடிவம் போனால் அதைத் தொடர்ந்து அலை என்கின்ற பெயரும் போய்விடும். பிறகு கடல்தான் எஞ்சி இருக்கும். கடலுக்கும் அலைக்கும் இடையில் வேற்றுமையை உண்டுபண்ண யாருக்கும் இயலாது. இதே பாங்கில் மெய்ப்பொருள் ஒன்றுதான் இருக்கிறது. அதன் கண் ஏற்றுவிக்கப்பட்டுள்ள நாமரூபத்தைக் கொண்டு அது பிரபஞ்சம் என்னும் பெயர் பெற்றுள்ளது. நான் என்றும் நீ என்றும் இரண்டு வஸ்துக்கள் இல்லை. ஒன்றுதான் இருக்கிறது. மதிமயக்கத்தால் பல பொருள்கள் இருக்கின்றன என்ற எண்ணம் வருகிறது. விவேகம் உதயமாகும்பொழுது உள்ளது ஒன்று பல அல்ல என்னும் ஞானம் வருகிறது. அத்தகைய அத்வைத ஞானத்திலிருந்தே உலகுக்கு நலன் அனைத்தும் உண்டாகிறது. அத்வைதத்தில் நான் என்னும் சிறுமை அறவே அகன்றுபோய் அதற்குப் பதிலாகத் தான் என்னும் தெய்வத் தன்மை நிலைநாட்டப்படுகிறது. போராட்டம், சண்டை சச்சரவுக்குப் பதிலாகச் சாந்தமே யாண்டும் அத்வைத அனுபூதியில் ஏற்படுகிறது.

நாம் வேறு உலகம் வேறு என்றுதான் உணர்ந்து வருகிறோம். அகண்ட ஸத் சித் ஆனந்தத்தை நாம் என்று

உணர்வதுதான் அத்வைதம். இப்பொழுது நாம் உள்ள நிலையில் அத்வைதத்தைக் கொள்கை அளவில்தான் ஏற்றுக் கொள்ள முடியும். நடைமுறைக்குத் த்வைதம்தான் சாத்தியம். த்வைதத்தில் சாதனையைத் தீவிரமாகச் செய்து மனதைப் பண்படுத்த வேண்டும். மனது பண்பட்டு வரும்பொழுது அகண்ட ஸத் சித் ஆனந்தம் நாம் என்ற உணர்வு ஓங்கும். அத்வைதம் தான் முடிந்த நிலை. அத்வைத அனுபூதி பெற்றவர்களுக்கு வேற்றுமைகள் யாவும் அகன்றுபோய் விடுகின்றன. இறைவனுடன் இரண்டறக் கலக்கும் நிலையே அத்வைதம் என்பதை "அத்துவிதம் சாரும் நாள் எந்நாளோ" என்று தாயுமானவர் கூறுகிறார்.

கேள்வி: *(25)* இப்பொழுது என்னை மற்றவர்க்கு அறிமுகப்படுத்திக் கொள்ளுதற்கு 'நான்' என்னும் பதத்தைக் கையாண்டாக வேண்டும். இந்தச் சொல் அஹங்காரத்தைக் குறிக்கிறது. உண்மையில் எல்லாம் ஈசன் செயல். ஆனால் இக்கடிதத்தை நான் எழுதினேன் என்றுதானே சொல்லியாக வேண்டும். நான் என்னும் சொல்லை உபயோகிக்காது உலகக் காரியங்களைச் செய்ய முடியாது. உலக காரியங்களைச் செய்வதற்கிடையில் அஹங்காரமற்றிருப்பது எப்படி?

பதில்: நான் என்னும் சொல்லைக் கையாளுவதால் ஒருவனுக்கு அஹங்காரம் வந்துவிடாது. நான் என்னும் சொல்லைத் தவிர்த்துவிடுவதாலேயே அஹங்காரம் போய்விடாது. அஹங்காரத்தை உள்ளபடி தெரிந்து கொண்டால் பின்பு அதை அகற்றுதற்கான உபாயமும் நமக்கு விளங்கும். வெறும் நான் என்னும் சொல்லில் அகங்காரமில்லை. இயற்கையோடு நாம் வைக்கும் இணக்கத்தில் அஹங்காரம் உண்டாவதற்கு அல்லது மறைவதற்கு இடம் உண்டு. இயற்கையிலுள்ள அனைத்தையும் இறைவனுடைய உடைமையாகத் தொகுத்துப் பழகவேண்டும். அவைகளுக்கிடையில் உயர்வு தாழ்வு பாராட்டிப் பழகலாகாது. நான் என்னும் சொல்லுக்கு இலக்காக இருக்கிற மனிதன் தன்னை மற்றவர்களிடத்திருந்து பிரித்துவைத்துத் தன்னை உயர்ந்தவனாகக் கருதினால் அது அஹங்காரம். நான் என்னும்

சொல்லை உபயோகப்படுத்துவதற்கிடையில் தன்னை மற்ற உயிர்களோடு இணைத்துவைத்துத் தனிப்பெருமை நாடாதிருந்து பழகினால் அது அஹங்காரமற்ற நிலை. எல்லா உயிர்களும் கடவுளுக்குச் சொந்தம். செயல்கள் அனைத்தும் எத்தனை உயிர்கள் வாயிலாக வந்துகொண்டிருந்தாலும் உண்மையில் அவை யாவும் கடவுளின் செயலே. இத்தகைய மனப் பான்மையை வளர்த்து வரும்பொழுது அஹங்காரம் தேய்கிறது. ஆக, மனப்பான்மையை மாற்றியமைப்பதே அஹங்காரத்தை அகற்றுதற்கு உற்ற உபாயமாகும்.

கேள்வி: *(26)* 'நான்' என்று சொல்லிக் கொள்கிறோம். இந்த நான் என்பது என்ன?

பதில்: குயவன் குளத்தினின்று களிமண் கொண்டு வருகி றான். அதை மிதித்துப் பிசைந்து பக்குவப்படுத்துகிறான். அக்காலமெல்லாம் அது களிமண். சக்கரத்திலிட்டு அதைப் பாண்டங்களாக வனைகிறான். பின்பு அது சட்டி என்றும், குடம் என்றும், மிடா என்றும் இன்னும் பலப்பல பெயர்கள் பெறுகிறது. சட்டி குடமாகாது. குடம் மிடாவாகாது. அவைகள் பேசுகின்ற பாங்கு படைத்திருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். 'நான்' என்று சட்டி சொல்லுகிறது. அந்தச் சொல்லுக்கு இலக்காக அதன் வடிவம், வண்ணம், பயன் முதலியன அதைச் சார்ந்து இருக்கின்றன. அதே விதத்தில் தட்டு, குடம், மிடா முதலியன 'நான்' என்னும் சொல்லைக் கையாளும்பொழுது அதனதன் பாங்குகளை விளக்குகின்றன. அங்ஙனம் மக்களெல்லாரும் 'நான்' என்னும் சொல்லைப் பயன்படுத்தி அவரவர் தனி இயல்புகளைத் தெரிவிக்கின்றனர். ஐரோப்பியன் ஒருவனுக்கு 'நான்' என்னும் சொல்லில் அவனு டைய நாடும், மொழியும், வாழ்க்கை முறையும், உடலமைப்பும் இடம்பெறுகின்றன. 'நான்' என்னும் சொல்லைச் சீனாக்காரன் உபயோகிக்கிறபொழுது அவனுடைய கருத்துக்களெல்லாம் இன்னொருவிதமாக இருக்கின்றன. 'நான்' என்னும் சொல்லை உலகெங்குமிருக்கும் மக்கள் எல்லாரும் செப்புகின்றனர். ஒவ்வொரு மனிதனுடைய 'நான்' என்னும் சொல்லுக்குத் தனிவியக்தி இருக்கிறது. ஒரு மனிதனை மற்றொரு

மனிதனிடத்திருந்து பிரித்துவைத்துப் பேசுதற்கு 'நான்' பயன் படுகிறது. உலகில் எத்தனை மாந்தரோ அத்தனை 'நான்'கள் இருக்கின்றன. மற்ற உயிர்களிடத்தும் 'நான்' ஒருவாறு அமைந் திருக்கிறது.

'நான்' என்பதற்கு இலக்காக உடல், உள்ளம், பான்மை, நாடு, நகர், மொழி போன்ற எண்ணிறந்த கூறுகள் அமைந் துள்ளன. ஆதலால் இந்த 'நான்' மிக விசித்திரமானது.

எண்ணிறந்த 'நான்'களுள் ஒன்றையெடுத்துக்கொள்வோம். சின்னஞ்சிறுவனாக இருந்தபொழுது 'நான்' ஆக அவன் இருந் தான். யுவன் ஆனபொழுதும், முதிர்ந்தவன் ஆனபொழுதும் கிழவன் ஆனபொழுதும் 'நான்' அத்தனை உடல் மாறுதல்களுக் கும் பொதுவாயிருந்திருக்கிறது. உடலில் மாறுதல் தொடர்ந்து உண்டாயிற்று. 'நான்' யாண்டும் இருந்தபடியிருக்கிறது. மனப் பான்மை குழந்தைப் பருவத்திலிருந்து விருத்தன் ஆகும் வரையில் சதா மாறியமைந்தது. அதற்கிடையில் 'நான்' பொதுவா யிருந்து வந்திருக்கிறது. பழக்கவழக்கங்களில் மனிதன் பெரிதும் மாறியமைகிறான். அம்மாறுதல்களுக்கிடையில் 'நான்' மாறாது இருக்கிறது. வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று மனிதன் வாழ்ந்து வருகிறான். அதை முன்னிட்டு 'நான்' மாறுவதில்லை. நலன்களும், கேடுகளும் மனிதனிடத்து உருவெடுத்துக்கொண்டே இருக்கின்றன. அவைகளைத் தோற்றுவிக்கிற 'நான்' யாண்டும் இருந்தபடியிருக்கிறது. உடைமையும் வறுமையும் மாறிமாறியமை கின்றன. அவைகளுக்குப் பொதுவாக 'நான்' இருக்கிறது.

மட்பாண்டங்கள் எத்தனை வனையப்பெற்றாலும் அவை யாவுக்கும் களிமண் பொதுவாயிருக்கிறது. எத்தனைகோடி 'நான்' உலகில் தென்பட்டாலும், அவை யாவுக்கும் 'இருக்கிறேன்' என்பது பொதுவானது. ஆக 'நான்' என்பதும் 'இருக்கிறேன்' என்பதும் பொதுநிலை. அழியும் பாங்குகளுக்கிடையில், மாறு பாடுகளுக்கிடையில், தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்குமிடையில் எது தோன்றாது ஒடுங்காது இருக்கிறதோ, எது பொதுநிலை யாயிருக்கிறதோ, எது மாறுபாடுகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்கிறதோ, எது தானிருப்பதற்குத் தானே அத்தாட்சி யாகிறதோ, அதுவே நான். அது ஆத்மா எனப்படுகிறது. பலப்பல மாறுபாடுகளைத் தன்னிடத்துத் தோற்றுவித்துக்

கொள்ளுதற்கிடையில் 'நான்' நான் ஆகவே இருந்து வருகிறது. அது ஆத்மா. அந்த மூலப்பொருளை உள்ளபடி ஓர்கின்ற பொழுது வாழ்க்கைப் பிரச்னைகள் யாவும் பொருளற்றவை களாகின்றன. அந்த நான் உயிர்களனைத்துக்கும் பொதுவானது என்பதை அறிகிறபொழுது ஞானம் பூர்த்தியாகிறது. தனி இயல்போடு கூடியது நான். அது யாவுக்கும் பொதுவாகிற பொழுது தான் என்னும் பெயர் பெறுகிறது. "நானானதன்மை நழுவியே எவ்வுயிர்க்கும் தானான உண்மைதனைச் சாருநாள் எந்நாளோ?" - தாயுமானவர்.

கேள்வி: *(27)* தாமிரத்தில் களிம்பு இருப்பது போன்று மனதில் மாசு இருக்கிறது. அதை அகற்றவேண்டும் என்று ஞான வாசிஷ்டம் சொல்லுகிறது. ஸ்படிகத்தின் முன்னி லையில் வைத்த ஒரு பூவின் நிறம் ஸ்படிகத்தில் இருப்பது போன்று தென்படினும் உண்மையில் அந்த ஸ்படிகத்தினுள் நிறம் ஒன்றும் ஏறுவதில்லை. அதுபோன்று மனது உண்மையில் மாசுபடியாதிருக்கிறது. புறப்பொருளின் கூறுகள் மனதை மாசு படிந்தது போன்று காட்டுகின்றன எனக் கைவல்ய நவநீதமும் கூறுகிறது. முரண்பட்டுள்ள இவ்விரண்டு கருத்துக்களுள் எது உண்மை?

பதில்: கோட்பாடு ஒன்றை உபமானத்தைக் கொண்டு விளக்குங்கால் அக்கோட்பாடு நன்கு புலனாகிறது. மனதின்கண் உள்ள மாசு பலப்பல விதங்களில் சாஸ்திரங்களில் பகரப் பட்டிருக்கிறது. அத்தனைவித விளக்கங்களை ஒன்றோடொன்று சீர்தூக்கிப்பார்த்தால் சில வேளைகளில் முரண்பாடும் தென் படக்கூடும். ஆனால் அவற்றின் உட்கருத்தைச் சரியாகத் தெரிந்து கொண்டால் அவைகளுக்கிடையில் முரண்பாடு இருப்பதாக நமக்குத் தோன்றாது.

மனதைச் சுத்தப்படுத்துவது ஆத்மசாதனத்தின் குறி. எடுத்துக்கொண்டுள்ள உபமானம் மனோதத்துவத்துக்கு முற்றிலும் ஒத்ததாக இருக்கமுடியாது. ஒரு சிறிதளவே உபமா னத்துக்கும் உபமேயத்துக்குமிடையில் ஒற்றுமை காணலாம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் குருவாகிய தோதாபுரி, மனது தாமிரம் போன்றது; அதைத் தினந்தோறும் ஆத்ம சாதனத்தின் மூலம்

துலக்காவிட்டால் துரு ஏறிவிடும் என்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதற்கு விடையாகத் தாமிரம் போன்ற மனதைப் பொன்போன்ற மனதாக மாற்றிவிட்டாலோ என்று கேட்டார். அப்போது அதைத் துலக்கவேண்டியதில்லை என்று குரு விடைவிடுத்தார். தாமிரத்தை ரசவாத முறையில் பொன்னாக்கலாம். மனதை ஆத்மசாதனத்தால் மாசற்றதாக ஆக்கலாம். மனது மிகக் கீழான நிலையில் இருக்கிறபொழுது அது தாமிரம் போன்றதே. களிம்பை உடைத்திருப்பது அதன் இயல்பு. அதே மனது முற்றிலும் பரிபாகம் ஆனபிறகு ஸ்படிகம் போன்று ஆய்விடு கிறது. ஸ்படிகம் பூவின் நிறத்தை ஏற்பதுபோன்று தென்படினும் நிஜசொரூபத்திலிருந்து அது மாறுவதில்லை. தூய மனது பிரகிருதியின் கூறுகளை ஏற்பதுபோன்று தென்படினும் அது ஆத்ம சொரூபத்திலேயே ஒன்றுபட்டிருக்கிறது. சாதகன் தான் அடைந்துவரும் பரிபாகத்தில் எந்தப் படித்தரத்தில் இருக் கிறானோ அதற்கேற்றபடி உபமானம் கையாளப்படுகிறது. ஆரம்பதசையில் இருக்கும் ஆத்ம சாதகனது மனது தாமிரம் போன்றதே. பரிபாகம் அடைந்துள்ளவனது மனது ஸ்படிகம் போன்று தெளிந்ததாகி விடுகிறது. எனவே உண்மையில் இவ்விரண்டுவித விளக்கங்களுக்கிடையில் முரண்பாடு இல்லை.

கேள்வி: *(28)* துன்பம் மனிதனைத் தேய்க்கிறது என்பது ஒரு கோட்பாடு. துன்பப்படுவதின் மூலம் மனிதன் மேலோன் ஆகின்றான் என்பது மற்றொரு கோட்பாடு. இவ்விரண்டு கோட்பாடுகளுள் எது உண்மை?

பதில்: இவ்விரண்டு கோட்பாடுகளும் உண்மையே. துன்பப்படுபவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். உலகப் பொருள்களைக் குறித்துத் துன்பப்படுகிறவர் இருக்கின்றனர். அவர்கள் துன்பப்படுவதன் மூலம் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்கின்றனர். உலகப் பொருள்களைக் குறித்து வரும் துக்கம் மனிதனைத் தேய்க்கிறது. பாரமார்த்திகப் பொருளுக்காகத் துக்கப்படுகின்றவர்கள் உண்டு. அவர்கள் துக்கப்படுவதன் மூலம் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்கின்றனர்.

சாதாரண மக்கள் உலகத்தைக் குறித்துத் துயரத்தில்

ஆழ்கின்றனர். பொருள் இல்லையே என்கின்ற துயரம் ஒரு சிலரைப் பிடித்து வாட்டுகிறது. மக்கள் இல்லையே என்கின்ற துயரம் இன்னும் ஒருசிலரைப் பிடித்து வாட்டுகிறது. நோயின்றி வாழ முடியவில்லையே என்னும் துயரம் இன்னும் சிலரைப் பிடித்து வாட்டுகிறது. பேர், புகழ், அந்தஸ்து முதலியவைகள் வந்து வாய்க்கவில்லையே என்ற துயரம் இன்னும் சிலரைப் பிடித்து வாட்டுகிறது. உற்றார், உறவினர்கள் மறைந்து போனதைத் குறித்து மக்கள் யாவரும் துயரத்தில் ஆழ்கின்றனர். அழிந்துபோகக்கூடிய பொருள், அழிந்துபோனதைக் குறித்து அறியா மக்கள் துயருறுகின்றர். இவைகளெல்லாம் லௌகீகத் துயரங்களாகின்றன. இவைகளுக்காக மனிதன் துயரப்படும் பொழுதெல்லாம் அவன் தன்னை அழித்துக் கொள்பவனாகின் றான். இவைகளுக்காகத் துயரப்படுகின்ற மனிதன் யோக வாழ்வுக்குத் தகுதியற்றவனாகின்றான். மேற்கூறியவற்றிற்காகத் துயரப்படுபவனுக்குச் சாந்தி ஒருபொழுதும் கிட்டாது. சாந்தியை வேண்டுபவன், நல்வாழ்வு வேண்டுபவன் மேற்கூறியவற்றைக் குறித்துத் துன்பப்படலாகாது. இத்தகைய துன்பம்தான் மனிதனைத் தேய்க்கிறது.

“வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே” என்று ஒரு பெரியார் துன்பப்படுகிறார். இவர் கடவுளுடைய அருள் கிட்டவில்லையே என்று துன்பப்படுகிறார். இந்தத் துன்பமானது அவருடைய மனதிலுள்ள மாசையெல்லாம் கழுவப் பயன் படுகிறது. கடவுள் தரிசனம் கிடைக்கவில்லையே என்று எவ் வளவுக்கெவ்வளவு மனிதன் துயர்வுறுகின்றானோ அவ்வளவுக் கவ்வளவு அவன் பண்பட்ட மனிதனாகின்றான். ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர் காளிதேவியின் தரிசனம் பெறுவதற்கு முன்பு மாலை வேளையில் கோயில் ஆராதனைக்காக மணியடிக்கும் பொழுது “தாயே! எனது வாழ்நாளில் இன்னொரு நாளும் வீணாகப் போய்விட்டதே, இன்னும் உன் தரிசனம் கிடைக்கவில்லையே” என்று முகத்தைத் தரையில் தேய்த்துக் கொண்டு புலம்புவார். இந்தத் துன்பம் அவருடைய அருள் வேட்கையை மேலும் மேலும் வளர்க்கப் பயன்பட்டது. இப்படிக் கடவுளுக்காகக் கதறியழுத பரமஹம்சர், “மக்கள் பொருளுக்காகவும், மகப்பேறுக்காகவும் குடம் குடமாகக்

கண்ணீர் உகுக்கின்றனர். ஆனால் கடவுளுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விடுவார் யார்?" என்று கூறியிருப்பதன் மூலம் மனிதன் கடவுளைக் குறித்துத் துக்கப்படுவதில் பண்படுகிறான் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். இங்ஙனம் கடவுளுக்காக மனிதன் படுகின்ற துக்கம் மனிதனைப் பண்படுத்துகிறது. எனவே, லௌகீகத் துக்கம் மனிதனைத் தேய்க்கவும், பாரமார்த்திகத் துக்கம் மனிதனைப் பண்படுத்தவும் பயன்படுகின்றன.

கேள்வி: *(29)* ஆத்ம ஞானம் என்றால் என்ன? மெய்யறிவு என்பது என்ன?

பதில்: ஆத்மஞானம், பிரக்ஞானம், பிரம்மஞானம், மெய்ஞ்ஞானம், மெய்யறிவு, வாலறிவு, பேரறிவு என்ற சொற்கள் பரம்பொருளைக் குறிக்கும் சொற்களாகும்.

பரஞானம், அபரஞானம் என்ற இரண்டில் பரஞானம் என்பது இந்திரியாதீதத்திலுள்ள ஞானத்தையும் அபரஞானம் என்பது இந்திரியங்களுக்கு உட்பட்ட அறிவையும் குறிக்கும். இந்திரியங்களைக் கொண்டும் மனதைக்கொண்டும் பெறுகின்ற அறிவுக்குப் பிரபஞ்ச அறிவு அல்லது உலக அறிவு என்று பெயர். உலகம் பஞ்சேந்திரியங்கள் மூலமாக உணரப்படுகின்றது. மனம் பஞ்சேந்திரியங்கள் மூலமாகப் புறவுலகைப்பற்றிய அறிவை நமக்குத் தருகின்றது. பஞ்சேந்திரியங்கள் செயலற்றுப் போய்விட்டால் உலக அறிவு தடைப்படுகிறது.

பஞ்சேந்திரியங்களுக்கு அப்பால் மனம் சென்று ஆங்கு உண்டாகும் உணர்வைப் பெறுமானால் அவ்வுணர்வு ஆத்ம ஞானத்தைத் தரும். மனது சரீர உணர்வைக் கடந்து அப்பால் செல்லும்பொழுதுதான் ஆத்மஞானத்தைத் தெளிவாகப் பெற முடியும். ஐந்து இந்திரியங்கள் மூலமாக அது சிற்றுணர்வுக்கு வசப்பட்டிருக்கும்பொழுது மாசடைந்து விடுகிறது. மாசுடைய மனதைக் கொண்டு ஆத்மஞானம் பெறமுடியாது. மனதை மாசற்றதாக்கும் பொழுதுதான் ஆத்மஞானத்துக்குத் தகுதியுடையவர்களாகிறோம்.

மனதில் உலக சம்பந்தமான, காம சம்பந்தமான விருத்திகள் நிறைந்திருக்கின்றன. அவ்விருத்திகள் மனதை உலக சம்பந்தமான எண்ணங்களிலும் காம சம்பந்தமான எண்ணங்களிலும்

இழுத்துச் செல்லுகின்றன. அவ்விருத்திகள் சக்தி வாய்ந்தவைகளாக இருக்கும்பொழுது நாம் அவற்றின் மயக்கத்துக்கு ஆட்பட்டிருக்கின்றோம். அவற்றின் வேகம் ஓயும் பொழுதுதான் மனம் நித்தியத்துவத்தைப் பற்றியும், அறிவைப்பற்றியும், ஆனந்தத்தைப் பற்றியும் நினைக்கின்றது. அப்பொழுது நாம் சச்சிதானந்த சொரூபம் என்ற விருத்தியை உண்டுபண்ணுகின்றோம். அவ்விருத்தி நாம் ஆத்ம சொரூபம் என்ற உணர்வை உண்டு பண்ணுகிறது. இறுதியில் அவ்விருத்தியும் நசிந்தால் நாம் வேறு, ஆத்ம சொரூபம் வேறு என்ற பேதம் ஒழிகிறது; நாம் ஆத்ம சொரூபமே ஆய்விடுகிறோம். அந்நிலைதான் ஆத்ம ஞானம் பெற்ற நிலையாகும். மனதில் தெளிந்த நிலையை உண்டுபண்ணி நிஜ சொரூபத்தை விளக்கிக் காட்டுவது ஆத்ம ஞானமாகும்.

கேள்வி: *(30)* ஆன்மாவின் உண்மை வடிவம் என்ன?

பதில்: ஆத்மா வேறு, பிரபஞ்சம் வேறு. பிரபஞ்சம் அழியும் பாங்குடையது. ஆத்மா அழியாதது. வீடும் வீட்டில் குடியிருக்கும் மனிதனும் வெவ்வேறானவர்கள். குடியிருக்கும் மனிதன் தன்னையும் தான் குடியிருக்கும் வீட்டையும் அறியவருகிறான். அப்படி அறியும் பாங்குடையது ஆத்மா. அது அழியாப் பொருள். ஆத்மா ஆனந்த சொரூபம். நாம் ஆத்மா என்பதற்கு அத்தாட்சி நாமே. உடலோ ஜடப்பொருள். தூங்கும்பொழுது உடல் தன்னைத்தான் அறிந்து கொள்ளுதல் இல்லை. குடியிருப்பதற்குத் தகுதியற்ற உடலை ஜீவாத்மா புறக்கணிக்கிறது. அப்பொழுது அது வெறும் சடலம். ஆகவே ஆத்மாவின் வடிவம் ஸத் சித் ஆனந்தமாம். ஜடப்பொருள் ஸத் ஆகாது. ஆகையினால் அதனிடத்து அறிவோ ஆனந்தமோ இல்லை. நான் இருக்கிறேன் என்பதை எது அறிகிறதோ அது ஆத்மா. ஆத்மாவானது ஆணன்று, பெண்ணன்று, அலியன்று. இந்த வேறுபாடுகளனைத்தும் உடலுக்குரியவைகள். உடலைத் தான் என்று கருதுவது அக்ஞானம். விசாரித்துப் பார்த்து ஆத்மா வேறு, பிரகிருதியின் கூறாயிருக்கிற உடல் வேறு எனப் பாகுபடுத்துவது மெய்யறிவு. இந்த அறிவுக்கேற்ப வாழ்வது ஆத்ம சாதனமாகிறது.

கேள்வி: *(31)* ஆத்மாவின் சொரூபம் சிந்தையும் மொழியும் செல்லாவிடத்தது. நிர்க்குணம், நிர்விஷயம், இத்திறத்தோன், இவ்வண்ணத்தன் என்று இயம்ப ஒண்ணாதது, அனுபவத்தில் இருப்புமாத்திரம் அதன் சொரூபம்; வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை என்று நூல்கள் முடிவாகக் கூறுகின்றன. ஆனால் பலவிடங்களில் கோடி சூரியர்கள் ஏககாலத்தில் தோன்றினாலும் அதன் பிரகாசத்துக்கு ஒப்பாகாது என்றும், ஹிரண்யகர்பனது ஆனந்தமும் திவலை மாத்திரம் என்றும், பிரளய வெள்ளக் கடல் போன்றது ஆத்மானந்தம் என்றும் பலவாறாகக் கூறுகின்றனர். முடிவான அனுபவம்தான் யாது?

பதில்: ஆத்மாவுக்கு இரண்டு நிலைகள் உண்டு. நிர்க்குணப் பிரம்மம் என்பது ஒருநிலை. சகுணப் பிரம்மம் என்பது மற்றொரு நிலை. அடைமொழிகள் அனைத்தும் சகுண சொரூ பத்தைச் சேர்ந்தவைகள். அடைமொழிகளில் ஒன்றும் நிர்க்குணப் பிரம்மத்தை எட்டாது. சூரிய வெளிச்சம் பூமிக்கு வருகிறது. ஒரு முப்பட்டைக் கண்ணாடியில் அல்லது நீர் நிறைந்த மேகத்தில் அது ஏழு நிறமாகப் பிரிகிறது. இந்த ஏழு நிறங்கள் சகுணப் பிரம்மத்துக்கு ஒப்பானவை. நிறமற்ற ஒளி நிர்க்குணப் பிரம்மத்துக்கு ஒப்பானது. சகுணப் பிரம்மத்தை மனது உணருகிறது. மனது தெளிவடைகின்றவளவு சகுணப் பிரம்மத்தின் மகிமை முழுதும் வெளியாகிறது. மனமற்ற நிலையில் எல்லாம் நிர்க்குணப் பிரம்மமாய் விடுகிறது. பிறகு இதை விளக்குதற்கு ஜீவபோதம் மிச்சமிருப்பதில்லை.

கேள்வி: *(32)* உடலிலிருந்து ஆத்மா பிரிந்தபின் அவ்வாத்மா எப்படி இருக்கும்? இதற்கு விளக்கம் தருவிக்க வேண்டுகிறேன்.

பதில்: ஆத்மாவுக்குப் போக்கும் இல்லை; வரவும் இல்லை. போக்கும் வரவும் இல்லாப் புண்ணியன் என்று அவர் போற்றப்படுகின்றார். பழம் மரத்தை ஒட்டிக்கொண்டிருக்கும் வரையில் மரத்திலிருந்து சக்தியைப் பெறுகிறது. மரத்தை விட்டுப் பிரிந்ததும் அது காய்ந்து போகிறது. சரீரம் ஆத்மாவைச் சார்ந்திருக்கும் வரையில் அதனிடத்து இயக்கம் இருக்கிறது.

ஆத்மாவை விட்டுப் பிரிந்தபின் அவ்வடிவம் அழிகிறது. இங்கு பிரிவது உடலே அன்றி ஆத்மா அன்று.

ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் என்னும் மூன்று சரீரங்கள் ஆத்மாவை மறைக்கும் திரைகளாக இருக்கின்றன. சரீர உணர்வுக்குக் கட்டுப்பட்டு இருக்கின்ற பொழுது நாம் சரீரம் மயமாக இருக்கின்றோம். அப்பொழுது நாம் ஜீவாத்மாக்கள் என்று அழைக்கப்படுகின்றோம். நம் உணர்வு இம்மூன்று சரீரங்க்ளையும் கடந்து செல்லும் பொழுதுதான் ஆன்மிக உணர்வு பெறுகின்றோம். தன்னில் தானாக இருக்கும் பேருணர்வு மயமாக ஆத்மா யாண்டும் இருக்கிறது. மனது ஆத்மாவைச் சார்ந்திருக்கிறபொழுது அதனிடத்துள்ள ஜடத்தன்மை நீங்கி ஆத்ம சொரூபத்தில் அது ஒன்றித்து விடுகிறது. விறகுக் கட்டை நெருப்பில் போட்டதும் நெருப்பு மயமாவது போன்று சொரூபத்தில் போடப்பட்ட மனது சொரூபமயமாய் விடுகின்றது. மனது சொரூபமயமாகும்பொழுது மனதின் தோற்றத்துக்குக் காரணமாயிருந்த அக்ஞானம் என்னும் காரண சரீரமும் அழிகின்றது. நாம் அகண்ட சச்சிதானந்த சொரூபம் ஆகி விடுகின்றோம்.

ஸ்தூல உடலுக்கு நாசம் உண்டாகும் பொழுது சூக்ஷ்ம சரீரமும், காரண சரீரமும் ஆத்மாவைப் பற்றியிருக்கின்றன. சூக்ஷ்ம சரீரம் தக்க சூழ்நிலை வரும்பொழுது மற்றொரு ஸ்தூல சரீரத்தை எடுக்கிறது. அதைத்தான் பிறப்பு என்கிறோம். ஸ்தூல சரீரம் அழிவதை இறப்பு என்கிறோம். எனவே பிறப்பு இறப்பு என்பன ஸ்தூல சரீரத்துக்கே அன்றி ஆத்மா வுக்கு இல்லை. ஞானத்தின் மூலமாகத்தான் சூக்ஷ்ம சரீரத்தை அழிக்க முடியும். மனோநாசம் நிகழும்பொழுது மீண்டும் நமக்குப் பிறப்பு எடுக்கும் நிலை இல்லை. மனோநாசம் நிகழும் வரையில் பிறப்பும் இறப்பும் இருக்கும்.

கேள்வி: *(33)* ஆத்மா பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டது. அப்படியானால் ஆத்ம சாந்தி என்பதன் பொருள் என்ன?

பதில்: ஆத்மா என்னும் சொல் பல படித்தரங்களில் வைத்து உலக நடைமுறையில் கையாளப்படுகிறது. அந்த

ஆத்மாவுக்குச் சிறிது அன்னம் போடு என்னும் கூற்றிலே ஆத்மா என்னும் சொல் உடலைக் குறிக்கிறது. ஆத்மஹத்தி பண்ணிக்கொள்ளுதல் என்னும் கூற்றிலே அறிவிலி ஒருவன் உடலைத் தான் என்று கருதி அதைப் பாழ்படுத்தச் செய்கின்ற முயற்சியாம். ஆத்ம சாந்தி என்பதன் பொருள் மனோசாந்தி எனப் பொருள்படுகிறது. ஏனென்றால் ஜீவாத்மன் ஒருவன் உடலின் கூறுகளனைத்தையும் ஆத்மாவின் கூறு எனத் தவறுதலாக எண்ணிக்கொள்வது போன்று மனதில் உண்டாகின்ற இன்ப துன்பங்களை ஆத்மாவுக்குரியன என எண்ணிக்கொள்கிறான். அந்த எண்ணத்தின்படி ஆத்ம சாந்தி என்பதை மனோசாந்தி என்றுதான் பொருள்படுத்திக் கொள்ளவேண்டும். ஆத்மாவோ தனது நிஜநிலையில் பிரபஞ்சத்தின் கூறுகளனைத்துக்கும் அப்பாற்பட்டதாம்.

கேள்வி: *(34)* பிறப்பைத் தோற்றம் என்றும் மரணத்தை அழிவு என்றும் கூறுகிறோம். அழிவில்லாத ஆத்மா எப்படி வெவ்வேறு தோற்றம் எடுக்கிறது ?

பதில்: நாம் பழுதுபட்ட உடையைக் களைந்துவிட்டுப் புதிய உடையைப் போட்டுக்கொள்ளுவது போன்று ஜீவாத்மா பழுதுபட்டுப்போன தேகத்தைக் களைந்துவிட்டுப் புதிய தேகத்தை எடுத்துக்கொள்கிறது. ஜீவாத்மா சாவதில்லை. பழைய உடலின் அழிவை மரணம் என்றும், புதிய உடலின் தோற்றத்தைப் பிறப்பு என்றும் பகர்கிறோம். ஜீவாத்மாவுக்கு மூன்று சரீரங்கள் உண்டு. அவை முறையே ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் எனக் கூறப்படுகின்றன. ஸ்தூல சரீரத்தின் தோற்றமும், மறைவும் நமக்குத் தென்படுகின்றன. பிறப்பெடுப்பது தோற்றம். தோன்றிய உடல் வளர்ந்து, தேய்ந்து மறைகிறது. அது மரணம். உடலில் வருகிற இந்தத் தோற்றமும், மறைவும் உடலுக்குரியதேயொழிய ஜீவாத்மாவுக்கல்ல. ஜீவாத்மா தோன்றாத நிலையில் சூக்ஷ்ம சரீரத்திலும், காரண சரீரத்திலும் இருக்கிறது. தக்க சூழ்நிலை அமைகிற பொழுது சூக்ஷ்ம சரீரத்துக்கு ஏற்ற புதிய ஸ்தூல சரீரத்தை அது தனக்குத் தானே உண்டுபண்ணிக் கொள்ளுகிறது. பொருத்தமான சூழ்நிலையில் விதையொன்று செடியாக

வளர்வதற்கு நிகர் ஸ்தூல சரீரம் எடுப்பது. அக்ஞானமே காரண சரீரம் என்று சொல்லப்படுகிறது. அக்ஞானத்தில் கட்டுண்டிருக்கும் காலமெல்லாம் சூக்ஷ்ம சரீரமும், ஸ்தூல சரீரமும் மாறிமாறியமைந்து வருகின்றன. ஸ்தூல சரீரத்துக்கு மாறுதல் பிறப்பு இறப்பு வாயிலாக வருகிறது. சூக்ஷ்ம சரீரத்துக்கு, மனப்பான்மை மாறியமைவதற்கு ஏற்றவாறு மாறுதல் அமைகிறது. மாறிய மனப்பான்மையை அனுசரித்தே புதிய ஸ்தூல சரீரம் வந்து அமைகிறது. எப்படி சூக்ஷ்ம சரீரம் கட்புலனாவதில்லையோ, அப்படி ஜீவாத்மனும் கருவி கரணங்களால் காணப்படுவதன்று. அதனுடைய சாந்நித்தியத்தைச் சரீரங்களின் வாயிலாகத்தான் தெரிந்துகொள்ளுகிறோம். ஆத்மா தன்னில் தானாக இருப்பதைத்தான் அறிகிறது. அது ஒருநாளும் காணப்படுபொருள் ஆவதில்லை.

கேள்வி: *(35)* நானாஜீவவாதக் கட்டளைப்படி ஈசுவரன் நிர்மல ஜலப்பிரதி பிம்பன்; ஜீவகோடிகளாகிய நாம் மலின ஜலப்பிரதி பிம்பர்கள், இப்படி இருக்க ஈசுவரனுக்கு மட்டும் பஞ்சகிருத்தியங்கள் செய்ய அதிகாரம் இருக்க நமக்கு அதில் ஒரு சிறிதும் தெரிந்துகொள்ளக்கூட முடியாமல் இருக்கிறோம். இதன் காரணமென்ன?

பதில்: மாயா சகிதனாயிருக்கும் பரம்பொருளை ஈசுவரன் என்கிறோம். மாயா ரகிதனாயிருக்கும். அதே பொருளை நிர்க்குணப் பிரம்மம் என்கிறோம். தன் பெருமையை விளக்குதற்குத் தன்னிடத்திலேயே அமைந்துள்ள சக்தியை மாயை என்கிறோம். சுடுவது தீயின் சக்தி. வெண்மையாயிருப்பது பாலின் சக்தி. தீயினிடத்திருந்து சூட்டைப் பிரிக்க முடியாது. பாலினிடத்திருந்து வெண்மை நிறத்தைப் பிரிக்க முடியாது. ஈசுவரனிடத்திருந்து அவனுடைய மாயா சக்தியைப் பிரிக்க முடியாது. ஆகையினால்தான் அவன் மாதொரு பாகன் ஆனவன் என்றும், அர்த்த நாரீசுவரன் என்றும் அழைக்கப் படுகிறான்.

ஜீவர்களாகிய நாம் ஈசுவரனுக்கு அந்நியமாக இல்லை. கிரணங்களெல்லாம் சூரியனைச் சார்ந்திருப்பது போன்றும், அலைகளெல்லாம் கடலைச் சார்ந்திருப்பது போன்றும்

ஜீவகோடிகளனைத்தும் ஈசுவரனைச் சார்ந்திருக்கின்றன. சூரியனைச் சர்வசக்திமான் என்று சொல்லலாம். கிரணங்களை அப்படிச் சொல்ல முடியாது. சூரியன் செய்கிற கிருத்தியங்களை யெல்லாம் கிரணங்கள் ஒரு சிறிய அளவில் செய்து வருகின்றன; பேராற்றலுடன் பெருங்கிருத்தியங்களைச் செய்ய அவைகளுக்கு முடியாது. கடல் எங்கும் வியாபித்திருப்பது போன்று, அலைகள் எங்கும் வியாபித்திருப்பதில்லை. கடலுக்குள்ள சக்தி அலைக்கு இல்லை. ஆனால் கடல் தன்செயலை அலைகள் மூலமாகவே செய்கிறது. ஈசுவரன் தனது பஞ்சகிருத்தியங்களையும் ஜீவர்கள் மூலமாகவே செய்கிறார். ஆதலால் அவருடைய கிருத்தியங் களுக்கு நாம் புறம்பானவர்கள் என்று கருதலாகாது. அக்கிருத்தியங்களைப் பற்றி நாம் ஒன்றும் அறியாதவர்களல்லர். சிறிதளவு அறிந்தும், சிறிதளவு பஞ்ச கிருத்தியங்களைச் செய்பவர்களாகவும் நாம் இருந்து வருகிறோம். சிருஷ்டித் தொழில் நம் மூலம் நிகழ்வது வெளிப்படை. ஸ்திதி அல்லது நம்மைப் பாதுகாத்து வைத்தல் என்னும் செயலிலும் நாம் பங்கெடுத்துத்தான் வருகிறோம். பிறகு நம் உடல் அழிதற்கு நமது வினைப்பயன் மூலமாக நாமும் முகாமையாகவிருந்து வருகிறோம். இனி மறைத்தல், அருளல் என்னும் ஏனைய இரண்டு கிருத்தியங்கள் ஆத்மசாதனத்தோடு சம்பந்தப்பட்ட வைகள். அக்ஞானத்தில் இருப்பவர்களுக்கு இருளில் இருப் பவர்கள் போன்று உண்மை ஏகதேசம் விளங்குகிறது; முழுவதும் விளங்குவதில்லை. பக்குவம் அடைந்து அருளுக்குப் பாத்திரம் ஆகிறவர்கள் பகல் வேளையில் பொருள்களை உள்ளபடி காண்பது போன்று பரம்பொருளைக் காணவும் வல்லவரா கின்றனர். எனவே நாம் ஈசுவரனுக்கோ, அவனுடைய பஞ்ச கிருத்தியங்களுக்கோ அந்நியமானவர்களல்லர்.

நிர்மல ஜலம், மலின ஜலம் ஆகிய இரண்டுக்குமிடை யிலுள்ள வேற்றுமையை இப்பொழுது தெரிந்துகொள்ள வேண்டும். அசையாது தேங்கியிருக்கும் நன்னீர் நிர்மல ஜலம். சூரிய பிம்பம் அத்தகைய நீரில் உள்ளபடி ஒளிரும். ஆனால் அசைந்து அலைகளாகச் சிதறடைந்து கிடக்கும் நீரை மலின நீர் என்று மொழியலாம். அதன் மீது சூரிய பிம்பம் பிரதி பலித்தாலும் சூரியனை உள்ளபடி காட்டுவதில்லை.

திரிவுபடுத்தியே அதை மலின நீர் விளக்குகிறது. அப்படித் திரிவுபட்ட பிம்பங்களே ஜீவர்களாகிய நாம். நமது சித்தத்தைச் சலனமற்றதாகவும் நிர்மலமாகவும் நாம் செய்யவல்லவர் களாகின்ற பொழுது அருளுக்குப் பாத்திரமாகிறோம். நமது நிஜசொரூபம் விளங்குகிறது. ஈசுவரனுக்கும், ஜீவனுக்குமுள்ள தொடர்பும் அப்பொழுது தெளிவாகிறது. எனவே அறிந்திருக்கிற வேளையிலும், அறியாத வேளையிலும் ஈசுவரனுக்கு அந்நியமாக நமக்கு வியக்தியில்லை. பக்குவம் அடைந்து உண்மையை அறிந்து கொள்ளுங்கால் வேற்றுமையும், ஐயமும் தாமே அகன்றுபோய் விடுகின்றன.

கேள்வி: *(36)* ஒவ்வொரு ஜீவனும் கடவுள் நிலையை அடைய முயல்கிறது. பல பிறவிகளுக்குப் பின்பு தன்னிடத் திலுள்ள குறைகளை அகற்றி ஒவ்வொரு ஜீவனும் கடவுளை அடைந்துவிடுகிறது. இக்கோட்பாட்டின்படி கடவுளுக்கு அப்பால் தனி ஜீவன் என்ற ஒன்று உண்டு என்றும் அதற்குத் தனிச்செயல் உண்டு என்றும் கொள்ளவேண்டி இருக்கின்றது. கடவுள் ஒருவர் என்பதும் பல ஆத்மாக்கள் இல்லை என்பதும் நம்முடைய கொள்கை. இக்கொள்கைக்கு மேற் கூறிய கோட்பாடு முரணாகத் தென்படுகிறது அல்லவா?

பதில்: விழிப்பு நிலையில் உலகத்தையும், பல ஜீவர்களை யும் காண்கின்றோம். ஜீவர்களுக்கிடையில் தாரதம்மியம் இருப்பது கண்கூடாகத் தெரிகிறது. அறிவுத் துறையில் ஒரு ஜீவன் உயர்ந்த நிலையில் இருக்கிறது. அறிவுத்துறையில் மிகக் கீழான நிலையில் இருக்கிற ஜீவனையும் காண்கின்றோம். பண்பாட்டுத் துறையில் ஜீவர்களுக்கிடையில் வேற்றுமை இருப்பதைக் காண்கின்றோம். பண்பாட்டுத்துறையில் மேல் நிலையில் இருக்கின்ற ஜீவன் விரைவில் பரமாத்ம சொரூபத்தை அடைந்து விடுகிறது. பண்பாட்டில் கீழான நிலையில் இருக்கும் ஜீவன் பல பிறவிகளுக்குப் பிறகு பரமனை அடைகிறது. விழிப்பு நிலையில் எண்ணிறந்த ஜீவர்கள் கடவுளை நோக்கிப் பயணம் போகின்றதைக் காண்கின்றோம்.

கனவில்லாத ஆழ்ந்த உறக்கத்தில் நாம் மட்டும்தான் இருக்கின்றோம். நமக்கு அந்நியமாக எந்த ஜீவர்களையும்

நாம் காண்பதில்லை. பரமாத்மனில் லயமடைந்தபொழுது பரமாத்மன் ஒரு பொருள்தான் இருக்கிறார். மனம் விகாரப்பட்ட நிலையில் பல ஜீவர்கள் இருப்பதை ஏற்றுக்கொண்டாக வேண்டும். மனதற்ற பரிசுத்தநிலையில் பரமாத்மன் ஒருவரே இருக்கிறார். நதிகளைக் கடலிலிருந்து பிரித்துக் காண்கிற பொழுது அவைகளுக்குத் தனி வியக்திகள் இருப்பதைக் காண்கின்றோம். நதிகள் யாவும் கடலில் கலந்தான பிறகு நதிகளுக்குரிய தனி வியக்திகளை இழந்து கடல் மயமாகிவிடு கின்றன. அங்ஙனம் மனதைப் பெற்றிருக்கின்ற நிலையில் ஜீவர்கள் தனி வியக்திகளாக விளங்குகின்றன. மனோநாசம் நிகழ்ந்தான பிறகு ஜீவர்கள் அனைவரும் பரமாத்மாவில் லயமாகி விடுகின்றன. பரமாத்மன் ஒருவரே அப்பொழுது இருக்கிறார். அத்வைதம் என்னும் முடிந்த நிலையில் பொருள் ஒன்றே. அதைத்தான் நாம் மூலபுருஷன் என்கின்றோம். த்வைத நிலையில் ஜீவாத்மாக்கள் பல உண்டு. ஜீவாத்மாக்கள் ஒவ்வொன்றும் தனித்தனி வியக்திகளோடு இயங்கி வருகின்றன. அத்வைத நிலையையடையும் ஜீவர்கள் தனி வியக்திகளை இழந்து பரமாத்மனோடு லயமாகிவிடுகின்றனர். ஆகையால் மூலப்பொருள் ஒன்றுதான்; அது தன்னைப் பலவாகத் தோற்றுவித்துக் கொள்கின்றது.

கேள்வி: *(37)* சங்கரரின் அத்வைத வேதாந்தத்தின்படி ஆத்மா ஒன்று. பல ஜீவாத்மாக்கள் காணப்படுவதற்குக் காரணம் என்ன?

பதில்: சங்கராச்சாரியர் பரப்பிரம்மம் ஒன்றே நித்திய வஸ்து என்கிறார். ஜகத்தும் ஜீவனும் தோன்றியிருந்து மறையக்கூடியவைகள். ஆகையால் அவைகளுக்கு நிலைபேறு கிடையாது. நிலைபேறு படைத்திருப்பது பரமாத்மா அல்லது பரப்பிரம்மம் ஒன்றே. தாற்காலிகமாகத் தோன்றுகிற எண்ணிறந்த ஜீவகோடிகள் அந்தப் பரமாத்மாவின் பிரதிபிம்பங்களாம். ஒரு சூரியன் அனந்தங்கோடி சூரியன்களாகக் கடல் அலைகள் மீது பிரதிபிம்பிப்பது போன்று ஒரு பரமாத்மா அனந்தங்கோடி ஜீவாத்மாக்களாக அனந்தங்கோடி அந்தக்கரணங்களில் பிரதிபிம்பித்துக் கொண்டிருக்கிறார். பிரதிபிம்பங்களை நித்திய

வஸ்துக்களாக அவர் எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் இந்தக் கோட்பாடு எல்லார்க்கும் விளங்காது.

கேள்வி: *(38)* ஆன்மா, உடல் இவற்றில் அழியாதது எது? உடலை அழியாமல் காக்கலாம் என்று சித்தர்கள் கூறுகிறார்களே?

பதில்: நித்திய அநித்திய வஸ்துவைப்பற்றி விசாரம் பண்ணுவது ஆத்ம சாதனத்தில் இன்றியமையாத பகுதியாக வந்துள்ளது. புருஷன், பிரகிருதி என்பன இரண்டு கூறுகள். புருஷன் எனப் பகரப்படுவது ஆத்ம சொரூபம். பிரகிருதி எனப் பகரப்படுவது பிரபஞ்சம். இவ்விரண்டனுள் புருஷ தத்துவம் என்றைக்கும் நிலைத்துள்ளது. பிரகிருதி நிலையற்றது. அது ஓயாது மாறி அமைந்துகொண்டிருக்கிறது. அது சிருஷ்டி காலத்தில் தோற்றத்துக்கு வருகிறது. பிரளய காலத்தில் அது ஒடுங்குகிறது.

மனிதனுடைய அமைப்பில் புருஷ தத்துவம், பிரகிருதி தத்துவம் இரண்டும் அமைந்திருக்கின்றன. புருஷ தத்துவம் யாண்டும் நிலைத்திருக்கிறது. பிரகிருதி தத்துவமோ சிசுவாகத் தோற்றத்துக்கு வருகிறது; வளர்கிறது; பிறகு தேய்கிறது; கடைசியில் மறைகிறது; இது இயற்கையின் கூறு. மாறுபாடடைந்து மறைந்து பட்டுப்போகும் தத்துவத்தை மாறுபாடடையாது வைத்திருப்பது எங்ஙனம்? மறைந்துபட்டுப் போவதைத் தடுப்பது எங்ஙனம்?

எது ஓயாது ஜீரணமாகிக் கொண்டிருக்கிறதோ அது தேகம். அப்படி அழியும் தன்மையுடைய தேகத்தை நெடுநாள் அழியாது காப்பாற்றலாம். அப்படிச் செய்வதற்குக் காயசித்தி என்று பெயர். கெட்டுப்போகும் உணவை நெடுநாள் கெட்டுப் போகாது காக்கலாம். பின்பு அது கெட்டுப்போகிறது. அதே விதத்தில் சித்தியடையப் பெற்ற தேகமும் பிரகிருதியினின்று வந்திருப்பதால் அது மறைந்துபட்டுப் போகின்றது. எந்த சித்தபுருஷனாவது ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து வந்ததற்குச் சான்று இல்லை. இனியும் இருக்கப் போதில்லை. ஆகையினால் இது வெறும் நம்பிக்கைக்குரிய விஷயமே ஒழிய தத்துவத்துக்குப் பொருந்தாது.

கேள்வி: *(39)* ஜீவன் தன் சொரூபத்தை மறந்த காரணத்தால் அக்ஞானமும், பந்தமும், துன்பமும் வந்ததென்றால் அதை நீக்கத் தன்னை விசாரித்து அறிவதுதானே வழியாகும். அப்படியிருக்க ஈசனை வழிபடுவதாலேதான் ஆன்மா பூரண நிலையை அடையும் என்று எதனால் சொல்லப்படுகிறது?

பதில்: ஒருவன் அக்ஞான நிலையில் இருக்கின்ற பொழுது அவன் ஜீவன் என்று அழைக்கப்படுகிறான். அறியாமையினால் பிரபஞ்சத்தில் அவன் தன்னைப் பந்தப்படுத்திக் கொள்கின்றான். பிரபஞ்சத்தோடு பந்தம் வந்துவிடுகின்றபொழுது அதைத் தொடர்ந்து துக்கமும் வந்தே தீரும். ஜீவன் அதைவிட்டுத் தப்பிக்க முடியாது. ஞானத்தைப்பெறுதல் ஒன்றே பந்தத்தை நீக்குதற்கும் துக்கத்தை அகற்றுதற்கும் உற்ற உபாயம். இந்த ஞானத்தை ஜீவன் இரண்டு விதங்களில் பெறலாம். தன்னுடைய உண்மைநிலை யாது என்று தன்னைப் பற்றிய நேரான விசாரம் ஒன்று. தன் தலைவன் ஆகிய ஈசனிடம் ஆழ்ந்து பற்றுதல் வைப்பது மற்றொன்று.

"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு".

என்பது மறைமொழி. ஈசனிடத்துப் பெரும் பற்று வைக்கின்றவர்களுக்கு உலகப்பற்றுத் தானே போய்விடுகின்றது. பற்று அகலுங்கால் துக்கமும் அகன்றுவிடுகிறது. ஈசனுடைய மகிமையை அறிந்துகொள்ளுதல் வாயிலாக ஈசனுக்கும் தனக்குமுள்ள மாறாத தொடர்பையும் ஜீவன் அறிந்து கொள்கின்றான். இம்முறை பக்தியோகம் என்னும் பெயர் பெறுகிறது.

மனிதன் தன்னுடைய யதார்த்த நிலையை முறையாக ஆராய்கின்றபொழுது தான் உலகத்தில் எதனோடும் சம்பந்தப்பட்டவன் அல்லன் என்பதைத் தெரிந்துகொள்கின்றான். சாக்கடை நீர் எவ்வளவுதான் அசுசியாக இருந்தாலும் அந்த அசுசியெல்லாம் நீக்கியான பிறகு அது தூய நன்னீர் ஆகின்றது. அப்பொழுது தானும் வானத்தினின்று வருகின்ற நன்னீரும் ஒன்றே என்பதை அது விளக்கவல்லதாகிறது. அதேபாங்கில் ஜீவன் தன்னுடைய தூய நிலையை உணர்வானாகில் தானும்

தனக்குத் தலைவனும் ஒன்றுபட்டவர்கள் என்பதை உணர்வான்.

தன்னை அறிந்தால் தலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றும் உண்டோ பேசாய் பராபரமே.

என்பது ஆப்த வாக்கியம். தன்னை உள்ளபடி அறிகின்றவன் தலைவன் மயம் ஆய்விடுகிறான். இது ஞான மார்க்கம். இரண்டு நெறிகளிலும் ஜீவன் ஜீவபோதத்தைக் கடந்து பரபோதத்தைப் பெற்றுவிடுகின்றான். ஆக இரண்டும் சரியான மார்க்கங்களேயாம்.

கேள்வி: *(40)* மனிதன் ஒருவனுக்குச் சொரூபம் ஸத் சித் ஆனந்தமாயின் சவமாகுமிடத்து அந்தச் சவத்தினிடமும் ஸத் சித் ஆனந்தம் உண்டா? சவத்தின்கண் ஸத் அன்றிச் சித் ஆனந்தம் எப்படி இருக்க முடியும்?

பதில்: சச்சிதானந்த சொரூபம் மனிதனிடத்து மட்டும் இருக்கிறது என்று சொன்னால் போதாது. சச்சிதானந்தம்தான் இருக்கிறது. அது இத்தனையுமாய்த் தோன்றிக்கொண்டிருக்கிறது. கல் ஒன்று நம் காட்சியில் சித்தும் ஆனந்தமும் இல்லாததாகத் தென்படுகிறது. ஓரளவு அது ஸத் சொரூபமாக நமக்குப் புலப்படுகிறது. சித்தையும் ஆனந்தத்தையும் பிரித்து வைத்துவிட்டு அலாதியாகக் கல் ஒன்றை ஸத் சொரூபமாகப் பார்ப்பது பொருந்துமா என்பது இங்கு எழுந்துள்ள கேள்வியின் கருத்தாகிறது. உயிர் போனதும் பிணம் ஒன்று கிட்டத்தட்ட கல்நிலைக்குப் போய்விடுகிறது. நாம் கல்லாகக் காண்பது அரைகுறையான காட்சி. அதே விதத்தில் நாம் பிணமாகக் காண்பதும் அரைகுறையான காட்சி. நமக்கு நிறைஞானக் காட்சி வந்துவிடுகின்றபொழுது ஜடமாக இப்பொழுது தென்படுபவைகள் எல்லாம் அப்பொழுது சித்சொரூபமாகத் தென்படும். உணர்ச்சி அற்றவைகளாக இப்பொழுது தென்படுபவைகள் எல்லாம் அந்த ஞானநிலையில் உணர்ச்சி சொரூபமாகவே விளங்கும். மரம் செடி கொடிகளுக்கு ஆனந்தம் இருப்பது சாதாரண மக்களுக்கு விளங்குவதில்லை. ஆனால் புலவன் ஒருவனுக்கு ஸ்தாவரங்களின் ஆனந்த நிலை புலப்படுகிறது. மெய்ஞானி ஒருவனுக்கு ஜடப்பொருளின் காட்சி மறைந்து போய்விடுகிறது. ஆதலால் அவன் காட்சியில் பிணம்

இல்லை. பிறப்பதுமில்லை, சாவதுமில்லை. ஸத் சித் ஆனந்த சொரூபம்தான் யாண்டும் இருக்கிறது. அதற்குப் போக்கு இல்லை, வரவு இல்லை. தோற்றம் இல்லை, மறைவு இல்லை. அத்தகைய மெய்ஞானம் வருவதற்கு முன்பு உயிர் வாழ்ந் திருக்கும் உடலில் மிளிர்கிற ஆனந்தம் பிணத்தினிடத்து இல்லை என்றுதான் நாம் வைத்துக்கொள்ள வேண்டும். உயிர் வாழ்பவ னிடத்து ஆனந்தத்தைக் காண்பதும் பிணத்தினிடத்து அதைக் காணாதிருப்பதும் நம்மிடத்துள்ள அரைகுறையான ஞானத்தின் விளைவு. நிறைஞானத்தில் ஜனன மரணமில்லை. தோற்றம் மறைவு இல்லை. அகண்ட சச்சிதானந்தம்தான் உள்ளது.

கேள்வி: (41) **கடவுள் அசைத்தால் சகலமும் அசை கிறது என்பது நியதி. இங்ஙனம் இருக்க நன்றுடையானைத் தீயதில்லானை என்று பெரியோர்கள் கடவுளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மக்கள் மனதை கடவுள்தானே அசைக்கிறார். ஆகையால் மனிதனுடைய சஞ்சலங்களுக் கெல்லாம் கடவுளே காரணமாகிறார். கடவுள் விரும்பினால் மனம் அலைதல் எல்லாம் நின்று மக்கள் நன்மை அடைய முடியாதா? தீயதிலானை என்பதைவிட தீயதுளானை என்று சொல்லியிருந்தால் பொருத்தமாயிருந்திருக்கும். அருளாளர் வாக்குக்கும் நடைமுறைக்கும் இடையில் முரண்பாடு உள்ளது.**

பதில்: கடவுளுக்கு விளக்கங்கள் பல இருக்கின்றன. ஒவ்வொரு விளக்கமும் அவருடைய மகிமையின் ஒவ்வொரு பகுதியை விளக்குகிறது. அதற்கு சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். கடல் இருக்கிறது. அதற்குக் கணக்கற்ற விளக்கங்கள் தரலாம். பரந்த நீர்ப்பரப்பு என்பது ஒரு விளக்கம். கொந்தளிப்பும் கொடுமையும் வடிவெடுத்தது என்பது மற்றொரு விளக்கம். தன்னகத்து மலைகளையும் பள்ளத்தாக்கு களையும் பரந்த சமவெளிகளையும் அடக்கிய நீர்நிலை என்பது மற்றொரு விளக்கம். எண்ணிறந்த உயிர்வகைகளுக்கு இருப்பிடம் என்பதும் ஒரு விளக்கம். முரண்படுகிற விளக் கங்கள் கடலுக்கே வந்தமைகின்றன. பிறகு கடவுளுக்கு அது ஏன் வந்து அமையலாகாது? கப்பலைக் கடத்துதற்கு உற்ற

இடம் அது. கப்பலை எடுத்து விழுங்கவல்லதும் அதுவே. இந்த முரண்பாடு கடலுக்கு உண்டு. இனிக் கடவுளையே இயற்கை என்றும் இயம்பிவிடலாம். இயற்கை வேறு, கடவுள் வேறு அல்ல. முரண்பாட்டுச் செயல்கள் இயற்கையில் உண்டு. பொறையே வடிவெடுத்தது பூமி. ஆனால் பூகம்பமோ பொறைக்கு நேர்மாறானது. இனிமையே வடிவெடுத்தது தென்றல். ஆனால் புயலோ பயங்கரமானது. இப்படி இயற்கையையே வேண்டியவாறு வருணிக்கலாம். கணக்கற்ற முரண்பாடுகளையும் இயற்கையில் காணலாம். ஆயினும் இத்தனைவிதமான செயல்களுக்கு அடிப்படையாக உயர்ந்த திட்டம் ஒன்று இயற்கையின்கண் உண்டு. உயிர்களைப் படிப்படியாகப் பண்படுத்துவது இயற்கையின் செயல். அதைக் கடவுளின் செயல் என்று சொல்லுதலும் முறையே. காற்று அடித்து மரத்தை அசைத்து அதன் வேர்களை உறுதியாக்கு கிறது. அடிமரத்திற்குக் காற்று அடிப்பதால் வலிவு அதிகரிக்கிறது. அதன் கிளைகள் எல்லாம் திண்டாடுகின்றன. இலைகளை யெல்லாம் காற்று பறித்துக்கொண்டு போய்விடுகிறது. கேடு அடைவது போன்று தென்படுகிற மரம் மற்றொரு பாங்கில் நலனை அடைந்து வருகிறது. மக்களுடைய வாழ்க்கைக்கும் இக்கோட்பாடு பொருந்துகிறது. துன்பங்கள் பல மக்களுக்கு வந்து அமைகின்றன. துன்பங்கள் இல்லாவிட்டால் மக்கள் பண்பாடு அடையமுடியாது. பரந்த திட்டத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு பார்க்குமிடத்துத் துன்பமாகத் தென்படு பவைகள் எல்லாம் மறைமுகமாக மனிதனுக்கு நலம் புரிபவைக ளாகவே அமைந்திருக்கின்றன. மனது சஞ்சலப்படாத நிலையை மனிதன் அடைந்துவிட்டால் அவன் யோகி ஆய்விடுகின்றான். ஆனால் சஞ்சலப்படுதல் என்கின்ற செயலின் வாயிலாகவே சஞ்சலப்படாத நிலைக்கு மனிதன் போகின்றான். இறை வனுடைய திட்டத்தை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் அவன் நலமுடையான், கேடில்லான் என்கின்ற முடிவுக்குத்தான் நாம் வந்தாக வேண்டும். கேடுடையதாக அவர் காட்சி கொடுத்துக் கொண்டிருப்பது மறைமுகமாக நமக்கு நலத்தை உண்டு பண்ணுதல் பொருட்டேயாம். எனவே இது விஷயத்தில் கணக்கற்ற கேள்விகளைக் கிளப்பி மனக்குழப்பம் அடைந்து

விடலாகாது. "இறைவா, உன் செயல்கள் அனைத்தின் உட் கருத்தை நீயே அறிவாய். சிற்றறிவாளனாகிய நான் உனது பெருந்திட்டங்களை அறிந்துகொள்ள வல்லவன் அல்லேன். எச்செயலை நீ செய்தாலும் அதன் மூலம் என்னைப் பண் படுத்தி அருள்வாயாக" என்று இறைவனிடம் பிரார்த்தித்துக் கொண்டு அவனுடைய கிருத்தியங்களுக்கு நாம் உட்பட்டவர் களாக நடந்து கொள்ளுதலே நாம் உய்வதற்கு உற்ற உபாயமாகும்.

கேள்வி: *(42)* உலகில் நல்லவர்கள் கெட்டவர்கள் என்று இருதரத்தாரை இறைவன் ஏன் சிருஷ்டித்தார்? அவர் எல்லாரையும் நல்லாராகப் படைத்திருந்தால் உலகம் மேன்மையுற்று விளங்கும் அல்லவா?

பதில்: முக்குண மயமாயுள்ளது சிருஷ்டி. முக்குணங்களுக்கு இடையிலுள்ள தாரதம்மியத்தால் படைப்பு நிகழ்கிறது. ஸத்வம், ரஜஸ், தமஸாகிய மூன்று குணங்கள் ஐக்கிய நிலையை எய்துங்கால் பிரளயம் வந்துவிடும். சிருஷ்டியில் பேதம் நிகழ்கிறது. பிரளயமோ அபேதநிலை. எங்கு சிருஷ்டி இருக்கிறதோ அங்கு நாம் பேதத்தைக் காண்கிறோம். குயவன் களிமண்ணைக்கொண்டு ஒரேவிதமான பாண்டத்தை வனைவா னாகில் அது அவனுடைய சிருஷ்டி திறமையாகாது. இறைவன் மக்கள் எல்லாரையும் ஒரேபாங்கில் படைத்துவிடுவாராகில் அபிப்பிராய பேதம் இல்லை, வாழ்க்கை பேதம் இல்லை. அந்நிலை மரணத்துக்கு ஒப்பானது. நாம் விழித்திருக்கிற வேளையில் நல்லவர்களையும் சந்திக்கிறோம்; கெட்டவர்களையும் சந்திக்கிறோம். நல்லவர்களிடத்து ஒரு பாங்கில் நடந்து கொள்கிறோம். கெட்டவர்களிடத்து இன்னொரு பாங்கில் நடந்து கொள்கிறோம். யாரிடத்து என்ன பாங்கில் நடந்து கொள்ளுதல் என்பது வாழ்க்கைப் பயிற்சியாகிறது. எல்லாரிடத்திலும் ஒரேபாங்கில் நடந்துகொள்ளுகிற அபேத அமைப்பு உலகில் ஏற்படுங்கால் அது பயிற்சி பெறுவதற்கான சூழ்நிலையாகாது. முன்னேற்றமடைவதற்கு வாய்ப்பு இல்லாது போய்விடும். நல்லாரோடு நல்லிணக்கம் பூணுவது ஒருவிதப் பயிற்சி. பொல்லாரைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பது மற்றொரு

விதமான பயிற்சி. கடலில் கொந்தளிப்பே இல்லாது இருக்குமானால் மாலுமி தன்னுடைய திறமையை வளர்ப்பதற்குச் சந்தர்ப்பமில்லை. இடையிடையே கடல் கொந்தளிப்பு ஏற்படுமானால் அந்தப் பிரதிகூலமான சூழ்நிலையில் கப்பலைச் செலுத்துவதின் வாயிலாக மாலுமியின் திறமை ஓங்குகிறது. வாழ்வு என்னும் பயணமும் அத்தகையதே. பலதரப்பட்ட மாந்தர்களோடு மனிதன் தொடர்பு வைத்துப் பழகவேண்டும். மனிதன் துஷ்டனாயிருப்பது அவனுடைய வாழ்க்கையில் ஒரு படித்தரமாகிறது. துஷ்டனாயிருப்பதின் வாயிலாகத் துஷ்டத்தனத்தை அவன் நன்கு அறிபவனாகிறான். ஆதலால் துஷ்டத்தனத்தில் கொஞ்சநாள் ஈடுபட்டிருப்பது வாழ்க்கையின் போக்கு ஆகிறது. துஷ்டனை நல்லான் ஒருவன் சமாளித்துப் பழகுகிறான். சமாளிப்பில் அவன் சமர்த்தன் ஆவதற்குத் துஷ்டன் அவனுக்கு நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறான். ஆதலால் உலக அமைப்பில் நல்லார் பொல்லார் ஆகிய இரு தரத்தாரும் அவசியமாகின்றனர். இருதரத்தாருடைய செயல்கள் வாழ்க்கையைப் பண்படுத்துவதற்கு உதவுகின்றன. ஆக, அப்பொழுது உள்ள ஏற்பாடே உயர்ந்தது.

கேள்வி: *(43)* "நாராயணனே எல்லாம்" என்று போக்கிரியின் செயலைக் கண்டிக்காவிட்டால் அவன் தீய செயல் அதிகரிக்காதா?

பதில்: பரம்பொருள்தான் உலகனைத்தும் ஆகியிருக்கிறது என்பது உண்மை. "உலகனைத்தும் ஆனாய் நீயே", என்று பக்தர் ஒருவர் பகர்கிறார். "ஆதிபகவன் முதற்றே உலகு" என்பது குறளின் கோட்பாடு. என்னுடைய ஓர் அம்சத்தைக் கொண்டு ஜீவலோகமும் பூதங்கள் யாவும் ஆகியிருக்கிறேன் என்பது பகவத்கீதை வாக்கியம். சிருஷ்டியிலே நலமும் கேடும் நிறைந்திருப்பது கண்கூடு. இது உலகைப் பற்றிய உண்மை. ஆயினும் இவ்வுலகில் வாழ்ந்து வருகிற நாம் நலனை நாடவும், கேட்டைத் தவிர்க்கவும் செய்கிறோம். மரம் ஒன்றில் முள்ளும் இருக்கிறது, கனியும் இருக்கிறது. முள்ளைத் தவிர்க்கவும் கனியை ஏற்றுக்கொள்ளவும் செய்கிறோம். மக்களுள் நல்லவர்களும் இருக்கிறார்கள். கெட்டவர்களும் இருக்கிறார்கள். நலனை

நாடும் நாம் கெட்டவர்களிடத்திலிருந்து விலகியிருக்கவும் வேண்டும். கெட்டவர்களிடத்திலிருக்கும் ஒழுக்கமின்மை அவர்களோடு நின்றுவிடுமாகில் நாம் அவர்களை விட்டு விலகி இருப்பது போதுமானது. ஆனால் கெட்டவர்களுடைய கேடு நிறைந்த செயல் ஏனையவர்களை வந்து பாதிக்குமானால் அக்கெட்டவனைக் கண்டிப்பது முற்றிலும் அவசியம். இக் கேள்வியில் அடங்கியுள்ள கருத்துப்படியே துஷ்ட நாரா யணனைக் கொடியவன் எனக்கருதி அவன்மீது நடவடிக்கை எடுப்பது முற்றிலும் பொருந்தும். அவனை நாராயணனாகக் கருதுதலில் பலன் ஒன்றும் உண்டு. அன்னவன் மீது எடுத்துக் கொள்ளும் நடவடிக்கை யாண்டும் வரம்புக்கு உட்பட்ட தாயிருக்கும். அவனும் நாராயணன் என்னும் அடிப்படை உண்மையை அறியாதிருந்தால் அல்லது அதை மறந்து போனால் அவன்மீது எடுத்துக் கொள்ளும் நடவடிக்கை பெரிதும் வரம்பு கடந்ததாய்ப் போய்விடும். கெட்டவர்கள் மீது நட வடிக்கை எடுத்துக்கொள்ளுவது அறச்செயல். ஆனால் அந்த நடவடிக்கை அவர்களைத் திருத்தியமைத்தற்பொருட்டு இருத்தல் வேண்டும். அவனை ஒழித்தல் முறையாகாது. நாராயணனே அனைத்துமாய் இருக்கிறான் என்னும் அடிப்படை உண்மையை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும் அளவுக்கு நம்முடைய நடவடிக்கை, செயல் வரம்புகடந்து போகாது. அந்த ஞானம் அந்த அளவில் ஆத்ம சாதகனுக்குப் பயன்படுகிறது.

கேள்வி: *(44)* நல்லவரும், கெட்டவரும் மரணத்தின் வாயிலாகத் துடைக்கப்படுவது திண்ணம். இந்நிலையில் சிலர் நல்லவராயிருந்து அடைந்த பயன் என்ன?

பதில்: இக்கேள்விக்கு விடையாக மற்றும் சிலர் கெட்ட வர்களாகவிருந்து அடையும் பயன் என்ன என்று நாம் கேட்கலாம். ஸ்தாவர உலகில் சுவை நிறைந்த நல்ல கனிகளைத் தரும் மரம், செடி, கொடிகளிருக்கின்றன. பயன்படாத கனிவகை களைத் தருகிற மரம், செடி, கொடி வகைகளும் இருக்கின்றன. புசித்தால் மனிதன் மாண்டுபோவதற்கான நச்சுப்பழங்களைத் தரும் ஸ்தாவரங்களும் இருக்கின்றன. மனிதன் மட்டுமன்று உயிர் வகைகள் யாவும் நல்லவைகளையே நாடுகின்றன.

கெட்டவைகளை ஒதுக்கித் தள்ளுகின்றன. வாழ்க்கைக்குப் பயன்படுபவைகள் நல்லவை. இடைஞ்சல் பண்ணுபவைகள் கெட்டவை. இயற்கையின் அமைப்புக்கேற்ப மக்களுள்ளும் நல்லவர்களிருக்கிறார்கள், கெட்டவர்களிருக்கிறார்கள். கெட்டவர்கள் சமுதாயத்திற்குக் கேடு விளைவித்துக்கொண்டே இருக்கின்றனர். நலம் புரிகிறவர்களுக்கு இடையிலுள்ள நிம்மதி கேடு புரிகிறவர்களுக்கு இடையில் இல்லை. நன்மையே செய்வதின் மூலம் மனிதனுடைய ஆனந்தம் மேலும் மேலும் உறுதி பெறுகிறது. கேடு செய்கிறவனுடைய மட்டமான மனப்பான்மை தனக்கும் தொல்லையை உண்டுபண்ணுகிறது; மற்றவர்களுக்கும் தொல்லையை உண்டுபண்ணுகிறது. நல்லாரும் பொல்லாரும் அழிந்துபட்டுப் போவது திண்ணம் என்றால் நிலையற்ற வாழ்வை நலம் புரிவதில் பயன்படுத்துகிறவர்கள் உலகத்திலுள்ள துன்பங்களைக் குறைக்கின்றனர். கெட்டவர்களோ துன்பங்களை வளர்க்கின்றனர். அதன் மூலம் அவர்கள் முன்னேற்றம் அடைவதில்லை. உலகுக்குத் தான் வழங்குகின்ற இன்பத்தை முன்னிட்டும் தனக்குத்தானே உண்டுபண்ணிக் கொள்கின்ற நலனையும் மேன்மையையும் முன்னிட்டு ஒவ்வொரு மனிதனும் நல்லவனாகவிருக்க முயலுவதே முறை.

கேள்வி: *(45)* இயற்கை மரணமும் அகால மரணமும் ஒரே ஆண்டவனின் கட்டளைகளா? அவை தனித்தனி என்றால் எப்படி?

பதில்: இயற்கை நடைமுறை முழுதும் ஒன்று சேர்ந்து ஆண்டவனுடைய கட்டளையாகிறது. அந்நிகழ்ச்சிகளுள் சில பொருந்தியவைகளாகவும் வேறு சில பொருந்தாதவைகளாகவும் நமக்குத் தென்படுகின்றன. ஆயினும் பொருந்தியவை, பொருந்தாதவை ஆகிய எல்லா நிகழ்ச்சிகளும் இயற்கையின்கண் நிகழ்ந்து வருகின்றன. அவைகளுள் உயிர்களின் முன்னேற்றத்துக்குப் பொருந்தியவைகளையே நாம் இறைவனுடைய கட்டளை எனக்கொள்ளுதல் வேண்டும். அதற்கேற்றபடி நாம் முரண்பாடில்லாமல் நடந்துகொள்வது நம் கடமையாகிறது. அவ்வாறு நடந்துகொள்வதன் மூலம் நாம் பரிணாமத்தில் மேல்நிலைக்கு வருகிறோம். பொருந்தாதவைகள் நிகழ்கின்றவிடத்து அவைகள்

வாயிலாகவும் நாம் பாடமொன்றைக் கற்றுக்கொள்கின்றோம். எச்செயல்கள் மனிதனைக் கீழ்மைப் படுத்துகின்றனவோ அவை யாவும் இயற்கையினது திட்டத்திற்குப் பொருந்தாதவை களேயாம். ஆயினும் அவைகளை அறவே தடுக்க யாருக்கும் இயலாது. பொருந்தியவைகள், பொருந்தாதவைகள் யாவும் நடைபெறுதற்கு இயற்கையில் இடம் உண்டு. அகால மரணம் பொருந்தாது என்றாலும் அது இயற்கையில் நிகழ்கிறது. நடக்கக் கற்றுக்கொள்ளும் குழந்தை ஒன்று பலமுறை தடுக்கிக் கீழே விழுவது இயல்பு. அதற்கு நிகரானது அகால மரணம். ஆயினும் அதன் வாயிலாகவும் அம்மரணத்துக்கு உட்படும் ஜீவன் கற்கவேண்டியவைகளைக் கற்றுக் கொள்கிறான். ஆகவே இயற்கையில் நிகழவேண்டிய அனைத்தையும் தொகுத்துப் பொதுவாக இறைவனுடைய கட்டளையென்று நாம் வைத்துக் கொள்ளலாம். மேலும், அந்நியதிக்குக் கட்டுப்பட்டு முறை பிறழாமல் செயல்பட வேண்டிய இன்றியமையாமையும் நமக் குண்டு. அதற்கிடையில் மனிதனுடைய முன்னேற்றத்திற்குச் செயல்கள் அனைத்தும் பயன்பட்டு வருகின்றன என்பதை அறிந்து கொள்கின்றவன் நல்ல ஆத்ம சாதகனாகின்றான். அன்னவனுக்கு அகால மரணமும் நல்லதொரு பாடத்தைப் புகட்டுகிறது. அதாவது பொருந்திய செயல் பொருந்தாத செயல் மயமாயிருக்கும் பிரபஞ்சத்தைத் தாண்டி அப்பால் செல்லுதற்கு மனிதன் அவை யாவையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதுவே தீவிரமான ஆத்ம சாதகன் ஒருவன் யுக்தி பூர்வமாக மேற்கொண்டு ஒழுகவேண்டிய நடைமுறை ஆகும்.

கேள்வி: *(46)* அகால மரணம் அடைந்தோர் நிலை என்ன?

பதில்: மானுடன் ஒருவன் தன்னுடைய பிராரப்த கர்மத்துக்கேற்ப உலகில் வாழ்ந்து வருகிறான். பிராரப்த கர்மம் ஒய்வு அடையும்பொழுது அவனுடைய உடல் வாழ்வும் முடிவுறுகிறது. பிராரப்த கர்மப்படி ஒருவனுடைய உடல் வாழ்க்கை ஐம்பது வருஷங்களுக்குத் தொடர்ந்து நடைபெற்று வருமென்றால் அதற்கு முன்பே ஏதேனும் ஒரு விபத்துக்கு

ஆளாகி அம்மனிதன் மடிந்து போவானாகில் அது அகால மரணம் எனப்படுகிறது. இதைச் சான்று ஒன்றன் மூலம் விளக்குவோம். பம்பரம் ஒன்றைச் சிறுவன் ஒருவன் கழற்றுகின்றான். அது அவன் கொடுத்த பிராரப்த கர்மத்திற்கு நிகர். பம்பரம் சுழன்று கொண்டிருக்கிறபொழுது மற்றொரு சிறுவன் அதைக் கையில் பிடித்துச் சுழலவொட்டாது தடைப் படுத்துகிறான். அது போன்றது அகால மரணம்.

எதிரியின் கையில் கொலையுண்பது, நீந்தத் தெரியாது நீரில் வீழ்ந்து திணறிச் சாவது, வண்டி விபத்தில் மடிவது ஆகியவைகளை அகால மரணங்கள் எனலாம். அகால மரணத்தை அமைதியாக ஏற்றுக் கொள்பவர்களுக்கு அதனால் இடைஞ்சல் ஒன்றுமில்லை. அது சாதாரணமாக இயற்கை எய்துவதற்கு நிகராகிறது. மற்று, தன்னைக் கொல்ல வந்த எதிரியோடு கோபாவேசம் பூண்டோ, அல்லது பயந்து கொண்டோ சாகிற ஒருவனுக்கு யாதனா சரீரம் என்னும் நிலையில் கொஞ்ச காலத்துக்குச் சஞ்சலம் உண்டு. பிறகு அந்த அசாதாரண நிலையிலிருந்து தெளிவடைந்தவனாய்த் தோன்றா நிலைக்குப் போகிறான். இதுவே அகால மரணத்தைப் பற்றிய கோட்பாடு ஆகும்.

கேள்வி: *(47)* இறந்துபோன ஜீவன் மறுபடியும் எந்த விதமாக மற்றோர் ஜீவனிடத்தில் போய்ப் பிறக்கிறான்?

பதில்: இறத்தல் என்னும் செயல் ஓர் இடத்தை விட்டு மற்றோர் இடத்திற்குப் பயணம் போவது போன்றது அன்று. இறந்துபோன ஜீவன் உடலை அறவே மறந்துவிட்டான். "போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியன்" என்னும் கோட்பாடு ஈசுவரனுக்கு உண்டு. அதே கோட்பாடுதான் சிறிய அளவில் ஜீவனுக்கு உண்டாகிறது. அயர்ந்து உறங்குதற்கு நிகர் மரணம். உறங்குகின்றவன் தாற்காலிகமாக உடலை மறந்திருக்கிறான். இடம் அல்லது தேசம் என்பது மனதின் கற்பனையாம். அதேபாங்கில் காலம் என்பதும் மனதின் சிருஷ்டியாம். மனதற்ற நிலையில் காலமில்லை, தேசமில்லை, செயலில்லை. தூங்குகின்றவன் தாற்காலிகமாகக் காலதேச நிமித்தத்தை மறக்கிறான். விழித்துக் கொண்டவுடன் பழைய

இடத்தைப் பற்றிய ஞாபகமும், தான் குடியிருக்கும் உடலைப் பற்றிய ஞாபகமும் அவனுக்கு வருகிறது. இறந்து போகின்றவன் நிரந்தரமாகத் தான் வாழ்ந்து வந்த உடலை ஒதுக்கித் தள்ளுகிறான். இறந்தவன் மறு லோகத்திற்குப் போவதும் அங்கு சுகம், துக்கம் ஆகியவைகளை அனுபவிப்பதும் இகலோகத்தில் இருப்பவர்களின் கற்பனையாம். ஓர் உடலை விட்டு ஒதுங்கிய ஜீவன் தன்னில் தானாக இருக்கிறான்.

ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் ஆகிய மூன்று கூறுகளுள் ஜீவன் ஒதுக்கித் தள்ளியது ஸ்தூல சரீரம் ஒன்றுதான். மற்று, மாண்டுபோனவனோ தன்னுடைய சூக்ஷ்ம சரீரத்திலும், காரண சரீரத்திலும் ஒடுங்கியுள்ளான். பொருத்தமான சூழ்நிலை தனக்கு அமைகின்றபொழுது அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அவன் தனக்குத்தானே புதிய உடல் ஒன்றைச் சிருஷ்டி பண்ணுகிறான். மாதாவின் உதரத்தில் வடிவெடுத்து மறுபடியும் பிறக்கின்றான். போதல் வருதல் என்னும் செயல் பூதவுடல் மயமாயுள்ள இப்பிரபஞ்சத்திற்கு உரியது. சூக்ஷ்ம சரீரத்தில் இருக்கின்ற ஜீவனுக்குப் போக்கும் வரவும் புணர்வும் இல்லை. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். விதை செடியிலிருந்து உண்டாகிறது. பிறகு செடி பட்டுப் போகின்றது. விதை தன்மயமாயிருக்கின்றது. அதற்குப் பொருத்தமான சூழ்நிலையை மக்கள் செய்து வைக்கின்றனர். மக்களின் எண்ணத்திற்கு ஏற்ப ஓரிடத்தினின்று எடுத்து வந்த விதை மற்றொரு இடத்தில் பொருத்தமான சூழ்நிலை அமையுங்கால் ஆங்கு அது வளர ஆரம்பிக்கின்றது. அதைக் கவனிக்கின்ற மற்றவர்களுக்கு அச்செடியானது புதிய இடத்தில் வடிவெடுக்கிறது. செடியைப் பொருத்தவரையில் தன்னைத்தான் அது தோற்றுவித்துக் கொள்ளுகிறது. பொருத்தமான சூழ்நிலை அல்லது மண்ணில் அது முளைக்குமிடத்துப் புதிய பிறப்பில் அது மேல்நிலைக்கு வந்துள்ளது. பொருத்தமற்ற இடத்தில் அது முளைத்து வருமிடத்தில் அது கீழ்நிலையில் பிறந்துள்ளதாகிறது. அது இடம் மாறிய செயல்; தனக்குத்தானே செய்து கொண்டது அன்று.

ஜீவன் ஒருவன் புதிய பிறப்பு எடுக்கின்றபொழுது தன் பாங்குக்கேற்ற சூழ்நிலையைத் தனக்குத்தானே செய்து

கொள்கின்றான். சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் மடிந்துபோன மாணாக்கன் ஒருவன் அமெரிக்காவில் தனக்குப் பொருத்தமான தந்தை தாய்க்கு மகவாகப் பிறந்தான். அப்படிப் பிறந்தவனுக்குத் தற்செயலாய்ப் பூர்வஜன்ம ஞாபகம் வந்தது. அதை மற்றவர்களுக்கு அவன் எடுத்து சொன்னான். அவன் கூற்றை ஆராய்ச்சிசெய்து பார்த்தபொழுது அவன் கூற்று உண்மை என்று நிரூபிக்கப்பட்டது. பொதுவாக மடிந்துபோன ஜீவன் ஒருவன் பழைய சூழ்நிலையை மறந்து விடுகின்றான். இயற்கையின் நியதிப்படி அது மறைத்தல் என்னும் பெயர் பெறுகின்றது. மறைத்தல் என்னும் செயல் இறைவனுக்குரியது. பழைய ஜன்மத்தின் ஞாபகம் உயிர்களனைத்திற்கும் உண்டாகு மானால் அது பெரிய குழப்பத்தில் வந்து முடியும். ஆதலால் தான் இறைவன் கிருபைகூர்ந்து அதை மறைத்து வைத்திருக் கின்றான். இலங்கையில் மடிந்துபோன மாணாக்கன் கப்பலிலோ அல்லது ஆகாய விமானத்திலோ அமெரிக்காவுக்குப் பயணம் போனவன் அல்லன். இடத்தைப்பற்றிய உணர்ச்சி ஸ்தூல சரீரம் எடுத்திருக்கிறவனுக்கு உண்டாகிறது. மற்று, சூக்ஷ்ம சரீரத்தில் இருக்கின்றவன் ஒரு பிறவியில் ஏதேனும் ஓர் உலகில் தோற்றத்திற்கு வந்தவனாக இருக்கலாம். அல்லது அடுத்த பிறவியில் பலகோடி மைல்களுக்கு அப்பால் இருக் கின்ற மற்றோர் உலகத்தில் அவன் பிறக்கலாம். ஆதலால்தான் போக்கும் வரவும் ஆத்மாவுக்கு இல்லை என்ற கோட்பாடு வந்திருக்கிறது. வினைக்கேற்றபடி ஜீவன் ஒருவன் மேல்நிலையில் அல்லது கீழான நிலையில் மறுபிறப்பு எடுக்கிறான் என்பது தேற்றம்.

கேள்வி: *(48)* ஒரு மனிதன் ஒருநாளைக்கு எண்ணுகிற எண்ணங்களுக்குக் கணக்கேயில்லை. ஆனால் மனிதன் உயிர்துறக்கும்போது எண்ணுகிற எண்ணம் எதுவோ அதுவாக அடுத்த பிறவி வந்து வாய்க்கிறதென்று கைவல் யத்தில் சொல்லியிருக்கிறது. பகவத்கீதையில் நீண்டநாள் சொர்க்கத்தில் தேவபோகங்களை அனுபவித்துவிட்டுப் புண்ணியம் தேய்ந்த பிறகு மறுபிறவி எடுக்கிறான் என்று சொல்லியிருக்கிறது. ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஒரு பிறவி

எடுத்தாக வேண்டுமா? கைவல்யம், பகவத் கீதை இவைகளில் சொல்லியிருக்கும் மறுபிறப்பைப்பற்றி விளக்க வேண்டுகிறேன்.

பதில்: மனிதனுக்கு வினை இருக்கும் பரியந்தம் பிறவி உண்டு. வினைக்கு மூலகாரணமாய் இருப்பது எண்ணம். ஓர் எண்ணத்தை எண்ணும்பொழுதே சூக்ஷ்ம நிலையில் அது ஒரு வினை ஆய்விடுகிறது. எண்ணத்துக்கு ஏற்றாற்போன்று வாழ்க்கை மாறி அமைந்து வருகிறது. ஸ்தூலசரீரம் ஒன்றில் இருக்கின்ற காலம் முழுதையும் தொகுத்து ஒரு பிறவி என்று சொல்லுவது உலக வழக்கு. ஆனால் தத்துவ பூர்வமாகப் பார்க்குமிடத்து ஓர் எண்ணத்தை எண்ணும்பொழுதே அந்த எண்ணமயமான புதிய பிறவி மனத்தகத்து அம்மனிதனுக்கு அமைந்துவிடுகிறது. எனவே ஒருநாளில் ஒரு மனிதனுடைய மனதில் எத்தனைவித எண்ணங்கள் வந்தமைகின்றனவோ அத்தனைவிதமான பிறவிகளை அந்தச் சிறிது நேரத்துக்குள் மன அமைப்பில் அவன் எடுத்தவனாகிறான். இப்படி உண்டாகின்ற பிறவிகளைத்தான் கணக்கெடுக்க யாருக்கும் இயலாது.

இனி, ஓர் உடலை உகுக்கின்ற வேளையில் அந்த ஜீவன் அது பரியந்தம் ஆழ்ந்து எண்ணிய எண்ணங்கள் ஒன்றுகூடி மனதுக்கு ஒரு வடிவைத் தருகின்றன. மேற்போக்காக எண்ணிய எண்ணங்களுக்கு ஆங்கு இடமில்லை, கடலில் உண்டாகிய சிற்றலைகள்போன்று அவைகள் மறைந்து போய் விடுகின்றன. மனத்தகத்து உண்டாயிருக்கின்ற ஆழ்ந்த வடிவுக்கு ஒப்ப புதிய ஸ்தூல சரீரம் அமைகிறது. சாகின்றபொழுது தான் விரும்புகிற ஓர் எண்ணம் முன்னிலையில் வந்து நிற்காது. தான் நெடுங்காலம் எண்ணிய எண்ணங்களின் தொகையே முன்னணியில் வந்து நிற்கும். அதற்கேற்றபடி அடுத்த பிறவி அமைகிறது. ஆண்டு முழுதும் செய்த வியாபாரத்தின் தொகுப்பை ஆண்டு இறுதியில் கணக்குப் பார்த்து லாபநஷ்டத்தை முடிவு கட்டுவதுபோன்று வினையின் தொகையை முன்னிட்டே அடுத்த பிறவி அமைகிறது.

வினைக்கு ஏற்பச் சூக்ஷ்ம சரீரத்தில் வேறு ஒரு நிலையில் ஜீவன் இருப்பதுண்டு. அந்த நிலை இன்பகரமானதாயிருந்தால்

அதைச் சொர்க்க வாழ்வு என்கிறோம். துன்பகரமானதாயிருந்தால் நரகம் என்கிறோம். சொர்க்கமும், நரகமும் கனவு உலகங்களுக்கு ஒப்பானவை. ஸ்தூல சரீரத்தின் துணையின்றிக் கனவு நிலையில் இன்பத்தையோ துன்பத்தையோ ஜீவன் அனுபவிக்கின்றான். அந்தச் சரீரம் அனுபவிக்கின்ற இன்ப துன்பமும் வினைப்பயனேயாம். கனவு முடிந்ததும் அவன் விழித்துக்கொள்வதுபோன்று சொர்க்க வாழ்வுக்கு ஏற்ற வினை முடிவுறுங்கால் அவ்வாழ்வை முடித்துவிட்டுத் திரும்பவும் மண்ணுலகில் ஒரு மனிதன் பிறக்கிறான். எனவே பல சாஸ்திரங்கள் சொல்லுகின்ற கோட்பாடுகளைத் தொகுத்து ஆராயுமிடத்துத் தனது எண்ணத்துக்கு ஏற்ப மனிதன் தனது வாழ்வை ஓயாது மாற்றி அமைத்துக் கொண்டு போகின்றான். மாறி அமைகின்ற நிலைக்கே மறு பிறப்பு என்று பெயர். எண்ணங்களற்ற பெருநிலையை ஆத்மா அடைந்துவிடுமிடத்து அது முக்தியாகிறது.

கேள்வி: *(49)* ஒரு பிறவியில் பெண்ணாகப் பிறக்கும் ஜீவன் கடவுளை அடையும்வரை அது எடுக்கும் பல பிறவிகளில் பெண்ணாகவே பிறக்குமா? அல்லது ஆண் பெண் என மாறிமாறிப் பிறக்குமா?

பதில்: இயற்கையின் அமைப்பில் ஆண்பால் பெண்பாலாகிய இருபாலார்க்கும் சம அந்தஸ்தும் தன்மையும் உண்டு. இக்கோட்பாட்டை அனுசரித்தே சிவனார் அர்த்தநாரீஸ்வரராக அதாவது மாது ஒருபாகம் ஆனவராக இலங்குகின்றார். மன அமைப்பிற்கேற்பச் சரீர அமைப்பு மாறியமைகிறது. சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிப்பதும் மன அமைப்பை ஒட்டியதாம். அந்தந்தப் படித்தரத்தில் ஆண் இயல்புக்கும் பெண் இயல்புக்கும் சிறிது வித்தியாசம் உண்டு. ஆண் அமைப்பை ஆண்மை என்றும் பெண் அமைப்பைப் பெண்மை என்றும் பகர்கிறோம். பராக்ரமம், முன்னீட்டம் முதலியன ஆண்மைக்குரிய பண்புகள். அச்சம், நாணம் முதலியன பெண்மைக்குரிய பண்புகளாம். ஜீவாத்மா ஒன்றனிடத்து அமைகிற மன அமைப்புக்கு ஏற்றவாறு அது ஆண் ஆக அல்லது பெண் ஆகப் பிறக்கிறது. ஒரு பிறவியில் ஆணாயிருப்பது மற்றொரு பிறவியில் பெண் ஆவதும், அதே விதத்தில் பெண்ணாயிருப்பது

ஆண் ஆவதும் இயற்கையின் பாங்குகளாம். இந்த இரண்டு பால்களுக்கிடையில் ஆண்பாலினிடத்து நிறைவு நிலை சற்று உயர்ந்தும் பெண்பாலினிடத்து அது சற்றுத் தடைபட்டும் இருப்பது வெளிப்படை. ஆண், பெண் இரண்டும் அல்லாதது அலி எனப் பகரப்பெறுகிறது. பண்பில் அது இன்னும் கீழ்நிலையில் இருக்கிறது.

பால் வேற்றுமை மனப்பாங்குக்கேற்ப உடலில் அமைகிறது. பால் வேற்றுமையைக் கடந்தது ஆத்மா. ஆத்ம ஞானம் ஆண்களுக்கே சாத்தியம், பெண்களுக்குச் சாத்தியப்படாது என்பது சமுதாயத்தில் சிலருக்கிடையில் புகுந்திருக்கிறது. ஆனால் இந்தக் கொள்கைக்கு ஆதாரமில்லை. சரீரத்தில் வாழ்ந்திருப்பதற்கு இடையில் சரீர உணர்ச்சியைத் தாண்டியிருப்பது ஆத்ம சாதனத்தின் குறிக்கோள்.

கேள்வி: *(50)* "பாவஞ் செய்கிறவன் எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான்" என்று இயேசு ரட்சகர் சொல்லுகிறார். ஒருவனது வாழ்க்கையும் அவ்வாறு பாவத்திற்கே அடிமையாகி வீணாகக் கழிந்துவிடுகிறது. நம்முடைய இப்பிறப்பின் சுக துக்கங்களுக்குக் கடந்த பிறவியின் செயலே காரணம் என்று விவேகானந்த சுவாமிகள் கூறுகிறார். இந்த நிலையில் பாவத்திற்கே அடிமையான அந்த மனிதன் மறுபிறவியிலும் கஷ்டத்தையே அனுபவிக்க நேர்ந்தால் அவனுக்குப் புத்தித் தெளிவு எப்படி ஏற்படும் அல்லது விமோசனம் எப்படிக் கிடைக்கும்?

பதில்: மேன்மை அடைகின்றவர் மேலும் மேலும் மேன்மை அடைந்துகொண்டே போவது இயல்பு. அதற்கு மாறாகக் கீழ்மையை அடைகின்றவன் மேலும் மேலும் கீழ்மை அடைந்துகொண்டே போவதும் இயல்பு. இத்தகைய முற்போக்கும் பிற்போக்கும் பெரிதும் பல பிறவிகளில் தொடர்ந்து நிகழ்கின்றன. கீழ்நோக்கிப் போகின்றவனுக்கு விமோசனம் இல்லையா என்பது ஈண்டு எழுந்துள்ள கேள்வி. அவனுக்கும் விமோசனம் உண்டு. கீழ்மையில் நெடுந்தூரம் போயானபிறகு ஒரு படித்தரத்தில் அவன் தன்னைப்பற்றியே விசாரணை

செய்கின்றான். முன்பு தான் அடைந்திருந்த மேலான நிலையைப் பற்றிய உணர்வு உள்ளத்தில் ஓர் இடத்தில் புதைந்து கிடக்கின்றது. அதை இப்பொழுது அடைந்துள்ள நிலையோடு சீர் தூக்குகின்றான். திரும்பவும் மேல்நிலைக்குப் போகவேண்டுமென்கின்ற அவா அதன்பிறகு அவனுக்கு இயல்பாகவே வருகிறது. அப்பொழுது அவன் அதிவிரைவில் மேல்நிலைக்குத் திரும்பிப்போக ஆரம்பித்துவிடுகின்றான். தொடர்ந்து பல பிறவிகளில் கீழ்மையில் சென்று அவன் பெற்ற அனுபவம் மேன்மைக்குப் போவதற்குத் தூண்டுகோலாக அமைகிறது. கயவர்களும், துஷ்டர்களும் நல்லவர்களாகத் திரும்பினால் அதிவிரைவில் அவர்களுடைய வாழ்க்கை நலம் நிறைந்ததாக மாறி அமைவதை உலகில் நாம் காணலாம். ஆக், திரும்பவும் முன்னேற்றத்துக்கு ஏதுவான சந்தர்ப்பம் கொடிய பாவிகளுக்கும் ஒருகாலம் இல்லாவிட்டால் ஒருகாலத்தில் உண்டாகிறது.

கேள்வி: *(51)* இறப்பதும் பிறப்பதும், தூங்குவதும் விழிப்பதும் போல் என்பது நூல்பிரமாணம். உலகில் ஒரே அளவு உயிர்கள்தானே இருக்கவேண்டும்? உயிரினங்கள் ஓர் எல்லையின்றிப் பெருகுகின்றன. ஒரு காலத்தில் அளவுக்கு மீறியிருக்கும் உயிர்கள் மற்றொரு காலத்தில் எங்குச் சென்று என்ன கதி அடைந்தன?

பதில்: ஒரு நாட்டின் ஜனத்தொகையைச் சராசரி பத்து வருஷத்துக்கு ஒருமுறை அரசாங்கங்கள் கணக்கெடுக்கின்றன. உலகம் முழுதிலுமுள்ள ஜனத்தொகையையும் சற்றேறத்தாழக் கணக்குப்போட்டுச் சொல்லி விடுகின்றனர். உலகம் முழுதிலும் ஜனத்தொகை எல்லாக் காலத்திலும் ஒரேவிதமாய் இருப்பதில்லை. சில யுகங்களில் ஜனத்தொகை பெருவாரியாக அதிகரிக்கின்றது. வேறு சில யுகங்களில் ஜனத்தொகை மிகக் குறைந்துபோய் விடுகிறது. இது உலகில் நாம் காணும் காட்சி.

இறைவனுடைய படைப்பில் உள்ள ஜீவகோடிகள் எண்ணிக்கையில் அடங்காதவைகள். உலக ஜனத்தொகையைக் கணக்கெடுப்பது போன்று இறைவனுடைய படைப்பிலுள்ள ஜீவர்களை யாருமே திடமாகக் கணக்கெடுக்க முடியாது.

இத்தனை ஜீவர்களைப் படைத்த பிரம்மதேவனுக்கே ஜீவர்களின் எண்ணிக்கை முழுதும் தெரியாது என்றால் அது மிகையாகாது. இத்தனைகோடி உயிர்கள் வாழ்ந்திருப்பதற்கு இந்தப் பூவுலகம் ஒன்றுதான் பொருந்திய இடம் என்று எண்ணலாகாது. இப்பூவுலகம் போன்று எண்ணிக்கையிலடங்காத எத்தனையோ உலகங்கள் அண்டம் முழுதிலும் ஆங்காங்கு இருக்கின்றன. சந்தைக் கடைக்கு ஒரு வாரத்தில் ஏராளமான கூட்டம் வருகிறது. அடுத்த வாரத்தில் கூட்டத்தின் எண்ணிக்கை குறைகிறது. சந்தைக்கு வராதவர்களின் கதி என்ன ஆயிற்று என்று கேட்கலாகாது. அவர்கள் வேறு எங்கேயோ வேறு ஏதோ அலுவல் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்று யூகிக்க வேண்டும். இந்த மண்ணுலகுக்கு ஒரு யுகத்தில் ஏராளமாக வருகிறவர்கள் அடுத்த யுகத்தில் மற்றோர் உலகில் போய்ப் பிறக்கும்படி நேரிடலாம். உடலெடுக்காது தோன்றாத நிலையில் நெடுங்காலம் காத்திருப்பதும் ஜீவர்களைப் பற்றிய உண்மையாகும். ஆக, இவ்வுலகில் தோன்றுகிற நிலை, வேறு உலகங்களில் தோன்றுகிற நிலை, எவ்வுலகிலும் தோன்றாத நிலை ஆகிய இந்த மூன்றுவித நிலைகளில் ஜீவகோடிகள் அனைத்தும் இருந்து வருகின்றன. உயிர்களின் எண்ணிக்கையில் ஏற்றத்தாழ்வுக்கு இந்த மூன்று நிலைகளும் காரணமாகின்றன.

கேள்வி: (52) **பிறப்புக்குக் காரணம் பூர்வ ஜன்ம பாப புண்ணியங்கள் என்றும், அவற்றை அனுபவிக்கவே பிறக்கின்றான் என்றும் சொல்லப்படுகிறது. மேலும் பகவான் கீதையில் பிறந்தால் இறப்பதும், இறந்தால் பிறப்பதும் நிச்சயம் என்றும் சொல்கிறார். முதன் முதலில் பாபமோ, புண்ணியமோ எப்படி ஜீவனுக்கு ஏற்படுகிறது? நான் என்பது தேகமும் அல்ல, மனமும் அல்ல. ஜீவனும் அல்ல என்று தெரிகிறது. ஈசுவரன் அகர்த்தா, அபோக்தா என்று விவரிக்கப்படுகிறது. அப்படியிருக்க இந்தத் தேகம் எப்படி ஏற்பட்டது?**

பதில்: முதல் பிறப்பு என்பது ஜீவனுக்கு இல்லை. கடலிலே சிற்றலைகள் தோன்றிப் பின் அவைகள் பேரலைகளாகப் பரிணமிப்பது போன்று பிரகிருதியிலே ஜீவர்கள்

உருவெடுக்கின்றனர். அவர்கள் அசேதன நிலையினின்று படிப்படியாகச் சேதன நிலைக்கு வருகின்றனர். கல்லும் ஒரு ஜீவாத்மன் எனப்படுகின்றது. கல் நிலையிலிருந்து ஸ்தாவர நிலைக்கு அது எப்படி மாறுகிறது என்பதை நாம் நிரூபித்துக் காட்டமுடியாது. ஸ்தாவரமாக உள்ள உயிர் பிறகு ஜங்கமமாக மாறுகிறது. பலகோடி பிறவிகளில் படிப்படியாக மாறியமைந்து மானுட நிலைக்கு ஒரு ஜீவன் வருகின்றது. வினைப்பயனை முன்னிட்டே ஒரு பிறவி மற்றொரு பிறவியாக மாறியமை கின்றது. வினைப்பயன் முழுதும் நமது ஆராய்ச்சிக்கு எட்டுவ தில்லை. முன்னேற்றத்துக்கு ஏதுவான வினையைப் புண்ணியம் என்கின்றோம். பிற்போக்குக்கு ஏதுவான வினையைப் பாபம் என்கின்றோம். ஜீவன் சிற்றுயிராக இருக்கின்றபோது பாபம் புண்ணியம் என்கின்ற வேற்றுமைகள் கிடையாது. மனித நிலைக்கு வந்த பிறகே வினையில் பாபம் என்றும் புண்ணியம் என்றும் பாகுபடுத்த இயலுகிறது.

ஈசுவரன் அல்லது சகுணப் பிரம்மம் பிரபஞ்சம் முழு வதையும் தேகமாகக் கொண்டவன். அவன் ஏககாலத்தில் போக்தா வாகவும், அபோக்தாவாகவும் இருக்கிறான். கர்த்தாவாகவும், அகர்த்தாவாகவும் இருக்கின்றான். அலைகள் அனைத்தையும் கடல் உடைத்திருப்பது போன்று ஜீவர்கள் அனைத்தையும் அவன் தன்னகத்து அடக்கி வைத்திருக்கின்றான். இத்தனைவித ஜீவர்களுடைய தோற்றம், இருப்பு, ஒடுக்கம் ஆகியவைகள் அவனுடைய விராட் சரீரத்தில் இடம்பெற்று வருகின்றன. அலை ஒன்று தன் வடிவத்தைக் கலைத்துக் கொள்ளுமிடத்து அந்த அலைக்கு முக்தி ஏற்பட்டுவிட்டது என்கின்றோம். அங்ஙனம் ஜீவன் ஒருவன் தனது ஜீவபோதத்தைக் களைந்து விட்டால் பரபோதத்தில் அவன் ஒடுங்கிவிடுகின்றான். ஈசுவர னுடைய பேருணர்வே பரபோதம் என்னும் பெயர் பெறு கின்றது. அலைகளுக்கு வடிவங்கள் இருக்கின்றபொழுதும் அவைகள் கடலுக்கு அந்நியமானவைகள் அல்ல. ஜீவர்கள் பல பிறவிகள் எடுத்து ஜீவபோதத்தைக் காத்திருக்கும்பொழுதும் அவைகள் ஈசுவரனுக்கு அந்நியமானவைகள் அல்ல. ஜீவர்களைத் தோற்றுவித்து, நிலைபெற்றிருக்கச் செய்து திரும்பவும் தன்ன கத்து அடக்கிக் கொள்ளுதல் ஈசனுடைய விளையாட்டு ஆகும்.

ஈசுவரனைப் பற்றிய ஞானம் வருவதற்கு முன்பு ஜீவனுடைய அக்ஞானமே அவனுடைய பிறப்பு இறப்புக்கு மூல காரணமாகிறது. பிறப்பு இறப்பு ஆதியந்தமில்லாதது போன்று போய்க்கொண்டிருக்கின்றது. ஆக, முதல் பிறப்பு என்பது ஜீவனுக்கு இல்லை. ஈசனுக்கு அந்நியமாகத் தான் இல்லை என்பதை உணர்ந்தவன் தனது பிறப்பு இறப்பு ஆகியவைகளை வெறும் கற்பிதம் எனக் கருதுகின்றான். கனவு கண்டுகொண்டிருக்கும் பொழுது இந்தக் கனவு எப்படி உண்டாயிற்று என்கின்ற கேள்விக்கு விடை கண்டுபிடிக்க முடியாது. கனவை விட்டு விழித்துக் கொண்ட பிறகு இந்தக் கனவு எப்படி உண்டாயிற்று என்ற கேள்வி எழ இடமில்லை. கனவை வெறும் கற்பிதமாகத் தள்ளி விடுகிறோம். ஜீவனுடைய பிறப்பும் இறப்பும் அத்தகைய மனோ கற்பிதமாம். கற்பிதத்துக்குள் கட்டுப்பட்டிருக்கும் பரியந்தம் இக்கேள்விக்கு விடை கண்டுபிடிக்க முடியாது. கற்பிதத்தை விட்டு விழித்துக் கொண்டவுடன் இக்கேள்வி எழ இடமில்லாது போய் விடுகின்றது. பிறப்பு இறப்பு என்னும் கனவினின்று விழித்துக் கொள்ளுதலே ஜீவனுடைய முக்கிய லக்ஷ்யம்.

கேள்வி: *(53)* ஏழு பிறப்புகளைப் பற்றிச் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஏழு பிறப்பு எடுத்தான பிறகு ஜீவன் அடையும் நிலை யாது?

பதில்: பிறப்புகளை எண்ண நம்மால் இயலாது. கல் நிலையிலிருந்து நிறை ஞானியின் நிலையைப் போய்ச்சேரும் வரையில் பல்கோடிப் பிறவிகளை ஜீவன் எடுத்துக்கொண்டே போகிறான். இந்த மானுடப் பிறவியிலேயே ஒரே ஜன்மத்தில் மனத்தகத்து உண்டாகும் ஒவ்வொரு மாறுதலையும் ஒரு புதிய பிறவி என்று பெரியோர் அங்கீகரிக்கின்றனர். இவைகளுக் கிடையில் ஏழு பிறப்பு என்பதற்குப் பொருள் ஒன்று உண்டு. ஜீவன் அடையும் மனபரிபாகம் ஏழு படித்தரங்களிலே சென்று நிற்கின்றன. நம் அனுபவத்திலுள்ள சிலவற்றைச் சான்றாக எடுத்துக் கொண்டால் அது நமக்கு நன்கு விளங்கும். நாம் விழித்திருக்கிறோம். இது ஜாக்கிரதாவஸ்தை. இதை ஒரு மனநிலை என்கிறோம். தூங்கும்பொழுது கனவு காண்கிறோம்.

அதற்குச் சொப்பனாவஸ்தை என்று பெயர். அதுவும் ஒரு மனநிலையே. பிறகு அயர்ந்த உறக்கம் வருகிறது. ஆங்குக் கனவுக்கு இடமில்லை. அது சுழுத்தி அவஸ்தை என்னும் பெயர் பெறுகிறது. அதுவும் ஒரு மனநிலை. இம்மூன்றையும் நாம் ஒருவாறு அறிந்துள்ளோம். இம்மூன்றையும் மூன்றுவித ஞானநிலை என்கின்றனர் சான்றோர். இங்ஙனம் ஏழு ஞான பூமிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஞானபூமியிலும் ஒரே ஜீவன் கோடிக்கணக்கான பிறவி எடுக்கின்றான். அதில் அமையும் முன்னேற்றத்துக்கு ஏற்ப அடுத்த ஞானபூமிக்குப் போகின்றான். அந்தக் கணக்குப்படி ஒவ்வொரு ஞானபூமியும் ஒரு பிறவி எனத் தொகுத்துச் சொல்லப்படுகிறது. உண்மையில் பிறவி ஏழு அல்ல, ஞான பரிபாகத்தில் ஏழு படித்தரங்கள் இருக்கின்றன. ஏழு பிறப்பு என்பது இந்தப் படித்தரத்தைத்தான் குறிக்கின்றது.

கேள்வி: *(54)* உலகம் பொய் என்றும், காணும் பிர பஞ்சம் கற்பனையென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளும் "மனத்தின் நினைவே பிரபஞ்சம்" என்று சொல்லியிருக்கிறார். ஆனால் உலகில் நாம் கண்கொண்டு காணும் சூரியனும் கடலும் இமயலை போன்ற பர்வதங்களும் எத்தனையோ யுகங்களாக இருந்து வருகின்றன. மேலும் பூமி தோன்றுவதற்கு முன்பே சூரியன் இருந்து வந்தது என்றும் தற்கால விஞ்ஞானிகள் கூறு கின்றனர். இது ஒருபுறமிருக்க மஹரிஷிகளும் அறிவதற்கு அரிதான அருபப் பொருளை, பரப்பிரம்மத்தை, அனு மானத்தில் ஊகித்து கற்பித்துக்கொள்ளுகிற பொருளை மெய்ப் பொருள் என்றும், அழியாத சாசுவதப் பொருள் என்றும் நம்பும்படி சாஸ்திரங்கள் போதிக்கின்றன. ஆனால் கண்கொண்டு பார்த்தும், அனுபவத்தில் அறிந்தும் நிலை யாய் இருக்கும் உலகத்தைப் பொய்த் தோற்றம் என்பது எப்படி? எக்காலத்திலும் அறியக்கூடாததான பரப் பிரம்மத்தை மெய்ப் பொருள் என்பது எப்படி? இந்த முரண்பாடுடைய சங்கைகளை விளக்க வேண்டுகிறேன்.

பதில்: நமது அமைப்பைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். நம் மனது விழித்திருந்து வேலை செய்கிறது. இந்த மனதின்

துணைகொண்டு புறவுலகைப் பார்க்கிறோம். இம்மனது தூக்கத்தில் வேலை செய்யாது ஒடுங்கிவிடுகின்றது. அப்பொழுது நமக்கு இவ்வுலகம் இல்லை. இதே மனது கனவு காண்கிறது. அப்பொழுது அது தனக்குத்தானே தன்னிடத்தில் ஓர் உலகை உண்டுபண்ணிக் கொள்கிறது. கனவில் மனது கற்பித்துக் கொள்ளும் சூரியன் தனக்குப் புறம்பாயிருக்கிற தென்று அது உறுதியாக நம்புகிறது. விழித்துக்கொண்டபின் தனது கற்பிதத்துக்கு அந்நியமாகப் புறவுலகம் கனவில் இருக்கவில்லை என்னும் தெளிவு அதற்குண்டாகிறது. கனவைப் பற்றிய இவ்வுண்மையை யாரும் மறுக்க முடியாது.

இனி நனவுக்கு வருவோம். இதை ஜாக்கிரதாவஸ்தை என்று சொல்லுவதும் உண்டு. ஜாக்கிரதாவஸ்தையில் நாம் காணும் சூரியன் நம்முடைய மனோ கற்பிதம் அல்ல. ஜாக்கிர தாவஸ்தயில் நாம் காணும் வெளி உலகம் நமது கற்பிதமல்ல. தூக்கத்தில் அல்லது மரணத்தில் நாம் ஒடுங்கிவிட்டாலும் இந்த உலகம் ஒடுங்கிவிடுவதில்லை. ஆக, இவ்வுலகம் நமக்குப் புறம்பானது. அது தன்மயமாய் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கும் நமக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது அடுத்த கேள்வி. நம் மனது அயர்ந்த நித்திரையில் வேலையை நிறுத்திவிடும்பொழுது இவ்வுலகுக்கும் நமக்கும் தொடர்பு இல்லை. அது இருக்கிறது என்றாலும் நமக்குத் தூங்கும் வேளையில் அது இல்லை. விழித்துக் கொண்டவுடன் அது தோன்றுகிறது. அதன் தோற்றத்துக்கு நமது மனதும் ஒரு கர்த்தாவாக இருந்து வருகிறது என்பது நமது அன்றாட அனுபவம். நம்மில் ஒருவன் பிறவிக்குருடன் என்று வைத்துக் கொள்வோம். அம்மனிதனுக்குத் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவுடன் இவ்வுலகம் இருக்கிறது; ஆனால் அதிலுள்ள வெவ்வேறு நிறங்கள் அம்மனிதனுக்கு இல்லை. அழகான வடிவம், அழகற்ற வடிவம் என்பதெல்லாம் அவனுக்குத் தெரியாது. அவனுடைய காட்சியில் இதே உலகம் குறைபட்ட சொரூபத்தில் இருக்கிறது. மற்றொரு மனிதன் பிறவிச் செவிடன் என்று வைத்துக் கொள்வோம். பிறவிச் செவிடன் ஊமையாய்ப் போய்விடுவதும் இயல்பு. அவனுக்கு இவ்வுலகத்தின் சப்த சொரூபம் இல்லை. பாஷை என்பதற்கு அர்த்தம் இல்லை.

இன்னிசை என்பதும் அவனுக்குப் பொருளற்றது. மனதைக் கவரும் பாங்கில் பாடல்கள் ஒருவன் பாடினால், ஏன் இவன் வாயைத் திறந்து திறந்து வலிப்பு நோய் வந்தவன் போன்று திண்டாடுகிறான் என்று செவிடன் பொருள் படுத்துவான். அவனுடைய மனதுக்கு எட்டும் இவ்வுலகம் குறைபட்ட உலகமாகிறது. நம் அனைவர்க்கும் இவ்வுலகம் பஞ்சேந்திரியங்கள் வாயிலாகப் புலனாகிறது. மனதும் இந்த ஐந்தின் வாயிலாக உலகை உணர்ந்து வருகிறது.

பஞ்சேந்திரியங்கள் நம் அனைவர்க்கும் பொது என்றாலும் மன அமைப்பில் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாங்குடையவர் ஆகின்றோம். மனதில் உண்டாகும் மாறுதலுக்கு ஏற்ப புறவுலகத்தைப் பற்றிய அபிப்பிராயமும் மாறுகிறது. இதே உலகம் சிலருக்கு நரகம் போன்றது. வேறு சிலருக்குச் சொர்க்கம் போன்றது. உலகம் ஒன்று என்றாலும் இதை நரகமாகக் காண்கின்ற உயிரும் உண்டு; சொர்க்கமாகக் காண்கின்ற உயிரும் உண்டு. உண்மையில் இது நரகமா, அல்லது சொர்க்கமா என்பது கேள்வி. நம் மனத்துக்கேற்றவாறு இது காட்சி கொடுக்கிறது என்பது விடை. மனது என்னும் கண்ணாடி போட்டுக்கொண்டு இவ்வுலகைப் பார்க்கிறோம். பச்சைக் கண்ணாடி அணிந்திருப்பவனுக்கு உலகம் பச்சை. சிவப்புக் கண்ணாடி அணிந்திருப்பவனுக்கு இது சிவப்பு. கோணலான கண்ணாடி அணிந்திருப்பவனுக்கு பொருள்களெல்லாம் கோணல்படிந்து தென்படும். மனதைத் திருத்துமளவு உலகக் காட்சி மாறுகிறது. மனமானது தெள்ளத்தெளிந்தவர்க்கு ஜீவன் சிவ சொரூபமென்பது ஆன்றோர் அனுபவம். நம் மனதை முற்றிலும் செப்பனிட்டுவிட்டால் இப்பிரபஞ்சமே பிறகு நமக்குப் பரம்பொருளாகக் காட்சி கொடுக்கிறது.

இது பிரபஞ்சமா அல்லது பரம்பொருளா என்பது அடுத்த கேள்வி. பிரபஞ்சம் என்னும் காட்சியில் தோற்றம் உண்டு, ஒடுக்கம் உண்டு. நமது மனது ஒடுங்குவது போன்று சமஷ்டியாகிய ஹிரண்யகர்பனது மனது ஒடுங்குமிடத்துப் பிரபஞ்சம் முழுதுக்கும் பிரளயம் வந்துவிடுகிறது. நாம் தூங்கும்பொழுது எப்படி நமக்குப் புறவுலகம், அகவுலகம் எல்லாம் இல்லாது போய்விடுகிறதோ அப்படிப் பிரபஞ்சத்தின் கர்த்தனாகிய

ஹிரண்யகர்பன் தூங்க ஆரம்பிக்கும்பொழுது இந்த சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகிய எல்லாம் ஒடுங்கிப் போய்விடும். அந்தச் சமஷ்டி மனது விழித்தெழுந்திருக்கின்றபொழுது திரும்பவும் இவை யாவுக்கும் சிருஷ்டி வந்து விடுகிறது. தூங்குகின்ற பொழுதும் விழித்திருக்கின்ற பொழுதும் ஆத்மாவாகிய நான் இருக்கிறேன் என்னும் அனுபவம் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆக, அந்த ஆத்ம சாக்ஷி தூக்கத் திலும் இருக்கிறது, விழிப்பிலும் இருக்கிறது. எது ஒரு அவஸ்தையில் இருந்து மற்றொரு அவஸ்தையில் இல்லாது போய்விடுகிறதோ அது மெய்ப்பொருள் அல்ல. நமது வீடு, வாசல், உற்றார், உறவினர் எல்லாரும் விழிப்பு அல்லது ஜாக்கிரதாவஸ்தையில் நமக்கு இருக்கின்றனர். அயர்ந்த உறக் கத்தில் அவர்கள் நமக்கு இல்லாது போய்விடுகின்றனர். நமது உலகம் நமக்கு அப்பொழுது இல்லாது போய்விடுகின்றது. ஆத்மசாக்ஷி ஒன்றுதான் தன்னில்தானாய் அப்பொழுது மிஞ்சியிருக்கிறது. அதே ஆத்மசாக்ஷி விழிப்பிலும் இருக்கிறது. கனவிலும் இருக்கிறது, அயர்ந்த உறக்கத்திலும் இருக்கிறது. இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் பொதுவாக இருக்கும் ஆத்மசாக்ஷி மெய்ப்பொருள். தனக்குத்தானே இது பிரபஞ்சத் தைத் தோற்றுவித்துக் கொள்கிறது. பிரபஞ்சத்துக்குத் தோற்றம் ஒடுக்கம் இருப்பதால் அது மெய்ப்பொருள் அல்ல. பிரபஞ்ச முழுதையும் தேகமாகக் கொண்டிருப்பவன் பரமாத்மன். அந்தத் தேகத்தைப் பிரளயத்தில் ஒடுக்கிவிடும் நிலையிலும் அவன் சாக்ஷியாய் இருக்கின்றான். அந்த பரமாத்மாவினுடைய கிரணம் அல்லது கதிர்களாக இத்தனை ஜீவர்கள் இருக்கிறார்கள். இந்த ஆத்ம சொரூபம்தான் மெய்ப்பொருள். இதற்குத் தோற்றம் ஒடுக்கம் கிடையாது. இது கற்பித்துக் கொள்ளும் பிரபஞ் சத்துக்குத் தோற்றம் ஒடுக்கம் உண்டு. ஆகையினால்தான் பிரபஞ்சத்தைக் கற்பிதம் என்றும், சாக்ஷியாக இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் பரமாத்மாவை மெய்ப்பொருள் என்றும் பகர்கிறோம்.

கேள்வி: *(55)* ஜீவாத்மாவுக்கு அகங்காரம் அழியும் பொழுது முக்தி கிடைக்கிறது என்பது பிரமாணம்.

அகங்காரத்துக்கு அழிவு இருப்பதனால் அதற்குத் துவக்கம் இருந்திருக்கவேண்டும். புல் முதல் சிருஷ்டி கர்த்தா பிரம்மா பரியந்தம் உள்ள அனைவரும் ஜீவாத்மாக்களாகக் கருதப் படுகிறார்கள். புல்நிலையில் இருக்கும்பொழுதே அகங் காரம் வந்துவிடுகிறதா?

பதில்: ஜீவாத்மா கைவல்ய முக்தியடையும் பொழுது ஜீவபோதம் எஞ்சியிருப்பதில்லை. ஜீவபோதத்தைக் கடந்திருப் பதே முக்தி. ஜீவபோதத்துக்கு முடிவு உண்டு என்பதற்கும் பிரமாணம் இருக்கிறது. ஆக, ஜீவபோதம் இருக்கும் பரியந்தம் அகங்காரம் இருக்கிறது. அகங்காரம் இருக்கும்பொழுது ஜீவ போதமும் இருக்கிறது. ஆதலால் அகங்காரத்தையே ஜீவபோதம் என்றும் ஜீவபோதத்தை அகங்காரம் என்றும் இயம்பலாம்.

இனி, அகங்காரத்துக்கு விளக்கம் நூல்களில் பகரப்பட் டிருக்கிறது. தான் அல்லாததைத் தான் என்று கருதுவது அகங்காரம். சரீரம் தான் அல்ல. சரீரத்தைத் தானாக எண்ணிக் கொள்வது அகங்காரம். ஏதேனும் ஒரு சரீரத்தை உடைத்திருப் பவனே ஜீவன் ஆகிறான். உபாதியை முன்னிட்டுச் சரீரம் வருகிறது. உபாதி அகலுங்கால் சரீரமும் அகன்றுவிடுகிறது; முக்தியடைபவனுக்கு உபாதியும் இல்லை. உடலும் இல்லை. முக்தியடைகிறவனுக்குத் தனி வியக்தியும் இல்லை. பரம் பொருளில் அவன் ஒன்றித்துவிடுகிறான். சுழுத்தி அவஸ்தையின் துணைகொண்டு அதை நாம் ஓரளவு யூகிக்க முடியும். சுழுத்தி அவஸ்தையில் தாற்காலிகமாக ஜீவபோதம் போய்விடு கிறது; அகங்காரம் போய்விடுகிறது. முக்தியில் ஜீவபோதமும் அகங்காரமும் அதற்கெல்லாம் காரணமாயிருக்கும் உபாதியும் நிரந்தரமாக நசித்துவிடுகின்றன.

இப்படி அழியும் அகங்காரம் எப்பொழுது தோன்றியது என்பது கேள்வி. கல்லாகவோ புல்லாகவோ ஜீவபோதத்தைத் துவக்கும் ஆத்மாவானது ஜீவபோதத்தின் உச்ச நிலையாகிய சிருஷ்டிகர்த்தா பிரம்மாவின் நிலைபரியந்தம் மேல்நோக்கிப் போகமுடியும். அப்படிப் பிரம்மாவின் பதவியைப் பெறாம லேயே மானுடனாயிருக்கும்பொழுது ஞானோதயத்தால் ஜீவபோதத்தைக் கலைத்துவிட்டுப் பரத்தில் லயமாக முடியும். ஆனால் இந்த ஜீவபோதத்துக்குத் துவக்கம் எந்தப் படித்தரத்தில்

வருகிறது என்பதைத்தான் உறுதியாக இயம்பமுடியாது. பழைய பிறவிகளை ஞாபகத்துக்குக் கொண்டுவந்த ஆத்மசாதகர்கள் பலபேர் முன்பு இருந்தனர். சில பிறவிகளுக்கப்பால் தங்க ளுடைய ஞான ஆராய்ச்சி எட்டவில்லையென்று அன்னவர்கள் பகர்ந்திருக்கின்றனர். தூரத்திலிருக்கும் நிலம் கட்புலனாகாது மங்கி மறைவது போன்று அகங்காரத்தின் ஆரம்ப தசையானது யாருடைய அறிவுக்கும் எட்டுவதில்லை. ஆனால் அது எங்கேயோ ஏதேனும் ஒருவிதத்தில் உருவெடுத்திருப்பது திண்ணம். கடலில் உருண்டு வருகிற அலைக்கு ஒப்பானது அகங்காரம். கரையில் மோதி அலைக்கு முடிவு வந்துவிடுகிறது. ஆனால் கடலில் எந்த இடத்தில் அது எப்படி உருவெடுத்தது என்பது நமக்கு விளங்குவதில்லை என்றாலும் அது எங்கேயோ உருவெடுக்கத் துவங்கியது உண்மையே. அப்படி அகங்காரம் சிற்றுயிர் நிலையில் எங்கேயோ துவங்குகிறது. ஆடு மாடுகளுக்கு அகங்காரம் இருப்பதை நாம் யூகிக்கலாம். ஜங்கமங்களாக உயிர்கள் பரிணமிக்கும்போதே அகங்காரமும் உருவெடுத்து விடுகிறது என்று உத்தேசமாகச் சொல்லலாம். ஆனால் உறுதி யாகச் சொல்லமுடியாது. ஏன் உறுதியாகச் சொல்லமுடியாது என்றால் நிலத்தினுள் ஜங்கமமாக வாழ்ந்திருக்கும் நிலப்புழுவை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்வோம். மண்ணின் உள்ளேயிருப்பது மண்ணின் மேல் வந்து நகர்வதைப் பார்க்கிறோம். அதை இரண்டு துண்டாக வெட்டி விட்டால் இரண்டு துண்டுகளும் தனித்தனியாக வாழ்ந்திருக்கின்றன. அகங்காரமிருந்ததால் ஒரு ஜீவன் இரண்டு ஜீவனாகப் பிரிக்கப்பட்டுவிட்டது என்று பகரவேண்டும். அகங்காரத்தை அடையப்பெறாத வெறும் உயிர்வாழும் நிலையில் ஆரம்பதசையிலிருக்கும் உயிர்த் தத்துவம் தென்படுகிறது. நிலப்புழுவே அதற்குச் சான்றாகிறது. இனி அருகம்புல், ஆலமரம் ஆகியவைகளைத் துண்டு துண்டாக வெட்டிப் பலப்பல புற்களாகவும் மரங்களாகவும் நாம் மாற்றி விட முடியும். ஓர் அருகம்புல்லைப் பத்துப் புல்லாகப் பிரித்து வளர்க்கிறபொழுது பத்து ஜீவர்கள் ஆய்விட்டார்களா என்னும் கேள்வி பிறக்கிறது. புல்நிலையில் அகங்காரம் இல்லை என்று பகர்வதுதான் பொருந்தும். ஆலமரத்துக்கும் ஜீவவியக்தி அல்லது அகங்காரம் இல்லையென்றே நாம் இயம்பவேண்டும்.

நிலப்புழுவிடத்தும் அகங்காரம் உதயமாகவில்லையென்று பகர்வதே பொருந்தும். பின்பு இவைகளுக்கெல்லாம் மேலாக ஏதோ ஒரு படித்தரத்தில் ஏதேனும் ஒருவிதத்தில் அகங்காரம் உதித்தே ஆகவேண்டும். எந்தப் படித்தரத்தில் அது எப்படி உதிக்கிறது என்பதைத்தான் யாரும் உறுதியாக இயம்ப முடியாது.

கேள்வி: *(56)* ஆத்ம ஸாதகன் நிர்க்குண ஸமாதி அடைவதன் பொருள் யாது?

பதில்: பரமாத்மா ஒன்று. அதன் தோற்றங்களாக வந்திருக்கின்ற ஜீவாத்மாக்கள் பல. ஜீவாத்மாக்கள் எண்ணிக்கையில் அடங்கா. அவைகள் சூட்சுமமாயிருக்கும் மனதிலும், ஸ்தூலமாயிருக்கும் உடலிலும் கட்டுண்டு இருக்கின்றன. அப்படிக் கட்டுண்டு இருக்கும் பரியந்தம் அவைகளுக்குப் பிறப்பும் இறப்பும் உண்டு. பல பிறவிகளுக்குப் பிறகு ஜீவாத்மன் ஒருவனுக்குப் பிரபஞ்ச வாழ்வில் சலிப்புத் தட்டுகிறது. அப்பொழுது அவன் உலகப்பற்றை நீக்கி விட்டுத் தன்னுடைய நிஜசொரூபமாகிய ஆத்மாவை அடைய முயலுகிறான். மனதைத் தெளிவு படுத்துவது ஆத்ம சாதனம். மலினப்பட்டுள்ள மனதுக்கு எது உலகாகத் தென்படுகிறதோ அதே பொருள் சுத்த மனமுடையவனுக்குத் தெய்வமாகக் காட்சி கொடுக்கிறது. ஆக, உலகம் வேறு கடவுள் வேறு அன்று. இந்த மனதை ஒதுக்கித் தள்ளுதலே துறவின் உட்பொருளாகிறது. மனதை ஒதுக்கித் தள்ளியவன் நிர்விகல்ப சமாதி அடைகின்றான். அவனே பிறவிப் பெருங்கடலைத் தாண்டியவனாகிறான்.

கேள்வி: *(57)* மனிதன் கடவுளைக் காணமுடியுமா?

பதில்: மனிதன் யார்? தெய்வம் யார்? என்பதற்குச் சுவாமி விவேகானந்தர் கூறியுள்ள கருத்தைச் சிந்திக்க வேண்டும். தெய்வத்தினிடம் குறை ஏற்பட்டுவிட்டால் அக்குறை ஏற்பட்ட தெய்வம் மனிதனாகின்றார். மனிதனிடம் குறை முழுவதும் நீங்கி நிறைநிலை அமைந்துவிட்டால் அவன் தெய்வமாகின்றான்.

தெய்வத்தினிடமிருந்து மனிதனைப் பிரித்து வைப்பது மனது ஆகும். ஜடப்பொருளினிடத்து மனது முற்றிலும் ஒடுங்கிக் கிடக்கிறது. மனது தோற்றத்துக்கு வரவர உயிர்கள் பரிணமித்து வருகின்றன. மனது முற்றிலும் மனிதனிடத்தில் தோற்றத்துக்கு

வந்திருக்கிறது. அந்த மனதை மாய்ப்பது மனிதனுக்குச் சாத்திய மாகும். மனதைத் தூய்மைப்படுத்துவதற்கேற்பப் பிரபஞ்சக் காட்சி தெய்வக் காட்சியாக மாறி அமைகின்றது.

மனது உலக சுகதுக்கங்களில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் வரையில் அது பிறவியைப் பெருக்கிக் கொண்டே போகிறது. சுகதுக்கங்களை அனுபவிக்கின்ற மனது மாசுடையதாகின்றது. மாசுடைய மனது தெய்வக் காட்சியைக் காண உதவாது. தெய்வக் காட்சியைப் பெறுவதற்கு மனது மாசற்றதாக இருக்க வேண்டும்.

மனிதன் எடுத்த பிறவிகளிலெல்லாம் உலக சுகத்தை அவன் வேண்டியவாறு அனுபவித்து வந்திருக்கின்றான். உலக சுகமே சாசுவதமானது என்று நம்பி வந்திருக்கின்றான். மனிதனிடத்திலுள்ள காமம் எல்லாப் பிறப்புகளிலும் அவனைத் தொடர்ந்து வந்திருக்கின்றது. எனவே அவன் மனது காமத்தில் கட்டுண்டு மயங்கிக் கிடக்கின்றது. அக்கட்டிலிருந்து மனதை விடுவிப்பது மனிதனுக்கு எளிய காரியமன்று. ஆனால் மனிதன் அதைச் செய்தாகவேண்டும். விவேகத்தையும், வைராக்கியத் தையும், கடவுள் அருளையும் துணையாகக்கொண்டு மனதோடு போராடிக் காம வாசனையில் மயக்குண்டு கிடக்கின்ற மனதை அதிலிருந்து மீட்டெடுத்தாக வேண்டும். இதை மனிதன் எப் பொழுது செய்கின்றானோ அப்பொழுது அவன் கடவுளைக் காணமுடியும்.

கடவுள் அகண்ட ஸத் சித் ஆனந்தமாகின்றார். மனிதன் தான் அழிவில்லாதவன் என்பதையும் ஸத்சொரூபம் என்பதை யும் அனுபவ பூர்வமாக உணரும்பொழுது அவன் கடவுளைக் கண்டவனாகின்றான். தான் பேரறிவு சொரூபம் என்பதை உணர்ந்து அறியாமையை அகற்றித் துன்பமில்லாத நிலையைப் பெறுபவன் கடவுளைக் கண்டவனாகின்றான். தான் ஆனந்த சொரூபம் என்பதை அனுபவ ரீதியாக உணர்பவன் கடவுளைக் கண்டவனாகின்றான்.

அழிந்து போவதற்கு எந்த உயிரும் விரும்புவதில்லை. ஆனால் அழிந்துபோகும் பொருளை அதன் அழிவிலிருந்து யாரும் தடுத்து நிறுத்த முடியாது. அழியாத ஆத்மசொரூபம் தான் என்று உணராது அழிந்து போகும் உடலைத் தான்

என்று உணர்கின்ற மனிதன் அழிவைக் குறித்துப் பயப்படு கின்றான். மாசுடைய மனம் படைத்தவன் அழிந்துபோகும் சரீரத்தைக் காண்கின்றான். மாசற்ற மனம் படைத்த மனிதன் அழியாத ஆத்மசொரூபம் தான் என்பதை அறிகின்றான். உடல் ஜடமயமானது. உடலைத் தன்மயமாகக் கருதும் மனிதன் தன்னை அக்ஞான நிலையில் வைத்துக் கொள்கின்றான். ஆத்ம சொரூபம் பேரறிவு மயமானது. ஆத்ம சொரூபத்தைத் தான் என்று அறிகின்ற மனிதன் தன்னிடத்தில் பேரறிவு மிளிர்வதைக் காண்கின்றான். உடல் நோய்க்கும் துன்பத்துக்கும் நிலைக்களம். உடலைத் தன்மயமாகக் காண்கின்ற மனிதன் துன்பத்துக்கும் நோய்க்கும் ஆளாகின்றான். ஆத்ம சொரூபம் ஆனந்த மயமானது. தன்னை ஆத்ம சொரூபமாகக் காண்கின்ற மனிதன் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற பெரு நிலையில் இருக்கின்றான். ஆத்மசொரூபமாகத் தன்னை உணர் கின்ற மனிதன் கடவுளைக் கண்ட மனிதன் ஆகின்றான்.

கேள்வி: *(58)* நரகம், சொர்க்கம், முக்தி ஆகியவை களைப் பற்றி விளக்க வேண்டுகிறேன்.

பதில்: துன்பத்தை அனுபவிக்கக்கூடியு இடம் நரகம்; இன்பத்தை அனுபவிக்கக்கூடிய இடம் சொர்க்கம். இன்பம் துன்பம் ஆகிய இரண்டும் வேண்டாம் என்பது முக்தி. சொர்க்கமும் நரகமும் அந்தரத்தில் இருப்பவையாக மக்கள் கற்பனை பண்ணுகிறார்கள். அக்கற்பனை பொய்யா? மெய்யா? என்பதை ஆராய்வதில் பயன் இல்லை. அதில் நாம் காலத்தை வீணாக்க வேண்டியதில்லை. நம் வாழ்க்கையில் துன்பம் வருகிறது. அதை நாம் அனுபவிக்கின்றோம். நம் வாழ்க்கையில் இன்பமும் வருகிறது. அதையும் நாம் அனுபவிக்கின்றோம். தீவினை துன்பத்தைத் தரும்; நல்வினை இன்பத்தைத் தரும். தீவினை செய்பவர்கள் தங்களுக்குத் தாங்களே நரகத்தைத் தேடிக்கொள்கின்றனர். நல்வினை செய்பவர்கள் தங்களுக்குத் தாங்களே சொர்க்கத்தைத் தேடிக்கொள்கின்றனர். ஆக, இப்பூவுலகில் தீவினையின் மூலம் நரகத்தையும் நல்வினையின் மூலம் சொர்க்கத்தையும் நாம் உண்டுபண்ணிக் கொண்டிருக் கின்றோம். நாம் துன்பம் அனுபவிக்கும் பொழுதெல்லாம்

நரகத்தில் இருக்கின்றோம். நாம் இன்பம் அனுபவிக்கும் பொழுதெல்லாம் சொர்க்கத்தில் இருக்கின்றோம். இதுதான் நமக்குத் தெரியும் நரகமும் சொர்க்கமும் ஆகும்.

இனி, முக்தி என்பது இவ்வுலகத்திலிருந்து வரும் சுகம் துக்கம் ஆகிய இரண்டிலிருந்தும் விடுபட்டிருக்கின்ற நிலையாகும். இவ்வுலக வாழ்வில் சுகத்துக்கு ஏதுவானவைகள் வருகின்றபொழுது நம் மனது அதில் மூழ்கிப் போய்விடலாகாது. நம் வாழ்வில் துக்கத்துக்கு ஏதுவானவைகள் வருகின்றபொழுது நம் மனது அவற்றைக் குறித்து வருந்தலாகாது. சுகத்துக்கு ஏதுவானவைகள் வருகின்றபொழுதும், துக்கத்துக்கு ஏதுவான வைகள் வருகின்றபொழுதும் நம் மனது நடுநிலையில் இருந்து பழகவேண்டும். உலகத்திலிருந்து வரும் இன்பம் துன்பம் ஆகிய இரண்டிலும் நம் மனது சம்பந்தப்படாமல் இருக்க வேண்டும். இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்று சொன்ன பொழுதும் பிறகு வனவாசம் என்று சொன்னபொழுதும் இரண்டும் ஒன்றாகவே அவருக்கு இருந்தன. பட்டாபி ஷேகத்தைக் குறித்து மகிழ்ச்சியும், வனவாசத்தைக் குறித்துத் துக்கமும் இராமன் அடையவில்லை. மனதை உலக சுகதுக்கங் களிலிருந்து பிரித்து எடுத்து ஆத்ம சொரூபத்தில் வைக்கத் தெரிந்து கொண்டவர்களே முக்தி என்னும் பெருநிலையைப் பெற்றவர்களாகின்றார்கள். முக்தி என்பது இறந்த பிறகு வந்து வாய்க்கின்ற ஒரு பேறு அன்று. இவ்வுலக வாழ்வில் வாழ்கின்றபொழுதே முக்தி என்னும் பெருநிலையைப் பெற்றுவிடலாம். பிரபஞ்ச வாழ்வு தரும் சுகதுக்கத்தில் மனம் கட்டுப்படாது, அவற்றினின்று விலகிச் சொரூப தியானத்தில் மனம் லயித்துவிடுமானால் அதுவே முக்தி நிலையாகும். இவ்வுலகில் வாழ்ந்திருந்தாலும் இவ்வுலகப் பந்தபாசங்களி லிருந்து விலகி இருப்பதே முக்தி நிலையாகும்.

கேள்வி: *(59)* முக்தி நெறி என்றால் என்ன? அதை யாவரும் அடையமுடியுமா?

பதில்: முக்தி என்னும் சொல்லுக்குப் பொருள் விடுதலை யென்பதாம். ஒவ்வோர் உயிரும் எதெதிலோ கட்டுண்டு கிடப்பதாக உணர்கிறது. கட்டிப் பிடித்திருக்கிற தளையினின்று

தன்னை விடுவித்துக் கொள்ளுவது முக்தி. காளையொன்றைக் கயிறு போட்டுக் கட்டி வைத்திருக்கிறார்கள். அதினின்று தன்னை விடுவித்துக் கொள்ள அது முயலுகிறது. ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கு அடிமையாயிருக்கிறது. அடிமைத்தனத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளுவது முக்தி. இனி, சிறப்பாக ஜீவாத்மன் பிரபஞ்ச வாழ்க்கையினின்று தன்னை விடுவித்துக் கொண்டு பரத்தினை அடைவதை முக்தியென்கிறோம். மக்கள் எல்லாரும் முக்தியடைந்தாக வேண்டும். அதன் பொருட்டுக் கையாளுகிற உபாயம் நெறியெனப்படுகிறது. முக்தி நெறி அறியாத மூடரோடு இணைந்திருக்க எனக்குப் பக்திநெறி காட்டி என்னை விடுவித்தருளுவாயாக என்னும் பாங்கில் மாணிக்கவாசகர் மொழிகிறார். பக்திநெறி போன்றே யோக நெறியும், ஞானநெறியும் முக்திநெறிகள் ஆகின்றன. பரமனை அடைவதற்கு ஆன்றோர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளெல்லாம் முக்தி நெறியாம்.

கேள்வி: *(60)* மனிதன் எப்பொழுது தெய்வமாகலாம்?

பதில்: சிற்றுயிர்கள் என்றும் பேருயிர்கள் என்றும் சொல்லுமிடத்து மனிதனுக்குக் கீழுள்ள உயிர்கள் யாவும் சிற்றுயிர்களாகின்றன. மனிதன் பேருயிர் ஆகின்றான். இனி, மனிதன் தெய்வ நிலைவ்ய எட்டியாக வேண்டும்.

தெய்வத்துக்கும் மனிதனுக்குமுள்ள வேறுபாட்டைச் சுவாமி விவேகானந்தர் விளக்கி இருக்கின்றார். தெய்வத்தினிடத்தில் குறை வந்தால் அவர் மனிதனாகின்றார். அதாவது குறைநிலையிலுள்ள தெய்வம் மனிதன். மனிதனிடத்து நிறை நிலை வந்தால் அவன் தெய்வமாகின்றான். அதாவது நிறை மனிதன் தெய்வமாகின்றான்.

மனிதனிடத்துள்ள குறைதான் ஆசையாக வடிவெடுக்கிறது. ஆசை பூர்த்தியானால் அவன் நிராசை நிலைக்குச் செல்கின்றான். ஆசையுள்ளவனை மனிதன் என்றும், நிராசையில் இருக்கும் மனிதனைத் தெய்வம் என்றும் கூறலாம். ஆசைதான் விருப்பு வெறுப்பாக வடிவெடுக்கின்றது. ஒரு பொருளை வேண்டுமென்று விரும்புவதும் வேண்டாமென்று வெறுப்பதும் மனிதனிடத்துள்ள குறையாகும். இன்பம் தரும் விஷயங்களை

வேண்டுமென்று விரும்புதலும், துன்பம் தரும் விஷயங்களை வேண்டாமென்று விலக்குவதும் மனிதனுடைய இயல்பாகும். வேண்டுதல், வேண்டாமை இலாதவன் இறைவன்.

மனிதன் தன்னிடத்துள்ள ஆசைகளை எல்லாம் பூர்த்தி செய்து நிராசை நிலையை அடைவானானால் அவன் தெய்வமாகலாம். மனிதன் இன்பத்துக்கு உரியது தன்னிடத்தில் இல்லை என்றும், இன்பத்துக்கு உரிய பொருள் வெளியுலகில் தனக்குப் புறம்பே அமைந்திருக்கிறதென்றும் எண்ணுகின்ற வரையில் அவன் ஆசையைப் பூர்த்திபண்ண முடியாது. தன்னிடத்தில் பேரானந்தப் பெருநிலை இருக்கிறதென்று அறிந்து மனதை உள்முகமாகத் திருப்பும்பொழுது தன்னிடத்தே இன்பத்தைக் காண்கின்றான். அப்பொழுது விஷயங்களில் அவனுக்கு மனம் செல்வதில்லை. "கற்கண்டுக் கட்டியைச் சுவைத்தவன் கருப்பட்டியைச் சுவைக்க விரும்புவானா?" என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கேட்கின்றார். தன்னிடத்திலுள்ள ஆன்மிக சுகத்தை அறிந்தவன் விஷய சுகத்தில் மனதைச் செலுத்த மாட்டான். மனதை உள்முகமாகத் திருப்பி உள்ளே இருக்கின்ற பிரம்மானந்தத்தை அனுபவிக்கின்றபொழுதுதான் மனிதன் தெய்வமாகின்றான்.

கேள்வி: *(61)* முக்தி மனிதனுக்கு மட்டுமே இயலுமா?

பதில்: முக்தி என்பதன் பொருள் பிறவிப் பெருங்கடலைத் தாண்டுதலாம். முக்தி அடைந்தவன் பரம்பொருளோடு சேர்ந்தவனாகிறான். யானைக்கு முக்தி என்றும் கருங்குருவிக்கு முக்தி என்றும் புராணங்கள் பகர்கின்றன. மனிதனுக்கு நல்வாழ்வில் உற்சாகம் ஊட்டுவதற்காகப் புராணங்களில் கதைகளை இங்ஙனம் ஆன்றோர்கள் அமைத்திருக்கின்றனர். மக்களில் பெரும்பான்மையோர் உலகப் பற்று மிக வைத்திருக்கின்றனர். பெறுதற்கரிய மானுட ஜன்மத்தின் நோக்கம் மக்கள் எல்லார்க்கும் விளங்குவதில்லை. மானுட ஜன்மத்தை விடக் கீழ்நிலையிலுள்ள பறவைகளும் விலங்குகளும் பரதத்துவத்தையோ, முக்தியையோ அறிந்துகொள்ளமாட்டா. ஆதலால் மக்களுள் பண்பட்ட ஆத்ம சாதகர்களுக்கே முக்தி பெறுவது சாத்தியம்.

கேள்வி: *(62)* தர்ம சக்கரம் இதழில் முக்தி மனிதனுக்கு மட்டுமே சாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஸ்ரீ ரமண மகரிஷி தன்னுடன் இருந்த லக்ஷ்மி என்னும் பசுவும் பிற விலங்குகளும் முக்தியடைந்ததாகத் தெரிவித் துள்ளாரே, இது எங்ஙனம் சாத்தியமாகும்?

பதில்: சான்றோருடைய தூய அன்புக்கு உயிர்களனைத்தும் இலக்காகின்றன. அவைகளும் தயங்காது சான்றோர் சந்நிதிக்கு வந்து செல்லுகின்றன. லக்ஷ்மி என்னும் பசுவும் குரங்கு இனமும் வேறு உயிர் வகைகளும் ஸ்ரீரமண மகரிஷி முன்னிலைக்கு வந்து போவதை நம்மில் பலர் பார்த்திருக் கிறோம். லக்ஷ்மி என்னும் பசு உரிமையோடு அவர் முன்னி லைக்கு வந்து நாள்தோறும் வாழைப்பழம் ஒன்றை ஏற்றுச் செல்வதைப் பலபேர் பார்த்திருக்கிறார்கள். தூய அன்புக்கு இங்ஙனம் இலக்காவது இயற்கையின் கூறு.

சான்றோர் அன்புக்கு இலக்காவது வேறு. பிரபஞ்ச வாழ்வு அநித்தியமானது என்பதை அறிந்துகொள்வது வேறு. நிலத்துக்குரியவன் நாள்தோறும் வயலுக்குச் சென்று நெற்பயிரை அன்போடு பார்த்து வருவானாகில் அது நன்கு வளர்ந்துவரும். மாறாக, அவன் நாள்தோறும் அதற்கு உபதேசம் செய்து வந்தால் அவ்வுபதேசத்தை அது புரிந்துகொள்ள இயலாது. மனித நிலைக்குக் கீழ்நிலையிலுள்ள உயிர்கள் அன்பைப் புரிந்துகொள்ளும். ஆனால் விவேகம் அவைகளுக்கு இல்லை. உலகில் வாழ்ந்து வரும் உயிர்வகைகளுள் பிரபஞ்ச வாழ்வு அநித்தியமானது என்பதையும் இங்கே இன்பத்தைவிடத் துன்பம்தான் அதிகம் நிறைந்திருக்கிறது என்பதையும் மனிதனே அறிந்துகொள்ள வல்லவனாகின்றான். அப்படி வாய்த்த விவே கத்தின் விளைவாக மனிதன் பிரபஞ்ச வாழ்வை ஒதுக்கித் தள்ளுகிறான். மக்களுள்ளும் இத்தகைய விவேகம் உதயமான பிறகே உலகப்பற்று ஒழிகிறது. சிற்றுயிர்கள் அத்தகைய நிலையை இன்னும் எட்டவில்லை. ஆதலால் முக்தியைப் பற்றிய பேச்சுக்கும் ஏனைய உயிர்களுக்கும் வெகுதூரம்.

ஸ்ரீ ரமண மகரிஷி இங்ஙனம் சொல்லியிருக்கமாட்டார். அப்படியே அவர் சொல்லியிருந்தாலும் அது தத்துவத்திற்கு ஒவ்வாது.

கேள்வி: *(63)* மனிதனுக்கே ஆன்மிகநிலை அடைய முடியும் எனினும் ஜடாயு பெரியநிலை அடைந்ததாகக் கூறுவது எப்படி?

பதில்: . உலக அமைப்பு யாண்டும் ஒரே விதத்தில்தான் இருந்துவருகிறது. மக்கள் இனம், பறவை இனம், விலங்கு இனம் ஆகியவைகளுக்கு இடையில் வாழ்க்கைத் தத்துவங்கள் சில பொதுவாக அமைந்திருக்கின்றன. நாய், விலங்கு எனினும் அது படைத்திருக்கிற எஜமான விசுவாசம் ஒப்பற்றது. தன்னை வளர்க்கும் எஜமானனுக்கு ஏதாவது தீங்கு வரும்பொழுது முற்கூட்டியே நாய் அதை அறிந்துகொள்ளுகிறது. அந்தத் தீங்கைத் தடுப்பதற்குத் தன்னால் இயன்ற அளவு அது முயற்சி பண்ணுகிறது. நாயினிடத்தில் உள்ள இந்தச் சிறப்பை எக்காலத்திலும் எல்லா நாடுகளிலும் நாம் கண்டு வருகிறோம்.

நேர்மையான மனப்பான்மையும் உயிர்களனைத்திடத்தும் அன்பு வைக்கும் பாங்கும் படைத்துள்ள மனிதனை விலங்குகளும், பறவைகளும் தாமாகவே நேசிக்கின்றன. அன்பும் சீலமும் நிறையப்பெற்றுள்ள மானுடன் ஒருவனுக்கு ஏதேனும் கேடு வந்தால் நல்லியல்பு படைத்துள்ள சிற்றுயிர்களும் அக் கேட்டினின்று அம்மனிதனை விடுவிக்க முயலுகின்றன. இதிலிருந்து இயற்கையின் கூறு என்னும் கோட்பாடு ஜடாயு ராமனுக்கு உதவிபுரிந்ததிலிருந்து வெளியாகிறது. ஆத்ம ஞானத்தில் முடிந்த நிலையை அடைவது மனிதனுக்குத்தான் சாத்தியம் என்பது உண்மை. ஆயினும் ஆத்மபரிபாகம் அடைந்து வருகிற யோகி ஒருவனுக்குச் சிற்றுயிர்களும் தம்போக்கில் துணை புரிகின்றன. அச்செயலை ஜடாயு ராமனுக்குச் செய்தது. ஓர் உயிர், மற்றோர் உயிருக்குச் செய்கின்ற உபகாரம் இனத்தை முன்னிட்டன்று, பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டேயாம். பரஸ்பர உதவிக்குச் சான்றாக இருப்பது ஜடாயுவின் செயல்.

கேள்வி: *(64)* மானுடப் பிறவியில்தான் தெய்வக்காட்சி பெறமுடியும். ஆனால் அனுமான் தெய்வக்காட்சி கண்டு இருக்கின்றார். இதற்கு விளக்கம் தேவை.

பதில்: மானுட வடிவத்தில் இருப்பவர்கள் எல்லாரும் மானுடப் பண்பைப் பெற்று இருக்கிறார்கள் என்று சொல்ல

முடியாது. மானுட வடிவத்தில் இருந்துகொண்டு விலங்குத் தன்மை உடையவர்கள் இருக்கிறார்கள். மானுட வடிவத்தில் மானுடப்பண்பு உடையவர்களும் இருக்கிறார்கள். மானுட வடிவத்தில் தெய்வப்பண்பு பெற்றுள்ளவர்களும் உண்டு.

அனுமான் குரங்கு வடிவத்தில் இருந்தபோதிலும் விலங்குத் தன்மை, மனிதத்தன்மை எல்லாவற்றையும் கடந்து தெய்வப் பண்பு உடையவராக விளங்குகின்றார்.

இராமன் பரம்பொருளுக்கு விளக்கமாகவும் சீதை ஜீவாத்மனுக்கு விளக்கமாகவும் அனுமான் குரு தத்துவத்திற்கு விளக்கமாகவும் விளங்குகிறார்கள். இராமனை விட்டுப் பிரிந் திருந்த சீதையை இராமனோடு சேர்த்து வைக்கின்றசெயலை அனுமான் செய்து முடிக்கின்றார். ஜீவாத்மாவைப் பரமாத் மாவோடு இணைப்பவர் குரு ஆகின்றார். இச்செயலை அனு மான் செய்ததால் அவருக்குக் குருஸ்தானம் அளிக்கப்படுகின்றது. அனுமான் வடிவத்தில் குரங்காகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறாரே யன்றிப் பண்பாட்டில், தூய்மையில் அவர் மனிதனுக்கு மேலே போய்விடுகின்றார்.

அசோகவனத்தில் சீதையைப் பார்த்தபொழுது அனுமான் பரவசமடைகின்றார். இராவணன் போன்ற அரக்கர்கள் சீதையி னுடைய வடிவழகில் மயங்கிக் கிடந்தார்கள். அனுமான் சீதையிடம் தெய்வத்தன்மை வெளிப்பட்டு இருப்பதைக் கண்டு சீதையைத் தெய்வமாக வைத்து மனதில் வழிபடுகின்றார். தவத்தின் மூலமாகச் சீதையிடம் வெளிப்பட்டிருந்த தெய்வீக எழிலைக் கண்டு ரசிக்கும் பாக்கியம் அனுமான் ஒருவருக்கே கிட்டியது. அசோகவனத்தில் அனுமான் சீதையைச் சந்தித்த நிகழ்ச்சியில் சீதையின் தவ மகிமையையும், அனுமானின் தெய்வத் தன்மையையும் நாம் காண்கின்றோம். அனுமான் நைஷ்டிக பிரம்மச்சாரி ஆவார். அவர் அடைந்திருந்த உயர் நிலைக்கு அதுவும் காரணமாகும்.

கேள்வி: *(65)* ஆசை ஏன் ஏற்படுகிறது? மனிதன் பந்தத் திற்குட்படுவது எங்ஙனம்? பந்தப்படாமலிருக்க வழி என்ன?

பதில்: உலக ஆசைக்குப் பிறப்பிடம் அக்ஞானம். கீழ்த்தரமான உலக ஆசையும் மனிதனை மேலோனாக்குகிற

தெய்வீக ஆசையும் ஒன்றோடொன்று சேர்ந்து இருக்கமாட்டா. அவைகளைக் குறித்துப் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: இராமனிருக்குமிடத்தில் காமன் இல்லை; காமனிருக்குமிடத்தில் இராமன் இல்லை என்பதாம். காமன் என்பது கீழ்த்தரமான உலக ஆசை. அது தோன்றுமிடத்து அது தனக்குப் பொருந்தாது என்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். பட்டுப்புழு தான் உண்டுபண்ணிய கூட்டிலேயே கட்டுண்டு கிடப்பது போன்று மனிதன் தனக்குத் தானே சிருஷ்டித்துக் கொண்ட உலக ஆசைகளில் கட்டுண்டு உழல்கிறான். உலக ஆசைகளை எல்லாம் அறவே ஒதுக்கித் தள்ளுகின்றவிடத்துத் தெய்வீக ஆசை ஆழ்ந்து உருவெடுக்கிறது. பந்தமும் முக்தியும் அவரவர் மனநிலையைப் பொருத்தது.

கேள்வி: *(66)* "துயரத்துக்குக் காரணம் அக்ஞானம்" என்பது ஒரு கோட்பாடு. எல்லார்க்கும் விளங்குகின்ற பாங்கில் இதைத் தெளிவுபடுத்தும்படி வேண்டுகிறோம்.

பதில்: தூக்கத்தில் ஒருவன் எதிர்பாராத கனவுகளைக் காண்கிறான். ஜாக்கிரதாவஸ்தையில் மதிப்புக்குரியவனாக இருக்கிற மானுடனொருவன் சொப்பனாவஸ்தையில் அவமதிப்புக்கு ஆளாகிறான். தரத்தில் மட்டமானவர்கள் சிலர் அவனைத் திரஸ்கரிக்கின்றனர்; அவமானப்படுத்துகின்றனர். அவனைத் துன்பத்துக்கு ஆளாக்குகின்றனர். கனவில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறவனை யாரோ ஒருவர் தட்டி எழுப்புகின்றார். திடீரென்று விழித்து எழுந்திருக்கின்றான். கனவில் தான் பட்ட அவமானத்தைச் சிறிது விமரிசனம் பண்ணுகின்றான். அது வெறும் பொய்த்தோற்றம் என்று அதை ஒதுக்கி வைக்கின்றான். தான் உண்மையில் அவமானப்படவில்லை என்னும் தெளிவு அவனுக்கு உண்டாகிறது. கனவில் அவன் துன்பப்பட்டது அக்ஞானத்தின் விளைவு. நனவில் அவன் அதை ஒதுக்கித் தள்ளியது அதற்கேற்ற ஞானத்தைப் பெற்றதின் விளைவாம். ஜாக்கிரதாவஸ்தையில் மனிதனுக்குத் தோல்வியுண்டாகிறது. அதனைக் குறித்து விசனப்படுகிறான். தோல்வியை அவன் உள்ளபடி ஆராய்ந்தால் அத்தோல்வியை மீளுவதற்கான உபாயத்தை விவேகத்தால் அவன் அறிய முயன்று வருகின்றான்.

ஜாக்கிரதாவஸ்தையில் அவன் அடைந்துள்ள தோல்வியும் விசனமும் அக்ஞானத்தின் விளைவு. தெளிந்த விவேகத்தின் விளைவாக நேராக முயன்று அவன் வெற்றிபெற முடியும். இந்த ஞானம் அக்ஞானமாகிய இரண்டும் ஓரளவில் சீர்தூக்கப் படுகின்றன. அக்ஞானத்தையும் அதன் விளைவாகிய துயரத் தையும் துடைக்க வல்லது ஞானத்தெளிவு. இனி ஜாக்கிரதா வஸ்தையிலேயே இம்மனிதன் அவமானத்துக்கு ஆளாகின்றான் என்று வைத்துக்கொள்வோம். அவன்பட்ட அவமானத்தை அவன் நிதானமாக ஆராய்ச்சி பண்ணினால்தான் அவமானத் துக்குரியவன் அல்லன் என்னும் தெளிவு அவனுக்கு உண்டா கிறது. ஞானத்தெளிவுக்கேற்ப வெற்றியைக் குறித்து மகிழ்வுறு வதும், தோல்வியைக் குறித்துத் துன்புறுவதும் பொருளற்ற வைகள் என்னும் ஞானோதயம் அவனுக்கு வருகிறது. நிறை ஞானத்துக்குப் பக்குவமாகிக் கொண்டிருக்கிற ஆத்ம சாதக னொருவன் இவ்வுலக சம்பந்தமான வெற்றி தோல்வி, மானம் அவமானம், இன்பம் துன்பம் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்ட வனாகின்றான். ஆக, துயரங்களனைத்திற்கும் மூலகாரணம் அக்ஞானம் என்பதும் நிறைஞானி ஒருவன் எக்காரணத்தை முன்னிட்டும் தனது நிஜானந்தத்திலிருந்து பிசகுவதில்லை என்பதும் நன்கு வெளியாகிறது.

உடல் எடுத்திருக்கிற ஒவ்வொருவனும் ஏதேனும் ஒருபோக்கில், ஏதேனும் ஒரு காலத்தில் நோய்க்கு ஆளாகக் கடமைப்பட்டிருக்கிறான். நோய்வாய்ப்படுகிற ஒவ்வொரு மனிதனும் அதைக் குறித்து வருந்துகிறான். கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணுகிறான். சிகிச்சை முறைகளையும் கையாளுகிறான். கடவுளிடத்தில் பிரார்த்தனை பண்ணுவதில் குறையில்லை. பரிகாரத்தையும் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் வருத்தப்படுவது மட்டும் பொருந்தாது. அது அக்ஞானத்தின் விளைவு. நோயின் வாயிலாக உடல் திருத்தியமைக்கப் பெறுகி றது. இது உடலைப்பற்றிய உண்மை. அமைதியாக நோயை ஏற்றுக் கொள்ளுவதின் வாயிலாக உள்ளத்தில் அவன் திட்பம் அடைகிறான். இவ்வுண்மையை அறிகிறவன் விசனப்படுவதற்குப் பதிலாகச் சகித்துப் பழகுதல் என்னும் சாதனத்தைக் கையாளுகிறான். விசனப்படுவது அக்ஞானத்தின் விளைவு.

சரியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வது ஞானத்தின் விளைவு. நோய் நலனடைவது ஒருபுறமிருக்க மனத்திட்பம் அடைவது அவனுக்குப் பெரிய வாய்ப்பு ஆகிறது. நல்ல விவேகம் படைத்தவர்கள் உடலுக்கு வந்த நோயை உள்ளத்தில் வாங்கிக் கொள்வதில்லை. உடலில் வேதனையைப் பொருள்படுத்தா திருப்பது அவர்கள் பெறுகிற இலாபமாகிறது. நோயைக் குறித்துப் பெருமிதமாக வருந்துபவன் நஷ்டப்பட்டவனாகிறான். அது அக்ஞானத்தின் விளைவு.

ஏழ்மையைக் குறித்து வருந்துகிறவர்கள் உலகில் ஏராளமாக உண்டு. கடவுள் தங்களைப் பரம ஏழைகளாகப் படைத்து விட்டார் என்று அன்னவர்கள் மனம் நொந்து கொண்டிருக் கின்றனர். அதற்கு மாறாக வேறு சில விவேகிகள் தங்களுக்கு வாய்த்துள்ள ஏழ்மையை அமைதியாக ஏற்றுக்கொள்கின்றனர். கைவசமுள்ள பொருளுக்கேற்ப வாழ்க்கையை மிகச் சிக்கனமாக நடாத்துகின்றனர். அதற்கிடையில் மேலும் தேவையான செல் வத்தைச் சேகரிப்பதற்கு முறையாகப் பாடுபடுகின்றனர். மனதில் அவர்கள் எப்போதும் அமைதியாகவும், ஊக்கத்துடனும் இருக் கின்றார்கள். இந்நிலை அறிவின் விளைவு. தெய்வத்தையும் தங்கள் தலைவிதியையும் நொந்து கொள்கிறவர்கள் படுகிற துயரங்களெல்லாம் அக்ஞானத்தின் விளைவு.

ஒருவரை ஒருவர் போற்றுவதும் தூற்றுவதும் உலக இயல்பு. புகழ்ச்சியில் மகிழ்ந்திருப்பவர்கள் இகழ்ச்சியில் துன் புறுவது திண்ணம். மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு புகழ்ச்சியை நாடுகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு இகழ்ச்சி வந்து வாய்த்த பொழுது அவன் பெருந்துயரத்திற்கு ஆளாவது திண்ணம். புகழ்ச்சியை நாடுவது அக்ஞானத்தின் விளைவு. நெறிபிறழாது வாழ்பவனுக்குப் புகழ்ச்சி தானாக வருகிறது. ஆனால் அதை அவன் பொருள்படுத்துவதில்லை. நல்லவர்களை நிந்திப்பதும் உலகின் போக்கு. நிந்தை, ஸ்துதி ஆகிய இரண்டும் பொருளற்ற வைகளாக எளிதில் வரவும் போகவும் செய்கின்றன என்பதை அறிந்திருப்பவன் அறிஞன். இரண்டிலும் கட்டுப்படாது நல் வாழ்வில் நிலைத்திருப்பதால் அவனுக்கு ஒருபொழுதும் துன்ப மில்லை. இதற்கு மாறாகக் கீர்த்திக்கு அடிமைப்பட்டிருப்பவன் அபகீர்த்தியில் அல்லல்படுவது திண்ணம். நடுநிலை ஞானத்தின்

விளைவு; அல்லல்படுவது அக்ஞானத்தின் விளைவு.

எடுத்த காரியங்களையெல்லாம் ஒருவன் வெற்றிகரமாக நிறைவேற்றி இன்புற்றிருக்கிறான். மற்றொருவன் ஒவ்வொரு முயற்சியிலும் தோல்வியுற்றுத் துன்பத்துக்கு ஆளாகிறான். முயற்சியை முறையாகக் கையாளுவது அறிவின் விளைவு. முயற்சியில் மடத்தனமாக மூழ்குவது அறிவின்மையின் விளைவு. 'நுண்ணிய கருமம் எண்ணித் துணிக' என்பது கோட்பாடு. நல்லறிவு படைத்திருப்பவனுக்கு ஒரு செயலின் உட்பொருள் உள்ளபடி விளங்குகிறது. அதை முறையாக நிறைவேற்றி அவன் இன்புறுகிறான். மற்றவன் முறைவழுவித் துன்புறுவது அக்ஞானத்தின் விளைவு.

சாவைக்குறித்துத் தேம்பி அழுவது உலகின் இயல்பு. வாழ்விலே பெரும்பற்று வைத்திருப்பவர்களெல்லாரும் சாவுக்கு அஞ்சுகின்றனர். மிகைப்பட்ட பற்றுதல் வாழ்வின்மீது வைப்பதும், வரம்பு கடந்த வேதனை மரணத்தை முன்னிட்டு வருவதும் ஆகிய இவ்விரண்டு செயல்களும் அக்ஞானத்தின் விளைவாம். ஞானம் அல்லது நல்லறிவு படைத்திருப்பவன் வாழ்ந்திருப்பதையும், மடிந்து போவதையும் சமனாகக் கருதுகிறான். அல்லும் பகலும் மாறி மாறி வருவது போன்று பிறப்பும் இறப்பும் மாறி மாறி வருகின்றன என்பதை நல்லறிஞன் உள்ளபடி அறிந்து தேர்ந்திருக்கிறான். வாழ்வதையும், சாவதையும் அவன் சமனாகக் கருதுவதால் துன்பத்துக்கு ஆளாவதில்லை. வாழ்வு மட்டும் வேண்டும்; மரணம் வேண்டாம் என்று எண்ணுவது அக்ஞானத்தின் விளைவு. அன்னவன் படைத்துள்ள அக்ஞானத்தை முன்னிட்டு அவன் துன்பப் பட்டேயாகவேண்டும்.

நல்லறிவு படைத்திருக்கின்றவன் அமைதியுற்றிருந்து பயன் படுகிற பெருவாழ்வு வாழ்கிறான். அறிவிலியோ ஓயாது துன்பத்துக்கு மேல் துன்பத்துக்கு ஆளாகிறான்.

கேள்வி: *(67)* துன்பத்துக்குக் காரணம் அக்ஞானமா, ஆசையா அல்லது விதியா?

பதில்: அக்ஞானமும் ஆசையும் ஒன்றோடொன்று சம்பந்தப் பட்டவைகள். அக்ஞானமிருக்கும் இடத்தில் ஆசையுண்டு.

ஆசையிருக்குமிடத்தில் அக்ஞானமுண்டு. ஆசை இடையறாது உள்ளத்தில் உதித்துக்கொண்டேயிருக்கிறது. அதற்கேற்றவாறு துயரமும் உள்ளத்தை வாட்டிக்கொண்டேயிருக்கிறது. கைக் குழந்தை நிலாவைப் பார்க்கிறது. அதைப் பிடித்துத் தரும்படி தாயிடம் கேட்கிறது. தாய் அதைத் தராவிட்டால் குழந்தை அழுகிறது. சந்திரன் நமக்கு அகப்படாத பொருள் என்னும் ஞானம் குழந்தைக்கு இல்லை. ஆதலால் ஆசை பூண்டு அவ்வாசை நிறைவேறப்பெறாது அது அழுகிறது.

முதியோர்கள் பொருளுக்கும் பதவிக்கும் புகழுக்கும் ஆசைப்படுகின்றனர். பொருள் வந்ததும் அதைக் காப்பாற்றியாக வேண்டும் என்னும் கவலை வருகிறது. வாய்த்த பொருள் போதவில்லை யென்னும் கவலை வருகிறது. அதை வீண்விரயம் செய்யலாகாது என்னும் கவலை வருகிறது. பதவியைப் பெற்ற வர்கள் அதைப் பிறர்க்கு விட்டுக்கொடுக்கலாகாது என்று கவலைப்படுகின்றனர். பிறர் அப்பதவியைக் கவிழ்த்து விடுவார் களோ என்று கவலைப்படுகின்றனர். இனி, புகழைப் பெற்றவர் களை இகழ்வது உலகில் ஒருசாரார் போக்கு. அந்த இகழ்ச்சி காதுக்கு எட்டுகிற பொழுதெல்லாம் துன்பம் வருகிறது. ஆக, மனிதன் ஆசைக்கு அடிமைப்பட்டிருக்கிற காலமெல்லாம் துன்பத்திற்கு ஆளாகவேண்டும். கடவுள் ஞானம் வரும்பொழுதே அக்ஞானம் அகலுகிறது; ஆசையும் அற்றுப்போகிறது. பின்பு துன்பத்துக்கு இடமில்லை.

இனி, விதியென்பது இயற்கையின் நியதி. வினையும் வினைக்கேற்ற வினைப்பயனும் சேர்ந்து விதியென்னும் பெயர் பெறுகிறது. நல்வினை தீவினை ஆகிய இரண்டும் இயற்கையின் விதியே. தீவினை மட்டும் மனிதன் தலைவிதி என்று நொந்து கொள்கிறான். அக்ஞானத்தை அகற்றுகிறவன் விதியையும் தாண்டியவன் ஆகிறான்.

கேள்வி: (68) **"அத்துவித வாஞ்சையாதல் அரிய கொம்பில் தேனை முடவன் இச்சித்தபடியாகும்", இதில் த்வைதமோ சிற்றறிவு" என்று தாயுமானவர் கூறியிருக்கிறார். த்வைதத்தைச் சிற்றறிவு என்று கொள்ளுமிடத்து அது விரும்பத்தக்கதல்ல. அத்வைதமோ அடைவதற்கரியது.**

பின்பு எதைத்தான் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பக்தன் கடைப்பிடிப்பது?

பதில்: யாரொருவனுக்கு உடல்பற்றும் உடல் உணர்வும் அதிகமாக இருக்கிறதோ அவன் அத்வைத ஞானத்தைப் பெறுதற்குத் தகுதியுடையவனல்லன். அதற்குரிய சாதனங்களைச் செய்வதற்கும் அவனால் இயலாது. உடல் உணர்வைக் கடந்திருக்க முதலில் அவன் முயலவேண்டும். தான் வேறு கடவுள் வேறு என்று பிரித்துப் பாகுபடுத்துவது சிற்றறிவின் செயல். தன்னைக் கடவுளுக்கே உரியவன் என்று கருதிவருவது த்வைத மார்க்கத்துக்கு ஏற்புடைய இணக்கமாகும். கடவுளோடு சொந்தம் பாராட்டுவது சிற்றறிவு ஆகாது. குழந்தை பெற்றோரோடு இணங்குவது போன்று ஆத்மசாதகன் தெய்வத்தோடு இணங்குவதில் சிரமம் ஒன்றுமில்லை. பக்தனுக்கு இயல்பாக நல்லிணக்கம் அமைகிறது. பிறகு சாதனம் எளிதாய் விடுகிறது.

கேள்வி: *(69)* இல்லறத்தில் இருப்பவர்களுக்கு ஆசை போவதில்லை. ஆசையை விட்டால்தான் முக்தி. இவர்கள் எப்படி ஆசையை விட்டு முக்தியை அடைவது?

பதில்: முக்தியைப்பற்றிய நியதி இல்லறத்தார்க்கு ஒரு விதமானது, துறவறத்தார்க்கு மற்றொருவிதமானது என்பதன்று. ஆசையை விட்டொழித்தாலன்றி முக்தியில்லை யென்னும் நியதி எல்லார்க்கும் பொதுவானது.

"ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்"

என்பது கோட்பாடு. "நிராசை யின்றித் தெய்வமுண்டோ" என்பதுவும் கோட்பாடு. ஆசையை முற்றிலும் ஒதுக்கியவன் முக்தியடைகிறான்.

ஆசை எது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். விரும்பிய வொன்றைப் பெற்றாகவேண்டுமென்று மனதில் உண்டாகிற எழுச்சிக்கு ஆசையென்று பெயர். ஆக, எங்கு ஆசையிருக்கிறதோ அங்கு மனவெழுச்சியும் உண்டு. இக் கோட்பாட்டை இன்னும் ஆழ்ந்து ஆராயுமிடத்து ஆசையும் மனதும் ஒன்றேயாம். மனமற்ற இடத்தில் ஆசையில்லை, ஆசையற்றவிடத்தில் மனதில்லை. "மனதற்ற பரிசுத்தநிலை

அருள்வாய்" என்பது கோட்பாடு. மனதினின்று விடுதலை யடைவதே முக்தியாம்.

இனி, ஆசை, மனது என்பனவெல்லாம் அக்ஞானத்தின் கூறுகளாம். தன்னை ஆத்மா என்றறிவது ஞானம். தன்னைப் பிரகிருதியின் கூறுகளாகிய உடல், உள்ளம் என்று உணருவது அக்ஞானம். உடல் உணர்வு இருக்கும் வரையில் ஆசையுண்டு. உடல் உணர்வு இருக்கும் வரையில் உள்ளமும் செயல்புரிகிறது. ஆத்ம போதம் என்னும் தன்னுடைய யதார்த்த நிலையில் உறுதிபெறுங்கால் உடல் உணர்வு அகன்று போகிறது. மனது செயலற்றதாகிறது. ஈண்டுச் சான்றொன்று எடுத்துக் கொள்வோம். அயர்ந்த உறக்கத்தில் உடல் உணர்வு இல்லை. மனதின் செயல் இல்லை. ஆதலால் ஆசையும் இல்லை. ஆனால் அக்ஞானம் எஞ்சியிருக்கிறது. ஆதலால் ஆத்ம போதம் மறைந் திருக்கிறது. அக்ஞானம் அகலுமிடத்து அயர்ந்த உறக்கத்திலும் ஆத்ம தெளிவு நிலைபெற்றிருக்கும்.

ஆசையைக் கொண்டே அக்ஞானத்தை அகற்ற முடியும். ஆனால் உலக ஆசை பிடித்தவனை இல்லறத்தான் என்றும் அருள் ஆசை பிடித்தவனைத் துறவியென்றும் பகரலாம். உலக ஆசை பிறவிப் பிணியைப் பெருக்குகிறது. அருள் ஆசை பிறவிப் பிணியைச் சுருக்குகிறது. இல்லறத்திலிருந்து கொண்டே உலக ஆசையைச் சுருக்கவும் அருள் ஆசையைப் பெருக்கவும் வல்லவர் யாரோ சிலர் உளர். வேறு சிலர் பெயரளவில் துறவியர். ஆனால் உள்ளத்தில் உலக ஆசையை வளர்த்துக்கொண்டே இருக்கின்றனர். அன்னவர்க்கும் முக்திக்கும் வெகுதூரம். இனி, இல்லறம், துறவறம் என்னும் பாகுபாட்டை ஒதுக்கி வைத்துவிட்டு மனபரிபாகம் என்னும் கோட்பாட்டை ஆராய்வோம்.

பரிபாகம் அடைந்துள்ள மனது உலக ஆசைகளை வளர்ப்பதில்லை. பண்பட்ட மனதில் பக்தி, ஞானம், வைராக் கியம் ஆகிய தெய்வீக இயல்பைப் பற்றிய ஆசையே வளரு கிறது. அத்தகைய ஆசையைப் பலப்படுத்துமளவு பண்பாடு விரைவில் வந்தமைகிறது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" - என்பது கோட்பாடு.

தீவிரமான ஆத்மசாதகன் தெய்வீக ஆசைகளை ஏராளமாக வளர்க்கவேண்டும். அதற்கேற்றவாறு உலக ஆசைகளனைத்தும் அடிபட்டுப் போகின்றன. தெய்வீக ஆசை தெய்வக் காட்சியில் கொண்டு செலுத்துகிறது. தெய்வக் காட்சியும் ஆத்ம ஞானமும் பிறகு ஒன்றுபடுகின்றன. அந்நிலையில் ஆசைக்கு இடமில்லை. தெய்வீக ஆசையும் தெய்வத்தை அடைந்தபிறகு பொருளற்ற தாகிறது. அந்நிலையில் மனோநாசம் ஏற்படுகிறது. ஆத்ம போதம் அல்லது பரபோதம் நிலைபெறுகிறது. அது முக்தி. இல்லறத்தார், துறவறத்தார் ஆகிய அனைவரும் அதற்கேற்றவாறு மனதைப் பக்குவப்படுத்த வேண்டும்.

கேள்வி: *(70)* கடவுள் ஒருவரே, அவருக்கு ஏன் பல வடிவங்கள் இருக்கின்றன?

பதில்: உலகில் எத்தனை மக்கள் இருக்கின்றார்களோ அத்தனை மனப்பான்மைகள் இருக்கின்றன என்று பரமஹம்சர் கூறுவதுண்டு. உடலுக்கு வேண்டிய உணவில் பலவகைகள் இருக்கின்றன. ஒரே விதமான உணவு எல்லாருக்கும் பொருந் தாது. ஒரேவிதமான உணவாக இருந்தால் உண்பதற்கும் பிடிக்காது. ஒரு விருந்தில் அதிமான உணவு வகைகளைச் செய்தால்தான் அவ்விருந்தைச் சிறப்புடையது என்று சொல்வார்கள்.

மக்களின் மனப்பான்மைக்கு ஏற்ப வழிபாட்டு முறைகளும், வழிபடும் தெய்வங்களும் பல வேண்டி இருக்கின்றன. அறிவை வளர்ப்பதற்குரிய பாடத்திட்டத்திலும் பலவகை இருக்கின்றன. மாணாக்கன் ஒருவனுக்கு ஒரே வகையான பாடத்தைக் காலை முதல் மாலை வரை புகட்டமுடியாது. தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, இசை, ஓவியம், விளையாட்டு, தோட்ட வேலை என்று பாடங்களை மாற்றி மாற்றி அமைத்தால்தான் மாணாக்கர்கள் கல்வி கற்பார்கள். காலை முதல் மாலை வரையிலும் ஒரே பாடம் மட்டும் புகட்டப்படுமானால் யாரும் கல்வி கற்க முன்வரமாட்டார்கள்.

உணவைக் காட்டிலும், பாடத்திட்டத்தைக் காட்டிலும் கடவுள் வழிபாடு செய்வது சூக்ஷ்மமானது. எனவே மனிதனுடைய மனப்பான்மைக்கு ஏற்ப வழிபாட்டு முறையும்,

கடவுளின் வடிவமும் தேவைப்படுகின்றன. கடவுளுக்குப் பல வடிவங்கள் இருந்தால்தான் மக்கள் தங்கள் மனதுக்குப் பிடித்தமான கடவுள் வடிவத்தை வழிபாட்டுக்கு வைத்துக் கொள்ள முடியும். சர்க்கரை என்ற ஒரு பொருளைக் கொண்டு ஜிலேபி, லட்டு, மைசூர்பாகு, அல்வா போன்ற இனிப்புப் பண்டங்கள் பலவற்றைத் தயார் செய்கின்றோம். அத்தனை வகையான இனிப்புப் பண்டங்களுள் எந்த இனிப்புப் பண்டத்தை நாம் அருந்தினாலும் சர்க்கரை என்ற பொருளைத்தான் சுவைக்கிறோம். கடவுள் சச்சிதானந்த சொரூபமாக இருக்கிறார். சச்சிதானந்தத்தைப் பல வடிவங்களில் விளக்கி இருக்கின்றார்கள். எந்தக் கடவுளின் வடிவத்தை நாம் உபாசனைக்கு வைத்துக்கொண்டாலும் அந்த வடித்தின் மூலம் சச்சிதானந்தத்தைத்தான் உபாசிக்கின்றவர்களாகின்றோம். எனவே சச்சிதானந்தம் என்ற ஒரு கடவுளுக்கு நம் முன் னோர்கள் பல வடிவங்களை அமைத்து உபாசனையை எளியதும் இனியதுமாக்கி இருக்கிறார்கள். கடவுள் ஒருவரே என்றாலும் அவரை உபாசிப்பதற்கு மக்களுடைய மனப் பான்மைக்கு ஏற்பப் பல வடிவங்கள் அவசியமாகின்றன.

_கேள்வி: (71)_ உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் கடவுள் அவதாரங்களே என்பது மெய்ப்பொருள் ஒருவரே உள்ளார் என்பதற்கு மாறுபடுகிறது. உயிர்கள் எல்லாம் கடவுளிடத்துப் போய்ச் சேர்ந்தேயாக வேண்டும் என்ப தற்கும் மாறுபடுகிறது. கடவுள் வழிபாடு ஒன்றே மனிதனை உய்விக்க உற்ற உபாயம் என்ற இடத்தில் கடவுள் வேறு மனிதர்கள் வேறு என ஏற்படுகிறது. உயிர்கள் ஒன்றா? பலவா? கடவுளின் அவதாரமான உயிர்கள் அவரை வழி படாமல் இருந்தால் என்ன? வழிபடலின் அவசியம் என்ன?

_பதில்:_ 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பது ஆப்த வாக்கியம். இதுதான் உலகைப் பற்றிய உண்மை. நகைகள் எல்லாம் தங்கத்தினின்று உண்டாயிருப்பது போன்று உலகமும் உலகிலுள்ள பொருள்களும் கடவுளிடத்திருந்து வந்துள்ள வைகள். இத்தனைவித வேறுபாடுகளையுடைய உயிர்களாகவும் ஏனைய பொருள்களாகவும் கடவுளே ஆகியிருக்கிறார். இந்த

உண்மையை அடிப்படையாக வைத்துக்கொண்டு உயிர்கள் எல்லாம் கடவுளுடைய அவதாரங்கள் என்று சொல்லுகிறோம். கடவுளை மெய்ப்பொருள் என்றும் உயிர்களைப் பொய்ப் பொருள் என்றும் நாம் சொல்லுவதில்லை. எனவே முரண்பாடும் இல்லை. பிரபஞ்சத்திலுள்ள எண்ணிறந்த பொருள்களாகவும் உயிர்களாகவும் தோன்றிக்கொண்டிருப்பதற்கிடையில் இவை யாவும் எந்த மூலப் பொருளிடத்திருந்து வந்திருக்கின்றனவோ அந்த மூலப்பொருளாகிய கடவுளின் சொரூபமே. ஆனால் அப்பேருண்மையை உயிர்களாகப் பரிணமித்து வந்துள்ளவைகள் அறியாமல் இருக்கின்றன. தங்களுடைய யதார்த்த நிலையை அவைகள் அறிந்துகொள்கிறபொழுது அவைகள் கடவுளை அடைந்தவைகள் ஆய்விடுகின்றன. பயணம் போய் ஒரு ஊரை எட்டுவதுபோன்று கடவுள் இருக்கும் இடத்துக்கு ஜீவன் யாத்திரை போகிறான் என்பதல்ல கடவுளைப் போய்ச்சேருதல் என்பதனுடைய பொருள். ஜீவன் இப்பொழுது தன்னுடைய தெய்விக இயல்பை அறியாதிருக்கின்றான். அதை அறிந்து கொள்ளுதலும் கடவுளை அடைதலும் ஒன்றேயாம். ஆக, கடவுளைச் சேர்தல் என்பதில் முரண்பாடு ஒன்றுமில்லை. கடலில் அலைகள் பல இருக்கின்றன. வசதிக்காகக் கடல் வேறு அலை வேறு என்று நாம் இயம்புகின்றோம். தன்னுடைய நாமரூபத்தை அலையானது அகற்றிவிட்டால் அது பழையபடி கடல் ஆய்விடுகிறது. வழிபாடு என்பது தன்னுடைய ஜீவபோதத்தைப் புறக்கணித்துத் தன்னுடைய உண்மையான நிலையாகிய பரபோதத்தை ஞாபகப்படுத்துதலாம். எனவே ஜீவனுக்குக் கடவுள் வழிபாடு முற்றிலும் அவசியமானது. அலைகள் பல இருக்கின்றன. அவ்விதம் உயிர்கள் பல இருக்கின்றன. அவைகள் படைத்துள்ள உபாதிகளை முன்னிட்டே அவைகளைப் பல உயிர்கள் என்கின்றோம். கடவுளை வழிபடாதிருத்தல் என்பதன் பொருள் தன்னுடைய மெய்யான நிலையை அறிந்துகொள்ள முயற்சி செய்யாது இருத்தல் என்பதாகிறது. அப்படி முயற்சி செய்யாதிருந்தால் அந்த ஜீவன் யாண்டும் அக்ஞான நிலையிலேயே இருப்பான். அக்ஞானத்தில் இருக்கும் வரையில் பிறவிப் பிணியும் அதினின்று வருகின்ற ஏனைய துன்பங்களும் ஜீவனை வாட்டிக்கொண்டே

இருக்கும். சூரியனும் சூரிய கிரணங்களும் எப்படித் தொடர்பு கொண்டிருக்கின்றனவோ அப்படிக் கடவுளும் உயிர்களும் தொடர்பு கொண்டிருக்கின்றன. கடலும் அலைகளும் எப்படி தொடர்பு கொண்டிருக்கின்றனவோ அப்படிக் கடவுளும் உயிர்களும் தொடர்பு கொண்டிருக்கின்றன. சூரியனுக்கு அந்நியமாகக் கிரணங்கள் இருக்கமாட்டா. கடலுக்கு அந்நியமாக அலைகள் இருக்கமாட்டா. அங்ஙனம் கடவுளுக்கே அந்நியமாக உயிர்கள் இருக்கமாட்டா.

கேள்வி: *(72)* கடவுள் ஒருவர், அவரை அடைய வழிகள் பல. எந்தச் சமயத்தின் வாயிலாகவும் கடவுளை அடையலாம். உண்மை இவ்வாறாகத் திருநாவுக்கரசர் சமயம் மாறியது பொருந்துமா? இந்நிகழ்ச்சியில் கடவுளும் தொடர்பு கொண்டது போன்று தென்படுகிறதே. அது எவ்வாறு பொருந்தும்?

பதில்: உணவு வகைகள் அனைத்தும் உடலைப் பேணு கின்றன. ஆனால் ஓர் உடலுக்கு ஒத்துக்கொள்ளும் உணவு மற்றோர் உடலுக்கு ஒத்துக்கொள்ள முடியும் என்பது உண்மையன்று. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். வனத்தில் வாழும் விலங்குகளுள் யானையும் சிங்கமும் மேலாம் மிருகங் கள். ஆனால் யானையின் உணவு சிங்கத்துக்குப் பொருந்தாது. சிங்கத்தின் உணவு யானைக்குப் பொருந்தாது. அதே கோட்பாடு சமயங்களுக்கும் பொருந்தும்.

திருநாவுக்கரசு சுவாமிகள் பக்தி மார்க்கத்தில் ஊறியவர். அத்தகைய பரம்பரையில் வந்தவர். பக்தனொருவனுக்குப் பரமனைச் சார்ந்து இருப்பது முற்றிலும் அவசியம். பரமனைப் புறக்கணித்து வாழ்கிற வாழ்வு பக்தனுக்குப் பொருளற்றது. ஆராய்ச்சி பண்ணுகிற முறையில் திருநாவுக்கரசு சுவாமிகள் சைவ நெறியை ஒதுக்கி வைத்துவிட்டு ஜைனமத அனுஷ்டானத்தில் இறங்கினார். மூர்த்தி உபாசனைக்கு ஜைன மதத்தில் இடம் இல்லை. கடினமான தபசுக்கு ஆங்கு இடமுண்டு. தபத்தின் வாயிலாகச் சாதகன் ஒருவன் தன்னுடைய ஜீவ வியக்தியைப் படிப்படியாகப் பண்படுத்துவது ஜைன மதத்தின் கோட்பாடு. அதை முறையாக அனுஷ்டிக்கிறவர்கள்

ஜீவவியக்தியை முற்றிலும் திருத்தியமைக்க வல்லவர் ஆகின்றனர். நாளடைவில் அவர்கள் அர்ஹன் நிலையை எட்ட வல்லவரா கின்றனர். தீர்த்தங்கரர்கள் பலர் அங்ஙனம் குறியை அடைந்திருக் கின்றனர். ஆனால் திருநாவுக்கரசருடைய பாங்குக்கு அந்த முறை ஒவ்வாதது. சைவ சமயத்திற்குத் திரும்பி வந்தபிறகே அவருடைய பக்திப் பிரவாகங்களெல்லாம் மேலோங்கலாயின. பக்தனுக்கு அருள்புரிவதும் பக்தனோடு ஒட்டி உரையாடுவதும் பரமனுக்குப் பிரீதிகரமானது. நாவுக்கரச சுவாமிகளைச் சிவனார் தம் தொண்டனாக ஏற்றுப் பக்தியின் மகிமைகளையெல்லாம் வெளிப்படுத்தினார். ஜீவவியக்தியைத் துடைத்தல் பொருட்டுக் கடுந்தவம் புரிகின்றவர்களுக்கு அத்தகைய திருக்காட்சிகள் தேவையில்லை; திருக்காட்சிகளுக்கு இடமும் இல்லை. கடவுள் நம்பிக்கையில்லாதவர்களும் கடவுளைப்பற்றிய ஆராய்ச்சி ஒன்றும் செய்யாதவர்களும் நெறியான வாழ்க்கையின் வாயி லாகத் தங்கள் ஜீவவியக்தியைத் திருத்தமுடியும் என்னும் உண்மை பக்திமார்க்கத்தில் செல்பவர்களுக்கு விளங்காது. ஆதலால்தான் இவ்விரு சமயங்களுக்கிடையில் முரண்பாடு இருப்பது போன்று தென்படுகிறது. சரியாகத் தத்துவ விசாரம் செய்கிறவர்களுக்கு முரண்பாடு ஏதும் இல்லை. திருநாவுக்கரசு சுவாமிகள் தமக்கு உகந்த சைவசமயத்துக்குத் திரும்பி வந்தார். அதன் மூலம் அவர் மேன்மையுற்று மிளிர்ந்தார். அவர் அங்ஙனம் நடந்துகொண்டது முற்றிலும் சரி. ஆயினும் அவர் புறக்கணித்த ஜைனமதம் ஜீவன் ஒருவன் கடைத்தேறுதற்கு ஒவ்வாதது என்று கூறலாகாது. ஜைனமதப் பாங்குடைய ஆத்ம சாதகர்கள் ஜைன மதத்தின் வாயிலாகவே தங்கள் ஜீவ வியக்தியை மாற்றியமைக்க முடியும். ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு போக்கில் ஜீவாத்மனுடைய ஜீவவியக்தியைச் செப்பனிடுகிறது. ஒரு பெரிய மாளிகையினுள் நுழைவதற்குப் பலதரப்பட்ட பல வாயில்கள் இருக்கின்றன. அங்ஙனம் முக்திக்கு உபாயங்கள் பல உள.

கேள்வி: *(73)* தேவார திருவாசகங்களில் பல இடங்களில் சிவ பரஞ்சுடரை "மூவராலும் அறியொணாத முதல்வன்", "மூவர் அறியாச் சேவடியான்" என்று கூறும்

வாக்கியங்கள் காணப்படுகின்றன. இதேபோல் ஆழ்வார் களும் கண்ணபிரானைக் கூறுகின்றார்கள். இன்னும் பாகவத புராணத்தில் "கிருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம்" என்று காணப்படுகிறது. அதாவது கிருஷ்ண பரமாத்மா மூவர்க்கு முதல்வன் என்று பொருள்படுகிறது. பரவஸ்து இரண்டாக இருக்க முடியுமா? கண்ணபிரான் பரம்பொருளா, அல்லது சிவன் பரம்பொருளா? இருவரும் ஒருவர் ஆனால் இரண்டு மாறுபட்ட வாசகங்களின் கருத்தை விளக்க வேண்டுகிறேன்.

பதில்: முழுமுதற்பொருள் ஒருவரே. இரண்டு நிறை பொருள்கள் இல்லை. ஏகமாய் உள்ள ஒரு முழுமுதற்பொரு ளுக்குச் சமயங்கள் தத்தம் இயல்புக்கு ஒத்த பெயர்களை வழங்கியிருக்கின்றன. முழுமுதற்பொருளைச் சிவம் என்று செப்புவதே சைவசமயத்தின் போக்கு. முழுமுதற்பொருளைக் கண்ணன் என்று கூறுவது வைஷ்ண சமயத்தின் போக்கு. இவ்விரண்டு பெயர்களுள் எப்பெயரை அப்பெரிய பொருளுக்கு வழங்கினாலும் பொருந்தும். இரண்டு முழுமுதற்பொருள்கள் இல்லையென்னும் அடிப்படை உண்மையை நாம் மறந்து விடலாகாது.

மும்மூர்த்திகளும் சிவபெருமானை முற்றிலும் அறிந்து கொள்ள முடியாது என்று சைவசமய ஆசாரியர்கள் பகர்வதில் பொருள் இருக்கிறது. மும்மூர்த்திகளுக்குப் பரந்த பாங்கில் ஜீவவியக்தி இருக்கிறது. கடல் முழுதையும் எங்ஙனம் அலை ஒன்று அறிந்துகொள்ள முடியாதோ அதே பாங்கில் முழுமுதற் பொருளை ஜீவவியக்தி படைத்துள்ள பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் அறிந்துகொள்ள முடியாது. இனி, வைஷ்ணவர்கள் மொழிகிற முழுமுதற்பொருளாகிய கண்ணனை முற்றிலும் அறிந்துகொள்ள அரனுக்கும் அயனுக்கும் இயலாது என்ற கொள்கையும் அதே கருத்தைத்தான் விளக்குகிறது. அவரவர் சமயத்துக்கு ஒத்தபாங்கில் இருதரத் தாரும் ஒரே தத்துவத்தைப் பற்றிப் பகர்ந்திருக்கின்றனர்.

எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான பாங்கில் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் இக்கோட்பாட்டை விளக்குகிறார். எல்லை காணாத பாகுக்கடல் ஒன்று இருந்தது. கடலி லிருந்த பாகு முழுதையும் பருக ஒரு எறும்பு தீர்மானம்

செய்தது. அது கடலை நோக்கி ஊர்ந்து சென்றது. கடற்கரை முழுதும் பாகில் நனைந்து கிடந்தது. பாகில் நனைந்திருந்த மணல் துண்டு ஒன்றை நக்கி எறும்பு வயிற்றை நிறைத்துக் கொண்டது. அதற்குமேல் அருந்த அதற்கு இயலவில்லை. மற்றொரு மணல் துண்டின்மீது ஒட்டியிருந்த பாகைத் தன் வாயில் நிரப்பிக்கொண்டு அது வளையை நோக்கிச் சென்றது. அதற்குமேல் பாகுக் கடலுக்குள் செல்லவோ, அதை எடுத்து விழுங்கவோ அந்த நுண்ணிய ஜந்துவுக்கு எங்ஙனம் சாத்தியமாகும்? அகண்ட சச்சிதானந்தம் பாகுக்கடல் போன்றது. அதை ஆழம் பார்க்க முயலும் மும்மூர்த்திகளும், முனிவர்களும் எறும்பு போன்றவர்கள்.

கேள்வி: (74) இறைவனை அடைவதற்கு ஆன்றோர்கள் கூறியுள்ள மார்க்கங்களில் முரண்பாடு இருந்தால் எதைச் சரியானதென்று ஏற்பது? பொருந்தாதது என்று எதைத் தவிர்ப்பது? பொருந்தியது, பொருந்தாதது என்று எப்படிக் கண்டுபிடிப்பது?

பதில்: மார்க்கங்களைப் பற்றிய விரிவான விளக்கங்கள் ஏற்கனவே வந்துள்ளன. அந்த விளக்கங்கள் அங்கீகரிப்பட்டுள்ள சாஸ்திரங்களுள் அமைந்துள்ளன. பிரஸ்தானத்ரயத்தையே முடிவான சாஸ்திரங்களென்று இந்து மத ஆச்சாரியர்கள் அங்கீகரித்திருக்கின்றனர். உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரங்கள், பகவத்கீதை ஆகிய இந்த மூன்றுக்கும் பிரஸ்தானத்ரயம் என்று பெயர். அங்கீகரிக்கப்பட்டுள்ள மூன்று நூல்கள் என்பது அதன் பொருள். இம் மூன்றனுள் உபநிஷதங்களே ஆதி நூல்கள் ஆகின்றன. பழங்காலத்து ரிஷிகள் அனுபூதியில் கண்டறிந்த உண்மைகளை விளக்கினார்கள். அவர்களுடைய விளக்கம் உபநிஷதங்கள் ஆகின்றன. உபநிஷதங்களில் பிழையில்லையென்பது ஆன்றோர்களுக்கு ஒப்ப முடிந்த முடிவு ஆகும். அந்த உபநிஷதங்களின் உட்கருத்துக்களைப் பாகுபடுத்திப் பகரும் நூலுக்குப் பிரம்ம சூத்திரங்கள் என்று பெயர். வேதாந்த சூத்திரங்களென்றும் அவைகளைக் கூறுவதுண்டு. உபநிஷதங்களிலுள்ள உட்கருத்துக்களைத் தெளிவுபடுத்தியது பகவத்கீதை. ஆக, இம் மூன்றனுள், பகவத்கீதையே பொது

மக்களுக்கு நன்கு விளங்கக்கூடிய பொது நூலாக அமைந்திருக்கிறது. யார் எந்த மார்க்கத்தை எடுத்துப் புகட்டினாலும் அது பகவத்கீதைக்கு ஒத்ததாயிருக்கிறதாவென்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒவ்வாததைத் தத்துவத்துக்குப் பொருந்தாததென்று ஒதுக்கி வைத்துவிடலாம்.

பகவத்கீதையில் முறையாக நான்கு யோகங்கள் விளக்கப் பெறுகின்றன. அவைகள் முறையே கர்மயோகம், இராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்று அழைக்கப்படுகின்றன. இந்த நான்கு யோகங்களுள் உலகிலுள்ள ஆத்ம சாதனங்களத் தனையும் அடங்கி விடுகின்றன. எக்காலத்தில் எத்தகைய பரமாச்சாரியர் தோன்றி எங்ஙனம் புகட்டினாலும் அவர்களுடைய போதனை பகவத்கீதையில் அடங்கியிருக்கிற இந்த நான்கு யோகங்களோடு முரண்படாது இருக்க வேண்டும். முரண்படுகிற பகுதியை ஐதிகத்துக்கொவ்வாதது என்று நாம் துணிந்து புறக்கணிக்கலாம். இந்த நான்கு யோகங்களுள் கர்மயோகமும், ராஜயோகமும் ஒன்று சேர்ந்து மனிதனுடைய ஆற்றலை வளர்க்கின்றன. இராஜயோகத்துக்கென்று தனியாக அமைந்துள்ள சாஸ்திரம் பதஞ்சலி முனிவர் இயற்றிய யோக சூத்திரங்கள் என்னும் பெயர் பெறுகிறது. ஆக, இந்த நூலும் ஆன்றோர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சாஸ்திரமாம். அடுத்தபடியாகப் பக்தியோகத்தை நாரத மகரிஷி இயற்றியதால் அது பக்தியோக சூத்திரங்கள் என்னும் பெயர்பெறுகிறது. இந்த நூல் பக்திக்குச் சிறந்த பிரமாணமாகிறது. இனி, ஞானயோகத்துக்கு ஏற்கனவே இயம்பியுள்ள பிரம்ம சூத்திரங்கள் சிறந்த பிரமாணமாகிறது. ஆக, இந்த நூல்களை ஆதாரமாக வைத்துக் கொண்டே மற்ற மதாச்சாரியர்களுடைய போதனைகளை நாம் துருவி ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஆராய்ச்சிக்கு நாம் தகுதியற்றவர்களாயிருந்தால் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஈண்டு இயம்பியுள்ள நூல்களினின்று நமக்கு விளங்குகிற பகுதிகளை எடுத்துச் சாதனத்துக்குக் கொண்டுவரலாம். இறைவனைச் சார்ந்திருந்த உள்ளன்போடு சாதனத்தில் ஈடுபட்டால், நமக்கு மனத்தெளிவு உண்டாகிறது. மனத்தெளிவுக்கேற்ப நாளடைவில் சாஸ்திரத்தில் விளங்காத பகுதிகளும் நமக்கு விளங்குவனவாகின்றன. பிறகு

இதைச் சார்ந்து ஏனைய மதாச்சாரியர்களுடைய நூல்களிலும் நாம் வேண்டியவாறு ஈடுபடலாம். அப்பொழுது வழிதவறிப் போவதற்கு இடமில்லை.

கேள்வி: *(75)* அதர்மத்தை அகற்றுதற்குப் பகவான் ஏன் மானுடனாகப் பிறக்கவேண்டும்? மக்களைக் கொண்டே மக்களைத் திருத்தியமைத்துக் கொள்ளலாம் அல்லவா?

பதில்: அடிப்படைக் கோட்பாடு ஒன்றை இங்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மக்கள் வேறு, பகவான் வேறு என்பது உண்மையன்று. பகவான் தாமே மக்களாக வடிவெடுத்து இலங்கிக்கொண்டு இருக்கிறார். 'உலகனைத்தும் ஆனாய் நீயே' என்பது ஆப்த வாக்கியம். உலக நடைமுறையை ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு படித்தரத்திலும் குறைநிலை நிறைநிலையாகத் திருந்தியமைவதின் காட்சியைக் காணலாம். மரம் ஒன்றின் பட்டையின் சிறுபகுதியை வெட்டியெடுத்தால் அப்பகுதியை மரம் தானே திருத்தியமைத்துக் கொள்கிறது. இது இயற்கையின் கூறு. ஆராய்ச்சியின் மூலம் மனிதன் சிறுமையைக் களையவும் மேன்மையைக் கடைப்பிடிக்கவும் செய்து வருகிறான். இது ஒருபுறம் இருக்கச் சிறுநெறியில் செல்லுகிற மக்களைப் பெருநெறியில் நடாத்துதற்கு மானுடர்க்கிடையில் அதிகாரவர்க்கம் தானாக அமைகிறது. பள்ளியில் படிக்கிற சிறுவர்களுள் துஷ்டத்தனம் பண்ணுகின்றவனை ஆசிரியர் திருத்தியமைத்து நல்வழிக்குக் கொண்டு வருகிறார். களவும் கொலையும் புரிகின்ற துஷ்டர்கள் மீது நடவடிக்கை எடுத்து அரசாங்கம் அவர்களைத் திருத்தியமைக்கிறது. சட்ட திட்டத்தின் வாயிலாக மக்களை நல்வழியில் நடாத்துவது சமுதாயத்தின் பாங்கு ஆகிறது. இந்த அளவில் சமுதாயத்திலுள்ள மக்கள் தங்களுடைய சொந்த முயற்சியைக் கொண்டே சிறுநெறியினின்று விலகியும் பெருநெறியைக் கடைப்பிடித்தும் வருகின்றனர். இதற்கு அவதாரமூர்த்தி அவசியமில்லை. ஆனால் சமுதாயம் முழுதுமே பெரிதும் நெறிபிறழ்ந்து போகின்ற தருணம் ஒன்று வருகின்றது. அத்தருணத்தில் ஆற்றலும், அறிவும் படைத்த மூர்த்தி ஒருவர் தோன்றி வந்து அச்சமுதாயம் முழுதையும் நல்வழிக்குக் கொண்டுவர முயலுகிறார். அதன்

பொருட்டுச் சமுதாயத்தின் ஒரு பகுதியை ஒடுக்குதல் அவசிய மானால் யுத்தத்தின் வாயிலாக அந்தச் சம்ஹாரத் தொழிலையும் பகவான் செய்து வருகிறார். மஹாபாரதப் போராட்டம் இதற்குச் சான்றாக வந்து அமைகிறது. இன்னும் சில வேளைகளில் அவதார மூர்த்தியின் அவசியமில்லாது அரசாங்கங்களே ஒன்றோடொன்று போர்புரிந்து தங்களிடத்துள்ள குறை நிலையை நிறை நிலையாகத் திருத்தியமைத்துக் கொள்ளு கின்றன. ஆதலால் சமுதாயம் தன்னைத் தானே தரும நெறியில் திருத்தியமைத்துக் கொள்ளும் செயல் சர்வகாலமும் நிகழ்ந்து வருகிறது. எப்பொழுதெல்லாம் பெரிய மூர்த்தி ஒருவர் தோன்றி வந்து இந்தத் திருத்தத்தைச் செய்து அமைப்பது அவசியமோ அப்பொழுதெல்லாம் அவதார மூர்த்தி ஒருவர் உருவெடுத்து வருவதும் இயற்கையின் பாங்கு ஆகும். சுருங்கச் சொல்லின் அவதார மூர்த்திகளின் தோற்றம் அரிதிலும் அரிதாகச் சில யுகங்களுக்குப் பிறகு ஒருதடவை நிகழ்கிறது. மற்று, தங்களைத் தாங்களே திருத்தியமைத்துக் கொள்ளும் நல்ல முயற்சிகளை அறிவுடையவர் காலமெல்லாம் செய்து வருகின்றனர்.

கேள்வி: *(76)* மனிதன் ஏக காலத்தில் தன் செயல் களுக்குக் கர்த்தாவாகவும் சாட்சியாகவும் இருக்க முடியுமா?

பதில்: ஜீவாத்மன் கர்மசொரூபம். தான் செய்கின்ற செயல்களுக்குத் தன்னைக் கர்த்தாவாக எண்ணுகின்றவன் ஜீவாத்மா. ஆசை வடிவினனாக ஜீவாத்மன் இருக்கின்றான். தன்னுடைய ஆசைகளை நிறைவேற்றுவதற்கு அவன் எண்ணி றந்த பிறவிகளை எடுக்கின்றான். அந்தந்த ஆசைக்கேற்ற சரீரங்களையும் அவன் எடுத்துக் கொள்கின்றான். ஸ்தாவர மாயிருக்கிற ஜீவன் அதற்கேற்ற உடலை மரம், செடி, கொடிகளாக எடுக்கிறது. அது ஜங்கமமாகப் பரிணமிக்கிற பொழுது புழு, பூச்சி போன்ற வடிவங்களை எடுக்கிறது. ஆசையில் இன்னும் மேலே போகின்ற பொழுது பறவைகளின் வடிவங்களை அது எடுக்கிறது. அதற்கு அடுத்தபடியாக அது விலங்குகளின் வடிவங்களை எடுத்துக்கொள்ளுகிறது. கடைசி யாக அது மானுட நிலையை எட்டுகிறது. உயிர் வகைகளுள்

மனிதனுக்குத்தான் ஆசைகள் அதிகம். அதற்கேற்றவாறு அவனுடைய பிறவிகளும் பெருகிக்கொண்டே போகின்றன. பல பிறவிகளில் இன்ப துன்பங்களை அனுபவித்தான பிறகு பிரபஞ்ச வாழ்க்கையில் அவனுக்குச் சலிப்புத் தட்டுகிறது. பிரபஞ்ச வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட நிலை ஒன்று இருக்கு மாகில் அதை எட்டுதற்கு அவன் எண்ணம் கொள்ளுகிறான். அப்பொழுது அவன் யோகசாதனத்தைக் கையாளத் தகுதி உடையவனாகின்றான்.

யோகசாதனமானது கர்மயோகமாக வடிவெடுக்கிறது. ஜீவாத்மன் தனக்கெனச் செய்யும் செயல்களை ஈசனுக்குரிய வைகள் எனக் கருதித் தனது மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டும். ஈசனுக்காகப் பணிவிடை பண்ணுகிற வனுக்குத் தன்னைக் கர்த்தா என்று எண்ணும் எண்ணம் மறைந்துபட்டுப் போகிறது. செயல் நிகழுதற்கிடையில் அதற்குத் தான் கர்த்தா என்கின்ற எண்ணம் இந்த மனநிலையின் விளைவாகப் படிப்படியாக அடிபட்டுப் போகிறது. ஈசனுடைய கிருத்தியம் ஈசனுடைய அருளால் ஈசனுடைய கருவிகளால் நிறைவேற்றப்படுகின்றன எனக் கருதுகிறவன் தன் செயலுக்குத் தானே சாட்சியாகின்றான். ஈசனுடைய கருவியாகத் தன்னைக் கருதுவதால் செயலுக்குத் தான் கர்த்தா அல்ல என்கின்ற எண்ணமும் செயலை ரசிக்கிற சாட்சியின் நிலையும் ஏககாலத்தில் நிகழ்கின்றன.

உலகக் கிருத்தியங்கள் பலவற்றில் மனிதன் தன்னை யறியாது இந்தப் பெரிய நிலையை அடையப் பெறுகிறான். சைக்கிள் வண்டி ஓட்டிப் பழகுகின்றவன் முதலில் அச்செயலுக் குத் தன்னைக் கர்த்தாவாக உணருகிறான். நன்றாகப் பயின்றான பிறகு அச்செயல் தானாக நிகழுகிறது. பாதையில் வண்டிகளைச் செலுத்துகிற சட்டதிட்டங்களும் நன்கு அனுஷ்டிக்கப்படுகின்றன. அச்செயல்களுக்கு அவன் தானே சாட்சியாக இருந்துகொண்டு ரசிக்கிறான். இப்பரிபாகம் இன்னிசைக் கருவிகள் பயிலுகிறவர் களுக்கும் நாளடைவில் வந்து அமைகிறது. திறமை வாய்ந்த மேடைப் பேச்சாளன் முதலில் இன்னின்ன விஷயங்களை இன்னின்ன பாங்கில் எடுத்து விளக்கவேண்டும் எனத் திட்ட மிட்டுப் பயிலுகின்றான். அப்படிப் பயிலுகின்றபொழுது

தன்னுடைய பேச்சுக்கு அவன் கர்த்தாவாக இருக்கிறான். பேச்சுத்திறமை மேன்மையடையும்பொழுது நல்ல பேச்சுக்கள் பேசுபவனுடைய முயற்சியின்றியே வந்தமைகின்றன. தன் மூலம் நிகழுகிற நல்ல பேச்சுக்களுக்குத் தானே சாட்சியாயிருந்து பிறகு அவைகளை ரசிக்கவும் செய்கிறான். ஆதலால் பயிற்சியின் விளைவாகவும் கர்மயோக பரிபாகத்தின் விளைவாகவும் செயல் களுக்குரிய கர்த்ருத்வம் மறைந்துபட்டுப் போகிறது. பேசுபவன் கேட்பவனுடைய நிலையில் தன்னை வைத்துக்கொண்டு பேச்சை ரசிப்பதும் சாத்தியமாகிறது. இங்ஙனம் கர்மயோகி தன் செயலுக்குத் தானே சாட்சியாக அமைகிறான்.

கேள்வி: *(77)* எத்தகைய குற்றத்திற்கும் இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால் அவன் அருள் செய்வான்; தெய் வத்தின் முன்னிலையில் தவறு செய்யலாகாது - இவை முரண்பாடுகள் அல்லவா? எப்படிப் பொருள்படுத்துவது?

பதில்: 'அறம் செய விரும்பு' என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் அந்த விருப்பம் எல்லார்க்கும் உண்டாவதில்லை. ஆகையினால்தான் அந்த விருப்பத்தை உண்டுபண்ணி அதை வளர்க்க வேண்டும் என்னும் கோட்பாடு வந்துள்ளது. சைக்கிள் என்னும் உந்துவண்டி ஓட்டிப் பழகுகிறவன் ஆரம்ப தசையில் தன் வண்டியை ஒரு குழிக்குள் ஓட்டலாகாது என்னும் சங்கல்பம் பண்ணுகிறான். ஆயினும் தான் எண்ணிய எண்ணப்படி நடந்துகொள்ள அவனுக்கு இயலுவதில்லை. எண்ணிக்கொண்டிருப்பதற்கிடையிலேயே, தன் வண்டியை ஒரு குழியினுள் ஓட்டித் தானும் கீழே வீழ்கிறான். அவன் எண்ணிய எண்ணத்திற்கும் செய்த செயலுக்குமிடையில் முரண்பாடு இருக்கிறது. ஆனால் இந்த முரண்பாட்டை மீளுதல்தான் வாழ்க்கைப் பயிற்சி. தவறு செய்ய வேண்டுமென்று யாரும் விரும்புவது இல்லை. ஆயினும் மக்கள் எல்லாரும் ஏதாவது தவறுகளைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். The Spirit is willing but the flesh is weak. நலத்தில் நிலைத்திருக்க வேண்டும் எனும் அவா எல்லார் உள்ளத்திலும் இருந்து வருகிறது. இந்த விருப்பத்திற்கிடையில் நெறிவழுவிப்போவது மனிதனிடத் துள்ள சிற்றியல்பின் கூறு ஆகும். கீழ்மையை அகற்றி

நலத்தில் நிலைபெற்றிருப்பதுதான் வாழ்க்கையின் மேலாம் குறிக்கோள். பலதடவைகளில் நெறிவழுவிப் பிறகு நெறியில் நிலைபெறுவதுதான் வாழ்க்கையில் எல்லார்க்கும் அமைந்துள்ள போக்கு ஆகும். ஆகவே நெறிவழுவுதற்கும் நெறியில் நிலைத் திருப்பதற்குமிடையில் முரண்பாடு இல்லை. செய்த குற்றத்திற்கு மனமார வருந்தி மீண்டும் அக்குற்றத்தைச் செய்வதில்லை என்று இறைவனிடம் மன்னிப்புக் கேட்பதன் வாயிலாகக் குற்றம் செய்தவன் திருந்தி அமைகிறான். சிறு குழந்தை ஒன்று எழுந்து நின்று நடக்க முயலுகிறது. ஆனால் பல தடவைகளில் அது வீழ்கிறது. வீழ்வதை முன்னிட்டுக் குழந்தை தன் முயற்சியை நிறுத்துவதில்லை. உடல் உறுதிபெற்றான பிறகு குழந்தை வீழ்வதில்லை. உடலில் உறுதியைப் பெறுவதை விட மிகக் கஷ்டமானது உள்ளத்தில் உறுதிபெறுவது. சான்றோர்கள் உட்பட எல்லாரும் உள்ளத்தில் உறுதிபெற முயலுகின்றனர். ஒரு சிலர் அம்முயற்சியில் அதிவிரைவில் வெற்றி காண்கின்றனர். மற்றவர்கள் நெடுங்காலம் எடுத்துக் கொள்கின்றனர். அதன் பிறகாவது உள்ளத்தில் உறுதிபெற்று எண்ணியதை எண்ணியாங்கு சாதிக்கும் திறமை வந்தமைகிறது. ஆகவே முயற்சிக்கும், தோல்விக்குமிடையில் முரண்பாடு இல்லை. ஒவ்வொரு தோல்வியையும் தெய்வத்திடம் தெரிவிப்பதன் வாயிலாக மானுடன் ஒருவன் படிப்படியாக உள்ளத்தில் உறுதிபெற்று வருகிறான். இதுவே வாழ்க்கையின் குறிக்கோளாம்.

கேள்வி: *(78)*"நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒரு தோண்டி அதைக்
கூத்தாடிக் கூத்தாடிக் போட்டு
உடைத்தாண்டி" - இந்தப் பாடலின்
விளக்கம் யாது?

பதில்: நந்தவனம் என்னும் சொல் இந்தப் பிரபஞ்சத்தைக் குறிக்கிறது. பிரளயத்துக்குப் பிறகு வருகிற பிரளயங்களில் அது அழிந்துபட்டுப் போகாதிருப்பதால் அதற்கு நந்தவனம் என்னும் பெயர் வந்துள்ளது. பரிணாமத்தின் பொருட்டும், பயிற்சியின் பொருட்டும் ஜீவாத்மாக்கள் இந்த நந்தவனத்துக்கு

தன்னுடைய பேச்சுக்கு அவன் கர்த்தாவாக இருக்கிறான். பேச்சுத்திறமை மேன்மையடையும்பொழுது நல்ல பேச்சுக்கள் பேசுபவனுடைய முயற்சியின்றியே வந்தமைகின்றன. தன் மூலம் நிகழுகிற நல்ல பேச்சுக்களுக்குத் தானே சாட்சியாயிருந்து பிறகு அவைகளை ரசிக்கவும் செய்கிறான். ஆதலால் பயிற்சியின் விளைவாகவும் கர்மயோக பரிபாகத்தின் விளைவாகவும் செயல் களுக்குரிய கர்த்ருத்வம் மறைந்துபட்டுப் போகிறது. பேசுபவன் கேட்பவனுடைய நிலையில் தன்னை வைத்துக்கொண்டு பேச்சை ரசிப்பதும் சாத்தியமாகிறது. இங்ஙனம் கர்மயோகி தன் செயலுக்குத் தானே சாட்சியாக அமைகிறான்.

கேள்வி: *(77)* எத்தகைய குற்றத்திற்கும் இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால் அவன் அருள் செய்வான்; தெய் வத்தின் முன்னிலையில் தவறு செய்யலாகாது - இவை முரண்பாடுகள் அல்லவா? எப்படிப் பொருள்படுத்துவது?

பதில்: 'அறம் செய விரும்பு' என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் அந்த விருப்பம் எல்லார்க்கும் உண்டாவதில்லை. ஆகையினால்தான் அந்த விருப்பத்தை உண்டுபண்ணி அதை வளர்க்க வேண்டும் என்னும் கோட்பாடு வந்துள்ளது. சைக்கிள் என்னும் உந்துவண்டி ஓட்டிப் பழகுகிறவன் ஆரம்ப தசையில் தன் வண்டியை ஒரு குழிக்குள் ஓட்டலாகாது என்னும் சங்கல்பம் பண்ணுகிறான். ஆயினும் தான் எண்ணிய எண்ணப்படி நடந்துகொள்ள அவனுக்கு இயலுவதில்லை. எண்ணிக்கொண்டிருப்பதற்கிடையிலேயே, தன் வண்டியை ஒரு குழியினுள் ஓட்டித் தானும் கீழே வீழ்கிறான். அவன் எண்ணிய எண்ணத்திற்கும் செய்த செயலுக்குமிடையில் முரண்பாடு இருக்கிறது. ஆனால் இந்த முரண்பாட்டை மீளுதல்தான் வாழ்க்கைப் பயிற்சி. தவறு செய்ய வேண்டுமென்று யாரும் விரும்புவது இல்லை. ஆயினும் மக்கள் எல்லாரும் ஏதாவது தவறுகளைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். The Spirit is willing but the flesh is weak. நலத்தில் நிலைத்திருக்க வேண்டும் எனும் அவா எல்லார் உள்ளத்திலும் இருந்து வருகிறது. இந்த விருப்பத்திற்கிடையில் நெறிவழுவிப்போவது மனிதனிடத் துள்ள சிற்றியல்பின் கூறு ஆகும். கீழ்மையை அகற்றி

நலத்தில் நிலைபெற்றிருப்பதுதான் வாழ்க்கையின் மேலாம் குறிக்கோள். பலதடவைகளில் நெறிவழுவிப் பிறகு நெறியில் நிலைபெறுவதுதான் வாழ்க்கையில் எல்லார்க்கும் அமைந்துள்ள போக்கு ஆகும். ஆகவே நெறிவழுவுதற்கும் நெறியில் நிலைத்திருப்பதற்குமிடையில் முரண்பாடு இல்லை. செய்த குற்றத்திற்கு மனமார வருந்தி மீண்டும் அக்குற்றத்தைச் செய்வதில்லை என்று இறைவனிடம் மன்னிப்புக் கேட்பதன் வாயிலாகக் குற்றம் செய்தவன் திருந்தி அமைகிறான். சிறு குழந்தை ஒன்று எழுந்து நின்று நடக்க முயலுகிறது. ஆனால் பல தடவைகளில் அது வீழ்கிறது. வீழ்வதை முன்னிட்டுக் குழந்தை தன் முயற்சியை நிறுத்துவதில்லை. உடல் உறுதிபெற்றான பிறகு குழந்தை வீழ்வதில்லை. உடலில் உறுதியைப் பெறுவதை விட மிகக் கஷ்டமானது உள்ளத்தில் உறுதிபெறுவது. சான்றோர்கள் உட்பட எல்லாரும் உள்ளத்தில் உறுதிபெற முயலுகின்றனர். ஒரு சிலர் அம்முயற்சியில் அதிவிரைவில் வெற்றி காண்கின்றனர். மற்றவர்கள் நெடுங்காலம் எடுத்துக் கொள்கின்றனர். அதன் பிறகாவது உள்ளத்தில் உறுதிபெற்று எண்ணியதை எண்ணியாங்கு சாதிக்கும் திறமை வந்தமைகிறது. ஆகவே முயற்சிக்கும், தோல்விக்குமிடையில் முரண்பாடு இல்லை. ஒவ்வொரு தோல்வியையும் தெய்வத்திடம் தெரிவிப்பதன் வாயிலாக மானுடன் ஒருவன் படிப்படியாக உள்ளத்தில் உறுதிபெற்று வருகிறான். இதுவே வாழ்க்கையின் குறிக்கோளாம்.

**கேள்வி: *(78)*"நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒரு தோண்டி அதைக்
கூத்தாடிக் கூத்தாடிக் போட்டு
உடைத்தாண்டி" - இந்தப் பாடலின்
விளக்கம் யாது?**

பதில்: நந்தவனம் என்னும் சொல் இந்தப் பிரபஞ்சத்தைக் குறிக்கிறது. பிரளயத்துக்குப் பிறகு வருகிற பிரளயங்களில் அது அழிந்துபட்டுப் போகாதிருப்பதால் அதற்கு நந்தவனம் என்னும் பெயர் வந்துள்ளது. பரிணாமத்தின் பொருட்டும், பயிற்சியின் பொருட்டும் ஜீவாத்மாக்கள் இந்த நந்தவனத்துக்கு

வந்து கொண்டேயிருக்கிறார்கள். அப்படி வருகிறவர்கள் வந்த வரவை மறந்து விடுகிறார்கள். இது அவர்களுக்குச் சாஸ்வத மான இருப்பிடம் என்று மனக்கோட்டை கட்டுகின்றனர். உண்மையில் ஜீவர்கள் இடம் மாறிப் போய்க்கொண்டேயிருக் கின்றனர். அவர்களுக்கு ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. பிரபஞ்ச வாழ்வு நீர்க்குமிழி போன்று நிலையற்றது என்பதை அவர்கள் நினைவில் கொள்வதில்லை. ஆயினும் முன் எச்சரிக்கை இன்றியே இவ்வுலகினின்று வெளியேற்றப் படுகின்றனர். ஆதலால் ஜீவன் ஒருவன் ஆண்டி என ஈண்டு இயம்பப்படுகிறான். ஆண்டிக்குச் சொந்த இடம் கிடையாது. எங்கெங்கேயோ இடம் மாறி அவன் போய்க்கொண்டிருக்கிறான். பிரம்மதேவன் என்னும் குயவன் அந்தந்த ஜீவனுடைய கர்மத்துக்கு ஏற்ப உடல் ஒன்றை வனைந்து கொடுக்கின்றான். விந்துவினின்று மானுட உடல் வடிவெடுப்பதற்குப் பத்து மாதங்கள் ஆகின்றன. அக்கோட்பாடு நாலு ஆறு மாதமாக வேண்டி என்னும் வரியில் அடங்கியிருக்கிறது. மட்பாண் டங்கள் பலவற்றுள் தோண்டி என்பது ஒன்று. அது கிணற்றி னின்று நீர் சேந்துவதற்குப் பயன்படுகிறது. மட்பாண்டமாதலால் கிணற்றினின்று நீரைத் தாங்கிக்கொண்டு மேலே இழுக்கப் படுகிறபொழுதே அது உடைந்து போவதுண்டு. மானுட சரீரம் அதுபோன்று நிலையற்றது என்னும் கருத்து அதில் அடங்கியிருக்கிறது. பிரபஞ்சம் என்பது ஒரு நாடகமேடை. இதனுள் புதிய புதிய ஜீவர்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள். வயது சென்ற ஜீவர்கள் இதை விட்டு வெளியேறிக்கொண்டே இருக்கின்றனர். இங்கிருக்கும்பொழுது அவர்கள் வாழுகிற வாழ்வு கூத்தாட்டம் எனக் கூறப்படுகிறது. கூத்தாடிகள் விதவிதமான பாங்குடையவர்களாக இருக்கிறார்கள். பேரும் புகழுக்காகப் படாத பாடுபட்டு அலைந்து திரிவது மட்டும் எல்லாருடைய பான்மை ஆகிறது. இப்படியெல்லாம் வாழ்ந்து வருகிறவர்கள் திடீரென்று ஒருநாள் மரணத்துக்கு ஆளாகி மறைந்து போகின்றனர். வாழ்க்கையின் மேலான நோக்கத்தை அறிந்து கொள்ளாமையே அதற்குக் காரணமாகும். இந்த ஆழ்ந்த கருத்துக்களே மேற்கண்ட பாடலின் உட்கருத்து ஆகும்.

கேள்வி: (79) சிதம்பர ரகசியம் என்பது யாது?

பதில்: இரகசியம் என்பதில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று வியாபார சம்பந்தமானது. அதை Trade secret என்பார்கள். மற்றது தத்துவ விளக்க சம்பந்தமானது. சில பொருள்களை நல்லமுறையில் உற்பத்தி பண்ணுகிற விதம் யாரோ சிலர்க்குத்தான் தெரியும். மற்றவர்களுக்கு அதை அவர்கள் காட்டித் தரமாட்டார்கள். தாங்கள் உற்பத்தி பண்ணும் பொருள் நல்ல முறையில் நல்ல ஊதியத்துக்கு விற்கப்பட வேண்டும் என்னும் கருத்துடன் பொருள் உற்பத்தியை ரகசியமாக வைத்திருக்கிறார்கள். அது இவ்வுலக சம்பந்தமான ஊதியத்தின் பொருட்டுக் கையாளப்படுகிறது. ஆசையை அது அடிப்படையாகக் கொண்டது. அது பாராட்டத்தக்க ரகசியமன்று. சிதம்பர ரகசியமென்பது பரதத்துவ சம்பந்தமான மேலாம் கோட்பாடு. விளக்கினாலும் எல்லார்க்கும் அது பிடிபடாது. ஆதலால் அது ரகசியம் எனப்படுகிறது. சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். ஆத்மா அழிவற்றது என்பது பொதுமக்களுக்கு ரகசியம். ஆனால் அனுபூதி அடையப் பெற்றுள்ள ஞானிக்கு நண்பகல் போன்று அது வெட்டவெளியான உண்மை. சிதம்பர ரகசியம் என்பது இந்த கோட்பாட்டில் அடங்கியிருக்கிறது. பரவஸ்து சகுணப் பிரம்மமாகவும், நிர்க்குணப் பிரம்மமாகவும் இலங்குகிறது. சகுணப் பிரம்ம சொரூபமாக இருப்பதில்லை நடராஜா. ஆத்ம பரிபாகம் அடைந்துள்ள ஆத்ம சாதகர்கள் நடராஜ தத்துவத்தை அறிகிறார்கள். நடராஜாவின் சந்நிதிக்கு வலப்பக்கம் சிதம்பர ரகசியம் என்பது அமைக்கப் பெற்றிருக்கிறது. நடராஜாவுக்குப் பண்ணுகிற தீபாராதனை சிதம்பர ரகசியத்துக்கும் பண்ணப்படுகிறது. திரும்பவும் அதே தீபாராதனை நடராஜாவின் சந்நிதியில் வந்து பூர்த்தியாகிறது. மனபரிபாகம் அமைந்துள்ள ஆத்ம சாதகர்கள் நடராஜ தத்துவத்தை எளிதில் அறிந்து கொள்ளலாம். ஆனால் கருவி கரணங்களுக்கு எட்டாத பரசிவம் ஜீவாத்மாக்களுக்கு என்றைக்குமே எட்டாததாயிருக்கிறது. ஆதலால் அது சிதம்பர ரகசியம் எனப்படுகிறது. ஆத்மஞானிகளுக்குச் சிதம்பர ரகசியம் ஒன்றே வெட்ட வெளியாயிருக்கிற மெய்ப்பொருள். நடராஜ தத்துவம் உள்பட ஏனைய யாவும் சுத்த மனதுக்கு இலக்காகி

அந்த மனம் ஒடுங்குகிறவிடத்து அதற்கு இலக்காக அந்தக் காட்சியும் ஒடுங்கிப் போகிறது. ஆதலால் ஞானிகளுக்கு இரண்டாந்தரத்திலிருக்கும் நடராஜ தரிசனம் வியாவகாரிக ஸத் ஆகிறது. பாரமார்த்திக ஸத்தாயுள்ள சதாசிவம் அல்லது பரசிவம் அல்லது பரப்பிரம்மம் ஒன்றே நிர்விகாரமாய், நிராம யமாய், நிர்க்குணமாய் யாண்டுமுள்ள மெய்ப்பொருள். இவ் வுண்மை பரஞானம் அடையப்பெறாதவர்களுக்கு விளங்காது. ஆதலால் இது சிதம்பர ரகசியம் எனப்படுகிறது.

கேள்வி: *(80)* தபோவனப் பிரசுரங்களின் அட்டையில் அச்சிடப்பட்டிருக்கின்ற சின்னத்தின் கருத்து யாது?

பதில்: இந்தச் சின்னத்தின் வடிவைச் சீட்டாடுகிறவர்கள் கிளாவர் என்பார்கள். ஆங்கிலத்தில் அமைந்துள்ள (club) கிளப் என்னும் பதம் சீட்டாடுகிறவர்களுக்கிடையில் கிளாவர் எனத் திரிவுபட்டிருக்கிறது. கிளப் (club) என்னும் ஆங்கிலப் பதத்திற்கு நேர்பொருள் கதை. மஹாவிஷ்ணு தாங்கியிருக்கும் ஆயுதங்களுள் கதை ஒன்று. அதை முன்னிட்டே அவருக்குக் கதாதரன் என்னும் பெயர் வந்துள்ளது. கதையைத் தாங்கியிருப் பவன் என்பது அந்த நாமத்தின் பொருள். ஆக, இந்த வடிவம் மஹாவிஷ்ணுவைக் குறிக்கிறது. அதனுள் அமைந் திருக்கும் ஓங்காரம் சிவனாரைக் குறிக்கிறது. ஓங்காரேச்வரர் என்பது அவருக்கு அமைந்துள்ள நாமங்களில் ஒன்று. இந்தச் சின்னத்தின் கீழ்ப்பகுதியில் ஷட்சக்கரம் அமைந்திருக்கிறது. அது சண்முகக் கடவுளாகிய சுப்ரமணியரைக் குறிக்கிறது. மேல்பகுதியிலுள்ள சூரியன் சூரியநாராயணனுக்கு விளக்கமாக அமைந்திருக்கிறது. யானையின் முகம் கஜானனாகிய கணபதி யைக் குறிக்கிறது. சிம்ஹத்தின் முகம் சிம்ஹவாஹினியாகிய அம்பிகையைக் குறிக்கிறது. ஆக, ஹிந்து மதத்திலுள்ள ஆராதனைக்குரிய தெய்வங்களாக விளங்கும் விஷ்ணு, சிவன், சக்தி, குமரன், கணபதி, சூரியநாராயணன் ஆகிய ஆறு தெய்வங்களுக்கு இச்சின்னம் விளக்கமாகிறது.

அடுத்தபடி நான்கு யோகங்களுக்கும் விளக்கமாக இந்தச் சின்னம் அமைந்திருக்கிறது. ஆற்றலுக்கு அடையாளம் சிம்ஹம். அது கர்மயோகத்தைக் குறிக்கிறது. ஆறு ஆதாரங்களை

உடைய ராஜயோகத்துக்கு விளக்கமாக ஷட் சக்கரம் அமைந் திருக்கிறது. யானை தன் இனத்தில் பேரன்பு வைத்திருக்கிறது. ஆதலால் அது பக்தியோகத்துக்கு எடுத்துக்காட்டாக அமைந் திருக்கிறது. சூரியன் ஞானயோகத்தின் சின்னமாகும். சூரியன் உதயமானதும் பொருள்கள் எல்லாம் உள்ளபடி விளங்குகின்றன. அதே பாங்கில் ஞானம் உதயமாகும்பொழுது பிரபஞ்சத்தில் அமைந்துள்ள அனைத்தும் பரம்பொருள் சொரூபம் என்பது விளங்கும். ஆகவே பரம்பொருளின் சொரூபங்களாகிய ஆறு தெய்வங்களும் அதை அடைதற்கு உபாயமாக உள்ள நான்கு யோகங்களும் இந்தச் சின்னத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

கேள்வி: *(81)* இரசமணியின் ஸ்பரிசம் பட்டதும் இரும்புவாள் தங்கவாளாக மாறுகிறது. இனி அது வெட்டப் பயன்படுவதில்லை என்று பகவான் இராமகிருஷ்ணர் தம் போதனையில் கூறுகிறார். இரசமணி என்பது யாது?

பதில்: இரசமணிக்கு மற்றொரு பெயர் ஸ்பர்சவேதி. ஆங்கிலத்தில் இது The Philosopher's Stone என்னும் பெயர் பெற்றுள்ளது. இதன் உதவியைக் கொண்டு தாமிரம், இரும்பு போன்ற கீழான உலோகங்களைத் தங்கம், வெள்ளி ஆகிய மேலான உலோகங்களாக மாற்றியமைக்கலாம்.

இனி, பாரமார்த்திகப் பெருவாழ்வில் மானுடன் ஒருவன் பரஞானத்தைப் பெறுவானாகில் அவன் ஸ்பர்ச மணியால் அல்லது ஸ்பர்ச வேதியால் தீண்டப்பெற்றவன் என்று சான்றோர் அவனைப் பாராட்டுகின்றனர். எஃகினால் செய்யப்பட்ட வாள் ஒன்று எதிரியை வெட்டுதற்கு நன்கு பயன்படுகிறது. ஆனால் அந்த வாள் தங்கவாளாக மாறியமைந்து விட்டால் அது வெட்டுதற்கு உதவாது. தங்கம் வேறு அரியபெரிய காரியங் களுக்கு நன்கு பயன்படுகிறது. அதே விதத்தில் பரஞானம் அடையப்பெற்றவன் பிரபஞ்சத்தில் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்வதில்லை. அவனுடைய பெருவாழ்வு உலக மக்கள் அனைவருக்கும் நல்ல முறையிலே மேலான துறைகளில் பயன்பட்டு வருகிறது. இக்கோட்பாட்டை விளக்குதற்கே பரமஹம்சதேவர் இந்த உபமானத்தை எடுத்து வழங்கியுள்ளார். இந்த மேலான கோட்பாட்டை மறந்துவிட்டுப் பேராசை

பிடித்த உலகத்தவர்கள் இரசமணியை நாடுதல் அல்லது இரசவாத வித்தைக்கு அலைந்திடுதலில் வீண்பொழுது போக்குகின்றனர்.

கேள்வி: *(82)* பிரணவ மந்த்ரம் என்றால் என்ன?

பதில்: எது இயங்குகிறதோ அது ஓசையை உண்டு பண்ணுகிறது. பிரபஞ்சம் முழுதும் சதா இயங்கிக் கொண்டிருக் கிறது. இயங்குவதால் அதற்கு இயற்கை என்னும் பெயர் வந்துள்ளது. ஜகத் என்பது அதற்கு அமைந்துள்ள மற்றொரு பெயர். கச் என்னும் அடிச்சொல்லினின்று ஜகத் என்னும் சொல் வந்துள்ளது. நிலைமாறிப் போய்க் கொண்டிருப்பது என்பது அதன் பொருள். நிலை மாறுவதால் ஓசை உருவெடுக் கிறது. இயற்கை முழுதும் அசைவதினின்று வடிவெடுத்துள்ள ஓசைகளின் தொகை பிரணவம் என்றும் ஓங்காரம் என்றும் இயம்பப் பெறுகிறது. மற்ற ஓசைகளுக்கெல்லாம் இதுவே பிறப்பிடம். ஆதலால் இது பீஜ மந்த்ரம் எனப் போற்றப் படுகிறது. பிரணவத்தைச் சார்ந்தே அந்தந்த தெய்வங்களுக்குரிய மந்த்ரங்களாகிய பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம் ஆகிய மந்த்ரங்கள் அமைந்துள்ளன. ஆதலால் பிரணவத்தை உபாசிப்பது சிறந்த வழிபாடு ஆகிறது.

கேள்வி: *(83)* தியானம் பண்ணும்போது பூணும் சின் முத்திரைக்குப் பொருள் ஏதேனும் உண்டா?

பதில்: தியானம் பண்ணுகிறவர்கள் கைகூப்பியிருந்து தியானம் பண்ணுவதுண்டு. இதற்குச் சான்று பரமஹம்சரின் படத்தில் காணலாம். இரண்டு கரங்களையும் இரண்டு முழங்காலின்மீது வைத்துக்கொண்டு தியானம் பண்ணலாம். இரண்டு கரங்களையும் முழங்காலின்மீது வைத்திருப்பதற் கிடையில் சின்முத்திரை தாங்கியிருப்பதுமுண்டு. அப்பொழுது கரங்கள் கீழ்நோக்கி மடங்கியிருப்பதற்கு மாறாக மேல் நோக்கியவைகளாக இருக்கும். சுட்டுவிரல், கட்டைவிரலோடு ஒட்டி நிற்கும். நடுவிரல், மோதிரவிரல், சுண்டு விரல் ஆகிய மூன்றும் சுட்டு விரலினின்று அறவே விலகி நிற்கும். விரல்களை இப்படி அமைக்குமிடத்து அது சின்முத்திரை

எனப் பெயர் பெறுகிறது. பின்பு சின்முத்திரை தாங்கியிருந்து தியானம் பழகுதல் ஐதிகத்தைத் தழுவுவதாகும். உலக நிலையில் ஜீவாத்மா ஆணவம், கர்மம், மாயை ஆகிய மும்மலங்களோடு சேர்ந்திருக்கிறது. அந்த ஜீவாத்மன் மும்மலங்களினின்று பிரிந்து பரமாத்மனோடு சேர்ந்திருக்கவேண்டும் என்னும் மேலான கருத்தைச் சின்முத்திரை விளக்குகிறது. ஆக, பலபேர் இந்த ஐதிகத்துக்குட்பட்டு இரண்டு கரங்களிலும் சின்முத்திரை தாங்கித் தியானம் பண்ணுகின்றனர். ஆனால் கட்டாயம் அப்படித்தான் பழகியாக வேண்டும் என்னும் நியதியில்லை., அவரவருக்குப் பிடித்தமான முறையில் தியானம் பயிலலாம். எல்லார்க்கும் பொதுவான நிபந்தனைகள் வேறுசில உள. நிமிர்ந்து உட்கார்ந் திருந்து தியானம் பயிலுதல் வேண்டும். சிரம், கழுத்து, நெஞ்சு ஆகியவை ஒரே நேர்கோட்டில் இருக்கும்படியாக நிமிர்ந்து உட்காரவேண்டும். உள்ளத்தினுள்ளே தெய்வ சாந்நித்தியம் சுயஞ்ஜோதியாகவும் ஆனந்தமாகவும் இருப்பதாகப் பாவித்தல் வேண்டும். இவைகள் தியானத்திற்கு இன்றியமையாத வைகளாம்.

கேள்வி: *(84)* சின்முத்திரை போன்ற முத்திரைகள் பல இருக்கின்றன என்பது ஐதிகம். அவைகளின் உட்கருத்து யாது?

பதில்: பாரமார்த்திகத் தத்துவங்களை மக்களுக்கிடையிலே பரப்புதற்கு உபாயங்கள் நான்கு உள. அவைகள் முறையே தர்சனம், இதிகாசம், புராணம், கிரியை என்று இயம்பப் படுகின்றன. பரதத்துவங்களை உள்ளபடி ஆராய்ந்து அறிவது தர்சனம். அது பண்பட்ட சிலருக்கே இயலுகிறது. அடுத்த படியாக இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் வாயிலாகத் தத்துவங்களை அறிவது பலருக்குச் சாத்தியம் ஆகிறது. இந்த இதிகாசங்களில் அமைந்துள்ள பாத்திரங்கள் தத்துவங்களுக்கு உருவகங்களாகத் திகழ்கிறார்கள். ஆதலால் அவர்கள் வாயிலாகத் தத்துவங்களை அறிந்துகொள்வது மிக எளிது. புராணக் கதைகள் வாயிலாகத் தத்துவங்களை அறிவது அதனினும் எளிது. கிரியை வாயிலாக அறிந்துகொள்வது எல்லார்க்கும் எளிதாகிறது. கோயில் வழிபாடு ஒரு கிரியை.

பாமரர் எல்லார்க்கும் அது பொருள்படுகிறது. அக்கிரியைகளுள் முத்திரை இடம்பெற்று இருக்கிறது. விரல்களை மடக்குவது, நீட்டுவது வாயிலாகப் பல முத்திரைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு முத்திரையும் ஒவ்வொரு கருத்துக்குப் புறச் சின்னமாய் அமைந்திருக்கிறது. கிரியா விசேஷங்களுடன் பூஜைகள் செய்யும்பொழுது முத்திரைகள் கையாளப்படுகின்றன. தேனு முத்திரை, மத்ஸ்ய முத்திரை, ஜ்வாலினி முத்திரை, அவகுண்டன முத்திரை, ஆவாஹன முத்திரை, விசர்ஜன முத்திரை இப்படி வழிபாட்டிலே பலப்பல முத்திரைகள் கையாளப்படுகின்றன. அவைகளுள் ஒன்றைச் சான்றாக எடுத்துக் கொள்ளுவோம். இரண்டு கைவிரல்களையும் ஒன்றாகப் பின்னி அவைகளைப் பசுவின் முலைக்காம்புகள் போன்று நான்காகப் பிரித்துக் காட்டுவது தேனு முத்திரை என்னும் பெயர் பெறுகிறது. காமதேனு என்னும் பசு வழிபடுகிறவன் விரும்புபவைகளையெல்லாம் வகுத்தெடுத்து வழங்குகிறது. செல்வம் ஏராளமாக வளரவேண்டும் என்னும் சங்கல்பத்துக்குத் தேனு முத்திரை புறச் சின்னமாகிறது. மனிதனுடைய வாழ்வு இன்பம் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்பதற்கு மத்ஸ்ய முத்திரை புறச் சின்னமாகிறது. மீன் நீரிலே இன்புற்று நீந்தித் திரிவது போன்று மனிதன் உலகிலே இருக்கவேண்டும் என்பது இதன் பொருள். இனி, சின்முத்திரை ஞானத்தைத் தருவதற்கு அறிகுறியாகிறது. கோயிலிலே பிரதிஷ்டை பண்ணப் பெற்று இருக்கின்ற தக்ஷிணாமூர்த்தி சின்முத்திரை தாங்கியிருப் பதைக் காணலாம். சுட்டுவிரலும், கட்டை விரலும் ஒன்று சேர்ந்து இருக்க நடு விரல், மோதிர விரல், சுண்டுவிரல் ஆகிய மூன்றும் பிரிந்து நிற்பது சின்முத்திரையாகும். கட்டை விரல் கடவுளுக்குச் சின்னமாக அமைந்திருக்கிறது. சுட்டுவிரல் ஜீவாத்மனுக்குச் சின்னமாகிறது. இந்த ஜீவாத்மன் சாதாரணமாக ஆணவம், மாயை, கர்மம் ஆகிய மும்மலங்களுக்கு உட்பட்டு அவைகளுள் உழன்று கொண்டு இருக்கிறது. அப்படி உழன்று கொண்டிருப்பது உலக வாழ்வு. அதனால் நிரந்தரமான சுக மில்லை. அம்மும்மலங்களினின்று தன்னைப் பிரித்தெடுத்துக் கடவுளோடு இணைந்து இருப்பது வாழ்க்கையின் குறிக்கோள். சின்முத்திரை இதற்குப் புறச்சின்னமாகிறது. பிரித்து வைக்கப்

பட்டிருக்கிற மூன்று விரல்களும் மும்மலத்துக்கு அறிகுறிகள் ஆகின்றன. இணைந்து இருக்கிற கட்டைவிரலும் சுட்டுவிரலும் பரமாத்மா, ஜீவாத்மா இணக்கத்துக்கு அறிகுறிகள் ஆகின்றன. இங்ஙனம் முத்திரைகள் பலவற்றின் வாயிலாக வழிபாட்டிலே பாரமார்த்திகத் தத்துவங்கள் விளக்கப்படுகின்றன. பூஜா முறை களில் கையாளப்படுகிற முத்திரைகள் யாவும் இந்தியாவிலுள்ள ஹிந்துமதம், புத்தமதம், ஜைனமதம் ஆகிய மூன்றுக்கும் பொது வானவைகளாம்.

கேள்வி: *(85)* சமாதிநிலை என்றால் என்ன? எல்லாரும் அதை அடைய முடியுமா?

பதில்: ஸமாதிநிலை என்பது மனிதன் அடைகின்ற முடிந்த பெருநிலையாகும். அஷ்டாங்கயோகத்தில் அது எட்டாவது படியாக இருக்கிறது. அதற்குக் கீழ் ஏழு படிகள் உள்ளன. அவை முறையே இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம் என்பனவாகும். யமப் பகுதியும், நியமப்பகுதியும் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கத்தைப் பற்றிப் பேசுகின்றன. கொல்லாமை, பொய்யாமை, புலன்வழிச் செல்லாமை, கள்ளாமை, ஏலாமை என்ற ஐந்தும் யமப்பகுதியில் அடங்கும். சௌசம், சந்தோஷம், சுவாத்யாயம், தவம், கடவுள் வழிபாடு என்ற ஐந்தும் நியமத்துள் அடங்கும். ஆசனம் உடற்பயிற்சியாகும். உடலை மேலாம் நிலைக்குத் தகுதியுடைய தாகச் செய்வதற்கு ஆசனம் பயன்படுகிறது. பிராணனை ஒழுங்குபடுத்துவது பிராணாயாமமாகும்.

பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன மனதைப் பற்றியதாகும். மனதைப் படிப்படியாக உயர்நிலைக்கு எடுத்துச் செல்வதற்கு இந்த நான்கும் பயன்படுகின்றன. மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களின் வழியாகப் புறவுலகில் சிதறுண்டு போய்க்கொண்டிருக்கின்ற மனதை உள்ளே இழுத்து மனோசக்தியையெல்லாம் ஒன்றுதிரட்டுவது பிரத்யாகாரமாகும். ஒன்றுதிரட்டப்பட்ட மனோசக்தியை ஒரு லக்ஷியத்தின் மீது குவியச் செய்வது தாரணையாகும். லக்ஷியத்தில் குவிந்த மனதை அதிலேயே நிலைநிற்கச் செய்வது தியானமாகும். தியானிக்கப்படும் பொருள்மயமாகத்

தியானிப்பவன் மாறி அமைவது சமாதியாகும்.

பாவ சமாதியென்றும், நிர்விகல்ப சமாதியென்றும் சமாதியை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். தூய மனது பாவ சமாதி நிலையை அடைகிறது. மனது சங்கல்ப, விகல்பமயமாக இருக்கிறது. பாவ சமாதியில் மனதில் விகல்பம் இருக்கிறது. விகல்பமும் அழிந்தான பிறகு நிர்விகல்ப சமாதி உண்டாகிறது. நிர்விகல்ப சமாதி என்பது மனதற்ற பரிசுத்த நிலையாகும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அனுபவித்து வந்தது பாவசமாதியாகும். சிற்சில சமயங்களில் அவர் தாமே விரும்பிச் சமாதியில் மூழ்கு வார். வேறு சில சமயங்களில் அவருடைய தூய சுபாவமே அவரைச் சமாதி நிலைக்கு இழுத்துச் செல்லும். தோதாபுரி என்னும் தம் குருவின் மூலமாக ஸ்ரீராமகிருஷ்ணர் நிர்விகல்ப சமாதியை அடைந்தார். நிர்விகல்ப சமாதியில் உள்ளம் ஒடுங்கி விடுகிறது. ஊழ்வினை ஓய்ந்து போகிறது. ஜீவன் நெடுங்காலம் குடியிருந்த காயம் காய்ந்து போகிறது. மனம் மாய்ந்து போகிறது. அகங்காரம் அழிந்து போகிறது. பிரம்மானந்தம் ஒன்றே எஞ்சி இருக்கிறது. ஜீவாத்மா பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்து கிடக்கிறது. அந்நிலையை யார்தான் விளக்க முடியும்? அந்நிலையை அனுபவித்தவரே அப்பெருமையை அறிவர்.

நிர்விகல்ப சமாதியை ஒரு காலத்தில் எல்லாருமே அடைந்தாக வேண்டும். அந்நிலையை அடைந்தவனுக்குத் திரும்பவும் பிரபஞ்ச உணர்ச்சி வருவதில்லை என்று பெரி யோர்கள் பகர்ந்துள்ளனர். நிர்விகல்ப சமாதியை அடைந்தவர் சொற்ப நாளைக்குள் உடலை உகுத்துவிட்டுப் பிரம்மத்தோடு ஐக்கியமாகி விடுகின்றார். உலகத்தை உய்விப்பதற்கென அவ தரித்திருக்கும் யாரோ ஒருசிலர் மட்டும் நிர்விகல்ப சமாதியை அடைந்த பிறகும் பிரபஞ்ச ஞாபகம் பெறுகிறார்கள். உலக நன்மையின் பொருட்டு அவர்கள் மேலும் இவ்வுலகில் வாழ் கிறார்கள். அருட்சக்தியும், பகவத் சம்பத்தும் அவர்கள் மாட்டுப் பெரிதும் மிளிர்கின்றன. லௌகிக அந்தஸ்து சிறிதேனும் அவர்கள் மாட்டு இல்லாதிருப்பினும் பல்லாயிரம் ஆண்டுகளாக அவர்கள் புவியெங்கும் போற்றப்பட்டு வருகின்றனர்.

காசியில் அன்னபூரணி கோயில் உண்டு. அக்கோயிலுக்குள் தரிசனத்துக்குச் செல்கின்றவர்கள் பிரசாதம் வாங்கிக் கொண்டுதான் வெளிவர முடியும். அக்கோயிலின் அமைப்பு அத்தகையது. வரிசையில் முதலில் நிற்பவருக்கு உடனே பிரசாதம் கிடைக்கும். வரிசையில் கடைசியில் நிற்பவருக்கு நீண்டநேரம் காத்திருந்த பிறகுதான் பிரசாதம் கிடைக்கும். அங்ஙனம் ஸ்ரீராமகிருஷ்ணர் போன்று தூய சுபாவம் படைத்தவர்களுக்கு நிர்விகல்ப சமாதி நிலை உடனே வாய்க்கிறது. மற்ற உயிர்களுக்கு மனபரிபாகத்துக்கேற்ப இப்பிறவியிலோ, மறுபிறவியிலோ பல்லாயிரக்கணக்கான பிறவிகளுக்குப் பிறகோ நிர்விகல்ப சமாதி என்னும் பெரிய நிலை கிட்டுகிறது.

கேள்வி: *(86)* யாதனா சரீரம் என்பது என்ன? மரணத்திற்குப் பின் ஜீவர்களின் நிலை என்ன?

பதில்: மனிதன் புறவுலகைப் பற்றி ஆராய்கிறான். ஆனால் அவன் தன்னைப் பற்றி ஆராய்வதில் கருத்துச் செலுத்துவதில்லை. தங்களைப்பற்றி ஆராய்ந்தவர்கள் ஞானிகளானார்கள். நம்மைப் பற்றிய உண்மையை மறைத்து வைப்பது அக்ஞானமாகும். ஞானம் வருகிறபொழுது சரீராதிகளிலிருந்து நம்மைப் பிரித்துக் காணமுடியும். அக்ஞானத்தில் உழன்று கொண்டிருக்கின்ற நாம் சரீராதிகளிலிருந்து நம்மைப் பிரித்துக்கொள்ளத் தெரியாது அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். நம் உடம்பை மறைப்பதற்குப் பனியன், அதற்குமேல் சட்டை, அதற்கு மேல் கோட்டு ஆகியவைகளை அணிந்திருப்பது போன்று ஆத்மாவை மூடிக்கொண்டு காரண சரீரம், சூக்ஷ்ம சரீரம், ஸ்தூல சரீரம் ஆகிய சரீரங்கள் இருக்கின்றன. சரீரத்தின் மீது அணிந்திருக்கின்ற கோட்டை அகற்றினால் சட்டையும், பனியனும் அதை மூடிக்கொண்டிருக்கும். சட்டையையும் அகற்றிவிட்டால் பனியன் சரீரத்தை மூடிக்கொண்டிருக்கும்; பனியனையும் அகற்றினால்தான் சரீரம் தென்படும். அங்ஙனம் ஸ்தூல சரீரம் போய்விட்டால் சூக்ஷ்ம காரண சரீரங்கள் ஆத்மாவை மறைத்துக் கொண்டிருக்கும். சூக்ஷ்ம சரீரமும் நீங்கினால் காரண சரீரம் மட்டும் ஆத்மாவை மறைத்துக் கொண்டிருக்கும். காரண சரீரம் அகலும்பொழுதுதான் ஆத்மா விளங்கும்.

ஸ்தூல சரீரம் என்பது நம் கண்ணுக்குத் தென்படும் பூதவுடலாகும். தோல், இரத்தம், மாமிசம், நரம்பு, எலும்பு, கொழுப்பு ஆகியவை சேர்ந்து ஸ்தூல சரீரமாகிறது. உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை சூக்ஷ்ம சரீரமாகும். ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாயுக்கள் ஐந்தும், கர்மேந்திரி யங்கள் ஐந்தும், சூக்ஷ்ம சரீரத்தில் அடங்கும். கர்மேந்திரி யங்கள், வாயுக்கள், ஞானேந்திரியங்கள், ஸ்தூல சரீரம் ஆகிய வற்றின் துணைகொண்டு சூக்ஷ்ம சரீரம் புறவுலகத் தொடர்பை ஜீவாத்மனுக்கு ஏற்படுத்துகிறது. சூக்ஷ்ம சரீரத்துக்குத்தான் யாதனா சரீரம் என்று பெயர்.

மனிதனுக்குக் கீழ் உள்ள உயிர்களுக்கு ஸ்தூல சரீரம் இருந்தும் அதைப் பெற்றிருக்கின்றோம் என்ற அறிவு அவை களுக்கில்லை. மனிதன் தான் சரீரமயமாய் இருப்பதாக உணர்கின்றான். சரீரமயமாகத் தன்னை எண்ணிக்கொண்டிருப் பது மனிதனிடத்துள்ள அக்ஞானமாகும். ஒரு சரீரம் வாழ்க் கைக்குத் தகுதியற்றதாகப் போய்விட்டால் அதை ஒதுக்கித் தள்ளுவதை மரணம் என்றும், வாழ்க்கைக்குத் தகுதியுடையதாக மற்றொரு சரீரத்தை உண்டுபண்ணிக் கொள்வதைப் பிறப்பு என்றும் சொல்கிறோம். ஒரு சரீரத்தை ஒதுக்கிவிட்டு மற்றொரு சரீரம் எடுப்பதற்கு இடையிலுள்ள காலத்தில் ஜீவன் என்ன செய்கிறான் என்பதுதான் மரணத்திற்குப் பின் ஜீவர்களின் நிலை என்ன? என்ற கேள்வியாக வடிவெடுத்திருக்கிறது. எடுத்துள்ள சரீரம் அழிந்து மற்றொரு சரீரம் எடுக்கும் வரையில் ஜீவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போன்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றான். சில ஜீவர்கள் அவ் இடைக்காலத்தில் சூக்ஷ்ம சரீரம் என்று சொல்லப்படும் யாதனா சரீரத்தோடு கனவில் அலைவது போன்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். கனவு காண்கின்றவனுக்குத்தான் கனவைப் பற்றித் தெரியும். புறவுலகத் தொடர்பற்று நித்திரையில் இருப்பவன் கனவு காண்கின்றானா? ஆழ்ந்து உறங்குகின்றானா? என்பது மற்றவர்களுக்குத் தெரியாது. அங்ஙனம் ஸ்தூல சரீரத்தை விட்டுப் பிரிந்து ஜீவர்கள் முற்றும் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்களா? யாதனா சரீரத்தில் அலைந்து கொண்டிருக்கிறார்களா? என்பதை மற்றவர்கள் அறியமுடியாது.

அந்தந்த ஜீவர்கள்தாம் அவர்கள் இருக்கின்ற நிலையை அறிவார்கள்.

உடலை உகுக்கும்பொழுது ஜீவன் பரத்தினைப் பாவிக்க வல்லவனாகில் அவன் மீண்டும் பிறவாது பரத்தினைச் சார்ந்து விடுகிறான். இது விதேக முக்தி எனப்படும். வாழ்நாளில் எது ஆழ்ந்து நெடிது எண்ணப்பட்டதோ அந்த எண்ணம்தான் இறுதிக் காலத்தில் முன்னணியில் வந்து நிற்கும். மேற்கொண்டு வருகின்ற பிறப்பு அந்த எண்ணத்தின் ஸ்தூல அமைப்பாக அமையும். தேஜோமயமான சுயம்பிரகாசமுடைய ஆத்மனை நாள்தோறும் ஒழுங்காக நினைத்து வந்தால் உடல் ஞாபகம் குறையும். தான் உடல் அல்ல என்ற உணர்வு ஓங்கும். ஆத்ம போதத்தை வளர்த்து வருகின்றவனுக்குப் பழுத்த பழம் மேல் தோலினின்று சுலபமாகப் பிரிவது போன்று தேக உணர்ச்சியைக் கடந்து செல்வது எளிதாகிவிடுகிறது.

சரீரத்தை விட்டுப் பிரிகின்ற நிலை ஜீவனுக்கு எப்படி வேண்டுமென்றாலும் அமையலாம். எந்த நிலையில் சரீரத்தை விட்டுப் பிரிவது நேர்ந்தாலும் ஜீவன் அந்த நிலையில் மனதை எப்படி வைத்திருக்கிறான் என்பதுதான் முக்கியமானது. மனபரிபாகம் வரவர மனதைப் பகவானிடத்தில் வைப்பதுதான் முக்கியம் என்பது விளங்கும். மனபரிபாகம் அடைந்து வருகின்றவர்கள் உடலுக்கு வருகின்ற விபத்துக்களைக் குறித்தோ, உடலை விட்டுப் பிரிகிறபொழுது என்ன நிலை ஏற்படப்போகிறது என்பதைப் பற்றியோ கவலைகொள்வதில்லை. மனதை உலக ஆசையிலிருந்து பிரித்து எடுத்துப் பகவானிடத்தில் நிலைபெறச் செய்துவிட்டால் "இன்பமே எந்நிலையிலும் துன்பமில்லை." ஸ்தூல சரீரத்தோடு வாழ்ந்தாலும் சரி, ஸ்தூல சரீரம் போனபின்பு யாதனா சரீரத்தில் வாழ்ந்தாலும் சரி, மனிதன் அமைதியுடனும் சாந்தத்துடனும் இருப்பதற்கு மனதைப் பண்படுத்தவேண்டும்.

கேள்வி: *(87)* வேதம், வேதாந்தம் - இவை இரண்டுக்கும் உள்ள வேறுபாடு யாது?

பதில்: வேதம் என்பது இயற்கையையும், வேதாந்தம் என்பது மெய்ப்பொருளையும் குறிக்கும். மெய்ப்

பொருளினிடத்திருந்து வந்ததுதான் இயற்கை. மெய்ப் பொருளைப் பஞ்சேந்திரியங்கள் மூலமாகவும், அழுக்குப்படிந்த மனதின் மூலமாகவும் காண்கின்றபொழுது அது இயற்கை அல்லது பிரபஞ்சமாகத் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. மெய்ப் பொருளைத் தூய மனதுகொண்டு காண்கின்றபொழுது அது குணத்தோடு கூடிய தெய்வ வடிவமாகத் தென்படுகிறது. மனதற்ற நிலையில் வேதாந்தம் அல்லது மெய்ப்பொருள் அனுபவத்திற்கு உரியதாகிறது.

பஞ்சேந்திரியங்களைக் கொண்டும், மனதைக் கொண்டும் நாம் எதை அறிகின்றோமோ அதற்கு வேதம் என்று பெயர். இயற்கையை வேதம் என்று கூறலாம். பரம்பொருளின் மகிமைகளை விளக்குகின்ற நூல்களையும் வேதம் என்று கூறலாம். இயற்கையும் இறைவனுடைய மகிமையை விளக்கிக் கொண்டிருக்கிறது. வேதம் என்பது 'வித்' என்ற சொல்லி லிருந்து வந்தது. 'வித்' என்றால் 'அறிதல்' என்பது பொருள். வேதமாக இருக்கின்ற இயற்கையும், வேதம் என்று சொல்லு கின்ற நூல்களும் இறைவனைப் பற்றிய அறிவை நமக்குத் தருகின்றன. வேதத்தை அறிகின்றவளவு இறைவனுடைய மகிமை நமக்கு விளங்கும்.

வேதம் கற்பதற்குத்தான் நாம் இவ்வுலகம் அல்லது பிரபஞ்சத்திற்கு வந்திருக்கின்றோம். வேதத்தை வாழ்நாளெல்லாம் கற்றுக்கொண்டே இருக்கலாம். அதற்கு ஒரு முடிவில்லை. இறைவனுடைய மகிமை எல்லையில் அடங்காதது. எனவே வேதமும் எல்லையில் அடங்காதது.

இயற்கை அல்லது வேதம் நமக்கு நல்லறிவைத் தருவதற்காக அமைந்திருக்கிறது. இயற்கை நமக்கு இன்பம் தருவதற்காக அமையவில்லை. இயற்கையிலிருந்து பாடம் கற்றுக்கொள்வதற்குப் பதிலாக இயற்கையிலிருந்து இன்பத்தைப் பெற விரும்பினால் முறைதவறி நாம் இயற்கையைக் கையாளு கின்றோம். அப்படிக் கையாளும்பொழுது இயற்கையிலிருந்து நாம் பயனடைவதற்குப் பதிலாக இன்ப துன்பத்துக்கு ஆளாகின்றோம்.

மக்களுக்கு வேதாந்தம் குறியாகவும், வேதம் நெறியாகவும் அமைந்திருக்கின்றன. வேதாந்தம் அல்லது மெய்ப்பொருள்

என்னும் குறியை அடைவதற்கு வேதம் வழிகாட்டுகிறது. இயற்கையாக இலங்கும் வேதத்தை இன்றைய விஞ்ஞானம் ஆராய்ச்சி செய்கிறது. அவ்வாராய்ச்சி வேதாந்தத்தில் போய் முடிகிறது. இயற்கையைத் துருவி ஆராய ஆராய அவ்வாராய்ச்சி இயற்கைக்கு அப்பால் உள்ள ஒரு பொருளிடத்துக் கொண்டு போய்ச் சேர்க்கிறது. விஞ்ஞான ஆராய்ச்சி அத்துடன் நின்று விடுகிறது. அதற்குமேல் என்ன இருக்கிறது என்பதை அது ஆராய்ச்சி செய்வதில்லை. விஞ்ஞானத்தினால் மெய்ப்பொருளை ஆராய முடியாது. மெய்ப்பொருள் ஆராய்ச்சி சமயத்துறைக்கு உரியதாகிறது. சுவாமி விவேகானந்தர் "எங்கு விஞ்ஞானம் முடிகிறதோ அங்குச் சமயம் ஆரம்பிக்கிறது" (Where Science ends there Religion begins) என்று கூறியுள்ளார்.

வேதம் அல்லது இயற்கையைப் பயன்படுத்தி வேதாந்தம் அல்லது மெய்ப்பொருளை உணர்ந்தாக வேண்டும். நாம் இயற்கையை ஆளவந்தவர்களும் அல்லர்; இயற்கையில் கட்டுண்டு கிடக்க வந்தவர்களும் அல்லர். இயற்கையை நன்கு பயன்படுத்தி இயற்கைக்கு அப்பால் உள்ள இறைவனை உணர நாம் வந்திருக்கின்றோம். எனவே இயற்கையோடு ஒத்த வாழ்வு வாழ்ந்து இயற்கையைப் பயன்படுத்தி இயற்கைக்கு அப்பால் செல்ல முயலவேண்டும். இயற்கைக்கு ஒத்து வாழ்ந்தால் இயற்கை நமக்கு அனுகூலமாக இருக்கும். இயற்கையை முறைதவறிக் கையாண்டால் அது நமக்குப் பிரதிகூலமாக அமைந்துவிடும். இயற்கையின்கண் பேரழகு பொதிந்து கிடக்கின்றது. அவ்வழகை நாம் போற்றவும் துதிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். வானளாவி உயர்ந்திருக்கும் மலையும், பரந்த கடலும், அகண்ட வெட்ட வெளியும், மனதை மகோன்னத நிலைக்கு எடுத்துச் செல்லும் சக்தியுடையவை. "மன்னும் இமயமலை எங்கள் மலையே, மாநில மீது அதுபோல் பிறிது இல்லையே, இன்னறு நீர்க்கங்கை ஆறு எங்கள் ஆறே, இங்கு இதன் மாண்புக்கு எதிர் எது வேறே, பன்னறு உபநிடத நூல் எங்கள் நூலே, பார்மிசை ஏது ஒரு நூல் இது போலே" என்று பாரதியார் இமயமலையின் மகத்துவத்தையும், கங்கையின் புனிதத்தையும், உபநிடதங்களின் ஞானக் கருத்துக்களையும் போற்றிப் புகழ்ந்து பரவசம்

அடைகின்றார். வனவாச வாழ்க்கையின்பொழுது யுதிஷ்டிரர் இமயமலையின் எழிலில் தம் மனதை ஈடுபடுத்தி இறையின் பத்தை அனுபவித்தார். மெய்ப்பொருளை நாடித் தவத்தில் ஈடுபடும் தவ சிரேஷ்டர்களனைவரும் மலைகளின் குகைகளில் தங்கி மனதைப் பரம்பொருளில் ஈடுபடுத்தி வந்தார்கள். மனம் பிரபஞ்ச அதீதத்திற்குப் போவதற்கு இயற்கை நமக்கு வேண்டியவாறு துணைபுரிகிறது. இவர்களெல்லாரும் இயற்கையை முறையாகக் கையாண்டு அதைத் தங்களுடைய வாழ்க்கைக்கு அனுகூலமாக்கிக் கொண்டார்கள்.

இயற்கையை இன்பவனம் என்று எண்ணிக்கொண்டு ஆங்குச் சென்று களவுசெய்தும், சிற்றின்ப போகம் அனுபவித்தும், குடித்தும், சூதாடியும் பொழுது போக்குகின்றவர்கள் இயற்கையை முறைதவறிக் கையாளுகின்றவர்களாகிறார்கள். இயற்கைத் தாய் இயற்கையில் கட்டுண்டு கிடக்கும் சிறுமை என்னும் தண்டனையை அவர்கட்குத் தருகின்றாள். மனதைப் பாழ்படுத்தும் பாதகத்திற்கு அவர்கள் பலியாகின்றார்கள். அத்தகையவர்கள் இயற்கையின் சீற்றத்துக்கு ஆளாகி இறைவனிடம் செல்லும் பாதையிலிருந்து விலக்கி வைக்கப்படுகிறார்கள். இயற்கைத்தாய் அவர்களுக்கு அறிவையும் மனத்தெளிவையும் வழங்குவதற்குப் பதிலாக மனக்குழப்பத்தையும், அக்ஞானத்தையும் அவர்கள் உள்ளத்தில் வளர்க்கின்றாள்.

வேதம் நமக்கு நல்லறிவு புகட்ட அமைந்திருக்கிறது. வேதாந்தம் நம்முடைய நிஜசொரூபம். நம் நிஜசொரூபத்தை உணர்வதற்கு எது வழிகாட்டுகின்றதோ அது வேதம். வேதத்தின்மூலம் வேதாந்தம் அல்லது நம்முடைய நிஜசொரூபத்தை உணரலாம். வேதத்தின் முடிவு வேதாந்தம்.

கேள்வி: *(88)* அருளால் எவையும்பா ரென்றான்–அத்தை
அறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்டதல்லால்–கண்ட
என்னையும் கண்டிலே னென்னடி தோழி (13)

அன்றென்று மாமென்று முண்டோ– உனக்
கானந்தம் வேண்டி னறிவாகிச் சற்றே

நின்றால் தெரியு மெனவே- மறை
நீதியெம் ஆதி நிகழ்த்தினான் தோழி (30)

தாயுமானவர் ஆனந்தக்களிப்பில் இவ்விரண்டு பாடல்களும் இருக்கின்றன. 'அறிவை' ப்பற்றிய கருத்தில் இவ்விரண்டு பாடல்களும் முரண்பட்டவைகளாகத் தோன்றுகின்றன. தயவுசெய்து விளக்கவும்.

பதில்: அறிவில் தூய அறிவு என்றும் போலி அறிவு என்றும் இரண்டு கூறுகள் உண்டு. தூய அறிவுக்குச் சுத்த சைதன்யம் என்பது வேதாந்த பரிபாஷை. அதை சித் என்றும், பிரக்ஞை என்றும் பகர்வதுண்டு. போலி அறிவைச் சித் ஆபாசம் என்று வேதாந்தம் கூறுகிறது. சூரியப்பிரகாசம் போன்றது சுத்த சைதன்யம். சூரியனிடத்திருந்து வாங்கித் தன்னுடையது போன்று காட்டும் சந்திர வெளிச்சம் போன்றது சித்ஆபாசம். மனிதனிடத்து ஜீவபோதம் இருக்கின்றபொழுது அவன் சித் ஆபாசன் ஆகின்றான். அவனுடைய அறிவு போலி அறிவாகும். போலி அறிவைக்கொண்டு பொருளை உள்ளபடி அறிய முடியாது. பொருள் சிறிது விளங்கியும் விளங்காமலும் போய்விடும். சந்திர வெளிச்சத்துக்குத் தோற்றமும் மறைவும் இருப்பது போன்று ஜீவனுடைய அறிவுக்குத் தெளிவும் மயக்கமும் உண்டு. அமாவாசையன்று சந்திரன் வானத்தில் இருந்தும் இல்லாதது போன்று ஆய்விடுகிறது. மானுட அறிவு விழிப்புவேளையில் உதவுகிறது. உலகையும் தன்னையும் ஓரளவு அறிந்தும் அறியாமலும் இருக்கிறது. மயக்கம், உறக்கம் ஆகியவைகளில் தன்னையும் அறிதற்குத் தன் அறிவு பயன்படுகிறதில்லை. இது எல்லா ஜீவர்களின் அனுபவம். ஆகவே மானுட அறிவு நிலையற்றது என்பது உறுதியாயிற்று.

நிலையற்ற கருவி கரணங்களை உடைத்திருக்கும்போதும் மனிதன் அனைத்தையும் அருளால் பார்த்துப் பழகவேண்டும் என்பது கோட்பாடு. சந்திரனும் பூமியும் முன்பு ஒருகால் சூரியனிடத்திருந்தவைகள். அப்பொழுது அவைகள் ஒளிப்பிழம் பாயிருந்தன. இப்பொழுது இருள்மயமாய் விட்டன. திரும்பவும் சூரியனிடத்து அவைகளைப் போட்டுவிட்டால் பழையபடி

அவைகள் பிரகாசம் பெற்றுவிடும். அதே பாங்கில் மனிதன் தன்னையும் உலகையும் கடவுள் சொரூபமாகவே கண்டு பழகுவானாகில் அவனுடைய போலி அறிவு மெய்யறிவாக மாறுகிறது. அவனுக்கு மயக்கம் தெளிகிறது. பேரறிவு சொரூபமாக அவன் ஆய்விடுகிறான். பிறகு மயக்கமோ கீழ்மையில் வீழ்ச்சியோ அவனுக்கு இல்லை. பரம்பொருளில் கலத்தல் என்பதும், முக்தி என்பதும், வீடு என்பதும் அதுவே. ஆக அருளால் எவையும் பார்ப்பது நல்ல சாதனமாகிறது. மானுட அறிவைக் கொண்டு எதையும் ஆராய முயலுவது பயனற்ற முயற்சியாகிறது. அருளால் பார்ப்பது மெய்யறிவு பெறுதற்கு உபாயமாகும். எல்லாம் தெய்வ சொரூபம் என்னும் உணர்ச்சி கொள்ளுதலே அருள் நோக்கமாகும்.

கேள்வி: *(89)* திருமூலர் திருமந்திரத்தில் உள்ள கீழ் காணும் பாடலுக்குக் கருத்தும் விளக்கமும் வேண்டுகிறேன்.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே.

பதில்: ஆத்ம ஸாதனத்தில் செல்லுபவனுக்கு ஜீவபோதம் இன்னும் பாக்கியிருக்கின்றபொழுது அவனுக்குத் தான் வணங்கும் தெய்வம் பதி ஆகிறது. ஜீவனாகிய தான் பசு ஆகிறான். ஜீவபோதத்தில் அவனைப் பிணித்து வைத்திருக்கும் உபாதிகள் பாசம் ஆகின்றன. வியவகாரிக நிலையில் இம்மூன்றும் சர்வ காலமும் இருந்து வருகின்றன. ஆதலால் இம்மூன்றையும் அனாதி என்று சொல்லலாம். பசு ஆனது பதியைப் போய்ச் சேர்ந்த உடனே அதைப்பிணித்து வைத்திருந்த பாசமும் அப்பசுவோடு சேர்ந்து பதியில் ஒடுங்கிவிடுகிறது. மற்றொரு உபமானத்தைக் கொண்டு இதை விளக்கலாம். கடலும், அதில் அலைகளும், அலையை உண்டுபண்ணும் காற்றும் சர்வகால மும் இயற்கையில் இருந்து வருகின்றன. ஏதேனும் ஒரு அலை தனது வடிவத்தை இழந்து கடலில் லயமாய் விடுகின்ற பொழுது உரு எடுப்பதற்கு ஏதுவாயிருந்த அந்தக் காற்றும் அந்நிலைக்குப் பொருத்தமற்றதாய்ப் போய்விடுகிறது. கடல்

ஒன்றுதான் பிறகு மிச்சமிருக்கிறது. அதே பாங்கில் ஜீவன் பரம்பொருளிடத்து இரண்டறக் கலக்கும் நிலை ஒன்று உண்டு. அந்நிலையில் ஜீவ போதமும் அதற்கேதுவாய் இருந்த பாசமும் ஒடுங்கிப் போய்விடுகின்றன. முக்தியடைந்த அந்த ஜீவனுக்குப் பசு என்று சொல்லுகிற நிலையும், அதைப் பந்தப்படுத்துகிற பாசம் என்று சொல்லுவதும் இல்லை. ஆனால் மற்ற ஜீவர்களுக்கு அந்நிலைகள் இருந்து வருகின்றன. இதுவே பதி, பசு, பாசம் ஆகிய இம்மூன்றும் அனாதி என்று சொல்லுவதற்கும், முக்தி நிலையில் பசு, பாசம் ஆகியவை நிலாவே என்று சொல்வதற்கும் உள்ள பொருளாம்.

கேள்வி: *(90)* "ஓம் சாந்தி சாந்தி சாந்தி" "ஹரி ஓம் தத் ஸத்" இவற்றின் உட்பொருள் என்ன?

பதில்: பெரும்பாலும் சாந்தி, சாந்தி, சாந்தி என்று முடிவுறுகின்ற வேத வாக்குகளுக்கும் ஆன்றோருடைய சொற்களுக்கும் சாந்தி பாடம் என்னும் பெயர் வழங்கப்படுகிறது. சதா சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பது மனதின் பாங்கு. அது அக்ஞானத்தின் விளைவு. அக்ஞானம் அதிகரிக்கின்ற அளவு மனதின் சலனமும் அதிக வேகம் பெறுகின்றது. அதற்கு நேர்மாறாக நல்லறிவைப் பெறுவதற்கேற்ப மன அமைதி உண்டாகிறது. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். தாயைப் பிரிந்துள்ள குழந்தை ஒன்று தாயைக் காணவேண்டும் என்று கதறிப்பதறி அழுகிறது. வெளியூருக்குச் சென்றுள்ள தாய் அதிவிரைவில் திரும்பி வந்துகொண்டிருக்கின்றாள்; இன்னும் அரை மணி நேரத்தில் இங்கே வந்து சேர்வாள் என்னும் கருத்தை அந்தக் குழந்தைக்கு ஊட்டினால் அதற்கேற்றவாறு அதன் அக்ஞானம் அகன்று போகிறது; ஞானம் உருவெடுக்கிறது. குழந்தையும் அந்த நம்பிக்கையுடன் அமைதியுற்றிருக்கின்றது. இதே விதத்தில் சாந்திபாடம் ஒவ்வொன்றையும் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் அதில் அடங்கியிருக்கும் கருத்து மனக்கொதிப்பை அடக்கவும், அமைதியை வளர்க்கவும் வல்லதாகிறது என்று தெரியும். இங்ஙனம் ஒவ்வொரு சாந்தி பாடத்தையும் ஆராய்ந்து பார்த்தால் ஞானத்தெளிவு உண்டாவதைக் காணலாம். சாந்தி என்னும் சொல்லை மூன்று தடவை உச்சரிப்பதில் பொருள் ஒன்று

உண்டு. திரிகரணங்களாகிய மனம், மொழி, மெய் மூன்றுக்கும் அமைதி உண்டுபண்ணவல்லது சாந்தி பாடம். கனவு, நனவு, கனவற்ற உறக்கம் ஆகிய மூன்றிலும் அமைதியை வழங்கவல்லது சாந்தி பாடம். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய காலத்திரயத்தில் அமைதி தரவல்லது சாந்தி பாடம். இதை முன்னிட்டே அது மூன்று தடவை பகரப் பெறுகிறது.

"ஹரி ஓம் தத் ஸத்" என்பதில் சீரிய கருத்தொன்று அடங்கியிருக்கின்றது. ஹரி அல்லது ஹரன் என்பது மெய்ப் பொருளுக்கு அமைந்துள்ள பெயராம். அது அக்ஞான இருளை அகற்றவல்லது எனப் பொருள்படுகிறது. அப்பொருளையே ஓசை வடிவமாகக் கருதுவோமானால் அது ஓங்காரம் எனப் பொருள்படுகிறது. ஓசை வடிவத்திலும் சொரூப அமைப்பிலும் எப்பொருள் ஞான விளக்கேற்ற வல்லதாயிருக்கிறதோ அதுவே மெய்ப்பொருள். தத் ஸத் என்பது "அது மெய்ப்பொருள்" எனப் பொருள்படுகிறது. ஆக, ஹரி ஓம் தத் ஸத் என்று சொல்கின்றவிடத்து மெய்ப்பொருள் யாண்டும் அழிவற்றது; அதுவே சத்தியமாகிறது; சத்தியம் என்றும் அழிந்துபட்டுப் போவதன்று என்று பொருள்படுகிறது.

கேள்வி: *(91)* சித் ஆபாசம், என்பதற்கும் சித் ஆகாசம் என்பதற்கும் விளக்கம் தரும்படி வேண்டுகிறேன்.

பதில்: சித் ஆகாசம் என்பது சிதம்பரம் எனப் பொருள் படுகிறது. அறிவுப்பெருவெளி என்பது அதன் அர்த்தம். அறிவுப்பெருவெளிக்கு எல்லை கிடையாது. அகண்டாகாரமாக அது விரிந்தோடுகிறது. வெட்டவெளியில் நின்று கொண்டு மேலே பார்த்தால் வானம் தென்படுகிறது. இந்த வானமும் எல்லையில் அடங்காது எங்கும் வியாபகமாக இருக்கிறது. எந்தத் திசையில் எத்தனையெத்தனைகோடி மைல் சென்றாலும் வானவெளிக்கு எல்லை காணமுடியாது. எல்லை காணமுடியாத இந்த வானவெளிக்கு ஆகாசம் என்று பெயர். இதனிடத்து அறியும் தன்மையில்லையாதலால் இது ஜட ஆகாசம் எனப்படுகிறது. இதற்கு நிகராகச் சித் ஆகாசம் இருக்கிறது. அது அறிவு மயமானது. பேரறிவும் பேருணர்வுப் பேரின்ப மயமாகவும் அது இருக்கிறது. அண்டங்கள் அனைத்தும்,

ஜீவகோடிகள் அனைத்தும் அதில் அடங்கியிருக்கின்றன. ஆதலால் அது சித் ஆகாசம் என்றும் சித் ஆபாசம் என்றும் கூறப்படுகிறது.

எரிகிற தீபத்தின் பிழம்பு பக்கத்தில் வைத்திருக்கின்ற கண்ணாடியில் தென்படுகிறது. அதே விதத்தில் பரமாத்மாவின் பிம்பம் ஜீவாத்மாக்களின் உள்ளத்தில் பிரதிபலிக்கிறது. கண்ணாடியில் தென்படுகின்ற தீபம் மூல தீபத்தின் பிரதி பிம்பமாகிறது. பரமாத்மாவின் சாந்நித்தியம் ஜீவர்கள் உள்ளத்தில் பிரதிபிம்பிப்பது சித் ஆபாசம் எனப் பெயர்பெறுகிறது. பிரதி பிம்பிக்கிற சித் என்பது சித் ஆபாசத்துக்கு விளக்கமாகிறது. கோயில்களில் மூலமூர்த்திக்குப் பின்பக்கம் தீபம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின் இருக்கும் கண்ணாடி இதழ்களில் அது பல தீபங்களாகத் தென்படுகிறது. எரிகிற ஒரு தீபம் பரமாத்மாவின் சின்னம். பிரதிபலிக்கின்ற பல தீபங்கள் ஜீவாத்மாக்களின் சின்னங்களாகின்றன. பல தீபங் களாகத் தென்படுபவைகள் சித் ஆபாசங்களாகின்றன. ஜீவாத் மாக்கள் சித் ஆபாசங்களாகின்றன. எரிகிற ஒரு தீபம் வெறும் சித் அல்லது பரமாத்மாவுக்குச் சின்னம். இங்ஙனம் சித்தையும் சித்ஆபாசங்களையும் பொருள்படுத்திக் கொள்க.

கேள்வி: *(92)* பாரமார்த்திக ஸத், வியாவஹாரிக ஸத், பிராதிபாசிக ஸத் என்பன பற்றிய விளக்கம் யாது?

பதில்: காலம், தேசம், வர்த்தமானம் ஆகிய மூன்றுக்கும் அப்பால் எப்பொருள் இருக்கிறதோ அப்பொருளுக்குப் பாரமார்த்திக ஸத் என்று பெயர். செயல்கள் அனைத்துக்கும் மூலகாரணமாகவும், செயல்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவராக வும் இருக்கின்ற மெய்ப்பொருளைப் பாரமார்த்திக ஸத் என்று அழைக்கின்றோம். காரண காரியமாக ஜீவனும் ஜகத்தும் அமைந்திருக்கின்றன. ஆகவே அவைகளுக்கு வியாவஹாரிக ஸத் என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. பாரமார்த்திக ஸத் என்பது உண்மைப் பொருள்; வியாவஹாரிக ஸத் என்பது தோற்றப் பொருள். பஞ்சேந்திரியங்களுக்கும் மனதுக்கும் விளங்குவது மெய்ப்பொருளின் திரிவுபட்ட காட்சியாகும். பஞ்சேந்திரியங்களுக்கும் மனதுக்கும் விளங்குகின்ற ஜகத்,

ஜீவன் வியாவஹாரிக ஸத் எனப்படுகின்றன. வியாவஹாரிக ஸத்துக்குப் பாரமார்த்திக ஸத் ஆதாரமாக இருக்கின்றது. வியாவஹாரிக ஸத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு அதன்மீது இல்லாத ஒரு பொருளை ஆரோபிப்பது பிராதிபாசிக ஸத் ஆகும்.

விழிப்பு, கனவு, உறக்கம் என்னும் மூன்று நிலைகள் நமக்கு உண்டு. இம்மூன்று நிலைகளுக்கும் பொதுவாக இருப்பது எதுவோ அது பாரமார்த்திக ஸத். விழிப்பு நிலையில் மட்டும் அனுபவத்திற்கு எது இலக்கு ஆகிறதோ அது வியாவஹாரிக ஸத். கனவில் அனுபவத்திற்கு இலக்காவது போன்று வெறும் மயக்கத்தை உண்டுபண்ணுவது எதுவோ அது பிராதிபாசிக ஸத். கடவுள் இவ்வுலகமாகவும் உயிர் களாகவும் தோன்றி இருக்கிறார். உலகமாகவும் உயிர்களாகவும் தென்படுகின்ற காட்சியை வியாவஹாரிக ஸத் என்கின்றோம். உலகமாகவும் உயிர்களாகவும் தென்படுகின்ற காட்சி மறைந்தபின் உண்டாகின்ற பரம்பொருள் காட்சியைப் பாரமார்த்திக ஸத் என்கின்றோம். வியாவஹாரிக ஸத்தில் தென்படுகின்ற பொருளின்மீது மற்றொருபொருளை ஆரோபிப்பதைப் பிராதிபாசிக ஸத் என்கின்றோம். பிராதிபாசிக ஸத்தைச் சில உதாரணங்களைக் கொண்டு விளக்குவோம். கயிற்றைப் பாம்பாகக் காண்பதுவும், கிளிஞ்சலை வெள்ளியாகக் காண்பதுவும், கானல் நீரை உண்மையான நீராகக் காண்பதுவும் பிராதிபாசிக ஸத்துக்கு உதாரணங்களாகும். மங்கிய வெளிச்சத்தில் சுருண்டு கிடக்கும் கயிற்றைப் பார்த்துப் பாம் பாகப் பொருள்படுத்துகிறோம். பாம்பாகத் தென்படும் பொரு ளுக்குப் பிராதிபாசிக ஸத் என்று பெயர். அது ஒரு மயக்க நிலையில் உண்டாவதாகும். வியாவஹாரிகத்தில் உள்ள ஒரு பொருளை மயக்கத்தால் மற்றொரு பொருளாகக் காண்பதற்குப் பிராதிபாசிக ஸத் என்று பெயர். உண்மையான பாம்பு வியாவஹாரிக ஸத். கயிற்றின்மீது பாம்பை ஆரோபிப்பது பிராதிபாசிக ஸத். உண்மையான வெள்ளி வியாவஹாரிக ஸத். கிளிஞ்சலை வெள்ளி என்று எண்ணுவது பிராதிபாசிக ஸத். உண்மையான தடாகம் வியாவஹாரிக ஸத். கானல்நீர் பிராதிபாசிக ஸத்.

களிமண்ணையும் சாயத்தையும் கொண்டு புலி ஒன்றைச் சிற்பி அமைக்கின்றான். அதே களிமண்ணையும் சாயத்தையும் கொண்டு அழகிய பெண் வடிவம் ஒன்றை அவன் அமைக்கின்றான். அவைகளை உயிர் உடையவைகள் என்று மயக்கம் கொள்கின்றவன் புலியைப் பார்த்துப் பயப்படுகின்றான்; பெண்ணைப் பார்த்துக் காமுறுகின்றான். இங்குத் தென்படும் புலியும் பெண்ணும் பிராதிபாசிக ஸத். மண்ணைக்கொண்டு லிங்கம் அமைக்கும்போது அம்மண்ணில் தெய்வத்தைக் காண முற்படுகிறோம். தெய்வத்தைக் காணும்பொழுது அது பாரமார்த்திக ஸத். நாமரூப வடிவத்தில் இருக்கும் இவ்வுலகத்திற்குப் பரம்பொருள் ஆதாரமாக இருக்கிறார். உண்மையில் பரம்பொருள் தாம் இருக்கிறார். பரம்பொருளாகக் காணும்போது அதைப் பாரமார்த்திக ஸத் என்கின்றோம். நாமரூப வடிவமாக உலகத்தைக் காணும்பொழுது அது வியாவஹாரிக ஸத். நாமரூப வடிவமாக இருக்கும் இவ்வுலகம் இன்பம் தரக்கூடியது அன்று. மயக்கத்தால் உலகம் இன்பம் தரக்கூடியது என்று அதற்கு மதிப்புக் கொடுத்து அதை நாடி ஓடுவது பிராதிபாசிக ஸத்.

மயக்கத்தால் உண்டாகும் பிராதிபாசிக ஸத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு வியாவஹாரிக ஸத்தைச் சாதனைக்குப் பயன் படுத்திப் பாரமார்த்திக ஸத்தைக் காணவேண்டும்.

உலக நிலையில் இவன் என் மகன், இவள் என் மகள், இவள் என் மனைவி என்றெல்லாம் பொருள்படுத்துவது வியாவஹாரிக ஸத். கடவுள்தாம் மகனாகவும் மகளாகவும் மனைவியாகவும் வந்திருக்கிறார் என்னும் எண்ணத்தை உறுதிப்படுத்தி அவர்களைக் கடவுள் மயமாகக் காண்பது பாரமார்த்திக ஸத். மகனாகவும் மகளாகவும் மனைவியாகவும் தென்படுகின்ற வடிவங்களில் மயங்கி அவர்கள் மூலம் இன்பம்பெற விழைவது பிராதிபாசிக ஸத். எனவே பாரமார்த்திக ஸத், வியாவஹாரிக ஸத், பிராதிபாசிக ஸத் ஆகிய இவற்றை நன்கு விளங்கிக்கொண்டு வாழ்வை நாம் சீர்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

கேள்வி: *(93)* ஞான பூமி ஏழு என்பதன் விளக்கம் தருக.

பதில்:*"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்பு உடைத்து"* - என்பது மறைமொழி

எழுமை என்பது ஈண்டு ஏழு ஞான பூமிகளாகப் பொருள் படுகிறது. இந்த ஏழினுள் மூன்று ஞான பூமிகளை நாம் நாள்தோறும் நம் அனுபவத்தில் பெற்று வருகிறோம். விழித் திருக்கும் நிலை ஜாக்ரதாவஸ்தை. அது ஒரு ஞான பூமி. கனவு காண்கிறோம். அது சொப்பனாவஸ்தை. கனவற்ற உறக்கம் சுழுத்தி அவஸ்தை. அது மற்றொரு ஞான பூமி. இந்த நிலைகளுக்கு மேல் படிப்படியாக வேறு பல நிலைகளுக்கு ஞான சாதனத்தின் மூலம் நாம் போக முடியும். அத்தனைவிதமான உணர்வு நிலைகளைச் சௌகரியத்தின் பொருட்டு ஏழு ஞான பூமிகளாக ஆன்றோர்கள் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஏழாவது ஞான பூமி இறைவனோடு ஜீவாத்மன் இரண்டறக் கலத்தலாம். நிர்விகல்ப ஸமாதி என்று சொல்லப்படுவதும் அதுவே. அந்த முடிவான நிலைக்கும், இப்பொழுது நாம் அனுபவித்து வருகிற ஜாக்கிரதா வஸ்தைக்கும் இடையில் மூன்று நிலைகளிருக்கின்றன. அவை களுக்கு நூலோர் விதவிதமான பெயர்களை வழங்கியிருக் கிறார்கள். அப்பெயர்களை நாம் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நாம் பெற்றுள்ள உணர்வு திரண்ட தூய உணர்வாகச் சாதனத்தின் மூலம் திருந்தியமையவல்லது என்பதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் போது மானது.

கேள்வி: *(94)* காலத்தைப் பற்றிய விளக்கம் யாது?

பதில்: இரண்டு நிகழ்ச்சிகளுக்கிடையே உள்ள இடையீடே காலம் என்னும் பெயர் பெறுகிறது. சூரியன் நம் காட்சிக்கு வருவதைச் சூரியோதயம் என்கின்றோம். அது ஒரு நிகழ்ச்சி. பிறகு சூரியன் நம் காட்சியிலிருந்து மறைகிறது. அந்த நிகழ்ச்சியை அஸ்தமனம் என்கின்றோம். உதயத்துக்கும் அஸ்த மனத்துக்கும் இடையில் உள்ள இடையீடு காலம் என்னும் பெயர் பெறுகிறது. அனைத்தையும் விழுங்கவல்லது காலம். அண்டங்களைக் காலம் அழித்துவிடுகிறது. காலத்தை வெல்ல யாருக்கும் இயலாது. மனம் உள்ளபொழுதுதான் காலம் உண்டு. மனம் ஒடுங்கினால் காலம் இல்லை. உலக நிகழ்ச்சி களை ஏற்காத மனதுக்குக் காலம் இல்லை. இரவு பகலற்ற

நிலை ஒன்றை மனத்தகத்து நாம் பெறமுடியும். தூங்கும் பொழுதே ஒருவிதத்தில் காலம் அற்றுப் போகிறது. சர்வகால மும் கடவுள் சிந்தனையில் இருப்பவர்களுக்குக் காலம் மறைந்து போய்விடுகிறது. சதாநிஷ்டர்களுக்கு உலக நிகழ்ச்சிகள் எதுவும் மனதுக்கு வருவதில்லை. எனவே அவர்களுக்குக் காலம் இல்லை.

காலசொரூபமாக இருப்பவர்கள் காலன் எனப்படுகின்றனர். காலனுக்கு யமன், மறலி, கூற்றுவன் என்னும் வேறு பெயர்களும் உண்டு. காலனையும் எடுத்து விழுங்கிக் கொண் டிருப்பவர் சிவபெருமானாவார். எனவே அவருக்குக் காலகாலன் என்னும் பெயர் வந்தது. கடல் நதிகளையெல்லாம் எடுத்து விழுங்கிக் கொண்டிருப்பது போன்று சிவபெருமான் காலத்தைத் தன்னகத்து எடுத்து ஒடுக்கிக் கொண்டிருக்கிறார்.

காலத்தைச் சரியாகப் பயன்படுத்துபவன் செயற்கரிய செயலைச் செய்து சாதிக்கிறான். உடல் எடுத்திருப்பவன் கணப்பொழுதையும் வீணாக்கலாகாது. இறந்த காலம் திரும்பி வருவதில்லை. எதிர்காலம் இப்பொழுது நம் கைவசத்தில் இல்லை. இப்பொழுது நம் கைவசத்தில் இருப்பது நிகழ்காலம் ஒன்றே. கைவசத்தில் இருக்கும் நிகழ்காலத்தை நல்வழியில் பயன்படுத்திக்கொண்டு வருவது காலத்தை உபாசனை செய்வதாகும். அப்படிச் செய்கின்றவர்களுக்குக் காலம் அனுகூல மானதாக வடிவெடுக்கிறது. காலம் அனுகூலமானதாக ஆய் விட்டால் செயற்கரிய செயல்களையெல்லாம் செய்து சாதித்து விடலாம். காலத்தை நன்கு பயன்படுத்தத் தெரிந்து கொண்ட வனுக்கு நீண்ட ஆயுள் வேண்டியதில்லை. குறுகிய காலத்தில் செயற்கரிய செயல் செய்து சாதித்துவிடலாம். ஒருவன் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து சாதிக்கும் காரியங்களை விவேகானந்தரும் சங்கரரும் குறுகிய காலம் வாழ்ந்து சாதித்து விட்டார்கள். காலத்தை நன்கு பயன்படுத்தியதற்கு இவர்கள் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டாகும். காலத்தை நன்கு பயன்படுத்துபவன் காலத்தை வெல்வதோடு எல்லார் உள்ளத் திலும் யாண்டும் வாழ்பவனாகின்றான். கடவுள் சிந்தனையில் கழிக்காத நாளைப் பிறவாத நாளாகப் பக்தர்கள் கருதுகின்றனர். "பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" எனத் திருநாவுக்கரசர் சிதம்பர

நாதனைத் துதித்துப் புகழாத நாளெல்லாம் பிறவாத நாட்களென்கிறார். கடவுள் சிந்தனையில் கழிக்கும் காலமே நன்கு பயன்படுத்தப்பட்டதாகிறது.

கேள்வி: *(95)* திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் வாக்கு:- "மனிதனிடம் மறைந்துள்ளது தெய்வீகமேயாகும். அந்தத் தெய்வீக நிலையை ஒவ்வொருவனும் அடையலாம். ஒளி சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. இருள் போர்வை ஒன்று அதைச் சூழ்ந்திருக்கிறது." இதை விளக்க வேண்டுகிறேன்.

பதில்: ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் தெய்வீகமே திகழ்ந்து கொண்டிருக்கிறது. அந்தத் தெய்வீகத்திடத்திருந்தே மனிதனுடைய வாழ்க்கையே உருவெடுக்கிறது. தெய்வீகம் மனதுக்குள்ளே இருந்தும் அது எல்லார்க்கும் புலப்படுவதில்லை. "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்று தாயுமானவர் பகர்கின்றார். "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதவன்" என்று மாணிக்கவாசகர் பகர்கின்றார். அந்தத் தெய்வம் அருட்பெருஞ்ஜோதி வடிவம். அதாவது பிரபஞ்ச வெளிச்சம் எதனோடும் அதை ஒப்பிட முடியாது. ஆத்மப் பிரகாசம் என்று அதைச் சொல்லலாம். அணைந்துபட்டுப் போதல் அதற்குக் கிடையாது. தேகங்கள் பலவற்றை மாறி மாறி அது எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அது என்றைக்கும் அணையா விளக்கு. அக்ஞானம் என்னும் இருள் போர்வை ஒன்று அதை மூடிக் கொண்டிருக்கிறது. ஆகையினால் அதன் சுடர் எல்லார்க்கும் விளங்குவதில்லை. அக்ஞானம் என்னும் இருள் போர்வையை அகற்றி விடுதற்கு ஆத்ம சாதனங்கள் புரியவேண்டும். அங்ஙனம் சாதனத்தைக் கொண்டு இந்த இருள் போர்வையை முற்றிலும் நீக்கிவிடலாம். அப்பொழுது ஞானோதயம் வருகிறது. மனிதன் என்றைக்கும் சுயஞ்ஜோதி சொரூபம் என்பதை ஞானம் வந்த பிறகு சாதகன் அறிந்து கொள்கிறான்.

கேள்வி: *(96)* நீங்கள் இயற்றியுள்ள தினசரி தியானம் என்னும் புஸ்தகத்தில் "மனக்கண்ணாடி" என்னும்

தலைப்பில் அடங்கியிருக்கும் கருத்து ஒன்று எனக்குப் புலப்படவில்லை. "பச்சைக் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்ப்பவர்களுக்கு உலகெல்லாம் பச்சையானது. கண்ணாடியின் நிறத்திற்கு ஏற்பக் காணப்படு பொருள்களின் நிறம் மாறுகிறது. மனம் என்னும் கண்ணாடி அத்தகையது. கெட்ட மனமுடையவர்களுக்கு உலகம் கேடானது. நல்ல மனமுடையவர்களுக்கு உலகெல்லாம் நல்லது. மனமென்னும் கண்ணாடியை உடைத்தவர்களுக்கு எல்லாம் கடவுள் மயம்." இக்கடைசிக் கூற்று எனக்கு விளங்கவில்லை. எனக்கு ஏற்பட்டுள்ள ஐயத்தைச் சிறிது விரித்து விளக்கி விடுகிறேன். நாம் மனதின் வழி சிந்திக்கிறோம். சிந்திக்கிறோம் என்றால் மனம் செயலாற்றுகிறது என்று பொருள். மனதைக் கண்ணாடியோடு ஒப்பிட்டிருக்கிறீர்கள். அந்தக் கண்ணாடியையே உடைத்தவர்க்கு - சிந்திக்கும் ஆற்றலையே துளைத்தவர்க்கு எல்லாம் எப்படிக் கடவுள் மயமாகும்? மனமே இல்லாமல் எப்படி இருக்க முடியும் என்பதைக் கற்பனை கூடச் செய்ய முடியவில்லை. மனமானது கடவுள் காதல் நிரம்பப் பெற்றதாக இருக்கவேண்டுமென்றால் அதில் பொருள் உண்டு. ஆனால் மனதையே உடைத்துவிடு என்பதுதான் பொருளற்றதாகத் தோன்றுகிறது. தயவு செய்து விளக்கவும்.

பதில்: ஆத்மசாதகன் புரிகின்ற சாதனங்கள் எல்லாம் மனதைப் பண்படுத்துதல் பொருட்டேயாம். மனம் பண்பாடு அடைந்து வருவதற்கு ஏற்ப உலகக் காட்சியே மாறியமைகிறது. இதற்குத் தக்க சான்றுகளாகத் தர்மராஜனையும் அவனுடைய தாயாதி துரியோதனனையும் எடுத்துக்கொள்ளலாம். இருவரும் ஒரே ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே குரு துரோணாச்சாரியரிடம் கல்வி பயின்றவர்கள். அவர்களுக்குக் கல்வி புகட்டிக் கொண்டுவந்த பொழுதே அவர்கள் எத்தகைய இயல்புகளில் ஊறி வளர்ந்து வந்தார்கள் என்பதைத் துரோணர் அறிந்து கொண்டார். அவர்கள் இருவருக்கும் பரீக்ஷை ஒன்று வைத்தார். அப்பரீக்ஷையில் ஒரே கேள்வியை இரண்டு விதங்களில் அமைத்து இருவருக்கும் கட்டளையொன்று பிறப்பித்தார். இவ்வுலகில் நல்லவன் ஒருவனைப் பார்த்து அழைத்துக்

கொண்டு வரவேண்டுமென்று துரியோதனனுக்கு உத்தர விட்டார். இவ்வுலகில் கெட்டவன் ஒருவனைத் தேடிப்பார்த்துக் கொண்டுவர வேண்டுமென்று தர்மராஜனுக்கு ஆணையிட்டார். குருவின் கட்டளைக்கு இணங்கி இருவரும் வெளியே புறப்பட்டார்கள். நல்லவன் ஒருவனைக் கண்டுபிடிக்க துரி யோதனன் உலகெங்கும் அலைந்து திரிந்தான். எங்குத் தேடியும் நல்லவன் ஒருவன் அவனுக்கு அகப்படவில்லை. ஏனென்றால் அவனுடைய ஆராய்ச்சியின்படி ஒவ்வொரு மனிதனிடத்தும் ஏதோ ஒருவிதமான குறைபாடு இருந்தது. குறைபாடு இல்லாத மனிதன் குவலயத்தில் இல்லவே இல்லை. ஆதலால் உலகில் நல்ல மனிதன் இல்லவே இல்லை என்னும் முடிவு கட்டிய வனாகத் துரியோதனன் துரோணாச்சாரியரிடம் வந்து தெரி வித்தான். அடுத்தபடியாகக் கெட்டவனைத் தேடிக் குந்தியின் மைந்தன் தர்மராஜா யுதிஷ்டிரன் தரணியெங்கும் அலைந்தான். ஆனால் அவனுக்குத் துஷ்டன் யாரும் தென்படவில்லை. ஒவ்வொரு மனிதனிடத்தும் ஏதோ ஒருவிதமான நலனே நிறைந்திருந்தது. ஒன்றுக்கும் உதவாத துஷ்டன் என்று சொல்லப் படும் இழிநிலையில் உலகில் யாருமே இல்லை என்னும் முடிவு கொண்டவனாகத் தர்மராஜன் துரோணாச்சாரியரிடம் வந்து தெரிவித்தான். அவரவர் மனதுக்கு ஏற்ப உலகக் காட்சி மாறியமைகிறது என்னும் உண்மை இதினின்று வெளி யாகிறது.

கடவுளுக்கு ஒரு விளக்கம் உண்டு. நலமுடையான்; கேடு இல்லான் என்பதாகும். தர்மராஜன் கண்ட காட்சி அது. அவன் கண்ட காட்சி கிட்டத்தட்ட கடவுள் காட்சி ஆகும். கடவுளைக் காணவல்லார் யார் என்பது கேள்வி. உண்மையில் உலகில் உள்ள உயிர்களெல்லாம் கடவுளையே கண்டு வருகின்றன. ஏனென்றால் உலகனைத்தும் ஆனவர் கடவுள். காட்சியில் அவருக்குப் புறம்பான பொருள் ஒன்றுமில்லை. கண்டு வருகிற கடவுளை அவரவர் மனப்பான் மைக்கேற்ற பிரகாரம் உலக மக்கள் பொருள்படுத்தி வருகின் றனர். கொடியவர்களுக்கு உலகனைத்தும் கொடியது. நல்லார்க்கு உலகனைத்தும் நல்லது. நலம், கேடு இரண்டும் கலந்து அமையப்பெற்ற மனம் உடையவர்களுக்கு உலகிலும் நலம்

கேடு ஆகிய இரண்டும் நிறைந்திருக்கின்றன. நல்ல மனது ஸத்துவகுணத்தை நோக்கிப் போகிறது. மனது முற்றிலும் ஸத்துவகுணத்தோடு அமையப்பெறுகின்றவிடத்து அது தூய மனதாகிறது. நிறமற்ற ஒப்பமான கண்ணாடியின் வாயிலாகப் புறத்திலிருக்கும் பொருள்களை நாம் உள்ளபடி காண்கின்றோம். தெளிந்தமனம் அடையப் பெறுகின்ற ஆத்ம சாதகர்கள் பிர பஞ்சத்திலுள்ள அனைத்தையும் தெய்வீகம் வாய்க்கப் பெற்ற வைகளாகக் காண்கின்றனர். இத்தகைய காட்சியைத் தெய்வக் காட்சி எனலாம். இதற்குமேல் ஒருபடி மனது பண்பாடு அடைகின்றபொழுது தெய்வம் ஆத்ம சாதகனுக்குரிய இஷ்ட மூர்த்தியின் வடிவெடுத்து வந்து தனக்கு அனுக்கிரகம் செய்வதை அனுபூதியில் காண்கின்றான். இத்தகைய நிலையிலிருக்கும் மனது பேரன்பு நிறைந்த மனதாகிறது; உலகப்பற்றற்ற மனது ஆகிறது; தெய்வப்பற்று நிரம்பப்பெற்ற மனது ஆகிறது; இதற்கு மேல் முன்னேற்றமில்லையா என்னும் கேள்வி அடுத்தபடியாக வருகிறது. ஆம்; இதற்கு மேலேயும் முன்னேற்றமுண்டு. மன தற்ற நிலையில் ஒருவாறு நாம் அனைவரும் சிறிது நேரத் திற்காவது நாள்தோறும் இருந்து வருகிறோம். நாம் அயர்ந்து தூங்குவதைச் சுழுத்தி நிலை என்கிறோம். அங்குக் கனவு ஒன் றும் காணப்படுவதில்லை. கனவற்ற உறக்கமே சுழுத்தி நிலை எனப்படுகிறது. மனதுக்கு அங்கு வேலையில்லை. தூங்கும் பொழுது மனது வேலை செய்தால் அது கனவு எனப்படுகிறது. கனவில் சிந்தனை நிகழ்கிறது. சுழுத்தியில் சிந்தனை இல்லை. இதை மற்றொரு விதத்தில் பகருமிடத்துக் கனவிலும் நனவில் போன்றே மனது இடம் பெறுகிறது. ஆனால் சுழுத்தியிலோ மனதுக்கு இடமில்லை. ஆழ்ந்த உறக்கம் மனதற்ற நிலை. அங்கே காணப்படுபொருள் ஒன்றுமில்லை. ஆயினும் அது சூனியம் அல்ல. அது ஓர் ஆனந்த நிலை. அதை விளக்குவது எளிதன்று. மற்று உலகத்தோடு சம்பந்தப்படாத, சொல்லில் அடங்காத ஆனந்த நிலை என்றே அதை இயம்பலாம். அத னால் உறங்கச் செல்லுதற்கு யாரும் அஞ்சுவதில்லை. மகிழ் வுடன் அனைவரும் உறக்கத்தை நாடிச் செல்லுகின்றனர். நல்ல உறக்கத்தை ஆனந்தநிலை என்றே எல்லாரும் சிலாகித்துச் சொல் கின்றனர். ஆதலால் மனதற்ற நிலை நமக்குப் புறம்பானதல்ல.

சுழுத்தி நிலைக்கு நிகராகச் சமாதி நிலை என்பது ஒன்று உண்டு. சுழுத்திக்கும் சமாதிக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமையை இப்பொழுது ஆராய்வது அவசியமாகிறது. உறங்கப் போகிறவன் உறக்கத்தினின்று விழித்து எழுந்திருக்கிற பொழுது தான் படைத்திருக்கிற பழைய மனதுடன் எழுந்திருக் கிறான். ஆனால் சமாதி நிலைக்குப் போகிற ஆத்ம சாதகன் அந்தச் சமாதிநிலை கலைந்து நனவு என்று சொல்லப்படும் ஜாக்கிரதாவஸ்தைக்கு வரும்பொழுது அவனிடத்துப் பழைய மனம் எஞ்சியிருப்பதில்லை. கண்ணாடி உடைபட்டுப் போவது போன்று மனதும் நாசமுறுகிறது. மனோ நாசமே சாதனத்தின் முடிந்தநிலை. முக்குண மயமாயிருக்கின்ற மனது அழிவுறு வதைத்தான் திரிபுர தகனம் என்று புராணங்கள் உருவகப்படுத்தி இயம்புகின்றன. "மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்" என்கின்றார் தாயுமானவர். சங்கல்ப விகல்பங்களையெல்லாம் துடைத்துத் தள்ளிவிட்டு ஆத்மா ஆத்ம சொரூபத்திலேயே திளைத்திருப்பது சமாதி நிலையென்று சாஸ்திரங்கள் சாற்று கின்றன. அந்நிலை அடைந்தவனுக்கு ஜீவபோதம் மிச்சமில்லை. விருப்பு வெறுப்பு என்னும் சிந்தைக்குரிய செயல் இல்லை. மனதற்ற நிலையில் அத்தகைய முக்த புருஷன் பேரானந் தத்திலேயே திளைத்திருக்கின்றான். அவனுடைய சந்நிதான விசேஷத்தால் அவனோடு தொடர்பு கொள்ளுகிற மற்ற ஆத்ம சாதகர்களுக்கும் மனோ சாந்தி ஏற்படுகிறது. மனோ சாந்தி என்பது மனதின் செயலடங்கிய நிலையாம். ஆக, மனதை நிர்மூலமாக்கி விடுகின்றவிடத்து ஆத்ம சாதகன் பரசொரூபத்தில் ஒன்றுபட்டிருக்கிறான். இது சாதாரண மனதுக்கு எட்டாத நிலையே. பண்பட்டு வருகிற மனது இதை ஏகதேசம் அறிகிறது. பண்பட்டு முற்றிலும் மனது ஒடுங்குகின்றவிடத்துப் பரநிலை தன்னில் தானாய் இருக்கிறது. ஊமையன் கண்ட கனவு போன்று அது சொல்லில் அடங் காதது. சிந்தனைக்கு எட்டாதது. மனோநாசம் செய்துவிட்டு அப்பெருநிலை அடைவதே பிறவியின் குறிக்கோளாம்.

கேள்வி: (97) முக்குணங்களும் தெய்வ சொரூபமா?

பதில்: ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களால்

ஆகியது இவ்வுலகம். இறைவன் தாமே உலகாக இலங்கு கின்றார். 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பது மறைமொழி. மூன்று குணங்களுள் தமோகுண மயமாயிருப்பது ஜடப்பொருள். நடமாட்ட மயமாயிருப்பது ரஜோகுணம். அறிவு மயமாகவும் மேலாம் பிறப்பிலும் இருப்பவை ஸத்துவகுணம் நிறைந்தவை களாகும்.

மூன்று குணங்களுள் கடைத்தரத்தில் இருப்பது தமோ குணம். இடைத்தரத்தில் இருப்பது ரஜோகுணம். தலைத் தரத்தில் இருப்பது ஸத்வகுணம். கீழான குணம் மேலான குணமாகப் பரிணமிப்பது இயற்கையின் திட்டமாம். ஆகையால் குணங்கள் மூன்றும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவைகள்.

கேள்வி: *(98)* இறைவனைப் பற்று அற்றவன் எனக் கூறுவது ஏன்?

பதில்: இறைவன் தானே உலகு அனைத்தும் ஆயிருக் கிறான். அத்தகையவனைப் பற்றற்றவன் எனப்பகர்வது ஏன் என்பது கேள்வி. இறைவன் பற்றற்றவன் என்பதற்குப் பிரமாணம்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

முக்குணங்களுக்கு அப்பாலுள்ள பரமன் முக்குணங்களைத் தன்னிடத்துத் தோற்றுவித்துக் கொள்ளுகிறான். முக்குணங்கள் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்பனவாம். அவைகளின் நிறம் வெண்மை, சிவப்பு, கறுப்பு. உயிர்த் தத்துவமாய் அமைந் திருப்பவைகளிடத்து ஸத்துவம் ஓங்கியிருக்கிறது. கிரியை, விசை மயமாய் இருப்பது ரஜஸ். ஜடப்பொருளாயிருப்பது தமஸ். தமோகுணம் ரஜோ குணமாக மாறுவதும், ரஜோகுணம் சத்வகுணமாக மேலோங்குவதும், சத்வகுணம் குணாதீதத்தில் ஒடுங்குவதும் இயற்கையின் பாங்கு. நிறமற்ற நீராவி வானத்திலே வெண் மேகமாகவும், சிவந்த மேகமாகவும், கரு மேகமாகவும் காட்சி கொடுக்கிறது. ஆயினும் அந்த மூன்று நிறங்களில் பற்றற்றதாயிருப்பதே நீராவியின் பாங்கு ஆகும். இவ்வுண்மை மக்கள் எல்லார்க்கும் வெளிப்படையாக விளங்குகிறது.

எண்ணிறந்த உலகங்களாகவும் உயிர்களாகவும் தன்னைத் தோற்றுவித்துக் கொள்ளுகிற இறைவன் அவ்வுலகங்களுக்கும் உயிர்களுக்கும் உண்மையில் அப்பாற்பட்டவனாக இருக்கிறான். இது சாத்தியமா அல்லது இது பொருந்துமா என்னும் கேள்வி எழலாம். இதற்கு விடை நம்மிடத்தே இருக்கிறது. கனவு காண்கின்றபொழுது நாம் கனவிலே நமக்கேற்ற உலகத்தையும் உயிர்க் கூட்டத்தையும் கற்பனை பண்ணுகிறோம். அப்படிக் கற்பனை பண்ணுகிற நாம் கற்பனை பண்ணிய சூழ்நிலையிலும் உயிர்களிடத்துப் பற்றுதல் வைக்காதிருக்கிறோம். கனவை விட்டு விழித்துக்கொண்ட பிறகு கனவில் தோன்றிய உயிர்களும் உலகும் போன இடம் நமக்குத் தெரியாது. அவைகளில் நாம் பற்று வைக்காது வெறுமனே அவை யாவையும் மனத் தகத்தே தோற்றுவித்ததே அதற்குக் காரணமாகும். நம்முடைய சிற்றியல்பைக் கொண்டு சிறிது நேரத்துக்கு நாம் கற்பனை பண்ணிய கனவு உலகில், விழித்துக் கொண்ட பிறகு நாம் எங்ஙனம் பற்றுதல் வைக்காதிருக்கிறோமோ அதே விதத்தில் கனவு நிலையையும் நனவு நிலையையும் யாண்டும் தாண்டி யுள்ள பரமன் உலகங்கள் யாவையும் தோற்றுவிப்பதும் நிலை பெறச் செய்வதும் துடைப்பதும் ஆகிய செயல்களைத் திரு விளையாடலாகச் செய்து வருகிறான். நிறமற்ற மேகம் நிறமற்ற மேகமாகத் தன்னைக் காட்டிக் கொள்ளுவது அதன் பாங்கு. ஒரு நிறத்தையும் அது ஒருபொழுதும் உண்டுபண்ணவில்லை. நிறத்தை உண்டுபண்ணியது போன்று அது தென்படுவது அதன் இயல்பு. அங்ஙனம் உலகனைத்தையும் கடந்துள்ள கடவுள் உலகமயமாகத் தன்னைக் காட்டிக் கொண்டிருக் கிறான். அதில் அவன் கட்டுண்டிருந்தவன் அல்லன். வெறும் தோற்றத்தைப் பற்றுதல் எனப்பகர்வது பொருந்தாது. தான் தோற்றுவித்துள்ள பிரபஞ்சத்தில் சிறிதும் பற்றற்றவனாயிருப்பது பரமனுடைய பாங்காம்.

கேள்வி: *(99)* நாம் உலகுக்கு நன்மை செய்ய முடியுமா என்னும் கேள்விக்கு விவேகானந்த சுவாமிகள் பதிலளிக்கின்றார்; பாரமார்த்திக நிலையில் உலகுக்கு நாம் நன்மை செய்ய முடியாது. வியவகாரிக நிலையில் உலகுக்கு

நாம் நன்மை செய்ய முடியும். இதன் உட்கருத்தை விளக்குவீர்களாக.

பதில்: இப்பொழுது நம் காட்சியில் இருப்பது வியவஹாரிக நிலை. அதாவது உலகம் தோன்றுகிறது, இந்த உலகத்தில் வெவ்வேறு பாங்குடைய ஜீவர்கள் இருக்கிறார்கள். இதில் நல்லவர்கள் உண்டு, கெட்டவர்கள் உண்டு, முன்னேற்றம் அடைய ஆசைப்படுகிறவர் இருக்கிறார்கள், கீழ்மையில் விரைந்து கீழ்நோக்கிச் செல்பவர்களும் இருக்கிறார்கள், இங்குச் சுகம் உண்டு துக்கம் உண்டு, துன்பத்தை அகற்றி இன்பத்தைப் பெருக்குதற்கான முயற்சிகள் உண்டு. இதை வியவஹாரிக நிலை என்கின்றோம். பாரமார்த்திக நிலை என்பது பரம் பொருளைப் பற்றியது. பரம்பொருள் ஒன்றுதான் இருக்கிறது, அது போக்கற்றது, பேரானந்தப் பெருநிலையுடையது.

இவ்வுலகத்தைக் கொண்டே இந்தப் பெருநிலையையும் சுமாராக ஊகித்துத் தெரிந்து கொள்ளலாம். கடல் இருக்கிறது. கடல் முழுதும் சேர்ந்து பாரமார்த்திக நிலை. அது போவது கிடையாது, வருவது கிடையாது. ஆகாய விமானத்திலிருந்து பார்த்தால் ஒரே அமைதியான நீர்ப்பரப்பு. ஆனால் கடலுக் குள்ளே ஒரு படகில் நாம் செல்லுவோமானால் மலைபோன்று அலை உருண்டு வருவதை நாம் காண்போம். அதை எதிர்த்துப் படகைச் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்துதலில் கீழே இறங்குவதும் மேலே ஏறுவதும் ஆன போராட்டங்கள் உண்டு. கடலுக்குள்ளேயே நீரோட்டம் உண்டு, உறைபனியாக மிதக்கிக் கொண்டிருக்கும் கற்பாறைகள் உண்டு. இத்தகைய வேறுபாடு இருப்பது அதன் வியவஹாரிக நிலை. பரந்த நீர்ப்பரப்பு அதன் பாரமார்த்திக நிலை.

அண்டத்தில் பூமிபோன்ற கோளங்கள் சுழன்று ஓடு கின்றன. அவை உருவெடுக்கின்றன, நிலைத்திருக்கின்றன, தேய்ந்து மறைகின்றன. இவை யாவும் வியவஹாரிக நிலை. அண்டங்கள் அனைத்தையும் தொகுத்தெடுத்தால் போக்கு இல்லை, வரவு இல்லை. இயக்கம் இல்லை. எல்லாம் நிறைநிலை. இது பாரமார்த்திக நிலை.

நமது வாழ்க்கையில் ஜனன மரணத்துக்கு உட்படுவது, முன்னேற்றம் அடைய முயலுவது, அதில் வெற்றி அடைவது

தோல்வியடைவது ஆகிய இவை யாவும் வியவஹாரிக நிலை. ஆத்ம சொரூபம் யாண்டும் இதற்குச் சாக்ஷியாய் இருப்பது பாரமார்த்திக நிலை. ஆகையினால் பாரமார்த்திக நிலையில் உதவி பண்ணுபவனும், உதவி பெறுபவனும் இல்லை. வியவ ஹாரிக நிலையில் அந்த வேற்றுமை உண்டு. இப்பொழுது வியவஹாரிக நிலையில் உள்ள நாம் பரோபகாரமாக வாழ்ந்திருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கேள்வி: *(100)* முருகன் சிவனுக்கு உபதேசித்ததன் பொருள் யாது?

பதில்: முருகன் "ஓம்" என்னும் பிரணவத்தின் உட்பொரு ளைச் சிவனுக்கு எடுத்து ஓதியதால் அவன் சுவாமிநாதன் என்றும், தகப்பன் சுவாமி என்றும், பாலகுருநாதன் என்றும், சிவகுருநாதன் என்றும் பெயர்கள் பெற்றான். சிவபெருமான் முருகனிடமிருந்து "ஓம்" என்னும் பிரணவத்துக்கு விளக்கம் கேட்டதன் வாயிலாக முருகப்பெருமானின் ஞானம் எத்தகையது என்பதை அறிந்துகொண்டார். தம்போன்று முருகனும் ஞான சொரூபமாக விளங்குவதைச் சிவபெருமான் அந்த நிகழ்ச்சியின் மூலம் அறிந்து பெருமகிழ்வு எய்தினார்.

நம் எல்லார்க்கும் தந்தையாக இருப்பவர் சிவபெருமான். நம்முடைய சித்தத்திலுள்ள மலம் அறுபடுகிறபொழுது நாம் சிவகுமாரர்களாகி விடுகிறோம். அப்பொழுது முருகன் போன்று நாமும் "ஓம்" என்னும் பிரணவத்தின் உட்பொருளை அறிந்தவர் களாகின்றோம். சித்த மலம் அறுபட்டுச் சிவசொரூபமாகின்ற பொழுது நாமும் தந்தையாகிய சிவபெருமானுக்கு நிகர் ஆகின் றோம். அப்பொழுது சிவன் வேறு, நாம் வேறு அல்ல. நாம் அத்தகைய பெருநிலை அடைவதைப் பார்த்துத் தந்தை யாகிய சிவபெருமான் பெருமகிழ்வு அடைகின்றார்.

காமத்துக்கு வசப்பட்டுப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு உலகத்தவர்கள் தந்தைகளாகின்றார்கள். உலக நிலையில் தந்தையாக இருப்பவரும் குமரனாக இருப்பவனும் அக் ஞானத்தில் இருக்கிறார்கள். அக்ஞான நிலையில் தந்தை வேறு, மகன் வேறு ஆகின்றார்கள். ஞான நிலையில் தந்தையும் மகனும் ஒன்றே. ஞானத்துக்கு வயது முக்கியமானதன்று.

சம்பந்தப் பெருமானுக்கு மூன்று வயதில் ஞானம் வந்துவிட்டது. மூன்று வயதிலேயே அவர், பெற்ற தந்தைக்கும் மிக்காராக ஆகிவிட்டார். ஈண்டுச் சிவபெருமானும் முருகனும் ஞானத்தின் சொரூபமாகிறார்கள். எனவே அவர்களுக்கிடையில் வேற்றுமை இல்லை. அருள் உணர்வு ஓங்கிச் சித்தத்திலுள்ள மலம் அறுபடுகிறபொழுது நம்மிடத்தில் ஞானம் என்கிற குழந்தை பிறக்கின்றது. அப்பொழுது நாம் ஞானத்துக்குத் தந்தை யாகின்றோம். அந்த ஞானக் குழந்தைதான் முருகன் ஆவான். நம்மிடத்தில் தோன்றிய ஞானம் நமக்குப் பிரணவத்தின் உட்பொருளை உபதேசிக்கிறது. ஞானத்தைத் தோற்றுவித்த தந்தையாகிய நமக்குக் குழந்தையாகிய ஞானம் பிரணவத்தின் உட்பொருளை உபதேசிக்கிறது. இந்தத் தத்துவம் குமரன் சிவபெருமானுக்கு உபதேசிப்பதில் அடங்கி இருக்கிறது,

கேள்வி: *(101)* விசுவாமித்திரரைச் சிவபெருமான் பிரம்மரிஷி என்று அங்கீகரித்தும் வசிஷ்டர் அவரைப் பிரம்மரிஷி என்று ஏன் அங்கீகரிக்கவில்லை?

பதில்: பூரண நிலையை அடைந்தவர்கள்தாம் பிரம்ம நிலையை அடைகிறார்கள். பூரண நிலையை அடைந்த ஒரு ரிஷியைத்தான் பிரம்மரிஷி என்று அழைக்கவேண்டும். விசுவா மித்திரர் தம்மைப் படிப்படியாகத் தவத்தின்மூலம் மேல் நிலைக்கு உயர்த்திக்கொண்டே இருந்தார். தம்மிடத்திலுள்ள கேடுகளையெல்லாம் அகற்றித் தம்மைப் பரிபூரணராக ஆக்கிக் கொண்டிருந்தார். தாம் இன்னும் பரிபூரண நிலையை அடை வதற்கு முன்பே தாம் பரிபூரண நிலையை அடைந்துவிட்டதாக எண்ணினார். அவருடைய தவத்தை மும்மூர்த்திகளும் மெச்சினர். பல பிறவிகளில் தவம்புரிந்து சாதிக்க வேண்டியதை ஒரு ஜன்மத்திலேயே விசுவாமித்திரர் சாதித்துவிட்டார். அதைத் தேவர்களும் போற்றினர்; மும்மூர்த்திகளும் போற்றினர்.

விசுவாமித்திரரிடம் இன்னும் க்ஷத்திரியச் செருக்கு இருந் தது. அதை வசிஷ்டர் நன்கு அறிந்திருந்தார். ஆகையால் வசிஷ்டர் அவரைப் பிரம்மரிஷி என்று அழைக்க மறுத்து விட்டார். விசுவாமித்திரர் க்ஷத்திரியச் செருக்கு அகன்று அவர் பெருநிலை அடைய வேண்டுமென்பதே வசிஷ்டருடைய

நோக்கமாகும். விசுவாமித்திரரை முகஸ்துதி பண்ணுவதற்காக அவரைப் பிரம்மரிஷி என்று அழைக்க வசிஷ்டர் சம்மதிக்கவில்லை. முகஸ்துதி செய்கின்றவர்கள் நலம் புரிகின்றவர்களல்லர். முகஸ்துதி பண்ணுவது சிலசமயம் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்துவிடுகிறது. ஆகவே முகஸ்துதியும், நரஸ்துதியும் செய்யக்கூடாது. பரநிலையை எட்டுவது என்பது அவ்வளவு சுலபமானது அன்று. உலகநிலையில் உயர்வானது என்று கருதுபவைகளையெல்லாம் துச்சமென ஒதுக்கித் தள்ளிவிட்டு மனது பரநாட்டத்தில் தீவிரமாகச் செல்ல வேண்டும். அதிகாரம், அந்தஸ்து, உயர்குடிப்பிறப்பு ஆகியவற்றைப் பற்றிய எண்ணங்கள் எல்லாம் பரநாட்டத்துக்குத் தடையாக அமைகின்றன.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் நள்ளிரவில் பஞ்சவடிக்குச் சென்று தியானம் செய்வார். தியானத்தில் அமர்வதற்கு முன்பு தாம் உயர்குடியில் பிறந்தவர் என்ற எண்ணத்தை ஒழிப்பதற்குப் பூணூலைக் கழற்றி வைத்துவிடுவார். உடல் ஞாபகத்தை ஒழிப்பதற்கு ஆடையை அவிழ்த்து வைத்துவிடுவார். தியானம் முடிந்த பிறகு பூணூலையும் ஆடையையும் அணிந்து கொள்வார்.

விசுவாமித்திரர் காமத்தையும் கோபத்தையும் தவத்தின் மூலம் ஒருவாறு வென்றிருந்தார். மனதில் அவ்வப்பொழுது எழுந்த தீய எண்ணங்களையெல்லாம் அடக்கும் சக்தியைத் தவத்தின் மூலம் பெற்றார். தவத்தில் மேலே போகப்போகத் தவம் அகண்ட சொரூபமாகி விடுகிறது. தவமும் தெய்வமும் ஒன்று என்பதை உணர்கின்ற நிலைக்கு விசுவாமித்திரர் தவத்தில் உயர்ந்துவிட்டார். எனினும் அவரிடத்தில் க்ஷத்திரியச் செருக்கு சிறிது இருந்தது. ஆகையால் வசிஷ்டர் அவரைப் பிரம்மரிஷி என்று அழைக்க ஒருப்படவில்லை.

விசுவாமித்திரர் தம்பொருட்டு யாகம் ஒன்றை முடித்துத் தரவேண்டுமென்று வசிஷ்டரைக் கேட்டுக்கொண்டார். வசிஷ்டரும் அதற்கு ஒத்துக்கொண்டார். யாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் விசுவாமித்திரர் செய்து முடித்தார். விசுவாமித்திரர் வசிஷ்டரைக் கேட்டுக்கொண்டதாவது: “தேவரீர், இந்த யாகசாலையில் அமர்ந்திருக்கும் முனிவர்கள் அறிய,

பிரபஞ்சம் அனைத்தும் அறிய, பரம்பொருள் அறிய நீங்கள் என்னைப் பிரம்மரிஷி என்று பிரகடனம் செய்வீர்களானால் இந்த யாகத்துக்கு 'விரஜாஹோமம்' என்ற நாமகரணம் சூட்டி அதை நிறைவேற்றுங்கள். நீங்கள் என்னைப் பிரம்மரிஷி என்று அங்கீகரிக்க மறுப்பீர்களானால் இந்த யாகத்துக்கு "வசிஷ்ட நிதன யக்ஞம்" என்ற நாமகரணம் சூட்டி இந்த யாகத்தை முடியுங்கள். இந்த யாகம் முடியும் நிலையில் தங்களுடைய சிரசு சுக்கல் சுக்கலாக வெடிக்கும். அப்படிச் செய்யத் தவறுவீர்களாகில் நீர் மித்யாஞானி என்றும், பொய் வேஷக்காரர் என்றும், செருக்கே வடிவெடுத்தவர் என்றும் உம்மை நான் பிரகடனம் செய்யப் போகிறேன்."

"விசுவாமித்திரரே! நீர் கொடுத்துள்ள முதலாவது நிபந்தனையை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். உம் விருப்பம் நிறைவேறும்படி இரண்டாவது நிபந்தனையை நிறைவேற்றி வைக்கின்றோம். உமக்கு வேண்டுவது இந்தச் சரீரத்தின் அழிவு. அதைப் பெருமகிழ்வுடன் நாம் நிறைவேற்றிக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறோம்" என்று வசிஷ்டர் கூறினார்.

"விஸ்வாமித்ர இஷ்ட சித்தயே
வசிஷ்டஷ்ய மூர்த்தா விதளது ஸ்வாஹா"

என்று மந்திரத்தை உச்சரித்து யாகத்தைத் தீரத்துடனும், வீரத்துடனும் நிறைவேற்ற இசைந்து யாகத்தைத் தொடங்கினார். வசிஷ்டருடைய தியாக புத்தியையும், பரந்த மனப்பான்மையையும் பார்த்த விசுவாமித்திரர் தம் குற்றத்தை உணர்ந்தார். கமண்டல ஜலத்தை எடுத்து ஹோமாக்னியில் கொட்டி அதை அவித்துவிட்டார். விசுவாமித்திரர் செருக்கு அழிய வசிஷ்டரை வீழ்ந்து நமஸ்கரித்தார். அப்பொழுதுதான் வசிஷ்டர் "பிரம்மரிஷியே எழுந்திரும்" என்றார். விசுவாமித்திரர் எழுந்து "கருணைக் கடலே! தங்களைக் கொல்லத் துணிந்த நான் வாழத் தகுதியற்றவன். தங்களுடைய தபோபலத்தால் என்னை அழித்துவிடுங்கள். அதுதான் தாங்கள் எனக்குச் செய்யும் பேருபகாரமாகும்" என்றார். அதற்கு வசிஷ்டர் பகர்ந்ததாவது: "பிரம்மரிஷியே! நான், எனது" என்னும் க்ஷத்திரியச் செருக்கு உமது மனதை விட்டு இப்பொழுதுதான் அகன்றது. அது அகல அகலத் தாம் பிரம்மரிஷி ஆகிவிட்டீர். கொல்ல

வேண்டியது எதுவோ அதைத் தாமே கொன்றுவிட்டீர். இனி தங்களிடம் எஞ்சியிருப்பது பிரம்ம சொரூபத்தைத் தவிர வேறு என்ன இருக்கிறது? எனவே தாம் இப்பொழுது பிரம்ம ரிஷி ஆகிவிட்டீர்.” விசுவாமித்திரர் பிரம்மரிஷி ஆகும் நிலை வரையிலும் வசிஷ்டர் அவரைப் பிரம்மரிஷி என்றழைக்க மறுத்துவிட்டார். அப்படி அவர் மறுத்தது விசுவாமித்திரர் மேலும் மேலும் முயன்று தம்மைப் பூரணர் ஆக்குவதற்குத் துணையாக இருந்தது. சிவபெருமான் உட்பட மற்றவர்கள் அவருடைய தவத்தை மெச்சினர். அப்படி அவர்கள் மெச்சியதைத் தாம் பிரம்மரிஷியாகி விட்டதாகவே விசுவாமித்திரர் எண்ணிக் கொண்டுவிட்டார். அந்தத் தவறான எண்ணத்தை அவரிடமிருந்து போக்கவே வசிஷ்டர் அவரைத் துணிந்து பிரம்மரிஷி என்று அழைக்க மறுத்துவிட்டார். விசுவாமித்திரர் பிரம்மரிஷி நிலைக்குப் பரிபாகம் அடைந்த அக்கணமே அவரைப் பிரம்மரிஷி என்று வசிஷ்டர் ஏற்றுக்கொண்டார்.

***கேள்வி: (102)* தன் உடலின் இடப்பாகத்தையே அம்பிகைக்குக் கொடுத்த சிவனார் ஏன் மன்மதனை அழித்தார்?**

பதில்: அம்பிகைக்குப் பார்வதிதேவி என்பது பெயர். பர்வதராஜனுடைய புதல்வி என்பது அந்த நாமத்தின் பொருள். அன்னை பராசக்தி பிரபஞ்சமாக இலங்குகின்றாள். பிரபஞ்சமோ ஜடசக்தி சித்சக்தி ஆகிய இரண்டையும் தன்மயமாய் உடைத்திருக்கிறது. உயிரற்ற நிலையிலிருப்பது ஜடசக்தி. உயிர் உற்றதாயிருப்பது ஸித் சக்தி. பர்வதம் அல்லது மலை உயிரற்றதாய்க் காட்சி கொடுக்கிறது. அம்மலையினின்று தோன்றி வந்த சக்தி மலைமகள் எனவும் இயம்பப் பெறுகிறாள். இயற்கையின் அமைப்புக்கு எடுத்துக்காட்டாக இருப்பவள் மலைமகள். பிரபஞ்சம் கல் நிலையினின்று படிப்படியாகப் பரிணமித்து உயிர்த்தத்துவமாக மாறுகிறது. உயிர்த் தத்துவமோ உன்னத நிலையை எட்டுகிறபொழுது சிவசொரூபமாகிறது. இக்கோட்பாட்டை விளக்குவதற்கே பார்வதி தேவி தென்முனையிலிருந்து கொண்டு தவம் புரிகின்றாள். தவத்தின் வாயிலாகச் சிவனை அடையத் தகுதி அவளுக்கு வாய்க்குங்கால் சிவன்

சக்தியை மணந்து கொள்ளுகின்றார். மணந்தான பிறகு அவருக்கு அர்த்தநாரீசுவரன் எனவும் மாதொரு பாகன் ஆனவன் எனவும் அடைமொழிகள் வந்தமைந்துள்ளன. அங்ஙனம் அம்பிகையை மணந்துகொள்ளுதற்கு முன்பே மன்மத தகனம் நிகழ்ந்துவிட்டது. அச்செயலின் உட்கருத்தை மக்கள் எல்லாரும் அறிந்திருப்பது அவசியமாகிறது. ஆணும், பெண்ணும் மணந்து கொள்ளுவது உலகின் இயல்பு. அத்தகைய இணக்கம் காமத்தை அடிப்படையாகக் கொண்டிருக்குமானால் அது கடைத்தரமான இணக்கம் ஆகிறது. ஆசையை அவித்தான பிறகு அமைகிற இணக்கம் மேலானது. பழங்காலத்து ரிஷிகள் காமத்தை வென்றவர்களாக இருந்தார்கள். ஆதலால்தான் அன்னவர்களுக்கு வாய்த்த மகப்பேறு ரிஷியின் இயல்பு படைத்ததாக இருந்தது. இதே கோட்பாட்டின்படி சிவனாருக்கும் அம்பிகைக்கும் செல்வர்களாக வாய்த்த கணபதியும் குமரனும் தெய்வீகப் பெற்றியுடன் வடிவெடுத்தார்கள். காமத்தால் தூண்டப்பெற்றுப் பிறக்கிற குழந்தைகள் காமச் செல்வர்களும், செல்விகளும் ஆகிறார்கள். தவத்தின் விளைவாகப் பிறக்கும் மகப்பேறுகள் தெய்வப் பெற்றி வாய்ந்தவைகளாகப் பிறக்கிறார்கள். வாழ்க்கை சம்பந்தமான இந்த மேலாம் கோட்பாட்டை மக்களிடத்து அறிவுறுத்துதல் பொருட்டே சிவனார் மன்மத தகனம் பண்ணியான பிறகு கன்னியாகுமரியாயிருந்த பராசக்தியை மணந்து அவளுக்குத் தன் சொரூபத்தில் செம்பாதியைக் கொடுத்துள்ளார்.

கேள்வி: *(103)* மனதற்ற நிலையிலேயே பிரம்மஞானம் உண்டாகிறது என்பது சான்றோர் முடிவு. மனதை உடையவன் மனிதன். மனது அற்றநிலை சூன்யமாகத்தானே தோன்றும்; பின்னர் ஞானம் எவ்வாறு உண்டாகும்? மனதின் உதவியின்றியே அறிவு அறிவை அறிய முடியுமா? பிரம்ம ஞானம் என்பது என்ன? மனிதன் தன் வாழ்நாளிலே எய்த வேண்டிய குறிக்கோள் அதுதானா? அதை அடைந்து விட்டால் முக்தி, பரமபதம் இவைகளை அடையவேண்டுவதில்லையா?

பதில்: மனதுக்கு அந்தக்கரணம் என்பது மற்றொரு பெயர். அது புரிகின்ற செயலை அனுசரித்து அதற்குச் சித்தம்,

மனம், புத்தி, அகங்காரம் என்னும் வெவ்வேறு பெயர்கள் அமைந்துள்ளன. இந்த அந்தக்கரணம் தன்னளவில் ஜடம் போன்றது. சுய உணர்வு அதற்கில்லை. ஆனால் ஆத்மாவின் சந்நிதானத்தால் உணர்வற்ற மனது உணர்வுடையது போன்று தோன்றுகிறது. ஆத்மாவை அறிதற்கும் புறப்பொருள்களை அறிதற்கும் இப்பொழுது நாம் இருக்கும் நிலையில் இந்த அந்தக்கரணத்தைப் பயன்படுத்தி வருகிறோம். அது செயலற்றுப் போய்விட்டால் புறவுலகின் அனுபவம் நமக்கில்லாது போய் விடுகிறது. அயர்ந்த உறக்கமே அதற்குச் சான்று ஆகும். கனவற்ற உறக்கத்தில் மனதுக்கு வேலையில்லை. புறவுலகின் காட்சியும் அப்பொழுது அடிபட்டுப்போகிறது. ஆனால் உறங்குகிற ஆளே சூன்யமாய்ப் போய்விடுவதில்லை. "எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நான் அயர்ந்து உறங்கிவிட்டேன்" என்கிறான் அம்மனிதன். அயர்ந்த உறக்கத்துக்கு அவன் சாக்ஷியாக இருந்திருக்கிறான். ஆகையினால்தான் அந்த உறக் கத்தைப் பற்றிச் சொல்ல அவனுக்கு இயலுகிறது. சாதனத்தின் மூலம் மனது தெளிவு அடைய அடைய மனதுக்கும் அடிப் படையாயிருக்கிற ஆத்ம சொரூபம் நன்கு உணரப்படுகிறது. தூய மனதின் துணைகொண்டு முதலில் அது உணரப்படுகிறது. மங்கலான கண்ணாடியின் மூலம் புறத்திலுள்ள பொருளை மங்கலாகப் பார்க்கிறோம். கண்ணாடி தெளிவு அடையுமளவு புறப்பொருள் தெளிவாகப் புலனாகிறது. பிறகு கண்ணா டியையே உடைத்து விடலாம். அச்செயலுக்கு ஒப்பானது சாதனத்தின்மூலம் மனதைப் பண்படுத்துவது. தெளிந்த மனதுக்கு ஆத்ம சொரூபம் நன்கு விளங்குகிறது. பிறகு அந்த மனதையே நிரந்தரமாக ஒடுக்கிவிடுங்கால் ஆத்மஞானம் நிறைநிலையை அடைந்து விடுகிறது. பிரகிருதி சொரூபமாயிருக்கிற மனது தூய மனதாகி ஒடுங்குகின்றவிடத்து அது ஆத்ம சொரூபமாய் விடுகிறது; சூன்யமாய்ப் போவதில்லை. ஆக, மனதற்ற நிலையில் புருஷன், பிரகிருதி என்கின்ற இரண்டு தத்துவங்கள் ஒன்றுபட்டு தனிபுருஷ தத்துவமாய் விடுகிறது. இந்த ஆத்ம ஞானத்தையே பிரம்ம ஞானம் என்றும், முக்தி என்றும், பரமபதம் என்றும் பெரியோர்கள் பகர்ந்திருக்கின்றனர். இந்த ஞானத்தை அடையப் பெற்றவன் பிறப்பு இறப்பு, இன்ப துன்பம் ஆகிய உலக

வியவகாரங்களையெல்லாம் கடந்தவனாகிறான். மனதற்ற பரிசுத்த நிலையை அடைவது ஆத்மசாதனத்தின் குறிக்கோள். ஞான நிலையில் மனிதன் பேரறிவு வடிவினனாய் இருக்கிறான். ஆங்கு அறிவு அறிவையே உணர்ந்திருக்கிறது. சூன்யம் என்னும் பேச்சு ஆங்கு எழ இடமில்லை.

கேள்வி: *(104)* எண்ணமே செயலாக உருவாகிறது. எண்ணம் உண்டாவதற்கு ஏதெது காரணமாயிருக்கிறது? ஈசனும் காரணமா? என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

பதில்: எண்ணம், செயல் ஆகிய இரண்டும் இணைபிரியாதவைகள். சூக்ஷ்ம நிலையில் இருக்கின்றபொழுது அது எண்ணம். ஸ்தூலமாக வடிவெடுக்கின்றபொழுது அது செயல் அல்லது வினை. எண்ணம் மனதில் உண்டாகிறது. மனதோடு கூடிய ஆத்மாவுக்கு ஜீவாத்மா என்று பெயர். ஒவ்வொரு ஜீவனும் எண்ணத்தின்மூலம் தன்னை மாற்றி அமைத்துக்கொண்டு போகிறான். எண்ணமே அந்த ஜீவனுடைய கர்மமாகிறது. எண்ணம் மாறுமிடத்து ஜீவ சொரூபமும் மாறிவிடுகிறது. ஒவ்வொரு ஜீவனும் தனது எண்ணத்துக்கும் வினைக்கும் தானே கர்த்தாவாய் இருக்கிறான். ஜீவர்கள் எல்லாரும் ஈசனிடத்திருந்து தோன்றியிருப்பவர்கள் ஆதலால் முடிவாகப் பார்க்குமிடத்து ஈசனே அனைத்துக்கும் அடிப்படைக் காரணமாகின்றார். ஆனால் அதை அறிந்துகொள்ளுதற்கு முன்பு ஒவ்வொரு ஜீவனும் தன் எண்ணத்துக்கும், எண்ணத்தின் விளைவுக்கும் தானே காரணமாகின்றான். தன்னையும் தன் செயல்கள் அனைத்தையும் ஈசனிடத்து ஒப்படைத்துப் பழகுகின்றவர்களுக்குச் செயல் அனைத்துக்கும் முடிவான காரணம் கடவுள் என்பது விளங்கும். அத்தகைய ஞானம் வந்ததும் அந்த ஜீவன் தனது ஜீவபோதத்தையும் அதன் விளைவாகிய கர்ம பந்தத்தையும் கடந்தவன் ஆகின்றான். அக்ஞானத்தில் இருக்கும் பரியந்தம் தன் எண்ணத்துக்கும் செயலுக்கும் தன்னைத் தானே கர்த்தாவாக வைத்துக்கொண்டு எண்ணங்களை நல்ல எண்ணங்களாக மாற்றியமைப்பது ஜீவன் ஒவ்வொருவனுடைய கடமையாகும்.

கேள்வி: *(105)* மனம், ஜீவாத்மன் ஆகிய இரண்டுக்கும் விளக்கம் என்ன? ஜீவன் சரீரத்தோடு கூடியிருப்பதற்குக் காரணம் என்ன?

பதில்: ஆலம் விதையினுள் எது இருந்ததோ அதுவே ஆலவிருக்ஷமாகத் தோன்றி வருகிறது. ஆலவிருக்ஷம் நம் கண்ணுக்குத் தெரிகின்ற ஸ்தூலப்பொருள். விதையினுள் இருக்கும் ஆலவிருக்ஷம் நம் கண்ணுக்குத் தெரியாத சூக்ஷ்ம சக்தி. விதை உள்ளளவும் ஆலவிருக்ஷம் ஸ்தூலமாகத் தோற்றத் திற்கு வரமுடியும்; சூக்ஷ்மமாக விதையினுள் ஒடுங்கியும் கிடக்கும். விதையை நசுக்கி அழித்துவிட்டால் அதன் பிறகு ஆலமரத்துக்குத் தோற்றமும் இல்லை; ஒடுக்கமுமில்லை. ஜீவனுடைய வினை ஆலம் விதையைப் போன்றது. வினை ஸ்தூலமாக வடிவெடுக்கும்பொழுது பூதவுடல் கண்ணுக்குத் தெரிகிறது. வினை சூக்ஷ்மமாக இருக்கும்பொழுது அது மனம் என்னும் பெயர் பெறுகிறது. வினையின் ஸ்தூல அமைப்பை உடல் என்றும், வினையின் சூக்ஷ்ம அமைப்பை மனம் என்றும் பகரலாம். வினையை நாசம் செய்கிறபொழுது சரீரமும் இல்லை; மனமும் இல்லை. உடலுக்குப் பூதாகாசம் இருப்பிடமாக இருக்கிறது. காற்று இல்லாது உடல் நிலைத் திருக்காது. வெப்பம் இல்லாது உடல் ஜீவித்திருக்காது. நீரில்லாதும் உணவு இல்லாதும் உடல் வாழ்ந்திருக்க முடியாது. பஞ்ச பூதங்களாகிய ஆகாசம், வாயு, அக்கினி, அப்பு, பிருதுவி ஆகிய ஐந்தின் ஸ்தூல சேர்க்கையே சரீரமாகிறது. பஞ்ச பூதங்களின் சூக்ஷ்ம அம்சம் அந்தக்கரணமாக இருக்கிறது. ஆகாசத்தின் சூக்ஷ்ம அம்சம் உள்ளமாக இருக்கிறது. வாயுவின் சூக்ஷ்ம அம்சம் மனமாக வேலை செய்கிறது. மனம் வாயுவைப் போல் சதா அலையும் தன்மையுடையது. புத்தி அக்கினியின் சூக்ஷ்ம அம்சமாக இருக்கிறது. அக்னி புறப்பொருளை விளக்கிக் காட்டுவதுபோன்று புத்தி நல்லது எது, கெட்டது எது என்பதை விளக்கிக் காட்டுகிறது. சித்தம் அப்புவின் சூக்ஷ்ம அம்சமாக இருக்கிறது. அகங்காரம் பிருதுவியின் சூக்ஷ்ம அம்சமாக இருக்கிறது. பஞ்ச பூதங்களின் சூக்ஷ்மமே மனதாக வேலை செய்கிறது. ஸ்தூலம் இடத்தில் அடைபடக் கூடியது. சூக்ஷ்மம் இடத்தில் அடைபடாதது. ஸ்தூலத்துக்கு

வடிவம் உண்டு. சூக்ஷூமத்துக்கு வடிவம் இல்லை. ஆகையால் ஸ்தூலமாக சரீரத்தைப் பார்க்க முடியும். சூக்ஷூமமான மனதைப் பார்க்க முடியாது. மனது உணர்வு மயமாகவிருக்கிறது.

ஆத்மா என்பது அனைத்துக்கும் ஆதாரமான நித்தியவஸ்து. சூரியன் பூமியைவிடப் பன்மடங்கு பெரியது. ஆனால் நம் கண்கொண்டு பார்க்கும்பொழுது மிகச் சிறியதாகத் தென் படுகிறது. நம் கண்ணால் காணப்படுகின்ற சூரியன் உண்மை சூரியன் என்றாலும் அதன் முழுப் பிரகாசத்தையும், முழுத் தோற்றத்தையும் நம் கண்களால் காண்முடியாது. கண்ணாடிக் குள் சூரியனுடைய பிம்பத்தைக் காண்கின்றோம். கண்ணா டிக்குள் சூரியன் அடங்கியிருப்பதுபோன்று தென்படுகிறது. ஆனால் அது கண்ணாடிக்குள் அடங்கிவிடுவதில்லை. மன துக்கும், சரீரத்துக்கும் கட்டுப்பட்ட நிலையில் இருக்கும் ஆத்மன் ஜீவாத்மன் எனப்படுகிறான். உண்மையில் ஆத்மன் சரீரத்திலும் மனதிலும் கட்டுப்பட்டதன்று. சரீர உணர்வையும், மனதையும் கடந்து அப்பால் இருப்பது எதுவோ அதுவே ஆத்மாவாகிறது. சரீரத்திலும் மனதிலும் கட்டுப்பட்ட நிலையில் இருக்கிற வரையிலும் நாம் ஜீவாத்மாக்கள் என்று அழைக்கப் படுகிறோம். சரீரம் மனது என்னும் உபாதிகளைக் கடந்து அப்பால் சென்றுவிட்டால் நாம் பரமாத்மாவாகின்றோம். கடல் நாமரூபம் எடுக்கும்பொழுது அலை எனப்படுகிறது. நாம ரூபத்தைக் கடந்த நிலையில் கடல் கடலாகவே இருக்கிறது. பரமாத்மா நாமரூபம் எடுக்கும்பொழுது ஜீவாத்மா எனப் படுகிறது. நாமரூபத்தைக் கடந்த நிலையில் பரமாத்மா பரமாத்மாவாகவே இருக்கிறது.

வினைக்கு வசப்பட்டு அக்ஞானத்தில் இருக்கின்ற வரை யிலும் ஜீவன் சரீரத்தோடு கூடி இருக்கிறான். அக்ஞானத்தை அகற்றி வினையிலிருந்து விடுபடுகின்ற ஜீவன் சரீரத்தினின்றும் விடுபடுகிறான்.

கேள்வி: *(106)* சிந்தனை, புத்தி, மனது இவற்றிற்குள்ள தொடர்பு யாது?

பதில்: மனிதனிடத்து அந்தக் கரணம், பாஹ்ய கரணம் ஆகிய இரண்டு விதமான கரணங்கள் அமைந்து இருக்கின்றன.

புறவுலகோடு தொடர்பு கொள்ள உதவுவது பாஹிய கரணம். பாஹிய கரணங்கள் ஐந்து உள. அவை முறையே சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப் பெயர் பெறுகின்றன. அவைகளுள் ஒரு கரணத்தின் செயலை மற்றொன்று செய்ய மாட்டாது. பார்ப்பதற்குக் கண் உதவுவது போன்று கேட்பதற்குக் காது உதவுகிறது. காதைக்கொண்டு காணமுடியாது.

இனி, அந்தக் கரணம் ஒன்று. செயலுக்கேற்ப அந்த ஒரே கரணம் நான்கு பெயர்கள் பெறுகின்றன. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆக நான்குவித வடிவெடுத்து ஒரே அந்தக்கரணம் வேலை செய்கிறது. இன்ப துன்பங்களை உணர்வது மனது. நல்லது, கெட்டது என்று பாகுபடுத்துவது புத்தி. அனுபவங்களையெல்லாம் தன்னிடத்து அடக்கி வைத்திருப்பது சித்தம். இத்தகைய செயல்களையெல்லாம் 'நான்' அனுபவித்து வருகிறேன் என்று உணர்வது அகங்காரம்.

சித்தத்தில் சலனம் உண்டாகின்ற பொழுது எண்ணம் தோன்றுகிறது. இன்பதுன்பங்களை உணரும் உணர்ச்சி ஏற்படு கிறது. அது மனதின் செயலாகிறது. இன்பதுன்ப உணர்ச்சிகளை அனுபவத்தின் மூலம் பொருந்தியவை, பொருந்தாதவை என்று புத்தி அறிகிறது. அதற்கு விவேகம் என்று பெயர். உணர்ச்சி களில் கட்டுப்பட்டு அவ்வுணர்ச்சிகள் தனக்குரியவைகள் என்னும் அகங்காரம் இருக்கும்வரையில் மனிதன் இன்பதுன் பத்துக்கு ஆளாகியாக வேண்டும். அவ்வுணர்ச்சிகளெல்லாம் அந்தக்கரணத்தின் செயல்கள் என்று அறிந்து அந்தக்கரணத்துக்கு அப்பால் உள்ள சொரூபம் 'தான்' என்று உணர்பவன்தான் யாண்டும் இன்புற்று இருக்கமுடியும்.

ஒரு மனிதன் குடும்பத் தலைவனாக இருந்து தன் குழந்தை களுக்கெல்லாம் தந்தையாகின்றான். அதே மனிதன் வயலுக்குச் சென்று ஆட்களிடம் வேலை வாங்கும்போது வேலையாட்கள் அவனை எஜமானன் என்று அழைக்கின்றார்கள். அவன் ஊரில் இரண்டுபேர்களுக்கு இடையில் உள்ள சண்டை சச் சரவுகளை நடுவனாகவிருந்து தீர்த்துவைக்கும்போது மத்யஸ்தன் என்னும் பெயர் பெறுகிறான். அவன் ஒரு சங்கத்தின் காரியங்களைப் பார்த்து வருகிறபொழுது காரியதரிசி என்னும் பெயர் பெறுகிறான். ஒரு மனிதன் தான் செய்யும் செயலுக்கு

ஏற்பத் தந்தை என்றும், எஜமானன் என்றும், மத்யஸ்தன் என்றும், காரியதரிசி என்றும் அழைக்கப்படுவது போன்று அந்தக்கரணம் தன் செயலுக்கு ஏற்பச் சித்தம் என்றும், மனம் என்றும், புத்தி என்றும், அகங்காரம் என்றும் அழைக்கப் படுகின்றது.

கேள்வி: *(107)* ஆத்மா, உயிர் இரண்டும் ஒன்றா? அல்லது வெவ்வேறானவையா?

பதில்: ஆத்மா அழியாதது; பிறவாதது; தேய்ாத்து; வளராதது. பிறத்தல், வளர்தல், மாறுதல், தேய்தல், மாய்தல் ஆகிய விகாரங்கள் ஆத்மாவுக்கு இல்லை. இன்பம், துன்பம், பாபம், புண்ணியம் முதலியன ஆத்மாவைச் சார்வதில்லை. ஆத்மா இந்திரியத்துக்கு விஷயமாகாதது, மனதுக்கும் எட்டாதது. ஆத்மா சுயஞ்ஜோதியானது. ஆத்மாவின் உதவியின்றி எதையும் அறிய முடியாது. ஆத்மாவை அறிவதற்கு எதுவும் தேவை இல்லை. ஆத்மா தன்னைத் தானே அறியவல்லது.

ஆத்மா உடல் மூலமாகவும், மனம் மூலமாகவும் தன்னை விளக்கிக்கொண்டிருக்கிறது. உடல் இந்திரியங்கள் மனம் ஆகியவற்றின் செயல்களை எது மயக்கத்தால் தன்னுடைய செயல்களாகக் கருதுகின்றதோ அது ஜீவன் அல்லது உயிர் என்னும் பெயர் பெறுகிறது. ஆத்மாவை மறந்து உடலையும், உள்ளத்தையும் தன் மயமாகக் கருதிக்கொண்டிருக்கின்ற நிலை யைத்தான் உயிர் என்கின்றோம். உயிரை ஜீவன் என்றும் பகரலாம். உயிர்கள் பல தென்பட்டுக் கொண்டிருக்கின்றன. உயிர்களைத் தாவரங்கள் என்றும் ஜங்கமங்கள் என்றும் பிரிக்கலாம். பூதங்களின் சேர்க்கையால் காரண காரியமாக உயிர்கள் இடையில் வந்தவைகளாகின்றன. கனவில் தோன்றும் காட்சிகள் கனவுக்கு முன்பும் இல்லை, கனவுக்குப் பின்பும் இருக்கப் போவதில்லை. எனவே இடையில் கனவில் அவைகள் தென்பட்டபொழுதும் இல்லாதவைகளேயாம். அங்ஙனம் முன்பும் உயிர்கள் இருந்ததில்லை. பின்பும் உயிர்கள் இருக்கப்போவ தில்லை. இடையில் இப்பொழுது காட்சியில் இருக்கின்ற உயிர்கள் இருக்கின்ற நிலையிலும் இல்லாதவைகளேயாம். இக்கருத்தைத்தான் பகவத் கீதை இரண்டாவது அத்தியாயம்

இருபத்து எட்டாவது ஸ்லோகம் விளக்குகிறது. ஸ்லோகம் வருமாறு:

अव्यक्तादीनि भूतानि व्यक्तमध्यानि भारत ।
अव्यक्त निधनान्येव तत्र का परिदेवना ।।

அவ்யக்தாதீனி பூதானி வ்யக்த மத்யானி பாரத ।
அவ்யக்த நிதனான் யேவ தத்ர கா பரிதேவனா ॥

பாரதா, உயிர்கள் துவக்கத்தில் தோன்றாமலும், இடையில் தோன்றியும், இறுதியில் தோன்றாமலும் இருக்கின்றன. இதைக் குறித்து வருந்துவானேன்?

அசுத்தங்கள் நிறைந்த நீரைச் சாக்கடை நீர் என்கிறோம். சாக்கடை நீரிலுள்ள அழுக்குகளையெல்லாம் போக்கிவிட்டால் சாக்கடை என்ற பெயர் அதற்குப் போய்விடும். அப்பொழுது நீர் தன்மயமாக இருக்கிறது. உடல் உள்ளம் ஆகிய உபாதிகள் சேர்ந்திருக்கும் ஆத்மாவுக்கு உயிர் என்று பெயர். உயிரினி டத்திலுள்ள உபாதிகள் எல்லாம் நீங்கிவிட்டால் அது ஆத்மா என அழைக்கப்படுகிறது. ஒரே பொருள் உபாதிகளோடு கூடியிருக்கும் பொழுது உயிர் என்றும், உபாதிகள் முற்றும் நீங்கித் தன்னில் தானாக இருக்கும்பொழுது ஆத்மா என்றும் அழைக்கப்படுகிறது. உபாதிகளினுடைய தன்மைக்கு ஏற்ப உயிர்க்குப் பல பெயர்கள் வந்தமைகின்றன. பெயருக்கும் வடிவத்துக்கும் ஏற்ப உயிர்கள் பலவகையாகத் தென்படுகின்றன. உயிர்களிடத்திலுள்ள ஆத்மாவிடத்து வேற்றுமை எதுவுமில்லை. உயிர்களிடத்திலுள்ள உபாதிகளில்தான் வேற்றுமை இருக்கிறது. உபாதிகள் மயமாக இருக்கும்பொழுது வேற்றுமைகளைக் காண் கின்றோம். ஆத்மாமயமாக இருக்கும்பொழுது ஒற்றுமையைக் காண்கின்றோம். உபாதிகள் வேற்றுமையை வளர்த்துப் பிரி வினைகளையும் குழப்பங்களையும் உண்டுபண்ணுகின்றன. உபாதிகளுக்கு இடம் கொடுத்து இன்ப துன்பங்களை அனு பவிப்பது உயிர்களுடைய பாங்கு. நிஜசொரூபத்தில் யாண்டும் ஆனந்தமயமாக இருப்பது ஆத்மாவினுடைய பாங்கு. “கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்” என்னும் பழமொழி உண்டு. ஓர் இடத்தில் கல் லால் நாய் வடிவம் ஒன்று செய்து வைக்கப்பட்டிருந்தது. அவ்வடிவத்தைத் தூரத்திலிருந்து பார்த்த ஒருவன் நாய்

படுத்திருப்பதாகத் தீர்மானித்தான். நாயை அவன் பார்த்த பொழுது அவ்வடிவம் நாய் ஆனது என்ற காட்சி அவனுக்குப் போய்விட்டது. அதாவது அவன் கல்லைப் பார்க்கவில்லை. அதனிடம் நெருங்கிப் பக்கத்தில் போனபொழுது அந்த வடிவம் கல்லால் ஆனது என்பதை அறிந்தான். அப்பொழுது நாய் அவன் காட்சியில் இல்லை. அங்ஙனம் உபாதிகள் மயமாக இருக்கும்பொழுது ஆத்ம சொரூபம் அனுபவத்தில் இல்லை. ஆத்ம சொரூபமயமாகும்பொழுது இப்பொழுது தென்படுகிற உயிர்கள் மறைந்துவிடுகின்றன. உபாதிகளோடு இருக்கின்ற உயிர்களாகிய நாம் அழியாத ஆத்ம சொரூபமாக இருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளச் சாதனையில் இறங்கவேண்டும். உபாதிகளிலிருந்து விலகி ஆத்ம சொரூபத்தோடு நம்மை லயமாகச் செய்வதும் நல்வாழ்வின் குறிக்கோள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, அதற்கான வாழ்வை நடாத்த நாம் ஒவ்வொரு கணமும் முயலவேண்டும்.

கேள்வி: *(108)* உயிர் என்றால் என்ன? அது உடலில் எந்தப் பகுதியில் உள்ளது?

பதில்: ஒருயிரையும் கொல்லாதே யென்னும் கோட்பாட்டில் ஒருவாறு உயிருக்கு விளக்கம் வந்திருக்கிறது. எது பிறப்பெடுக்கிறதோ, வளருகிறதோ, தேய்கிறதோ, மாய்கிறதோ அது உயிர். நீர், நிலம், நெருப்பு, காற்று ஆகிய பூதங்கள் உயிர் ஆகா. ஏனென்றால் பிறப்பு, இறப்பு முதலிய உயிருக்குரிய செயல்கள் அவைகளிடத்தில் இல்லை. மரம், செடி, கொடிகள், புழு, பூச்சிகள், பறவைகள், விலங்குகள், மக்கள் ஆகிய இவையாவும் உயிர்வகைகள் ஆகின்றன. அவை யாவையும் ஸ்தாவர ஜங்கமங்களென்று கூறுகிறோம். இருந்த இடத்தில் நிலத்தில் வேர்பிடித்து வளர்பவைகள் ஸ்தாவரங்கள். இடம் விட்டு இடம்போகின்றவைகள் ஜங்கமங்கள். உயிர்களாக இருப்பவைகளுக்கு உணவும், உறக்கமும் தேவை. உயிர் வகைகளே தங்கள் இனங்களைப் பெற்றெடுக்கின்றன. விலங்கு குட்டி போடுகிறது. விலங்காக அமைக்கப்பட்டுள்ள பொம்மை குட்டி போடுவதில்லை. உயிருக்கு இன்பதுன்பமுண்டு. உயிரற்ற இயந்திரத்துக்கு இன்பதுன்பமில்லை. உயிர் ஒன்று உடலை

எடுத்துக்கொண்டு தோற்றத்துக்கு வருகிறது. உடலை அடையாளம் காணலாம். உடல் எடுக்காத நிலையிலிருக்கும் உயிரை அடையாளம் காணமுடியாது. இரண்டொரு சான்று எடுத்துக் கொள்வோம். தோன்றா நிலையிலிருக்கும் ஸ்தாவரம் விதையாகவோ, கொம்பாகவோ, இலையாகவோ இருக்கிறது. சில விதைகளுக்கிடையில் வேற்றுமை கண்டுபிடிப்பது கடினம். பூமியில் போட்டவுடன் விதை முளைக்கிறது. கொம்பும் இலையும் தளிர்த்து வருகின்றன. வளர்ந்து வடிவெடுத்தான பிறகு அவைகளை இன்னின்ன மரம் செடி கொடிகளென்று பாகுபடுத்தலாம். அப்படி அமைந்திருப்பது அவைகளின் உடலாம். இனி, ஜங்கமங்களுக்குள் உயிர்த்தத்துவம் பிந்துவாக இருக்கிறது. பிந்துவில் வித்தியாசம் காண முடியாது. கருவில் உடல் எடுத்த பிறகே உயிர்களை வகைப்படுத்துகிறோம்.

ஆக, வாழ்ந்திருக்கும் ஜீவன் ஒன்றிற்கு உயிரும் உடலும் இன்றியமையாதவைகள். உடலில் உயிர் இலங்கும்போது அது ஜீவிதம். உடலைவிட்டு உயிர் பிரியுங்கால் அது மரணம். உயிர் பிரிந்தபின் உடல் ஜடமாகிறது. பின்பு அழிந்துபட்டுப் போகிறது. உடல் அமைப்புக்கு முதலாயிருப்பவை ஐம்பூதங்கள். உயிர்த்தத்துவத்துக்கு முதலாயிருப்பது ஆத்மா. ஆத்மாவை உயிர்க்குயிர் என்று பகரலாம். உணர்ச்சி ஆத்மாவுக்குரியது. ஜடப்பொருளில் உணர்ச்சி இல்லை. வாழ்ந்திருக்கும்பொழுது உடல் முழுதிலும் உயிர் வியாபித்திருக்கிறது. உடல் முழுதும் உணர்ச்சி மயமாயிருப்பதே அதற்குச் சான்றாகிறது. இனி, உடலில் சில பகுதிகளைச் சிதைத்தால் உயிர் போய்விடுவதில்லை. கிளைகளை வெட்டிய பிறகும் மரம் உயிர் வாழ்ந்திருக்கிறது. வால், சிறகு முதலியவைகளைச் சிதைத்த பிறகும் பறவைகள் உயிர் வாழ்ந்திருக்கின்றன. கைகால்களை வெட்டிய பிறகும் மனிதன் உயிர் வாழ்ந்திருக்கிறான். ஆனால் உடலமைப்பில் உயிர்க்கு இன்றியமையாத உறுப்புகள் சில உள. ஆணிவேர், பட்டை முதலியன போய்விட்டால் ஸ்தாவரம் உயிர் வாழாது. ஹிருதயம், தலை முதலியன போய்விட்டால் ஜங்கமம் உயிர் வாழாது. உயிரின் நல்வாழ்வுக்கு உடலின் நிறைநிலை முற்றிலும் அவசியமானது. உடலில் குறையுண்டானால் உயிர் நன்கு ஓங்குவதில்லை. உடல் அழியுமிடத்து உயிர் மறைகிறது.

அது அழிவதில்லை. உயிரை ஜீவாத்மன் என்று சான்றோர் சாற்றுகின்றனர். உடலை அந்தந்த உயிர்க்குரிய ஆலயம் என்றும் அன்னவர் இயம்புகின்றனர். உடலெங்கும் உயிர் வியாபித்திருப்பதால் உடலை நன்கு காப்பாற்றி வைப்பது அவசியமாகிறது.

கேள்வி: *(109)* "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் இன்றைக்கு எங்குமே மழை பெய்வதில்லை. ஆதலால் உலகில் நல்லார் ஒருவருங்கூட இல்லையென முடிவுகட்டலாமா?

பதில்: நல்லார் யாரோ ஒருவர் இருந்தால் போதும் அவரை முன்னிட்டு மற்றவர்கள் எல்லார்க்கும் மழை கிடைக்கும் எனப் பொருள்படுத்துவது தத்துவத்துக்கு ஒவ்வாது. அது மட்டுமல்ல பொறுப்பற்றுச் சிறு நெறிகளில் செல்லுகிறவர்கள் மழையை வருவிப்பதற்காகவென்று உலகில் நல்லார் யாரோ ஒருவர் இருக்கட்டும் மற்றவர்கள் தம்போக்கில் போகலாம், அதனால் தங்களுக்குக் கேடு ஒன்றும் வந்துவிடாது என அவர்கள் இயற்கைத் தத்துவத்தை விபரீதமாகப் பொருள் படுத்தக்கூடும். இந்த வாசகத்தில் அமைந்துள்ளபடி நல்லார் யாரோ சிலர் இருந்தால் மட்டும் போதாது. சரீரத்தில் இரண்டு மூன்று அங்கங்கள் நல்ல நிலையிலிருந்துகொண்டு ஏனைய அங்கங்களெல்லாம் குறைநிலை யெய்தியிருக்குமாகில் அந்தச் சரீரத்தைத் தலைத்தரமானதெனப் பொருள்படுத்தலாகாது. குறைபட்ட சரீரமாகவே அது கருதப்படுகிறது. சமுதாயத்தில் பெரும்பான்மையோர் எத்தகைய நிலை எய்தி இருக்கிறார்களோ அதுவே சமுதாயத்தின் தரமாகிறது.

திருக்குறளில் அறத்துப்பாலுக்குப் பாயிரமாக வான் சிறப்பு அமைந்திருக்கிறது. பாயிரத்தின் பொருள் யாது என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். மோட்டார் வண்டி ஓடுகிறது. அதற்குப் பாயிரமாய் அமைந்திருப்பது (Speedometer) அல்லது ஓட்டத்தின் வேகத்தை அளந்து காட்டும் கருவியாம். மோட்டார் வண்டியின் வேகத்தை உள்ளபடி அக்கருவி விளக்கிக் காட்டு கிறது. அதேவிதத்தில் சமுதாயத்தில் அறம் எத்தகைய இடம்

பெற்றிருக்கிறது என்பதை வான்சிறப்பு என்னும் இயற்கைக்கருவி விளக்கிக் காட்டுகிறது. அறத்துக்கும் மழைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மழையினின்று உணவு உருவாகிறது. மழையோ யக்ஞத்தின் விளைவு. யக்ஞம் கர்மத்தினின்று வடிவெடுக்கிறது. கர்மம் நேர்மையாக அமையுமானால் அது யக்ஞமாக மாறுகிறது. அந்த யக்ஞத்தின் விளைவு மக்களுக்கு நலம் ஊட்டும் மழையாகப் பொழிகிறது. மனிதன் புரிகின்ற கர்மத்தில் கேடு இருக்குமாகில் அது யக்ஞமாகாது; யக்ஞத்தி னின்று பிசகியது கீழ்மையாகிறது. இனி யக்ஞம் என்பது வேள்வித்தீ மூட்டி அதில் மந்த்ரபூர்வமாகச் செய்யப்படுகிற வைதிகக் கர்மம் போன்றது. அந்த வைதிகக் கர்மம் ஸத் கர் மத்தின் வெறும் சின்னமாம். மனிதன் ஸத் கர்மம் புரிவானாகில் அது அறம் என்றும் தர்மம் என்றும் பேர் பெறுகிறது. வாழ்வு முழுதும் அறவினை அல்லது தர்ம சொரூபமாக இருக்கவேண்டும். குறிப்பிட்ட ஒருவேளையில் கோயிலுக்குச் சென்று கடவுளைக் கைகூப்பி வணங்கினால் போதாது. அல்லும் பகலும் மனிதன் புரிந்து வருகிற செயல்கள் அறச் செயல்களா? அல்லது மறச் செயல்களா? என்பது கேள்வி. இன்றைக்கும் சமுதாயத்தில் உள்ள மக்கள் எல்லாரும் அறநெறி பிசகியவர்கள். அதர்மத்தில் போட்டி போட்டுக்கொண்டு பிரவேசிக்கின்றனர். அது எப்படி என்று பார்ப்போம்.

"தானம் சுருங்கில் வானம் சுருங்கும்; வானம் சுருங்கில் தானம் சுருங்கும்" ஆகிய இந்த இரண்டு கோட்பாடுகளும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. வானம் சுரப்பது அல்லது சுருங்குவது மனிதன் கைவசத்தில் இல்லை. ஆனால் தானம் செய்வது மனிதன் கைவசத்தில் இருக்கிறது. தனக்கு ஏற்பட் டுள்ள கடமையை மனிதன் சமுதாய சேவையாகச் செய்வா னாகில் அது தானமாகிறது. இக்காலத்திய மனிதன் மெய் வருந்தப் பாடுபடுவதற்கு ஆயத்தமாய் இல்லை. தனக்கு நீர் பாய்ச்சினாலும் பாய்ச்சாது விட்டுவிட்டாலும் மரம் ஒன்று தன் சக்திக்கு ஏற்றவாறு பலன் தருகிறது. அது மரம் செய்கின்ற யக்ஞம். மஹாபாரதத்தில் பிரசித்தி பெற்ற பள்ளிக்கூட உபாத்தியாயர் பஞ்சத்தில் பட்டினிகிடந்து மடியும் வரையில் தமது ஸ்வ தர்மமாகிய பாடம் புகட்டும் செயலை

நிறுத்தவில்லை. அவர் செய்தது யக்ஞம். அந்தப்பாங்கில் நாட்டுக்கு மக்கள் உழைத்தால் அது யக்ஞமாகிறது. தனக்குச் சம்பளம் மேலும் மேலும் அதிகரிக்கவேண்டுமென்று நம்மவன் போராடுகிறான். வாங்கிக் கொண்ட சம்பளத்துக்கு ஏற்றவாறு நான் பாடுபடுகின்றேனா என்று அவன் தன்னை ஆராய்வ தில்லை. சம்பளம் போதவில்லையென்று புகார் பண்ணுவ தோடு அவன் நிற்பதில்லை. கிம்பளம் அல்லது கைக்கூலி அல்லது லஞ்சத்தில் கண்ணும் கருத்துமாயிருக்கிறான். இன்றைக்கு லஞ்சம் கொடுத்தால் யார் வேண்டுமானாலும் எத்தகைய அடாத காரியத்தையும் சாதிக்கலாம். லஞ்சம் கொடுக்காது நேர்மையாக நடந்துகொள்ளுகிற மனிதன் எந்த நலனையும் சாதிக்க முடியாது திணறுகிறான். லஞ்சம் வாங்குகிறவர்கள் யார் என்னும் கேள்வி பிறக்கிறது. எல்லாப் படித்தரங்களிலும் இருக்கிற மக்கள் எல்லாருமே லஞ்ச மூர்த்திகளாக இருக்கிறார்கள். பியூன் அல்லது பணியாளனுக்குக் கைக்கூலி கொடுத்தால் சுலபத்தில் காரியாலயத்தில் பிரவேசிக் கலாம், குமாஸ்தாவுக்குக் கைக்கூலி கொடுத்தால் மறைந்து கிடக்கும் விண்ணப்பம் விரைந்தோடி முன்னணிக்கு வரும். அதிகாரி ஒருவருக்குக் கைக்கூலி கொடுத்தால் அக்கணமே நாடிய கர்மம் கைகூடும். அரசாங்கக் கட்சிகளுக்குக் கைக்கூலி கொடுத்தால் பொருந்தியன பொருந்தாதவைகள் ஆகிய எச் செயலை வேண்டுமென்றாலும் எளிதில் செய்து சாதிக்கலாம். இன்றைக்கு நம் நாட்டில் அமைந்துள்ள எந்த அரசாங்கத்தை வேண்டுமானாலும் விலைக்கு வாங்கிவிடலாம். இனி அரசாங்கம் என்ன பண்ணுகிறது? வாக்காளர்களுக்குக் கைக்கூலி கொடுத்து அது ஆதிக்கத்துக்கு வருகிறது. ஆதிக்கத்துக்கு வந்தான பிறகு அதைப் காப்பாற்றுதற்கும் அடுத்த தேர்தலுக்குப் பணமூட்டை திரட்டுதற்கும் வெவ்வேறு விதங்களில் வலைவீசிப் பணத்தைச் சுரண்டி எடுக்கிறது. இச்செயல்கள் அனைத்தையும் தானமென்று கூறலாமா? இன்றைக்குச் சமுதாயத்தில் தானமில்லை. அதர்ம முறையில் செல்வத்தைச் சுழற்றி எடுப்பதிலேயே எல்லாப் படித்தரங்களிலும் உள்ள மக்கள் யாவரும் ஈடுபட்டிருக்கின்றனர். இச்செயலைத் தானம் எனலாகாது இது முற்றிலும் ஈனம். உழவன் பாடுபட்டு உற்பத்திபண்ணுகிற தானியத்தை அரசாங்கம்

அதிகாரத்தைச் செலுத்திக் குறைந்த விலைக்கு வாங்குகிறது. அஜாக்கிரதையால் அதை நாற்றம்பிடிக்கச் செய்கிறது. பிறகு ஏழை மக்களுக்கு அது அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இது தானமாகாது. ஏழையர் ஈட்டிய அன்றாடக் கூலியைக் கறந்தெடுப்பதற்கு இது உபாயமாகிறது. இயற்கைத் தாயானவள் மக்களுடைய தகுதிக்கேற்றவாறே மழையை வழங்குகின்றாள்.

பொருளை உற்பத்திபண்ணுவதும் அதை வாணிக முறையில் வழங்குவதும் மக்கள் நலத்துக்காக. அப்படிச் செய்கின்றபொழுது அது தானமாகிறது. பொருளுக்கு விலை வைப்பதால் அதை எப்படிவேண்டுமானாலும் கையாளலாம் என்பது நியதியன்று. மக்கள் மயமாயிருக்கிற மகேசுவரனுக்காகவென்று உணவுப் பொருட்களை உண்டுபண்ணவேண்டும். முறையாக விலை வாங்கிக்கொண்டு அதை வினியோகம் பண்ணவேண்டும். இக்காலத்தில் உற்பத்தி பண்ணுகிற இடத்திலேயே தானியத்துடன் பதரைக் கலத்தல், போலிப் பொருட்களைக் கலத்தல் முதலிய அதர்மச் செயல்கள் நிகழ்கின்றன. பிறகு வியாபாரிகள் போலிச் சரக்குகளைக் கலப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். முறை வழுவிய பாங்கில் பொருள் ஈட்டுதல் ஒன்றே அவர்களின் குறிக்கோள். தேவாராதனைக்கு நிகராக மானுட சேவை செய்யவேண்டும். அப்பொழுது அது தானமாகிறது. வயிற்றைப் பாழ்படுத்துகிற பாங்கில் போலிப் பொருள்களை உண்பொருளில் கலப்பது விஷம் வைப்பதற்கு நிகர். இது அரக்க இயல்பு. இந்த வினைக்கு ஏற்ப வான் சுருங்குதல் இயற்கையின் பாங்கு ஆகும். இத்தகைய அடாத செயல்களைச் செய்து கொண்டிருப்பதற்கிடையில் மழை வேண்டுமென்ற கடவுள் வழிபாடு செய்வது பொருளற்றது.

பின்பு, பொய் பேசுவது மக்களுக்கு இயல்பாகிவிட்டது. பொய் பேசாது உலகில் வாழமுடியுமா என்னும் கேள்வியைக் கிளப்புகின்றனர். பொய் சொல்லும் வாய்க்குப் போஜனம் இல்லை என்பது கோட்பாடு. இயற்கையின் நியதி இம்மியளவும் பிசகுவதில்லை என்பதற்கு இன்றைக்கு வானம் சுருங்கி இருப்பது சான்றாகும். போலிப் பிரார்த்தனை பண்ணி அன்னை பராசக்தியின் பாங்கை மாற்றமுடியாது.

கேள்வி: *(110)* உலகத்திற்கே நடுநாயகமாக விளங்கும் சிதம்பரம் நடனசபையில் தத்துவ பூர்வமாக அமைந்துள்ள ஒன்பது கலசங்களுக்கும் மகாகும்பாபிஷேக சமயத்தில் ஒன்பது தங்கத்தகடுகள் பதிக்கப்பட்டன. பிறகு அவைகள் களவுபோனதாகப் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. இவ்வித சம்பவத்தால் ஆலயத்தில் செய்த வழிபாடு குறையுமா? சர்வசக்தியுள்ள ஆனந்த நடராஜா ஏன் தடுக்க வில்லை? சாஸ்திரங்கள் இதைப்பற்றி என்ன பேசுகின்றன?

பதில்: உலகுக்கு நடுநாயகமான இடத்தை முதலில் மனிதன் கண்டுபிடிக்கவேண்டும். தென்னாற்காடு ஜில்லாவில் இருக்கும் சிவ க்ஷேத்திரம் சிதம்பரம்தான் உலகுக்கு நடுநாயகமான இடம் என்பது உண்மையல்ல. அகிலாண்டமெங்கும் இருக்கும் ஒவ்வொரு கையகல இடமும் அண்டங்களுக்கு நடுநாயகமான இடம் எனக் கருதலாம். ஏனென்றால் ஒவ்வொரு புள்ளியள விடத்தினின்றும் நாலாபக்கமும் அகண்டாகாரத்தில் வெட்ட வெளி விரிந்தோடுகிறது. நீக்கமற எங்கும் நிறைந்துள்ள பெரு வெளியில் ஒவ்வொரு புள்ளியிடமும் நடுநாயகமான இடமே. ஆக, அண்டங்களை ஆட்டுவிக்கும் நடராஜனுக்கு உரிய இடம் அண்டங்கள் அனைத்துமாம். பிறகு அண்ட பகிரண்டங் களுக்கு அப்பாற்பட்டவராகவும் அவர் இருக்கிறார். அத்தகைய பெரிய பொருள் அலாதியாகச் சிதம்பரம் என்னும் ஒரு க்ஷேத்திரத்தில் மட்டும் எழுந்தருளியிருக்கிறாரென்று நம் வசதிக்காக நாம் அவருக்கு எல்லை கட்டியிருக்கிறோம். ஆனால் அவர் எந்த எல்லையிலும் அடங்காதவர். ஓர் உருவமும், ஒரு நாமமும், ஒரு செயலும் இல்லாத பொருளுக்கு உறைவிடமாக ஊர் ஒன்றைக் கற்பித்தது நாம். பெயர் ஒன்றை வழங்கியது நாம். ஆடுதல் என்னும் செயலை அவர்மீது சாத்தியது நாம். கடலிலுள்ள நீர் சிறிது இடம் மாறியமைந்தால் அது களவு போய்விட்டது என்று நாம் பொருள்படுத்துவதில்லை. கோயிலில் தங்கத்தகடுகள் அமைத்தது அறிவிலிகளாகிய நமக்கு அரும்பெரும் செயலாகும். அத்தங்கத்தகடுகள் திருட்டுப்போனது பொருள்பற்றுடைய நமக்குப் பெருநஷ்டமாகும். ஆனால் இறைவனுக்கோ தங்கத்தகடுகள் அமைப்பதால் லாபம் ஒன்று மில்லை. புதிய மதிப்பு அவருக்கு அதனால் வந்துவிடுவதில்லை.

தங்கத்தகடுகள் திருட்டுப்போவதால் தெய்வத்துக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. மின்னும் அந்த உலோகங்களை ஆசைப் பட்டவன் எடுத்துக்கொண்டு போய்விட்டான். அவைகள்மீது பற்று வைத்திருந்த கோயில் நிர்வாகிகள் அவைகளைச் சரியாகப் பாதுகாத்து வைக்காதது அவர்களைச் சார்ந்த குற்றமாகும். அத்தகைய குற்றத்தை அப்பொறுப்பாளர்கள் மீது நம் போன்றவர்கள் சுமத்தலாம். ஆனால் இச்செயலை முன்னிட்டுத் தெய்வத்தின் மகிமைக்கு எந்தவிதமான இழுக்கும் வந்துவிடவில்லை. அவர் அகண்ட சச்சிதானந்தப் பொருளாக ஆனந்தத்திலேயே யாண்டும் திளைத்திருக்கிறார். அண்டங்கள் தோன்றுவதையும், அவைகள் அடிபட்டுப் போவதையும் அவர் கருத்தில் எடுத்துக்கொள்வதில்லை. இனி இந்த அற்பத் தங்கத்தகடுகளைப் பற்றி பேச்சு எழ இடமெங்கே?

பரம்பொருளை விளக்குகிற சாஸ்திரங்களாகிய உபநிஷதம் முதலியவைகள் பிரபஞ்சத்துக்கும், பிரபஞ்சத்திலுள்ள பொருள்களுக்கும் எந்தவிதமான மதிப்பும் கொடுப்பதில்லை. இவையாவும் மாயா விகாரங்களென்று இவைகளை ஒதுக்கி விடுகின்றன. உலகப் பற்றுடையவர்கள் எழுதியுள்ள நூல்களில் தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களுக்கும், வைரம், மரகதம், வைடூரியம் முதலிய கற்களுக்கும் மதிப்புக் கொடுத்திருக்கி றார்கள். ஆனால் சான்றோர்களுக்கோ மண்ணும் பொன்னும் ஒன்றே.

கேள்வி: (111) உணவுக்காகப் பிற உயிர்களை வதைக்கிற பசுவதையை மட்டும் தடைசெய்யக் கோருவது நியாமா?

பதில்: ஓர் உயிர் மற்றோர் உயிரைக் கொன்று தின்று வாழ்ந்திருப்பது இயற்கையின் திட்டமாகிறது. எந்த உயிர் பரிணாமத்தில் மேல்நிலைக்கு வந்திருக்கிறதோ அதன் உடல் தான் அந்த நிலையை எட்டியிருக்கிற ஏனைய உயிர்களுக்கு உணவாகிறது. ஆகவே, மானுடர்கள் பலர் ஆடு, மாடுகளைக் கொன்று தின்று உயிர் வாழ்ந்து வருகின்றனர். அதற்கிடையில் பசுவதை கூடாது என்னும் கோட்பாடு பிறந்ததற்குக் காரணம் உண்டு. மனிதனுக்குத் தாராளமாகப் பால் கொடுத்து உதவும்

தகுதி பசுவுக்கு உண்டு. அதன் மலம், மூத்திரம் ஆரோக்கியம் வாய்ந்தவைகள். ஆகவே மனிதனுக்குப் பேருதவி பண்ணும் தகுதியைப் பசு படைத்திருக்கிறது. அதைக் கொன்று தின்பதை விட வளர்த்துப் பாதுகாத்து வருவதில் அதிகப் பயன் உண்டு.

கேள்வி: *(112)* மனிதனைப் படைத்தவர் கடவுள் எனில் கடவுளைப் படைத்தவர் யார்?

பதில்: உள்ள பொருள் ஒன்றுதான். அதைக் கடவுள் என்று அழைக்கின்றோம். உயிர்வகைகளாக வடிவெடுத்திருப்பவரும் கடவுள்தாம். அவர் பல வடிவங்களாகத் தம்மைத் தோற்றுவித்துக்கொள்வது அவருடைய விளையாட்டு. வடிவங்களெல்லாம் அழிந்தான பிறகு அவர்தாம் எஞ்சி இருக்கின்றார். களிமண்ணைக் கொண்டு பல வடிவங்களை உடைய பாத்திரங்களைச் செய்கின்றோம். பாத்திரங்களின் வடிவங்களை அழித்துவிட்டால் களிமண்தான் எஞ்சி இருக்கும்.

கடவுள் எடுத்துக் கொண்டுள்ள வடிவங்களைச் சிருஷ்டி என்கின்றோம். மனிதன் தன் மனதைப் பண்படுத்திக்கொண்டே வந்தால் மனம் உயர்நிலைக்குச் செல்கின்றது. பண்பட்ட மனது உண்மைப் பொருளை உணர்கிறது. தங்கள் உள்ளத்துக்கு விளங்கிய உண்மைகளைச் சொல்லால் விளக்கும்பொழுது அந்தச் சொற்களுக்குத்தான் மந்திரங்கள் என்று பெயர். அம்மந்திரங்களுக்கு ஏற்ற வடிவங்கள் தெய்வ வடிவங்களாகின்றன. பண்படாத மனது உலகைக் காண்கின்றது. பண்பட்ட தூய மனது கடவுளைக் காண்கின்றது. உலகப்பற்றுள்ள மனது உலகைக் காண்கிறது. மனதற்ற பரிசுத்த நிலையில் நாமே தெய்வமாகி விடுகின்றோம். நம்மைத் தெய்வத்துக்குப் புறம்பாக நினைக்கும்பொழுது நம் மனதின் மூலம் காண்கின்ற காட்சிகள் அனைத்தும் மனதின் சிருஷ்டியே ஆகும். மனதின் கீழான நிலையில் உலகக்காட்சியும், மனதின் தூய, உயர்ந்த நிலையில் கடவுள் காட்சியும் ஏற்படுகின்றன. கடவுள் தோன்றுவதுமில்லை, அழிவதுமில்லை. அவர் இருந்தபடி யாண்டும் இருந்து வருகிறார்.

விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை "நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?" என்ற கேள்வியைக் கேட்டார். பகவான் ராமகிருஷ்ணர் அதற்குத் தந்த பதிலாவது: "நான் கடவுளைக்

காண்கின்றேன்; அவரோடு பேசுகின்றேன். நீ உன் ஊனக் கண்கொண்டு என்னைத் தெளிவாகக் காண்கின்றாய். அதில் உனக்கு ஐயம் இல்லை. நான் அகக்கண் கொண்டு, நீ ஊனக்கண்ணால் என்னைக் காண்பதைக் காட்டிலும் தெளிந்த நிலையில் கடவுளைக் காண்கிறேன். உனக்கும் நான் காட்ட முடியும்." இங்ஙனம் கூறி அவருடைய நெஞ்சைத் தொட்டார். விவேகானந்தருடைய உள்ளம் அதீதநிலைக்குச் சென்றது. அப்பொழுது அவர் கடவுள் காட்சி எத்தகையது என்பதை உணர்ந்தார். எனவே கடவுள்தாம் யாவுமாக இருக்கின்றார்.

கேள்வி: *(113)* சில நண்பர்களும், நாகரீக நாஸ்திகர் களும் "விபூதி நெற்றியில் அணிவதன் தத்துவம் என்ன? அதனால் என்ன நன்மை?" என்று கேட்கிறார்கள். நாஸ்திகர் களுக்குத் தக்கபடி தத்துவத்தை ஒப்பிட்டு விளக்கம் கூறுங்கள்.

பதில்: விபூதி அணிவதிலிருந்து, அல்லது அணியாதிருப் பதிலிருந்து ஒரு மனிதன் ஆஸ்திகனா, அல்லது நாஸ்திகனா என்று முடிவு கட்டமுடியாது. விபூதி அணிபவர்களுக்கிடையில் நாஸ்திகர்களுமுண்டு. அதை அணியாதவர்களுக்கிடையில் ஆஸ்திகர்களுமுண்டு. தான் உடல் சொரூபம் அல்ல; ஆத்ம சொரூபம். அந்த ஆத்ம சொரூபம் பரமாத்மாவோடு சம்பந்தப் பட்டது என்னும் கொள்கையில் ஊறியிருந்து அதற்கேற்ப நடந்துகொள்பவன் ஆஸ்திகன். வெறும் உடல் வாழ்க்கைக்கு மேலானதாக ஒன்றும் இல்லை என்று எண்ணியிருந்து அதற்கேற்ப நடந்து கொள்பவன் நாஸ்திகன். ஆஸ்திகன் என்னும் சொல்லுக்கு எதிர்மறைச் சொல் நாஸ்திகன் (ந + ஆஸ்திகன்) மனிதனிலும் மேலான ஒன்று இருக்கிறது, மேலானது ஒன்றும் இல்லை என இந்த இரண்டு சொற்களும் பொருள்படுகின்றன.

விபூதி அணிவது ஒரு தத்துவத்தை விளக்குகிறது. உடல் நிலையற்றது. அது வெந்து சாம்பலாகக்கூடியது. அது சாம்பலான பிறகும் அவ்வுடலைப் பயன்படுத்திய ஆத்மா அழிவதில்லை. நீறு என்னும் சொல் அக்கோட்பாட்டை விளக்குகிறது. சாம் பலைப் பிறகு எவ்வளவுதான் சுட்டாலும் அது எரிந்து

போவதில்லை. எரிந்துபோகாதபடி இருப்பது ஆத்மசொரூபம். எது வெந்து எரிந்துபோகிறதோ அது உடல் சொரூபம். எது நித்தியமானது, எது அநித்தியமானது என்பதை நமக்கு ஞாபக மூட்டுதற்குத் திருநீறு உதவுகிறது. அந்த எண்ணத்தில் உறுதி பெற்றிருக்கிறவன் நீறு பூசினாலும் பூசாதிருந்தாலும் ஆஸ்தி கனே. உலகப் பழக்கவழக்கத்தைப் பின்பற்றி ஒருவன் நெற்றி நிறைய நீறு பூசுவதற்கிடையில் அழியாப்பொருளைப் பற்றிய பேருணர்வை மனதில் வாங்காதிருப்பானாகில் அவன் நாஸ்திகன். இத்தத்துவத்தை நமக்கு நாமே முதலில் புகட்டிக் கொள்ள வேண்டும். நாம் அதில் உறுதிபெற்றவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுது நாம் நீறு பூசியிருப்பதில் பொருள் உண்டு. அதன் உண்மையை அறிந்துகொள்ள விரும்புகிற மற்ற அன்பர் களுக்கு அக்கோட்பாட்டைப் பிறகு எடுத்து விளக்குதலிலும் அர்த்தம் உண்டு. நாம் நம்பிக்கை வைக்காததையோ, பழக்கத்தில் கொண்டு வராததையோ பிறருக்கு எடுத்துப் புகட்டுதலில் பயன் ஏதுமில்லை.

கேள்வி: *(114)* இறைவன் மக்களைப் படைக்கிறார். இறைவனால் படைக்கப்பட்ட மக்களே இறைவனை இல்லை என்று கூறுகின்றனர். படைத்த கடவுளே ஏன் இதற்கு இடம் தருகிறார்?

பதில்: படைப்பின் உட்கருத்தை நாம் அறிந்து கொள் ளுவது அவசியம். குயவன் மட்பாண்டத்தை வனைகிறான். வனையப் பெற்ற மட்பாண்டம் வேறு, வனைந்த குயவன் வேறு. அப்பாங்கில் இறைவன் மக்களுக்குப் புறம்பாயிருந்து அவர்களைப் படைக்கவில்லை. இறைவன் தாமே உலகனைத் துமாய் இலங்குகின்றார். உலகிலுள்ள ஜடப்பொருள்களாகவும் சேதனப் பொருள்களாகவும் அவர் தாமே ஆகியிருக்கிறார். அவருக்குப் புறம்பாக யாண்டும் ஏதேனும் இல்லை. இதுவே இறைவனைப் பற்றிய உண்மை. இறைவன் இல்லையென்று கூறுகிறவர்கள் தங்கள் அறியாமையை வெளியிடுகின்றனர். அனாதைக் குழந்தையொன்று எனக்கு அம்மா, அப்பா இல்லை என்று கூறுகிறது. அங்ஙனம் அது இயம்புவது உண்மையன்று. அம்மாவாகவும், அப்பாவாகவும் யாரோ இருந்தனர். இப்பொழுது

அவர்கள் தோற்றத்தில் இல்லை. தோற்றத்தில் இல்லாமையைக் குறித்துத் தனக்குத் தாய் தந்தையர் இல்லை என்று அனாதைக் குழந்தை சொல்லுவது சரி. ஆனால் தாய் தந்தையர் இல்லாது அது உருவெடுக்க முடியாது. தாய் தந்தையரின் சொரூபத்தி லிருந்துதான் குழந்தை உருவெடுத்து வருகிறது. அங்ஙனம் இறைவன் மூலப்பொருள். அந்த மூலப்பொருள் எண்ணிறந்த வடிவங்களை இடையறாது எடுத்து வருகிறது. மக்களாக வடிவெடுத்திருப்பவனும் சிற்றுயிர்களாக வடிவெடுத்திருப்பவனும் இறைவனே. இவ்வுண்மை சிற்றுயிர்களுக்கு விளங்குவதில்லை. அப்படி விளங்காதது இறைவனுடைய செயலுக்கு இழுக்கு ஆகாது. அஞ்ஞான நிலையிலிருக்கிற மக்களுக்குத் தாங்கள் எப்பொருளினின்று உருவெடுத்து வந்துள்ளார்கள் என்பது விளங்குவதில்லை. அவர்களுடைய அறியாமையை முன்னிட்டு இறைவன் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. தங்களுக்குத் தோன்றுவதை யெல்லாம் மக்கள் பகரலாம் அல்லது பிதற்றலாம். அவர் களுடைய வளர்ச்சியிலே பலப்பலப் பாங்குகளில் கருத்துக் களைப் பகர்வதும், பிதற்றுவதும் இடம் பெற்றிருக்கின்றன.

சூரிய வெப்பமும் சூரிய வெளிச்சமும் உயிர்களனைத் துக்கும் உணவாக வந்தமைகின்றன. இவ்வுண்மை உயிர்களுக்கு விளங்குவதில்லை. விளங்காததை முன்னிட்டுச் சூரியன் வெப்பத் தையும் வெளிச்சத்தையும் நல்குவதை நிறுத்திவிடுவதில்லை. இடையறாது சூரியனுடைய நன்கொடை நிகழ்ந்துகொண்டே யிருக்கின்றது. அங்ஙனம் கல்லார்க்கும் கற்றவர்க்கும், போற்று பவர்க்கும் தூற்றுபவர்க்கும், அறிஞர்களுக்கும் அறிவிலிகளுக்கும் இறைவன் மூலப்பொருளாக இருந்து வருகிறார். ஜடப்பொரு ளொன்றுக்குத் தான் பரவஸ்துவினின்று வந்துள்ளது தெரியாது. அதை முன்னிட்டுப் பரவஸ்து ஜடப்பொருளாய் வடிவெடுக்கிற செயல் நின்றுவிடுவதில்லை. உயிர்களைப் படைத்து வருபவர் இறைவன். உயிர்களனைத்தும் அவ்வுண்மையை அறிந்து கொள்ளமாட்டா. அவைகளின் அறியாமையை முன்னிட்டு இறைவன் உயிர்வகைகளாகப் பரிணமிக்கும் செயல் நின்று விடுவதில்லை. சிறு குழந்தைகளுக்குத் தங்களை ஈன் றெடுத்த பெற்றோரைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவைகளின்

அறியாமை பெற்றோர்களைப் பாதிக்கமாட்டாது. உயிர்வகைகளுள் அறிவிற்சிறந்தவர்கள் மக்கள். கடவுள் தத்துவத்தை ஆராய்ச்சி பண்ணும் வாய்ப்பு மக்களுக்குரியது. ஆராய்ச்சி பண்ணிப்பார்த்தும் பார்க்காமலும் ஒரு சிலர் கடவுள் இல்லை என்கின்றனர். அவர்களின் மழலைக்கு இறைவன் காது கொடுப்பதில்லை. அகிலாண்டகோடி, பிரம்மாண்ட நாயகனாகிய இறைவனுடைய படைப்புச் செயல் இடையறாது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மக்களுடைய அறிவும் அறியாமையும் அச் செயலை வந்து பாதிக்கமாட்டா. படைப்பைப் பற்றிய உண்மையை அறிகிறவர்கள் விரைவில் படைக்கிறவனோடு தொடர்பு வைத்துக்கொள்கின்றனர். அத்தொடர்பு யோகம் என்னும் பெயர் பெற்று இறைவன்பால் அவர்களைக் கொண்டு சேர்க்கிறது. அவ்வுண்மையை அனுபூதியில் அறியாதிருக்கும் வரையில் மக்கள் பிறவிப் பெருங்கடலில் உழன்று கொண்டிருப்பர். இதுவே படைப்பைப் பற்றிய உட்பொருளாம்.

கேள்வி: *(115)* அசுசி என்பது மனிதனுடைய மனப்பான்மையில் இருக்கிறது. அது அவன் செய்கிற தொழிலில் இல்லை என்று கசாப்புக் கடைக்காரன் ஒரு முனிவனுக்குப் புகட்டினான். இதன் உட்பொருளை விளக்கவும்.

பதில்: இவ்வரலாறு மஹாபாரதத்தில் இருக்கிறது. வியாத கீதை என்னும் பெயர் இதற்குத் தரப்பட்டிருக்கிறது. வியாதன் என்றால் கசாப்புக் கடைக்காரன். அவன் ஆடு முதலிய ஜந்துக்களைக் கொன்று அவ்விறைச்சிகளை மக்களுக்கு விலைக்கு விற்று ஜீவனம் பண்ணுபவன். சமுதாயத்தின் கருத்துப்படி அவன் புரிந்தது இழிதொழில். ஆனால் அவன் தானே தன் ஸ்வதர்மத்தை இழிதொழிலாகக் கருதவில்லை. கசாப்புக் கடைக்காரன் ஒருவனுக்கு மகனாகப் பிறந்ததனால் அவனுக்கு அது குலத்தொழிலாக அமைந்தது. அதை ஒரு புனிதமான செயல் என்றே அவன் கருதி வந்தான். அவன் செயலையும் தோட்டி ஒருவன் செயலையும் மிக மட்டமானவைகள் என உலகத்தவர் கருதுகின்றனர். ஆனால் இறைச்சி வியாபாரத்தின் வாயிலாக அந்த வியாதன் ஒரு நிறைஞானி

ஆனான். அவன் அடைந்திருந்த ஞானத்தை இன்னும் பக்குவம் ஆகஆக முனிவர் ஒருவருக்கு எடுத்து உபதேசித்து அவருக்கு விவேகத்தை ஊட்டினான்.

வனத்தில் தவம் புரிந்திருந்த அந்த முனிவருக்குத் தபோபலன் அதிகரித்திருந்தது. தற்செயலாய் அந்தச் சித்தியை அம்முனிவர் அறியலாயினர். தியானத்துக்குப் பிறகு ஒரு மரத்தடியில் அவர் அமர்ந்திருந்தார். மரத்தின் மேலிருந்த கொக்கு ஒன்று தன் போக்கில் அவர் மீது எச்சம் இட்டது. அதைப் பார்த்த அவர் சினந்தார். அவர் சினத்தின் வேகத்தால் கொக்கு சாம்பலாய்க் கீழே விழுந்தது. தம் ஆற்றலைக் குறித்து அவர் செருக்குற்றார். அன்னவர் பிக்ஷையின் பொருட்டு அருகில் இருந்த கிராமத்திற்குச் சென்றார். மாது ஒருத்தி அவருக்குப் பிக்ஷை வழங்குதலில் சிறிது காலதாமதமானதால் முனிவர் தம் போன்ற தபசி ஒருவரைக் காக்க வைத்திருப்பது மாது ஒருத்திக்குப் பொருந்தாது என்று எண்ணினார். வீட்டின் உள்ளிருந்து அவ்வம்மை என்னைக் கொக்கு என்று கருதவேண் டாம் அன்பரே, சற்றுப் பொறும் என்றும் விடை விடுத்தாள். இவ்விடை முனிவருக்கு வியப்பூட்டியது. அம்மாதுவுக்கு அவ் விஷயம் எப்படி எட்டியது என்று அவர் கேட்டார். தன் கணவ னுக்குப் பணிவிடை செய்ததின் விளைவாக அந்தக்கரண சுத்தி அடைந்து அவர் உள்ளத்தில் எழுந்த கருத்துக்களை அறிந்து கொண்டதாகவும், வியாதனிடம் போகும்படியும் அந்த அம்மை சொன்னாள். முனிவரும் வியாதனை அணுகியபொழுது அவன் அவருக்கு எடுத்து விளக்கிய உபதேசம் வியாதகீதை என்னும் பெயர் பெறுகிறது. சுத்தமான மனம் படைத்திருப்பவனுக்குச் சமுதாயத்திற்குப் பயன்படுகிற தொழில்கள் யாவும் தேவாராத னைக்கு நிகர் என்பது அந்தக் கீதையின் கோட்பாடு.

கேள்வி: *(116)* ஸமாதிநிலையை விளக்கப் பரமஹம்ச தேவர் தித்திப்புப் பண்டம் சாப்பிடுவதை உபமானமாக எடுத்துக் கொண்டார். போகப்பொருள் யோகத்துக்கு எங்ஙனம் விளக்கமாகும்?

பதில்: யோகம், போகம் ஆகியன இன்பத்தை விளை விப்பவைகள். இவ்விரண்டினுள் மனிதன் சர்வசாதாரணமாய்

அறிந்திருப்பது போகம். யோகத்தைப்பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. தெரியாத ஒன்றை விளக்குதற்கு உபமானமாகத் தெரிந்துள்ள ஒன்றை எடுத்துக்கொள்வதே முறையாகும். கடவுள் பக்தி எத்தகையது என்று பக்தன் ஒருவனிடம் உலகத்தவன் கேட்கிறான். அதற்குப் பக்தன் கொடுக்கின்ற விடையாவது: தாய்ப்பாசம், பெற்றெடுத்த குழந்தைமீது பாசம், பணத்தாசை ஆகிய பற்றுதல்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தெய்வத்திடத்து வைக்கப்படுகிறபொழுது அது பக்தியாகிறது. பக்தி முக்தியைத் தருகிறது. உலக பந்த பாசம் பிறவிப்பிணியில் ஆழ்த்துகிறது. எனவே பந்தபாசத்தை வளர்ப்பது மற்றதற்கு உபமானமாகாது என்னும் தடையைக் கிளப்பலாகாது.

இந்திரியங்கள் வாயிலாகப் பெறுகிற இன்பம் போகம். இந்திரியங்களை வென்று தூய உள்ளத்தில் ஊற்றெடுத்து வரும் இன்பத்தைப் பெறுவது யோகம். இந்த யோகத்துக்குப் போகத்தில் வருகிற இன்பத்தைச் சான்றாக எடுத்துக் கொள்ளுதலில் குற்றம் ஏதும் இல்லை. யோகம் பேரின்பம், போகம் சிற்றின்பம். இன்பம் இரண்டிற்கும் பொதுவானது. சிற்றின்பத்தை மட்டும் அறிந்திருக்கிற மனிதனுக்கு அதைச் சான்றாக எடுத்துச் சொல்லுவது ஒன்றே பேரின்பத்தை விளக்கு தற்கு உற்ற உபாயமாம்.

கடவுளைத் தேனே, சீனியே, பாகே, தெவிட்டாத ஆனந் தமே எனப் பக்தன் பகர்கிறான். தெவிட்டாத ஆனந்தம் அவன் கொடுத்த விளக்கத்தில் மிகப் பொருத்தமானதாம். தெவிட்டிப்போகிற இவ்வுலகப் பொருள்களாகிய பாகு, தேன், சீனி ஆகியவைகளோடு பரமனை எப்படி இணைக்கலாம் என்னும் ஆக்ஷேபம் வரலாகாது. அனுபவத்தில் உள்ள ஒன்றை உபமானமாக வைத்துக்கொண்டு இனி அடையப்போகும் பெரிய நிலையை விளக்கிக் காட்டுவது பொருத்தமாம். எனவே போகப் பொருளைச் சான்றாக வைத்து யோகத்தையும் ஸமாதி நிலையையும் விளக்குதலில் குற்றம் ஏதுமில்லை. இத்தகைய முறையே ஸமாதி நிலையை விளக்குதற்கு உற்ற உபாயமாம். ☆

2. ஆத்ம தத்துவம்

கேள்வி: (117) ஆத்மாவுக்கு ஆதியில்லை, அந்தமில்லை, இன்பதுன்பமில்லை, பிறப்பு இறப்பு இல்லை என்பது ஒரு கோட்பாடு. வினைப்பயனுக்கு ஏற்ப அது சொர்க்கத்தையும் நரகத்தையும் மண்ணுலக வாழ்க்கையையும் ஓயாது எடுத்துக்கொண்டிருப்பது என்பது மற்றொரு கொள்கை. இவ்விரண்டையும் சமரசப்படுத்துவது எப்படி? தெளிவிக்க வேண்டுகிறேன்.

பதில்: புளியங்காய் மேல் ஓட்டில் பற்று உடையதாயிருக்கிறது. புளியம்பழத்துக்கு மேல் ஓட்டில் பற்று இல்லை. அங்ஙனம் பக்குவப்படாத ஆத்மா பிரகிருதியில் கட்டுண்டு கிடக்கிறது. பிரகிருதியில் கட்டுப்பட்டு இருக்கும்போது அதற்கு வினைப்பயன் உண்டு. வினைப்பயனுக்கு ஏற்ப அது மண்ணுலகில் பிறக்கிறது. சொர்க்கத்துக்குப் போகிறது, நரகத்துக்கும் போகிறது. இப்படிக் கணக்கற்ற பிறவிகள் வாயிலாக ஆத்மாவானது தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்கிறது. பக்குவம் அடைந்து வரவர வினைத்தளையினின்று விடுபடுகிறது; முக்தியடைகிறது. முக்தியடைந்த பின் தன் பிறவிகளைப்பற்றி விசாரித்துப் பார்த்தால் அதெல்லாம் வெறும் மனோ கற்பிதத்தால் வந்தது என்பது விளங்குகிறது. பிறவாத, இறவாத, மாறுபாடு அடையாத ஆத்மா தான் பிறந்ததாக, இறந்ததாக, பல பிறவிகள் எடுத்ததாக எண்ணி மயக்கமடைந்தது. உண்மையில் அத்தகைய மாறுதல் ஒன்றும் அதற்கு வரவில்லை. ஆக, அஞ்ஞான நிலையில் தன்னிடத்து மாறுதல் இருப்பதாக அது எண்ணிக்கொள்கிறது. ஞானம் வரும்போது தன்னைப்பற்றிய உண்மை வெளியாகிறது.

கேள்வி: *(118)* ஆத்மா பிறப்பதுமில்லை, இறப்பது மில்லை என்பது ஒரு கோட்பாடு. அது பல பிறவி எடுக் கிறது என்பது இன்னொரு கோட்பாடு. உலகில் ஜனத் தொகை ஒரு காலத்தில் அதிகமாகவும் இன்னொரு காலத்தில் குறைவாகவும் இருக்கிறது. குறைந்துபோன பொழுது அவ்வாத்மாக்கள் நிலை என்னவாயிற்று?

பதில்: அக்ஞான நிலையிலிருக்கும் ஆத்மா சரீரத்தோடு கூடியது. அதைத்தான் ஜீவாத்மா என்கிறோம். சரீரத்தை அப்போதைக்கப்போது ஆத்மா மாற்றிக்கொண்டே வருகிறது. சரீரத்தை மாற்றும் நிலையைத்தான் மரணம் என்றும் ஜனனம் என்றும் பகர்கிறோம். ஒரு சரீரத்தைக் களைந்துவிட்டால் அந்த ஆத்மா நமக்குத் தென்படுவதில்லையாதலால் அது செத்துப்போய்விட்டது என்கிறோம். புதிய உடலை எடுத்துக் கொண்டால் அந்த ஆத்மா பிறந்திருக்கிறது என்கிறோம். ஆக, பிறப்பு இறப்பு என்பது உடலைக் குறித்த சொற்களாம். உடலை எடுக்கும் ஆத்மாவோ என்றென்றைக்கும் உள்ள அழியாத வஸ்து.

ஆத்மாக்கள் பிறப்பது இந்த மண்ணுலகம் ஒன்றில் மட்டுமல்ல. மனிதர்கள் ஒரு தடவை ஒரு சந்தைக்கடைக்குப் போகின்றனர். மற்றொரு தடவை இன்னொரு சந்தைக் கடைக்குப் போகின்றனர். ஒரு வாரத்தில் ஒரு சந்தைக்கடையில் கூட்டம் குறைந்துபோய்விட்டால் அங்கு வருகிற மக்களில் பெரும்பாலர் இல்லாது போய்விட்டார்கள் என்று முடிவு கட்டலாகாது. வேறு எங்கேயோ இருக்கிறார்கள் என்றுதான் முடிவுகட்ட வேண்டும். அதேபாங்கில் மண்ணுலகில் ஜனத் தொகை குறைந்துபோனால் ஆத்மாக்களில் பலர் வேறு ஏதோ உலகில் போயிருக்கிறார்கள் என்று யூகிக்கவேண்டும். ஜனத்தொகையின் பெருக்கமும் குறைவும் ஆத்மாக்களின் தொகையைக் கணக்கிடுதற்குப் போதிய ஆதாரம் ஆகாது. இங்கு இல்லாவிட்டால் அவர்கள் வேறு எங்கேயோ இருக் கிறார்கள் என்று யூகிக்கவேண்டும்.

கேள்வி: *(119)* மனிதனானவன் பாப புண்ணியமாகிய இரு வினைகளையும் சரீரத்தால் செய்கிறான் என்று

சொல்லப்படுகிறது. ஆனால் அந்தப் பாப புண்ணியத்தால் ஏற்படும் நரக, சொர்க்கம் சரீரத்திற்கா? அல்லது சாட்சி யாகிய ஆன்மாவுக்கா? என்பதைத் தெளிவிக்க வேண்டு கிறேன்.

பதில்: செய்கின்ற கர்மத்திற்கு நிலைக்களமாயிருப்பது உடல். நல்வினை, தீவினையாகிய இரண்டும் உடலைக் கொண்டே நிகழ்த்தப்படுகின்றன. இன்ப துன்பமாகிய இவ் விரண்டை அனுபவிப்பதற்கு முகாமையாயிருப்பது உடல். இங்கே உடல் என்று சொல்லுகிறவிடத்து ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் ஆகிய மூன்றையும் ஒன்றுபடுத்தி மொழிகிறோம். இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்கு ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம் ஆகிய இரண்டும் உதவுகின்றன. சொர்க்கம் நரகத்தில் அனுபவிக்கின்ற சுக துக்கங்கள் எல்லாம் சூக்ஷ்ம சரீரமாகிய மனதை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றன. மண்ணுலகில் அனுபவிக்கின்ற சுக துக்கங்களுக் கெல்லாம் ஸ்தூல சரீரமாகிய இந்த உடல், மனது ஆகிய இரண்டும் முகாமைகளாக இருக்கின்றன. ஆத்மசொரூபமோ இந்த சுகதுக்கங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது. பிரபஞ்ச சம்பந்தமான இன்ப துன்பங்கள் ஆத்மாவை வந்து சாரமாட்டா. அது நித்தியானந்தமாய் இருக்கிறது.

கேள்வி: *(120)* அநேக நூல்களில் மனிதன் இறவாமல் இருக்க முடியுமென்று சொல்லப்படுகிறது. இது சாத்தியமா? அவ்வாறாயின் அதற்குரிய சாதனைகள் யாவை? இறவாமல் யாராவது இருக்கிறார்களா?

பதில்: மனிதனுடைய அமைப்பில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஆத்ம சொரூபம் ஒரு பகுதி, உடல் மற்றொரு பகுதி. ஆத்ம சொரூபத்துக்கு அழிவு இல்லை. உடலுக்கு அழிவு உண்டு. அழியும் தன்மையுடைய உடலை அழியாது வைத்திருப்பது இயற்கையின் நடைமுறைக்கு ஒவ்வாது. அழிந்து பட்டுப்போகாது உடலோடு நீடூழி இருந்து வருபவர் யாரு மில்லை. உடல்பற்று நீங்கப்பெறுபவர்களுக்கு ஆத்ம ஞானம் வருகிறது. பிறகு புதிய உடல் எடுக்க அவர்கள் ஒருப்படுவ தில்லை. உடல் எடுக்காத நிறைநிலைக்கு முக்தி என்று

பெயர். ஆத்ம ஞானிகள் உடலினின்று முக்தியடைந்து விடுகின்றனர். அவர்களைப் பிறகு எந்த வடிவத்திலும் மற்றவர்கள் காண்பதில்லை. வடிவங்களையெல்லாம் கடந்த பரிபூரண நிலையில் அவர்கள் லயமாய்விடுகின்றனர். இதுவே ஜனன மரணத்தையும் அதற்கப்பாலுள்ளதையும் பற்றிய உண்மை. ☆

3. ஜீவாத்ம தத்துவம்

கேள்வி: ***(121)*** **ஜீவ வியக்தி என்பது யாது?**

பதில்: உடல் எடுத்துள்ள உயிர்வகைகள் ஜீவ வியக்தி என்னும் பெயர் பெறுகின்றன. பரம்பொருள் முக்குணங்களுக்கு அப்பாற்பட்டும் முக்குணங்களைத் தோற்றுவித்து அவைகளை ஆண்டும் வருகிறது. அப்பாலுள்ள பரம்பொருள் நிர்க்குணப் பிரம்மம் என்னும் பெயர் பெறுகிறது. முக்குணங்களை ஆண்டு வருகிற பரம்பொருள் சகுணப்பிரம்மம் என்னும் பெயர் பெறுகிறது. குணங்களோடு கூடியது என்பது இதன் பொருள். கடலின் அலையற்ற அடிப்பகுதி போன்றது நிர்க்குணப் பிரம்மம். அலைவீசிக்கொண்டிருக்கும் கடலின் மேற்பரப்பு போன்றது சகுணப்பிரம்மம். அலை ஒன்று சமுத்திரத்திற்குப் புறம்பாயிருக்க முடியாது. சமுத்திரத்தில் வடிவெடுக்கும் அலைக்கு நிகர் ஜீவ வியக்தி. சிற்றுயிர், பேருயிர் ஆகிய உயிர்வகைகளனைத்தும் அறிவுப் பெருவெளியாயிருக்கும் சகுணப் பிரம்மத்தின் தோற்றங்களாம். ஜீவ வியக்தியிடத்துப் பிரம்மத்திடத்திருக்கும் அறியும் தன்மையும், ஆனந்தமாயிருக்கும் தன்மையும் அமைந்திருக்கின்றன. அத்தகைய அமைப்புக்கு உடலும் சேர்ந்து அமைந்திருக்கிறது. உடலோ முக்குணங்களால் ஆனது. ஆகையினால் ஜீவ வியக்தி என்பது ஆத்ம தத்துவமாகிய அறியும் தன்மையும் முக்குணமயமாயுள்ள ஜடப்பொருளாகிய உடலும் ஒன்று சேர்ந்ததாம். உடலில் குடிகொண்டிருக்கும் ஆத்மா ஜீவ வியக்தியாகிறது. பல பிறவிகளில் இந்த ஜீவ வியக்தி சிற்றுயிர் நிலையிலிருந்து பரிணமித்துப் பேருயிர் நிலையை எட்டுகிறது. மானுட சரீரம் எடுத்துள்ள ஜீவன் பரிணாமத்தில் உச்சநிலைக்கு வந்த

ஜீவாத்மா ஆகிறது. ஆக உடல் எடுத்திருக்கும் ஜீவாத்மாவிற்கு ஜீவ வியக்தி என்று பெயர். புளியம்பழம் முதிர்ந்து வருகின்றபொழுது ஓடு வேறு, பழம் வேறாகப் பிரிகிறது. அங்ஙனம் மானுட நிலையை எட்டியுள்ள ஜீவ வியக்தி முக்குணமயமாயுள்ள உடல் வேறு, அதனுள் வீற்றிருக்கும் ஆத்மா வேறு என அறிகிறது. அந்த அறிவு அனுபூதி யாகின்றபொழுது அந்த ஆத்மா ஜீவமுக்தி நிலையை அடை கிறது. உடல் அழிந்துபட்டுப்போன பிறகு அந்த ஆத்மா பரப்பிரம்மத்தில் ஒன்றுபடுகிறது. பரம்பொருளை எட்டும் பரியந்தம் சரீரத்தோடு கூடியிருக்கிற ஜீவாத்மனுக்கு ஜீவ வியக்தி என்று பெயர்.

கேள்வி: *(122)* ஜீவாத்மா முக்தியடைய எத்தனை பிறவிகள் எடுக்கவேண்டியது அவசியமாகிறது?

பதில்: இக்கேள்விக்கு விடை அறுதியிட்டு இயம்ப முடி யாது. இரண்டு ஜீவாத்மாக்களின் பாங்குகள் ஒரே விதத்தில் அமைவதில்லை. ஒரு சிலர் இவ்வுலகினுள் பிறப்பெடுத்து வந்ததின் நோக்கத்தை அதிவிரைவில் நிறைவேற்றுகின்றனர். இன்னும் சிலர்க்கு எண்ணிக்கையில் அடங்காத பிறவிகள் தேவையாயிருக்கின்றன. அடிப்படைக் கோட்பாடு ஒன்றை மட்டும் எடுத்து இயம்புவது பொருந்தும். ஆசைகள் ஒன்றன்பின் ஒன்றாக உதித்துக்கொண்டேயிருக்கின்றன. அந்த ஆசைகளை நிறைவேற்றுவதற்கு ஜீவாத்மாக்கள் பிறப்பெடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆசைகள் அத்தனையும் நிறைவேறப்பெற்று நிராசை அல்லது ஆசையின்மை என்னும் நிலையை அடையப் பெறுகிற ஜீவர்களுக்கு மேலும் பிறப்பு ஏதும் வந்து அமைவ தில்லை. "அற்றது பற்று எனில் உற்றது வீடு" என்பது ஆப்த வாக்கு. எனவே அந்தந்த ஜீவனுடைய பற்றுதலும் அதினின்று உதித்து வரும் ஆசையும் எப்பொழுது அகன்று போகின்றனவோ அப்பொழுதுதான் அவர்கள் மறுபிறப்பெடுப்பதில்லை.

எடுக்கின்ற பிறவிகளில் ஆசையை அதிகப்படுத்துவது பல ஜீவாத்மாக்கள் போக்கு ஆகிறது. அப்படிச் செய்வது கடன்பட்டவன் மேலும் கடனை அதிகப்படுத்துவதற்கு நிகரா கிறது. ஆதலால் ஆசைகளை நிறைவேற்றிப் பூர்த்தி பண்ணுவது

ஒருபுறமிருக்க புதிய ஆசைச் சுமையை அதிகப்படுத்திப் புதிய பிறவிகளுக்கு ஏற்ற விதைகளைக் கணக்கிலடங்காதவாறு மிகைப்படுத்துவது மற்றொருபுறம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப் பிறவிக்கான வித்து கணக்கிலடங்காதவாறு அதிகரித்துப் போனாலும் முக்தி நாட்டம் உதயமாகுங்காலத்தில் விவேகத்தின் வாயிலாகவும் ஞானோதயத்தின் வாயிலாகவும் சஞ்சித கர்மங்களை ஒதுக்கித் தள்ளுவது சாத்தியம்.

கேள்வி: *(123)* எல்லாப் புஸ்தகங்களிலும் எல்லா ஜீவர்களையும் பகவான் என்றே சொல்லியிருக்கின்றது. ஜீவர்கள் பிறவி எடுத்துப் பகவானை அடைய விரும்புகின்றனர். அப்படி பகவானாயிருக்கின்ற ஜீவர்கள் ஏன் பிறவி எடுக்கின்றனர்?

பதில்: எல்லா ஜீவர்களையும் எல்லா நூல்களும் பகவான் என்று சொல்லுவதில்லை. ஜீவர்களை ஜீவர்கள் என்று சொல்லுவதுதான் சாஸ்திரப் பிரமாணம். யுக்திக்கும் அதுவே பொருத்தமானது. ஆனால் சில பக்தர்கள் ஜீவர்களையெல்லாம் பகவான் என்று அழைக்கிறார்கள். தங்கள் உள்ளத்தில் பக்தியைப் பெருக்குவதற்கு அப்படி ஜீவர்களைப் பகவான் என்று அழைப்பது பொருந்தும். பகவான் என்னும் சொல் கடவுளுக்கே பொருந்தும். ஞானம், வைராக்கியம், வீரியம், ஐசுவரியம், ஸ்ரீ, கீர்த்தி ஆகிய ஆறுவித தெய்வீகங்கள் நிரம்பப் பெற்றிருக்கிறவருக்கே பகவான் என்று பெயர். ஜீவர்களிடத்து இந்த ஆறும் நிறைந்திருப்பதை நாம் காணமுடியாது. ஆனால் கடவுளுக்கே இந்த ஆறு சிறப்புகளும் உரியனவாகின்றன. ஜீவர்கள் பரிபக்குவம் அடைந்து கடவுளின் சந்நிதியை அணுகிவருகிற பொழுது அவர்களிடத்து இத்தகைய தெய்வீக இயல்புகள் ஓங்கிவருவதை நாம் காணலாம். ஜீவநிலையில் இருக்கும் பரியந்தம் அவர்களுக்கும் பிறவிகள் உண்டு. பகவானை அடைந்தான பிறகு பிறவிகள் இல்லை.

கேள்வி: *(124)* ஸ்தூல சரீரம் அழிந்தபின் சூக்ஷ்ம சரீரம் இருப்பதாகக் கூறுகிறீர்கள். அது எப்பொழுது அழிகிறது, அல்லது அழிவதில்லையா? அதனுள் இருக்கும் ஜீவாத்மன்

என்ன ஆகிறான்? உடலுக்கு ஏற்படும் வலிநோய்களை முன்னிட்டு ஐயோ என்று அலறுவது யார்? ஜீவாத்மனும், பரமாத்மனும் ஒன்றானால் நோய்வரும் போது அலறுவது யார்? உடலை விட்டு நீங்கிய ஜீவாத்மன் எத்தனை காலம் சூக்ஷ்ம சரீரத்தில் இருக்கிறான்? சூக்ஷ்ம சரீரம் எப்போது மறுபடியும் ஸ்தூல சரீரத்தை அடைகிறது? ஸ்தூல சரீரம் போனபிறகு நாம் செய்யும் கர்ம சடங்குகள் சூக்ஷ்ம சரீரத்துக்குப் போய் அடைகிறதா, பிதுர்லோகத்துக்குப் போகிறதா?, அல்லது அது அர்த்தமற்ற சடங்குதானா? துர்மரணம் ஏற்பட்டால் அவன் பைசாசமாக மாறுவது உண்மையா?

பதில்: சரீரத்தோடு கூடிய ஆத்மனை ஜீவன் என்கிறோம். ஜீவர்கள் எண்ணிறந்தவைகள். இந்த ஜீவர்களின் ஸ்தூல உடல்கள் ஜனனத்தையும் மரணத்தையும் அடைவதைக் காண்கிறோம். சூக்ஷ்ம உடல் நமக்குக் கட்புலனாகாது மாறிய மைந்து கொண்டிருக்கிறது. மரணம் என்பது ஸ்தூல உடலுக்கு. சூக்ஷ்ம உடலுடன் அந்த ஜீவன் மற்றொரு ஸ்தூல உடலை எடுத்துக்கொள்ளப் பழைய உடலைவிட்டு மறைந்து போய்விடு கிறான்.

அந்த மறைந்த நிலையில் அவன் நெடுநாள் காத்திருப்பதும் உண்டு, விரைவில் புதிய உடலை எடுத்துக்கொள்ளப் போவதும் உண்டு. மறைந்த நிலையில் அவன் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந் தால் அவனைப் பிசாசு என்கிறோம். அப்படிக் கொஞ்சகாலத்துக் குத்தான் அவன் சஞ்சலப்படுகின்றான். பிறகு அமைதியுற்றுக் கிடந்து தனக்கு அனுகூலமான சூழ்நிலை அகப்படும்பொழுது தனக்கேற்ற புதிய உடல் ஒன்றை எடுத்துக்கொள்கின்றான். அவன் முக்தியடையும் பொழுது சூக்ஷ்ம சரீரம் அழிந்து விடுகிறது. அப்பொழுது அவன் விதேகன் ஆகிறான். பரம் பொருளில் கலந்து விடுவதே முக்தி எனப்படுகிறது. உடலில் அபிமானம் கொண்டிருக்கின்றபொழுது உடலுக்குள்ளிருக்கின்ற ஜீவன் அதன் நோயை முன்னிட்டு அழுதாகவேண்டும். உஷ்ணம் நிறைந்த அறைக்குள் போனால் வெப்பத்தை உணர்கிறோம். உறைபனிக்கட்டி நிறைந்துள்ள அறைக்குள் போனால் தணுப்பை உணர்கிறோம். அதேவிதத்தில் உடலை அபிமானித்து

இருக்கின்றபொழுது அதிலுள்ள நோயை ஜீவாத்மா அனுபவித்தாகவேண்டும். செத்தவர்களை முன்னிட்டு நாம் செய்யும் சடங்குகள் அவர்களைப் போய்ச் சேருவதில்லை; அந்த சடங்குகளுக்கு அடிப்படையாயுள்ள நமது நல்ல எண்ணங்கள் அவர்களுக்குச் சாந்தியளிக்கின்றன. ஸ்தூல உடலில் வருந்திக் கொண்டிருக்கின்ற ஒருவனுக்கு நாம் ஆறுதல் சொல்லி அந் நோயைத் தணிக்கின்றோம். நம்சொல் இங்குப் பயன்படுவது போன்று செத்தவனைக் குறித்து நாம் எண்ணும் உயர்ந்த எண்ணங்கள் அவன் எங்கு இருந்தாலும் அவனுக்கு ஓரளவு ஆறுதல் அளிக்கிறது. ஆக, நலம் கேடுகள் அனைத்தும் அவன் ஜீவாத்மாவாய் இருக்கும் பரியந்தம் உண்டு. ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்களையெல்லாம் கடந்து அவன் விதேக முக்தனாகின்றபொழுது இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டவனாகின்றான்.

கேள்வி: *(125)* ஆஸ்திகப் பெரியார்கள் இருவர் ஒரே இடத்தில் அடியிற் குறிப்பிட்டுள்ளபடி தங்கள் சொற்பொழிவுகளில் கூறினார்கள். ஒருவர் "சரீரத்தைவிட்டு உயிர் பிரிந்தவுடனே இன்னொரு சரீரத்துக்குள் புகுந்துகொள்கிறது. எந்த இடத்திலும் தங்குவதில்லை" என்றும், மற்றொருவர் "சரீரத்தைவிட்டு உயிர் பிரிந்தாலும் எரிக்கப்பட்ட எலும்பில் ஆறுநாளைக்கு உயிர் ஒட்டிக் கொண்டிருக்கும்" என்றும் சொன்னார்கள். இதிலுள்ள உண்மையை விளக்கவேண்டும்.

பதில்: சரீரத்தை உடைத்திருப்பவன் ஜீவன். சரீரத்தில் மூன்று பகுதிகள் இருக்கின்றன. இந்திரியங்களுக்குப் புலனாகும் பாங்கில் பஞ்சபூதங்களைக்கொண்டு ஆயிருப்பது ஸ்தூல சரீரம். மனம், புத்தி, அகங்காரம் முதலியவைகளைக் கொண்டு ஆயிருப்பது சூக்ஷ்ம சரீரம். இந்தச் சூக்ஷ்ம சரீரத்துக்கும் அடிப்படையாயிருப்பது காரண சரீரம். அக்ஞானத்தினின்று காரண சரீரம் வருகிறது. பிறகு அது சூக்ஷ்ம சரீரமாகப் பரிணமிக்கிறது. சூக்ஷ்ம சரீரத்திற்கேற்ற ஸ்தூல சரீரத்தை ஜீவன் தனக்குத்தானே உண்டுபண்ணுகிறான். அதற்கேற்ற பிண்டத்தைத் தருவது பெற்றோர்கள் செயல். நாம் காணும் மரணம் ஸ்தூல சரீரத்திற்குரியது. வாழ்க்கைக்கு ஸ்தூல

சரீரம் தகுதியற்றுப்போன பிறகு ஜீவன் அதைவிட்டு விலகிக் கொள்கிறது. நாம் களைந்தெறிந்த ரோமம், நகம், புண்ணின் சதை முதலியவைகளைப்பற்றி நினைப்பதுமில்லை, அவை களில் பற்று வைப்பதுமில்லை. ஸ்தூல சரீரத்தைவிட்டு விலகிய ஜீவன் பிறகு அதில் எந்தவிதமான பற்றுதலும் வைப்பதில்லை. ஸ்தூல சரீரத்தில் அல்லது அதன் ஒரு பகுதியிலிருக்கும் எலும்பில் சிலநாள் ஜீவன் பற்றிக் கொண்டிருக்கிறான் என்னும் கோட்பாடு பொருளற்றது.

சரீரத்தைவிட்டு உயிர் பிரிந்தவுடனே இன்னொரு சரீரத் துக்குள் புகுந்துகொள்கிறது, எந்த இடத்திலும் தங்குவதில்லை என்கின்ற கொள்கையும் தத்துவத்துக்கு முரண்பட்டது. புதிய சரீரத்துக்குள் புகுந்துகொள்கிறான் என்றால் யார் சிருஷ்டித்த புதிய சரீரம் என்கிற கேள்வி வருகிறது. எந்த ஜீவனும் மற்றொரு ஜீவன் சிருஷ்டித்த ஸ்தூல சரீரத்துக்குள் குடிபுகுவது கிடையாது. ஒவ்வொரு ஜீவனும் தனக்கேற்ற ஸ்தூல சரீரத்தைத் தானே உண்டுபண்ணிக் கொள்கிறான். விதை தானே மரமாவது போன்று சூக்ஷ்ம சரீரியாகிய ஜீவன் ஸ்தூல சரீரியாகிய ஜீவனாக மாதாபிதாக்களின் உடலில் தன்னைத்தானே புதியதாக உண்டுபண்ணிக் கொள்கிறான். அப்படிப் புதிய உடல் எடுப்பது உடனே அமைவதும் உண்டு. நாளடைவில் அமைவதும் உண்டு. ஒவ்வொரு ஜீவனுக்கும் தகுதியான உடல் அகப்படும் பரியந்தம் அவன் காத்திருக்கிறான். உடனே தகுந்த பிண்டம் அகப்பட்டு விட்டால் புதிய உடலை உடனே சிருஷ்டிக்க ஆரம்பிக்கிறான். மரணத்தின் மூலம் ஸ்தூல சரீரம் அழியும்பொழுது சூக்ஷ்ம சரீரமும், காரண சரீரமும் அழிவதில்லை. முக்தியடையும் பரியந்தம் சூக்ஷ்ம சரீரமும் காரண சரீரமும் ஜீவனுக்குத் தொடர்ந்து இருந்து வருகின்றன.

கேள்வி: *(126)* பிறவிப்பிணியுடைய ஜீவாத்மா முக்தி யடையும்போது சச்சிதானந்த சொரூபமாகிறது என்று கூறப் படுகிறது. ஆனால் பரமாத்மா இப்பிரபஞ்சத்தில் தோன்றி யுள்ள சகல ஜீவர்களாகவும் தன்னைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறார். அப்படியானால் முக்தியடைந்த ஜீவாத் மாவும் பரமாத்ம சொரூபத்தை அடைந்த பிறகு சகல

ஜீவராசிகளாவும் தோன்ற வேண்டியிருப்பதால் ஜீவாத்மா ஒன்றுக்குப் பிறவிப் பிணியாகிய துன்பம் நீங்காதது ஆகிறது. அப்படியானால் துன்பமற்ற நிலை கிடையவே கிடையாதா?

பதில்: கடலில் மேல்பரப்பு என்றும் அடிப்பகுதி என்றும் இரண்டு பாகங்கள் இருக்கின்றன. மேல்பரப்பில் அது ஓயாது அலையெடுத்துக் கொண்டிருக்கிறது. கீழ்ப்பகுதி அசைவற்றிருக்கிறது. பரம்பொருள் தமது சொரூபத்தில் ஒரு சிறுபகுதியைக்கொண்டு ஜீவர்களாகவும் ஜகத்தாகவும் தோன்றிக் கொண்டிருக்கின்றார். தோற்றத்தில் வராதது அகண்டாகாரம். தோற்றத்தில் வந்திருப்பதையே நாம் முழுதும் அறிந்துகொள்ள இயலுகிறதில்லை. ஆதலால் தோற்றத்தில் வந்திருப்பதும் நமக்கு அகண்டாகாரமானதே. ஜீவர்கள் அனைத்தும் தோற்றத்தில் வந்துள்ள ஈசுவர சொரூபத்தில் அடங்கிவிடுகிறார்கள். ஜீவனுக்கு முக்தி எது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். முக்தியைப் பல பெரியவர்கள் பலவிதங்களில் விளக்கியிருக்கிறார்கள். அக்ஞானத்தினின்று விடுதலையடைவது ஒருவித முக்தி. தான் பரமாத்மாவினுடைய தோற்றம் என்பதை அறிந்துகொண்டான பிறகு அவன் திரும்பத்திரும்பப் பிறவிகள் எடுத்துக்கொண்டிருந்தாலும் அந்த ஜீவனை நித்திய முக்தன் என்று சொல்லுவது உண்டு. ஆனால் அந்த ஜீவன் தனது வினைகளையெல்லாம் ஒழித்துவிட்டால் பிறகு பிறப்பெடுப்பதில்லை. பிறப்பு எடுக்காத நிலையை ஜீவன் அடைகிற முக்தி என்று சொல்லுகிறோம். ஜீவபோதத்தை அறவே கலைத்துவிடுவது முக்தியாகிறது. அலை தன்னுடைய வடிவத்தைக் கலைத்துவிட்டால் அது கடல் ஆய்விடுகிறது. கடல் எடுக்கின்ற புதிய அலைகள் பழைய அலையினின்று வந்ததென்று சொல்லமுடியாது. பழைய அலை அறவே அடங்கிப் போய்விட்டது. புதிய அலைகளாக அக்கடல் மேலும் மேலும் தோன்றிக்கொண்டிருக்கிறது. ஒரு ஜீவன் முக்தியடைகின்றபொழுது தான் அறவே தனது வியக்தியை இழந்துவிடுகிறான். அவனிடத்து அவன் ஜீவனாய் இருந்த பொழுது திகழ்ந்து கொண்டிருந்த சச்சிதானந்தமே மிச்சம். எனவே ஜீவதோற்றம் இருக்கின்றபொழுதும் சச்சிதானந்தம் இருக்கின்றது; ஜீவதோற்றத்தை அழித்து விடுகின்றபொழுதும்

சச்சிதானந்தம் இருக்கிறது. சச்சிதானந்த நிலைக்குப் போக்கு இல்லை, வரவு இல்லை. வடிவத்தை எடுப்பதற்குத் துவக்கமும் உண்டு, முடிவும் உண்டு. முடிவு அடைகின்றபொழுது முக்தி. இடையில் வடிவத்தை உடைத்திருக்கின்றபொழுது தன்னுடைய அறியாமையினால் தான் துக்கப்பட்டுக் கொண்டிருப்பவனாக ஜீவன் கற்பித்துக் கொள்கிறான். ஆக, வடிவமும் துக்கமும் வெறும் தோற்றம். முக்திநிலையில் தோற்றம் அழிந்துபோய் விடுகிறது. யதார்த்த நிலை பழுதுபடாதிருக்கிறது. சச்சிதானந்தம் யதார்த்த நிலை. வடிவமும் வினையும் கற்பித்துக்கொள்கிற துன்பமும் நிலையற்றவை. நிலையற்றவைகளை நிலையற்றவை களாகத் தள்ளிவிடுவது முக்தி. அப்படி முக்தியடைந்த ஒரு ஜீவன் பழைய வியக்தியாகத் திரும்பவும் பிறப்பது இல்லவே இல்லை. கற்ற ஜீவர்களாகத் தன்னைக் காட்டிக்கொண்டிருக்கும் விளையாட்டை ஈசுவரன் சதா செய்து கொண்டிருக்கிறார்.

கேள்வி: *(127)* உலகமும் உலகத்தில் தோன்றும் சகலவஸ்துக்களும் என்னால் கற்பனையாகக் காணப்படு கிறது என்றும், நான் சாக்ஷியாக இருந்து அறிந்து கொண் டிருக்கிறேன் என்றும் ஒருவர் பகர்கிறார். இப்படி இருக்க ஒரு பெரியார் இந்த சரீரம் நான், சகல வஸ்துக்களும் நான், நானே பலவித வடிவங்களாக என்னைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறுகிறார். இதில் எது பொருத்த மானது?

பதில்: இந்த இரண்டுவிதமான மனநிலைகளும் பொருத்தமானவைகளே. ஆத்ம விசாரத்துக்கு இரண்டும் பயன் படுகின்றன. முறையாக அனுஷ்டித்தால் இவ்விரண்டுவித முறை களும் சாதகனை மெய்ப்பொருளிடத்தே எடுத்துச்செல்லும். ஒரு உதாரணத்தின் மூலம் இதை விளக்குவோம். கடல் இருக்கிறது. அதில் அலைகள் பல இருக்கின்றன. அக் கடலின் உண்மை நிலையைக்காண இரண்டு மனிதர் முயலு கின்றனர். ஒரு மனிதன் அலைகளையெல்லாம் கற்பனை என்கின்றான். அலை என்கின்ற பேதத்தைக் கலைத்துவிட்டால் அலை என்ற நாமமும் போய்விடுகிறது. கடல்தான் எஞ்சி யிருக்கிறது. இத்தகைய முடிவுக்கு வருகிறான். மற்றொரு

மனிதன் ஆராய்ச்சிக்கு ஒரு அலையை எடுத்துக்கொள்கிறான். அத்துடன் பக்கத்தில் உள்ள அலைகளைச் சேர்க்கிறான். அதன் பிறகு அதைச் சூழ்ந்துள்ள வேறு அலைகளை எடுக்கின்றான். இப்படியே அலை என்னும் வியத்தியை அகண்டாகாரத்தில் விரித்துக்கொண்டே போனால் அது கடல் மயம் ஆய்விடுகிறது. ஆக, அதன் முடிவும் கடலை உள்ளபடி அறிந்து கொள்ளுதலாம். முதல் சாதகன் ஜகத்தாகத் தென்படு பவைகள் அனைத்தும் கற்பனை என்று புறக்கணிக்கின்றான். கற்பனை செய்கின்ற சித் சொரூபம்தான் யாண்டும் நிலைத் துள்ளது என்று விசாரிக்கின்றான். அவனுடைய விசாரணையில் உலகெலாம் ஒடுங்கிவிடுகின்றன. பேரறிவு சொரூபமான மெய்ப் பொருள்தான் எஞ்சியிருக்கிறது. மற்ற மனிதன் தென்படுகின்ற அனைத்தையும் தன்மயமாகப் பாவிக்கின்றான். தனக்கும் மற்ற வர்களுக்கும் உள்ள பேதத்தை அகற்றிவிடுகின்றான். அப்படிச் செய்வதால் அகம், புறம் என்கிற வேற்றுமை போய்விடுகிறது. அகண்டாகாரமாய் ஒரு பொருள்தான் எஞ்சியிருக்கிறது. இங்ஙனம் இறுதியாக இருவர் அடைந்தது அகண்டாகாரமாயும், பேருணர்வாயும் அமைந்துள்ள பெரிய பொருள் ஒன்றேயாம்.

கேள்வி: (128) **பூர்வ ஜன்மங்களில் செய்யும் பாப புண்ணியங்களுக்கு ஏற்ப இந்த ஜன்மத்தில் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் அமைகிறது என்று சொல்லப் படுகிறது. அப்படியானால் பூர்வ ஜன்மங்களில் ஒவ்வொரு மனிதனையும் நல்வினையிலும் தீவினையிலும் ஈடுபடுத்தி அதற்கான நல்ல எண்ணங்களையும் கெட்ட எண்ணங் களையும் கொடுப்பது யார்? இறைவன் தானே?**

பதில்: ஜனனமரணம் என்பது ஓயாது நிகழ்ந்து வரும் வினைப்பயன் ஆகும். இரவும் பகலும் மாறி மாறி வருவது போன்று உடலை எடுப்பதும் உடலை உகுப்பதும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொருவனும் எண்ணுகிற எண்ணமே அவனுடைய வினைப்பயன் ஆகிறது. ஒரு காலத் துக்கு உதவுகிற எண்ணம் இன்னொரு காலத்துக்கு உதவாது. சிறுபிள்ளையானவன் வாழ்க்கையைப்பற்றி ஒரு எண்ணம் கொள்கிறான். அந்த எண்ணத்துக்கேற்ற சூழ்நிலையையும் தனக்கு

அமைத்துக்கொள்கிறான். வயது முதிர்ந்த பிறகு பழைய எண்ணத்தில் அவனுக்கு விருப்பமில்லை. அது தீவினைக்கு ஒப்பாய்விடுகிறது. வேண்டப்படாத எண்ணமும் அந்த எண்ணத் தின் விளைவும் தீவினைப்பயனாகத் தள்ளப்படுகிறது. ஆகவே ஒருகாலத்தில் நல்வினையாக இருந்தது மற்றொரு காலத்தில் தீவினையாகப் பழுதுபட்டுப் போய்விடுகிறது. புதிய புதிய எண்ணத்துக்கு ஒப்பத் தனது வாழ்வை ஓயாது புதுப்பித்து அமைப்பதற்கே ஜனனமரணம் என்று பெயர். எண்ணங்கள் அனைத்தும் தன் அறிவிலிருந்தே உதிக்கின்றன. தன்னுடைய அறிவோ தெய்வத்திடத்திருந்து வந்துள்ள ஓர் அம்சம் ஆகும். கிரணங்கள் எல்லாம் சூரியனிடத்திருந்து வருவது போன்று ஜீவர்கள் எல்லாம் பரமாத்மாவிடத்திருந்து வந்தவைகள். எனவே ஜீவர்கள் எண்ணுகிற எண்ணங்களும் ஒருவிதத்தில் பரமாத்மா விடத்திருந்து வந்துள்ள அறிவுக் கிரணங்கள் ஆகின்றன. இந்த எண்ணங்களிலுள்ள வேற்றுமையே ஜீவவேற்றுமையாக வடிவெடுக்கிறது. தன்னை மிருகமாக எண்ணிய ஜீவன் மிருக மாகின்றான். தன்னை மனிதனாக எண்ணிய ஜீவன் மனிதனா கின்றான். மிருக நிலையில் இருக்கிறபொழுது அது அந்த ஜீவனுக்கு நல்ல பிறப்பு. மனித நிலைக்கு வந்தான் பிறகு அது வேண்டப்படாத பிறப்பு ஆகிறது. எண்ணத்தை மாற்றி யமைப்பது வாழ்க்கையின் குறிக்கோள். எண்ணத்தை உயர்த்திக் கொள்கின்றபொழுது வாழ்வு உயர்ந்ததாய் விடுகிறது. எண் ணத்தை அறவே ஒடுக்கிவிடுகிற இடத்து ஜனனமரணம் என்னும் பிறவிப் பெருங்கடல் ஒடுங்கிவிடுகிறது. அந்த ஜீவன் புறப்பட்ட இடமாகிய கடவுளை அடைந்துவிடுகிறான். எனவே எல்லா எண்ணங்களும் ஒருவிதத்தில் கடவுளிடத்திருந்து வந்த வைகள்தாம். அதை முன்னிட்டுக் கடவுள் சொரூபத்துக்கு இழுக்கு வந்துவிடாது. அழுக்கான பூமியில் படிகிற சூரிய கிரணத்தை முன்னிட்டுச் சூரியனுக்கு இழுக்கு வந்துவிடுவ தில்லை. ஒரு ஜீவன் எண்ணுகிற கீழான எண்ணத்தை முன்னிட்டு அந்த எண்ணத்துக்குப் பிறப்பிடமாகிய தெய்வத் துக்குக் குறைபாடு ஒன்றும் வந்துவிடாது.☆

4. கடவுள் தத்துவம்

கேள்வி: (129) இராமன், பரசுராமன் இரண்டு அவதாரங்களிடையே ஏன் முரண்பாடு வந்தது?

பதில்: தசாவதாரங்கள் சரித்திர பூர்வமான மூர்த்திகள் அல்லர். பத்து அவதாரங்களுள் தசரதராமன், கிருஷ்ண பரமாத்மா, புத்தர் பெம்மான் ஆகிய மூவருமே சரித்திர பூர்வமான மூர்த்தி களாவார்கள். ஏனையவர்கள் புராணக் கற்பனை மூர்த்திகளாம். ஆயினும் அந்தக் கற்பனை மூர்த்திகள் போன்றவர்களை எக்காலத் திலும் பிரபஞ்சத்தில் காணலாம். இந்தக் கோட்பாட்டுக்குட் படத் தசரத ராமனைப் பரசுராமன் வந்து தாக்கினார் என்பதும் சரித்திரப் பூர்வமான நிகழ்ச்சி ஆகாது. ஆயினும் கற்பனையாக அமைந்த அந்தச் சூழ்நிலையில் நல்ல ஆத்ம சாதகன் ஒருவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்குக் கற்பனையாக நிகழ்ந்த பரசுராம-தசரதராம முரண்பாடு விளக்குகிறது. இராமா யணத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் சில புராண பூர்வமான கற்பனைகள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கற்பனை எனினும் அதன் நடைமுறை நமக்குப் பாடம் புகட்டுகிறது. அதன் பொருட்டு அக்கற்பனை நிகழ்ச்சி களையும் சரித்திர பூர்வமான நிகழ்ச்சிகளோடு இணைத்து எடுத்துக்கொள்வதில் குற்றம் ஏதும் இல்லை. சமுதாயத்துக்கு நல்வழி காட்டுதற்கு அவைகள் நன்கு பயன்படுகின்றன என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கேள்வி: (130) சிதம்பரத்தில் கோவிந்தராஜன் சயனித்திருக்க நடராஜன் நடனம் புரிவதேன்?

பதில்: பரதத்துவம் முழுவதும் சிதம்பரத்தில் அமைந்துள்ள

கோயிலில் வடிவத்தின் மூலமாக விளக்கப்படுகிறது. கிரகிக்க முடியாத பாரமார்த்திகத் தத்துவங்களுக்கு விளங்கக்கூடிய வடிவங்களைக் கொடுத்து அந்த வடிவங்களின் வாயிலாகத் தத்துவத்தை விளக்கினால் அது மந்த அதிகாரிக்கும் நன்கு விளங்குகிறது. அறிந்து கொள்ளுவதற்கு அரிதாயிருக்கிற நுண்ணிய கோட்பாடுகளை யாரும் அறியும்படி அதற்கேற்ற உபாயத்தைக் கையாண்டு விளக்குவ்து இந்துமதத்தின் தனிச்சிறப்பு ஆகும்.

பரவஸ்துவானது அசைவு அற்றதாகவும் அசைவு உற்ற தாகவும் ஏக காலத்தில் இருக்கிறது. இக்கோட்பாடு 'சயானோ யாதி ஸந்வத: சயனித்துக்கொண்டும் அதே வேளையில் எங்கும் நடமாடிக்கொண்டும் பரவஸ்து இருக்கிறது என்னும் கோட்பாடு உபநிஷதத்தில் வந்துள்ளது. கடல் ஏக காலத்தில் மேற்பரப்பில் அலை வீசிக்கொண்டிருக்கிறது. கீழ்ப்பகுதி அசை யாது இருந்தது இருந்தபடி இருக்கிறது. பரவஸ்துவின் பாங்கும் இத்தகையதே. இக்கோட்பாட்டைக் கோவிந்தராஜன் சயனித்துக் கொண்டிருக்கிறான் என்றும், நடராஜன் அண்டங்கள் அனைத் தையும் தன் நடனத்தின் வாயிலாக இயக்குவிக்கிறான் என்றும் இயம்பப்படுகிறது. சமயவாதிகள் கருதுகிற பிரகாரம் கோவிந்த ராஜனும், நடராஜனும் ஒன்றினின்று ஒன்று மாறுபட்டிருக்கிற இரண்டு தெய்வங்கள் அல்லர். வஸ்து ஒன்று. அதில் இயக்க மும், இயக்கமின்மையும் சேர்ந்து அமைந்திருக்கின்றன என்பது தத்துவம். இக்கோட்பாட்டுக்கு விளக்கமாகச் சிதம்பரத்தில் கோவிந்தராஜனுடைய சந்நிதியும் நடராஜனுடைய சந்நிதியும் இணைத்து அமைக்கப்பெற்றிருக்கின்றன.

கேள்வி: *(131)* 'சிவன்', 'விஷ்ணு' என்று கூறுகின்றோம். கடவுள் ஒருவரா? பலரா? தயவுசெய்து விளக்கவும்.

பதில்: மெய்ப்பொருள் ஒன்று; அதற்குப் பெயர்கள் பல வாய்த்துள்ளன. உலகெங்கும் உள்ள நீர் ஒன்று. அது கடல் நீர், ஆற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர், மழை நீர் என் றெல்லாம் பெயர் பெற்றுள்ளது. அதே பாங்கில் மெய்ப்பொருள் ஒன்று; அந்த மெய்ப்பொருளைச் சைவ சமயத்தவர்கள் சிவன் என்றும், வைஷ்ணவ சமயத்தவர்கள் விஷ்ணு என்றும்

அழைக்கின்றனர். அதே பொருளுக்கு ஹரிஹரன் என்பது மற்றொரு பொதுப்பெயர். ஹரி என்னும் சொல் விஷ்ணுவைக் குறிக்கிறது. ஹரன் என்னும் சொல் சிவனாரைக் குறிக்கிறது. 'ஹரி' என்னும் வேர்ச் சொல்லிலிருந்து இவ்விரண்டு பெயர்களும் வந்துள்ளன. தீமையை அகற்றி நலத்தை நிலைநாட்டுபவன் என்பது இந்த நாமத்தின் பொருள். ஆகவே, மெய்ப்பொருளை ஹரி என்றோ ஹரன் என்றோ அழைக்கலாம். இதற்குமேல் அந்தந்தச் சமயக் கோட்பாடுகளுக்கேற்ப அப் பொருளுக்குப் பெயர்கள் பல வேண்டியவாறு வந்தமைந்து இருக்கின்றன.

கேள்வி: *(132)* நாடெங்கும் வழிபட்டு வருகின்ற மாரியம்மன் என்னும் அம்பிகைக்கு சாஸ்திரோக்தமான விளக்கம் ஏதாவது இருந்தால் அதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

பதில்: அம்பிகையின் வழிபாடு பண்டைக்காலத்திலிருந்து இன்றுவரை உலகில் வெவ்வேறு சமுதாயங்களுக்கிடையில் வெவ்வேறு விதங்களில் இடம்பெற்று இருக்கிறது. பரம் பொருளை உலகமாதாவாக வைத்து வணங்குவது மக்களின் போக்கு ஆகும். ஆங்காங்குள்ள கிராம தேவதைகள் அம்பிகை யின் சொரூபங்களாக விளங்குகின்றன. ஆங்காங்கு அவளுக்கு அமைந்துள்ள நாமங்களுள் துர்க்கையும் காளிகா தேவியும் காலக்கிரமத்தில் பரதேவதையின் ஸ்தானத்தைப் பெற்றுள் ளார்கள். கடவுளின் வடிவங்கள் எனத் தபோவனம் வெளியிட் டிருக்கும் நூலில் இவ்விஷயம் விரிவாக விளக்கப்பட்டு இருக்கிறது.

மாரியம்மன் வைசூரி நோய்க்கு அதிஷ்டான தெய்வமாக வைத்து நாடெங்கும் இந்நாள்வரை ஆராதிக்கப்பட்டு வருகின் றாள். மனிதன் பண்பாட்டில் மேலே போவதற்கு ஏற்ப அவன் வழிபடுகிற தெய்வங்களுக்கும் ஈசுவர விபூதிகள் ஏராள மாக நாளடைவில் இணைக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பாங்கில் மாரியம்மனும் காலாந்தரத்தில் பரதேவதையின் ஸ்தானத்தைப் பெறுவாள் என்பது வெளிப்படை. ஏற்கனவே பாரதியார் பாடிய பாடல்களுள் மாரியம்மன் பரதேவதையின்

வடிவமாகவே கருதப்படுகிறாள் என்பதற்குச் சான்றுகள் காண்கின்றோம். இங்ஙனம் ஆங்காங்கு மக்களால் ஆராதிக்கப் படுகிற சிறு தெய்வங்கள் நாளடைவில் விபூதிகள் பல அடையப் பெற்றுப் பரவஸ்துவோடு இணைக்கப்படுவது மக்கள் அருள் துறையில் அடைந்துவருகிற முன்னேற்றத்துக்கு அறிகுறிகள் ஆகும்.

மாரியம்மனைப் பராசக்தி சொரூபமாகப் பாராட்டி வழிபடுவது பொருத்தமானதே. சாஸ்திரத்தின் திட்டத்துக்கு இது ஒத்திருக்கிறது.

கேள்வி: *(133)* கடவுளின் கைகளில் ஆயுதம் தாங்கி இருப்பதன் கருத்து யாது?

பதில்: கடவுளின் மகிமைகள் எண்ணிக்கையில் அடங்காத வைகள். அங்ஙனம் கணக்கற்ற மகிமைகளுள் ஒவ்வொரு தெய்வத்திடத்தும் சில மகிமைகள் முன்னிலையில் வந்து நிற் கின்றன. கணபதிக்கு விக்னேசுவரன் என்பது பெயர். அவனை வழுத்துகின்ற உயிர்வகைகளுக்கு உண்டாகின்ற விக்கினங்களைத் தடுப்பது அவனுடைய சிறந்த செயல். அவனுக்கு ஆயுதமாக அமைந்திருப்பவைகள் அங்குசமும் பாசமுமாம். நல்லதைக் கடைப் பிடிக்கும்படி அவன் தூண்டுகிறான். நல்லதில் பாசம் வை எனும் செய்தியை அதன் மூலம் உயிர்களுக்கு வழங்கு கிறான். மாவுத்தன் யானையை நடாத்துவதற்கு அங்குசத்தைக் கையாளுகின்றான். அதே விதத்தில் கணபதி அங்குசத்தைக் கையாண்டு உயிர்கள் கெட்ட வழியில் செல்லாதும் நல்வழியில் செல்லும்படியும் தூண்டுகிறான். தெய்வம் ஒன்று; அந்த ஒரு பொருள் இந்தச் சிறந்த செயலைச் செய்கின்றவிடத்து அவனுக்கு விக்னேசுவரன் என்று பெயர் வருகின்றது. நெற்றிக்கண்ணால் சிவனார் காமத்தை எரித்தார். தட்சிணாமூர்த்திக்கோ மௌனமும், சின்முத்திரையுமே ஆயுதங்கள். இங்ஙனம் ஒவ்வொரு தெய் வமும் படைத்துள்ள ஆயுதத்தின் மூலமாக அவருடைய தனிச்சிறப்பு வெளியாகிறது.

கேள்வி: *(134)* பரப்பிரம்மத்துக்கும், நாம் வழிபடுகிற தெய்வங்களுக்கும் உள்ள தொடர்பு யாது? தெய்வங்களுக்கு

அமைந்துள்ள வாகனங்களைப் பற்றிய தத்துவம் ஏதாவது உளதா? அதைத் தெளிவிக்க வேண்டுகிறேன்.

பதில்: வஸ்து ஒன்று. அது நிர்குணப்பிரம்மம் எனவும், சகுணப்பிரம்மம் எனவும் கூறப் பெறுகிறது. முக்குணங்களைத் தாண்டியுள்ள நிலை நிர்குணப்பிரம்மம் எனப்படுகிறது. முக்குணங்களோடு சேர்ந்துள்ள நிலை சகுணப்பிரம்மம் எனப் படுகிறது. ஒரே வஸ்து ஏககாலத்தில் நிர்க்குணப்பிரம்மமாகவும், சகுணப்பிரம்மமாகவும் இலங்குகிறது. ஓர் உபமானத்தைக் கொண்டு பரமஹம்சதேவர் இதை விளக்குகிறார். கடலின் அசைவற்ற அடிப்பகுதி நிர்குணப்பிரம்மம்; அலைவீசி விளை யாடிக்கொண்டிருக்கிற மேல்பரப்பு சகுணப்பிரம்மம். விபூதிகள் அல்லது போற்றுதற்குரிய மகிமைகளனைத்தும் சகுணப்பிரம்மத் துக்குரியவைகள்.

சகுணப்பிரம்மத்தின் வெவ்வேறு அம்சங்களாக நாம் வழிபடும் தெய்வங்கள் அமைந்திருக்கின்றன. சைவ சமயத்துக்கு மூலப்பொருளாயிருக்கும் சிவனும், வைஷ்ணவ சமயத்துக்கு மூலப்பொருளாயிருக்கும் விஷ்ணுவும், சாக்த மதம் போற்றுகிற சக்தியும், காணாபத்தியம் போற்றுகிற கணபதியும், கௌமாரம் போற்றுகிற குமரக்கடவுளும், சௌரமதம் போற்றுகிற சூரிய நாராயணனும் சகுணப்பிரம்மத்தின் வெவ்வேறு சொரூபங்களாம்.

சிவனாருக்கு வாகனமாயிருப்பது காளை. அம்பிகை அல்லது சக்திக்கு வாகனமாயிருப்பது சிம்மம். விஷ்ணுவுக்கு வாகனமாயிருப்பது கருடன். கணபதிக்கு வாகனமாயிருப்பது எலி. குமரனுக்கு வாகனமாயிருப்பது மயில். சூரியநாராயண னுக்கு வாகனமாயிருப்பது பச்சை நிறமுடைய ஏழு குதிரைகள். இப்படிப் பலப்பல வாகனங்கள் அமைந்திருப்பதில் கோட்பாடு ஒன்று உண்டு. மக்கள் உள்ளத்தில் மட்டும் அவர் இலங்குகிறார் என்று நாம் எண்ணலாகாது. உயிர்கள் அனைத்திடத்தும் அவர் வீற்றிருக்கிறார் என்பதை விளக்குதற்குப் பறவைகளும், விலங்குகளும் வாகனங்களாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. தத்துவத்தை அனுசரித்து இந்த வாகனங்களைத் தீர்க்கதரிசிகள் அமைத்துள்ளார்கள்.

அம்பிகைக்குச் சிம்மம் வாகனமாக அமைந்திருப்பதின் வாயிலாக அவள் பேராற்றல் படைத்தவள் என்னும் கோட்பாடு

குறிப்பிடப்படுகிறது. சிவனார் காளை வாகனத்தை உடைத் திருப்பதின் வாயிலாகப் பொறுமையுடன் நெடிது உழைப் பவர்கள் தெய்வத்தை அடையத் தகுதி உடையவர்கள் ஆகிறார்கள் என்னும் கோட்பாடு அடங்கியிருக்கிறது. யானை வடிவினனாகிய கணபதிக்குச் சிறிய எலி வாகனமாய் அமைந் திருப்பதில் கோட்பாடு ஒன்று உள்ளது. பஞ்ச பூதங்களாலாகிய சரீரத்தில் பெரியவை, சிறியவை என்னும் பாகுபாடு இருக்கிறது. எடையில் மேலானது கீழானது என்னும் வேற்றுமையும் இருக்கிறது. ஆனால் ஆத்மாவோ பெரியதுமன்று; சிறியதுமன்று. அது பஞ்ச பூதங்களுக்கு அப்பாற்பட்டதால் அதற்கு எடை கிடையாது. எறும்பின் உள்ளத்தில் வீற்றிருப்பதும், யானையின் இருதயத்தில் வீற்றிருப்பதும் ஒரே பரமாத்மா. அது குணம் குறிகளுக்கு அப்பாற்பட்டது. முருகன் என்னும் சொல் அழகன் எனப் பொருள்படுகிறது. குழந்தையினிடத்துத் தெய்வீக அழகும் உடலழகும் சேர்ந்து அமைந்திருக்கின்றன. அழகுக்கு அறிகுறி யாகக் குமரன் மயில் வாகனனாக இலங்குகிறான். கருடன் வானத்தில் உயரப் பறக்கிறது. அதற்குப் பின்னணியாக இருப்பது நீலநிறமான வெட்டவெளி. அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிற வெட்டவெளியும் பரந்த கடலும் நீலநிறம் படைத்தவைகளாகத் தென்படுகின்றன. விஷ்ணு என்னும் சொல் எங்கும் நிறை பொருள் எனப் பொருள்படுகிறது. எங்கும் நிறைபொருள் நீலநிறம் எடுக்கிறது. மஹாவிஷ்ணுவும் நீலநிறம் உடையவராக இலங்குகின்றார். வெட்டவெளியின் நீலநிறத்தைத் தாங்கிக் கொண்டு பறப்பதுபோன்ற கருடன் தென்படுகிறது. ஆதலால் அது அவருக்கு வாகனமாக அமைக்கப்பட்டிருக்கிறது. சூரிய நாராயணனுடைய பச்சைநிறம் படைத்துள்ள ஏழு குதிரைகள் செழுமை வாய்க்கப் பெற்றிருக்கிற ஏழு நிறங்களுக்குச் சின்னங் களாயிருக்கின்றன. சூரிய நாராயணனுடைய வெளிச்சம் ஏழு நிறங்களாக வடிவெடுக்கவல்லது. அக்கோட்பாடு அவருடைய வாகனங்களில் அமைந்திருக்கிறது.

கேள்வி: *(135)* கடவுள் எல்லாச் சக்தியும் பொருந்தியவர். அவருக்கு வாகனம் எதற்காக?

பதில்: கடவுள் சர்வவியாபி என்றும், சர்வக்ஞன் என்றும்,

சர்வசக்திமான் என்றும் அழைக்கப்படுகின்றார். எங்கும் நிறைந்துள்ள கடவுளுக்குக் கோயில் கட்டி அதில் எழுந்தருளச் செய்து வழிபடுகின்றோம். எல்லாவற்றையும் அறிந்துள்ள அவரிடம் நம் குறைகளை எடுத்துச் சொல்கின்றோம். நம் குறைகளை எடுத்துச் சொல்லித்தான் அவர் அறிய வேண்டியது அவசியமில்லை. சர்வ வல்லமை படைத்த கடவுளுக்கு ஆயுதங்களைத் தந்திருக்கின்றோம். அவ்ருடைய மஹிமைகளை அறிந்துகொள்வதற்குப் புறத்தே ஒரு வடிவம் வைத்து அதன் மூலம் அறிய நாம் முயல்கின்றோம். அங்ஙனம் இறைவனுக்கு வாகனங்கள் அமைத்து அவ்வாகனங்கள் மூலமாக இறைவனுடைய சில மஹிமைகளை அறிந்துகொள்ள முயல்கின்றோம்.

விநாயகப் பெருமானுக்கு மூஞ்சுறு வாகனமாக அமைந்திருக்கிறது. மூஞ்சுறு வடிவத்தில் சிறியதாயினும் பூமியைத் துளைத்துச் செல்லும் சக்தி வாய்ந்தது. எதனையும் ஊடுருவி ஆராய்ந்து பார்ப்பது அறிவின் செயலாகும். விநாயகப் பெருமான் அறிவுத் தெய்வமாகின்றார். எனவே, அவருக்கு மூஞ்சுறு வாகனமாக அமைந்திருக்கிறது. சிவபெருமானுடைய தலைமைத் தகைமைக்கும், பொறுப்புக்கும், அமைதிக்கும் ஏற்ப அவருக்கு ரிஷபம் வாகனமாக அமைந்திருக்கிறது. அம்பிகையின் பராக்கிரமத்துக்கு ஏற்ப அவளுக்குச் சிங்கம் வாகனமாக அமைந்திருக்கின்றது. இங்ஙனம் ஒவ்வொரு தெய்வத்துக்கும் அமைந்திருக்கின்ற வாகனம் இறைவன் உயிர்களுக்கு அந்தர்யாமியாயிருந்து அவைகளை ஆட்டுவிக்கின்றான் என்ற உட்கருத்தை விளக்குகின்றது. பாம்பு, பறவை, மிருகம், சிறிய உயிர், பெரிய உயிர் ஆகியவைகளை இறைவனுக்கு வாகனமாக அமைத்திருப்பதன்மூலம் உயிர்கள் எல்லாம் அவருக்கு வாகனம் என்ற கருத்து விளக்கப்படுகிறது. இறைவன்தான் உயிர்களை எல்லாம் இயக்கி வருகின்றான். வாகனங்கள் உயிர்களுக்குச் சின்னமாகின்றன. அவற்றை இயக்குகின்ற தெய்வம் பரமாத்மாவை விளக்குகின்றார். பரமாத்மா உயிர்களை இயக்கி வருகின்றார் என்ற உண்மை தெய்வத்துக்கு வாகனம் அமைப்பதன் மூலம் விளக்கப்படுகிறது.

கேள்வி: (13C) **ஒன்றுமறியாதவனைச் 'சிவனே என்று கிடக்கிறான்' என்று சொல்கிறார்கள். ஏன் 'ஹரியே',**

'பிரம்மதேவனே' என்று சொல்லக்கூடாதா? விளக்கம் தருவிக்க வேண்டுகிறேன்.

பதில்: ஒன்றுமறியாதவன் ஒன்றும் செய்வதில்லை. விஷயத்தை ஏதேனும் ஒருவிதத்தில் அறிந்திருக்கிறவன் அறிந்ததைச் செயலுக்குக் கொண்டுவருகிறான். அறியாதவன் செயலற்றுக் கிடக்கிறான். மும்மூர்த்திகளுள் சிருஷ்டிக்குக் கர்த்தாவாயிருப்பவர் பிரம்மதேவன். ஸ்திதிக்குக் கர்த்தாவாயிருப்பவர் விஷ்ணு. சம்ஹாரத்திற்குக் கர்த்தாவாயிருப்பவர் ருத்ரன். ருத்திரனும் சிவனும் ஒன்றே. செத்த பிணம் செயலொன்றும் செய்வதில்லை. உயிரோடு இருக்கும்பொழுதே யாரொருவன் செயலற்று இருக்கிறானோ அவன் செத்தவனுக்கு நிகர். அன்னவனைக் குறித்து அவன் கிடக்கிறான் சிவனே என்று சொல்லுவது பொருந்தும். அவனைக் குறித்து அவன் கிடக்கிறான் ஹரியே என்றோ அவன் கிடக்கிறான் பிரம்மதேவனே என்றோ இயம்புவது பொருந்தாது. மக்களுள் சிலர் தங்களைக் குறித்துத் தாங்களே நான் கிடக்கிறேன் சிவனே என்று இயம்பிக்கொண்டு தங்களை உபத்திரவப்படுத்த வேண்டாம் என்று இயம்புவார்கள். அப்படிச் செயலற்றுக்கிடப்பதும் அதற்கேற்றவாறு இயம்புவதும் பொருந்தாது. உயிரோடு இருக்கும்பொழுதே உயிரற்ற நிலையில் செயலற்றுக்கிடப்பது பாராட்டத்தக்கதன்று. வாழ்நாளெல்லாம் மானுடன் ஆற்றல் படைத்தவனாகவும் உயிர்த்தத்துவம் ததும்புபவனாகவும் இருத்தல்வேண்டும். ஆதலால் இந்த மனப்பான்மை பாராட்டுதற்கு உரியதன்று.

கேள்வி: *(137)* சிறுவயதில் விவேகானந்தருக்கு வண்டிக்காரன் கூறிய கதை வாயிலாகத் திருமணமே தொல்லைகளுக்குக் காரணம் என்ற முடிவுக்கு வந்தார். அதனால் திருமணமான இராமர் விக்ரஹத்தை வீதியில் வீசியெறிந்துவிட்டுப் பின் வருந்தினார். ஆனால் தாய் தியானமூர்த்தி சங்கரனை வழிபடும்படி கூற அவர் அதனை மேற்கொண்டார். ஆனால் சங்கரனும் திருமணம் ஆனவர் தானே!

பதில்: இராமன் யாண்டும் சீதாராமனாக இலங்குகின்றான். ஆனால் சங்கரனோ உமா மஹேஸ்வரனாகவும் சதாசிவமாகவும்

இலங்குகின்றார். உமா மஹேஸ்வரன் என்னும் முறையில் சங்கரன் மணம் புரிந்தவர். சதாசிவம் என்னும் முறையில் அவர் சுத்தசிவமாக இலங்குகிறார். அந்நிலையில் அம்பிகையின் தோற்றமில்லை. ஆதலால் தியானமூர்த்தி சங்கரனை வழுத் தும்படி அன்னையார் விவேகானந்தரை ஏவினார். மானுட வடிவெடுத்த இராமன் சீதையை மணந்தது மாற்றமுடியாத இணக்கமாகும். பின்பு பரதத்துவத்துக்கு விளக்கமாக இருக்கிற சிவனார் தனிப்பொருளாகவும் இருக்கிறார். சிவசக்தியாகவும் இருக்கிறார்.

கேள்வி: *(138)* சிவன், அம்பிகை, திருமால் இவர்கள் உக்கிர மூர்த்திகளாக மாறியமைவதற்குக் காரணம் என்ன?

பதில்: சிவனாருடைய உக்கிர சொரூபம் ருத்திரன். அம்பிகையின் உக்கிர சொரூபம் ஸ்மஸானகாளி. திருமாலின் உக்கிர சொரூபம் நரசிம்மமூர்த்தி. தெய்வம் சாந்தமூர்த்தி யாகவும், உக்கிரமூர்த்தியாகவும் அமைந்திருப்பது தத்துவத்தின் பாங்கு ஆகிறது. உக்கிரமூர்த்தியாக அமையாது சாந்தமூர்த்தி யாகவே யாண்டுமிருந்தால் நலன்தானே என்பது கேள்வி யினுடைய உட்கருத்து. இம்மூன்று தெய்வங்களும் தத்துவ அமைப்பில் பொருள் ஒன்றே. சமய அனுஷ்டான வசதிக்காக ஒரு தெய்வம் அந்தந்தச் சமயத்துக்குரிய தெய்வமாக வடிவெடுக் கிறது. எப்படி வடிவெடுத்தாலும் தெய்வத்திடத்துச் சாந்த சொரூபம், உக்கிர சொரூபம் ஆகிய இரண்டும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. ஜீவகோடிகளைப் பண்படுத்துதற்குச் சாந்தசொரூபம் பயன்படுவதைவிட உக்கிர சொரூபம் அதிகமாகப் பயன்படுகிறது. கடவுள் தாமே பஞ்சபூதங்களாகப் பரிணமித் திருக்கிறார். பஞ்சபூதங்களுள் பூமி பொறுமையே வடிவெடுத்தது. ஆனால் பூமியில் உண்டாகின்ற பூகம்பம் அதனுடைய உக்கிர சொரூபம். பூகம்பத்தின் வாயிலாக உயிர்களுக்குப் பரத்தைச் சார்ந்திருக்கும் பாடம் புகட்டப்படுகிறது. மக்கள் எவ்வளவுதான் எச்சரிக்கை எடுத்துக்கொண்டாலும் தற்பாதுகாப்புக்கு அந்த எச்சரிக்கை போதாது. பரம்பொருளின் துணையும் தேவை என்பதைப் பூகம்பமாகிய பூமாதேவியின் உக்கிர சொரூபம் பாடம் புகட்டுகிறது. நீர் இல்லாது நிலவுலக வாழ்க்கை

நிலைபெறாது. ஆனால் மழையாகப் பொழிகிற நீரே மிகைபடப் பொழிந்து தள்ளுமாயின் உயிர்களை அது அல்லற்படுத்துகிறது. அல்லலைச் சமாளிப்பது வாழ்க்கைப் பயிற்சி. கடலிலே மாலுமி கப்பலைச் செலுத்துகிறான். கடல் யாண்டும் அமைதி யுற்றிருக்குமாயின் மாலுமியினுடைய திறமை மேலோங்குவ தில்லை. கடலில் கொந்தளிப்பு நேருமானால் அக்கொந்த ளிப்பைச் சமாளிக்கிற மாலுமி கப்பல் ஓட்டும் திறமையில் மேலோங்குகிறான். எனவே கொந்தளிப்பு என்னும் கடலின் உக்கிர சொரூபம் மனிதனுடைய திறமையை வெளிப்படுத்து வதற்குப் பயன்படுகிறது.

கேள்வி: *(139)* மதுரை மீனாட்சியின் கையில் ஏன் பச்சைக்கிளி இருக்கிறது?

பதில்: மதுரை மீனாட்சி அம்மன் தானே பச்சை நிறம் படைத்தவளாக இலங்குகின்றாள். முக்குணங்களுக்கு விளக்கமாக அன்னை பராசக்தி மூன்று நிறங்களை எடுக்கின்றாள். மூன்று கிருத்தியங்களுக்கு விளக்கமாகப் புருஷ தத்துவம் மும்மூர்த்தி களாக வடிவம் எடுக்கிறது. கிருத்தியங்களை முன்னிட்டு மும்மூர்த்திகளுக்கும் நிறங்கள் அமைந்திருக்கின்றன. சக்தியின் மூன்று சொரூபங்களுள் உமை, பச்சை நிறமானவள். அவள் மஹாவிஷ்ணுவினுடைய சகோதரியாகக் கருதப்படுகிறாள். ஆதலால் மஹாவிஷ்ணுவுக்கும் பச்சை நிறம். சகோதர சகோ தரிகள் படைத்துள்ள ஒரே பாங்குக்கு விளக்கமாக நிறம் அமைகிறது. சரஸ்வதியும், சிவபெருமானும் வெண்மை நிறம் படைத்திருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்கிடையில் சகோதர சகோதரி இணக்கம் பொருந்துகிறது. இலட்சுமியும் பிரம்மதேவ னும் தாயும் சேயும் படைத்துள்ள இணக்கத்துக்கு விளக்கமா கின்றனர். பொன்னார் மேனியர்களாக அவர்கள் இருவரும் அமைந்திருக்கின்றனர். இனி கிரியை கர்த்தாக்களாகிய பிரம்மன், விஷ்ணு, ருத்ரன் ஆகிய மூவர்க்குச் சக்திமார்களாக வாய்க்கிற வர்கள் நிறவேற்றுமை படைத்த மனைவிமார்களாக வந்தமை கிறார்கள். சிருஷ்டி கர்த்தாவாயிருக்கிற பிரம்ம தேவன் சிவப்பு அல்லது மஞ்சள் நிறம் படைத்தவன். அவனுக்குச் சக்தியாக இருக்கிற சரஸ்வதி வெண்மை நிறம். ஸ்திதிரிகர்த்தாவாகிய

விஷ்ணு நீல நிறம் அல்லது பச்சை நிறம் உடையவனாக இருக்கிறான். அவனுக்குச் சக்தியாக வாய்த்திருக்கும் இலட்சுமி மஞ்சள் நிறமுடையவளாக இருக்கின்றாள். இராதையும் கிருஷ்ணனும் நிறவேற்றுமைக்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகின் றனர். நீலநிறமும் மஞ்சள் நிறமும் ஒன்றையொன்று நன்கு விளக்குகிறது. சம்ஹார மூர்த்தியாயிருப்பவன் ருத்ரன். அவன் படைத்திருப்பது வெண்மை நிறம். அவனுக்குச் சக்தியாக வாய்க்கும் தேவி பச்சை நிறம் அல்லது நீல நிறம் படைத்தவள். இங்ஙனம் குணவேற்றுமையும் கிருத்திய வேற்றுமையும் நிற வேற்றுமையின் மூலமாக இணைக்கப்பட்டிருக்கின்றன.

மதுரை மீனாட்சி கிளியைக் கையில் வைத்திருப்பது அவள் நிறத்துக்கு ஒத்திருப்பதை விளக்குகிறது. திருநெல் வேலியில் இருக்கும் காந்திமதியம்மன் பச்சை நிறம். ஆனால் அவள் கையில் கிளி இல்லை. பச்சை நிறம் படைத்துள்ள பராசக்தி பச்சைக்கிளியைக் கையில் கொண்டிருந்தால் அவள் மதுரை மீனாட்சியம்மன் என அடையாளம் தெரிந்து கொள்கி றோம். கிளி கையில் இல்லாவிட்டால் சிவனுக்குரிய சக்தி என்னும் பொது இயல்பு முன்னணியில் வந்து நிற்கிறது. பொது இயல்பு படைத்துள்ள பராசக்தி கிளியைக் கையில் ஏந்தியிருப்பதால் மதுரைக்குரியவள் என்னும் சிறப்பு இயல்பைப் பெறுகிறாள். இது ஐதிகம். தத்துவம் ஏதும் இதில் இடம் பெறுகிறதில்லை.

கேள்வி: (140) **சிவபெருமான், அன்னபூரணியிடம் பிக்ஷை பெறுவதில் அடங்கியுள்ள கோட்பாடு என்ன?**

பதில்: அன்னபூரணி அகிலாண்டேஸ்வரியாய் இலங்கு கின்றாள். உயிர்களனைத்தும் அவளிடத்திருந்து வந்தவைகள். ஆகையினால் அவள் ஜகன்மாதா என அழைக்கப்பெறுகின்றாள். உயிர்வகைகளைத் தோற்றுவிப்பதற்கிடையில் அந்தந்த உயிருக்கேற்ற உணவையும் அவள் தேடிவைப்பதற்குச் சான்று பிரபஞ்சத்தின் நடைமுறையேயாம்.

இனி, இத்தனை உயிர்களாக வடிவெடுத்திருப்பவன் இறை வனே, 'உலகனைத்தும் ஆனாய் நீயே' என்பது கோட்பாடு. எல்லாவிதமான உயிர்களுக்கும் உணவூட்டும் அன்னபூரணி சிவனாருக்குப் பிக்ஷை வழங்குவதின் வாயிலாக அவளிடத்தில்

தோன்றி வந்துள்ள உயிர்களனைத்துக்கும் உணவூட்டி வளர்க்கின்றாள் என்னும் கோட்பாடு அடங்கியிருக்கிறது. இதை மற்றோர் உபமானத்தின் மூலம் விளக்கலாம். பெரிய மரம் ஒன்றுக்கு நீர் பாய்ச்சுவதற்கு ஒவ்வொரு கிளைக்கும் இலைக்கும் நீர் பாய்ச்சவேண்டிய அவசியமில்லை. மரத்தின் வேரில் ஊற்றும் நீரானது மரம் முழுதுக்கும் பயன்படுகிறது. அதே பாங்கில் ஈண்டு உயிர்கள் அனைத்தின் தொகையாகச் சிவனார் இலங்குகின்றார். உயிர்களைப் பேணுதல் நல்ல சிவ வழிபாடு ஆகிறது என்னும் கோட்பாட்டிற்கு இலக்காக மாதா அன்ன பூரணி சிவனார்க்குப் பிக்ஷை வழங்குகின்றாள். பெரிய தத்துவம் ஒன்று இங்ஙனம் மாதா அன்னபூரணி சிவனாருக்கு உணவு படைத்தல் வாயிலாக உருவகப்படுத்தி விளக்கப்படுகிறது.

மற்றோர் ஐதிகமும் அன்னபூரணி சிவனாருக்குப் பிக்ஷை போடுதலில் அடங்கியிருக்கிறது. சிவனாருக்கு விஸ்வநாதன் என்று பெயர். அண்டங்களனைத்துக்கும் சிவனே அதிபதி யாயிருக்கின்றார் என்பது கோட்பாடு. அப்படியிருக்கின்ற சிவனார் ஸ்மஸானத்தில் வாழ்ந்திருக்கின்றார் என்பது ஐதிகம். தம் சொரூபத்தின் வாயிலாகச் சிவனார் உலக மக்களுக்கு அரிய பாடம் ஒன்றைப் புகட்டி வருகின்றார். மானுடா! இப்பிரபஞ்சத்தில் உனக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை என்னும் உண்மையை மறந்துவிடாதே. மரணம் எப்பொழுது வேண்டுமானாலும் மனிதனை வந்து தாக்குகிறது. அதற்கு ஆயத்தமாயிருப்பவனே நல்லறிவு படைத்தவனாகின்றான். "செத்தாரைப் போல் திரிநெஞ்சே" என்பது கோட்பாடு. உயிர் வாழ்ந்திருக்கும் பொழுதே மனிதன் உலகப்பற்று அனைத்தையும் ஒதுக்கிவைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இப்பாடத்தைச் சிவனார் தாமே பிக்ஷை ஏற்றுண்பதின் வாயிலாக உலகுக்குப் புகட்டுகிறார்.

மற்றோர் உண்மையை மனிதன் மறந்துவிடலாகாது. சிவனார் ஏற்பதும் சிவ சொரூபமாகிய துறவிகள் ஏற்பதும் பிக்ஷை. இதற்கு மாறாக வறியவர்கள் ஏற்பது ஐயம். பிக்ஷை ஏற்பது ஞானத்தின் விளைவு; ஐயம் ஏற்பது அக்ஞானத்தின் விளைவு. ஐயம் ஏற்பது இகழ்ச்சி. பிக்ஷை ஏற்பது பாராட்டுதற் குரிய பெரும் செயலாம்.

கேள்வி: (141) மாதா அன்னபூரணியிடம சிவனார் பிக்ஷை ஏற்கின்றார். இதன் தத்துவம் என்ன?

பதில்: உலக நடைமுறையை அனுசரித்துப் பார்க்குமிடத்துக் கணவனுக்கு மனைவி நாள்தோறும் அன்னம் படைக்கிறாள். இது சாலப்பொருந்திய முறையாக அமைந்துள்ளது. சிவனும் சக்தியும் இணைபிரியாத மூர்த்திகள். உலக நடைமுறையிலுள்ள கணவன் மனைவி என்கின்ற இரண்டு தனித்தனி மூர்த்திகள் ஆகமாட்டார்கள் சிவனும் சக்தியும். ஆயினும் நமக்குத் தத்துவத்தை விளக்குதல் பொருட்டே அன்னை பராசக்தி அன்னபூரணி என்னும் தனித் தெய்வமாகத் திகழுகிறாள். அண்ட நாயகனாகிய இறைவன் உலகனைத்துக்கும் உணவூட்டும் அன்னையிடமிருந்து தானும் பிக்ஷை ஏற்கிறார். ஒரு கோட்பாட்டின்படி உயிர்களனைத்தின் சொரூபமாக இறைவனார் இருக்கிறார். அத்தனைவித உயிர்களுக்கு அன்னை உணவூட்டுவது சிவனாருக்கு உணவூட்டுதற்கு நிகராகிறது. இது காலமெல்லாம் நிகழ்ந்து வருகிறது. மற்றொரு கோட்பாட்டின்படி ஒவ்வொரு பொருளின் தர்மசொரூபமாக அம்பிகை இலங்குகின்றாள். அந்தப் பொருள் சொரூபமாகச் சிவனார் அமைந்துள்ளார். அக்னியின் தர்மம் வெப்பம். ஆதலால் வெப்பமே அக்னியை அதன் உயர்நிலைக்கு எடுக்கிறது. பாலின் பாங்கு வெண்மை. வெண்மை என்னும் மகிமை சொரூபமாக அம்பிகை அமைந்து கொண்டு பால் என்னும் சிவனாருக்குப் பெருமையூட்டுகிறாள். பிரகாசிக்கும் தன்மை ரத்தினத்துக்கு உண்டு. பிரகாசம் அம்பிகையின் பாங்கு. ரத்தினம் சிவசொரூபம். ரத்தினத்துக்குப் பிரகாசத்தை வழங்கி அதைப் பெருமைப்படுத்துவது சக்தியின் செயல். அம்பிகை சைதன்யம் அல்லது பேரறிவு சொரூபம். அப்பேரறிவைப் படைத்துள்ளவராகப் பரமசிவம் இலங்குகின்றார். அறிவு என்னும் பிக்ஷையை அம்பிகை அண்ணலுக்கு வழங்குகிறாள். சிவனாரே சக்திக்குப் புறம்பாகப் பிரித்து வைக்கப்படுவாரானால் அவர் சவம் போன்று ஆகிவிடுவார். அவர் சவம் ஆகாது யாண்டும் சிவமாயிருக்கும்படி அவருக்குச் சைதன்யத்தை ஊட்டுவது அவரிடத்து இணைபிரியாதிருக்கின்ற அம்பிகையின் மகிமையாம். இக்கோட்பாடு மாதா அன்னபூரணி சிவனாருக்குப் பிக்ஷை அளிப்பதில் அடங்கியிருக்கிறது.

கேள்வி: (142) ஆதிபராசக்தியையும், பரப்பிரம்மத்தையும் விளக்குக.

பதில்: பரப்பிரம்மத்தை அசையாத பாம்பு என்றும், ஆதி பராசக்தியை அசைகின்ற பாம்பு என்றும் கூறலாம். செயல்களை எல்லாம் கடந்த நிலையில் பரம்பொருள் இருக்கின்றார். செயல்புரிகின்ற நிலையில் அவர் ஆதிபராசக்தியாக விளங்குகிறார். கடல் அசையும்பொழுது அலைகள் தோன்றுகின்றன. அசையாத ஆழ்கடல் அமைதியே வடிவெடுத்ததாக இருக்கிறது. அசைகின்ற பரம்பொருளிடத்திருந்து மும்மூர்த்திகளாகிய சிவன், விஷ்ணு, பிரம்மா மற்ற அனைத்து உயிர்களும் தோன்றி வந்துள்ளன. தோன்றி வந்துள்ள அனைத்தையும் பரம்பொருள் இயக்குகின்றார். அப்படி அவர் இயக்கும்பொழுது அவருக்கு ஆதிபராசக்தி என்ற பெயர் அமைகிறது.

இங்கு ஆதி என்பதற்கு முதல் முதலாகத் தோன்றியது என்பது பொருள் அன்று. எல்லாச் சக்திகளுக்கும் மூலமாக இருக்கிறது என்பது அதற்குப் பொருள். பரம்பொருளினிடத்திலுள்ள சக்தி செயல்படும்பொழுது சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் என்னும் செயல்கள் நிகழ்கின்றன. பரம்பொருளிடத்துள்ள சக்தி செயல்படாதிருக்கும்பொழுது அதை மஹாப் பிரளயம் என்கின்றோம். மஹாப் பிரளயத்தில் யாவும் பரம்பொருளிடத்து ஒடுங்குகின்றன.

பாலையும் அதன் வெண்மையையும் பிரிக்க முடியாது. வைரத்தையும் அதன் பிரகாசத்தையும் பிரிக்கமுடியாது. சூரியனையும் அதன் கிரணங்களையும் பிரிக்க முடியாது. அவ்வாறே பரப்பிரம்மத்தையும் ஆதிபராசக்தியையும் பிரிக்க முடியாது. ஒரே பொருள் பரப்பிரம்மமாகவும் ஆதிபராசக்தியாகவும் இருக்கிறது.

கேள்வி: (143) சிவலிங்கத்தின் தத்துவம் என்ன?

பதில்: இறைவன் உருவமாகவும் இருக்கின்றார். அரு உருவமாகவும் இருக்கின்றார். அருவமாகவும் இருக்கின்றார். சிதம்பரத்திலுள்ள நடராஜர் உருவக் கடவுளுக்கு விளக்கமாகிறார். சிதம்பர இரகசியம் அருவக் கடவுளுக்கு விளக்கமாகிறது. சிவலிங்கம் அருவுருவக் கடவுளுக்கு விளக்கமாகிறது.

மேலும் சிவலிங்கச் சின்னத்தில் பரந்த தத்துவங்கள் புதைந்து கிடக்கின்றன. உருவமற்ற பொருள் உருவம் எடுக்கவும் வல்லது என்பதைச் சிவலிங்கம் விளக்குகிறது. சிவலிங்கத்தின் அமைப்பைக் காண்போம். ஆவுடையார் என்னும் கீழ்ப்பகுதி சக்தியின் சின்னம். அதில் நாட்டப்பெற்றிருக்கும் லிங்கம் சிவத்தின் சின்னம். சிவசக்தியின் ஐக்கியத்தால் சராசரங்கள் அனைத்தும் தோன்றியுள்ளன என்னும் கருத்து அதில் புதைந்து கிடக்கிறது.

உயிர்த்தத்துவம் சிவம். உடல் தத்துவம் சக்தி. உடல் இல்லாது உயிர் தன்னை விதவிதமாக விளக்கிக்கொள்ள முடியாது. உயிர் இல்லாது போய்விட்டால் உடல் சவமாகிவிடும். உயிரும் மெய்யும் சேர்வதால் இயற்கைத் திட்டம் இனிது நிறைவேறுகிறது. சிவதத்துவத்துக்கும், சக்தி தத்துவத்துக்கும் புறம்பாக இயற்கையில் ஒன்றுமில்லை. இயற்கையின் நடைமுறையைச் சிவலிங்க தத்துவம் விளக்கிக்கொண்டிருக்கிறது. உயிர்கள் ஆண்பெண் சேர்க்கையால் தோன்றுகின்றன என்பது உண்மை. உடல் சொரூபமே கீழ்மையின் தோற்றம் என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஒரு மனிதன் ஆண் பெண் சேர்க்கையின் விளைவு என்று நாம் கருதுவதில்லை. அவன் எத்தகைய மனபரிபாகம் உடையவன் என்பதையே நாம் கருத்தில் எடுத்துக்கொண்டு மதிப்புத் தருகிறோம்.

தெய்வம் எல்லாம் வல்லது, எங்கும் நிறைந்தது. உயிர்க்குயிராய் இருப்பது என்றும் அண்டம் பிண்டம் யாவும் அதனிடத்திருந்தே தோன்றியுள்ளன என்றும் சிவலிங்கத்தை வழிபடுபவர்கள் கருதுகின்றார்கள். எனவே சிவலிங்கத்தில் பொதிந்திருக்கும் கருத்துக்களையே நாம் யாண்டும் நினைவில் கொள்ளவேண்டும்.

கேள்வி: *(144)* ஆக்கும் கருவியான லிங்கத்தை அழிவுக்கடவுளான சிவனுக்கு அடையாளமாகக் கொண்டு வணங்குகிறோமே, இது சரியா?

பதில்: சிவலிங்கம் கடவுளுக்கு வடிவமில்லை என்பதற்கு அறிகுறியாகும். ஏனென்றால் வடிவம் எடுத்துள்ள மூர்த்தி ஒருவருக்குக் கை, கால் முதலிய உறுப்புக்கள் உண்டு. சிவனாருக்கு

உருவம் உண்டு என்பதற்கு அறிகுறியாக அவர் நடராஜ மூர்த்தியாக வணங்கப்படுகிறார். ஆக, கடவுள் வடிவத்திலும் இருக்கிறார்; வடிவத்தைக் கடந்தவராகவும் இருக்கிறார். இதற்குச் சான்றொன்று எடுத்துக்கொள்வோம். நாம் பருகும் நீர் உறை பனிக் கட்டியாகின்றபொழுது அதற்கு வடிவம் உண்டு. பருகும் நீர் நிலையிலிருக்கிற பொழுது அதற்குச் சொந்த வடிவமில்லை. எந்தப் பாண்டத்தில் போட்டு வைக்கின்றோமோ அந்தப் பாண்டத்தின் வடிவத்தை அது எடுத்துக்கொள்கிறது. பிறகு ஆவியாக மாறுகிறபொழுது அதற்கு வடிவம் ஏதுமில்லை. இதே பாங்கில் பரம்பொருள் எத்தனை உயிர் வகைகளாக இலங்குகின்றாரோ அத்தனை வடிவங்கள் அவருக்கு உண்டு. இனி, பேரானந்தப் பேரறிவு நிலையில் வடிவங்களனைத்தையும் கடந்து அவர் இருக்கிறார். படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்துவிதச் செயல்கள் அகிலாண்ட மெங்கும் ஈசனுடைய செயலாக இருந்து வருகின்றன. இது அவரைப் பற்றிய உண்மை. ஆதலால் ஈண்டு எழுப்பிய கேள்வி பொருளற்றது.

கேள்வி: *(145)* தர்ம சக்கரம் அட்டையில் உள்ள சிவபெருமானின்மேல் பாதம் பதித்த காளிதேவியின் படத்திற்குப் பொருள் என்ன?

பதில்: அம்பிகையின் திருப்பாதம் சிவனார் நெஞ்சின்மீது படிவது பொருந்தாதது போன்று தென்படுகின்றது. மனித நிலை யில் வைத்து ஆராயுமிடத்து மக்களாகிய நாம் கைக்குத் தருகிற மதிப்பைக் காலுக்குத் தருவதில்லை. பரவஸ்துவினிடத்து அத்த கைய பாகுபாடு கிடையாது. அன்னை பராசக்தி பிரபஞ்சமாக இலங்குகின்றாள். ஆகையினால் அசைவு என்பது அம்பிகைக்குச் சொந்தம். அசைகின்ற பொருள் ஒன்றுக்கு அசையாத பொருள் ஆதாரமாக அமைதல் அவசியம். ஓடுகிற வண்டிக்கு ஓடாத பூமி ஆதாரம். வீசுகிற காற்றுக்கு அசையாதிருக்கும் ஆகாசம் ஆதாரம். அதேபாங்கில் இயங்குகின்ற சக்திக்கு இயங்காதிருக்கும் சிவனார் ஆதாரம். இதற்கு விளக்கமாகத் தேவியின் திருநடனம் போக்குவரவற்ற பரம்பொருளாகிய சிவனாருடைய நெஞ்சின்மீது நிகழ்கிறது என்பது முற்றிலும் பொருத்தமானதே.

கேள்வி: *(146)* சிவனார் புலித்தோல் அணிந்திருக்க காளிகாதேவி ஆடையின்றி இருப்பது நாகரிகமற்றது அல்லவா?

பதில்: சிவனார் புலித்தோல் அணிந்திருக்கும்படி ஐதிகத்தை உண்டுபண்ணியவன் மனிதன். ஒரு தத்துவ விளக்கத்துக்காக மனிதன் அப்படிச் செய்தான். அகங்காரம் மிகக் கொடியது. அது புலிக்கு ஒப்பானது. ஆதலால் சிவனார் அகங்காரம் என்னும் புலியைக் கொன்று அதன் தோலை இடுப்பில் அணிந்திருக்கிறார் என்று மனிதன் கற்பனை பண்ணியிருக்கிறான். புலித்தோல் அணிந்திருப்பதன் வாயிலாக இக்கோட்பாடு மனிதனுக்கு ஞாபகமூட்டப்படுகிறது. அப்படி ஞாபகமூட்டுவதே அவ் ஆடையை அணிந்திருப்பதின் பிரயோஜனமாம். உண்மையில் சிவதத்துவத்துக்கு ஆடை தேவையில்லை.

சிவனாருக்குத் திகம்பரன் என்பது ஒரு பெயர். திக்கை அம்பரமாக அல்லது ஆடையாக அணிந்திருப்பவன் என்பது அதன் பொருள். அதே கோட்பாடு அம்பிகைக்கு அமையும் போது அவள் திகம்பரீ என்னும் பெயர் பெறுகிறாள். திக்கை ஆடையாக அணிந்திருப்பவள் என்பது அதன் பொருள். எங்கும் வியாபகமாயிருக்கின்ற பெரிய பொருளுக்கு ஆடை கொடுத்து, அதை மூடமுடியாது. இயற்கைத்தாய் முற்றிலும் தன்மயமாய் இருக்கிறாள். வேறு எந்த ஆடையையும் அணிந்திருப்பதாக நாம் காண்பது இல்லை. இக்கோட்பாட்டை நமக்கு ஞாபகமூட்டுவதற்காகக் காளிகாதேவி ஆடையின்றி நிர்வாணமாக அமைக்கப்பெற்றிருக்கிறாள். மானுடக் கைகளைச் சரமாகக் கோர்த்து இடுப்பில் கட்டியிருக்கிறாள். அதைத் தவிர வேறு ஆடை அவளுக்குக் கிடையாது. அத்தகைய அமைப்பு இயற்கையின் தத்துவத்தை உள்ளபடி விளக்குகிறது. இதை நாகரிகமற்றதென்று இயம்பலாகாது. இயற்கையின் பாங்கை உள்ளபடி விளக்குவது காளிகாதேவியின் சொரூபமாம். காளிகாதேவி நிர்வாணமாயிருப்பதற்கு மற்றொரு காரணமுண்டு. அவள் கால சொரூபிணி. அதாவது காலமாக வடிவெடுத்திருப்பவள். அது தமிழில் காளியெனத் திரிவுபடுகிறது. காலத்தை மறைத்துவைக்க யாராலும் முடியாது. காலம் உயிர்களைத் தோற்றுவிக்கிறது. பிறகு மறைத்து வைக்கிறது. இரவு பகலாக

யாண்டும் காலம் உளது. காலத்தை மறைக்க யாருக்கும் இயலாது. எல்லார் கண்ணிலும் காலம் தென்பட்டுக்கொண்டே இருக்கிறது. காளியினுடைய நிர்வாண நிலை இக்கோட்பாட்டை நன்கு விளக்குகிறது.

கேள்வி: *(147)* ஆறுமுகமும் பன்னிரு கைகளும் கொண்ட முருகனுக்குக் கால்கள் மட்டும் இரண்டு இருப்பானேன்?

பதில்: கடவுளுக்கு வடிவம் இல்லை. வடிவமற்றிருக்கிற கடவுளுக்குப் பலப்பல வடிவங்களை மனிதன் கொடுத்திருக் கிறான். ஆக, கடவுள் எத்தகைய வடிவத்துடன் கருதப்படு கிறாரோ, அத்தகைய வடிவம் மனிதனுடைய சிருஷ்டியே யொழிய, அவர் தாமாக எவ்வடிவத்தையும் எடுத்துள்ளவர் அல்லர். நீருக்கு வடிவம் கிடையாது. எந்தப் பாத்திரத்தில் நீரை வார்த்து வைக்கிறோமோ, அந்தப் பாத்திரத்தின் வடிவை அது எடுத்துக்கொள்கிறது. கடவுள் தத்துவமும் அத்தகையது. முருகன் ஆறுமுகங்களை உடைத்திருக்கிறான். ஆனால் கால் இரண்டு. இது மனிதனுடைய கற்பனை. சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவன் நான்கு முகங்களை உடைத்திருக்கிறான். ஆனால் அவனுக்குக் கால் இரண்டு. இது மனிதனுடைய கற்பனை. சிவனார் ஒரு வடிவத்தில் ஐந்து தலைகளை உடையவரா யிருக்கிறார். ஆனால் அவருக்குக் கால் இரண்டு. இது மனிதனு டைய கற்பனை. இராவணன் பத்துத்தலைகளை உடையவனாக இருக்கிறான். ஆனால் அவனுக்குக் கால் இரண்டு. இது மனிதனுடைய கற்பனை. கணபதி யானை முகத்தனாக இருக் கிறான். ஆனால் யானை போன்று நான்கு கால்கள் படைத் தவன் அல்லன். மனிதன் போன்ற இரண்டு கால் படைத்திருக் கிறான். இது மனிதனுடைய கற்பனை. அன்னை பராசக்தி ஒரு வடிவத்தில் ஆயிரம் தலைகளை உடையவளாக இருக்கிறாள். ஆனால் அவளுக்குக் கால் இரண்டு. இதுவும் மனிதனுடைய கற்பனை.

ஒவ்வொரு கற்பனைக்கும் அடிப்படைக் கோட்பாடு ஒன்று உண்டு. முருகக்கடவுள் ஆறு தலைகளைப் படைத்திருப்பது மானுட சரீரத்திலுள்ள ஆறு யோக ஆதாரங்களுக்குப்

புறச்சின்னமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அவன் ஆற்றல் மிகப் படைத்தவன் என்பதற்குச் சான்றாக முருகனுக்குப் பன்னிரு கரங்களை மனிதன் கற்பித்தான். இதுவும் புறச்சின்னமாகிறது. தத்துவத்துக்குச் சின்னமாய் அமைந்தது கற்பனை. வாச்சியார்த்தத்தில் அதைப் பொருள்படுத்தலாகாது. லட்சியார்த்தமாக அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கேள்வி: *(148)* முருகனுக்கு இரு மனைவிமார். அவர்களை முறையே வள்ளி, தேவசேனா எனக் குறிப்பிடுகிறார்கள். அதற்கு மாறாகத் தேவசேனா, வள்ளி என்று கூறலாகாதா? இரு மனைவிமார் ஏதாவது தத்துவத்துக்கு விளக்கமாக அமைந்திருக்கிறார்களா?

பதில்: முருகனுக்கு ஆயுதமாக அமைந்திருப்பது வேல். அது ஞானசக்திக்குச் சின்னமாகிறது. அக்ஞானம் என்னும் அசுர சம்ஹாரம் ஞானவேலின் வாயிலாக நிகழ்ந்தது. கதிர் வேல் எனவும் அவ்வாயுதம் கூறப்படுகிறது. ஞானப்பிரகாசமே கதிர்வேலாகக் கருதப்படுகிறது. ஞானோதயத்தில் அக்ஞானம் அகலுகிறது. ஆதலால் ஞானத்தை வளர்க்க முருகனுடைய பக்தர்கள் கடமைப்பட்டிருக்கின்றனர். வள்ளி என்னும் மனைவி இச்சா சக்திக்குப் பிரதிநிதியாக அமைந்திருக்கிறாள். இச்சா சக்தி என்பது அன்பு. புராண பூர்வமாக முருகன் அன்பைப் பொழிந்து வள்ளியைத் தனக்கு உரியவள் ஆக்குகின்றான். அப்படி அவன் செய்தது அவனுடைய விளையாட்டுகளுள் ஒன்றாகும். தேவசேனா கிரியா சக்தியின் சொரூபம். தேவ குஞ்சரி எனவும் அவள் கூறப்பெறுகிறாள். நூறு யாகங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றுகிறவன் இந்திர பதவியைப் பெறுகிறான். இந்திர பதவியைப் பெறுவதற்கு உபாயமாய் அமைந்திருப்பது கர்மம். அக்கர்மத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினால் அது வேள்வியாகிறது. அரியபெரிய செயல்கள் எண்ணிக்கையில் நூறு அமையுங்கால் அது சதக்ருது அல்லது நூறு யாகம் எனப்பெயர் பெறுகிறது. ஸத்கர்மத்தை முறையாகச் செய்து மேல்நிலைக்கு வந்தவன் இந்திரன். அத்தகையவனுக்குப் பெண்ணாகப் பிறந்தவள் தேவசேனா அல்லது தேவ குஞ்சரி. தேவேந்திரனுடைய சேனையின் பலமெல்லாம் ஒன்றுகூடிப்

பெண்ணாக வடிவெடுத்தது தேவசேனா. தேவ குஞ்சரி என்பது தேவேந்திரனுக்குப் பெண்ணாகப் பிறந்தது, யானையின் பலத்தோடு கூடியிருந்தது எனப் பொருள்படுகிறது. இக்காரணங்களை யெல்லாம் முன்னிட்டுத் தேவசேனா என்பாள் கிரியாசக்தி சொரூபிணியாக இலங்குகின்றாள். இரு மனைவிமார் சமேதனாய் எழுந்தருளியிருக்கும் முருகனுடைய வலப்பக்கத்தில் வள்ளியும் நெஞ்சுக்கு அருகில் வேலும் இடப்பக்கம் தேவசேனாவும் இடம் பெறுகிறார்கள். லலிதாம்பிகைக்கு அமைந்திருக்கின்ற நாமங்களுள் ஒன்று இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி சொரூபிணி என்பதாம். அந்த நாமத்துக்கு ஒப்ப வள்ளி வலப்பக்கமும், வேல் நடுவிலும், தேவசேனா இடப்பக்கமும் இடம் பெற்றுள்ளார்கள். ஆதலால் முருகனை வள்ளி தேவ சேனாபதி எனக்கூறுவது ஐதிகமாய் இருக்கிறது. மூர்த்தியமைப்புக்கும் அது ஒத்திருக்கிறது. தத்துவ அமைப்புக்கும் அது ஒத்திருக்கிறது. ஜீவாத்மாவுடைய வளர்ச்சியில் அன்பு முதலிடம் பெறுகிறது. அறிவு இரண்டாவது இடம் பெறுகிறது. அன்பு செயலாகப் பரிணமிக்கிறது. அறிவும் செயலாகப் பரிணமிக்கிறது. ஆதலால் இயல்பாகவே கிரியா சக்தி கடைசி இடம் பெறுகிறது. இதை மாற்றியமைப்பதில் தோஷமில்லை. ஆனால் இயல்பாகவே அமைந்துள்ள அமைப்பு தத்துவ விளக்கத்துக்கும் ஜீவாத்மன் பரிணமித்து வருவதற்கும் ஒத்திருக்கிறது. இக் காரணங்களை முன்னிட்டு ஐதிகமாக வந்துள்ள முறைப்படியே முருகனை முறையே வள்ளி தேவசேனா மணாளன் என மொழிவது பொருந்தும்.

கேள்வி: *(149)* கடவுள் எல்லார் உள்ளங்களிலும் வீற்றிருக்கிறார். அவர் சிலரை நல்லவர்களாக இருந்து நற்செயலில் ஈடுபடத் தூண்டுகிறார். வேறு சிலரைத் தீயவர் களாக இருந்து தீயசெயல்களில் துணிந்துபோகத் தூண்டு கிறார். இப்படி இரண்டு போக்கில் மக்களைத் தூண்டுவது கடவுளுக்குப் பொருந்துமா?

பதில்: கடவுள் எல்லார் உள்ளத்திலும் வீற்றிருக்கிறார் என்பது உண்மை. அது கடவுளைப் பற்றிய ஆப்த வாக்கியம். மக்களாகிய நாமும் ஓரளவு அவ்வுண்மையை உணர்கிறோம்.

"யான் ஏதும் அறியாது என் உள்ளத்தில் வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்" என்பது அனுபூதிமான்களின் கூற்று. மின் ஜனனியோடு தொடர்பு கொள்கின்ற மின்விளக்கு வெளிச் சத்தைத் தருகிறது. அங்ஙனம் நம் உயிர்க்குயிராய் இருக்கும் பேருயிர்க் கடவுளிடத்திருந்து உயிர் வாழ்க்கையை நாம் பெற்று வருகிறோம். அப்படியிருந்தும் ஒரு சிலர் தீய செயலில் துணிந்து செல்ல இறைவன் ஏன் இடங்கொடுக்கிறார் என்பது கேள்வி.

எல்லார் உள்ளத்திலும் கடவுள் பிரக்ஞானம் அல்லது பேரறிவாக வீற்றிருக்கிறார். சந்திரன் சூரியனிடத்திருந்து வெளிச் சத்தைப் பெறுவது போன்று சிற்றறிஞராகிய நாம் வாலறிவ னாகிய பரமனிடத்திருந்து நம் அறிவைப் பெறுகிறோம். அதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்ளுவோம். எரிகிற ஒரு தீபத்தைச் சுற்றிலும் பலப்பல நிறமுள்ள பல கண்ணாடி கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. சுடர்விளக்கானது சிவப்புக் கண்ணாடியினூடு சிவப்பு வெளிச்சமாக வெளியில் வருகிறது. பச்சைக் கண்ணாடியின் வாயிலாகப் பச்சை வெளிச்சமாக வெளியே கிளம்புகிறது. இப்படி வெளிச்சத்தின் நிறங்கள் மாறியமைவதற்குக் காரணம் மூலவெளிச்சமாகாது. வெவ்வேறு நிறங்களையுடைய கண்ணாடிகளே அதற்குக் காரணங்களா கின்றன. கண்ணாடிகள் பல நிறங்களை உடைத்திருப்பது போன்று மக்களின் உள்ளங்கள் பலப்பல பாங்குகளைப் படைத்திருக்கின்றன. எத்தனை மனிதரோ அத்தனைவித மனப் பாங்குகள் உள. மனப்பாங்குகள் வேறுபட்டிருப்பதே உயிர் வாழ்ந்திருப்பவர்களைப்பற்றிய நியதி. ஒரு மனிதனுக்கு நல்ல தாகத் தோன்றுவது மற்றொரு மனிதனுக்குக் கேடாகத் தென்படுகிறது. ஆகையினால் செயல் வித்தியாசத்தை மக்களுக் கிடையில் காண்கிறோம்.

நலத்தைக் கேடாகவும் கேட்டை நலனாகவும் கருதுகிற இயல்புகள் மனிதனுக்கு ஏன் வந்துள்ளன என்னும் கேள்வி எழலாம். பல ஜன்மங்களில் வாழ்வு என்னும் வாய்ப்பை மனிதன் ஆராய்ச்சி பண்ணுகிறான். தனக்கு நலன் வேண்டு மென்றே ஒவ்வொரு மனிதனும் விரும்புகிறான். பண்ணுகிற ஆராய்ச்சியில் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறான். கணக்கற்ற பிறவிகளில் ஆராய்ச்சி செய்தான பிறகு எல்லார்க்கும்

பொதுவாயுள்ள நலனை மனிதன் கண்டுபிடிக்கிறான். அதைக் கண்டுபிடிக்கும் வரையில் ஒரு செயல் ஒருவனுக்கு நல்லதாகவும் மற்றொருவனுக்குக் கேடாகவும் புலப்படுவது இயல்பு. செய லில் மனிதனைத் தூண்டுவது அவனுடைய ஆசை. செய லில் மனிதனைக் கடவுள் தூண்டுகிறார் என்பது உண்மையன்று. ஆராய்ச்சியின் வாயிலாக ஆசையும் திருந்தியமைகிறது. பற்பல பிறவிகளில் பெற்றுள்ள அனுபவத்தின் வாயிலாகக் கீழான ஆசை மேலான ஆசையாகத் திருந்தியமைகிறது. ஆக ஆசையின் தரத்துக்கு ஏற்பச் செயலும் நல்லதாகவும் கெட்டதாகவும் வடிவெடுக்கிறது. பரிணமித்து வருகிற உயிர்களிடத்து எல்லாவித ஆசைகள் இருப்பது இயல்பு. ஆதலால் எல்லாவிதச் செயல் களில் ஈடுபடுகிற உயிர்கள் உலகில் இருந்து வருகின்றன. அவை யாவுக்கும் கடவுள் சாட்சியாக இருக்கிறார்; ஆதாரமாக இருக் கிறார். மாறுபடுகிற அறிவுக்கு ஆதாரமான மூல அறிவாக இருக் கிறார். மரணத்தின் வாயிலாக உடலை மாற்றிக்கொள்ளுகிற உயிர்களுக்கு மூல உயிராகக் கடவுள் இருக்கிறார்.

ஆக, கடவுள் என்னும் மூலப்பொருளிடத்திலிருந்து கணக்கில் அடங்காத உயிர்வகைகள் தோன்றி வந்து வாழ்க் கையை ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருக்கின்றன. ஆராய்ச்சி யின் விளைவாகக் கீழான உயிர்கள் மேலான உயிர்களாக மாறியமைகின்றன. இதுவே இயற்கையின் நியதி. ஆக, உலகில் நல்லார் பொல்லார் ஆகிய எல்லாப் பாங்குடையவர்களும் இருக்கிறார்கள். அவரவர் பாங்கை அனுசரித்தே எல்லாரும் படிப்படியாக மேல்நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றனர். நமக்கு ஒத்துக்கொள்ளாத செயலை நாம் கீழானது என்கிறோம். ஆனால் அச்செயலை நல்லது என்று கருதுபவன் அதை ஆராய்ச்சி பண்ணுதற்கு அவகாசம் கிடைக்கிறது. அவனுக்கு அவகாசம் கொடுத்தது இறைவன் அருள். பலப்பல ஆராய்ச்சி யின் வாயிலாக எல்லாரும் மேல்நிலைக்கு வருகிறார்கள். இத்தனை உயிர்களுக்கும் ஆதாரமாயுள்ள கடவுள் எந்தச் செயலிலும் சம்பந்தப்பட்டவர் அல்லர்.

கேள்வி: *(150)* ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் இஷ்ட தேவதையான காளிதேவி கோரசொரூபியாக இருக்கிறாள்.

தீயோரை அழித்து நல்லோரைக் காக்கும் கருணாமூர்த்தி யான அன்னைக்கு இக்கோர உருவை ஏன் சாஸ்திரங்களும் அளித்திருக்கின்றன? இராமகிருஷ்ணர் போன்ற மகான்கள் ஏன் இதை ஏற்று வழிபட்டு வந்தார்கள்?

பதில்: ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் வழிபட்ட தெய்வம் காளிகாதேவி என்னும் பராசக்தி. அத்தெய்வத்தின் நிஜசொரூபமே சாஸ்திரத்திலும் விளக்கப்படுகிறது; வடிவத்திலும் அமைக்கப் பெற்றிருக்கிறது. அந்த நிஜசொரூபம் என்ன என்பதை ஆராய்வோம். இயற்கைத் தாயே காளிகாதேவி என்னும் பெயர் பெற்றிருக்கிறாள். இயற்கைத் தாயினிடத்து பயங்கரமும், இனிமையும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. உயிர் வகைகளைத் தோற்றுவித்து அவைகளைப் பரிபாலித்து வருவது இயற்கைத் தாயின் இனிய செயல்கள் ஆகின்றன. அப்படித் தோன்றியுள்ள உயிர்வகைகளைச் சின்னஞ்சிறு வயதிலிருந்து விருத்தாப்பியதசை வரையில் வெவ்வேறு காலங்களில் எடுத்து விழுங்குவது அதே இயற்கைத்தாயின் பயங்கரச் செயலாகிறது. அவள் செய்கிற செயல் இத்தகையது என்பதைத்தான் சாஸ்திரம் விளக்குகிறது. இனிமை நிறைந்த இந்த இயற்கைத்தாய் ஏன் இத்தகைய கொடிய செயலைச் செய்யவேண்டும் என்பதுதான் ஈண்டு எழுந்துள்ள கேள்வி. தாயின் இயல்பை உள்ளபடி பகர்ந்துவிடுவதுதான் இக்கேள்விக்கு நாம் கொடுக்கும் விடையாகும்.

காளிகாதேவி அல்லது இயற்கைத்தாய் ஏககாலத்தில் இன்னியல்பே வடிவெடுத்தவளாகவும், பயங்கரமே வடிவெடுத்தவளாகவும் இருக்கிறாள். அந்த இரண்டு விதமான இயல்புகளும் உயிர்களின் முன்னேற்றத்திற்கு முற்றிலும் அவசியமானவைகளாக இருக்கின்றன. முன்னேற்றத்துக்கு இன்பம் உதவுவது போன்று துன்பமும் உதவுகிறது. முன்னேற்றத்துக்கு ஆரோக்கியம் உதவுவதுபோன்று நோயும் உதவுகிறது. நோய்வாய்ப்படுவதன் மூலம் மக்கள் எத்தனையோ நல்ல பாடங்களைக் கற்றுக்கொள்கின்றனர். துன்பத்துக்கு ஆளாவதன் மூலமாகவும் நல்ல பாடங்கள் எத்தனையையோ மக்கள் கற்றுவருகின்றனர். எனவே பயங்கர சொரூபமாகத் தென்படுகிற காளிகாதேவி அந்தப் பயங்கர சொரூபத்தின் வாயிலாக உயிர்களைப் பண்படுத்தி

வருகிறாள். இது இயற்கையைப் பற்றிய உண்மை. இயற்கையின் இயல்பை இருக்கிறபடி ஏற்றுக்கொள்ளுதலே நமது கடமை யாகும். அதைத் திருத்தியோ, மாற்றியோ அமைக்க நமக்கு இயலாது. நம்பொருட்டு இயற்கைத்தாய் தன் இயல்பை மாற்றப்போவதில்லை.

ஆனால் நமது இயல்பை நாம் திருத்தியமைத்துக் கொண்டால் அதே இயற்கைத்தாய் நமக்கு நலம் தருபவளாக அமைந்து விடுகிறாள். இதை ஒரு உபமானத்தைக் கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரே நன்கு விளக்கியிருக்கிறார். பூனையின் பல் நல்லதா அல்லது கொடியதா என்பது கேள்வி. எலி யைக் கேட்டால் அதைவிடக் கொடியது உலகில் ஒன்றுமில்லை என்று பகரும். அதே கேள்வியைப் பூனைக்குட்டியிடம் கேட்டால் அதைவிடப் பக்ஷமானது உலகில் வேறொன்று மில்லை என்று இயம்பும். பூனையின் பல் போன்றவள் இயற்கைத்தாய். பக்தர்களுக்கு அவள் இன்னியல்பே வடி வெடுத்தவள். மற்றவர்களுக்கு அவள் கொடூரம் நிறைந்தவளாகத் தென்படுவது இயல்பு. காளிகாதேவியின் சொரூபத்தில் இந்த இரண்டு பகுதிகளும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. என்பதை அறிபவர்கள் அவளைப்பற்றிய உண்மையை அறிபவர்கள் ஆகின்றனர். உண்மையை அறிந்து அதற்கேற்ப ஒழுகுவதன் மூலம் நாம் நலன் அடைய முடியும். அதைத்தான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் செய்தார். நாமும் அங்ஙனம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கேள்வி: *(151)* சிவன் தரையின்மீது படுத்திருக்கிறார். அவர் நெஞ்சின்மீது கால் வைத்து நின்று கொண்டு காளிகா தேவி நடனம் புரிகின்றாள். அன்னை காளியின் படம் இப்படி வரைந்து வைக்கப்பட்டிருக்கிறது. இது மதச் சம்பிரதாயத்துக்குப் பொருந்துமா?

பதில்: காளிகாதேவி நாடு முழுதிலும் வழுத்தப்படுகிறாள். ஆனால் அந்தத் தேவியின் மூர்த்தியமைப்பு தென்னிந்தியாவில் ஒருவிதமானது. வட இந்தியாவில் சிறப்பாக வங்காளத்தில் மற்றொருவிதமானது. ஈண்டுக் கேள்வியாக எழுந்திருப்பது வட இந்திய ஐதிகத்தை ஒட்டியதாகும். அந்த அமைப்பு

முழுவதையும் முதலில் விளக்கிவிடுவோம். சிவபெருமான் தரையில் சவம் போன்று படுத்துக்கிடக்கிறார். அந்த இடம் ஸ்மஸானம் அல்லது சுடுகாடு. உயிர்கள் அழிவதும், பிணங்கள் எரிக்கப்படுவதும் ஆகிய காட்சிகள் சுற்றிலும் தென்படுகின்றன. காளிகாதேவி சிவபெருமானது நெஞ்சின்மீது நின்றுகொண்டு நடனம் புரிகின்றாள். இக்காட்சி ஓர் உயர்ந்த தத்துவத்தை விளக்குகிறது. சுடுகாட்டை இக்காட்சிக்கேற்ற இடமாக வைப்பதன் மூலம் பிரபஞ்சம் முழுதுமே அழிந்துபோகும் தன்மையுடையது என்னும் கோட்பாடு விளக்கப்படுகிறது. அழியக்கூடிய உலகில்தான் உயிர்கள் வாழ்ந்திருந்து இறுதியில் மடிந்து போய்விடுகின்றன என்பது கோட்பாடு. சக்திக்கு அம்சங்கள் பல இருக்கின்றன. உமாதேவி, துர்க்காதேவி, காளிகாதேவி ஆகிய இவையாவும் பிரகிருதித்தாயின் வெவ்வேறு பகுதிகளாம். அவைகளுள் காளிகா தேவியைப்பற்றி ஈண்டு ஆராய்கிறோம். சிவமும், சக்தியும் பிரித்துவைக்க முடியாதபடி ஒன்றுபட்டு இருக்கிறார்கள். ஆதலால்தான் அர்த்தநாரீசுவரர் அல்லது மாது ஒரு பாகம் ஆனவர் என்னும் கோட்பாடு வந்துள்ளது. பிரிக்க முடியாத இரண்டு பகுதிகளைப் பிரித்துவைக்கப்பட்டவைகளாக நமது சௌகரியத்தின் பொருட்டு அமைத்துக் கொள்கிறோம். நமது பாதத்தைக்கொண்டு நமது தோளை அல்லது தலையைத் தொடமுடியும். அப்படிச் செய்வதால் நம்மை நாம் காலால் உதைத்துச் சிறுமைப்படுத்திக் கொள்கிறோம் என்று பொருள் படுத்தலாகாது. இனி, சிவத்தின்மீது சக்தி நடனம் புரிவதன் மூலம் நமது வாழ்க்கைத் தத்துவம் ஒன்று விளக்கப்படுகிறது. அத்தத்துவத்தை அறிந்துகொள்ளுவது அவசியம். நமது பிரபஞ்ச வாழ்வு சுடுகாட்டில் வாழ்ந்திருப்பதற்கு ஒப்பானது. ஏனென்றால் உயிர்களனைத்தும் மரணத்தை நோக்கி விரைந்து போய்க் கொண்டிருக்கின்றன.

உயிர்களனைத்தினுடைய அமைப்பில் சிவதத்துவம், சக்தி தத்துவம் ஆகிய இரண்டும் சேர்ந்தே இருக்கின்றன. அவ்விரண்டினுள் சிவசொரூபமானது செயலற்று சவம் போன்று கிடக்கின்றது. நம் அமைப்பில் சக்தியின் விளையாட்டோ முன்னணியில் நிற்கிறது. சிவம் அசையாப்பொருள். சக்தி அசையும் பொருள். அசையாப் பொருளை ஆதாரமாக வைத்துக்கொண்டே

அதன்மீது சக்தி அசைந்து தன் செயலைப் புரிந்து வருகிறாள். அசையாத சினிமாத்திரையின் மீது அசைகிற படங்கள் தென்படுவதை இதற்குச் சான்றாக எடுத்துக் கொள்ளலாம். காளிகாதேவி தனது இடக்கரங்கள். இரண்டில் அழிவுக்கு ஏதுவான காட்சியைக் காட்டுகிறாள். ஓங்கிய வாளை ஒரு கையிலும், வெட்டிய தலையை மற்றொரு கையிலும் அவள் வைத்திருக்கிறாள். இயற்கைத்தாயை முறைதவறிப் பயன் படுத்துகிறவர்களுக்கு மரணம்தான் கதி என்பது இதன் மூலம் விளக்கப்படுகிறது. அவளுடைய வலக்கரங்கள் இரண்டில் ஒன்று அபயகரமாக இருக்கிறது. எதற்கும் பயப்படாதே என்பது அதன் கருத்து. மற்ற கரம் வரம் தருகிற செயலைக் குறித்துக் காட்டுகிறது. கீழே கிடக்கும் சிவசொரூபத்தை அது சுட்டிக் காட்டுகிறது. இயற்கைத்தாயை முறையாக அணுகுகிற சாதகன் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை என்பது முதல் கோட்பாடு. அவனைச் சிவத்துக்குரியவனாகச் சிவனிடம் சேர்த்து விடுகிறாள் என்பது இரண்டாவது கோட்பாடு. இச்சீரிய கருத்துக்களை விளக்குதற்கென்றே காளிகாதேவியின் வடிவம் சிவன் மீது நடனம் புரிவதாக அமைக்கப்பட்டுள்ளது.

கேள்வி: *(152)* "இவ்வுலகில் அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது கோட்பாடு. அப்படியானால் ஜப்பானில் பியூஜியாமா எரிமலைகள் அனல் கக்குவதும், அஸ்ஸாமில் பூகம்பத்தில் மக்கள் பாதிக்கப்பட்டதும் அவன் விருப்பமா?

பதில்: இறைவனுடைய ஆணையால் பிரபஞ்சத்திலுள்ள செயல்கலெல்லாம் நிகழ்கின்றனவென்றால் அச்செயல்களில் குறைபாடு இருக்கலாகாது; குறைபாடோடு கூடிய நடைமுறை களை இறைவன் அமைத்துவைப்பது பொருத்தமற்றதாகத் தோன்றுகிறது என்னும் கருத்து இக்கேள்வியில் அடங்கி யிருக்கிறது.

அணு இயங்குவதும் அவன் ஆணையாலே; அண்டங்கள் யாவும் இயங்குவதும் அவன் ஆணையாலே. ஆக, நிகழ்ச்சிகள் யாவும் அவனுடையவைகளேயாம். துன்பத்தை விளைவிக்கும் நிகழ்ச்சிகளை அவன் ஏன் அமைத்து வைத்தான்? குற்றமற்ற நடைமுறைகளை ஏற்படுத்திவைக்க எல்லாம்வல்ல இறைவனுக்கு

இயலாதா? இப்படியெல்லாம் எண்ணிப்பார்க்க இயற்கை சந்தர்ப்பமளிக்கிறது.

இயற்கையின் நடைமுறையில் மூன்று படித்தரங்கள் இருக்கின்றன. அவைகளுள் நடுவில் உள்ள ஒரு படித்தரம் நம் அறிவுக்கு எட்டுகிறது. அணுப்போன்று நுண்ணிய அமைப்பில் உள்ள நடைமுறை நமக்கு எட்டுவதில்லை. அண்டங்களில் நிகழும் பெரும் நிகழ்ச்சிகளும் நமக்கு எட்டுவதில்லை. நமக்கு எட்டாதவைகளைப்பற்றி யுக்தியால் ஆராய்ந்துவிட்டு நமக்கு எட்டும் பகுதிக்குப் பிறகு வருவோம். மிகச்சிறிய உயிர் வாழ்க்கைகளுள் கொசுவின் வாழ்க்கையை எடுத்துக் கொள்வோம். நீர்ப்பெருக்கெடுக்கும் பருவத்தில் ஒரு காணி நிலத்தில் கோடிக்கணக்கான கொசுக்கள் உயிர் தரிக்கின்றன. அவைகளால் நமக்கு ஏற்படும் இன்னல்களை நாம் ஓரளவு அறிகிறோம். ஒரு பெருங்காற்று அடித்தால் இத்தனை கோடி உயிர்களில் பெரும்பகுதி செத்துப்போய்விடுகின்றன. இத்தகைய பெருவாரியான உயிர் நஷ்டம் இயற்கையில் ஏன் இருக்கவேண்டுமென்று நாம் எண்ணிப்பார்ப்பதில்லை. இன்னும் நாம் சுவாசிக்கும் பொழுது எண்ணிறந்த அணுவுயிர்களைச் சம்ஹாரம் செய்கிறோம். அதைப்பற்றியும் எண்ணுவதில்லை. அண்டத்தின் நடைமுறையில் ஒவ்வொரு சூரியமண்டலம் ஒரு நொடிப்பொழுதில் அடிபட்டுப் போவதுண்டு. அதைக் கொடுமை என்றும் நாம் எண்ணுவதில்லை. ஆக, மிகச்சிறு நிகழ்ச்சி களிலும், மிகப்பெரிய நிகழ்ச்சிகளிலும் உள்ள கொடூரத் தன்மைகள் நம் அறிவுக்கு எட்டாது போய்விடுகின்றன.

பூமியின் மேல்தோல் போன்றிருக்கும் சுமார் ஐம்பது மைல் பகுதி ஆறிப்போய் நம் உயிர் வாழ்க்கைக்குத் தகுதியுடைய இடமாய் அமைந்திருக்கிறது. பூமியின் நடுவே சுமார் நாலாயிரம் மைல் தூரத்தை விட்டமாகக்கொண்ட உருண்டைப் பகுதி இன்னும் அக்கினிக் குழம்பாக இருக்கிறது. சிற்சில வேளை களில் அவ் அக்கினிக் குழம்பில் சிறுபகுதி வெளித்தோன்றி வருகிறது. இதை எரிமலை என்கிறோம். பூமியில் இன்னும் சில பகுதியில் ஆறிவருதல் என்னும் மாறுபாட்டை முன்னிட்டுப் பூமியினுள் அசைவு ஏற்படுகிறது. அதைப் பூகம்பம் என்கின் றோம். இதனால் மானுடர் பலர் மடிந்து போவதுண்டு.

நொடிப்பொழுதுதோறும் கோடிக்கணக்கான சிற்றுயிர்கள் மடிந்து வருவதோடு சீர்தூக்கினால், மனிதனுக்கு நிகழும் நஷ்டம் அவ்வளவு பெரியதன்று. அப்போதைக்கப்போது அண்டங்கள் அடிபட்டுப்போவதோடு சீர்தூக்கிப்பார்த்தால் மனிதனுக்கு ஏற்படும் கஷ்டம் கணக்கில் வாராத அவ்வளவு சிறியதாய் விடுகிறது. இத்தனைவிதமான அழிவுகளுக்கும் இயற்கையின் நடைமுறையில் இடமுண்டு. ஆக்குதல் என்னும் நிகழ்ச்சி பொதுவாக மிக நிதானமாக அமைகிறது. நிலை பெற்றிருத்தலும் ஒழுங்குப்பாட்டுக்கு விளக்கமாக வந்தமைகிறது. அழித்தல் என்னும் செயலில் இரண்டு விதமான பகுதிகள் உண்டு. சிறிது சிறிதாகத் தேய்ந்து அழிதல் ஒருவிதக் காட்சி. நொடிப் பொழுதில் இருக்குமிடம் தெரியாது ஓர் அண்டம் துகள் துகளாக நொறுங்கிப் போய்விடுவது இன்னொருவிதக் காட்சி. ஆக்குதல், நிலைபெறச் செய்தல், அழித்தல் ஆகிய மூன்றும் இறைவனுடைய விளையாட்டு. இவ்விளையாட்டில் எரிமலைக்கும் பூகம்பத்துக்கும் இடமுண்டு. அவனுடைய பேரமைப்பை நாம் கருத்தில் வாங்கினால் நாம் இருப்பதைக் குறித்து மகிழ்வுற்றிருக்கவோ, இறப்பதைக் குறித்து மனம் நொந்துபோகவோ இடமில்லை. ஜனன மரணத்தைக் கடந்துள்ள அவனுடைய பெருநிலையை உணர்ந்தால்தான் இருப்பது இறப்பது ஆகிய இரண்டையும் கிரகிக்கமுடியும். யாவும் அவனுடைய இயக்கமே.

கேள்வி: *(153)* "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது அழகான கவிதைக் கற்பனையா அல்லது பிரகிருதியின் நடைமுறையில் மாறாததொரு உண்மையா? உண்மையானால் நாமனைவரும் சூத்ரதாரியின் கரங்களில் சிக்கிய சூத்திரம்போன்று ஆய்விடுகிறோம். இறைவன் ஒருவனே உலகின் நிலைக்குப் பொறுப்பாளியாயிருக்கிறார். ஆனால் எங்குமே கோணலும் பிணக்கும் நிறைந்துள்ள உலக நிலை சிருஷ்டி கர்த்தாவுக்குப் பெருமைதரத்தக்கதாயில்லையே?

பதில்: அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் கோட்பாடு கவிதைக் கற்பனையன்று. இயற்கையின் நடைமுறையைப் பற்றிய முடிவான உண்மை அதுவே. அதில்

சொல்லழகு மட்டுமல்ல, பொருள் அழகும் உண்டு. அதை நாம் முடிவான உண்மையென்று சொல்லுகிறோமேயொழிய எல்லாப் படித்தரங்களிலும் ஜீவனுக்கு அது உண்மையென்று சொல்லுகிறதில்லை.

கட்டிடம் கட்டுதற்கு வேலைக்காரன் கற்களைக் கையாளுகிறான். அவனுடைய காட்சியில் கற்கள் எல்லாம் நீளம், அகலம், கனம் அடங்கிய பொருள் ஆகிறது. அதே கல்லை ரசாயன சாஸ்திரி ஒருவர் இன்னொரு பாங்கில் பொருள் படுத்துவார். அக்கல்லின் ஒப்படர்த்தி எத்தகையது, சுய எடை எவ்வளவு கொண்டுள்ளது, அதில் என்னென்ன தாதுக்கள் அடங்கியிருக்கின்றன என்றெல்லாம் அவர் ஆராய்வார். பூகோள உறுப்பு இலக்கணம் ஆராயும் விஞ்ஞானிக்கு இன்னொரு பாங்கில் அதன் அமைப்பு விளங்கும். அணுதத்துவத்தை ஆராயும் பௌதிக விஞ்ஞானிக்கு மற்றும் ஒரு விதத்தில் அது விளங்கும். இத்தனைவிதக் காட்சிகளுள் எது மெய்யானது, எது பொய்யானது என்று விசாரித்தால் ஒவ்வொரு துறையிலும் உண்மை ஒருபாங்கில் வெளியாகிறது என்கின்ற முடிவுக்கு வந்தாக வேண்டும். ஒரே உண்மை பல சூழ்நிலைகளிலே பல படித்தரங்களிலே மாறுபடும் வெவ்வேறு கோட்பாடுகளாகவும் புலப்படக்கூடும். உண்மையில் அப்படி மாறுபாடு இல்லை. படித்தரத்துக்கு ஏற்பத் தத்துவத்தின் விளக்கம் வெவ்வேறு வகைப்படுகிறது என்பதே உறுதியாகிறது.

ஜீவன் ஒருவன் தன்னிடத்து ஜீவபோதம் கொண்டிருக்கும் பரியந்தம் அவனுடைய வினைப்பயன்களெல்லாம் தனக்குத் தானே உண்டுபண்ணிக் கொண்டவைகளாம். அவனுக்கு வந்தமையும் சுக துக்கங்களுக்கெல்லாம் அவனே பொறுப்பாளி. தன் வினைக்குச் சற்றேனும் ஏறவோ, தாழவோ அவனுக்குப் பயன் வந்து அமைவதில்லை. அவனன்றி ஓரணுவும் அசையாது என்னும் கோட்பாட்டை அவனுடைய ஜீவபோதத்தினுள் செருகிக் குழப்பம் உண்டுபண்ணலாகாது. அவரவர் கர்மத்துக்கேற்ற கர்மபலனே வந்தமைகிறது என்னும் கோட்பாட்டைத் தான் ஜீவபோதம் கொண்டுள்ளவர்கள் காணுதல் கூடும். செயலிலோ, வடிவத்திலோ அழகுபடைத்திருப்பதும் அழகற்றிருப்பதும் காரணகாரிய மயமாயுள்ள வினையின் தோற்றங்களாம்.

ஈசன் சமஷ்டிப் பொருள். ஜீவன் வியஷ்டிப் பொருள். இது நமக்கு விளங்குதற்கு உபமானம் ஒன்றை எடுத்துக் கொள்ளலாம். கடல் என்பது சமஷ்டி அலை என்பது வியஷ்டி. ஓர் அலைக்குக் காரணகாரிய மயமான தன் செயல் உண்டு. கடல் முழுதையும் தொகுத்துக் காணுங்கால் அலைகளும் அலைகளின் செயல்களும் கடலின் பேரமைப்பில் அடங்கிவிடுகின்றன. கடலின் காட்சி காண்போர்க்கு அலையில்லை. அலையும் அலையின் செயலைக் காண்போர்க்குக் கடலின் காட்சியில்லை. அதேவிதத்தில் ஈசனைக் காண்பவர்க்குப் பிரபஞ்சமும், பிரபஞ்சச் செயலும் இல்லை; ஜீவர்களும் ஜீவர்களின் வினைகளும் இல்லை. பெரிய பொருளின் காட்சியில் இச்சிறிய சொரூபங்கள் மறைந்து விடுகின்றன. ஈசனுடைய காட்சிகள் காண்பார்க்கே எல்லாம் ஈசன் செயல் என்கின்ற காட்சியும் தெளிவாகிறது.

மக்கள் செய்யும் தவறுதல் ஜீவகாட்சியையும் ஈசுவர காட்சியையும் ஒன்றோடு ஒன்றைக் குழப்பி விடுவதாகிறது. ஜீவ சொரூபத்தை முற்றிலும் ஆராய்ந்தால் அந்த ஜீவனுக்கு வரும் நலம் கேடுகள் அனைத்தும் வினைப்பயனுக்குப் பொருந்தியவைகளாகவே இருப்பதைக் காணக்கூடும். ஜீவபோதத்தைக்கடந்து ஈசனது சொரூபத்தைத் தரிசிக்கின்றவர்களுக்குத் தான், தனது ஆகியவை இல்லை என்பதும், தனக்கென ஒரு செயல் இல்லை என்பதும், ஈசனது பெருந்திட்டமே கணக்கற்ற கருவிகள் வாயிலாக நிகழ்ந்து வருகிறது என்பதும் விளங்கும். ஈசனது திருக்காட்சி காண்போர்க்கு ஜீவனைப்பற்றி எண்ணவோ, அவனுக்கு ஒரு ஸ்தானம் தருதற்கோ அவகாசம் இல்லாது போய்விடுகிறது. ஆகவே அவனன்றி ஓரணுவும் அசையாது என்னும் கோட்பாடு ஜீவபோதத்தில் இருப்பார்க்கு உரியதன்று. பரபோதம் அடையப் பெற்றவர்கள் கண்டறியும் ஞானக்காட்சியாம் அது. கோணலையும் பிணக்கையும் அக்காட்சியில் காண முடியாது. பூமியின் மீது நடந்து செல்லும்போது மேடு பள்ளங்களைக் காண்கிறோம். ஆனால் சந்திரமண்டலத்திலிருந்து பூமியைப் பார்த்தாலோ அது ஒழுங்காக அமைந்த கோளமாகத் தென்படும். பூமியிலிருந்து நாம் சூரியனைப் பார்க்கிறோம். அது முற்றிலும் வட்டமானதாகத் தெரிகிறது. ஆனால் அருகில் போய்ப் பார்த்தால் பல பூமிகளை விழுங்கும்

அக்கினி ஜுவாலைகள் அதில் கிளம்பி வருவதைக் காணலாம். அண்டத்தின் நடைமுறை முழுதும் தொகுத்துப் பார்த்தால் ஈசனது விளையாட்டு விளங்கும். பேராற்றலும், பேரமைப்பும் பேரழகுமே எங்கும் பொலிவது அப்பொழுது பிரத்யக்ஷம்.

பிரபஞ்சக் காட்சி காண்போர்க்குக் கோணலும் பிணக்கும் தென்படுவது வெளிப்படை. ஏனென்றால் பிரபஞ்சம் என்பதன் பொருளே நலம் கேடு ஆகிய இரண்டும் கலந்தது என்பதாம். பிரபஞ்சக் காட்சி பரத்தினுடைய காட்சிக்கு அளவையாகாது. பரத்தின் காட்சி அடையப் பெற்றவர்க்குப் பிரகிருதி காட்சி பொருளற்றதாய் விடுகிறது. அவர்களுடைய குறைபாடுகளை யெல்லாம் கடந்து செல்லுதற்குப் பரத்தின் காட்சியே உற்ற உபாயமாகிறது. வியஷ்டி ஆகிய ஜீவகாட்சியைக் கடந்து சமஷ்டியாகிய பரத்தின் காட்சியைக் காண்பது வாழ்க்கையின் லக்ஷியமாகும். பரகாட்சி காண்போர்க்குப் பிறகு எதைக்குறித்தும் ஐயம் ஏற்படுவதில்லை. முரண்பாடும் குழப்பமும் ஞானியின் காட்சியில் இல்லை. எல்லாம் பரம்பொருளின் பெரிய விளை யாட்டு என்று அதைக்கண்டு ரசித்து அதில் ஜீவபோதத்தை நீக்கிக் கலந்து கொள்கிறான்.

கேள்வி: *(154)* இயற்கைக்கு அப்பாற்பட்டது கடவுள் என்று குறிப்பிடப்படுகிறது. இன்னும் இயற்கையையே மனிதன் பூரணமாக அறிந்து கொள்ளவில்லை. அத்த கையவன் இயற்கைக்கு அப்பால் உள்ளதை எவ்வாறு அறிந்து கொள்வான்?

பதில்: அறிவு, மனிதர் எல்லார்க்கும் ஒரே பாங்கில் இல்லை. பேரறிஞராகவும் சிற்றறிஞராகவும் மனிதர் எக்காலத்திலும் இருக்கின்றனர். இயற்கையைப்பற்றிய ஆராய்ச் சியை ஒரு படித்தரத்தில் நிறுத்தி வைத்துவிட்டு இயற்கைக் கப்பால் தங்களுடைய தீட்டிய பேரறிவைச் செலுத்திக் கடவுளை அறிந்தார்கள் முனிவர்கள். இயற்கைக்குக் கடவுள் தான் மூலப்பொருள். மூலப்பொருளை அறியாது அதன் வெறும் வெளித்தோற்றத்தை எவ்வளவுதான் ஆராய்ந்தாலும் அதற்கு முடிவில்லை. ஆக, கடவுளை அறிகின்றவனே இயற்கை யையும் உள்ளபடி அறியவல்லவனாகிறான். ☆

5. அவஸ்தாத்ரயம்

கேள்வி: *(155)* கனவு நிலை என்பதென்ன? அந் நிலையில் மனதைக் கட்டுப்படுத்த இயலாமல் போவதேன்?

பதில்: மின்சார விசையால் ஓடும் விசிறி ஒன்றிருக்கிறது. மின்சார சக்தியை நிறுத்திவிட்டால் அது ஓடாது நிற்கிறது. ஆனால் காற்றடித்தால் ஒருவாறு அது ஓடுகிறது. காற்றடிக் கின்றபொழுது சுற்றும் மின்சக்தி விசிறி போன்றது மனிதன் அனுபவிக்கின்ற கனவு. கனவு காண்கின்றபொழுது மனது வேலை செய்கிறது. ஆனால் மனிதனுடைய சங்கல்பம் என்னும் விசையில்லாது மனதில் உண்டாகும் பழைய எண்ணங்களின் அலைகளே கனவாகத் தென்படுகின்றன. விழித்திருக்கின்ற பொழுது மனிதன் எண்ணுகின்ற எண்ணங்களையும் செய்கின்ற செயல்களையும் அனுசரித்தே கனவுகள் வருகின்றன. விழித்திருக் கின்றபொழுது மனதை நன்றாக அடக்கிப் பழகுகின்றவன் கனவிலும் மனதை அடக்க வல்லவனாகின்றான். ஆனால் விழித்திருக்கின்றபொழுது மனதை அடக்கும் விஷயத்தில் வெற்றி பெறாதவன் கனவில் மனதை அடக்க முடியாது. பெரும் பாலர்க்கு நனவில் மனதை அடக்குவது போன்று கனவில் அடக்கமுடியாது. ஏனென்றால் தன்னுடைய சொந்த எண்ணம் என்கின்ற கட்டுப்பாடில்லாது பழைய விருத்திகள் அலைகளாக உள்ளத்தில் தோன்ற ஆரம்பிக்கின்றன. பொதுப்பட மனிதன் கனவுக்கு ஒரு மதிப்பும் கொடுக்கலாகாது. தன் மனதைத் தான் எவ்வளவுதூரம் வென்றிருக்கிறான் என்பதை அறிந்துகொள்ளு தற்கு மட்டும் கனவு பயன்படுகிறது. விழித்திருக்கும் வேளையில் மனதை நன்றாக அடக்கிப் பழகுகின்றவர்களுக்குக் கனவைப் பற்றிய கவலை வேண்டியதில்லை. நாளடைவில் கனவு

நிலையும் தன்னுடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டுவிடும். யோகத்தில் தான் முன்னேற்றம் அடைந்து வந்திருப்பதற்கு அதுவும் ஒரு அறிகுறியாகும்.

கேள்வி: *(156)* ஜீவன் ஒருவன் ஜாக்கிரத, சொப்பன, சுழுத்தி என்று மூன்று அவஸ்தைகளில் இருக்கிறான். ஜாக்கிரதாவஸ்தையில் அவனுக்குப் பஞ்சேந்திரியங்கள் தொழில் புரிகின்றன. சொப்பனாவஸ்தையில் ஏதோ கனவு கண்டு வாயால் உளறுகிறான். ஆதலால் சொப்பனாவஸ்தை யிலும் ஐம்பொறிகள் செயல்புரிகின்றன என்பது வெளி யாகிறது. உண்மையில் சொப்பனாவஸ்தையில் ஐம் பொறிகள் செயல்புரிகின்றனவா?

பதில்: ஜாக்ரதாவஸ்தையில் ஜீவன் ஒருவன் ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் ஆகிய மூன்று சரீரங் களிலும் செயல்புரிகிறான். சுழுத்தி என்று சொல்லப்படும் கனவற்ற உறக்கத்தில் அவன் காரண சரீரத்தில் செயலற்றவன் போன்று இருக்கிறான். சொப்பனாவஸ்தையில் மனது அல்லது அந்தக்கரணம் என்னும் சூக்ஷ்ம சரீரம் வேலை செய்கிறது. சில வேளைகளில் சொப்பனம் ஒன்று ஜீவனுடைய மனதில் பேருணர்வை உண்டுபண்ணக்கூடியதாய் இருந்தால் அப் பொழுது ஸ்தூல சரீரத்தில் கருவியாய் இருக்கும் நாவும் கூச்சலிட ஆரம்பித்துவிடுகிறது. சொப்பனத்தில் ஏற்பட்ட பயத்தை முன்னிட்டு ஸ்தூல சரீரத்தில் கருவியாய் இருக்கும் ஹிருதயம் விரைந்து துடிதுடிக்க ஆரம்பித்துவிடுகிறது. இதினின்று உண்மை ஒன்று விளங்குகிறது. ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் ஆகியவைகள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஒரு சரீரத்தில் உண்டுபண்ணப்படும் உணர்வு மற்றொரு சரீரத்தையும் தாக்கவல்லது என்பது வெளியாகிறது. மூன்று சரீரங்களையும் கடந்த நிலைக்குப் போகும் வரையில் ஜீவன் கனவில் புரிகின்ற கர்மமும், நனவில் புரிகின்ற கர்மமும் பலவிதங்களில் அவனைத் தாக்கும் பாங்குடையவைகளாக இருக்கின்றன. ஜாக்கிரத, சொப்பன, சுழுத்தி என்னும் மூன்று அவஸ்தைகளைக் கடந்து போகின்ற வனே மூன்று சரீரங்களுக்கும் அப்பாற்பட்டவன் ஆகின்றான்.

ஜீவபோதத்தில் இருக்கும் பரியந்தம் மூன்று அவஸ்தைகளுக்கும் ஆதிக்கம் உண்டு. மூன்று வித சரீரங்களுக்கும் வினைப்பயன் என்னும் உபாதிகள் வந்தமைவது இயல்பு.

கேள்வி: *(157)* கனவில் இறைவனது அருளைப் பெற்ற தாகச் சில பெரியார்களுடைய வரலாற்றில் காண்கின்றோம். இது எவ்வாறு சாத்தியமாகும்? விழிப்பு நிலையைவிடக் கனவு நிலையானது குறைந்த நிஜத்தன்மை உடைய தல்லவா? விழிப்பு நிலையில் கிடைக்காத பெரும்பேறு கனவு நிலையில் கிட்டுவது எவ்வாறு கூடும்?

பதில்: ஞானியர்களுடைய காட்சியில் கனவு நனவு ஆகிய இரண்டும் ஒரே பாங்குடையவைகள் ஆகின்றன. இவ்விரண்டு அவஸ்தைகளுக்கும் அவர்கள் மதிப்பு ஒன்றும் தருவதில்லை. பிரபஞ்ச வாழ்வு நிலையற்றது என்பதை நிரூபிப் பதற்கும் கனவு நனவு ஆகிய இரண்டும் நிலையற்றவைகள் என்பதை நிரூபிப்பதற்கும் அவை பயன்பட்டு வருகின்றன. நனவில் நாம் பெற்றவைகளை எல்லாம் கனவு நிலை அழித்து விடுகிறது. கனவு நிலையில் நாம் பெற்றவைகளை எல்லாம் நனவு நிலை அழித்து விடுகிறது. ஆதலால்தான் இரண்டும் நிலையற்றவைகள் என ஞானியர் ஒதுக்கிவிடுகின்றனர். நம் போன்றவர்கள் என்ன செய்வது என்பது கேள்வி. நமது வாழ்க்கையை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நமக்கு முன்னேற்றம் கனவில் அதிகமாக உண்டாகிறதா அல்லது நனவில் அதிகமாக உண்டாகிறதா என்று ஆராய்வது அவசியம். உடல் புஷ்டி பெறுவதற்கு நனவில் உண்ட உணவு பயன் படுகிறது. கனவு நிலைக்கும் அது உதவுகிறது. சில வேளைகளில் வயிறு நிறைய உணவு உண்டுவிட்டுத் தூங்குகின்றவன் பசியால் வருந்துவது போன்று கனவு காணலாம். ஆனால் அவனுக்கு உடல் வாட்டம் உண்டாவதில்லை. பசியுடன் படுக்கச்செல்கிற ஒருவன் ஏராளமாக நல்லுணவை உண்டதாகக் கனவில் காணலாம். அதனால் அவனுக்கு உடலில் களைப்பு போய் விடுவதில்லை. உண்மையில் நனவில் பெற்ற உணவுதான் உடல் வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. அதே பாங்கில் நனவில் பெறுகிற கல்வி அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. இதை

எல்லாம் எண்ணிப் பார்க்குமிடத்து மனிதனுடைய முன்னேற்றத்துக்கு நனவு நிலைதான் அதிகம் பயன்பட்டு வருகிறது.

இவ்விதிக்கு விலக்கு ஒன்று உண்டு. நனவு நிலையில் போடமுடியாத கணக்கு ஒன்றைக் கனவில் போட்டு விடுகின்றவர்கள் அரிதிலும் அரிதாக யாரோ சிலர் இருக்கின்றனர். கனவினின்று விழித்துக் கொண்டவுடனே திரும்பவும் அவ் அறிவைப் பயன்படுத்திக் கணக்குப் போடுவதை அவர்கள் தெரிந்துகொள்கின்றனர். அந்த அனுபவத்தில் கனவில் பெற்றது நனவிலும் பயன்பட்டதாகத் தான் அறிந்து கொள்ள விரும்புகின்றனர். வாழ்க்கைப் பிரச்னை சிலவற்றிற்கு யாரோ சிலர் கனவு நிலையில் விடைபெறுகின்றனர். அப்படிப் பெற்ற விடை நனவிற்கும் நன்கு பயன்படுகிறது. ஆங்குக் கனவில் கண்டது பயன்படாது போய்விட்டது என்று நாம் அதைப் புறக்கணிக்க முடியாது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக சொப்பன தீக்ஷை என்று ஒன்று இருக்கிறது. இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாக வேண்டுமென்று அவாவுற்றிருக்கின்றவர்களில் யாரோ சிலர் சொப்பனத்தில் இறைவனுடைய அருளைப் பெறுவதாக உணர்கின்றனர். ஆத்மசாதனத்துக்குரிய தீக்ஷையைப் பெறுவதாகவும் உணருகின்றனர். அந்த அனுபவத்தைப் பெற்று அவர்கள் விழித்து எழுந்திருக்கின்ற பொழுது மனத்தெளிவு அடைந்தவர்கள் ஆகின்றனர். மேலாம் வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்களாகத் தாங்கள் திருந்தி அமையப் பெற்றிருப்பதாகவும் அவர்கள் உணர்கின்றார்கள். சொப்பனத்தில் தான் கண்ட பேருண்டி மாயமாக மறைந்து போய்விட்டது போன்று சொப்பனத்தில் பெற்ற ஞான அனுபவம் அல்லது அருள் விருந்து அவர்களுக்கு மறைந்து போய்விடவில்லை. வாழ்க்கையே அந்த அனுபவத்தின் விளைவாகப் பெருவாழ்வாக மாறி அமைந்து விடுகிறது. அந்த முன்னேற்றத்தை முன்னிட்டுச் சொப்பனத்தில் பெற்ற ஞான அனுபவத்துக்கும் நாம் மதிப்புக் கொடுத்தே ஆகவேண்டும். மனிதனுடைய வாழ்வு சிறிதேனும் மாறி அமையவில்லை என்றால் சொப்பனத்தில் பெற்றது வெறும் சொப்பனமாய் விட்டது என்று யூகிக்க வேண்டும். நல்ல சொப்பனங்கள் பலபேர்க்கு உண்டாவதுண்டு. அவை நல்ல மனப்பான்மைக்கு அறிகுறிகளேயொழிய அவைகளால்

அம்மக்கள் கடவுள் அருளுக்குப் பாத்திரமாய்விட்டார்களென்று நாம் மதிப்புப் போடலாகாது. வாழ்க்கையையே மேலான வாழ்க்கையாக எது மாற்றியமைக்கிறதோ அது சொப்பன தீக்ஷை என்று அங்கீகரிக்கப்படுவதாகிறது. யாரோ சிலர் சொப்பனத்தில் அருளுக்குப் பாத்திரமாவதுண்டு என்று ஆன்றோர்கள் பகர்ந்திருக்கிறார்கள். அவர்கள் பகர்ந்திருப்பது சாஸ்திரமாகிறது. அத்தகைய நிகழ்ச்சிகள் அரிதாகச் சில சாதகர் களுக்கு ஏற்படுகின்றன. ஆதலால் மனிதனுடைய முன்னேற்றத் துக்குச் சொப்பன தீக்ஷையும் கனவில் பெறுகிற அருளும் சில வேளைகளில் பயன்படுவதுண்டு என்று நாம் ஒத்துக் கொள்ள வேண்டும்.

கேள்வி: *(158)* துரியநிலை என்பது யாது?

பதில்: நனவு, கனவு, உறக்கம், துரியம் என்ற நான்கு நிலைகள் உள்ளன. சாதாரண மக்கள் முதல் மூன்று நிலை களில் மாறி மாறி இருக்கிறார்கள். நான்காவது நிலையாகிய துரியம் மனம் பரிசுத்தம் அடையும்பொழுதுதான் வாய்க்கின்றது. அதைச் சமாதிநிலை என்றும் கூறலாம். துரித நிலையை அடைவதுதான் மனிதனுடைய குறிக்கோளாகும்.

நனவு அல்லது ஜாக்ரத நிலையில் இவ்வுலகம் அனு பவத்தில் இருக்கிறது. உடலும், பொறிகளும், மனமும், நனவு நிலையில் செயல்புரிகின்றன. நமக்கு அன்னியமாக உலகம் இருக்கிறது. வேதாந்தத்தில் கூறப்படும் துவைதம் என்னும் கொள்கையை ஜாக்ரதம் அல்லது நனவு நிலை விளக்குகிறது. நனவில் நமக்கு உலக அனுபவம் உண்டு. நனவு நிலையில் நாம் செய்கின்ற சாதனைகள் நம்முடைய முன்னேற்றத்திற்குப் பயன்படுகின்றன.

கனவு நிலையில் நம் மனதிலுள்ள பதிவுகள் நம் சித் தத்தில் தோற்றத்துக்கு வருகின்றன. கனவில் காணும் பொருள் களெல்லாம் எல்லாம் வெளி உலகில் இருப்பன அல்ல. நம் சித்தத்தில் ஏற்பட்டுள்ள பதிவுகளே நம் கனவில் தோற்றத்துக்கு வருகின்றன. கனவு நிலையில் உடலும் பொறிகளும் வேலை செய்வதில்லை. மனம் மட்டும்தான் வேலை செய்கிறது. கனவில் ஏற்படும் நிகழ்ச்சிகள் நம் முன்னேற்றத்திற்குப் பயன்படா.

கனவில் வருவதைக் குறித்து நாம் கவலைப்பட வேண்டியது இல்லை.

உறக்க நிலையில் உடலும் இந்திரியங்களும் மனமும் ஒய்வு பெறுகின்றன. நாம் நம்முடைய உண்மையான சொரூபத்தில் அப்பொழுது இருக்கின்றோம். ஆனால் ஜடம் போன்று அதை அறியாதவர்களாக இருக்கின்றோம். இம்மூன்று நிலைகளும் அசுத்த மனதினால் நமக்கு ஏற்படும் அனுபவம் ஆகும்.

மனம் சுத்தி அடைந்து வரவர நமக்குப் புதிய அனுபவம் ஏற்படுகின்றது. மனம் பூரணமாகச் சுத்தி அடையும்பொழுது இவ்வுலகக் காட்சி மாறித் தெய்வக்காட்சி உண்டாகிறது. அதைத் துரிய நிலை என்று பகர்கிறோம். ஜாக்ரதத்தில் பஞ்சேந்திரியங்கள் மூலம் அசுத்த மனம் இப்பிரபஞ்சத்தைத் தெளிவாகக் காண்பது போன்று துரிய நிலையில் பரிசுத்த மனம் தெய்வக் காட்சியைத் தெளிவாகக் காண்கிறது. தெய்வக் காட்சி பெறுவதற்கு அப்பொழுது இந்திரியங்கள் தேவை இல்லை. துரிய நிலையில் பேரானந்தம் உண்டாகின்றது. அப் பேரானந்தத்தின் சிறுதுளி போன்றது இப்பிரபஞ்ச சுகம். துரியநிலை உடல் உணர்வைக் கடந்த நிலையாகும். அந்நிலையில் காண்போன், காட்சி, காணப்படுபொருள் என்னும் திரிபுடிக்கு இடமில்லை. அறிவு தன்னை முற்றும் உணர்ந்து தன்னில் தானாக இருக்கிறது. துரியநிலைதான் முடிந்த நிலையாகும்.

கேள்வி: *(159)* ஞானயோக விளக்கத்தில் "ஜாக்கிரதாவஸ்தையும் நிலைத்ததன்று என்பதைக் கனவு தெளிவுறுத்துகிறது" என்று இருக்கிறது. கனவு நிலையிலிருந்து, விழிப்பு நிலைக்கு வந்ததும் கனவு நிலையை உணருகின்றோம். கனவு நிலையில் விழிப்பு நிலையின் உணர்வு ஏது? உணர்விருந்தால் அல்லவோ விழிப்பு நிலையின் நிலையாமையைக் கனவு நிலை உணர்த்த முடியும்? விளக்க வேண்டுகிறேன்.

பதில்: மனிதனுக்குத் தினசரி வாழ்க்கையில் மூன்று அவஸ்தைகள் மாறிமாறி வருகின்றன. அந்த மூன்று அவஸ்தைகளுக்கும்

ஜாக்ரதம், சொப்பனம், சுழுத்தி என்று பெயர். இம்மூன்றனுள் ஓர் அவஸ்தையில் நாம் இருக்கின்றபொழுது மற்றவை இரண்டும் மறைந்துபோய் விடுகின்றன. எது ஒரு காலத்தில் இருந்து இன்னொரு காலத்தில் இல்லாது போய்விடுகிறதோ அது நித்தியமானதல்ல என்பது ஆன்றோர்களுடைய துணிவு. ஜாக்கிரதாவஸ்தையும் அதில் நாம் காண்கின்ற உலகனைத்தும் சொப்பனத்திலோ அல்லது சுழுத்தியிலோ இல்லாது மறைந்து போய்விடுகின்றன. இவை நமக்கு நிரந்தரமாகச் சொந்தமான வைகள் அல்ல என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுதற்கு இந்த அனுபவமே நமக்குப் போதுமானது. ஜாக்ரதம், சொப்பனம், சுழுத்தி ஆகிய மூன்றுக்கும் பொதுவாய் உள்ள பேருணர்வு நிலை ஒன்று உண்டு. அது மூன்று அவஸ்தைகளுக்கும் பொது வானது. இந்த மூன்று அவஸ்தைகளிலும் அது கட்டுப்படாது இருக்கிறது. அந்நிலையை உணர்ந்து அதில் நிலைத்திருப்பதுதான் ஆத்மசாதனம். அது பூர்த்தியாகுமிடத்து நாம் நிறைஞானம் அடையப்பெற்றவர் ஆகிறோம்.

கேள்வி: *(160)* நாம் சொப்பனாவஸ்தையில் இருக்கும் பொழுது ஏற்படுகிற நிகழ்ச்சிகளை மனந்தான் உணருகிறது. ஆனால் தெளிவற்ற நிலைமையில் இருந்து மனம் உணருகிறது. பிறகு ஜாக்கிரதாவஸ்தைக்கு வந்தவுடன் மனம் தெளிவுற்று, கனவில் நடந்த நிகழ்ச்சி எல்லாம் பொய்த் தோற்றம் என்று தெளிந்து கொள்ளுகிறது. கனவில் தோன்று கின்ற நிகழ்ச்சிகளில் உள்ள ஜடப்பொருள்கள் வெறும் தோற் றமே தவிர ஸ்பரிசத்துக்கு எட்டும் ஜடப்பொருள் அல்ல. ஆனால் நனவில் தோன்றுகின்ற நிகழ்ச்சிகளில் உள்ள ஜடப்பொருள்களுக்குத் தோற்றமும் உண்டு, ஸ்பரிசமும் உண்டு. கனவில் காணும் நிகழ்ச்சிகளை நனவிற்கு வந்த வுடன் பொய் என்கின்றோம். அதுபோல நனவில் காணும் காட்சிகளை எந்தப் பக்குவத்திற்குப் போனால் நனவும் பொய் என்கிற உணர்வு தென்படும்? சாஸ்திரங்கள் மூலமாக நனவுத் தோற்றத்தையும் பொய் என்று உணருகிற ஆற்றல் மனதிற்கு ஏற்படுகிறது என்று அறிகிறோம். அப்படி நனவையும் பொய் என்று தெளிவடையும்பொழுது கனவில்

தோன்றுகின்ற ஜடப்பொருள்கள் ஸ்பரிசமும் இல்லாமல் போய்விடுமா? விளக்கம் வேண்டுகிறேன்.

பதில்: ஜாக்கிரதாவஸ்தையில் காணும் பொருள்கள் ஜாக்கிர தாவஸ்தையில் உண்மையானவைகள். தூங்கும் வேளையில் ஸ்பரிசத்தை உண்டுபண்ணினாலும் தூங்கும் ஜீவனுக்கு அந்த ஸ்பரிசம் உண்மையல்ல. விழித்திருக்கும் வேளையில் ஒருவன் நெற்றியில் பொட்டு வைக்கிறோம். அந்த ஸ்பரிச உணர்ச்சி அவனுக்கு உண்டு. தூங்கும் பொழுது பொட்டு வைத்தால் அவன் அதை உணர்வதில்லை. அந்த நிலையில் ஸ்தூல உடலை ஒட்டிய ஸ்பரிச உணர்ச்சி அவனுக்குப் பொய்யாய் விடுகிறது. கனவில் அதே மனிதன் கனவுப் பொருள்களை ஸ்பரிசிக்கிறான். கனவை அவன் நனவு என்று எண்ணுகின்றான். அந்த எண்ணம் இருக்கும் வரையில் அவனுக்குக் கனவே நனவு ஆகிறது. கனவுப் பொருளே உறுதிப் பொருள் ஆகிறது. கனவு நனவைப் பொய்யாக்குகிறது. நனவு கனவைப் பொய் யாக்குகிறது. இப்படி நாள்தோறும் ஒன்று மற்றொன்றைப் பொய்யாக்கும் அனுபவத்தை எல்லா ஜீவர்களும் அனுபவித்து வருகிறார்கள். ஞானிக்கோ கனவும் நனவும் ஒன்றே. இரண்டும் மனங்களின் விகாரங்களாம். மனமற்ற நிலையில் கனவுமில்லை, நனவுமில்லை; ஸ்பரிச உணர்வும் இல்லை. ஆத்ம உணர்வு ஒன்றே மிச்சம். இந்த உணர்வு சுழுத்தியில் ஒடுங்கியிருக்கிறது. நிறைஞானிக்கோ எந்த நிலையிலும் அது ஒடுங்குவதில்லை. ஜாக்கிரத, சொப்பன, சுழுத்தி ஆகிய மூன்றையும் கடந்தவன் ஞானி. அவனே மூன்று அவஸ்தைக்கும் அப்பாலுள்ள மெய்ப்பொருளை உணருகின்றான். மற்ற ஜீவர்கள் மூன்றில் ஒன்றன்பின் ஒன்றைப் பெற்று அதில் உழன்று அப்போதைக்குத் தாம் அனுபவிப்பதே மெய்யான நிலை என்னும் மயக்கத்தில் இருந்து வருகின்றனர். இந்த மயக்கத்துக்கு அப்பால் செல்லுவது நமது குறிக்கோள்.

கேள்வி: (161) **மேனாட்டு நிபுணர்கள் பலர் சூக்ஷ்ம சரீரத்தை ஸ்தூல சரீரத்திலிருந்து பிரித்துத் தாங்கள் சரீரத்தி னின்று வேறென்பதைப் பார்ப்போர்களுக்கு நிரூபித்து இருப்பதாயும் உடலைவிட்டுப் பிரிந்த சூக்ஷ்ம சரீரத்தின்**

போட்டோக்கள் பிடித்திருப்பதாயும் சொல்கிறார்கள். இச்சூக்ஷ்ம சரீரம் சில வேலைகளும் செய்கிறதாம். நம் சாஸ்திரங்களிலும் திருமூலர், விக்கிரமாதித்தியர் முதலியவர்கள் வேறொரு சரீரத்தில் புகுந்து சஞ்சரித்ததாய்ப் பிரமாணங்கள் இருக்கின்றன. இதைப் பரகாயப் பிரவேசம் என்று சொல்லியிருக்கிறது. இச்சூக்ஷ்மம் மனிதனுக்கு மட்டும்தான் உண்டா? புல், புழு, மரம், மிருகம் இவைகளுக்கும் உண்டா? மறுஜென்மாவில் இச்சூக்ஷ்மம்தான் உடலெடுத்து வருகிறதா? வினைகளைச் சூக்ஷ்மம்தான் அனுபவிக்கிறதா? மனசுதான் சூக்ஷ்மசரீரமா? அல்லது மனம் வேறு சூக்ஷ்மம் வேறா? அல்லது சூக்ஷ்ம சரீரமே கிடையாதா?

பதில்: மேல்நாட்டு நிபுணர்கள் இயற்கை சம்பந்தமான பல நுட்பங்களை ஆராய்ந்து கண்டுபிடித்து வருகின்றனர். அன்னவர்களைத்தான் பௌதிக விஞ்ஞானிகள் என்கிறோம். ஆனால் அத்யாத்மிக விஷயத்தில் அவர்கள் இதுவரையில் முன்னேற்றம் அடைந்து வருவதின் அறிகுறிகள் எதையும் நாம் காணவில்லை. அவர்கள் சொல்லும் சில கூற்றுகள் ஆன்றோர்களுடைய துணிவுக்கும் யுக்திக்கும் பொருந்தாதவைகளாய் இருக்கின்றன. அத்யாத்மிக விஷயத்தில் நம் நாட்டில் தோன்றிய முன்னாளைய மேலோர்கள் பூரணவெற்றி அடைந்திருக்கின்றனர். அவர்கள் செய்துள்ள முடிவுக்கு மேல் புதிய முடிவுக்கு நாம் வரமுடியாது. அப்படிப் புதிய முடிவு ஏதாவது இருக்குமாகில் அது உண்மைக்கு முற்றிலும் ஒவ்வாததாய்ப் போய்விடும். ஆனால் அவ் ஆன்றோர்கள் நமக்கு அளித்திருக்கும் முடிவான சித்தாந்தங்களை நவீன முறையில் எல்லாருக்கும் விளங்கும்படித் தெளிவுற நாம் எடுத்து இயம்பலாம்.

ஆன்றோர்கள் சொற்படி ஜீவாத்மாவுக்கு மூன்று சரீரங்கள் உண்டு. அவை முறையே ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் எனப் பெயர்பெறுகின்றன. ஸ்தூல சரீரம் கட்புலனாகிறது. அதைப் புகைப்படம் பிடிக்கவும் முடியும். சூக்ஷ்ம சரீரமோ கண்ணுக்குப் புலனாகாது. அதைப் புகைப்படம் பிடிக்கவும் முடியாது. ஸ்தூல சரீரத்தின் துணையின்றி சூக்ஷ்ம சரீரம் எந்த வேலையையும் செய்யமுடியாது. அன்னமயகோசமாய்

பிராணமய கோசமாய் இருப்பது ஸ்தூல சரீரம். மனோமய கோசமாய் விஞ்ஞானமய கோசமாய் இருப்பது சூக்ஷ்ம சரீரம். ஆனந்தமய கோசமாய் அக்ஞானத்திலிருப்பது காரண சரீரம், ஸ்தூல சரீரத்தை மாற்றிக் கொள்வதை மரணம் என்கிறோம். சூக்ஷ்ம சரீரமும் காரண சரீரமும் சேர்ந்து புதியதாகத் தனக்கு ஒரு ஸ்தூல சரீரம் பண்ணிக்கொள்ளும்பொழுது. அதைப் பிறப்பு என்கிறோம். ஆத்ம ஞானிகள் ஸ்தூல சரீரத்துக்குப் புறம்பாக ஜீவாத்மாக்களின் சூக்ஷ்ம சரீரத்தையும் காரண சரீரத்தையும் ஞானக்கண் கொண்டு காணமுடியும். கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்திருக்கும் வஸ்துக்களைக் காண்பதுபோன்று தாம் தம்மிடம் வருபவர்களின் மன அமைப்பை நேரில் காண்பதாக ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பகர்வதுண்டு. அப்படி அவர் சூக்ஷ்ம சரீரத்தைப் பார்த்தது உண்மை. அவர்போன்ற தீர்க்கதரிசிகள் ஒரு மனிதனுடைய உள் அமைப்பை அல்லது மனபரிபாகத்தை அல்லது சூக்ஷ்ம சொரூபத்தை உள்ளபடிக் காணமுடியும்.

யோக சித்தி அடைந்திருக்கிறவர்களுக்குப் பரகாயப் பிரவேசம் பண்ணுவது சாத்தியம். உயிர்வாழ்ந்திருக்கும் பிறர் சரீரத்தில் புகுந்து பிறரை மயக்க நிலையில் ஒடுக்கி வைத்துவிட்டு அந்தச் சரீரத்தை வேண்டியவாறு சித்த புருஷர்கள் கையாள முடியும். இதற்கு சாஸ்திரப்பிரமாணம் இருக்கிறது. ஆதிசங்கரர் பரகாயப்பிரவேசம் செய்ததாக அவருடைய வரலாற்றில் சொல்லப் பட்டிருக்கிறது. 'மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்' என்று தாயுமானவர் பகர்ந்திருக்கிறார். சூக்ஷ்ம சரீரம் ஜீவர்கள் அனைவர்களுக்கும் உண்டு. புல், புழு, மரம், மிருகம் ஆகிய வைகள் ஜீவாத்மாக்களாகவே ஆன்றோர்களால் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன. எனவே அவைகளுக்கும் சூக்ஷ்ம சரீரம் உண்டு என்று யூகிக்கவேண்டும். ஆனால் நமது மனது சூக்ஷ்ம சரீரத்தை நாம் ஆராய்ச்சி பண்ணுவது போன்று அவைகளின் சூக்ஷ்ம சரீரம் நமது ஆராய்ச்சிக்கு எட்டுவதில்லை. புல், புழு, மரம் இவைகளின் ஸ்தூல சரீரத்தைப் பற்றிய அற்புத மான ஆராய்ச்சிகளை மேல்நாட்டு நிபுணர்கள் வெளியிட்டிருக் கிறார்கள். அவைகள் மறுக்கமுடியாத உண்மைகள். அவ்வுண்மை களை ஏற்றுக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ☆

6. சிருஷ்டி

கேள்வி: *(162)* "கடவுள் எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர், எல்லாம் அறிந்தவர்" -இவ்விதம் இருக்க ஓரறிவுப் புல் முதல் ஆறு அறிவு படைத்த மனிதன் வரையில் பசியினால் வருந்தும்படி ஏன் செய்கிறார்? பசியே இல்லாமல் இருந்தால் உலகத்தில் துன்பம் என்பதே இருக்காது. இவ்விதம் பசியை ஏற்படுத்தி அதனால் கஷ்டப்பட வைப்பதினால் கடவுள் எவ்விதம் எல்லாம் அறிந்தவர் ஆவார்? வயிற்றுக்கொடுமை இல்லாவிடில் பட்சியும் வலையில் விழாது; வேடனும் வலையை விரிக்கமாட்டான். இதில் முன்கூறிய செயல் தவறா அல்லது பின்கூறியது தவறா என்பதை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பதில்: ஒரு மனிதனுக்கு ஜீரணசக்தி ஏராளமாய் இருக்கிறது. அடிக்கடி பசி எடுக்கிறது. மற்றொரு மனிதனுக்கு ஜீரணசக்தியில்லை. பசி உண்டாவதில்லை. இவ்விருவருள் யார் முன்னேற்றமடைகிறான் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கல் ஒன்றுக்குப் பசி இல்லை. அது உண்பதில்லை. புல் ஒன்றுக்குப் பசி இருக்கிறது. உணவைப்பெறப் பூமிக்குள் வேரை அனுப்புகிறது. வெளியே அது படர்ந்து போகிறது. முன்னேற்றமடைவது கல்லா அல்லது புல்லா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். முட்டைக்குள்ளிருக்கும் பறவையின் கரு ஒன்றுக்குப் பசி இல்லை. அது பறவையாகப் பரிணமித்தான பிறகு பசி நோயைப் போக்குதற்கு அலைந்து திரிகிறது. முட்டை நிலையில் இருப்பது பாராட்டத்தக்கதா, பறவையின் முயற்சிகள் பாராட்டத்தக்கதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். பிரபஞ்ச முழுவதும் கடவுளின் சிருஷ்டி. அதை

நாம் இம்மியளவும் மாற்றியமைக்க முடியாது. முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் சிருஷ்டியில் அடங்கியிருக்கின்றன. உயிர்கள் முன்னேற்றம் அடைவதற்குப் பசி மிக முக்கியமானது. பசியில் பல படித்தரங்கள் உண்டு. உடலைப் பேணுதற்கான பசி உண்டு. அறிவை வளர்ப்பதற்கான பசி உண்டு. உயிரை ஓம்புதற்கான பசி உண்டு. உள்ளிருக்கும் மெய்ப்பொருளை அறிந்துகொள்வதற்கான பசி உண்டு. இத்தனைவிதமான பசிகள் சிருஷ்டியில் இல்லாது போய் விட்டால் சிருஷ்டியே இல்லாது போய்விடும். சிருஷ்டியை அழித்துவிட யாருக்கும் இயலாது. சிருஷ்டியில் சம்பந்தப் பட்டுள்ள பசியை ஒழித்துவிடவும் யாருக்கும் இயலாது. இத்தனை விதமான பசிகளைப் பயன்படுத்திச் சிருஷ்டிக்கு அப்பாலுள்ள பெருநிலைக்குப் போக முயற்சி செய்வது பொருந்தும்.

***கேள்வி: (163)* கடவுள் பாரபட்சமற்றவர் என்று எல்லாரும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் எங்கு நோக்கினும் ஏற்றத் தாழ்வுகள் ஏராளமாக இருக்கின்றன. "முன்வினைப் பயன்" என்று பகராது பதில் அளித்தல் வேண்டும்.**

பதில்: ஏற்றத்தாழ்வு சிருஷ்டிக்கு முற்றிலும் அவசியம். எல்லாம் ஒரேவிதமாகச் சிருஷ்டிப்பது என்பதில் பொருள் இல்லை. எல்லாம் ஒரேவிதமாக இருப்பதும், சம்ஹாரம் ஆவதும் ஒன்றேயாம். அயர்ந்து தூங்குகிற நிலையில் ஏற்றத் தாழ்வு இல்லை. அந்நிலை பிரளயத்துக்கு ஒப்பானது. விழித்துக் கொண்டவுடன் மனப்பான்மையிலும், ஆற்றலிலும், செயலிலும் ஏற்றத்தாழ்வு காண்கின்றோம். ஆசிரியரிடத்து ஏற்றமும், மாணாக்கனிடத்துத் தாழ்வும் இருப்பது இயல்பு. மாணாக்கனும் ஆசிரியனும் ஒரே பாங்கில் இருந்துவிட்டால் புகட்டுகிற வேலையும் இல்லை; கற்கிற வேலையும் இல்லை. அறிவில் இங்ஙனம் ஏற்றத்தாழ்வு இருப்பதுதான் இயற்கையின் அமைப்பு. இனி, ஆற்றலை எடுத்துக் கொள்வோம். வேலை செய்வதில் எல்லாருக்கும் ஒரேவிதமான திறமை கிடையாது. அனுபவப்பட்டவர்களுக்கு அதிகத் திறமையும், அனுபவம் இல்லாதவர்களுக்குக் குறைந்த திறமையும் இருப்பது இயல்பு.

வயதும் அதற்கு ஒரு காரணமாகிறது. இளையவர்களுக்கு ஆற்றல் குறைந்து உள்ளது. முதியோர்களுக்கு அது மிகைபட இருக்கிறது. அதற்குமேல் அறிவையும் சாமர்த்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டு சிலருக்கு ஆற்றல் ஓங்குகிறது. சிலருக்கு அது நிதானமாக வருகிறது. ஆற்றலில் உள்ள ஏற்றத் தாழ்வே முயற்சிக்குத் தூண்டுதல் தருகிறது. பந்தயம் ஓடுகிற வர்கள் எல்லார்க்கும் ஒரேவிதமான ஆற்றலிருந்தால் பந்தயம் ஓடுதலில் பொருள் இல்லை. முயற்சிக்கும் ஆங்கு இடமில்லாது போய்விடுகிறது. பந்தய விளையாட்டில் சுவையும் இல்லாது போய்விடும். வாழ்வு பந்தயம் போன்றது. ஒருவனிடத்து அதிக அறிவும் ஆற்றலும் இருப்பது மற்றொருவனுக்குத் தூண்டுதலை உண்டுபண்ணுகிறது. சிலவேளையில் அது பொறாமையையும் உண்டுபண்ணிவிடலாம். பொறாமையும் ஒருவிதத் தூண்டுதலே யாம். ஆனால் அது எதிர்மறைத் தூண்டுதலாகிறது. இயற்கை யினுடைய பாங்கைத் துருவி ஆராய்ந்து பார்த்தால் ஏற்றத் தாழ்வே எல்லாவிதமான இயக்கங்களுக்கும் மூலகாரணமாக அமைகிறது என்பது விளங்கும். மலை ஏற்றமாகவும் கடல் தாழ்வாகவும் அமையாது போய்விட்டால் நதி ஓட முடியாது. நதி ஓடாவிட்டால் மண்ணுலக வாழ்வே தடைபட்டுவிடும். வேற்றுமையே விதவிதமான அனுபவங்களை உண்டுபண்ணு கின்றன. மனிதனுக்கு வெற்றியும் பாடம் புகட்டுகின்றது; தோல்வியும் பாடம் புகட்டுகின்றது. வெற்றி தோல்வி என்ற ஏற்றத்தாழ்வு இல்லாது போய்விட்டால் மனிதன் பண்பாடு அடைவதற்கு இயற்கையானது வேண்டிய வசதிகளெல்லாம் செய்து வைக்கவில்லை என்று பொருளாகிறது.

நம் கைவிரல்கள் நீண்டும் குறுகியும் இருக்கின்றன. விரல்களிடத்து நாம் பக்ஷபாதம் வைத்திருக்கிறோம் என்று அதிலிருந்து முடிவு கட்டலாகாது. விரல்கள் நீண்டும் குறுகியும் இருப்பதே விதவிதமான வினையாற்றுதற்கு ஏற்ற அமைப்பு ஆகிறது. நம் உடலமைப்பில் காலை ஒருவிதமாக, தலையை இன்னொரு விதமாக அமைத்துக் கொண்டதைப் பக்ஷபாதம் என்று பகரலாமா? அவயவ அமைப்பில் இந்த வேறுபாடுகள் இருந்தே ஆக வேண்டும். இல்லாவிடில் நம் உடல் வாழ்வு நன்கு நிகழாது. நம் உடல் அமைப்பிலுள்ள உயர்வு தாழ்வே

இயற்கையமைப்பிலும் உண்டு. உயர்வு தாழ்வு இல்லாவிட்டால் சிருஷ்டியில்லை, சிருஷ்டியில்லாவிட்டால் அனுபவம் இல்லை. அனுபவம் இல்லாவிட்டால் முன்னேற்றம் இல்லை. முன்னேற்ற மடையாதவர் ஞானமில்லா ஜடப்பொருளுக்கு ஒப்பானவர் ஆய்விடுகின்றார். ஜடப்பொருளை ஜடநிலையிலேயே வைத் திருப்பது இயற்கையின் திட்டமன்று. ஜடப்பொருளைச் சேதனப் பொருளாக அல்லது அறிவு நிறைந்த உயிராக மாற்றியமைப்பது இயற்கையின் திட்டம். ஓர் உயிர் விரைவில் முன்னேற்றம் அடைகின்றது. மற்றொன்று நிதானமாக முன்னேற்றம் அடை கின்றது. அதைத்தான் நாம் ஏற்றத்தாழ்வு என்கின்றோம். உண்மையில் அது பாரபக்ஷமன்று. ஆக, உள்ள அமைப்பு உத்தமமான அமைப்பு ஆகிறது. கடவுள் மீதோ இயற்கையின் மீதோ குறைகூறுதற்கு ஆங்கு இடமில்லை. ☆

7. ஆத்ம ஸாதனை

கேள்வி: *(164)* தியானம் பழகுவது எப்படி?

பதில்: தியானம் செய்வது செயற்கரிய செயலாகும். சிந்தை அடங்கி அது இறைவன் மீது நிலைத்திருப்பதுதான் தியானமாகும். காண்பதற்குக் கண் என்ற பொறி பயன்படுகிறது. கேட்பதற்குக் காது என்ற பொறி பயன்படுகிறது. மோப்பதற்கு மூக்கு என்ற பொறி பயன்படுகிறது. சுவைப்பதற்கு நா பயன்படுகிறது. ஊறு என்ற உணர்ச்சியைப் பெறுவதற்கு மெய் என்ற பொறி பயன்படுகிறது. நினைப்பதற்கு மனம் என்னும் அந்தக்கரணம் பயன்படுகிறது. பொறிகளின் மூலம் மனதும் பொருந்திப் புற விஷயங்களைப் புலப்படுத்துகின்றன. மானுட ஜன்மம் எடுக்கும் வரையில் புலன்களின் வாயிலாக மனது புறவுலகைப் பற்றி வந்துள்ளது. பல ஜன்மங்களில் மனது அப்பயிற்சியைப் பெற்றிருக்கிறது. மானுட ஜன்மம் எடுத்த பிறகும் மனது புலன்களின் வாயிலாகப் புறவுலகைப் பற்றுகின்ற செயலைத்தான் செய்துகொண்டிருக்கிறது. தியானத்துக்கு மனதை உள்முகமாக இழுத்துப் பழகுவது அவசியம்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்(பு) உடைத்து"

என்பது வள்ளுவர் வாக்கு. ஆமையானது தனக்கு ஆபத்து வரும்பொழுது நான்கு கால்கள், தலை ஆகிய ஐந்து உறுப்புகளையும் ஓட்டுக்குள் இழுத்துத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும். அங்ஙனம் தியானத்துக்கு அமரும்பொழுது மனதை ஐம்பொறிகளின் வழியே புறவுலகிற்குச் செல்லுவதைத் தடுத்து

உள்ளே இழுத்துப் பழகவேண்டும். அதற்குப் பிரத்யாகாரம் என்று பெயர். மனதை உள்ளே இழுத்துப் பழகுவதன் மூலம் பொறிகளின் வழியாக மனோசக்தி புறவுலகில் சிதறுண்டு போவதைத் தடுத்து மனோசக்தியை ஒன்றுதிரட்டுகிறோம். மனதைப் பொறிகளின் வழியாகப் புறவுலகுக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்துவதைத்தான் புலனடக்கம் என்கிறோம். புலனடக்கத்தின் வாயிலாகச் சரீர சக்தியெல்லாம் மனோ சக்தியாக மாற்றப்படுகிறது. மனோசக்தியை ஒன்றுதிரட்டி நாம் வழிபடும் தெய்வத்தின் மீது அல்லது உயர்ந்த லக்ஷியத்தின் மீது செலுத்தவேண்டும். மனோசக்தி முழுவதையும் ஒன்றின் மீது செலுத்துவதற்குத் தாரணை என்று பெயர். ஒன்றின் மீது குவிந்த மனதை அதன்மீதே நிலைத்திருக்கச் செய்வோ மானால் அதற்குத் தியானம் என்று பெயர். எப்பொருளைத் தியானிக்கின்றோமோ அப்பொருள் மயமாக மாறி அமைகின் றோம். நாம் தியானிக்கின்ற பொருள் மயமாக முழுதும் மாறி அமைந்த நிலையைச் சமாதி என்கின்றோம்.

தியானம் கூடியவர்களுக்கு வாழ்வு விளையாட்டுப் போன்று அமைந்துவிடுகிறது. ஜகதீஸ் சந்திரபோஸ் என்னும் விஞ்ஞானி இலையைப் பற்றி அறிவதற்கு அதைக் குறித்துத் தியானம் பண்ணினார். இலையைக் குறித்துத் தியானம் பண்ணப் பண்ண அவரே இலையாக மாறி அமைவதை உணர்ந்தார். அப்பொழுது இலையைப் பற்றிய உண்மைகளை முழுவதும் அறிந்தார். தியானிக்கவேண்டிய பொருள்களுள் கடவுளைப் பற்றிய தியானமே மிக மேலானது. கடவுள் ஸத் சித் ஆனந்த சொரூபமாக இருக்கிறார். ஸத் சித் ஆனந்தத்தைப் பற்றித் தியானம் செய்து பழகவேண்டும். எடுத்த எடுப்பிலேயே ஸத் சித் ஆனந்தத்தைப் பற்றித் தியானிக்கமுடியாது. இறை வனைக் குறித்த மந்திரங்கள் பல இருக்கின்றன. அம்மந்திரங்க ளெல்லாம் சக்தி வாய்ந்தவை. நம் மனதுக்கு விருப்பமான மந்திரத்தை மனதுக்குள் ஜபிப்பது தியானம் கைகூடுவதற்கு உதவும். இந்த முறை சிரமமாகத் தோன்றினால் நம் இஷ்ட தெய்வத்தின் வடிவத்தை நெஞ்சில் வைத்துத் தியானம் செய்து பழகலாம். இஷ்ட தெய்வத்தின் வடிவத்தை அகத்தே வைத்துத் தியானம் பண்ண இயலாதவர்கள் இஷ்ட தெய்வத்தைப்

புறத்தில் படத்தின் வாயிலாகவோ, விக்கிரகத்தின் வாயிலாகவோ தியானம் செய்து பழகலாம்.

கட்டடத்துக்கு அஸ்திவாரம் முக்கியமாக இருப்பது போன்று தியானத்துக்கு மனத்தூய்மை அவசியமாகிறது. மனதைத் தூய்மைப்படுத்துதற்கு இயம, நியமப் பகுதிகளை அனுஷ்டிக்க வேண்டும். அஹிம்சை, சத்தியம், பிரம்மச்சரியம், அஸ்தேயம், அபரிக்கிரஹம் என்ற ஐந்தும் இயமப்பகுதியில் அடங்கும். கொல்லாமை, பொய்யாமை, புலன்வழிச் செல்லாமை, கள்ளாமை, ஏலாமை என்று அவை தமிழில் பகரப்படுகின்றன. சௌசம், சந்தோஷம், சுவாத்யாயம், தவம், ஈசுவரப் பிரணிதானம் என்ற ஐந்தும் நியமப்பகுதியில் அடங்குகின்றன. தூய்மை, மகிழ்ச்சி, அருள் நூல்களை ஓதுதல், தவம், கடவுள் வழிபாடு என்று நியமப்பகுதியில் உள்ள ஐந்தும் தமிழில் பகரப்படு கின்றன. இப்பத்தையும் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருகிற பொழுது அகம் புறம் ஆகிய இரண்டும் தூய்மை அடைகின்றன.

விவேகத்தை நன்கு கையாண்டு மனதை அநித்தியமாகிய உலகப்பற்றிலிருந்து விலக்கி நித்தியமாகிய இறைவன் மீது மனதுக்குப் பற்றுதலை வளர்க்கவேண்டும். உள்ளத்தை எந்த உலகப்பொருள் கவர்கின்றதோ உண்மையில் அப்பொருளின் புறத்தோற்றம் உள்ளத்தைக் கவர்வதன்று. அப்பொருளிலுள்ள ஆத்மாவே மனதைக் கவர்கிறது. இவ்வுண்மை விளங்கினால்தான் உள்ளம் சொரூபத்தைத் தியானிக்க இயலும். உடல் சம்பந்தமான உணர்வை வெல்லுகின்றவளவு ஆத்ம தியானம் கைகூடும்.

தியானத்தின்பொழுது மனதை அடக்குவதற்கு மற்றொரு முறையையும் கையாளலாம். மனதில் எழுகின்ற எண்ணங் களுக்கு நாம் அந்நியமாக இருந்து அவற்றைச் சாக்ஷிமய மாகப் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும். மனதில் எழுகின்ற எண்ணங்கள் மயமாக நம்மை ஆக்கிக்கொண்டு நாம் எதைக் குறித்துத் தியானம் செய்கின்றோமோ அதை மறந்துவிடக் கூடாது. நம் மனதில் தோன்றுகின்ற எண்ணங்கள் பொருத்த மான எண்ணங்களா? பொருத்தமற்ற எண்ணங்களா? என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். பொருத்தமான எண் ணங்களாக இருந்தால் அவற்றை நாம் வழிபடுகின்ற தெய் வத்துக்கு அர்ச்சனையாகச் சமர்ப்பிக்கவேண்டும். பொருத்தமற்ற

எண்ணங்களாக இருந்தால் அவற்றை உதாசீனப்படுத்தவேண்டும். நம் வீட்டுக்கு வருகின்றவர்களுக்கு உபசரிப்பு அதிகம் செய்தால் அவர்கள் நம் வீட்டில் தங்கிவிடுவார்கள். வந்தவர்களை விரைவில் போகச்சொல்ல வேண்டுமென்றால் அவர்களிடம் நாம் உதாசீனமாக இருக்கவேண்டும். வந்தவர்களை உபசரிக்காது உதாசீனப்படுத்தினால் சிறிது நேரம் இருந்து பார்த்துவிட்டு அவர்கள் போய்விடுவார்கள். நம் மனதில் தோன்றும் பொருத்த மில்லாத எண்ணங்களையும் நாம் உதாசீனப்படுத்தினால் நாளடைவில் அவைகள் நம் மனதைவிட்டு அகன்றுவிடும்.

நாம் செய்யும் கர்மத்தின் பலனில் பற்று வைக்காது இருப்போமானால் அக்கர்மம் நம் மனதைச் சுத்தப்படுத்தும். செய்கின்ற கர்மத்தை நிஷ்காமியமாகச் செய்து பழகினால் தியானம் கைகூடும். செய்கின்ற கர்மத்தைப் பற்றுதலுடன் செய்வோமானால் சரீர உழைப்புக்கேற்றவாறு உறக்கம் கைகூடும். கர்மபலனை நம் இஷ்ட தெய்வத்துக்கு அர்ப்பணித்துப் பழகுகின்றவளவு இஷ்ட தெய்வத்தைத் தியானம் பண்ணுவதில் மனம் மகிழ்ச்சி அடையும்.

பகவந்நாம ஓசையில் மனது ஈடுபடுகின்றவளவு மனது சுத்தி அடையும். உலக சுகம் நிலையற்றது என்பதைச் சிந்திக் கின்றவளவு மனது உலகத்திலிருந்து விடுபடும். தெய்வத்துக் காகக் கர்மம் செய்கின்றவளவு கர்மப்பற்று நீங்கும். இயம, நியமங்களில் சொல்லப்பட்ட ஒழுக்கங்களைக் கடைப்பிடிக் கின்றவளவு இச்சாசக்தி அதிகரிக்கும். இம்முறைகளில் மனதைத் தூய்மைப்படுத்திக்கொண்டு தியானம் செய்து பழகவேண்டும்.

ஆரம்பத்தில் தியானத்துக்கென்று ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி வைத்து அந்த நேரத்தில் தவறாமல் தியானம் செய்து பழகவேண்டும். அதிகாலை நான்கு மணியிலிருந்து சூரிய உதயம் வரையில் உள்ள பிரம்மமுகூர்த்த நேரத்தில் இயற்கை முழுவதும் சத்துவகுணம் ஓங்கியிருக்கும். எனவே அந்நேரத்தைத் தியானத்துக்குப் பயன்படுத்தலாம். மேலும் ஒருநாளில் அமைந்துள்ள காலை, நண்பகல், மாலை, நள்ளிரவு ஆகிய நான்கு சந்தியாவேளைகளும் தியானத்துக்கு ஏற்ற நேரங் களாகும். நள்ளிரவில் நாம் தூங்கிக் கொண்டிருப்போமாகையால் மற்ற மூன்று வேளைகளையும் தியானத்துக்குப் பயன்படுத்தலாம்.

கேள்வி: (165) தியானம் எப்படிச் செய்வது?

பதில்: காலையிலும் மாலையிலும் சிறிதுநேரம் பொருத்தமான இடத்தில் அமைதியுடன் நிமிர்ந்து உட்கார்ந்து தியானம் பழகுவது முற்றிலும் நன்று. பல்லாயிரம் ஆண்டுகளாக நம் நாட்டு மக்கள் கையாண்டு வந்துள்ள ஆன்மிகப் பயிற்சி இதுவாம். ஒவ்வொரு ஜீவனும் தன் வாழ்நாளிலே ஏதோ சிறிது நேரமாவது பேருணர்விலும் ஆனந்தத்திலும் மூழ்கி யிருப்பது அன்னவனுக்கு வந்தமையும் ஈசுவரப் பிரசாதமாம். எண்ணிப் பார்த்தால் ஒவ்வொருவனும் தான் ஏதோ சிறிது நேரமாவது அடைந்துள்ள இந்த அரிய வாய்ப்பைப் பற்றிய எண்ணம் தனக்கு வரும். பிறகு இந்த அனுபவத்தையே பற்றித் தியானம் பண்ணுவது மிக நன்று. இயற்கையிலுள்ள கவர்ச்சிகரமான நல்ல காட்சிகளைக் குறித்துத் தியானம் பண்ணலாம். கேட்டுள்ள அல்லது படித்துள்ள மேலாம் கருத்துக்களைக் குறித்துத் தியானம் பண்ணலாம். ஒவ்வோர் ஆத்ம சாதகனும் தான் போற்றிவரும் பெருமக்களுள் யாராவது ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றைக் குறித்துத் தியானம் பண்ணலாம். ஈண்டு இயம்பியுள்ள கோட்பாடுகளுள் தனக்கு உகந்ததைத் தானே தீர்மானம் செய்து தேர்ந்தெடுத்துக் கொள்வது அவசியம் ஆகிறது.

தியானத்தில் அமர்ந்தவுடன் உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் இன்புற்றிருக்க வேண்டுமென்று முதலில் அவர்களை வாழ்த்துதல் அவசியமாகிறது. பிறகு கண்மூடி அமர்ந்துகொண்டு உள்ளத்தின் உள்ளே பேரானந்தத்துடனும் பேரொளியுடனும் கூடி எழுந்தருளியுள்ள மூர்த்தியைக் குறித்து எண்ணுங்கால் அது நல்ல தியானமாகிறது.

இதற்குமேல் அவரவர்க்குத் தோன்றும் வேறு பல உபாயங்களைக் கையாண்டும் தியானத்தில் முன்னேற்றமடைவது சாத்தியம்.

கேள்வி: (166) மரணத்தைக் குறித்துத் தியானம் செய்யலாமா?

பதில்: மரணத்தைக் குறித்துத் தியானம் செய்வது மனதில் வைராக்கியத்தை உண்டுபண்ணும். அழிந்துபோகும் பொருள்

இடத்துப் பற்றுதலைக் குறைப்பதற்கு மரணத்தைக் குறித்துத் தியானம் செய்வது உதவும். மரணத்தைக் குறித்துத் தியானம் செய்யும்பொழுது அழிவது உடல்தான், ஆத்மா அழியாதது என்பது மனதுக்குத் தெளிவாக விளங்கும். மரணத்தை நினைக்கும்பொழுது சாதனையில் தீவிரம் ஏற்படும்.

ஒவ்வொரு நாள் மாலையிலும் ஆலயத்தில் மணி அடிக்கும் ஓசை *ஸ்ரீராமகிருஷ்ணர் காதில் வந்து விழும்.* அப்பொழுது அவருக்கு வாழ்நாளில் மேலும் ஒருநாள் கழிந்து போய்விட்டது; மரணத்தை நோக்கி நெருங்கிக்கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் எழும். தேவியின் காட்சி கிடைக்கவில்லையே என்ற துயரம் அவருடைய மனதை வாட்டும். தேவியின் காட்சி பெறாமலேயே இந்த உடல் அழிந்து விடுமோ என்று எண்ணித் துயரத்தால் முகத்தைத் தரையின்மீது தேய்த்துத்தேய்த்துப் புலம்புவார். இங்ஙனம் மரணத்தைக் குறித்து நினைக்கும்பொழுது சாதனையில் தீவிரமாகப் போவதற்கு ஓர் எழுச்சி உண்டாகும்.

உள்ளத்தைக் கவர்கின்ற உலகப் பொருள் அழிந்து போகக் கூடியது என்று எண்ணும்பொழுது மனதில் அதனிடத்துப் பற்றுக் குறையும். மரணத்தைக் குறித்து நினைக்க நினைக்க மரணத்தைக் குறித்த அச்சமும் அகன்று போய் விடும். உடல் அழிவதுதான் என்று உணர்ந்தானபிறகு உடல் அழிந்துபோவதைக் குறித்து யார் வருந்துவார்கள்? உடலை அழியாது காப்பாற்ற முடியும் என்ற மயக்கத்தில் இருப்பவர்களுக்குத்தான் மரணத்தைப்பற்றி எண்ணும்பொழுது அச்சம் உண்டாகிறது.

உடல் வாழ்ந்திருக்கும்பொழுதே உடல் வாழ்வில் நம்மைச் செத்தவர்களாக்கி விடுவோமானால் நம்வாழ்வு ஞான வாழ்வாக மாறிவிடும். ஸ்ரீரமண மஹரிஷி சிறுவனாக இருந்தபொழுது அவர் எப்பொழுதும் எதையோ ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டே இருப்பார். அவர் அப்படி இருக்கக்கூடாது என்று பெற்றோர்கள் பலமுறை சொல்லியும் அவர் அதைக் கேட்கவில்லை. பெற்றோர்கள் அவர் மீது கோபம் அடைந்து "செத்துத் தொலை!" என்று திட்டினார்கள். அது அவருக்கு உபதேசமாக அமைந்தது. உடல் வாழ்வில் அவர் தம்மைச் செத்தவராக வைத்துக்கொண்டு

உடல் மூலம் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தாம் சாட்சி மயமாக இருந்து பார்த்தார். அந்த மனோபாவனையை உறுதிப் படுத்துவதற்குத் திருவண்ணாமலை சென்று தவத்தில் பலகாலம் ஈடுபட்டார். உடல் வாழ்வில் தம்மைச் செத்தவராக வைத்துக் கொண்ட அன்றே அவருக்கு ஞான வாழ்வு தொடங்கிவிட்டது. அந்த மனோபாவனையைத் தவத்தின் மூலம் உறுதிப்படுத்தி னார். "செத்தாரைப் போல் திரிநெஞ்சே" என்பது மனதிற்குச் செய்கின்ற உபதேசம். செத்துப் போனவர் தம் உடலுக்கு வருகின்ற இன்பத்தையோ துன்பத்தையோ பொருள்படுத்து வதில்லை. செத்துப் போனவரைப் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் அவர் அவற்றைப் பொருள்படுத்துவதில்லை. உடல் வாழ்வு நிகழும்பொழுதே மனம் அத்தகைய நிலையில் இருக்க அதைப் பண்படுத்தவேண்டும். ஆக, மரணத்தைக் குறித்த தியானம் ஞானவாழ்வில் முன்னேற்றம் அடையத் துணைபுரிகிறது.

கேள்வி: *(167)* தீட்சை பெறுதல் என்றால் என்ன? இது அவசியம்தானா? இதன் உட்கருத்து என்ன?

பதில்: ஒவ்வொரு துறையிலும் நிபுணர்கள் இருக்கின்றனர். ஒரு துறையில் இறங்கிச் செயல்புரிய விரும்புகிற ஒருவன் அத்துறையில் உள்ள நிபுணனை அணுகுகிறான். அந்நிபுணனும் நாடிய கர்மத்தில் அவனுக்கு வழிகாட்டித் தருகிறான். அப்படி வழிகாட்டித் தருவது தீட்சை எனப்படுகிறது.

இனி, தீட்சை எனும் சொல் அலாதியாகச் சமய அனுஷ் டானத்துக்கென்றே அமைந்துள்ளது. அந்தந்தச் சமயத்தில் ஆழ்ந்து செல்லும் ஆச்சாரியர்களும், குருமார்களும் இருக்கின் றனர். அன்னவர்களை அணுகும் சாதகனுக்குக் கடவுள் வழிபாடு சம்பந்தமான முறைகளை அப்பெருமக்கள் காட்டித் தருகின் றனர். அங்ஙனம் ஆத்ம சாதனத்தில் பிரவேசிப்பதற்கான முறைகளைக் காட்டித் தருகின்றவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களுள் சுயநலம் கருதாது பரநலத்திலேயே கண்ணும் கருத்துமாயிருப்பவர்களை அணுகித் தீட்சை பெறுதலில் பயன் உண்டு.

ஆனால் மற்ற, துறைகள் போன்று சமயத்துறையிலும் ஆஷாட பூதிகள் இருக்கின்றனர். அவர்களை அணுகுதல்

பொருந்தாது. ஆகையினால்தான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் எந்தக் குருவையும் நாடாது அன்னையின் அருளையே நாடியிருந்தார். அம்முறைதான் இக்காலத்திற்குச் சாலச்சிறந்தது.

கேள்வி: *(168)* குருவிடமிருந்து தீட்சை பெற்றுக் கொண்டாலொழிய ஆத்ம சாதகனொருவன் சாதனத்தில் முன்னேற்றம் அடைவதில்லை என்னும் ஐதிகம் ஒன்று உள்ளது. அது உண்மைதானா?

பதில்: குரு சிஷ்ய இணக்கம் சிஷ்யனுக்குப் பெரு நன்மை உண்டுபண்ணுகிறது என்பது உண்மை. பக்தி சாஸ்திரத்தில் ஒருபகுதி தக்க குருவிடமிருந்து மந்திர தீட்சை பெறுவதை மிகவும் சிலாகித்துக் கூறுகிறது. ஆனால் உலகிலுள்ள மக்கள் எல்லார்க்கும் அருள் குரு ஒருவருடைய அனுக்கிரகம் வாய்ப்ப தில்லை. அதனால் அவர்கள் சாதனத்தில் முன்னேற்றம் அடையமாட்டார்கள் என்னும் நம்பிக்கை ஆதரவற்றது.

கிறிஸ்தவ மதத்தில் கோட்பாடு ஒன்று இருக்கிறது. கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கிறிஸ்துநாதரை இரட்சகர் என்று நம்பாதவர்களெல்லாம் செத்த பிறகு நரகத்தில் இடர்ப்படு வார்கள் என்பது அம்மதக் கோட்பாடுகளுள் ஒன்றாகும். தத்துவத்துக்கோ, யுக்திக்கோ அக்கோட்பாடு ஒவ்வாது. அதே விதத்தில் குரு ஒருவரிடமிருந்து சிஷ்யன் ஒருவன் தீட்சை பெறாவிட்டால் அவன் சாதனத்தில் முன்னேற்றமடைவதில்லை என்னும் கொள்கையும் ஆதரவற்றது.

நல்ல கிருஷிகன் ஒருவன் ஒரு பூமியைப் பார்த்தால் அதில் இன்ன தானியம் நன்கு வளரும் எனக் கண்டு கொள்ளுகிறான். அதே விதத்தில் குருஸ்தானத்துக்குத் தகுதி உடைய மூர்த்தி ஒருவர் தீட்சை பெறவிருக்கும் சாதகனுடைய மன அமைப்பைப் பற்றி முதலில் தியானம் பண்ணுகிறார். அந்தத் தியானாவஸ்தையில் சாதகனுடைய மன அமைப்பு எத்தகையதென்பதை அறிய வருகிறார். அவனுக்கேற்ற மந்திரத்தை அவர் உபதேசம் செய்கிறார். இதுவே பொருத்தமான தீட்சை ஆகிறது. ஆனால் இத்தகைய அருள்வல்லமை வாய்த்துள்ள குருமார்கள் கிடைப்பது அரிதினும் அரிது. சமயக் குருமார்கள் அவரவர் சமயத்துக்குரிய மந்திரத்தையே

தம்மிடம் வரும் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கிறார்கள். பிரசார குருமார்கள் சாதகர்களைச் சன்மார்க்கத்தில் செலுத்தும் நோக்க முடையவர்களாய் இருக்கிறார்கள். அன்னவர்களிடம் தீட்சை பெறுவதில் தோஷமில்லை. இனி வருமானத்துக்காகவோ, கீர்த்திக்காகவோ முன்வருகிற போலிக் குருமார்களைக் குறித்துத் தான் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

ஆத்ம சாதகன் ஒருவன் பொதுவாகக் குருவை நாடிச் செல்லலாகாது. இறைவனுடைய அருளையே அவன் நாடியிருக்கவேண்டும். யார் யாருக்குக் குரு? ஈசுவரன் ஒருவரே ஆத்மசாதகர் அனைவருக்கும் குரு ஆகிறார் எனப் பரமஹம்ச தேவர் பகர்ந்துள்ளார். இக்கோட்பாட்டுக்கு ஒப்ப ஆத்ம சாதகன் தெய்வத்தின் மீது விசுவாசம் வைத்து ஆழ்ந்து சாதனத்தில் ஈடுபடலாம். குரு ஒருவரின் துணையில்லாமலேயே பலர் பரத்தினை அடைந்துள்ளனர்.

கேள்வி: *(169)* சித்த சுத்தியை எப்படி உண்டு பண்ணுவது?

பதில்: சித்தசுத்தி என்றால் என்ன என்பதை முதலில் நாம் அறிந்துகொள்ளவேண்டும். மனதைத் தூயதாக்குவதே சித்த சுத்தியின் பொருள். சித்தம், மனம், உள்ளம், அந்தக்கரணம் ஆகப் பல பெயர்கள் ஒரு தத்துவத்துக்கு அமைந்திருக்கின்றன. மனம் என்னும் தத்துவத்தைத் துணையாகக்கொண்டு மனிதன் புறவுலகோடு தொடர்புகொள்கிறான். தூங்கும்பொழுது மனம் வேலை செய்வதில்லை. அப்பொழுது புறவுலகத் தொடர்பும் நின்றுவிடுகிறது.

மனம் கண்ணாடிக்கு நிகர். பச்சைக் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்த்தால் புறத்திலிருப்பவைகளெல்லாம் பச்சை நிறமுடையவைகளாகத் தென்படுகின்றன. சிவப்புக்கண்ணாடி போட்டுப் பார்த்தால் புறத்தில் இருப்பவைகளெல்லாம் சிவப் பாகத் தென்படுகின்றன. மேடுபள்ளமுள்ள கண்ணாடியைப் போட்டுப் பார்த்தால் புறத்திலிருப்பவைகளெல்லாம் கோண லாகத் தென்படுகின்றன. ஒப்பமான சுத்த கண்ணாடியைப் போட்டுப் பார்த்தால் புறத்திலிருப்பவைகள் உள்ளபடி தென்படு கின்றன. ஒப்பமான சுத்த கண்ணாடிக்கு நிகர் சித்த சுத்தி.

மக்களெல்லாரும் தூயமனம் படைத்தவர்களல்லர். அதாவது அவர்களிடத்து இன்னும் சித்தசுத்தி அமையவில்லை. மனதிலுள்ள குறைபாட்டுக்கேற்பப் புறவுலகிலும் குறைபாடு தென்படுகிறது. பின்பு மனம் திருந்தியமைவதற்கேற்பப் புறவுல கிலுள்ள குறைபாடுகளும் மறைந்துபட்டுப் போகின்றன.

சிறு குழந்தைகள் தூய மனம் படைத்தவைகள். ஆகை யினால் சிறு குழந்தைகளுக்குப் புறவுலகில் கேடு ஒன்றும் தென்படுவதில்லை. வயது வரவரக் குழந்தைகளுடைய மனதும் சூழ்நிலைக்கேற்பக் கேடடைகிறது. ஞானியர்கள் மனம் சுத்த மானது. ஆதலால் ஞானியர்கள் உலகெங்கும் நலனையே காண் கின்றனர். அதற்கு மேலும் அவர்கள் முன்னேற்றம் அடை கின்றனர். மனதற்ற நிலையில் அவர்கள் யாண்டும் தெய்வக் காட்சியையே காண்கின்றனர்.

இனி, மனதைத் தூயதாக்குவது எங்ஙனம் என்பது கேள்வி? பொருந்தாத ஆசையின் மூலம் மனது மலினமடை கிறது. சினத்தின் மூலம் மனது சீர்கேடு அடைகிறது. உலோபத்தின் மூலம் மனது பாழ்படுகிறது. இம்மூன்றையும் தவிர்ப்பதற்கேற்ப மனம் திருந்தியமைகிறது.

மனிதன் கொள்ளுகிற ஆசை கெட்டதாயிருந்தால் அவன் அதைப் பிறரிடம் சொல்லமாட்டான். ஆசை நல்லதாயிருந்தால் அதை அவன் எல்லாரிடமும் தெரிவிப்பான். கெட்ட ஆசையோ தன்னையும் கெடுக்கிறது; பிறரையும் கெடுக்கிறது. நல்ல ஆசையோ தன்னையும் எடுக்கிறது; பிறரையும் எடுக்கிறது. ஆசையை வளர்த்து வருகிற மனது பாராட்டத்தக்க நல்ல ஆசைகளையே வளர்க்கவேண்டும். நல்ல ஆசைகள் மேலோங்கு வதற்கேற்பச் சித்தசுத்தி உண்டாகிறது.

ஆசையையொட்டிச் சித்தத்தில் குரோதம் அல்லது கோபம் உண்டாகிறது. சினம், கோபம், குரோதம், வெறுப்பு ஆகியவை கள் மனக்கொதிப்பு என்னும் ஒரே கோட்பாட்டை விளக்கு கின்றன. ஒருவனுடைய ஆசைக்குத் தடையேற்பட்டால் அவனுக்கு மனக்கொதிப்பு உண்டாகிறது. அது சினம் என்னும் பெயர் பெறுகிறது. சினம் பொல்லாதது. மனிதனுடைய சொரூ பத்தை அது விஷமாக மாற்றுகிறது. கோபம் கொதித்து எழுமிடத்து நல்லறிவு அழிந்துபட்டுப் போகிறது. பொருந்தாத

செயலில் முன்கோபி ஒருவன் ஈடுபடுகிறான். 'ஆறுவது சினம்' என்பது கோட்பாடு. கோபத்தை வெல்லுவதற்கேற்பச் சித்தசுத்தி உண்டாகிறது.

உலோபம் என்பது தான் பெற்றுள்ள பொருளைத் தனக் கென்றே வைத்துக்கொள்ளுதலாம். பிறர்க்குப் பகுத்துக்கொடுக்க உலோபி இணங்குவதில்லை. பிறரிடமிருந்து அபகரிக்கிறான்; அல்லது ஏற்கிறான். ஆனால் பிறருக்குத்தான் வழங்குவதில்லை. அதனால் மனது மாசுபட்டதாகிறது. மாசுபடைத்த மனது பண்புகளனைத்தையும் இழக்கிறது. உலோபத்திற்கு மாறாக நல்ல பொருள்களைப் பிறர்க்கெடுத்து வழங்குமளவு மனத் தெளிவும் குதூகலமும் உண்டாகின்றன. மனத்தெளிவே சித்தசுத்தியாம்.

கேள்வி: *(170)* பழைய சம்ஸ்காரங்களை வெல்லுவது எப்படி? பதஞ்சலியின் யோக சூத்திரத்தில் சூக்ஷ்ம சம்ஸ் காரங்களை அவைகளின் காரிய நிலைக்குக் கொண்டுபோய் வெல்லுதல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் உட்பொருள் விளங்கவில்லை.

பதில்: மனதில் பதிந்துள்ள வெவ்வேறு எண்ணங்களும் உணர்வுகளும் கருத்துக்களும் சம்ஸ்காரங்கள் என்று சொல்லப் படுகின்றன. யுவன் ஒருவன் தன்னைத் தனியாள் என எண்ணி வருகிறான். அது ஒருவித சம்ஸ்காரம். விவாகம் நடந்த நாள்முதல் தன்னை இல்லாளுடன் கூடியவனாக எண்ணிக்கொள்கிறான். இது மற்றொருவித சம்ஸ்காரம். இங்ஙனம் சம்ஸ்காரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தமைந்து ஒரு மனிதனுக்குரிய வியக்தியைக் கொடுக்கின்றன. நான் இன்ன நாட்டைச் சார்ந்தவன், இன்ன ஊரைச் சேர்ந்தவன், இன்ன இனத்தைச் சேர்ந்தவன், இன்னாரையெல்லாம் உற்றாராகக் கொண்டிருப்பவன், இத்தகைய சமுதாய அந்தஸ்து வாய்க்கப் பெற்றவன்-இப்படியெல்லாம் எண்ணிக்கொள்வது பலதரப்பட்ட சம்ஸ்காரங்கள் ஆகின்றன. ஆத்ம பரிபாகம் அடைய விரும்பு கிறவனுக்கு இந்தச் சம்ஸ்காரங்கள் இடைஞ்சல்களாக வந்து நிற்கின்றன. பொதுவாகக் கீழான சம்ஸ்காரங்களை மேலான சம்ஸ்காரங்களைக் கொண்டு அகற்றவேண்டும். தீமைகள் பல

செய்து மனம் கெட்டிருக்கின்ற ஒருவன் ஒரு புண்ணிய ஸ்தலத்திற்குச் சென்று இனி நல்வாழ்வு வாழ்வேன்; நலத்தையே செய்வேன் என்று தெய்வ சந்நிதியில் ஆழ்ந்து சங்கல்பித்துக் கொள்ளுவானாகில் முன்பிருந்த ஒருவித சம்ஸ்காரங்களைப் பின்பு வந்துள்ள மற்றொருவித சம்ஸ்காரங்களைக் கொண்டு அவன் அகற்றுகிறான். சாதனத்தின் குறிக்கோள் சம்ஸ்காரங்கள் அனைத்தையும் அகற்றுவதாம். சம்ஸ்காரங்களெல்லாம் நீங்கிப் போன பிறகு மனதில் தேக்கமும் தெளிவும் உண்டாகிறது. அப்படித் தெளிவடைந்த மனதே ஆத்ம சொரூபத்தைக் கிரகித்துக்கொள்ளத் தகுதியுடையதாகிறது.

சமஸ்காரங்களைப் பொதுவாக ஸ்தூலம், சூக்ஷமம் என இரண்டு நிலைகளில் பிரித்து வைக்கலாம். நான் இன்ன ஊரைச் சேர்ந்தவன், இன்ன இனத்தைச் சேர்ந்தவன் என்று எண்ணுவதெல்லாம் ஸ்தூல சம்ஸ்காரங்களாகின்றன. விசாரித்துப் பார்த்து அத்தகைய எண்ணங்களும் உணர்வுகளும் பொருளற்றவைகள் எனத் தேர்ந்து அவைகளை ஒதுக்கித் தள்ளுதல் வேண்டும். மனிதனுக்கு ஊரும் பேரும் இனமும் பிறவிதோறும் மாறி மாறி அமைவதால் அவைகளில் கட்டுண்டிருக்கலாகாது என்று உணர்ந்து அவைகளை ஒதுக்குதல் எளிதாகிறது. இனி, உள்ளத்தினுள் புதைந்து கிடக்கின்ற சூக்ஷம சம்ஸ்காரங்களைக் கண்டுபிடிப்பது மிகக் கடினம். மனதில் வந்து புதைந்து கிடக்கின்ற வெவ்வேறு விதமான விருப்பு வெறுப்புக்கள் சூக்ஷம சம்ஸ்காரங்கள் ஆகின்றன. காரணம் ஏதுமின்றி ஏன் சிலவற்றையும் சிலரையும் வெறுக்க வேண்டும் என்று கேட்டால் அதற்குத் தக்க விடை சொல்ல முடிவதில்லை. எதையெல்லாம் யாரையெல்லாம் சாதகன் ஒருவன் வெறுக்கின்றானோ அவன் விசாரித்துப் பார்க்க வேண்டிய உண்மை ஒன்று உளது. தன்னால் வெறுக்கப்படுபவைகளும் வெறுக்கப்படுவர்களும் உண்மையில் பரமாத்மாவிடத்திருந்து தோன்றி வந்தவைகளும், தோன்றி வந்தவர்களும் ஆகின்றனர். அன்னவர்களை வெறுப்பது பரமாத்மாவை வெறுப்பதற்கு நிகர் ஆகின்றது. வெறுப்புக்குரியவர்களுடைய காரண நிலையைக் காணுமிடத்து வெறுப்பு என்னும் சம்ஸ்காரம் ஒழிந்துபட்டுப் போகவேண்டும். வெறுக்கப்படுபவர்களுடைய

யதார்த்த நிலையே அவர்களின் காரணநிலை ஆகின்றது. இத்தனைவித பேதங்களோடு கூடிவந்திருப்பவர்களெல்லாம் பரமாத்மாவின் பலப்பல விகாரங்கள் ஆகின்றனர். பரமாத்மன் அவர்களின் காரண நிலை ஆகின்றான். அதை உள்ளத்தில் உறுதிப்படுத்திக்கொண்டால் வெறுப்பின் வேகம் தணியும். இறுதியில் வெறுப்பு அகன்றுபோம்.

மனிதன் ஒருவன் பகலில் தன்னந்தனியனாக ஓர் அறைக்குள் துணிந்து போய் ஏதேதோ காரியங்களைப் பார்த்து வருகின்றான். அதே மனிதன் இரவில் இருள் சூழ்ந்து கிடக்கும் அவ்வறைக்குள் தனியனாய்ப் போகத் தயங்குகிறான். பகர முடியாத ஒருவித அச்சம் அவனுடைய உள்ளத்தில் உதய மாகிறது. அத்தகைய அச்சம் ஒருவிதமான சூக்ஷ்ம சம்ஸ்கார மாம். அத்தகைய சூக்ஷ்ம சம்ஸ்காரத்தின் காரண நிலையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படி ஆராய்ந்து பார்க்கு மிடத்து, பகலில் இருப்பதுதான் இரவிலும் இருக்கிறது; பகலில் இல்லாதது புதியதாக இரவில் தோன்றிவர முடியாது. அப்படித் தோன்றி வருவது எதையும் இயற்கையில் நாம் காண்பதில்லை. உண்மையில் இரவில் தோன்றிவருவது நமது உள்ளத்தினுள் புதைந்து கிடக்கின்ற அச்சம் என்னும் ஒருவித சம்ஸ்காரமாம். இந்த அச்சம் அக்ஞானத்தினின்று வருவது. அதற்கு ஆதாரம் ஏதுமில்லை. ஆதலால் பொருளற்ற அச்சத்தைப் போக்க வேண்டும் என்னும் எண்ணம் எண்ணுங்கால் அது விவேகத் தோடு கூடிய புதிய சம்ஸ்காரமாகிறது. இப்புதிய சம்ஸ்காரம் பொருளற்றதும் மனிதனைப் புல்லியவனாக ஆக்கக் கூடியது மாகிய பழைய சம்ஸ்காரத்தை அகற்றுகிறது. இங்ஙனம் ஒவ்வொரு சம்ஸ்காரத்தையும் துருவி ஆராய்ந்துபார்த்து அதன் காரண நிலைக்கு அதை எடுத்துச் செல்லுவோமாகில் தானாக அது அகன்று போகிறது. உள்ளத்தினுள் புகுந்துள்ள எல்லாவிதமான சம்ஸ்காரங்களையும் இங்ஙனம் காரண நிலைக்கு எடுத்துச் சென்று அவைகளை ஓட்டுவது ஆத்ம சாதனமாகும். மனதினின்று எல்லாவித சம்ஸ்காரங்களும் அகலுமிடத்து அம்மனதினுள் சாந்தமும் தெளிவும் இனிமையும் இயல்பாய் அமைந்திருப்பது சாதகனுக்கு விளங்கும். இத்தகைய மேலாம் நிலையை எய்தற் பொருட்டுச் சம்ஸ்காரங்களைக் காரண

நிலைக்குக் கொண்டுபோய் அகற்றுவது முற்றிலும் அவசியமாம்.

காரணம் காரியம் ஆகிய இரண்டையும் சரியாக ஆராய்ந்து பார்க்குமிடத்துக் காரணமும் காரியமும் ஒன்றே என்பது விளங்கும். தங்க நகை காரியம்; தங்கம் காரணம். நகைக்கு முதன்மை தரும்பொழுது காரியத்தை முன்னணியில் வைக்கிறோம். தங்கத்துக்கு முதன்மை தரும்பொழுது காரணத்தை முன்னணியில் வைக்கிறோம். சம்ஸ்காரங்கள் என்னும் காரியங்களெல்லாம் சித்த விருத்தி என்னும் காரணத்திலிருந்து வந்தவைகள். விருத்திகளை விலக்குதல் வேண்டும். அம்முயற்சியில் காரியம் காரணம் ஆகிய இரண்டும் ஒன்றுபட்டு விடுகின்றன. மனதை விகாரமற்றதாக்குதல் யோகத்தின் நோக்கம். விகாரம் என்னும் காரியம் வேண்டப்படாதது. "வேண்டா விருப்பும் வெறுப்பும், இந்த வில்லங்கத்தாலே விளையும் ஜனனம்" என்பது ஆப்த வாக்கியம். விருப்பு என்னும் காரியத்தை வெறுப்பு என்னும் காரியத்தில் சேர்த்தால் இரண்டும் அடிபட்டுப் போகின்றன. வாழ்வில் விருப்பு, மரணத்தில் வெறுப்பு - இந்த இரண்டு சம்ஸ்காரங்களையும் காரிய நிலைகளாகிய வாழ்வு, மரணம் என்பனவற்றுள் போடு. அதாவது மரணம் என்னும் விகாரங்களைச் சமனாகக் கருது. அப்பொழுது இரண்டும் அடிபட்டுப் போகின்றன. தூய மனது எஞ்சியிருக்கிறது.

கேள்வி: *(171)* மக்களுடைய உள்ளத்தை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிற அகங்காரத்தை அகற்றுவது எப்படி?

பதில்: அகங்காரம் அரச மரத்தோடு ஒப்பிடப்படுகிறது. அரச மரத்தை எவ்வளவுதான் வெட்டினாலும் மீண்டும் மீண்டும் அது தளிர்த்துக் கொண்டே இருக்கும். அதே விதத்தில் அகங்காரத்தை அகற்ற முயன்றால் அது அகற்றப்பெற்றது போன்று தென்படுகிறது. ஆயினும் அது திரும்பத் திரும்பத் தலையெடுத்துக்கொண்டே இருக்கிறது. அத்தகைய அகங்காரம் என்பது யாது என்பதை ஆத்மசாதகன் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். ஜீவாத்ம அமைப்பில் புருஷ தத்துவமும், பிரகிருதி தத்துவமும் சேர்ந்து இருக்கின்றன. புருஷ தத்துவம்

பிரகிருதி தத்துவத்தைத் தன்மயமாய் ஏற்றுக்கொள்வது அகங்காரம். புருஷன் வேறு, பிரகிருதி வேறு என்று பாகுபடுத்தி புருஷ தத்துவத்திலேயே யாண்டும் உறுதியாக நிலைத்திருப் பவர்கள் நிறைஞானிகள். அன்னவர்களை . அகங்காரம் தீண்டமாட்டாது. அகங்காரத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக் கிறவர்கள் எல்லாரும் ஜீவாத்மாக்களேயாம். அகங்காரத்தை அறவே வெட்டித் தகர்த்தவர்களே நிறைஞானிகள் ஆகிறார்கள்.

அகங்காரத்தை வெல்லுதற்கு இடையறாத விசாரமும் இறைவனுடைய அருளும் சேர்ந்திருப்பது அவசியம். கட்டுதற்குக் கயிறு உதவுகிறது. ஆனால் வெந்துபோன கயிறு சாம்பல் வடிவெடுத்துக் கயிறுபோன்று தென்படுகிறது. அது கட்டுவதற்கு உதவாது. பரஞானம் ஒன்றே அகங்காரத்தை அகற்றுதற்கு உற்ற உபாயம். பரஞானம் பரம்பொருளின் அருளால் வாய்க்கும் பரியந்தம் ஆத்மசாதகன் அகங்காரத்தைச் சர்வேசுவரனோடு இணைத்து வைத்துப் பயன்படுத்துதலில் கேடு இல்லை. தான் அல்லாத உடலைத் தான் என்று உணர்வது அகங்காரம். அந்த உடலையொட்டி ஜாதி, மதம், மொழி, நாடு ஆகிய உபாதிகளெல்லாம் தொடர்ந்து வருகின்றன. இவை யாவையும் தனக்கு உரியவைகளாக அபிமானிக்காது பரநாட்டத்துக்கென்றே பயன்படுத்தி வந்தால் இந்த அகங்காரம் மனிதனைக் கட்டுப்படுத்தாது. பிறகு பரஞானத்தில் அது அறவே அழிந்துபட்டுப் போகிறது. அதுவரையில் அகங்கா ரத்தை ஈசனுடைய வழிபாட்டுக்கென்றே பயன்படுத்தி வர வேண்டும். அப்படிச் செய்கிற ஆத்மசாதகன் அகங்காரத்தின் ஆதிக்கத்தினின்று தன்னை விடுவித்துக் கொள்கிறான்.

கேள்வி: *(172)* குண்டலினி சக்தியை எழுப்புவதற்குப் பல புதிய முறைகள் இப்போது பரவிவருகின்றன. அவை ஆத்ம சாதனத்துக்கு அவசியமா?

பதில்: "காளை மாட்டில் பால் கறக்கிறேன்" என்று ஒருவன் கூறினால் அந்த அதிசயத்தைப் பார்ப்பதற்கு அவனிடம் ஒரு கூட்டம் செல்லும். காளை மாடு பால் கறக்குமா? என்று சிந்திக்கமாட்டார்கள். அதுபோன்று "குண்டலினி சக்தியை ஒருவர் எழுப்பித் தருகிறேன்" என்று சொன்னால் அவரிடம்

பெரும் கூட்டம் செல்கிறது. குண்டலினி சக்தி என்பது என்ன? அதை எப்படித் திடீர் என்று எழுப்புவது? என்பதைப் பற்றி யாரும் சிந்தனை செய்வதில்லை.

தெள்ளி எடுக்கப்பட்ட இரத்தத்தின் சில நூற்றுக்கணக் கான துளிகள் சேர்ந்து ஒரு துளி விந்து ஆகின்றது என்று கூறப்படுகிறது. அந்த விந்து வெளியாகாது காக்கப்படு வதைத்தான் புலனடக்கம் என்று சொல்கிறோம். புலனடக் கத்தின் மூலம் விந்து வெளியேறாது காப்பாற்றி மனதைத் தெய்வத்தின்பால் திருப்பும்பொழுது அது ஆத்ம சக்தியாக மாறுகிறது. அந்த ஆத்ம சக்தியை யோகநூல் குண்டலினி சக்தி என்கிறது. அது மூலாதாரத்தில் உறங்கிக் கொண் டிருக்கிறது. பிரம்மச்சரியத்தின் மூலமாகவும், ஈசுவர சிந்தனையின் மூலமாகவும், யோக வாழ்வின் மூலமாகவும் அந்தச் சக்தி மூலாதாரத்தினின்று எழுந்து சஹஸ்ராரத்துக்குச் செல்கிறது. குண்டலினி சக்தி எழும்ப வேண்டும் என்றால் விஷய சுகங் களிலுள்ள பற்று ஒழியவேண்டும். இந்திரியங்களும், மனமும் காம நுகர்ச்சிகொண்டு அலையக்கூடாது. மனிதன் காமநுகர்ச் சிக்கு வசப்படும்போதெல்லாம் அதன் ஆதிக்கம் வலுக்கிறது; காமத்தை வெல்லுகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதன் ஆவேசம் குறைகிறது; மனிதனது ஆத்மசக்தி அதிகரிக்கிறது. ஆதலால் காமம் தலையெடுக்கும்பொழுதே அதைக் களைந் தெறியவேண்டும். காமத்தைக் களைவதற்கு மனதை உடலழகில் களிப்புறச் செய்யலாகாது. உடலின் ஆசாபாசங்களை உணர்ந் தால் அதன்மீது வாஞ்சை வராது. தத்துவ விசாரணை செய்தல், சதா ஸத்கர்மத்தில் ஈடுபடுதல், கசிந்துருகிப் பிரார்த்தனை செய்தல், நல்லார் இணக்கம் கொள்ளுதல், ஆண்பாலர் பெண் பாலர்களைப் பராசக்தி வடிவமாகவும், பெண்பாலர் ஆண்பாலர் களைச் சிவம் அல்லது நாராயண வடிவமாகவும் கருதுதல் முதலிய சாதனைகளால் மனதை எப்பொழுதும் உயர்நிலையில் வைத்திருக்கவேண்டும். இந்த விதிகளை நிறைவேற்றும் பொழுது தான் குண்டலினி சக்தி வேலை செய்யும். நல்வாழ்வில்லாது மேற்கூறிய விதிகளை நிறைவேற்றாது முரட்டுத்தனமாகக் குருக்கு வழிகளில் குண்டலினி சக்தியை எழுப்பினால் "வெண்கலக் கடையில் யானை புகுந்தது போன்று' அது மனதையும்

உடலையும் சின்னாபின்னப்படுத்திவிடும்.

ஆன்ம சக்தியை எழுப்புவதற்காக ரிஷிகள் பல ஆண்டுகள் தவம் புரிந்தனர். அப்படி அவர்கள் மேற்கொண்ட தவத்தில் பலமுறை வழுவியும் இருக்கிறார்கள். நீண்ட காலம் விழுந்து விழுந்து தவத்தை மேற்கொண்டு இறுதியில் வெற்றி அடைந் திருக்கிறார்கள். நல்ல சூழ்நிலையில் நல்லவர்களாக இருந்து குண்டலினி சக்தியை எழுப்புவதற்கு அரும்பாடு பட்டார்களென் றால் பிரதிகூலமான சூழ்நிலையில் போகவாழ்வு வாழ்ந்து கொண்டு ஒரு நாளில் குண்டலினி சக்தியை எழுப்புவது சாத்தியமாகுமா? அல்லது பொருந்துமா? என்பதை நாமே சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கேள்வி: *(173)* சித்தத்தைப் பகவான் பேரில் நிலைக்கச் செய்யும் முயற்சியின் ஆரம்பம் எப்படி? அதற்குப் பூஜை, பஜனை முதலியவற்றினால் உபயோகம் உண்டா? மௌனம் அனுஷ்டிப்பது அதற்கு ஒரு ஊன்றுகோலாகுமா?

பதில்: மனது எதை நல்லதென்று கருதுகின்றதோ அதனி டத்துச் சுலபத்தில் நாடிச்செல்லுகிறது. இன்னும் எதை இன்பம் தரக்கூடியதென்று மனது நினைக்கிறதோ அதனிடத்தும் மனது எளிதில் செல்லுகிறது. எல்லா நலனும் எல்லா இன்பமும் பகவானிடத்து இருக்கின்றன என்பது எல்லார்க்கும் தெரியாது. உலகப் பொருள்களில் நலனும் இன்பமும் இருக்கின்றன என்று பெரும்பாலோர் நினைக்கிறார்கள். முறையாக விசாரித்துப் பார்த்தால் உலகப் பொருள்களில் உள்ள நலனும் இன்பமும் நிலையற்றவைகள் என்பது விளங்கும். இப்படித் திரும்பத் திரும்ப விசாரம் செய்துபார்த்தால் கடவுளை நாடியிருப்பதுதான் மிக மேலானது என்பது தெளிவாகும். அப்பொழுது மனது சுலபத்தில் கடவுள்பால் செல்லவல்லதாகும். ஆகவே அடிக்கடி விசாரித்துப் பார்ப்பதும், பூஜை, பஜனை முதலியவைகளை முறையாகச் செய்துவருவதும் மனதைப் பண்படுத்துவதற்கு உபாயங்களாகின்றன. வாய்விட்டுப் பேசாதிருந்துகொண்டு சைகையினாலும் எழுதியும் வியாகரிப்பது மௌனமாகாது. மனதை உள்முகமாகத் திருப்பித் தெய்வச் சிந்தனையில் ஈடுபட்டிருப்பது மௌனத்தின் முதற்படியாகும். பின்பு மனதற்ற

நிலைக்குப் போவதே நிறை மௌனமாகும். இங்ஙனம் மௌனத்தில் இருந்து பழகுதலும் ஒரு நல்ல ஆத்ம சாதனமாகும். ஆன்றோர்கள் இயற்றியுள்ள மேலாம் நூல்களைப் பக்தி விசுவாசத்துடன் வாசிப்பதும், வாசித்த விஷயங்களைச் சிந்தித்துப் பார்ப்பதும் ஆத்ம சாதனத்தின் ஒரு பகுதியாகும். கற்கண்டு அருந்திப் பழகிக்கொண்டவனுக்குப் பிறகு வெல்லத்தில் விருப்பம் வருவதில்லை. அதே பாங்கில் இறைவனிடத்து எல்லா மேன்மைகளும் இருக்கின்றன என்பதை அறிந்து கொண்ட மனது உலக விஷயங்களுக்குத் திரும்புவதில்லை. யாண்டும் மனதை கடவுளிடத்தே திருப்பிப் பழகுவது நம்முடைய கடமையாகும்.

கேள்வி: *(174)* நம் மனதில் தீய எண்ணங்கள் எழும்போது அவற்றிடம் எப்படி உதாசீனமாக இருப்பது? விவேகத்தால் விசாரம் செய்து நீக்கமுடியுமா? 'யோக: சித்தவிருத்தி நிரோத:' என்பது இதுதானா?

பதில்: ஒரு மனிதனோடு நாம் உறவாடுகிறோம். பிறகு அவனுடைய போக்கு நமக்குப் பிடிக்காவிட்டால் அவன் நம்மிடம் வரும்பொழுது உதாசீனமாய் இருப்பது கண்ணியமான முறை. "என்னிடம் வரவேண்டாம் போ" என்று பகர்வது இரண்டாம் தரமான முறை. தீமையைக் களையும் விஷயத்திலும் தலைத்தரமான முறையைக் கையாளுவது உசிதம். பொருந்திய எண்ணங்கள் ஆழ்ந்து உள்ளத்தில் இடம் பெற்றிருக்கிறபொழுது பொருந்தாத எண்ணங்கள் தலையெடுக்கமாட்டா. ஒருவேளை இடையிடையே அவைகள் தோன்றினால் அவைகளிடத்து உதாசீனமாய் இருப்பதே சாலச்சிறந்த உபாயமாம். இத்தகைய பொருந்தாத எண்ணங்கள் தோன்றிவிட்டனவே என்று வியாகுலப்படுகின்றபொழுது அந்த எண்ணங்களினுடைய உள் வலிவை நாம் மேலும் வளர்க்கிறோம். பொருந்தாத சித்தவிருத்திகளிடத்து உதாசீனமாய் இருப்பது அவற்றை விரட்டியோட்டுதற்குச் சாலச்சிறந்த உபாயமாம். "யோக: சித்தவிருத்தி நிரோத:' என்னும் கோட்பாட்டில் இது இடம்பெறுகிறது.

கேள்வி: *(175)* புலனடக்கம், பிரம்மச்சரியம் கடைப் பிடிக்காது ஆத்மஞானம் சித்திக்குமா? சிற்றின்ப போகத்தை

அனுபவித்துக் கொண்டு ஆத்மஞானமும் பெற்றுவிடலாம் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ளலாமா?

பதில்: எழுத்துக்களை அறிந்து கொள்ளாது இலக்கியம் படிக்கமுடியாது. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய கணக்கின் அடிப்படையை அறிந்து கொள்ளாது உயர்கணிதம் கற்றுக்கொள்ள முடியாது. அங்ஙனம் புலனடக்கம், பிரம்மச்சரியம் கடைப்பிடிக்காது ஆத்ம ஞானம் அடைய முடியாது.

காமத்துக்கு வசப்படுவது எல்லா உயிர்களுக்கும் பொது. காம உணர்ச்சியை வெல்லுகின்றவளவுதான் உடலும் உள்ளமும் புதுப்பிக்கப்படுகின்றன. ஸ்ரீராமகிருஷ்ணர் பகர்வதாவது: "பன்னிரண்டு ஆண்டுகள் பிரம்மச்சரியம் கடைப்பிடித்தால் மேதை நாடி என்பதொன்று ஏற்படுகிறது. அப்பொழுது அதன் உதவியால் நுண்ணிய விஷயங்களைக் கிரகிக்கும் சக்தியும், உயர்ந்த விஷயங்களிடத்து ஞாபக சக்தியும் உண்டாகின்றன."

ஒருவர் தம்மை வேதாந்தி என்று சொல்லிக்கொண்டு ஒழுக்கம் குன்றிய செயலில் ஈடுபட்டிருந்தார். அவருடைய ஒழுங்கீனமான நடவடிக்கையைப்பற்றிப் பரமஹம்சரிடம் ஒருவர் தெரிவித்திருந்தார். பரமஹம்சர் அவரைச் சந்தித்தபொழுது "நீங்கள் உங்களுடைய நடத்தையைத் திருத்தி அமைத்துக் கொள்வது நல்லதல்லவா?" என்று கேட்டார். அதற்கு அவர் கூறியதாவது: "இவ்வுலகம் பொய்; இவ்வுலகத்தில் நிகழ்கின்ற செயல்களும் பொய். அப்படியிருக்க என்னுடைய செயல்களும் பொய்தானே."

"சீ! நீங்களும் ஒரு வேதாந்திதானா? உங்களுடைய கொள்கையினிடத்தும், உங்களுடைய நடத்தையினிடத்தும், நான் காறி உமிழ்கின்றேன்" என்று கூறி அவரைக் கண்டித்தார்.

கட்டடத்துக்கு அஸ்திவாரம் எவ்வளவு முக்கியமோ ஆன்மிக வாழ்வுக்குப் பிரம்மச்சரியமும், புலனடக்கமும் அவ்வளவு முக்கியமானவை. பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்காது ஒருவன் மொழி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு முதலிய லௌகீகக் கல்வியைப் புகட்டலாம். ஆனால் பிரம்மச்சரியமும், புலனடக்கமும் பழகாத ஒருவனுக்கு ஆத்மஞானம் வாய்க்காது; அவன் ஆத்மஞானத்தைப் புகட்டவும் தகுதியற்றவன்.

சேறு கலங்கிய நீரில் தரை தென்படாது. அசைவற்றுத் தெளிந்துள்ள நீருக்குள்ளிருக்கும் தரையும் தென்படும், தரையின் மீதுள்ள சிறு பொருளும் தென்படும். கயிலையங்கிரிக்குப் பக்கத்தில் மானசரோவரம் என்ற நீர்த்தேக்கம் இருக்கின்றது. பனி உருகி வந்த நீர் அதில் தேங்கி நிற்கிறது. எனவே அந்த நீர் மிகத் தெளிவாக இருக்கிறது. அது மிக ஆழமான நீர்த்தேக்கமாகும். நீரில் அசைவு இல்லாதபொழுது அந்த நீருக்குள் பல மைல்கள் ஆழத்தில் இருக்கும் தரையும், அத் தரையின் மீதுள்ள சிறு பொருள்களும் தெளிவாகத் தெரியும். காமவாசனையோடு கூடிய மனதைச் சேறுகலந்த நீரோடு ஒப்பிடலாம். சேறுகலந்த நீர் குழம்பி இருப்பதுபோன்று காமவாசனையோடு கூடிய மனதும் குழம்பிக்கிடக்கிறது. அம்மனது ஆத்ம ஞானத்துக்குத் தடையாக இருக்கிறது. சிற்றின்ப போகத்துக்குக் காரணமாகவிருக்கும் காமவாசனையை மனதிலிருந்து அகற்றிவிட்டால் மானசரோவரம் போன்று மனது தெளிவுடையதாகிறது. தெளிந்த மனதுக்கு ஆத்ம சொரூபம் விளங்குகிறது. குருடன் ஒருவனுக்குப் புறவுலகக் காட்சி எங்ஙனம் தென்படுவது இல்லையோ அங்ஙனம் காமவாசனை உடைய அக்ஞான மனதுக்கு ஆன்மா தென்படுவதில்லை. முண்டகோபநிஷத் கூறுவதாவது:

सत्येन लभ्यस्तपसा ह्येष आत्मा सम्यग्ज्ञानेन ब्रह्मचर्येण नित्यम् ।
ஸத்யேன லப்யஸ்தபசா ஹ்யேஷாத்மா
சம்யக்ஞானேன பிரம்மச்சரியேன நித்யம்

இந்த ஆத்மாவானது அகண்டமான பிரம்மச்சரியத்தாலும் தெளிந்த ஞானத்தாலும், இடைவிடாத தவத்தாலும், சத்தியத் தாலுமே அடையப்பெறும். ஸ்ரீராமகிருஷ்ணர் பிரம்மச் சரியத்தைப்பற்றிப் பகர்ந்திருப்பதாவது: "சாதன மார்க்கத்தில் உண்மையான தீவிரமுடையவன் ஸ்திரீகளை நாடக்கூடாது. பெண்ணாசையை ஒழித்தவனுக்குப் பகவான் வெகு சமீபத்தில் இருக்கின்றார்."

எனவே சாஸ்திரமும், சான்றோர்கள் வாக்கும் ஆத்ம ஞானத்துக்குப் பிரம்மச்சரியம் அவசியம் என்று வலியுறுத்திக் கூறியிருக்கின்றன. காமவாசனையுடையவர்கள் சிற்றின்ப போகத்தை நாடுவார்கள். அவர்களுக்கு ஞானம் வாய்க்காது.

சுவாமி விவேகானந்தர் எல்லாத் துறைகளிலும் வல்லுநராக இருந்தார். சிறுவயதிலேயே தியான சித்தராக விளங்கினார். தாம் அடைந்துள்ள மேன்மைகள் எல்லாம் தமக்குக் குருட்டு வாய்ப்பாக வந்து அமைந்தவை அல்லவென்றும், தமக்கு வந்துள்ள மேன்மைகள் அனைத்துக்கும் தாம் கடைப்பிடித்து வருகின்ற பிரம்மச்சரியமே காரணம் என்றும் அவர் பகர்ந்துள்ளார். பிரம்ம ஞானத்தைப் பெறுவதற்குச் சீரிய ஒழுக்கம் எதுவோ அதற்குப் பிரம்மச்சரியம் என்று பெயர். கட்டழகு வாய்ந்த காரிகை ஒருத்தியைத் தனிமையில் சந்திக்கும்பொழுதும், அவளுடன் உரையாடுகின்றபொழுதும் யாருடைய உள்ளம் விகாரப்படாமல் இருக்கின்றதோ அவரே நன்கு பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்தவராகிறார். மனது அத்தகைய தூய்மையைப் பெறுகின்றபொழுதுதான் அது ஞானத்துக்குத் தகுதியுடையதாகின்றது. சிற்றின்பப் போகத்தில் நாட்டமுடைய மனதுக்கும் ஆத்ம ஞானத்துக்கும் வெகுதூரம் என்பதை நாம் நன்கு அறிந்திருக்கவேண்டும்.

கேள்வி: *(176)* சும்மாயிருத்தல் (Keeping a vacant mind) என்ற நிலையை அடைய நான் எவ்வளவோ முயன்றும் ஒரு வினாடியேனும் அந்நிலையை என்னால் அடைய முடியவில்லை. அந்நிலையை அடைய ஏதேனும் மார்க்க முண்டா? சாதாரண மக்களுக்கு அது சாத்தியமா?

பதில்: உலகிலே என்னென்னவோ காரியங்களையெல்லாம் எளிதாகச் சாதித்து விடலாம். ஆனால் "சிந்தையை யடக்கியே சும்மாயிருக்கின்ற திறமரிது காண், ஸத் ஆகி என் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே, தேஜோமயானந்தமே" என்று தாயுமான சுவாமிகள் பகர்ந்திருக்கிறார். அரிதில் அரிது சிந்தையை அடக்கிச் சும்மா இருப்பது என்பது அது. அவர் ஒருவருடைய அனுபவம் மட்டுமல்ல. சான்றோர் எல்லோரும் அதே விதத்தில் அபிப்பிராயப்படுகின்றனர். Nature abhors vacuum இயற்கை சூன்யத்தை வெறுக்கிறது என்பது பௌதிக விஞ்ஞானிகளது துணிபு. ஓர் இடத்திலிருந்து காற்றைக் காலி பண்ணினால் அவ்விடத்துக்கு மற்றோர் இடத்திலிருந்து காற்று பாய்ந்தோடி வருவதைக் காண்கிறோம். எந்த இடத்தையும்

காலியாக விட்டு வைக்க இயற்கை ஒருப்படுவதில்லை. மனதைக் காலிபண்ண முயலுதலே சும்மா இருப்பது என்பதன் பொருளாகும். ஓர் எண்ணத்தை உள்ளத்தினின்று அகற்ற முயன்றால் மற்றோர் எண்ணம் ஆங்குப் பாய்ந்து ஓடிவருகிறது. மனதினின்று எண்ணத்தைக் துடைக்க முயலுவது கடலி னின்று அலையைத் துடைக்க முயலுதலுக்கு ஒப்பாகும். எண்ணம் என்னும் அலை உள்ளத்தினின்று ஓயாது கிளம்பிக் கொண்டே இருக்கும். ஆகவே சும்மாயிருப்பது சாத்தியமன்று.

ஆயினும் சும்மாயிருப்பதை லக்ஷியமாகச் சான்றோர்கள் ஏன் எடுத்துக் கொண்டார்கள், எதற்காக எடுத்துக்கொண் டார்கள் என்பது கேள்வி. அலை வீசும் கடல் ஒய்ந்திருக்கும் வேளையும் உண்டு. வரைந்த படம் போன்று சிற்சில வேளை களில் அது அமைதியுற்றிருப்பதைக் காணலாம். காற்று சிறிதே னும் வீசாத வேளையிலேதான் கடல் அமைதி பெற்றிருக்கும். அக்கடல் போன்ற நமது உள்ளத்தில் அமைதி உண்டாகக் கூடும். அதற்கும் ஒரு நிபந்தனை உண்டு. ஆசை என்னும் காற்று உள்ளத்தில் ஓயாது வீசிக்கொண்டிருக்கிறது. மனிதனால் சும்மாயிருக்க முடியவில்லை யென்றால் அவன் ஆசைக்கு அடிமைப்பட்டிருக்கிறான் என்று பொருள்படுகிறது. ஆசையை அடக்குமளவு எண்ணம் என்னும் அலைகள் தாமே அடங்குகின்றன. ஆசையை அறவே வென்றுவிட்டால் பிறகு மனதில் எண்ணம் என்னும் வேகமும் குறைந்து போய்விடும்.

ஆசைகளையெல்லாம் வென்றான பிறகு பழைய வாசனைகள் என்னும் எண்ணங்கள் நமது முயற்சியின்றித் தாமே தோன்றி வரும். அவைகளுக்கு விகல்பம் என்பது பெயர். முறையாகச் சாதனம் செய்துகொண்டு வருபவனுக்கு சிறிது காலத்துக்குப் பிறகு அந்த விகல்பமும் அடங்கிவிடுகிறது. அது முற்றிலும் அடங்கிய நிலைக்கு நிர்விகல்ப சமாதி என்று பெயர். நீர் நிலையில் தேக்கமும் தெளிவும் ஏற்பட்டால் நீருக்குக் கீழேயிருக்கும் நிலம் தென்படும். அதேவிதத்தில் மனதில் அமைதியும் தெளிவும் ஏற்பட்டால் மனதுக்கு அடிப்படையாக இருக்கும் ஆத்ம சொரூபம் தென்படும். தெய்வத்தின் காட்சி என்பதும் அதுவே. அதைப் பெறுதற்காகத்தான் சான்றோர்கள் எல்லோரும் மனதையடக்கிச் சும்மாயிருக்க முயன்று வந்திருக்கின்றனர்.

மனதை அடக்குதல் என்னும் எதிர்மறைச் செயலுக்கு மாறாக மனதைக் கடவுள்பால் செலுத்துதல் என்னும் உடன் பாட்டு முறையில் மனதைப் பயிலுவிக்கவேண்டும். உலக ஆசைகளை நீக்கவேண்டும் என்று சொல்லுதற்குப் பதிலாகக் கடவுள் ஆசையைப் பெருக்கவேண்டும். கடவுள் மீதே நாட்டம், அவர்க்கே பணிவிடை செய்தல், அவரையே புகழ்ந்து பேசுதல், அவரையே எண்ணியெண்ணி மகிழ்ந்திருத்தல் ஆகிய சாதனங்களைத் தீவிரமாகச் செய்துவந்தால் மனது ஒடுங்கி அமைதிபெறும். சும்மாயிருத்தல் என்கின்ற நிலை கைகூடும். தெய்வத்தின் காட்சியும் கிட்டும். அது பரியந்தம் சன்மார்க்கத்தில் உழைத்தலே உற்ற உபாயமாகும்.

கேள்வி: *(177)* மௌனம் என்பதன் பொருள் யாது? உடல், வாய் இரண்டையும் அடக்க முடிவதாகத் தெரிகிறது. மனம் மட்டும் அடங்காமல் சங்கற்பித்துக் கொண்டே இருக்கிறது. அதை அடக்கும் முறை யாது?

பதில்: மௌனத்துக்குப் பல படித்தரங்கள் உண்டு. ஓயாது மிகைபடப் பொருளற்ற பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருப்ப வனுக்குப் பொருள் உள்ள பேச்சுக்களை மட்டும் பேசுவது மௌனமாகும்.

பொருள் உள்ள பேச்சுக்களை மிகைபடப் பேசுபவனுக்கு அவைகளை அளவுபடப் பேசுதல் மௌனமாகும்.

பேசவேண்டிய நல்ல விஷயத்தையும் பிறர் கேட்டா லொழியப் பேசாதிருப்பது அதிலும் உயர்ந்த மௌனமாகும்.

பிறர் பேசும்படித் தூண்டினாலும் அப்பேச்சு பிறருக்கோ தனக்கோ அதிகம் பயன்படாது என்று தெரிந்தால் பேசாது அடங்கியிருப்பது அதிலும் உயர்ந்த மௌனமாகும்.

இப்படி மௌனத்திலே மேலே போகப் போக மனம் அடங்கியிருப்பதற்கு அந்த மௌன நிலையே புறக்குறியாகிறது.

ஒருவன் வாய் பேசாதிருந்தாலும் மனதுக்குள்ளே வித விதமான எண்ணங்கள் உதித்துக்கொண்டிருக்கலாம். கிட்டத் தட்ட அது பேசுதற்குச் சமானமாகிறது. அத்தகைய எண்ணங் களும் உதிக்கலாகாது. கடவுள் சிந்தனை வலுத்து வந்தால் வேறு எண்ணங்கள் அடிப்பட்டுப்போம். கடவுளுடைய ஒரே

ஒரு எண்ணம் நிலைத்து நின்றுவிட்டால் அது பண்பட்ட நிலை. அந்தப் பண்பட்ட நிலையில் மனது நசித்துவிட்டால் மௌனம் ஆங்குப் பூர்த்தியாகிறது. எஞ்சியிருப்பது பிரம்ம சொரூபம்.

கேள்வி: *(178)* பிராணாயாமம் பழகுவதற்குமுன் நாடி சுத்தி செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நாடி சுத்தியானதற்கு ஏதாவது அடையாளம் உண்டா?

பதில்: பிராணாயாமத்தின் முதல் படியாய் அமைந்திருப்பது நாடிசுத்தி. இனி, பிராணாயாமம் என்னும் அங்கம் யோகத்தினுடைய அஷ்டாங்கங்களில் நாலாவது அங்கமாக அமைந்திருக்கிறது. யமம் என்பது முதல் அங்கம். நியமம் என்பது இரண்டாவது அங்கம். ஆசனம் மூன்றாவது அங்கமாக வருகிறது. முதல் இரண்டு அங்கங்களும் மிக முக்கியமானவைகள். வீட்டுக்கு அஸ்திவாரம் கட்டுவதற்கு நிகரானவை. மானுட வாழ்வு என்னும் மாளிகைக்கு அஸ்திவாரமாய் அமைந்திருப்பது யமம் நியமமாம். யமம் நியமம் ஆகிய இவ்விரண்டில் உறுதி பெறாதவர்கள் ஆயுள்காலம் முழுதிலும் நாடிசுத்தியோ அல்லது பிராணாயாமமோ செய்துகொண்டு இருக்கலாம். ஆனால் மேலாம் பயன் ஒன்றும் வாய்க்காது போய்விடும். யமம் நியமத்தில் முற்றிலும் உறுதிபெற்றிருப்பது அவசியம். உடல் ஆரோக்கியமாக இருப்பதும் அவசியம். இந்த நிபந்தனைகளெல்லாம் நிறைவேறப்பெற்றிருக்கும்பொழுது நாடிசுத்தியின் அறிகுறிகள் சில தாமாகவே வந்து அமைகின்றன. உடல் மிக இலகுவாக இருப்பதாகச் சாதகனுக்குத் தோன்றும். உடல் இருந்தும் உடல் உணர்ச்சி ஆத்ம சாதகனுக்கு வருவதில்லை. நன்றாகச் சுருதி மீட்டி வைத்திருக்கின்ற இன்னிசைக் கருவி போன்றதாக யோகியின் உடல் அமையும். ஸ்படிகம் போன்று தெளிந்து பிரகாசம் உடையதாக உடல் இருப்பது போன்று யோகி தனக்குத்தானே உணர்வான். மற்றவர்களுடைய காட்சியில் யோகியின் உடலும் யோகி அல்லாதவனுடைய உடலும் ஒரேவிதத்தில் தென்படுகின்றன. ஆனால் தன் உடல் தனக்கு எந்தவிதமான இடைஞ்சலையும் உண்டுபண்ணுவதாக யோகி உணரமாட்டான். அத்தெளிந்த நிலை அடைந்தான

பிறகு தனக்குத்தானே சில அனுபவங்களை யோகி பெறுகிறான். அந்த அனுபவங்களெல்லாம் மங்களம் நிறைந்தவைகளாகவே இருக்கும். உணவு உண்பவன் பசியடங்குவதைத் தானே உணர்வது போன்று நாடிசுத்தி அடையப் பெறுபவன் பெறுகிற அனுபவங்கள் அவனுக்கு ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் ஊட்டும். ஒரு யோகிக்கு வருகிற அனுபவம் இன்னொரு யோகிக்கு வருவதில்லை. அனுபவங்கள் பல தரப்பட்டவைகள் எனினும் ஆனந்தமும் அமைதியும் உடல் தெளிவும் எல்லோருக்கும் பொதுவானவைகளாம்.

கேள்வி: *(179)* கீழ்மையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் மனதை எங்ஙனம் மாண்புறு வழியில் திருப்புவது? அமைதியின்றிக் கெட்டு அலையும் மனதை அடக்கும் வழிதான் யாது?

பதில்: கீழ்மை மேன்மை என்பதைப்பற்றி இன்னும் உறுதியாகத் தீர்மானம் செய்து கொள்ளாத நிலை ஒன்று மனதுக்கு உண்டு. அது பரிபக்குவம் அடைவதற்கு முன்பு, கீழ்மையை மேன்மை என்றே கருதிக்கொண்டிருந்த காலம் ஒன்றிருந்தது. இன்றைக்கு அதைக் கீழ்மை என்று ஏகதேசம் அறிந்துகொள்ளும் நிலையில் மனது இருக்கிறது. சில வேளைகளில் அந்தக் கீழ்மையையே மேன்மை என்று மனது தனக்குச் சமாதானம் செய்துகொள்கிறது. அப்பொழுது அந்தக் கீழ்மையில் இன்பம் காண மனது அதை நாடிச் செல்லுகிறது. சிறிது நேரத்திற்குப்பிறகு, தான் செய்தது தவறு என்று மனது உணருகிறது. இங்ஙனம் கீழ்மைக்கும் மேன்மைக்கும் இடையில் போராடும் நிலையில் கொஞ்சகாலத்துக்கு மனது இருக்கிறது. யாரோ சிலருக்கு இத்தகைய போராடும் நிலை பல பிறவிகளில் தொடர்ந்து வருவதும் உண்டு.

கீழ்மையில் செல்லாது மனதைத் தடுப்பதற்கு இடையறாத சாதனம் முற்றிலும் அவசியமானது. கீழ்மையில் செல்லும் பொழுது என்னென்ன பாங்கில் அதற்குக் கேடுகள் வந்து அமைகின்றன என்பதை ஆழ்ந்து மனதுக்கு ஞாபகமூட்ட வேண்டும். கீழ்மையை மிகக் கேடு நிறைந்தது என்று உறுதியாக அறிந்துகொண்ட பிறகு மனது அதை நாடிச் செல்லுவது

கிடையாது. குழந்தை ஒன்று எரிகின்ற தீபத்தைத் தொட முயலுகிறது. அதைத்தொட ஒட்டாது தாய் தடுக்கிறாள். ஏதோ ஒரு வேளையில் தாய் அஜாக்கிரதையாய் இருக்கும் பொழுது குழந்தை எரிகின்ற தீபத்தைத் தொட்டுவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். உடனே கைவிரல் காந்திப் போகிறது. திரும்பவும் அக்குழந்தை தீபத்தைத் தொடாது. நல்லது போன்று தென்பட்ட தீப்பிழம்பு தொடுதற்குத் தகுதியற்றது என்பதைக் குழந்தை உறுதியாக அறிந்துகொள்கிறது. அதன்பிறகு தாய் அக்குழந்தையைப் பாதுகாத்து வைக்க வேண்டியதில்லை. தன் போக்கில் விட்டுவிட்டாலும் தீயைப் பிறகு அது தொடாது. கேடு விளைவிப்பவைகளை நலம் விளைவிப்பவை என்று எண்ணுகிற மனதுக்கு இத்தகைய உறுதியான தீர்மானம் வரவேண்டும். கீழானவை என்று சொல்லப்படுபவைகளில் கேடுதான் இருக்கிறது, நலம் இல்லவே இல்லை என்னும் உறுதி வந்துவிட்டால் மனது அந்தக் கீழ்மையை நாடாது. அதற்குத் துணைபுரியவேண்டுமென்று கடவுளிடத்திலும் உள்ளன்போடு பிரார்த்தனை பண்ண வேண்டும்.

கேள்வி: *(180)* ஏதேனும் ஒன்றால் தூண்டப்பெற்று மட்டுமே மனது வேலை செய்கிறது. பெருவாழ்வு வாழ்வதற்கு மனதைத் தூண்டுவது எப்படி?

பதில்: சிறுவர்கள் சிலர் செயலற்று வெறுமனே இருக்கின்றனர். அத்தகையவர்களைச் சிறுவர் விளையாட்டு மேடைக்கு அழைத்துச் செல்லவேண்டும். ஏனைய சிறுவர்கள் ஓடியாடி விளையாடுவதைப் பார்த்தால் வெறுமனே இருக்கும் சிறுவனுக்கு ஊக்கம் உருவெடுக்கிறது. மற்றவர்களைப் பார்த்துப் பழகுவதின் வாயிலாகத் தனக்கும் விளையாட்டில் ஆர்வம் படிப்படியாக வருகிறது. நல்லதைப் பார்ப்பதே நலத்தில் நாட்டத்தை வளர்க்க உற்ற உபாயமாகிறது. ஆனால் பெருவாழ்வு வாழ்பவர்களைக் காண்பது அரிதிலும் அரிதாம். அப்படியிருந்தும் பெருவாழ்வில் ஊக்கம் வடிவெடுத்தாக வேண்டும். அதன் பொருட்டுச் சிறுவர்களுக்கு இராமாயணம், மஹாபாரதம் போன்ற கதைகளை முறையாகச் சொல்லிவந்தால் நல்வாழ்வில் நாட்டமும் கேடு

நிறைந்த வாழ்வில் வெறுப்பும் தானாக உள்ளத்தில் வடிவெடுக்கின்றன. அத்தகைய மனநிலையே சிறியோர் பெரியோர்களாகிய எல்லாரையும் பெருவாழ்வில் தூண்டுகிறது. எனவே நலனை வளர்ப்பதற்கும், கேட்டைத் தவிர்ப்பதற்கும், பெருவாழ்வு வாழ்வதற்கும் இந்த இரண்டு இதிகாசங்களைக் கற்பதே உற்ற உபாயமாம்.

கேள்வி: *(181)* தியானம் பண்ண முயலும்போது மனது சஞ்சலம் அடைகின்றது. மனதை ஒருமுகப்படுத்த என்ன செய்ய வேண்டும்?

பதில்: மனது சஞ்சலப்படுவதுதான் தியான முயற்சியின் முதல் அறிகுறியாகிறது. ஏனென்றால் தியானம் பண்ணும் பொழுது மனிதன் மனதிலுள்ள மற்ற எண்ணங்களை அகற்றி வைக்கிறான். கடவுள் எண்ணத்தை வரவழைக்க முயலுகின்றான். அதற்கிடையில் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முன்பு எண்ணியிருந்த எண்ணங்கள் முளைத்துவர முயலுகின்றன. அப்படி அவைகள் இடுக்கண் விளைவிக்கின்ற பாங்கில் வருமிடத்து ஆத்ம சாதனம் பண்ணுகிறவன் அவைகளைக் குறித்துச் சஞ்சலப்பட வேண்டியதில்லை. அமைதியாகவும் பொறுமையாகவும் பொருந்தாத அந்த எண்ணங்களை ஒதுக்கி வைக்கவேண்டும்.

நல்ல சிறுவன் ஒருவனுக்கு நாம் ஏதாவது தின்பண்டம் வழங்க விரும்புகிறோம். அப்பண்டத்தைப் பற்றிக்கொள்ளக் காக்கை, குருவி முதலியன வந்தால் அவைகளை விரட்டி ஓட்டுகிறோம். அதே பாங்கில் பொருந்தாத எண்ணங்களைப் புறக்கணிப்பதும் பொருந்திய நல்ல எண்ணத்தை ஆர்வத்தோடு தோற்றுவிப்பதும் தியானப் பயிற்சியின் முதல்படியாம்.

இறந்த காலத்தில் நாம் ஆர்வத்தோடு பேணிவந்த கருத்துக்கள் இடையில் நெடுங்காலம் மறைந்துபட்டுப் போயிருந்தாலும் தியான முயற்சியில் ஈடுபடுகின்றபொழுது மறைந்து கிடந்த பழைய எண்ணம் திடீரென்று தோற்றத்துக்கு வருகிறது. அதைப் பொருள்படுத்தாதிருந்தும், அதற்கு உதாசீனமாக இருந்தும் பழகுதலே அதை விரட்டி ஓட்டுதற்கு உற்ற உபாயமாகும்.

கேள்வி: (182) **மன ஒருமுகப்பாட்டுக்கு என்ன செய்ய வேண்டும்?**

பதில்: மன ஒருமுகப்பாட்டுக்கு முதலில் பஞ்சேந்திரியங்கள் மூலமாகப் புறவுலகில் சென்றுகொண்டிருக்கும் மனதை உள்ளே இழுத்துப் பழகவேண்டும். ஆபத்து நேரும் காலத்தில் ஆமை யானது நான்கு கால்கள், தலை ஆகிய ஐந்து உறுப்புக் களையும் வெளியே தெரியாதவாறு உள்ளே இழுத்து வைத்துக் கொள்வது போன்று, ஐம்பொறிகளின் வழியாக மனம் புறவுலகுக்குச் செல்ல ஒட்டாது அதை உள்ளே இழுத்துத் தியானிக்கக்கூடிய பொருளின்மீது செலுத்தவேண்டும். மனதில் ஏற்கனவே சம்ஸ்காரங்கள் பல இருக்கின்றன. அந்தச் சம்ஸ் காரங்கள் பல எண்ணங்களாகத் தோன்றி மனம் தியானிக் கக்கூடிய பொருளை நினைக்க ஒட்டாது தடுக்கும். ஆகையால் மனதிலுள்ள சம்ஸ்காரங்களையும் அழித்து மனதைத் தூய்மைப்படுத்தவேண்டும். எப்பொருளைத் தியானிக்க விரும்பு கிறோமோ அப்பொருளின்மீது மனதுக்கு ஆழ்ந்த பற்றுதல் இருக்கவேண்டும். நீருக்குள் மூழ்கியிருப்பவன் சுவாசிப்பதற்குக் காற்றுக்காக எவ்வளவு துடிதுடிப்பானோ அத்தகைய துடி துடிப்பு தியானிக்கக்கூடிய பொருளை அடைவதில் இருக்க வேண்டும். மனோசக்தியை ஒன்று திரட்டுவது, மனதைத் தூய்மைப்படுத்துவது, தியானிக்கக்கூடிய விஷயத்தின் மீது தீவிர நாட்டம் கொண்டிருப்பது ஆகிய மூன்றும் அமையு மிடத்து மன ஒருமுகப்பாடு வந்துவிடும்.

கேள்வி: (183) **மனதை ஒருமுகப்படுத்துதல் எப்படி?**

பதில்: சின்னஞ்சிறு வயதில் மனது ஒருமுகப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் ஆசை ஒன்றும் குழந்தையின் உள்ளத்தில் இன்னும் உருவெடுக்கவில்லை. குழந்தை வளர வளர அதனி டத்து மற்றவர்களால் ஆசை ஊட்டப்படுகிறது. மற்றவர்களைப் பார்த்துக் குழந்தை தானும் ஆசையை அதிகப்படுத்திக் கொள் கிறது. எவ்வளவுக்கெவ்வளவு ஆசையின் வேகம் அதிகமோ, அவ்வளவுக்கவ்வளவு பலப்பல பாங்குகளில் மனது சிதறுடைந்து போகிறது. ஆசையில்லாத மனது கட்டி வைத்துள்ள கடுகு மூட்டைக்கு நிகர். ஆசைக்கு அடிமைப்பட்ட மனது அவிழ்த்துக்

கொட்டிய கடுகுக்கு நிகர். ஆசையை ஒடுக்குகின்ற அளவுக்கும், ஆசையை உருவெடுக்காது தடுக்கின்ற அளவுக்கும் மனதை ஒருமுகப்படுத்தலாம். தியானத்தில் ஆழ்ந்து செல்லுதற்கேற்ப ஆசை ஒதுக்கப்படுகிறது. தியானத்தில் சாந்தமும், ஆனந்தமும் ஓங்குகின்றன. ஒருமுகப்பட்ட மனதின் விளைவு அதுவாம், மன ஒருமுகப்பாட்டுக்கு இடைவிடாத அப்பியாசமும் தேவை.

கேள்வி: *(184)* மனிதனுக்கு இரண்டு சக்திகள் உள்ளன வாம். ஒரு சக்தி அவனைக் கெட்ட வழிகளில் இறங்கும்படி தூண்டி அவனுடைய வாழ்க்கையையே பாழாகும்படி செய் கிறது. அதாவது காமமோக வலையில் அகப்படச் செய்து அவனைச் சீரழித்து உயிரையும் வாங்குகிறது. மற்றொரு சக்தி அவனை உலகம் மெச்சும்படி செய்கிறது. பஞ்சேந்திரி யங்களை அடக்க உதவுகிறது. இவ்விரு சக்திகளும் ஒரு மனத்துள்ளே அடங்கியுள்ளது. ஆனால் பெரும்பாலான மக்களின் வாழ்வில் முதலில் சொன்ன சக்தியே தலைதூக்கி நிற்கிறது. ஏதோ ஒருசில உத்தமரின் வாழ்வில்தான் இரண் டாவது சக்தி தலைதூக்குகிறது. இதற்குக் காரணம் யாது?

பதில்: இயற்கையிலும் மனிதனிடத்தும் இருக்கும் சக்தி ஒன்றே. அது இரண்டு விதத்தில் பரிணமிக்கின்றது. உண்டு பண்ணும் தன்மை உடையதாக அது பரிணமிக்கும் பொழுது அதை மேலான சக்தி என்கின்றோம். அழிக்கும் தன்மையதாக அது பரிணமித்தால் அதைக் கீழானதென்கிறோம். ஆசை என்னும் சக்தியைச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம். கல்வி கற்க ஒருவன் ஆசைப்படுகிறான். அத்தகைய ஆசை அவனை மேலோன் ஆக்குகிறது. இந்திரிய சுகத்துக்கு இன்னொருவன் ஆசைப்படுகின்றான். அதற்கு இடங்கொடுப்பதால் அவன் கீழ்மை அடைகிறான். இரண்டுக்கும் ஆசை ஒன்றே. கீழ்மை அடைவதினின்று விரைவில் அல்லது நாளடைவில் ஓர் உண்மை புலப்படும். மனது, பொறிவழியே செல்லும் கீழான ஆசைக்கு இடங்கொடுக்கலாகாது. இடங்கொடுக்குமளவு மனிதன் கெட்டுப்போய்விடுவான். இத்தகைய அனுபவம் பெறுவதற்கே உயிர் வாழ்க்கை ஏற்பட்டிருக்கிறது. அனுபவம் ஒவ்வொன்றும் விவேகம் உதயமாவதற்கு முகாமையாகிறது. விவேகத்தை

விரைவில் பெறுகின்றவர் சான்றோர். நெடுநாளைக்குப் பிறகு அதை அடைபவர் பொதுமக்கள். இன்பமாகவும் துன்பமாகவும் பரிணமிக்கின்ற சக்தி ஏதேனும் ஒருவிதத்தில் நமக்குப் பாடம் புகட்டிக்கொண்டே இருக்கிறது. பெரும்பாலோர் மேலான பாடத்தை விரைவில் கற்றுக்கொள்ள இயலாதவர்களாக இருக்கிறார்கள் என்பது வெளிப்படை. எனக்கு நலம் தருவது எது என்று விசாரித்துக்கொண்டே ஒருவன் ஆசையை நிறை வேற்றி வருவானாகில் அவன் விரைவில் கெட்ட ஆசைகளைக் களைந்து நல்ல ஆசையில் ஈடுபடுவான்.

கேள்வி: *(185)* நல்லதைச் செய்ய மனம் விரும்புகிறது. ஆனால் அதைப் பழக்கத்தில் கொண்டுவர முடிவதில்லை. ஏன்?

பதில்: மக்களை மூன்று படித்தரங்களில் வைத்துப் பாகுபடுத்தலாம். பரிபாகத்தில் அவர்கள் அடைந்துள்ள நிலை தலை, இடை, கடை என மூன்றாகப் பாகுபடுகிறது. மக்களுள் பண்பாட்டிலே தலைத்தரமாகத் திகழ்கின்றவர்கள் எடுத்துக் கொள்கின்ற முயற்சிகள் அனைத்தையும் நன்கு செய்து சாதிக் கின்றனர்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்பது கோட்பாடு. இக்கோட்பாடு அவர்களுக்கு முற்றிலும் பொருந்தும். அடுத்தபடியாக இடைத்தரத்தில் இருக்கின்றவர் களுக்கு வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்து அமை கின்றது. கடைத்தரமான மனிதனோ நல்லது எதையும் சாதிக்க முடியாது திணறுகின்றான்.

மக்கள் எல்லாரும் ஆத்ம சாதனங்கள் பயிலக் கடமைப் பட்டிருக்கின்றனர். பயிற்சியில் முன்னேற்றம் அடைவதற்குத் தீவிர உணர்ச்சியை வளர்க்கவேண்டும். உணர்ச்சியின் வேகத் திற்கு ஏற்ப மனிதன் திண்ணியனாகின்றான். ஆதலால் ஆத்ம சாதனங்களை இடையறாது ஊக்கத்துடன் பயின்று வரவரச் சாதகனுடைய வல்லமை அதிகரிக்கின்றது. ஆதலால் தளரா ஊக்கத்துடன் தோல்விகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாத

ஆத்மசாதனங்கள் புரிந்து வருவதே முன்னேற்றத்துக்கு உற்ற உபாயமாம்.

கேள்வி: *(186)* தெய்வ வழிபாடு செய்தாலும் மனம் அலைகிறது. இதனைக் கட்டுப்படுத்துவது எப்படி?

பதில்: மனம் அலைவதற்குக் காரணம் மனதிலுள்ள உலக ஆசையேயாகும். உலக ஆசை நீங்குமளவுதான் மனது கடவுள் வழிபாட்டில் ஈடுபடும். உலக ஆசை மனதில் இருக்கும்பொழுது நம் உடல் பூஜை அறையில் வழிபாடு செய்து கொண்டிருந் தாலும் மனது உலக சம்பந்தமான எண்ணங்களை எண்ணிக் கொண்டிருக்கும். உலக ஆசை நிரம்பியுள்ள மனதை உடையவர் கள் வாயால் இறைவன் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந் தாலும் அவர்களுடைய எண்ணம் உலக விஷயங்களைப் பற்றியதாகவே இருக்கும். எனவே அத்தகையவர்கள் காயத் தாலும் வாக்காலும் கடவுள் வழிபாடு செய்தாலும் மனதால் கடவுள் வழிபாடு செய்தவர்களல்லர். மனது கடவுள் வழி பாட்டில் ஈடுபடும் பொழுதுதான் அலையாதிருக்கும்.

ஒருமுறை தக்ஷிணேசுவரக் கோவிலை அமைத்த இராணி ராசமணி அம்மையார் அம்பிகையின் சந்நிதியின் முன் அமர்ந்து வழிபாடு செய்தார். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் அம்பிகையின் மகிமைகளைப் பாடிப் பரவசமடைந்தார். அப்பக்திப் பாடல் களைக் கேட்டுக்கொண்டிருப்பதற்கிடையில் இராணி ராசமணி யினுடைய உள்ளம் உலக விவகாரம் ஒன்றை நினைத்தது. இராணி ராசமணியினுடைய உள்ளம் கடவுள் வழிபாடு செய்வதை நிறுத்திவிட்டு உலக விவகாரத்தை நினைத்ததைப் பரமஹம்சர் அறிந்துகொண்டார். உடனே பரமஹம்சர் எழுந்து இராணியின் கன்னத்தில் அறைந்து அவருடைய மனதைக் கடவுள் வழிபாட்டில் திருப்பினார். கடவுள் வழிபாட்டில் மனது முழுதும் ஈடுபட்டால்தான் அலையும் தன்மையை நிறுத்தும்.

மனதைக் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுத்துவதற்கு மனதில் கடவுள் பற்று உண்டாகவேண்டும். உலக விஷயங்களின் தன்மையை மனதுக்கு நன்கு உணர்த்தி உலக விஷயங்கள் அநித்தியமானவை என்பதை மனதில் நன்கு பதியச்

செய்யவேண்டும். கடவுள் ஒருவர்தாம் நித்தியமானவர் என்பதும், கடவுள் நாட்டத்தால்தான் பேரின்பம் கிடைக்கிறது என்பதும் மனதுக்குத் தெளிவாக விளங்கும்படிப் புகட்டவேண்டும். இத்தகைய ஆராய்ச்சிக்கு விவேகம் என்று பெயர். விவேகத்தை நன்கு கையாண்டு உலகப்பற்றைக் குறைத்துத் தெய்வப்பற்றை வளர்க்க வேண்டும். அதாவது நித்தியப் பொருளினிடத்துப் பற்றுதலையும் அநித்தியப் பொருளினிடத்துப் பற்றின்மையையும் வளர்க்கவேண்டும். இதற்கு வைராக்கியம் என்று பெயர். விவேகத்தையும் வைராக்கியத்தையும் கையாண்டு மனதைக் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுத்தினால்தான் அதை அடக்க முடியும். சமயச் சின்னங்களை அணிவது, ருத்ராட்ச மாலை அல்லது துளசிமாலை அணிவது, முடி வளர்த்துக்கொள்வது அல்லது முடியைக் களைந்துவிடுவது முதலிய செயல்கள் மூலம் தங்களைக் கடவுள் வழிபாடு செய்கின்றவர்களென்று காட்டிக்கொள்பவர்கள் இருக்கிறார்கள். இத்தகைய வேடங் களால் மட்டும் மனதை அடக்கிவிட முடியாது. இவ்வேடம் ஏதுமின்றி மனதைக் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுத்தலாம். வேடம் முக்கியமானதன்று; மனம் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுவதுதான் முக்கியமானது.

அர்ஜுனன் "கண்ணா, மனது சஞ்சலம் உடையதாக இருக்கிறது. அது காற்றைவிட வேகமுடையதாக இருக்கிறது. அதை அடக்குவது கடினமாக இருக்கிறது" என்று கூறினான். "ஆம், அர்ஜுனா! மனது சஞ்சலம் உடையது என்பதில் ஐயமில்லை. அதை அடக்குவதும் கடினம்தான். ஆனால் இடைவிடாத அப்பியாசத்தாலும், வைராக்கியத்தாலும் அதை அடக்கமுடியும்" என்று கண்ணன் கூறியுள்ளார்.

உலகப்பற்றைக் குறைத்துத் தெய்வப்பற்றை வளர்த்து மனதைக் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுத்தி வருவோமானால் நாளடைவில் அது அடங்கிவிடும். மனது தூய்மையடைந்து விவேகம் வைராக்கியத்தில் நிலைபெற்றுக் கடவுள் வழிபாட்டில் ஆழ்ந்து ஈடுபடும்பொழுது மனதை அடக்குவது சுலபமாகிவிடும்.

கேள்வி: (187) **பகலில் வசப்பட்டிருக்கும் பாழான மனக்குரங்கு இரவில் தூங்கும்போது என்னை ஏமாற்றிப்**

பல தீய எண்ணங்களை உண்டாக்கி இம்சை செய்கின்றது. அப்படி இம்சை செய்யாது அதை வசப்படுத்த வழி என்ன?

பதில்: நனவில் செயல்புரிகிற மனதே கனவிலும் செயல்புரிகிறது. நனவில் நமக்கு இச்சா சுதந்தரம் அதிகமாக இருக்கிறது. கனவிலோ மனம் பெரிதும் தன் போக்கில் போய்க்கொண்டிருக்கிறது. ஆதலால் நமது விருப்பத்திற்கேற்ற கனவு வந்தமைவதில்லை. எனினும் கனவு ஒரு பெருங்காரியத்துக்கு உதவுகிறது. நனவிலே மனதையடக்கியாள வெற்றி பெறுகிறவளவு கனவிலும் மனதை அடக்கியாளும் தன்மை நமக்கு வந்தமையும். கனவில் மனதை அடக்கமுடியவில்லையென்றால் நனவில் நமக்கு இன்னும் மன அடக்கத்தில் பூரணவெற்றி அமையவில்லை என்பது வெளியாகிறது. கனவில் மனது அடங்காது வேண்டப்படாத எண்ணங்கள் சொப்பனமாகத் தோன்றுமாகில் அதைக்குறித்து வருந்தவேண்டியதில்லை. வெறும் கனவு என்று அதைத் துடைத்துவிட்டு நனவிலே மனதைப் பண்படுத்தும் செயலில் நாம் ஆழ்ந்து சென்று கொண்டிருந்தால் நாளடைவில் பூரண வெற்றி கிட்டும். முற்றிலும் மனமடங்கப் பெற்றவர்களுக்கே நனவு கனவு ஆகிய இரண்டு நிலைகளிலும் அதை அடக்கியாளச் சாத்தியமாகிறது. ஊக்கத்துடன் ஆத்ம சாதனங்களைச் செய்து வருவதே மனதை முற்றிலும் வெல்லுவதற்கு உற்ற உபாயமாகும்.

கேள்வி: *(188)* ஞானமார்க்கத்தில் சென்று கொண்டிருக்கும் போதும்கூட மனதில் கீழான எண்ணங்கள் தலை தூக்குகின்றன. அவற்றை வேரோடு களைந்தெறிய ஓர் உபாயம் தந்தருள வேண்டுகிறேன்.

பதில்: "வீட்டு ஈ போன்று இருக்கவேண்டாம்; தேன் ஈ போன்று இரு" என்பது பரமஹம்சதேவருடைய வாக்கு. பாங்கில் வீட்டு ஈ, தேன் ஈ ஆகியவற்றுக்கிடையில் பெரிய வேறுபாடு உண்டு. வீட்டு ஈ நல்லுணவு, மலம் ஆகியவைகளின் மீது மாறி மாறி உட்காரும். அவைகளுக்கிடையில் உள்ள வேறுபாடு வீட்டு ஈக்குத் தென்படுவதில்லை. ஆனால் தேன் ஈயினுடைய பாங்கு இதற்கு முற்றிலும் மாறுபட்டது. அது மலர் மீது அமரும் அல்லது தன் அடையில் அமரும்.

வேறு எங்கும் அது அமர்வதில்லை. மனிதன் பழக்கத்தாலும் பயிற்சியினாலும் வீட்டு ஈ போன்று இருக்கலாம்; அல்லது தேன் ஈ போன்று ஆகலாம். பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ விரும்புகின்றவன் தேன் ஈ போன்று இருக்கக் கடமைப் பட்டிருக்கிறான். அதன் பொருட்டு அவன் தீவிரமான விரதம் எடுத்துக்கொள்ள வேண்டும். "பொருந்தாத எண்ணங்களை எண்ணமாட்டேன்; பொருந்தாத வார்த்தைகளைப் பேசமாட்டேன்; அவற்றிற்குச் செவிசாய்க்கவும் மாட்டேன். பொருந்தாத செயல்களைத் துச்சம் என ஒதுக்கித் தள்ளுவேன்." இங்ஙனம் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களைச் சுத்தமாக வைத்திருக்கத் தீர்மானம் செய்துகொள்பவனே ஆத்ம சாதனத்துக்குத் தகுதி உடையவனாகிறான். அதற்கிடையில் பழைய வாசனையை முன்னிட்டோ சம்ஸ்காரங்களை முன்னிட்டோ பொருந்தாத எண்ணங்கள் உள்ளத்தில் தோன்று மாகில் அவைகளை அப்போதைக்கப்போது ஒதுக்கித் தள்ள வேண்டும். பிறகு அவைகளைப் பற்றி நினையாதிருந்து பழக வேண்டும். தீவிரமாக முயன்றால் வெற்றி கிட்டுவது உறுதி.

கேள்வி: *(189)* காமத்தை அகற்ற நான் தினம் அதி காலையில் எழுந்திருந்து ஜெபம் தியானம் ஒரு மணி நேரமும் பிறகு யோகாசனம் ஒரு மணி நேரமும் செய்கி றேன். பிறகு குளித்துவிட்டு பிராணாயாமமும் செய்து வருகின்றேன். ஆனால் காமம், ஆசை இவைகள் ஒழிவ தாகக் காணோம். மிகவும் மனதுடன் போராடுகின்றேன். காமத்தை ஒழிப்பதற்குத் தக்கவழி ஒன்று சொல்லப் பிரார்த்திக்கிறேன்.

பதில்: உலகிலுள்ள மக்களில் பெரும்பான்மையோர் காமத்துக்கு வசப்பட்டவர்களேயாம். காமத்தை வென்றவர்கள் நல்ல யோகிகள் ஆய்விடுகிறார்கள். காமத்தை எப்படி வெல்வது என்பது கேள்வி. அதற்கேற்ற நல்ல உபாயம் ஒன்றைப் பரமஹம்சர் பகர்கின்றார். நெருங்கிய சொந்தக்காரர் ஒருவர் செத்துப்போய் விடுகின்றார். சரீரத்தை இன்னும் தகனம் செய்யவில்லை. மடிந்து போனவரைக் குறித்து ஆழ்ந்த துயரத் தில் உறவினர் மூழ்கிக்கிடக்கின்றனர். அப்படித் துயரப்பட்டுக்

கொண்டிருக்கின்றபொழுது காம எண்ணம் கருத்தில் வருவதில்லை. மனது ஏக காலத்தில் இரண்டு பொருள்களை நினைப்பதில்லை. இரண்டு பொருள்களை நாடுவதும் இல்லை. இது மனதைப்பற்றிய பேருண்மை. துக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற பொழுது காமம் தோன்றுவதில்லை என்பது எல்லாருடைய அனுபவம். ஆழ்ந்து கடவுள் பக்தி பண்ணுகின்ற பொழுது காமம் தோன்றாது. ஏனென்றால், மாறுபடுகின்ற இரண்டு பொருள்களை மனது ஏககாலத்தில் நாடமுடியாது. கடவுள் பக்தி அதிகரிக்கின்ற அளவு காமம் தானாக மறைந்து போய் விடுகிறது. பிறகு காமத்தையே கடவுள் மீது திருப்பிவிட முடியும். கடவுளைப் பெறவேண்டுமென்று பக்தன் கடவுள் காமம் கொள்ளவேண்டும். அம்பிகைக்குச் சிவகாமி என்பது ஒரு பெயர். இடையறாது சிவத்தையே நாடியிருப்பவள் என்பது அதன் பொருள். மனிதனும் அப்படிக் கடவுளையே நாடிப்பழகினால் காமத்தின் வேகம் தானாக அகன்றுபோய் விடுகிறது.

இறைவனுடைய திருநாமத்தை இடையறாது சொல்லிக் கொண்டிருப்பதற்கு ஜபம் என்று பெயர். அலாதியாக ஜபத்துக்கென்றே ஒதுக்கிவைக்கப்பட்ட நேரம் ஒருமணி. பின்பு மற்ற அலுவல்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறபொழுதும் மனதில் ஒரு பகுதி ஜபம்பண்ண வல்லதாகிறது. பழக்கத்தால் அப்பயிற்சி வந்துவிடுகிறது. ஜபத்தில் முன்னேற்றமடையுமளவு காமத்தின் வேகம் குறைந்துவிடும்.

யோகாசனம் போடுதற்கு ஒரு மணிநேரம் ஒதுக்கி வைக்கவேண்டிய அவசியமில்லை. பதினைந்து அல்லது இருபது நிமிஷம் அதற்குப் போதுமானது. பிராணாயாமத்துக்கு ஐந்து நிமிஷம் போதுமானது. மனபரிபாகம் அடையப்பெறுபவர்க்கு இயற்கையாகப் பிராணாயாமம் வந்துவிடுகிறது. அது சரீரத்துக்கு மிகப்பொருத்தமானதாகவும் இருக்கும். நாசித்துவாரங்களைக் கைவிரல்களால் அடைத்துக்கொண்டு செயற்கையாகப் பண்ணும் பிராணாயாமம் பொருந்தியதாக இருக்கலாம், அல்லது பொருந்தாததாகப் போய்விடலாம். பொருந்தாத பிராணாயாமம் நோயை உண்டுபண்ணும். நரம்புத்தளர்ச்சியைக் கிளப்பிவிடும். காம நோயில் வருந்திக் கொண்டிருப்பவர்க்கு நீண்ட பிராணாயாமம்

ஆபத்தானது. காமத்தை வளர்ப்பதற்கே அதுவும் ஒரு காரணமாய் விடலாம். யோகாசனம், பிரணாயாமம் ஆகிய இரண்டும் உடல் சம்பந்தமான சாதனங்கள் என்பதை நாம் யாண்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பக்தியும் ஞானவிசாரமும் மனதினின்று காமத்தை அகற்றுவது போன்று யோகாசனமும் பிராணாயாமமும் அகற்றமாட்டா.

கேள்வி: *(190)* மிக உயர்ந்த மாசுபடாத இலட்சியங்களிலேயே இருந்தபோதும் கூடத் திடீரென்று சிற்சில சமயங்களில் மனம் சலனமடைவது ஏன்? அது மாசுற்றதாகாதா? அதை நீக்க இயலாதா?

பதில்: இயற்கையின் நிகழ்ச்சியிலிருந்து மனதைப்பற்றிய ஒரு தத்துவத்துக்கு சான்று எடுத்துக்கொள்ளலாம். வானத்திலே வெட்டவெளியைப் பார்க்கின்றோம். அது மாசு அற்றதாக நாலாபக்கமும் விரிந்திருக்கிறது. அத்தகைய தூய வெட்ட வெளியிலே திடீரென்று மேகம் தோன்றுகிறது. அது இங்கும் அங்கும் சஞ்சரிக்க ஆரம்பிக்கிறது. மாசற்ற வெட்ட வெளியைப் போன்று நமது மனதை வைத்திருப்பது நமக்கு லக்ஷியம். லக்ஷியத்திலே நாம் ஆழ்ந்து கண்ணும் கருத்துமாய் இருப்போமானால் மனது அப்பொழுது முற்றும் நம் கைவசமாய் விடுகிறது. மாறுபடுகின்ற இரண்டு கருத்துக்களை ஏககாலத்தில் அது ஏற்றுக்கொள்ளாது. அல்லும் பகலும் உயர்ந்த லக்ஷியத்திலேயே மனது மூழ்கியிருக்குமானால் அவ்வேளையில் அதைத் தூய வெளியோடு ஒப்பிடலாம். உயர்ந்த லக்ஷியத்தினின்று மனதைத் தளர்த்திச் சிறிது நேரத்துக்கு அதன்போக்கில் நாம் விட்டு விடுவோமானால் மேகம் சூழ்ந்த வெளிபோன்று அதில் விதவிதமான எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்து விடுகின்றன. அவ்வெண்ணங்களில் பெரும்பகுதி கீழ்த்தரமானவைகளாகவே இருக்கும். முன்பொருகாலத்தில் எண்ணிய எண்ணங்களே அந்தக்கரணத்தினுள் புதைந்து கிடக்கின்றன. சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுது அவைகள் வெளியே தோன்றி வருகின்றன.

நாம் இரண்டு விதமான உபாயங்களைக் கையாண்டு அத்தகைய கீழ்மைகளை அகற்றிவிடலாம். கீழான எண்ணங்கள் தோன்றி வரும்பொழுது அவ்வெண்ணங்களை நமக்குச்

சொந்தமாக்காது பராமுகமாயிருந்து பழகலாம். வழிப்போக்கன் யாரோ ஒருவன் நம் அருகில் நடந்து செல்கின்றான். அவனுடைய கீழ்மைகளைக் குறித்து நாம் சஞ்சலப்படுவது கிடையாது. ஆனால் நமக்குச் சொந்தம் என்று நாம் அபிமானிக்கும் மனிதன் ஒருவன் நமது அருகிலேயே முறைதவறி நடந்துகொள்வானாகில் நமது மனம் அதனால் பாதிக்கப்படுகிறது. ஓரளவு அக்குற்றத்தை நாமே செய்துவிட்டது போன்று நாம் வியாகூலப்படுகிறோம். அபிமானம்தான் இதற்குக் காரணமாயிற்று. உள்ளத்திலே உதிக்கின்ற எண்ணங்களையும் வேற்றார் போன்று விட்டுவிடுகின்ற மனநிலையையும் பழக்கத்தால் கொண்டுவரலாம். அத்தகைய எண்ணங்களுக்கும் நமக்கும் ஒரு தொடர்பும் இல்லையென்று நாம் உணர்ந்து வருகின்றபொழுது அக்கீழான எண்ணங்களின் வேகம் தானே தணிந்துபோய் விடுகிறது.

மற்றோர் உபாயம் மனதுக்கு எப்பொழுதும் வேலை கொடுத்துக்கொண்டே இருப்பதாம். அதற்கு வேலையில்லாத பொழுதே மனது பொருந்தாத எண்ணங்களுக்கு இடம் கொடுத்து விடுகிறது. உயர்ந்த லக்ஷியத்திலேயே சர்வகாலமும் அதை வைத்திருப்பது சாத்தியப்படாது போய்விடலாம். ஆனால் ஒன்றன்பின் ஒன்றாக உயர்ந்த நோக்கங்களிலேயே அம்மனதைச் செலுத்திக்கொண்டிருப்போமானால் அதற்குக் கீழ்மையில் கலந்து கொள்ள அவகாசமில்லை. நன்மையை ஆழ்ந்து ஆர்வத்தோடு நாடிக்கொண்டிருக்கவேண்டும். அப்படி ஆர்வம் கொள்வது மிக முக்கியமானது. நெருங்கிய உற்றார் ஒருவர் திடீரென்று காலமாய்விட்டார் என்று வைத்துக்கொள்வோம். அதைக் கேள்வியுற்றதும் மனது பெருந்துயரத்தில் மூழ்கிவிடுகிறது. வேறு எண்ணங்கள் அப்பொழுது உள்ளத்தில் தோன்ற முடியாது, அதே விதத்தில் பெரிய லக்ஷியம் ஒன்றில் மனது ஆழ்ந்து மூழ்கியிருக்கும் பொழுது மற்ற எண்ணங்கள் அம்மனத்தகத்துத் தோன்றமாட்டா. தோன்றினாலும் வலிவு பெற்றவைகளாக அவைகள் நிலைத்திருக்கமாட்டா.

ஆக, கீழான எண்ணத்தில் கலந்துகொள்ளாதிருப்பதும் மேலான லக்ஷியத்தில் நாட்டம் கொண்டிருப்பதுமாகிய இவ்விரு உபாயங்களே மனதை வெல்லுதற்கும் அதை உயர்ந்த லக்ஷியத்தில் வைத்திருப்பதற்கும் உற்ற உபாயங்கள் ஆகும்.

கேள்வி: (191) உள்ளம் பரிபாகம் அடைய உடலை வருத்தித்தான் ஆகவேண்டுமா? உடலை வருத்தாது அடைய முடியுமா?

பதில்: உள்ளமும், உடலும் ஒன்றோடொன்று சம்பந்தப் பட்டவைகள். உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சி உடலின் வாயிலாக விளங்குகிறது. இனி, உடலில் உண்டாகும் நலமும் கேடும் உள்ளத்தையும் தொடுகிறது. சூக்ஷ்ம நிலையிலிருப்பது உள்ளம். ஸ்தூல நிலையிருப்பது உடல். உடலுக்கு நோய் வந்தால் உள்ளத்தையும் அது தாக்குகிறது. உள்ளத்தில் சீற்றம், விசனம் போன்ற கேடுகள் அமைந்தால் உடலையும் அவை வாட்டுகின்றன. ஆக, இவ்விரண்டும் ஒன்றோடொன்று இணைந் திருப்பதால் உள்ளத்தைப் பக்குவப்படுத்துவதற்கு ஏற்ற நிலையில் உடலை வைத்திருக்க மனிதன் கடமைப்பட்டிருக் கிறான். உடலைத் தகுந்த நிலையில் வைப்பது வேறு. அதைச் சித்திரவதை பண்ணுவது வேறு. தவம் புரிதலில் அசுரத் தபசு என்பது ஒன்று. உடலை வாட்டி வதைப்பதெல்லாம் அசுரத்தபசின் கூறுகளாம். முள்ளின் மீதும், கூர்மையான இரும்பாணிகள் மீதும் படுத்துக்கிடப்பது, கடும்வெயிலில் நின்று கொண்டிருப்பது, தாங்கவொண்ணாத் தணுப்பு நீரில் நின்று கொண்டிருப்பது, நண்பகலில் சூரியனைப் பார்த்தவண்ணமாய் நிற்பது, உடலைப் பட்டினி போடுவது ஆகியவைகள் அசுரத் தபசில் அடங்கியிருக்கின்றன. அப்படிச் செய்வதால் மனபரிபாகம் வந்து அமையும் என்று உறுதிகூற முடியாது. உடலை வாட்டு வதும் ஒவ்வாது; சுகஜீவனத்தில் வைத்திருப்பதும் ஒவ்வாது. முள்ளின் மீது படுத்துக்கிடப்பது ஒருவிதக் கொடுமை என்றால் அதைச் சொகுசான மிருதுவான மெத்தையின் மீது சயனித் திருக்கச் செய்வது மற்றொருவிதக் கேடாம். ஆகவே உடலை வதைத்தாலும் பொருந்தாது. அதன்மூலம் சொகுசான சுகபோக வாழ்வு வாழ்வதும் பொருந்தாது.

மானுட உடல் கிடைப்பதற்கரிதான கருவியாம். பொருந் தாத உணவு கொடுத்து அதைப் பாழ்படுத்தலாகாது. அறுசுவை யோடு கூடிய மிகைபட்ட உணவு கொடுத்தும் அதைக் கெடுத்துவிடலாகாது. உடலை வாட்டிவதைத்தல் ஒருவிதக் கேடு என்றால் அதை நோகாது, துன்பப்படுத்தாது, வேலை

ஒன்றும் கொடுக்காது பாங்காக வைத்திருப்பது மற்றொரு விதக்கேடு ஆகும்.

சத்து நிறைந்த நல்ல உணவையே உடலுக்குத் தரவேண்டும். உடலைக்கொண்டு மனிதன் நன்றாக உழைத்துப் பாடுபடவேண்டும். சுகபோகத்துக்கு அடிமைப்படலாகாது. பிறர் நலனுக்கு என உடலைக்கொண்டு உழைத்தல் வேண்டும். மிகைபட உழைத்தலும் உழைக்காது சொகுசாக வாழ்ந்திருப்பதும் தகாது. மனதை ஊக்கத்திலும், ஒழுக்கத்திலும், குதூகலத்திலும் செலுத்துதற்கொப்ப உடலை யாண்டும் நல்ல நிலையில் வைத்திருத்தல் வேண்டும். இங்ஙனம் உள்ளத்தையும் உடலை யும் முறையாகப் பயன்படுத்தத் தெரிந்துகொள்ளுகிறவனே வாழ்வாங்கு வாழ்கிறான். வாழ்வில் அடையவேண்டிய நலன் களனைத்தையும் அன்னவனே அடையப்பெறுகிறான். திண்ணிய உடலும், இனிய நல்ல உள்ளமும் இறைவனால் கொடுக்கப் பட்டுள்ள பெரிய வாய்ப்புகளாம். அவ்விரண்டையும் நல்வழியில் நடாத்திச் சீரையும் சிறப்பையும் பெற மனிதன் கடமைப் பட்டிருக்கிறான்.

கேள்வி: (192) மனம் தியானகாலத்தில் சில சமயங்களில் அமைதியாகவும், மற்றும் சில சமயங்களில் அமைதியின்றியும் இருப்பானேன்? கீழான எண்ணங்கள் அப்பொழுது மனதில் உதிப்பானேன்?

பதில்: இயற்கையிலுள்ள நிலையே மனிதனுடைய மனதிலும் இருக்கிறது. அமைதியும் அமைதியின்மையும் இயற்கையில் மாறிமாறி அமைகின்றன. அமைதியும் பொறுமை யும் வடிவெடுத்ததாகப் பூமி தென்படுகிறது. ஆனால் சிலவேளை களில் அதனிடத்து அதிர்ச்சி ஏற்படுவதைக் காண்கிறோம். அமைதியாயிருக்கும் கடல் கொந்தளிப்பு உடையதாகச் சில வேளைகளில் மாறியமைகிறது. இனி நெருப்பிலும், காற்றிலும் அமைதி, அமைதியின்மை ஆகிய இரண்டு பாங்குகளைக் காணலாம்.

மனதோ பெரும்பாலும் அமைதியற்றிருக்கிறது. அயர்ந்த உறக்கத்தில் மட்டும் அது அமைதியுற்றிருக்கிறது. தியானப் பயிற்சியின் மூலமாக விழித்திருக்கின்ற வேளைகளிலும்

மனதிலே அமைதியை உண்டுபண்ண நாம் முயன்று வருகிறோம். ஆசை அதிகரிக்குமளவு மனதில் சஞ்சலமும் அதிகரிக்கிறது. ஆசையை நாம் அகற்றுமளவு மனதில் அமைதியும் நிலைபெறுகிறது. ஆசையை அறவே வென்ற பிறகும் பழைய ஆசையின் வேகம் பல தடவைகளில் மனதைக் கலைக்கும். அப்படி மனதில் உண்டாகின்ற சலனங்களை யெல்லாம் பொருள்படுத்தாது அருள்நாட்டத்திலேயே நாம் கண்ணும் கருத்துமாயிருந்தால் மனதிலுள்ள சலனத்தை விரைவில் வென்றுவிடலாம். மனதை முற்றிலும் வெல்லுகின்ற வர்கள் பரிபக்குவமடைந்த மேன்மக்கள் ஆகின்றனர்.

கேள்வி: *(193)* ஆத்ம சாதனங்கள் செய்வதன் மூலம் உண்மையில் முன்னேற்றமடைகிறோமா? ஏதோ சிற்சில சமயங்களில் மனம் உயர்நிலைக்குப் போவது உண்மைதான். ஆனால் பொதுவாக மனதின் தன்மை அப்படியேதான் இருக்கிறது. The same temptations, உபயோகமற்ற எண் ணங்கள், இனிமையாகத் தென்படும் கற்பனைகள் முதலி யவைகள் மனதில் தோன்றிக்கொண்டேதான் இருக்கின்றன. இவைகளை ஒரேயடியாக ஒழித்த பிறகுதான் மனம் எப்போதும் உயர்நிலையில் இருப்பது எளிதாகும் என்று நம்புகிறேன். இவைகளை ஒழிப்பதற்கென்று இதுவரை எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஒன்றும் பலிக்கவில்லை. மேற்கொண்டு செய்ய வேண்டியது என்ன?

பதில்: நாம் செய்யும் ஆத்ம சாதனங்களெல்லாம் மனபரி பாகம் அடைவதற்குத் துணைபுரிகின்றன. மனது அடைந்து வருகின்ற பரிபாகத்தை எளிதில் அறிந்துகொள்ள முடியாது. ஆகையினால் சாதனத்தில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறி யிருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்வது மிகக் கடினமானது. நடுக்கடலுக்குள் போகும் கப்பல் போன்றது ஆத்ம சாதனம். கரையோரம் கப்பல் போய்க்கொண்டிருந்தால் பயணத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்குப் பூமியில் வெவ்வேறு பகுதிகள் தென் படும். நடுக்கடலுக்குள்ளோ சீர்தூக்கிப் பார்ப்பதற்கு நீர்ப் பரப்பைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இத்தனைநாள் பயணம் போயிருக்கிறோம் என்று மட்டும் கணக்கு வைத்துக்கொள்ள

முடியும். மனது என்னும் கடலுக்குள் ஆத்ம சாதனம் என்னும் கப்பலை நாம் செலுத்தி வருகின்றோம். தளர்வின்றிச் சாதனம் நடைபெற்று வருகிறதா என்பதை மட்டும் நாம் யூகிக்க முடியும். சாதனங்கள் செய்து கொண்டுவருவதற்கிடையில் வேண்டப்படாத பல எண்ணங்கள் தோன்றுவதும் இயல்பு. ஆனால் அத்தகைய எண்ணங்களை வெல்லும் உறுதி மனத்தகத்து வந்துகொண் டிருக்கிறது. இத்தகைய உறுதி சாதனத்தின் விளைவு ஆகும். அல்ப விஷயங்களைக் குறித்து பல தடவைகளில் நாம் சஞ்சலப்படுகிறோம். முறையாக, இடையறாது ஆத்ம சாதனம் செய்து வருகின்றவர்களுக்குச் சிறிது சிறிதாகச் சஞ்சலம் குறைகிறது. இதினின்றும் நாம் சாதனத்தில் முன்னேற்றமடைந்து வருகிறோம் என்று யூகிக்கலாம். சாதனத்தில் சிறிது முன்னேற்ற மடைந்தவர்கள் பின் சாதனத்தை ஒருநாளும் நிறுத்திவிட முடியாது. ஆத்ம சாதனம் புரிவது உணவு உண்பது போன்றும், நீர் அருந்துவது போன்றும், காற்றைச் சுவாசிப்பது போன்றும் நமக்கு இன்றியமையாத செயலாகத் தோன்றும். நாம் முன்னேற்றம் அடைந்துவருவதற்கு இத்தகைய உணர்வும் ஓர் அறிகுறியாகும். மனது தெளிவடைவதற்கு ஏற்ப மனத்தகத்து மெய்ப்பொருள் குடிகொண்டிருப்பது நமக்குத் தெளிவுபட விளங்கும். அதன் பிறகு அம் மெய்ப்பொருளை நாடியிருப்ப திலேயே நாம் ஒருவிதத் திருப்தியடைவோம். ஆத்மசாதனம் என்னும் கடல் பயணத்தில் போகின்றவர்களுக்கு அப்பயணத்தின் முன்னேற்றத்துக்கான அறிகுறிகள் இவைகளேயாம்.

கேள்வி: *(194)* ஹிருதய கமலத்தில் தியானம் செய்யமுடியவில்லையென்றால் புருவமத்தியில் கடவுளை வைத்துத் தியானம் பண்ணலாமா?

பதில்: தியானம் பண்ணிப் பயிலுகிறவர்களுக்கு விக்கிரக ஆராதனை பெரிதும் பயன்படுகிறது. சாதகன் ஒருவன் தன்னு டைய வழிபடு தெய்வத்தின் வடிவத்தை ஒரு படத்திலோ, உருவத்திலோ அமைத்து வைத்துக்கொள்ளுகிறான். குழந்தை யொன்றைப் புறத்தில் பார்த்து நாம் மகிழ்வுற்றிருப்பது போன்று பக்தன் ஒருவன் தான் வழிபடுகிற தெய்வத்தை ஒரு சின்னத்தில்

பார்த்து மகிழ்வடைகிறான். பின்பு அதே மூர்த்தியை அவன் தன் ஹிருதய கமலத்தில் வீற்றிருப்பதாகக் கண்மூடிப் பாவனை பண்ணவேண்டும். "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்பது கோட்பாடு. "என்னுள்ளம் கவர் கள்வன்" என்பதும் கோட்பாடு. பக்தர்கள் எல்லாரும் தாங்கள் வழிபடுகிற தெய்வத்தை ஹிருதய கமலத்தில் வீற்றிருப்பதாகப் பாவித்துப் பழகுகின்றனர். புருவத்துக்கு இடையில் வைத்துப் பழகுவது சற்றுக் கடினமானது. ஆயினும் யாரோ சிலர்க்குப் புருவத்தினிடையில் இறைவனுடைய சாந்நித்தியத்தைப் பாவித்துப் பழகுவது சுலபமாகத் தோன்றினால் அங்ஙனமே செய்யலாம். ஹிருதய கமலத்திலா, அல்லது புருவத்தின் மத்தி யிலா என்னும் கேள்வி முக்கியமானதன்று. கடவுள் நாட்டத்தில் நம்முடைய மனது ஆழ்ந்து மூழ்குகின்றதா என்பதே முக்கிய மான கேள்வியாகும். அலைந்து ஓடித்திரிகிற மனது கடவுள் உணர்வில் மூழ்கியிருக்குமாகில் அக் கடவுளை அகத்தில் வைத்துக் கொள்ளலாம்; அல்லது புறத்தில் வைத்துக்கொள்ளலாம். அக்கடவுளை நெஞ்சத்தில் வைத்துக்கொள்ளலாம் அல்லது புருவத்தின் இடையில் வைத்துக்கொள்ளலாம். எங்கும் நிறை பொருளாயிருக்கிற கடவுளை அவரவர்க்கு உகந்த இடத்தில் தியானிப்பது ஆமோதிக்கப்படுகிறது. ஆனால் சாதனத்தின் ஆரம்பதசையில் உள்ளவர்கள் ஹிருதய கமலத்தில்தான் தியானிக்க முயலவேண்டும். அது கஷ்டமாகத் தோன்றினால் புறத்தில் படம் அல்லது வடிவம் வைத்து அதைப் பார்த்துத் தியானிப்பது எளிதாயிருக்கும். நாளடைவில் மனதை உள் முகமாகத் திருப்புவது எளிதாகிறது. இதற்கு விக்கிரக ஆராதனை பெரிதும் துணைபுரிகிறது. ஆரம்பதசையில் இருப்பவர்கள் புருவ மத்தியில் தியானிப்பதைவிட விக்கிரகத்தில் தியானிப்பது பெரிதும் பொருந்தும்.

கேள்வி: *(195)* ஒருவன் ஐம்புலன்களையும் அந்தக் கரணங்களையும் ஒடுக்கி மோனத்தவம் புரிகையில் கடவுளின் பீஜாக்ஷரங்களில் ஒன்றையும் நினையாமல் மனதைச் சூன்யமாக வைத்துக் கொள்ள முடியுமா? ஒன்றையும் நினையாது மனதைச் சூன்யமாக வைத்துப்

பழகிய ஒரு சான்றோனுக்குச் சிவபோதம் ஏற்படுமா? அல்லது இறைவன் பீஜாக்ஷரத்தைத் தியானித்தால்தான் ஏற்படுமா?

பதில்: ஜீவபோதம், சிவபோதம் என்ற இரண்டுக்குமுள்ள பெரிய வித்தியாசத்தைச் சாதகன் ஒருவன் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். உலக நிலையில் இருப்பதை ஜீவபோதம் என்றும், இதைக் கடந்து அகண்ட சச்சிதானந்தத்தில் இருப்பதைப் பரபோதம் என்றும் சிவபோதம் என்றும் சொல்லுவது வழக்கம். இந்த வேற்றுமையை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களோடு கூடிய இவ்வுலக ஞாபகத்துக்குத்தான் ஜீவபோதம் என்று பெயர். இதற்கு அப்பாலுள்ள உணர்வுக்குப் பரபோதம் என்றும் சிவபோதம் என்றும் ஆத்மபோதம் என்றும் பல பெயரிட்டுப் பெரியோர்கள் அழைத்திருக்கிறார்கள்.

'மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்' என்பது ஆப்த வாக்கியம். மனதற்ற நிலையே முடிந்த நிலை. அந்நிலையை எண்ணிறந்த பாங்கில் பெரியோர்கள் பகர்ந்திருக்கிறார்கள். அயர்ந்து தூங்கும்பொழுது மனம் ஒடுங்கிக் கிடக்கிறது. விழித் தெழுந்திருக்கின்றபொழுது மனது திரும்பவும் தோற்றத்துக்கு வருகிறது. சமாதி நிலையில் மனது நசித்துப் போய்விடுகிறது. சமாதி நிலைக்கும் அயர்ந்த தூக்கத்துக்குமுள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். தூங்குகின்ற நிலையில் மனிதனுக்கு ஆத்ம போதமில்லை. தன்னையும் மறந்த நிலை அது. அந் நிலையில் உலகைப்பற்றி மனிதனுக்கு ஒன்றும் தெரியாது. சூன்யம் போன்று இருக்கிறது. உண்மையில் அது சூன்யமல்ல. ஒன்றுமில்லாததற்கு மனிதனுடைய ஒடுங்கிய உணர்வு சாக்ஷியா யிருந்தது. அந்த ஒடுங்கிய உணர்வு ஆனந்தசொரூபமாகவும் இருந்தது. "ஆனந்தமாக உறங்கினேன். எனக்கு ஒன்றும் தெரி யாது" என்று அந்நிலையைப் பற்றி விழிப்புக்கு வந்த பிறகு மனிதன் பகர்கிறான். வேறு ஒன்றும் இல்லை என்பதற்கு அவனுடைய ஆனந்தநிலையே சாக்ஷியாயிருந்தது. அப்பொழுது தான் இருந்த நிலையை அவன் நன்கு உணர்ந்துகொள்ள வில்லை. சமாதி நிலையும் இந்தத் தூக்கம் போன்றது. ஆனால் சமாதி நிலையில் தன்னைப்பற்றிய உணர்வு திரண்ட உணர்வு

ஆகிறது. உணர்வு திரண்டு இருப்பதால் ஆனந்தமும் திரண்ட பேரானந்தம் ஆகிறது. அதுவே ஆத்மாவின் யதார்த்த நிலை. முக்குணங்கள் என்னும் முப்பாழுக்கு அப்பாற்பட்ட நிலை அது. மூன்று குணங்களில் ஒன்றாகிய தமோகுணம் தூக்கத்தில் மனிதனை இருளில் ஆழ்த்தி வைத்திருந்தது. சமாதியில் குணத்தைக் கடந்திருக்கின்றபொழுது தன் சொரூபத்தை மறைப் பதற்கு ஒன்றுமில்லை. தனது மெய்யான நிலையைத் தானே உணர்ந்து கொள்கிறான். அத்தகைய சமாதி நிலையினின்று திரும்பவும் உலக ஞாபகத்துக்கு வந்தால் அந்த சமாதி நிலையை உலக ஞாபகம் தடைப்படுத்தி விடுவதில்லை. வெறும் தோற்றமாக உலக ஞாபகம் மீண்டும் வருகிறது. அதைக் குறித்துச் சமாதி நிலை அடைந்தவன் மயங்கி விடுவதில்லை. ஆதலால் அவன் மெய்ஞானி என்று அழைக்கப்படுகிறான்.

இந்த நிலை வருவதற்கு முன்பு மனது தூயது ஆக வேண்டும். தூய மனதே முக்குணங்களுக்கு அப்பாற்பட்ட நிலைக்குப் போகவல்லது. மனதைத் தூயதாக்குதற் பொருட்டுப் பஞ்சேந்திரியங்களையும் அடக்கிப்பழகவேண்டும். விதவிதமான சாதனங்கள் செய்யவேண்டும். சாதன வகைகளுள் மந்திர ஜபம் முக்கியமானதொன்று. ஒவ்வொரு மந்திரத்துக்கும் பீஜா க்ஷரம் இருக்கிறது. ஓம் என்னும் பிரணவம் எல்லா மந்திரங் களுக்கும் பொதுவான பீஜமாகும். இதன் பகுதிகளாகக் கணக் கற்ற ஏனைய பீஜாக்ஷரங்கள் இருக்கின்றன. பக்தி சிரத்தையுடன் அவைகளில் எதை உச்சரித்தாலும் மனது பண்பாடு அடைகிறது. பண்பாடு அடைந்த மனது பரம்பொருளில் ஒடுங்குகிறது. அப்பொழுது குறி அடையப்பெற்றதாகிறது.

கேள்வி: *(196)* மனதை ஒருமுகப்படுத்தத் திரு நாமத்தைப் பயன்படுத்துகிறோம். அதோடு கண்ணால் ஓம் வடிவத்தைச் செய்து ஒருமுகப்படுத்தலாமா? கண்ணிற்குத் திறந்தும், மூடியும், அப்பயிற்சி செய்வதால் பார்வைக்கோ, நரம்பிற்கோ கெடுதல் ஏதாவது விளையுமா?

பதில்: தியானம் பண்ண முயலுகின்ற சில ஆத்ம சாத கர்கள் கண்மணியைக் கபாலத்தை நோக்கி உயர்த்த முயலு கின்றனர். அப்படி அவர்கள் முயலுகின்றபொழுது கண்ணில்

வெறும் வெண்பகுதி மட்டும் தோற்றத்தில் இருக்கிறது. கருவிழி பார்வையில் இல்லாது உள்ளே மறைந்துபோய் விடுகிறது. இனி இதற்கு நிகராகக் கண் என்னும் உறுப்பிலே ஓம் என்னும் அக்ஷரத்தை அமைப்பதற்காகக் கண்ணைத் தாறு மாறாகத் திருப்பிவைக்க முயலுகின்றனர். ஸ்தூல உடலில் அமைந்துள்ள கண்களை இப்பாங்குகளில் சித்திரவதை பண்ணுவது ஒருநாளும் ஆத்ம சாதனம் ஆகாது. நுண் கருவியாகிய கண்ணை இப்படியெல்லாம் வாட்டுவது அசுரத் தபசு ஆகும். நரம்புத்தளர்ச்சியும் மண்டையிடியும் பார்வை மங்கலும் இத்தகைய முயற்சியின் விளைவாக உண்டாகும். ஆத்ம சாதகன் இத்தகைய துன்பம் தருகிற செயல்களை அறவே புறக்கணித்தாகவேண்டும். உடல் எவ்விதத்திலும் துன் புறுத்தாது உறுதியானதும் இனிமையானதுமான ஆசனம் போட்டு அமர்ந்திருத்தல் வேண்டும். ஆழ்ந்து ஆத்ம சிந்தனை யில் இருக்கிறபொழுது இலேசாகக் கண் மூடியுள்ள நிலை தானாக வந்தமைகிறது. விவேகானந்த சுவாமிகள் தியானத்தில் அமர்ந்திருக்கும் காட்சியைக் காட்டுகிற படம் இன்றைக்கு எங்கும் அகப்படக்கூடியது. தியானத்திலிருக்கின்றபொழுது அவருடைய கண் அமைப்பு என்ன பாங்கில் இருக்கிறதென்பது அப்படத்தைப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். உடலை எவ் விதத்திலும் துன்பப்படுத்தலாகாது. உடல் உணர்ச்சியை முற்றிலும் மறந்திருப்பது நல்ல ஆத்மசாதனமாகும். இறைவனுடைய நாமத்தை ஊக்கத்தோடு உச்சரிப்பது போதுமானது.

கேள்வி: *(197)* நம்மைத் தளர்வுறச் செய்யும் இடுக் கண்களைக் களைவது எப்படி?

பதில்: சினம் பொல்லாதது. சினந்து கொண்டவன் பைத்தியக்காரன் போன்று நடந்து கொள்கின்றான். சினந்து கொள்ளுதற்கேற்ப அவனுடைய ஆற்றல்கள் விரயமாகின்றன. இக்கோட்பாடுகளை அமைதியுற்றிருக்கும்பொழுது ஆத்மசாதக னொருவன் ஆராய்ந்து பார்க்கவேண்டும். தானே சினந்து கொண்ட பொழுது இச்சிறுமைகளுக்குத் தான் இலக்கு ஆனதை அவன் [illegible] வேண்டும். ஆறுவது சினம் [illegible] [illegible]தியாக விமரிசனம் பண்ணவேண்டும். [illegible]

என்னும் நல்லியல்பை உறுதிப்படுத்தவேண்டும். அது உறுதி பெறுதற்கேற்பச் சினம் தவிர்க்கப்படுகிறது.

பொறாமை பொல்லாதது. மனிதனுடைய ஆற்றலை அது அழிக்கிறது. விவேகத்தை அது விரட்டியோட்டுகிறது. அதற்கு அடிமையாகிறவன் தன்னுடைய தகைமையையே பாழ்படுத்து கிறான். பொறாமைக்குப் பதிலாகப் பிறரிடமுள்ள சிறப்பைப் பாராட்டுதற்கேற்ப இவனுடைய சொந்தச் சிறப்பு பன்மடங்கு அதிகரிக்கிறது. இங்ஙனம் பொருந்தாத மன எழுச்சிகள் தன்னைப் பலஹீனன் ஆக்குவதையும் பொருந்திய மனப் பான்மை தன்னைத் திண்ணியன் ஆக்குவதையும் மனிதன் அனுபவபூர்வமாகக் கண்டுகொள்ளலாம்.

மனிதனுடைய ஆற்றலைத் தகர்த்துத் தளர்வுறச் செய்கின்ற மனநோய் விசனம் என்னும் பெயர் பெறுகிறது. வியாகூலப் பட்டுக் கொண்டிருப்பவன் வாழ்வுக்கு உதவமாட்டான். வருந்துதல் என்னும் வியாகூல நிலைக்கு இடம் கொடுக்கிறவன் மனது மெலிந்து போகிறது. நொந்துநொந்து அவன் நொடித்துப் போகிறான். கண்ணெதிரே மற்றவர்கள் அடைந்துவரும் முன்னேற்றத்தைப் பார்க்கிறான். அத்தகைய வாய்ப்பு தனக்கு அமையவில்லை என்று வருத்தத்தை வளர்க்கிறான். அது தன்னுடைய தலைவிதி என்று தன்னையே நொந்து கொள்ளுகிறான். இப்படி அறியாமையினால் மனிதன் தனக்குத் தானே சிருஷ்டி செய்துகொண்ட துக்கசாகரத்தில் மூழ்கி அல்லல்படுகிறான். நொடிப்பொழுதில் துயரத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பேரார்வத்துடனும், ஊக்கத்துடனும் நல்ல கிருத்தியங்களில் ஈடுபடும் வாய்ப்பு அவன் கைவசத்தில் இருக்கிறது. அதை உணராதிருப்பது மடமையாகும்.

கேள்வி: *(198)* அந்தர்யோகத்தின் முறைப்படி நான் குறிப்பிட்ட நேரங்களில் ஒவ்வொரு வேலையையும் செய்து முடிக்க வேண்டும் என்பது என் விருப்பம். ஆனால் சில சமயம் ஒவ்வொரு வேலையை முடிக்க முயற்சிக்கும்போது காலம் கடந்து சென்று விடுகிறது. அப்போது என் செய்வது?

பதில்: மனிதன் சோம்பித் திரியலாகாது; பதைபதைப்புடன் மிகைபடப் பணிவிடைகள் ஆற்றலாகாது. மனதை அமைதியாக

நடுநிலையில் வைத்துக்கொண்டு ஓயாது வினையாற்றிக் கொண்டே போகலாம். மிகைபட அலுவல்களை ஒருநாளில் செய்து முடித்து விடவேண்டும் என்பது யோகியர்களுடைய போக்கு அன்று. அன்றாடம் எளிதில் முடித்துவிடக்கூடிய அலுவல்களை அளவுபட எடுத்துக்கொண்டு அவைகளை முறையாகச் செய்து நிறைவேற்றிவிட்டால் போதுமானது. நேரம் போதவில்லை என்று எண்ணுகிற பாங்கில் எந்த அலுவலையும் மிகைபட எடுத்துக் கொள்ளலாகாது. அந்தர்யோகத்தில் காலம் முழுதும் ஆத்மசாதனத்துக்கு ஒதுக்கி வைக்கப்படுகிறது. மற்ற காலங்களில் சாதனத்துக்குக் கொஞ்ச காலம் ஒதுக்கி வைத்தால் போதும். அளவுடன் அலுவல்களை எடுத்துக்கொண்டு முறை யாகவும் தொடர்ந்தும் அவைகளை ஆற்றிக்கொண்டு வந்தால் ஒருநாளில் பல அலுவல்களைச் செய்து முடித்து விடலாம். எவ்விதத்திலும் ஒரு சாதகனுக்குரிய ஆற்றலுக்கு மிகைப்பட்ட அலுவல்களை அவன் எடுத்துக் கொள்ளலாகாது. சாதனத்தில் முன்னேறிச் செல்லுகின்றபொழுது திறமை அதிகரிக்கிறது. அப்பொழுது பல அலுவல்கள் விளையாட்டுப் போன்று நிறைவேறிவிடுகின்றன. சிறுகுழந்தை தன் சக்திக்கு ஏற்றவாறு சுமை ஒன்றை எடுத்துச் செல்லுகிறது. வயது முதிர்ந்தவன் தனது ஆற்றலுக்கு ஏற்ற சுமையை எடுத்துச் செல்லுகின்றான். இந்த உபாயத்தை ஆத்ம சாதகன் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். தனக்கும் பிறர்க்கும் பயன்படுகின்ற அலுவல்களை ஒருவன் ஒழுங்காகச் செய்துவந்தால் அதற்குக் கைவசம் உள்ள நேரம் போதுமானது.

கேள்வி: *(199)* பக்தியை வளர்ப்பதற்கும், நெடுநேரம் தியானத்தில் இருப்பதற்கும் என்ன உபாயம்?

பதில்: "குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்பது பழமொழி. குழந்தை ஒன்றனோடு நாம் இணக்கம் கொள்ளுதற்கேற்ப அது நமக்குச் சொந்தமாகிறது. தாயன்பே அதற்குச் சான்றாகிறது. தாய்க்கும் சேய்க்கும் உள்ள இணக்கம் சிரமப்படாது தானாக வந்து அமைகிறது. தெய்வ பக்தியை வளர்ப்பது அதைவிடச் சுலபமானது. 'பக்தி வலையில் படு வோன் காண்க' என்பது ஆப்த வாக்கியம். பக்தியை வளர்க்க

ஆகிறது. உணர்வு திரண்டு இருப்பதால் ஆனந்தமும் திரண்ட பேரானந்தம் ஆகிறது. அதுவே ஆத்மாவின் யதார்த்த நிலை. முக்குணங்கள் என்னும் முப்பாழுக்கு அப்பாற்பட்ட நிலை அது. மூன்று குணங்களில் ஒன்றாகிய தமோகுணம் தூக்கத்தில் மனிதனை இருளில் ஆழ்த்தி வைத்திருந்தது. சமாதியில் குணத்தைக் கடந்திருக்கின்றபொழுது தன் சொரூபத்தை மறைப் பதற்கு ஒன்றுமில்லை. தனது மெய்யான நிலையைத் தானே உணர்ந்து கொள்கிறான். அத்தகைய சமாதி நிலையினின்று திரும்பவும் உலக ஞாபகத்துக்கு வந்தால் அந்த சமாதி நிலையை உலக ஞாபகம் தடைப்படுத்தி விடுவதில்லை. வெறும் தோற்றமாக உலக ஞாபகம் மீண்டும் வருகிறது. அதைக் குறித்துச் சமாதி நிலை அடைந்தவன் மயங்கி விடுவதில்லை. ஆதலால் அவன் மெய்ஞானி என்று அழைக்கப்படுகிறான்.

இந்த நிலை வருவதற்கு முன்பு மனது தூயது ஆக வேண்டும். தூய மனதே முக்குணங்களுக்கு அப்பாற்பட்ட நிலைக்குப் போகவல்லது. மனதைத் தூயதாக்குதற் பொருட்டுப் பஞ்சேந்திரியங்களையும் அடக்கிப்பழகவேண்டும். விதவிதமான சாதனங்கள் செய்யவேண்டும். சாதன வகைகளுள் மந்திர ஜபம் முக்கியமானதொன்று. ஒவ்வொரு மந்திரத்துக்கும் பீஜா க்ஷரம் இருக்கிறது. ஓம் என்னும் பிரணவம் எல்லா மந்திரங் களுக்கும் பொதுவான பீஜமாகும். இதன் பகுதிகளாகக் கணக் கற்ற ஏனைய பீஜாக்ஷரங்கள் இருக்கின்றன. பக்தி சிரத்தையுடன் அவைகளில் எதை உச்சரித்தாலும் மனது பண்பாடு அடைகிறது. பண்பாடு அடைந்த மனது பரம்பொருளில் ஒடுங்குகிறது. அப்பொழுது குறி அடையப்பெற்றதாகிறது.

கேள்வி: (196) **மனதை ஒருமுகப்படுத்தத் திரு நாமத்தைப் பயன்படுத்துகிறோம். அதோடு கண்ணால் ஓம் வடிவத்தைச் செய்து ஒருமுகப்படுத்தலாமா? கண்ணிற்குத் திறந்தும், மூடியும், அப்பயிற்சி செய்வதால் பார்வைக்கோ, நரம்பிற்கோ கெடுதல் ஏதாவது விளையுமா?**

பதில்: தியானம் பண்ண முயலுகின்ற சில ஆத்ம சாத கர்கள் கண்மணியைக் கபாலத்தை நோக்கி உயர்த்த முயலு கின்றனர். அப்படி அவர்கள் முயலுகின்றபொழுது கண்ணில்

வெறும் வெண்பகுதி மட்டும் தோற்றத்தில் இருக்கிறது. கருவிழி பார்வையில் இல்லாது உள்ளே மறைந்துபோய் விடுகிறது. இனி இதற்கு நிகராகக் கண் என்னும் உறுப்பிலே ஓம் என்னும் அக்ஷரத்தை அமைப்பதற்காகக் கண்ணைத் தாறு மாறாகத் திருப்பிவைக்க முயலுகின்றனர். ஸ்தூல உடலில் அமைந்துள்ள கண்களை இப்பாங்குகளில் சித்திரவதை பண்ணுவது ஒருநாளும் ஆத்ம சாதனம் ஆகாது. நுண் கருவியாகிய கண்ணை இப்படியெல்லாம் வாட்டுவது அசுரத் தபசு ஆகும். நரம்புத்தளர்ச்சியும் மண்டையிடியும் பார்வை மங்கலும் இத்தகைய முயற்சியின் விளைவாக உண்டாகும். ஆத்ம சாதகன் இத்தகைய துன்பம் தருகிற செயல்களை அறவே புறக்கணித்தாகவேண்டும். உடல் எவ்விதத்திலும் துன் புறுத்தாது உறுதியானதும் இனிமையானதுமான ஆசனம் போட்டு அமர்ந்திருத்தல் வேண்டும். ஆழ்ந்து ஆத்ம சிந்தனை யில் இருக்கிறபொழுது இலேசாகக் கண் மூடியுள்ள நிலை தானாக வந்தமைகிறது. விவேகானந்த சுவாமிகள் தியானத்தில் அமர்ந்திருக்கும் காட்சியைக் காட்டுகிற படம் இன்றைக்கு எங்கும் அகப்படக்கூடியது. தியானத்திலிருக்கின்றபொழுது அவருடைய கண் அமைப்பு என்ன பாங்கில் இருக்கிறதென்பது அப்படத்தைப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். உடலை எவ் விதத்திலும் துன்பப்படுத்தலாகாது. உடல் உணர்ச்சியை முற்றிலும் மறந்திருப்பது நல்ல ஆத்மசாதனமாகும். இறைவனுடைய நாமத்தை ஊக்கத்தோடு உச்சரிப்பது போதுமானது.

கேள்வி: *(197)* நம்மைத் தளர்வுறச் செய்யும் இடுக் கண்களைக் களைவது எப்படி?

பதில்: சினம் பொல்லாதது. சினந்து கொண்டவன் பைத்தியக்காரன் போன்று நடந்து கொள்கின்றான். சினந்து கொள்ளுதற்கேற்ப அவனுடைய ஆற்றல்கள் விரயமாகின்றன. இக்கோட்பாடுகளை அமைதியுற்றிருக்கும்பொழுது ஆத்மசாதக னொருவன் ஆராய்ந்து பார்க்கவேண்டும். தானே சினந்து கொண்ட பொழுது இச்சிறுமைகளுக்குத் தான் இலக்கு ஆனதை அவன் அமைதியாக விமரிசனம் பண்ணவேண்டும். ஆறுவது சினம்

என்னும் நல்லியல்பை உறுதிப்படுத்தவேண்டும். அது உறுதி பெறுதற்கேற்பச் சினம் தவிர்க்கப்படுகிறது.

பொறாமை பொல்லாதது. மனிதனுடைய ஆற்றலை அது அழிக்கிறது. விவேகத்தை அது விரட்டியோட்டுகிறது. அதற்கு அடிமையாகிறவன் தன்னுடைய தகைமையையே பாழ்படுத்துகிறான். பொறாமைக்குப் பதிலாகப் பிறரிடமுள்ள சிறப்பைப் பாராட்டுதற்கேற்ப இவனுடைய சொந்தச் சிறப்பு பன்மடங்கு அதிகரிக்கிறது. இங்ஙனம் பொருந்தாத மன எழுச்சிகள் தன்னைப் பலஹீனன் ஆக்குவதையும் பொருந்திய மனப்பான்மை தன்னைத் திண்ணியன் ஆக்குவதையும் மனிதன் அனுபவபூர்வமாகக் கண்டுகொள்ளலாம்.

மனிதனுடைய ஆற்றலைத் தகர்த்துத் தளர்வுறச் செய்கின்ற மனநோய் விசனம் என்னும் பெயர் பெறுகிறது. வியாகூலப் பட்டுக் கொண்டிருப்பவன் வாழ்வுக்கு உதவமாட்டான். வருந்துதல் என்னும் வியாகூல நிலைக்கு இடம் கொடுக்கிறவன் மனது மெலிந்து போகிறது. நொந்துநொந்து அவன் நொடித்துப் போகிறான். கண்ணெதிரே மற்றவர்கள் அடைந்துவரும் முன்னேற்றத்தைப் பார்க்கிறான். அத்தகைய வாய்ப்பு தனக்கு அமையவில்லை என்று வருத்தத்தை வளர்க்கிறான். அது தன்னுடைய தலைவிதி என்று தன்னையே நொந்து கொள்ளுகிறான். இப்படி அறியாமையினால் மனிதன் தனக்குத் தானே சிருஷ்டி செய்துகொண்ட துக்கசாகரத்தில் மூழ்கி அல்லல்படுகிறான். நொடிப்பொழுதில் துயரத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பேரார்வத்துடனும், ஊக்கத்துடனும் நல்ல கிருத்தியங்களில் ஈடுபடும் வாய்ப்பு அவன் கைவசத்தில் இருக்கிறது. அதை உணராதிருப்பது மடமையாகும்.

கேள்வி: *(198)* அந்தர்யோகத்தின் முறைப்படி நான் குறிப்பிட்ட நேரங்களில் ஒவ்வொரு வேலையையும் செய்து முடிக்க வேண்டும் என்பது என் விருப்பம். ஆனால் சில சமயம் ஒவ்வொரு வேலையை முடிக்க முயற்சிக்கும்போது காலம் கடந்து சென்று விடுகிறது. அப்போது என் செய்வது?

பதில்: மனிதன் சோம்பித் திரியலாகாது; பதைபதைப்புடன் மிகைபடப் பணிவிடைகள் ஆற்றலாகாது. மனதை அமைதியாக

நடுநிலையில் வைத்துக்கொண்டு ஓயாது வினையாற்றிக் கொண்டே போகலாம். மிகைபட அலுவல்களை ஒருநாளில் செய்து முடித்து விடவேண்டும் என்பது யோகியர்களுடைய போக்கு அன்று. அன்றாடம் எளிதில் முடித்துவிடக்கூடிய அலுவல்களை அளவுபட எடுத்துக்கொண்டு அவைகளை முறையாகச் செய்து நிறைவேற்றிவிட்டால் போதுமானது. நேரம் போதவில்லை என்று எண்ணுகிற பாங்கில் எந்த அலுவலையும் மிகைபட எடுத்துக் கொள்ளலாகாது. அந்தர்யோகத்தில் காலம் முழுதும் ஆத்மசாதனத்துக்கு ஒதுக்கி வைக்கப்படுகிறது. மற்ற காலங்களில் சாதனத்துக்குக் கொஞ்ச காலம் ஒதுக்கி வைத்தால் போதும். அளவுடன் அலுவல்களை எடுத்துக்கொண்டு முறை யாகவும் தொடர்ந்தும் அவைகளை ஆற்றிக்கொண்டு வந்தால் ஒருநாளில் பல அலுவல்களைச் செய்து முடித்து விடலாம். எவ்விதத்திலும் ஒரு சாதகனுக்குரிய ஆற்றலுக்கு மிகைப்பட்ட அலுவல்களை அவன் எடுத்துக் கொள்ளலாகாது. சாதனத்தில் முன்னேறிச் செல்லுகின்றபொழுது திறமை அதிகரிக்கிறது. அப்பொழுது பல அலுவல்கள் விளையாட்டுப் போன்று நிறைவேறிவிடுகின்றன. சிறுகுழந்தை தன் சக்திக்கு ஏற்றவாறு சுமை ஒன்றை எடுத்துச் செல்லுகிறது. வயது முதிர்ந்தவன் தனது ஆற்றலுக்கு ஏற்ற சுமையை எடுத்துச் செல்லுகின்றான். இந்த உபாயத்தை ஆத்ம சாதகன் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். தனக்கும் பிறர்க்கும் பயன்படுகின்ற அலுவல்களை ஒருவன் ஒழுங்காகச் செய்துவந்தால் அதற்குக் கைவசம் உள்ள நேரம் போதுமானது.

கேள்வி: *(199)* பக்தியை வளர்ப்பதற்கும், நெடுநேரம் தியானத்தில் இருப்பதற்கும் என்ன உபாயம்?

பதில்: "குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்பது பழமொழி. குழந்தை ஒன்றனோடு நாம் இணக்கம் கொள்ளுதற்கேற்ப அது நமக்குச் சொந்தமாகிறது. தாயன்பே அதற்குச் சான்றாகிறது. தாய்க்கும் சேய்க்கும் உள்ள இணக்கம் சிரமப்படாது தானாக வந்து அமைகிறது. தெய்வ பக்தியை வளர்ப்பது அதைவிடச் சுலபமானது. 'பக்தி வலையில் படு வோன் காண்க' என்பது ஆப்த வாக்கியம். பக்தியை வளர்க்க

வளர்க்க ஆனந்தம் மேலிடுகிறது. கடவுளைப் பற்றிச் சிந்திப்பதற் கேற்ப அதில் சுவை உண்டாகிறது. உடலைப் பேணுதற்கு, உணவைச் சுவைத்து உண்பதற்கு நிகராக உள்ளத்திலே தெய்வ பக்தியை வளர்ப்பதற்கு, தெய்வ சிந்தனை உற்ற உபாயமாகிறது. தெய்வ சிந்தனை யாண்டும் தூயது. அதில் ஊறி இருப்பதற்கு ஏற்ப உள்ளத் தெளிவும் உறுதியும் உருவெடுக்கின்றன. அடுத்த படியாகக் கடவுளைப் பற்றிய பேச்சையே வளர்க்கவேண்டும். பொருள் சேராத ஏனைய பேச்சுக்களை முற்றிலும் ஒதுக்குதல் வேண்டும். பொருள் சேராத வீண்பேச்சுக்கள் பக்தன் காதில் விழுகின்ற பொழுது அவன் அதை அமைதியாக நிராகரிக் கின்றான்; அல்லது அச்சூழ்நிலையினின்று விலகிக்கொள் கின்றான். அப்படிச் செய்யாவிட்டால் அவனிடத்து உருவெடுத்து வருகிற பக்திக்குப் பங்கம் உண்டாகிறது.

அடுத்தபடியாக அவரவர்க்குற்ற ஐதிகப்படி தெய்வ சாந்நித்தியத்தை அமைத்துக்கொண்டு ஆங்குக் குறிப்பிட்ட வேளைகளில் வீழ்ந்து நமஸ்கரிப்பது முற்றிலும் அவசியம். வீழ்ந்து வணங்குவதால் உடல் வாழ்க்கை நமக்குரியதன்று, அது தெய்வ வணக்கத்துக்கென்றே அமைந்திருக்கிறது என்னும் உறுதிப்பாடு பக்தனுக்கு வருகிறது.

இறைவனுடைய சாந்நித்தியத்தை அகத்தில் உணர்ந்து அந்த உணர்வில் ஊறியிருப்பது தியானமாகிறது. தியானம் பண்ணுவதற்குத் தரையின் மீது பொருத்தமான ஆசனத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். அதன் மீது காலையிலும் மாலையிலும் நிமிர்ந்து உட்கார வேண்டும். கருவி கரணங்களை உள்முகமாகத் திருப்பி உள்ளேயிருக்கிற தெய்வ சாந்நித்தியத் தின்கண் எண்ணத்தை நிலைநாட்டுதல் வேண்டும். ஆரம்ப தசையிலிருப்பவர்கள் இதை அதிக நேரம் செய்யலாகாது. துவக்கத்தில் ஐந்து நிமிஷ தியானம் போதுமானது. பிறகு அது தானாகவே படிப்படியாக அதிக நேரத்தை எடுத்துக் கொள்கிறது. பதினைந்து நிமிஷம் பண்ணுகிற தியானம் ஐந்து நிமிஷத்தில் பண்ணியது போன்று காலம் ஒடுங்குகிறது. அத்தகைய கால ஒடுக்கம் நல்ல தியானத்தின் அறிகுறியாகும். இம்முறைகளையெல்லாம் இனிது நிறைவேற்றுகின்றவர்கள் பக்திமார்க்கத்தில் நன்கு முன்னேறி வருவார்கள்.

கேள்வி: *(200)* ஒரு ஜீவன் இதுநாள் வரைக்கும் முறைதவறி நடந்து தனது புனித சக்திகளையெல்லாம் வீண் விரயமாக்கின பிறகும் தான் இனி முன்னேற்றத்திற்கு வர முடியுமா? அதற்குரிய முறையும் ஆத்மசாதனமும் யாது?

பதில்: ஒரு மனிதன் படைத்துள்ள புனித சக்தியை உடல் அளவையில் வைத்துக் கொண்டால் அது தேய்ந்து முழுதும் விரயமாய் விடுவது இயல்பு. உண்மையில் மனிதனுக்கு உரிய உயர்ந்த சக்திகளெல்லாம் உடல் அளவையோடு நின்று விடுவதல்ல. உடலோடு சம்பந்தப்பட்டிருப்பதாகத் தன்னைப்பற்றி நினைத்துக்கொள்ளும் மனிதன் கடவுளோடு தான் சம்பந்தப் பட்டவன் என்பதை உணரவேண்டும். அவன் கடவுளோடு சம்பந்தப்பட்டிருப்பதுதான் அவனைப் பற்றிய முடிவான உண்மை. உடல்கள் பல வரவும் போகவும் செய்கின்றன. கடவுள் இணக்கமோ என்றைக்கும் தனக்குச் சொந்தம். இந்த இணக்கத்தை உணர ஆரம்பிக்கும் பொழுது அளப்பரிய புதிய ஆற்றல் அவனுக்கு வர ஆரம்பித்து விடுகிறது. ஆக, கடவுளைச் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்ளுதலே ஆற்றலைப் பெறுதற்கு உற்ற உபாயம். அவன் செய்யக் கிடக்கும் சாதனம் கடவுளைச் சார்ந்திருக்கப் பழகுதலேயாம்.

கேள்வி: *(201)* இறைவனிடத்து நாட்டம் கொண்டு பக்தி பண்ணக் குறிப்பிட்ட வயது ஏதாவது உண்டா? "வயோதி கத்தில் இறைவழிபாடு செய்தால் போதும்" என்று சிலர் சொல்லுகிறார்கள் - இது சரியா?

பதில்: மனிதனுக்கு உடல் வளர்ச்சி, உள்ள வளர்ச்சி என்னும் இரு பகுதிகள் உண்டு. உடலும், உள்ளமும் நல்ல முறையில் வளர்ச்சி அடைவது நல்வாழ்விற்குத் துணைபுரிகிறது. உடல் வளர்ச்சிக்கு உணவு அவசியம். உள்ள வளர்ச்சிக்கு கடவுள் வழிபாடு அவசியம். குழந்தை பிறந்தது முதல் அதன் உடலும், உள்ளமும் வளர்ச்சி அடைந்து வருகின்றன. இவ் வளர்ச்சி ஏதோ ஒரு குறிப்பிட்ட வயதில் தொடங்குவது அன்று. பிறந்தது முதல் க்ஷணந்தோறும் இந்நிகழ்ச்சி நடந்து வருகிறது.

உடல் வளர்ச்சிக்கு உணவு உட்கொண்டாக வேண்டும். குழந்தை பிறந்ததும் தாய்ப்பாலை உணவாகக் கொள்கிறது.

பிறகு பசுவின்பால் அதற்கு ஆகாரமாகிறது. உடல் வளர்ச்சி அடைய அடைய வயதிற்கு ஏற்றபாங்கில் உணவின் வகை மாறி அமைகிறது. ஆனால் எல்லாக் காலத்திலும் உணவு உட்கொள்ளுதல் அவசியமாகிறது. பிறந்தது முதல் உணவு உட்கொள்ளுதலும் அதன் விளைவாக உடல் வளர்ச்சியடைவதும் நிகழ்வது போன்று பிறந்தது முதல் இறைவழிபாடும் அதன் பயனாக உள்ள வளர்ச்சியும் அடைவதே சரியான வாழ்வாகும். உடல் மறையும் பரியந்தம் உணவு உட்கொள்ளுதல் நிகழ்ந்தாக வேண்டும். அங்ஙனம் உள்ளம் சச்சிதானந்தத்தில் லயமாகும் பரியந்தம் கடவுள் வழிபாடு நிகழ்ந்தாக வேண்டும். உள்ள வளர்ச்சிக்கு உயர்ந்த எண்ணம் உதவிபுரிகிறது. உயர்ந்த எண்ணமே கடவுள் வழிபாடு ஆகிறது. சிறு குழந்தை தாயினிடத்து அன்பு செலுத்துகிறது. தாய்க்குக் குற்றேவல் புரிவதிலும், தாயைப்பற்றி உயர்வாக எண்ணுவதிலும் குழந்தை ஈடுபடுகிறது. அப்பொழுது மாதா குழந்தைக்குத் தெய்வம் ஆகிறாள். சிறிது வயது வரவரத் தந்தையின் பராமரிப்பில் குழந்தை வளர்ச்சியடைகிறது. அப்பொழுது தந்தைக்குக் குற்றேவல் புரிவதிலும், தந்தையைக் குறித்து உயர்ந்த எண்ணம் கொள்ளுதலிலும் அக்குழந்தையின் இறைவழிபாடு நிகழ்கிறது. எனவே அப்பொழுது பிதா அக்குழந்தைக்குத் தெய்வம் ஆகிறார். கல்விபயிலும் பருவம் வந்தவுடன் குருவினிடம் அக்குழந்தை ஒப்படைக்கப்படுகிறது. குருவிற்குப் பணிவிடை புரிவதும், குரு சொற்படி ஒழுகுதலும், குருவினிடத்துப் பக்தி கொண்டிருத்தலும் அப்போது செய்கின்ற இறைவழிபாடு ஆகிறது. குருவினிடம் முறையாகப் பயிற்சி பெற்ற பிறகு தெய்வத்தை நேரே கிரகிக்கும் ஆற்றல் வருகிறது. அப்பொழுது தெய்வம் என்பது என்ன, தெய்வ வழிபாடு எங்ஙனம் செய்யவேண்டும் என்ற விஷயங்கள் தெளிவாக மனதிற்கு விளக்கமாகின்றன. இங்ஙனம் பிறந்தது முதல் தெய்வ வழிபாடு வயதிற்கு ஏற்ற பாங்கில் மனபரிபாகத்திற்கு ஒத்தமுறையில் நிகழ்ந்து வர வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற முதுமொழி தெய்வவழிபாடு நிகழவேண்டிய முறையை விளக்குகிறது.

பொதுவாக மேற்கூறிய முறையில் இறைவழிபாடு செய்துவரப் பழகுவது உள்ளம் பரிபாகமடையத் துணைபுரிகிறது.

இதற்கு விதிவிலக்கும் உண்டு. பிறந்தது முதல் நேரே இறை வனிடம் தொடர்பு கொண்டு அருள்நாட்டம் கொள்பவர்களும் உண்டு. சுகர், ஞானசம்பந்தர், பிரஹலாதன் போன்ற பெரி யோர்கள் அந்தக் கூட்டத்தைச் சார்ந்தவர்களாவார்கள். ஆக, மனபரிபாகத்திற்கு ஏற்ற தெய்வவழிபாடு எல்லாக் காலங்களிலும் நிகழ்ந்து வரவேண்டும். குறிப்பிட்ட வயது வந்த பிறகுதான் தெய்வ வழிபாடு ஆரம்பிக்கவேண்டும் என்று எண்ணுவது மந்தபுத்தி உடையவர்களது போக்கு. வயோதிகத்தில் இறை வழிபாடு செய்துகொள்ளலாம் என்று சொல்பவர்கள் வயது வந்தபிறகு சாப்பிட்டுக்கொள்ளலாம் என்று சொல்லுவார்களா? அவ்வாறு சொல்லுவார்களேயானால் அது எத்துணைப் பொருளற் றதோ அத்துணைப் பொருளற்றது, வயது வந்த பிறகு கடவுள் வழிபாடு செய்துகொள்ளலாம் என்பதும். மரணம் வருவதற்குக் குறிப்பிட்ட வயது உண்டா? ஆறிலும் சாவு; நூறிலும் சாவு அன்றோ! எப்பொழுது வேண்டுமென்றாலும் நாம் மரணத்திற்கு ஆளாகலாம். கடவுள் வழிபாடு செய்பவன் மரணத்தை வெல் பவன் ஆகின்றான். ஆகவே எல்லாக் காலத்திலும் முறையான கடவுள் வழிபாடு நிகழ்ந்து வருவதே கடைத்தேறுவதற்கு உற்றதொரு உபாயமாகும். வாழ்வில் மேன்மையடைய விரும்பு பவர்கள் காலத்தை ஒத்திப்போடாது கடவுள் வழிபாட்டைத் துவக்கவேண்டும். எனவே வயோதிகத்தில் இறைவழிபாடு செய்தால் போதுமென்று சொல்லுபவர்களுடைய கூற்றைக் காதில் வாங்கிக் கொள்ளாது, கடவுள் வழிபாட்டில் இப்பொழு திருந்தே கருத்துச் செலுத்துவது சரியான முறையாகும்.

கேள்வி: *(202)* ஆத்ம சாதனம் புரிய விரும்புவோர், தம் குடும்பத்தினர்கள் உணவு, உடை முதலியவற்றிற்கு அவதியுறுவாராயின் அவர்களைக் காப்பதே தம் முதற் கடமையாகக் கருதவேண்டும் என்று பெரியோர்கள் கூறு கின்றனர். பெற்ற தாய்க்குச் சகலவிதமான உதவியும், பாது காப்பும் இருக்கும்போது, ஒரே புதல்வனாயும் குடும்ப பந்தத்தைவிட்டு வெளியேற முயற்சிப்பவனாகவும் இருக்கும் ஒருவன் தன் தாயைத் தானும் கவனிக்க வேண்டியது அவசியமா? தாயைத் திருப்தி செய்ய

முயன்றால் பெரிய பந்தத்தில் சிக்க நேரிடுமே என்று அச்சமாய் இருக்கிறது. என்ன செய்யலாம்?

பதில்: ஆத்மசாதனம் செய்யவேண்டும் என்கிற தீவிரமான உணர்ச்சி எல்லார்க்கும் உண்டாவதில்லை. ஆயிரத்தில் ஒருவனுக்கு ஏதேனும் கொஞ்சம் சாதனம் செய்யவேண்டுமென்கின்ற எண்ணம் வருகிறது. அத்தகைய எண்ணம் உள்ளவர்களுள் ஆயிரத்தில் ஒருவனுக்குத் தீவிரமான உணர்வு உண்டாகிறது. அத்தகைய உணர்வு வரும்பொழுது உலகக் காரியங்களுக்கு அவன் செத்துப்போனவன் போன்று ஆய்விடுகிறான். தனக்கு உலகக் கடமைகள் பல இருக்கின்றன என்று மரணத்தை யாரும் ஒத்திவைக்க முடியாது. கடவுள் நாட்டம் ஒருவனுக்குப் பேர் ஆர்வத்துடன் உண்டாகிவிட்டால் இங்கே இயம்பப் பெற்றுள்ள கேள்விகளையெல்லாம் பற்றி நினைக்க அவனுக்கு நேரமில்லை. அவனுடைய அருள்நாட்டத்துக்கு இடைஞ்சலாய் நிற்கும் உற்றார் உறவினர்களெல்லாம் அவனுக்கு யமபடர் போன்று தென்படுவார்கள். அவர்கள் வசத்தில் அவன் அகப்பட்டுக் கொள்ளமாட்டான். தான் ஜன்மமெடுத்திருப்பது எதற்காக என்பதை அந்தச் சாதகன் நன்கு அறிகின்றான். தனது குறியிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றான். தான் செய்யத்தக்கது எது என்பதற்கு அருள்தாகம் உடைய தன்னுடைய மனதே விடை கொடுக்கும். இத்தகைய தீவிர உணர்வு இல்லாதவர்களும் ஆத்ம சாதனம் செய்யலாம். உற்றார் உறவினர்களுக்கு அன்புடன் பணிவிடை செய்வது கடவுள் வழிபாட்டுக்கு ஒப்பானது. அவர்களைத் தங்கள் உற்றார் என்று கருதுவதற்குப் பதிலாகக் கடவுளின் குழந்தைகள் என்று கருதி அவர்களுக்குச் சேவை செய்து வருவதும் ஆத்ம சாதனமாகிறது. தீவிர தியாகமில்லாதவர்கள் உலகிலேயே இருந்து கொண்டு இவ்விதம் சாதனம் செய்யலாம்

கேள்வி: *(203)* ஆத்மபோதத்தை வளர்த்து வருகிற ஒருவன், அந்தச் சாதனத்தைக் கொண்டே உடலுக்கு வருகிற நோயைக் களையமுடியுமா?

பதில்: கனிந்த கனியொன்றில் மேல்தோல் என்றும் உள்ளிருக்கும் சுளை என்றும் இரண்டு பகுதிகள் இருக்கின்றன.

அவையிரண்டும் சேர்ந்தே கனி எனப்படுகிறது. உள்ளிருக்கும் சுளையைப் பாதுகாப்பதற்கு மேல்தோல் அமைந்திருக்கிறது. சுளையை உண்ண ஆரம்பிக்கும்பொழுது மேல்தோல் தேவையில்லை. அது களையப்படுகிறது. பிஞ்சு ஆகவும், காயாகவும், கனியாகவும் பரிபக்குவம் ஆகும் வரையில் மேல்தோல் நன்கு காப்பாற்றி வைக்கப்படுகிறது. உள்ளிருக்கும் பகுதியோ தானாக முதிர்ந்து வருகிறது. மானுட வாழ்க்கை கிட்டத்தட்டக் கனியின் முதிர்ச்சிக்கு ஒப்பானது. மனிதன் உண்மையில் ஆத்ம சொரூபம். அவன் உடலல்ல. ஆனால் பரிபக்குவம் அடையாத மனிதன் தன்னை உடலாக உணருகிறான். உடலைப் பேணுவது ஒன்றே அவன் செய்யக்கிடக்கும் அரிய கடமையாகும். உடம்பை நன்றாகப் பேணுதற்கு ஏற்ப உள்ளிருக்கும் ஆத்ம சொரூபத்துக்கு அவன் தக்க பாதுகாப்பு அமைக்கிறான். பிறகு தக்க தருணத்தில் அவன் தன்னிடத்து ஆத்ம போதத்தை வளர்க்கவேண்டும். உடல் ஞாபகத்தை ஒதுக்கி வைப்பது அதற்கு முற்றிலும் அவசியமாகிறது. பஞ்சபூதங்களால் ஆகிய உடல் நானல்ல என்னும் எதிர்மறைக் கருத்து முதலில் மனதில் வருவிக்கப்படுகிறது. பிறகு நான் சச்சிதானந்தம் என்னும் உடன்பாட்டுக் கருத்து உள்ளத்தில் உரு எடுக்கவேண்டும். நான் தேகமல்லவென்று பிறகு சொல்ல வேண்டிய அவசியமில்லை. தேகத்தைப் பற்றிய நினைவு இல்லாதிருப்பதே ஆத்ம சாதனத்துக்கு உகந்த உபாயமாகிறது.

மனிதனொருவன் சிறிதேனும் நோய்வாய்ப்படாது ஆரோக்கிய நிலையிலிருக்கும் பொழுது அவனுக்கு உடலைப் பற்றிய எண்ணமோ, கவலையோ வருவதில்லை. ஆனால் நோய் வந்ததும் உடலைப்பற்றிய எண்ணமே திரும்பத்திரும்ப வருகிறது. இந்த இயல்பை இனி மாற்றிச் சொல்வது பொருந்தும். அதாவது, ஆத்ம சாதகனுக்கு உடல் உணர்வு வருவது நோய் ஆகிறது. உடலை எண்ணாதிருப்பது ஆரோக்கியமான நிலை. சிறு குழந்தைகளுக்கு உடல் எண்ணம் இல்லை. அது வளர வளர உடல் எண்ணமும் அதிகரிக்கிறது. பின்பு ஆத்ம சாதனத்தில் மேல்நோக்கிப் போவதற்கேற்ப உடலுணர்வு ஒதுக்கப்படுகிறது. உடலுணர்வு வராதிருப்பதே ஆத்ம போதத்தின் அறிகுறியாகும்.

நோய்வாய்ப்படுவது உடலின் கூறு. மக்களுள் நோய்வாய்ப் படாது வாழ்வைக் கொண்டு செலுத்துகிறவர்கள் மிகச் சிலர். பெரும்பான்மையோர்க்கு ஒருகாலம் இல்லாவிட்டால் ஒரு காலத்தில் நோய் வருவது இயல்பு. இது பிராரப்த கர்மத்தின் விளைவாகும். நோய்வாய்ப்படுகிறவர்கள் கீழானவர்கள் என்றும், நோய்வாய்ப்படாதவர்கள் மேலானவர்கள் என்றும் கருதக் கூடாது. நோயால் பீடிக்கப்படுவது மக்களது வாழ்க்கைப் பயனாகும்.

ஆத்ம சாதகர்கள் உடலை வந்து தாக்குகிற நோய்களைப் போக்குதற்கென்று ஆத்மசாதனம் செய்யலாகாது. அதற்கேற்ற சாதனை வகைகள் ஹடயோகத்தில் இருக்கின்றன. ஆனால் ஹடயோகம் உடலைப் பேணுதற்கான ஓர் உபாயமேயொழிய அது ஆத்ம சாதனமாகாது. பின்பு ஆத்ம சாதகன் தானாக வந்தமைகிற நோயினிடத்து வைக்கிற மனப்பான்மையே ஒரு நல்ல சாதனமாகிறது. நோயை நீக்குதற்குச் சிகிச்சை முறை களைக் கையாளலாம். ஆனால் ஜபம், தியானம், பிரார்த்தனை முதலிய ஆத்ம சாதனங்களை நோயைப் போக்குதற்குப் பயன்படுத்தலாகாது. பயன்படுத்தினால் ஓரளவு குணம் பெறலாம். ஆனால் சாதனத்தினின்று பலபடி கீழேயிறங்கி வருவது அதன் விளைவாகும். அப்படிச் செய்வது சாதகனுக்குப் பெரு நஷ்டம். அதற்கு மாறாக நோயை அமைதியாகச் சகித்துக் கொள்ளுதல் சிறந்த சாதனமாகிறது. சகிப்புத்தன்மை திதிக்ஷை எனப்படுகிறது. ஔஷதங்களைக் கையாளுகிற பொழுது மற்ற உயிர்களுக்குப் பணிவிடை செய்வதுபோன்று பற்றற்ற நிலையிலிருந்து அது நிகழ்கிறது. உடல் நோய்வாய்ப் பட்டிருப்பதற்கிடையில் மனம் நோவாதிருப்பது நல்ல சாதன மாகிறது. காயம், கட்டி, புண் முதலியவைகளுக்கு மருந்திட்டுக் கட்டுப்போட்டுப் பாதுகாக்கிறோம். அப்படிப் பாதுகாப்பதற் கிடையில் கட்டியிலோ, புண்ணிலோ பற்றுவைப்பதில்லை. அதேவிதத்தில் உடலுக்குச் சிகிச்சை செய்யலாம்; ஆனால் உடல்பற்று வரலாகாது; மனம் துன்புறலாகாது. தான் உடல் என்னும் உணர்வுக்கு அப்பாற்பட்ட பெருநிலையில் இருந்து கொண்டு உடலின் நோய்க்குச் சிகிச்சை செய்து வரலாம். இதுவே ஆத்ம சாதகன் கையாளுகிற முறையாகிறது.

கேள்வி: *(204)* ஆத்ம சாதனையில் அடையும் முன்னேற்றத்தை அறிவது எப்படி?

பதில்: உள்ளத்தைப் பண்படுத்த ஆத்ம சாதனை புரிகின்றோம். உள்ளம் பண்பட்டு வரவர ஆத்ம சாதனையில் முன்னேறி வருகிறோம் என அறியலாம். இனி உள்ளம் பண்படுவதை அறிவதெப்படி? உடல் ஸ்தூல அமைப்புடன் இருப்பதால் அது வளர்வது நமக்குக் கண்கூடாகத் தெரிகிறது. மேலும் அதை எடை எடுப்பதின் மூலம் அது வளர்ந்திருப்பதை அறியலாம். உள்ளம் சூக்ஷ்மப் பகுதி ஆகையால் அது அடையும் வளர்ச்சி புறத்தே விளங்காது. ஒழுக்கத்திலும் ஆத்மிகத்திலும் நாம் நிலைத்து நிற்கத் தகுதி உள்ளவர்களாக ஆகும்பொழுது நம் உள்ளம் பண்பாடுடையதாகி வருகிறதென்று கொள்ளலாம்.

ஒழுக்கத்தில் முன்னேற்றம் அடைகின்ற அளவு தன்னலம் குறைகிறது. ஒழுக்கத்தில் முன்னேறி இருப்பவன் தன்னைப்பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. அவனுடைய வாழ்வு முற்றிலும் பர நலத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கும். நம்மைப் பற்றிய சிந்தனை குறைந்து நமக்காக என்று வாழும் செயல் ஒழிந்து பிறர்க்கென வாழும் செயல் உடையவர்களாக நம்வாழ்வு அமையுமானால் நாம் ஒழுக்கத்தில் முன்னேறி வருகிறோம் என்று சொல்லலாம். இங்ஙனம் ஒழுக்கத்தில் முன்னேறுவதை ஆத்மசாதனையின் முன்னேற்றம் எனக் கொள்ளலாம்.

பிரக்ஞானம் அல்லது 'இருக்கிறேன்' என்கின்ற உணர்வு நம்மில் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. நாம் எப்படி இருக்கிறோமென்றால் சச்சிதானந்தம் அதாவது ஸத், சித், ஆனந்த சொரூபமாக இருக்கிறோம். ஆனால் அவ்வுணர்வு இருக்கிறதாக நாம் உணர்வதில்லை. நமக்கு அமைந்துள்ள ஜாக்ரதம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்று அவஸ்தை களிலும், 'இருக்கிறேன்' என்கின்ற உணர்வு நம்மிடம் இருந்து வருகிறது. ஆனால் இம் மூன்று அவஸ்தைகளிலும் அவ்வுணர்வு ஒரேமாதிரியாக இருப்பதில்லை. அவ்வுணர்வை சுழுத்தி அவஸ் தையில் பெற்றிருப்பதைவிட சொப்பனாவஸ்தையில் சற்றுத் தெளிவாகவும் ஆழ்ந்ததாகவும் நாம் பெற்றிருக்கிறோம். சொப் பனாவஸ்தையில் பெற்றிருப்பதைவிட ஜாக்கிரதாவஸ்தையில்

இன்னும் சற்றுத் தெளிவாகவும் ஆழ்ந்ததாகவும் அவ்வுணர்வு நம்மிடம் இருக்கிறது. ஆத்ம சாதனைபுரிந்து நம்மிடத்துத் தெய்வத் தன்மையை வளர்த்து வரவரப் பிரக்ஞானம் அல்லது 'இருக்கிறேன்' என்கின்ற உணர்வு தெளிவடைந்து கொண்டே வருகிறது. ஆத்ம சாதனையில் முன்னேற்றமடைந்து வரும் பொழுது அவ்வுணர்வு நம்மிடத்து இருப்பதை நாம் ஆழ்ந்து உணர்பவர்களாகிறோம். 'இருக்கிறேன்' என்கின்ற உணர்வு தெளிவுடையதாகவும், ஆழ்ந்ததாகவும் நம்மிடம் விளங்குமளவு நம்முடைய நிஜ சொரூபம் நமக்கு விளங்குகிறது. 'இருக் கின்றேன்' என்கின்ற உணர்வில் தெளிவு காண்பதும் அதை ஆழ்ந்து உணர்வதும் நம்முடைய நிஜசொரூபத்தை அல்லது ஆத்ம சொரூபத்தை அறிவதற்கு நிகராகிறது. ஆத்ம சாதனை செய்கின்றவனுக்கு 'இருக்கிறேன்' என்கின்ற உணர்வில் தெளிவும், செறிவும் உண்டாகின்றன. அதில் தெளிவும் செறிவும் நம்மிடத்தில் எவ்வளவுக்கெவ்வளவு ஆழ்ந்து உண்டாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆத்மசாதனையில் நாம் முன்னேறி வருகிறோம் என நிச்சயப்படுத்தலாம். இப்பொழுது ஜாக்ரதம், சொப்பனம், சுழுத்தியில் அவ்வுணர்வு ஏற்றத்தாழ்வோடு இருப்பது போன்று சாதனையில் முன்னேற்றம் அடைகிற பொழுது ஏற்றத்தாழ்வை நாம் காண்பதில்லை. அம்மூன்று அவஸ்தைகளிலும் ஒரே மாதிரியான தெளிவையும், செறிவோடு கூடிய உணர்வையும் நாம் பெற்றிருக்கிறோம். ஆத்ம சாதனையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதற்கு இது ஒரு உபாயம் ஆகிறது.

சாதனையில் முன்னேற்றம் அடைகிறபொழுது உள்ளமும், உடலும், மிருதுத்தன்மை உடையதாக மாறி அமைகின்றன. உள்ளம் மிருதுத்தன்மை உடையதாக மாறி அமைவது அன்பின் மூலம் வெளிப்படுகிறது. எல்லா உயிர்களிடத்தும் நம் உள்ளத்தில் அன்பு ஊற்றெடுத்து வருகிறபொழுது அனைத்துயிர் களையும் நேசிக்கும் வல்லமை நம் உள்ளத்துக்கு உண்டாகிறது. அப்பொழுது நம் அன்புக்கு அனைத்துயிரும் கட்டுப்படுகிறது. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி நேசிக்கும் தன்மை நம்மிடத்து எந்த அளவில் அமைகிறதோ அந்த அளவில் சாதனையில் முன்னேறி இருக்கிறோம் என அறிந்து

கொள்ளலாம். இறைவனுடைய நாமத்தை ஜபிப்பதில் நமக்கு இன்பம் ஏற்படுமாயின் சாதனத்தில் முன்னேறி வருகிறோம் என்பதை அது காட்டுகிறது. சாதனையில் உண்மையாக முன்னேறி வருகின்றவன் தன்னகத்தே ஏற்படும் மாறுதலை நன்கு உணரமுடியும். ஆத்ம சாதனையில் அடையும் முன்னேற்றத்தை நாம் இங்ஙனம் அறியலாம்.

கேள்வி: (205) தியானத்தில் நாம் முன்னேற்றம் அடைகின்றோம் என்பதனை எப்படி அறிவது?

பதில்: யோகசாஸ்திரத்திலே ஏழாவது படித்தரத்தில் இருப்பது தியானம். மனதுக்கு உற்சாகத்தையும், மேலாம் உணர்வையும் ஊட்டுகிற எதைக் குறித்து வேண்டுமானாலும் தியானம் பண்ணலாம். மனதை ஒருமுகப்படுத்துவதே தியான மாகிறது. மக்கள் எல்லார்க்கும் மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் இயல்பாகவே அமைந்திருக்கிறது. அந்த ஆற்றலை வளர்க்க எல்லாரும் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆற்றல் தெய்வ சம்பத்தாம். ஆதலால் ஆற்றலை ஓங்குவிப்பது கடவுளை அடைவதற்கு நிகராகிறது. சாதகன் ஒவ்வொருவனும் தங்கள் இஷ்டதெய்வத்தின் மகிமைகளை ஆழ்ந்து எண்ணுவது சிறந்த தியானம். இதற்கு அடுத்தபடியாகப் பிரபஞ்சத்தின்கண் உள்ள மேன்மை, யார் யாருக்கு எதில் விருப்பம் உண்டாகிறதோ அதைக் குறித்து ஆழ்ந்து எண்ணுவது நல்ல தியானமாகிறது. இயற்கையின்கண் அமைந்துள்ள அழகிய காட்சி, சான்றோர் மகிமை, சீரிய எண்ணம் மனதுக்கு ஒத்துள்ள மேலாம் கருத்து ஆகியவைகளைக் குறித்து ஆழ்ந்து எண்ணுவதும் நல்ல தியானமாகிறது.

புதிதாகத் தியானம் பழகுகிற ஒருவன் ஐந்து நிமிஷம் பழகுவானாகில் அது பத்து அல்லது பதினைந்து நிமிஷமாகத் தென்படும். அப்படித் தென்படுவதால் அவனுக்குச் சரியாகத் தியானம் கூடவில்லை என்பது வெளியாகிறது. அதற்கு நேர் மாறாகப் பத்து நிமிஷம் தியானம் பண்ணுகிற ஒருவனுக்கு அது ஐந்து நிமிஷம் போன்று காலம் குறுகுமாகில் அது நல்ல தியானமாகிறது. ஆக, காலத்தை வெல்லுவது நல்ல தியானத்திற்கு அறிகுறியாம். அடுத்தபடியாகத் தியானம்

பண்ணிய பிறகு மனதில் இனிமையும் சாந்தமும் குடிகொள்ளு மாகில் தியானத்தின் முன்னேற்றத்திற்கு அது மற்றொரு அறிகுறி யாகும். நாள்தோறும் நீராடும் பழக்கத்திலிருக்கின்ற ஒருவனுக்கு ஒருநாள் நீராடாவிட்டால் அக்குறை அவன் மனதை வந்து தாக்குகிறது. அதேவிதத்தில் முறையாகத் தியானம் பண்ணுகிற ஒருவன் ஒருநாள் தியானம் பண்ணத் தவறினால் அக்குறையை அவன் உணருகிறான்.

இத்தகைய அறிகுறிகளை அளவையாக வைத்துக்கொண்டு தியானம் பண்ணுகின்ற ஒவ்வொருவனும் தியானத்தில் தான் முன்னேறி வருகிறேனா என்பதனைக் கண்டு கொள்ளலாம்.

கேள்வி: *(206)* ஆத்மசாதனத்தின் மூலம் ஒருவன் அடைந்துள்ள பெருநிலையைத் தானே அறிந்துகொள்ள முடியுமா? அதை மற்றவர்களால் அறிந்துகொள்ள முடியுமா?

பதில்: இக்கேள்விக்கு விடையாகப் பரமஹம்சதேவர் பகர்ந் துள்ள உபதேசமொழி ஒன்றை எடுத்துக்கொள்வோம். அதாவது நெல்லுக்குத்துகிற மாது ஒருத்தி இடையிடையே அதை எடுத்து ஊதிப்பார்த்து நெல்லும் அரிசியும் என்ன விகிதா சாரத்தில் அமைந்திருக்கின்றன என்பதை ஆராய்கின்றாள். அதே விதத்தில் ஆத்மசாதகன் ஒருவன் தான் அடைந்து வரும் முன்னேற்றத்தைப் பற்றி இடையிடையே ஆராய்ச்சி பண்ணவேண்டும்.

ஆத்மசாதனத்தில் முன்னேற்றம் அடைவதற்கேற்ப உலக ஆசைகள் குறைகின்றன. உலகப் பற்றுதல் படிப்படியாக அதன் வேகத்தை இழந்து வருகிறது. அதற்கேற்ப மனதில் உள்ள சஞ்சலம் நீங்கப்பெறுகிறது. அமைதி ஓங்குகிறது. உலக மயமாயிருக்கும் விருப்பும், வெறுப்பும் தாமாகவே தணிகின்றன. இத்தகைய பாங்குகளைத் தான் பெற்றுவருகி றானாவென்று ஆத்ம சாதகன் தனக்குத்தானே ஆராய்ச்சிபண்ணி அறிந்துகொள்ள முடியும்.

சாதனத்தில் ஒருவன் அடைந்து வருகிற முன்னேற்றத்தை மற்றவர்களும் ஒருவிதத்தில் அறிந்துகொள்ள முடியும். ஒருவன் சாதனத்தில் முன்னேற்றம் அடைவதற்கேற்பத் தற்பெருமை

அவனிடத்திலிருந்து தானாக மறைந்து போகிறது. உலக சம்பந்தமான வியவகாரங்களில் ஆத்மசாதகன் தலையிடு வதில்லை. அகங்காரமும் மமகாரமும் அவனிடத்தில் குறைந்து வருகின்றன. சுயநலப்பற்றும், அன்னவனிடமிருந்து அகன்று போவதை மற்றவர்கள் குறிப்பால் அறிந்துகொள்ளமுடியும்.

இவையாவும் ஆத்மசாதனத்தில் ஒருவன் முன்னேற்றம் அடைந்து வருவதற்கு அறிகுறிகளாகும்.

கேள்வி: *(207)* ஒருவர் பெறும் தெய்வீகக் காட்சிகளும் கனவுகளும்தாம் அவர் பெற்றுள்ள ஆன்மிக முன்னேற்றத் தைக் குறிக்கின்றனவா?

பதில்: தெய்வீகக் காட்சிகளும் கனவுகளும் காண்பது நல்ல அறிகுறியே. ஆயினும் சாதகன் ஒருவனுடைய முன்னேற் றத்துக்கு அவைகள் முற்றிலும் அவசியமானவைகள் ஆகமாட்டா. கனவுகள் காண்பது பெரும்பாலும் பழைய பாடம் படிப்பதற்கு நிகராகிறது. அந்த அளவில் தெய்வீகக் கனவுகள் பாராட்டுதற் குரியவைகளாம். ஜாக்ரதாவஸ்தையில் ஒருவன் செய்கிற செயல்களும் எண்ணுகின்ற எண்ணங்களும் சிரமமின்றிக் கனவாக வடிவெடுக்கின்றன. அந்த அளவில் ஒரு மனிதனுடைய மனப்பான்மையை அறிந்து கொள்ளுதற்குக் கனவு பயன் படுகிறது. பின்பு மனப்பான்மை வேறு, முன்னேற்றம் வேறு.

ஆத்ம சாதனத்தில் முன்னேற்றம் அடைந்ததற்கு அறி குறிகள் அவன் படைத்துள்ள மனப்பான்மையேயாம். உலக நாட்டமும் தெய்வீக நாட்டமும் ஒன்று சேர்ந்து இருக்கமாட்டா. சாதனத்தில் முன்னேற்றம் அடைவதற்கேற்பச் சாதகன் ஒரு வனின் மனப்பான்மை பரத்தையே சார்வதாகிறது. இகலோக சம்பந்தமான இலாபநஷ்டங்கள் அவன் மனதை வந்து தாக்கமாட்டா. அடுத்தபடியாகப் பாரமார்த்திக நாட்டம் படைத் திருப்பவனுக்கு உலகத்தவர்களுடைய இணக்கம் எந்த விதத் திலும் உற்சாகம் ஊட்டுவதில்லை. கூடுமானவரையில் அவன் அவைகளை ஒதுக்கித் தள்ளுகிறான். தலைமாணாக்கன் ஒருவ னுக்குப் படிப்பு சம்பந்தமான அனைத்திலும் ஊக்கம் உண்டா வதற்கு நிகராக, ஆத்ம சாதகனுக்குச் சாதன சம்பந்தமான அனைத்திலும் பரநாட்டத்திலும் ஊக்கம் ஓங்கி வளர்ந்து

வருகின்றது. உடல் உறுதிபெற்று வருவதை எடைபோட்டு அறிந்து கொள்கின்றோம். மனம் திண்ணியதாவதை அதனுடைய திண்மை விளக்குகிறது. ஆத்ம சாதனத்தில் முன்னேற்றம் அடைகின்றவனுக்கு மன அமைதியும் பரநாட்டத்தில் ஊக்கமும் மென்மேலும் வளர்கின்றன. இவையே அவனுடைய முன்னேற்றத்துக்கு அறிகுறிகளாகின்றன.

கேள்வி: *(208)* ஆத்மசாதனத்தில் ஈடுபடுகின்றவனுக்கு அகங்காரம் படிப்படியாக அகலவேண்டும். அதற்கு நேர் மாறாக "நான் ஆத்ம சாதகன்" என்னும் அகங்காரம் ஒருவனுக்கு வருமாகில் அது பாராட்டத்தக்கதா இல்லையா?

பதில்: ஆத்ம சாதகன் மட்டுமல்லன், நல்லியல்பு படைத்துள்ள மக்கள் எல்லாருக்குமே அகங்காரம் உதவாது. அகங்காரம் வலுத்து வருவதற்கேற்ப ஒருவனுடைய இகலோக வாழ்வும் பாரமார்த்திக நாட்டமும் தடைபடுகின்றன. இகலோக வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவனுக்குத் தான் சாமார்த்தியசாலி என்னும் அகங்காரம் பெரும்பாலும் வருகிறது. அந்த எண்ணம் ஓங்குமளவு பண்பாட்டில் அன்னவன் கீழோனாகிறான். தான் அல்லாததைத் தானாகக் கருதுவது அகங்காரம். மனிதன் உடல் அல்லன். உயிர் வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதற்கிடையில் உடலைப்பற்றிய உணர்வு பெரிதும் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும்.

சொர்க்கத்தை நாடிப் போய்க்கொண்டிருந்த பாண்டவர்களுக்கிடையில் நகுலனுக்குத் தன் மேனியழகைப் பற்றிய அகங்காரம் ஒருவாறு உருவெடுத்தது. அதன் விளைவாக அவன் வீழ்ந்து மடிந்தான். அத்தகைய அகங்காரம் பொல்லாதது. அகங்காரம் ஆன்மிகத் துறையில் நுழையுமாகில் அது எளிதில் அகற்றப்படமாட்டாது. அது ஆழ்ந்து மனதைப் பற்றிப் பிடித்துக் கொள்கிறது.

இதைக் குறித்துப் பரமஹம்சதேவர் பகர்வதாவது: "உலகத்தவர்கள் ஒருவனைப் பிடித்துள்ள பேயை ஓட்டுதற்குக் கடுகை எடுத்து மந்திரிக்கிறார்கள். ஆனால் அந்தக் கடுகுக்குள்ளேயே பேய் புகுந்திருக்குமாகில் மந்திரிப்பதற்கு அது உதவாது. அதே விதத்தில் உலகத்தவன் ஒருவனைப்

பிடித்துள்ள அகங்காரத்தை அகற்றுதற்கு ஆத்ம சாதனம் பயன்படுகிறது. ஆனால் "நான் ஆத்ம சாதகன், ஆகையினால் மற்றவர்களுக்கெல்லாம் நான் மிக்கவன்" என்னும் அகங்காரம் அவனைப் பிடிக்குமாகில் அத்தகைய கேட்டுக்கு விமோசனம் இல்லவே இல்லை. இதற்கு அடுத்தபடியாகத் தன் பிறப்பைப் பற்றிய அகங்காரம், படிப்பைப் பற்றிய அகங்காரம், செல்வத் தைப் பற்றிய அகங்காரம் ஆகியவைகள் பொல்லாதவைகள்.

அகங்காரத்தில் ஸ்தூலம், சூட்சுமம் என்று இரண்டு பகுதிகள் இருக்கின்றன. மனிதனுடைய படிப்பு, பொருளைப் பற்றிய அகங்காரம் ஸ்தூலமானது. தான் படைத்துள்ள மனபரி பாகத்தைப்பற்றிய அகங்காரம் சூட்சுமமானது. சூட்சுமமான அகங்காரத்தை அகற்றுவது மிகக் கடினமானது. ஸ்தூல மாயுள்ள அகங்காரத்தை மற்றவர்கள் அவனுக்கு எடுத்துக் காட்ட முடியும். மற்று, சூட்சுமமான அகங்காரத்தை விசாரித்துப் பார்த்து, தானே கண்டுபிடிக்கவேண்டும். பிறகு தீவிரமான நடவடிக்கை எடுத்து அதை அகற்றவேண்டும். அதற்கிடையில் இறைவனிடமும் பிரார்த்தனை பண்ணவேண்டும். "இறைவா, பொல்லாத அகங்காரம் என்னைப் பிடித்துக் கொள்ளாதபடி நீ அனுக்ரஹம் பண்ணவேண்டும்" என்று தீவிரமாகப் பிரார்த் தனை செய்து சாதகன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

கேள்வி: *(209)* தியானமா? மக்கள் சேவையா? எதற்கு முதலிடம்?

பதில்: இக்கேள்வியை இன்னொரு விதத்தில் கிளப்பு மிடத்து உண்பதா, உறங்குவதா எதற்கு முதலிடம் தருவது என்கின்ற கேள்விக்கு நிகராகிறது இங்கே கிளம்பியுள்ள கேள்வி. உண்கின்ற வேளையில் மனிதன் உண்ணவேண்டும். உறங்குகின்ற வேளையில் அவன் உறங்கவேண்டும். இவ்விரண்டு செயல்களும் நல்வாழ்வுக்கு இன்றியமையாத வைகளாம்.

மனிதன் நாள்தோறும் தியானம் பண்ணவும் கடவுள் வழிபாடு பண்ணவும் கடமைப்பட்டிருக்கிறான். உண்பதின் வாயிலாக உடலை உறுதிப்படுத்துகின்றோம். அதேவிதத்தில்

கடவுள் வழிபாட்டின் வாயிலாகவும் தியானத்தின் வாயிலாகவும் உள்ளத்தைத் தெளிவுடையதாக்குகின்றோம். மனது அடைகின்ற தெளிவுக்கேற்ப மானுடன் மேலோனாகிறான்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" என்பது மறைமொழி.

மனிதன் உலகிலே தனித்திருந்து வாழமுடியாது. சமுதாயத்தில் ஓர் அங்கத்தினனாக மனிதன் அமைந்திருக்கிறான். அந்த அமைப்பை நிலைநாட்டுதல் பொருட்டும் உறுதிப் படுத்துதல் பொருட்டும் மக்களுக்குப் பணிவிடை பண்ண மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். அப்பணிவிடையை எவ்வளவுக்கெவ்வளவு ஊக்கத்தோடும், முறையாகவும் மனிதன் நிறைவேற்றுகின்றானோ அதற்கேற்றபடி அவன் மனதில் தெளிவுடையவனாகின்றான். ஆதலால் தியானமும், மக்கள் பணிவிடையும் ஒன்றையொன்று சார்ந்திருந்து மக்கள் முன்னேற்றத்திற்குப் பயன்படுகின்றன.

கேள்வி: *(210)* சமுதாயப் பணி செய்வதா? அல்லது ஆன்மிக வளர்ச்சியில் ஈடுபடுவதா?

பதில்: மனிதன் சமுதாயத்தில் ஓர் அங்கமாக இருந்து வருகிறான். ஆதலால் அவனுடைய வாழ்க்கையைத் தனக்கு மட்டும் உரியதாக்கலாகாது. இதற்குச் சான்றொன்றை எடுத்துக் கொள்வோம். மனிதன் உணவு உண்கிறான். அது அலாதியாக நாவின் சுவைக்காகவும் ஜீரணக்கருவியின் பசியைப் போக்குவதற்காகவும் அமைவதன்று. பொருத்தமான உணவையும் பொருந்தாத உணவையும் நா சுவைப்பதன் வாயிலாக எடுத்துக் காட்டுகிறது. பொருந்திய உணவை ஜீரணக்கருவி நன்கு செரிக்கிறது. அங்ஙனம் செரித்த உணவு உடல் முழுதுக்கும் பயன்படுகிறது. உடலிலுள்ள உறுப்புகள் செய்கின்ற செயல்கள் அதனதன் தனி நலனுக்காக அமைந்ததல்ல. அவயவங்களின் செயல் உடல் முழுதுக்கும் பயன்படுகின்றது. அதேபாங்கில் மனிதனுடைய செயல் சமுதாயத்துக்கு நன்கு பயன்படவேண்டும். சுயநலமற்ற மனிதனே சமுதாயத்தில் நல்ல குடிமகனாகிறான்.

இனி, சமுதாயத் தொண்டு வேறு, ஆத்ம சாதனம் வேறு என்று பாகுபடுத்தலாகாது. ஆருயிர்கள் அனைத்தும்

இறைவனிடத்திருந்து வந்தவைகள். உயிர்களனைத்தையும் கடவுள் மயமாகக் கருதுவது ஆத்ம சாதனம். அப்படிக் கருதி னால் மட்டும் போதாது. அந்தந்த உயிர்க்கேற்ற பணிவிடை பண்ணுவது ஆத்ம சாதனம். தனக்கென வாழாது பிறர் நலனுக்கெனவே வாழ்கின்றவன் பெருமகனாகின்றான். பிறர் நலனைப் பிறர்க்கு உதவி செய்கிறேன் என்கிற எண்ணத்தோடு செய்யலாகாது. அப்படிச் செய்கின்ற நலனைக் கடவுள் வழிபாடாகக் கருதிச் செய்தல் வேண்டும். அத்தகைய தூய மனப்பான்மையும் தூய தொண்டும் ஒன்றுசேர்ந்து நலன் விளைவிக்கின்றன. தொண்டின் வாயிலாகவே சமுதாயம் மேன்மையடைகிறது. தூய மனப்பான்மை வாயிலாகத் தொண்டன் தெய்வத்துக்குச் சொந்தமாகிறான். சமுதாய சேவையும் ஆத்ம சாதனமும் ஒன்றேயாம்.

கேள்வி: *(211)* தியானம் செய்வது சரியா? பணிவிடை செய்வது சரியா?

பதில்: தியானம் உள்ளம் அல்லது மனதின் செயல். அது முற்றிலும் தன்மயமானது. தியானம் பண்ணும்பொழுது உலகச் சிந்தனை உள்ளத்தினுள் வரலாகாது. கடவுள் சிந்தனை ஒன்றே உள்ளத்தினுள் இடையறாது ஊற்றெடுத்துக் கொண்டு இருக்கவேண்டும். தியானம் பண்ணும்பொழுது மனிதன் உலகத்தில் ஏதேனும் ஓரிடத்தில் அமர்ந்திருக்கின்றான் என்றாலும் அந்த இடத்தைப் பற்றிய உணர்ச்சி அவனுடைய உள்ளத்தில் உதிப்பதில்லை. கடைசியாகத் தன்னைப்பற்றிய உணர்ச்சியும் அகன்று போகிறது. தெய்வச் சிந்தனை ஒன்றே எஞ்சி நிற்கிறது. இத்தகைய சிந்தனை வலுப்பதற்கேற்ப ஆத்ம சாதகன் தெய்வீகத்தில் ஊறி வளர்கிறான். அத்தகைய நலனை அடைவதற்கேற்ற செயலாகிய தியானம் பாராட்டத் தக்கது. ஆதலால் தியானம் செய்வது சரி என்ற முடிவுக்கு வருகிறோம்.

ஆனால் மனிதன் ஒருவன் நாள் முழுதும் தியானத்திலேயே மூழ்கியிருக்க முடியாது. எப்படி நாளெல்லாம் உறங்கிக் கொண்டிருக்க முடியாதோ, எப்படி நாளெல்லாம் உணவு உண்டுகொண்டே இருக்கமுடியாதோ அப்படி நாளெல்லாம்

தியானம் செய்துகொண்டேயிருக்க முடியாது. சாதாரணமான ஆத்ம சாதகன் ஒருவனுக்குக் காலையில் அரைமணி நேரம் தியானம், நண்பகலில் அரைமணி நேரம் தியானம், மாலையில் அரைமணிநேரம் தியானம்-இங்ஙனம் மூன்று சந்தியா வேளைகளில் மூன்று தடவை தியானம் செய்தால் போதுமானது. மற்ற நேரங்களில் என்ன செய்வது என்னும் கேள்வி பிறக்கிறது. சாஸ்திர ஆராய்ச்சிக்குச் சுமார் இரண்டு மணி நேரம் ஒதுக்கி வைக்கலாம். அதன் பிறகும் காலம் கைவசத்தில் இருக்கிறது. அக்காலத்தை நன்கு பயன்படுத்தவேண்டும். தன்னைப்பற்றிய எண்ணத்திலேயே கழிக்கப்பட்ட நேரம் நன்கு பயன்படுத்தப்பட்ட நேரம் ஆகாது. தன்னைப்பற்றிய நினைவு வருவதற்கு ஏற்ப ஆத்ம சாதகன் கீழ்மையுறுகிறான். தன்னை மறந்திருப்பதற்கு ஏற்ப அவன் மேன்மையுறுகிறான். "தன்னை மறந்திருக்கும் காலமெல்லாம் மனிதன் மேன்மையில் நிலைபெற்றிருக்கிறான்" என்பது கோட்பாடு.

தன்னுடைய தினசரி வாழ்வில் பணிவிடைக்காகவென்று சிறிது நேரம் ஒதுக்கிவைப்பது முற்றிலும் அவசியம். இனி, பணிவிடையென்றால் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். மனிதன் எதைச் செய்தாலும் அதைக் கடவுளின் கைங்கரியமாகக் கருத வேண்டும். மக்களுக்குப் பணிவிடை பண்ணுவது சாலச் சிறந்தது. அவ்வாறு மக்களுக்குப் பணிவிடை பண்ணி வருவதை உலகுக்கு உதவிபுரிவதாகப் பொருள்படுத்தக் கூடாது.

உதவி புரிதல் என்னும் எண்ணம் அகங்காரத்தில் உருவெடுக்கிறது. ஆனால் பணிவிடையோ, அகங்காரத்தைத் துடைக்கிறது. ஆருயிர்களெல்லாம் ஆண்டவனுக்கு உரியவைகள். ஆதலால் ஆருயிர்களுக்குப் புரியும் பணிவிடைகள் ஆண்டவனுக்குரிய பணிவிடைகள் ஆகின்றன. இந்தப் பாங்கிலே பணிவிடை செய்வது முற்றிலும் சரி. தினசரி வாழ்க்கையிலே தியானமும் பணிவிடையும் சேர்ந்தே அமைந்திருக்க வேண்டும்.

நன்கு தியானம் பண்ணுகின்றவர்கள் நன்றாகப் பணிவிடை செய்ய முடியும். நன்றாகப் பணிவிடை செய்கின்றவர்கள் நன்கு தியானம் பண்ண முடியும்.

கேள்வி: *(212)* கீதை படிப்பதைவிடக் கால்பந்து விளையாட்டு மூலமாக மதம் அதிகக் கிட்டத்தில் நெருங்கும் என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். இதன் உட்கருத்தென்ன?

பதில்: விவேகானந்த சுவாமிகளின் கருத்தைத் தவறுதலாக அர்த்தம் பண்ணுவதற்கு இக்கேள்வி இடந்தருகிறது. எந்தச் சந்தர்ப்பத்தில் யாருக்கு இக்கருத்தை விவேகானந்த சுவாமிகள் தெரிவித்தார் என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். வைத்தியர் ஒருவர் நோய்க்கேற்ற மருந்தைத் தருகிறார். ஒரு நோயாளிக்கு விஷத்தையே ஔஷதமாக்கிக் கொடுக்கிறார். அதிலிருந்து ஒவ்வொரு நோயாளியும் நோயை நீக்குதற்கு நாம் விஷத்தை உண்பது நலம் என்று தீர்மானம் செய்தால், தீர்மானப்படி விஷத்தை உண்டால் விபரீதமான விளைவு அதிலிருந்து வந்துவிடும்.

ஞானாசாரியர் ஒருவர் சாதகனுடைய பான்மைக்கேற்ற வாழ்க்கை முறையைப் புகட்டுகிறார். சாதகனுடைய பான்மையை பின்னணியில் தள்ளிவிட்டு, புகட்டிய போதனையை மட்டும் பொதுவிதி என்று எடுத்துக்கொள்வோமானால் அது பெரும் பிசகு ஆகும். அந்நிலையில்தான் இக்கேள்வியும் நிற்கிறது.

மாணாக்கன் ஒருவன் விவேகானந்த சுவாமிகளிடம் அடிக்கடி வருவதுண்டு. அப்பொழுது பகவத்கீதை புஸ்தகத்தை யும் அவன் கையில் கொண்டு வருவான். சந்தர்ப்பம் வாய்க் கும் பொழுதெல்லாம் அவரிடம் கேள்வி கேட்க முயன்று வந்தான். ஏதோ சில சுலோகங்களை எடுத்துச் சொல்லி அவைகளின் உட்கருத்து யாது என்று அவன் அடிக்கடிக் கேட்டுவந்தான். ஆனால் அவன் கேட்ட கேள்விகளுக்கு விவேகானந்த சுவாமிகள் மறுமொழி ஒன்றும் பகரவில்லை. ஏதோ சில சமயங்களில் "நீ அவைகளின் உட்கருத்தைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்" என்று மட்டும் பகர்ந்து வந்தார். மாணாக்கன் அவரிடம் வந்தபொழுதெல்லாம் ஏமாற்றம் அடைந்து வந்தான். ஏனென்றால் தன் கேள்விக்கு ஏற்றவிடை அவரிடமிருந்து வரவில்லை. ஆயினும் அவரிடம் வருவதை அம்மாணாக்கன் நிறுத்திவிடவில்லை. சுவாமிகளை உபத்திரவப் படுத்துகிற முறையில் அவன் அடிக்கடி வந்துகொண்டே

இருந்தான். அவன் வருவதையும் போவதையும் சுவாமிகளோ மனதில் வாங்கிக்கொள்வதில்லை. தம் கர்மத்திலேயே அவர் கண்ணாயிருந்தார். மாணாக்கனுக்கோ நாளடைவில் ஏமாற்றம் உச்சநிலைக்குப் போய்க்கொண்டிருந்தது.

மிகவும் இளகிய மனதுடன் மற்றுமொருநாள் மாணாக்கன் விண்ணப்பித்தான். தனக்கு விளங்காத ஒரு சுலோகத்துக்கு விளக்கம் பகர்ந்தருளவேண்டுமென்று அவன் தாழ்ந்து விண்ணப்பித்துக் கொண்டான். அப்பொழுது சுவாமிகள் பரிந்து அவனுக்குப் பதில் விடுத்தார்: "பிள்ளாய், இப்பொழுது நீ பகவத் கீதையைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். அதை மூடி வைத்துவிடு. சத்துள்ள ஆகாரம் சாப்பிடு. அதை ஜீரணம் பண்ணக்கூடிய சக்தியைப் பெறு. நன்றாக ஓடியாடிக் கால்பந்து விளையாடு. அப்படி விளையாடி உடலை உறுதிப் படுத்திக் கொள். உறுதிபடைத்தவனே உறுதிபடைத்த மற்றொருவனை அறிந்துகொள்ளமுடியும். யானையின் பலத்தைச் சிங்கம் அறிகிறது. சிங்கத்தின் பலத்தை யானை அறிகிறது. யானையின் மீதோ சிங்கத்தின் மீதோ உட்கார்ந்திருக்கும் கொசு ஒன்றுக்கு அப்பெரு விலங்குகளின் பலம் எப்படித் தெரியும்?"

கிருஷ்ண பரமாத்மா பேராற்றலே வடிவெடுத்தவர். அண்டங்கள் அனைத்தும் தவிடுபொடியாக அழிந்துபட்டுப் போகின்ற சூழ்நிலையிலும் அச்செயல்களையெல்லாம் நிம்மதியாக இருந்துகொண்டு வேடிக்கை பார்க்கும் பாங்குடையவர். போர்க்களத்தில் பல்லாயிரம் வீரர்கள் வீழ்வதும் மாய்வதும் அவருடைய மனதில் ஒரு மாறுதலையும் உண்டு பண்ணிவிடமாட்டா. ஜகந்நாதனாகிய அவர் ஜகத்தினுடைய தோற்றம், இருப்பு, ஒடுக்கம் ஆகியவைகளை வெறும் விளையாட்டு என்று பொருள்படுத்துபவர். அர்ஜுனன் போன்ற வீரனுக்கு அவர் கீதையைப் புகட்டினார். கோழை ஒருவனுக்கு அவர் புகட்டிய செய்தி சிறிதும் ஒவ்வாது. அவர் புகட்டிய செய்தியை ஒரு சொல்லில் அடக்கிவிடலாம்.

"எதிரியை வாட்டுபவனே! இழிவான உள்ளத்தளர்வைத் துறந்துவிட்டு எழுந்திராய்."

கீதையின் அடிப்படைத் தத்துவம் இதுவே. மனிதன்

பேராற்றல் படைத்தவன் ஆகவேண்டும். பேரறிவையும் அவன் பெறுதல் அவசியம். அப்பொழுதுதான் அண்டத்தின் நடைமுறை அவனுக்கு விளங்கும். வீரன் போன்று அதில் பங்கெடுத்துக் கொள்ளவும் அப்பொழுதே அவனுக்குச் சாத்தியமாகிறது.

விவேகானந்த சுவாமிகளிடம் கீதா சாஸ்திரத்தை எடுத்துக் கொண்டு வந்த மாணாக்கன் மெல்லிய உடல் படைத்தவன். காற்றடித்தால் கீழே விழுந்துவிடும் பலவீனன், வற்றிப்போன உடல், தளர்ந்துபோன நரம்புகள், உலர்ந்துபோன மூளை இத்தகைய இளைஞனுக்குக் கீதா சாஸ்திரத்தைவிட நல்லுணவும், உற்சாகம் ஊட்டும் விளையாட்டுமே பொருத்த மானவைகள் என்பது சுவாமிகளின் கருத்து. அவர் காட்டிய வழியை அவன் கடைப்பிடித்திருந்தால் சிறிதளவாவது மேன்மை யுறுவான். அதற்கு மாறாக வெறுமனே அவன் கீதா சாஸ்திரம் ஆராய்ச்சி செய்தால் அவனுடைய மூளை மேலும் உலர்ந்து போய்விடும். அப்படி மனிதனை ஒன்றுக்கும் உதவாதவன் ஆக்குவது விவேகானந்த சுவாமிகளின் செய்தியன்று. கிருஷ்ண பரமாத்மாவின் செய்தியும் அத்தகையதன்று. வேதாந்தத்தின் செய்தியே மனிதனை நல்ல தீரனாகவும் வீரனாகவும் அமைப்ப தாம். சிலர்க்கு வெறுமனே சாஸ்திரங்களைப் படிப்பதைவிட ஆற்றல் நிறைந்த செயல்கள் அதிகப் பயன்தரும் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆக, அந்த மாணாக்கனுக்கு விவேகானந்த சுவாமிகள் காட்டிய நல்லுணவும் பந்தாட்டமும் என்ற நெறிதான் சாலச்சிறந்தது. ‘மனிதனது தரத்துக்கேற்ற சாதனைமுறை’ என்பதை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கேள்வி: *(213)* தர்ம சக்கரத்தில் அருள் விருந்து பகுதியில் ஐந்தாவது கருத்தாகப் “பிறர் திட்டுவதைத் தாங்க முடியாதவர் யார்? தன்னிடத்துத் தரம் இல்லாதவனே பிறர் திட்டுவதைத் தாங்க முடியாதவன் ஆகிறான்” என்று எழுதி யிருக்கிறீர்கள். இது எப்படிப் பொருந்தும்?

பதில்: இயற்கையிலுள்ள ஒவ்வொன்றனது தரத்தையும் வலிவையும் இயற்கையிலுள்ள சில நிகழ்ச்சிகள் விளக்கிக் காட்டிவிடுகின்றன. புயற்காற்றடிக்கும்பொழுது தரமில்லாத

மரங்கள் விழுந்துவிடுகின்றன. ஆற்றில் பெருக்கெடுத்து வரும் பொழுது தரமில்லாத தரை கரைந்துபோய் விடுகிறது. அமைப்பில் தரமில்லாத வீட்டில் சுவர் வெடித்துக் குடியிருக்கத் தகுதியற்றதாய் விடுகிறது. வலிவு படைத்ததே வாழ்க்கைக்குரியது என்பது கோட்பாடு. பிறர் திட்டுவதைக் கேட்டு எம்மனிதனும் தடுமாற்றம் அடைந்துவிடலாகாது. அடிக்கும் காற்றை எதிர்த்து கற்பாறை அசைவற்றிருப்பது போன்று பிறருடைய தாக்குதலை அமைதியுடன் சமாளிப்பவனே வல்லவனாகின்றான். திட்டு தலைக்கேட்டுக் கோபித்துக்கொள்ளுபவனும், துயருறுபவனும் வாழ்க்கைக்குத் தகுதியற்றவன். பெருங்காரியம் எதையும் அவனால் சாதிக்கமுடியாது. எல்லா சந்தர்ப்பங்களிலும் மனங் கலங்காது இருந்து பழகுதல் வேண்டும். மனங்கலங்கி விடுபவன் எதிர்ப்பையும் இடுக்கண்களையும் வெல்ல இயலாதவன் ஆய்விடுவான். தரமுடையவன் ஒழுக்கமுடையவனாகவும் இருக் கிறான் என்பது சொல்லாமலே விளங்குகிறது. உலகம் நல்லவர்களையும் தூற்றுகிறது. கெட்டவர்களையும் தூற்றுகிறது. அதற்கெல்லாம் செவிசாய்த்துக் கொண்டிருப்பதற்கு நல்லவர் களுக்கு நேரமில்லை. ஆயினும் நல்வழியில் செல்பவர்கள் ஒன்று செய்ய வேண்டும். திட்டுபவன் தக்க காரணத்தைக் கொண்டு திட்டுவானாகில் நம்மைத் திருத்தியமைப்பதற்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவனுடைய அறியாமை யினால் அவன் திட்டினால் நாம் அதைப் பொருள்படுத்தாது நடுநிலை வகிப்பது அவசியம். இதுவே இக்கூற்றில் அடங்கியுள்ள கருத்தாகும்.

கேள்வி: *(214)* கையில் பொருளும் இருந்து முயற்சியும் செய்கிறபொழுது ஒரு காரியம் ஆகிறதில்லை. கையில் பொருளும் தீர்ந்து முயற்சி செய்யவும் மனதில்லாமல் இருக்கும்போது எதிர்பாராது அக்காரியம் நிறைவேறி விடுகிறது. "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" "முயற்சி திருவினையாக்கும்" என்பவைகளின் பொருள்தான் என்ன?

பதில்: 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்பதும் 'முயற்சி திருவினையாக்கும்' என்பதும் கர்மயோகத்தைப் பற்றிய கோட்பாடுகள் ஆகும். ஆத்மசாதகன் ஒருவன் வாழ்க்கையில்

தான் எடுத்துக்கொண்டுள்ள லக்ஷியத்தில் இடையறாது முயன்று வருகிறான். இன்னல்கள் வருவதைப் பற்றியும் அவன் கவலைப் படுவதில்லை. அப்பர் சுவாமிகள் உழவாரப் பணிவிடை செய்ததையே அதற்குச் சான்றாக எடுத்துக் கொள்ளலாம். கடவுள் காட்சி கிட்டாவிடினும் தமது முயற்சியை நிறுத்தி விடுவதில்லை, இடையறாது முயலுதல் என்கின்ற உறுதிப்பாடே ஆத்மசாதகன் பெறுகின்ற பெரிய பேறு ஆகிறது.

பொருளை முகாமையாக வைத்துக் கொண்டு செய்கிற முயற்சிகளெல்லாம் ஆத்மசாதனத்துக்கு உகந்த தலையாய சாதனங்கள் ஆகமாட்டா. ஏராளமாகச் செல்வம் சம்பாதித் திருக்கிற ஒருவன் நாள்தோறும் நூறுபேருக்கு அன்னதானம் பண்ணுகிறான். கைப்பொருள் ஒன்றுமில்லாத கடவுளுடைய தொண்டன் ஒருவன் அன்னக்காவடி வைத்துக்கொண்டு பத்து வீடுகளில் அன்னமேற்று வந்து சதா நிஷ்டையிலிருக்கிற மற்றொரு ஆத்மசாதகனுக்கு அமுது பண்ணி வைக்கிறான். இத்தொண்டனுடைய செயல் மனபரிபாகம் உண்டுபண்ணுதற் குப் பணக்காரனுடைய செயலைவிடப் பன்மடங்கு மேலானது. முயற்சி யாவும் முக்கியமாக மனநிலையைப் பொருத்ததாகும்.

கேள்வி: *(215)* நல்ல எண்ணங்களை மனதில் நினைத் தாலும், அவற்றைச் செயலுக்குக் கொண்டுவர முடிய வில்லையே! அதற்குக் காரணம் என்ன?

பதில்: எண்ணத்தையும் செயலையும் ஒன்றுபடுத்துவது யோகசாதனத்துக்கு நல்ல அடிப்படையாகிறது. ஆனால் எண்ணத்தையும் செயலையும் ஒன்றுபடுத்துவது மிகக் கடினம். இதையொட்டிய ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. The spirit is willing, but the flesh is weak. நல்லதையே செய்ய வேண்டுமென்று மனது எண்ணுகிறது. ஆனால் உடற்கூறு அதற்கு இடம் தருவதில்லை. இதற்கு நல்ல சான்று ஒன்று சொல்லலாம். புதியதாக (உந்துவண்டி) சைக்கிள் ஓட்டிப் பழகுகிறவன் ஆரம்ப தசையில் ஒரு பிழைக்குப் பெரிதும் இலக்காவான். பாதையில் தென்படும் குழியில் சைக்கிளை ஓட்டலாகாது என்று தீர்மானம் பண்ணிக்கொள்ளுவான். ஆனால் நிகழ்வது யாது? அவன் எண்ணியதற்கு மாறாக

அக்குழியினுள்ளேயே சைக்கிளை ஓட்டித் தள்ளுவான். நல்ல பயிற்சி பெற்றான பிறகு இந்தப் பிழை அவனிடத்தில் நடைபெறாது. அதே விதத்தில் நன்னெறியில் நிலைநிற்க முயலுபவர்கள் ஆரம்பத்தில் நிலைதடுமாறிப் போவார்கள். நல்லொழுக்கம் இன்னதென்று தெளிவுற மனது அறிகிறது. ஆனால் செயலிலோ மனிதன் எப்படியோ வழுவிப் போகிறான். அப்படி வழுவுவதை முன்னிட்டு முயற்சியைக் கைவிடலாகாது. தீயவழியில் போகலாகாது என்னும் எண்ணத்தைத் தீவிரமாக நினைக்கவேண்டும். பிழைபோகிற ஒவ்வொரு தடவையும் மனிதன் தன்னைத் தானே தீவிரமாகக் கடிந்துகொள்ள வேண்டும். இங்ஙனம் எண்ணுகிற எண்ணத்தையும் செய்கிற செயலையும் முற்றிலும் ஒன்றுபடுத்தினால் அது யோக சாதனத்துக்கு நல்லதோர் அடிப்படைப் பயிற்சியாகிறது. ☆

8. ஆலய வழிபாடு

கேள்வி: *(216)* தொண்டில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கடவுள் வழிபாடு அவசியமா?

பதில்: தொண்டு என்னும் சொல்லுக்கு முதலில் விளக்கம் காணவேண்டும். ஊதியத்துக்காகவோ, சம்பளத்துக்காகவோ செய்யும் செயல்களைச் சில வேளைகளில் தொண்டு என்கிறோம். ஆனால் உண்மையில் அது பணிவிடையாகிறது. பிரதிபலனையோ, சம்பளத்தையோ, கைக்கூலியையோ எதிர் பாராதும், ஏற்றுக்கொள்ளாதும் செய்கின்ற கைங்கரியமே உண்மையான தொண்டு ஆகும். கடவுள் நாட்டம் கொண்டுள்ள வர்கள் எல்லோரும் தொண்டர் என்று போற்றப்படுகின்றனர். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவனே தொண்டனாகிறான். தெய்வ வழிபாட்டில் சர்வ காலமும் ஈடுபட்டிருப்பவன் தொண்டன் ஆகிறான். கடவுள் வழிபாட்டில் ஒரு பகுதியாயிருப்பது தொண்டு. வழுத்துதல், போற்றுதல், தியானித்தல், அர்ச்சித்தல், பணிவிடை பண்ணுதல் இவையாவும் சேர்ந்து வழிபாடு ஆகிறது. இவைகளுக்கிடையில் தனியாகத் தொண்டை மட்டும் புரிந்து வருதல் கடவுள் வழிபாடு ஆகுமா என்பது கேள்வி. தொண்டு புரியும்பொழுது கொண்டுள்ள மனப்பான்மை மிக முக்கியமானது. ஒரு சிலர் ஆருயிர்ப் பணிவிடையிலேயே அல்லும் பகலும் ஈடுபட்டிருக்கின்றனர். உயிர்களிடத்துக் கொண்டுள்ள அன்பே அவ்வரிய செயலில் அவர்களைத் தூண்டுகிறது. கடவுள் தத்துவம் அவர்களுக்குத் தெரியாது. அதைப் பற்றிய ஆராய்ச்சியும் அவர்கள் பண்ணுவதில்லை. தங்கள் வாழ்வு மற்றவர்களுக்கு நன்கு பயன்படுவதாகுக என்னும் ஓர் எண்ணமே உள்ளத்தில் உறுதிகொண்டிருக்கிறது.

அத்தகைய செயல் கடவுள் வழிபாட்டுக்கு ஒப்பானது. ஏனென்றால் தனக்காகவென்று செய்கிற செயல்களெல்லாம் மனிதனைப் பிரபஞ்ச வாழ்வில் பிணைக்கின்றன. தன்னை மறந்து பிறர்க்காகவென்று புரியும் பணிவிடைகள் மனிதனைப் பிரபஞ்ச வாழ்வினின்று பிரித்தெடுக்கின்றன. யான், எனது என்னும் செருக்கை அகற்றுகிற செயல் தொண்டு ஆகிறது. கடவுளைப் பற்றியோ, கடவுள் வழிபாட்டைப் பற்றியோ ஒன்றும் அறியாதவர்கள் சிலர் இப்பாங்கில் மக்களுக்குப் பணிவிடை புரிகின்றனர். இப்படிச் செய்கின்றவர்களும் பிறவிப் பெருங்கடலைத் தாண்டுகின்றனர். அப்படித் தாண்டுவதற்கு ஏதுவாயிருக்கும் செயல் தொண்டு ஆகிறது.

கடவுள் தத்துவத்தைப் பற்றி ஆத்ம சாதகர்கள் சிறிதளவாவது அறிந்திருத்தல் வேண்டும். ஆருயிர் அனைத்தும் இறைவனிடமிருந்து தோன்றி வந்துள்ளவைகள் என்னும் கொள்கை கடவுள் தத்துவத்தைப் பற்றிய ஞானமாகிறது. ஆருயிர்களுக்குப் புரிகிற பணிவிடைகளெல்லாம் ஆண்டவனுக்குரிய பணிவிடைகளாகின்றன என்னும் மனத்தெளிவும், கடவுள் தத்துவத்தைப் பற்றிய ஞானமாகிறது. அந்த ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட தொண்டில் ஒருபொழுதும் ஏமாற்றம் இல்லை. தொண்டு புரிகின்றவனை மக்கள் புறக்கணித்தாலும், எதிர்த்தாலும் கடவுள் தத்துவத்தை அறிந்திருக்கிறவனுக்கு ஏமாற்றமில்லை. வாழ்க்கையில் தோல்வியையும் அன்னவன் அறியான்.

கடவுள் வழிபாட்டின் ஏனைய பகுதிகளாகிய பக்தி, பஜனை, தியானம் ஆகியவைகளோடு கூடிய தொண்டே சாலச்சிறந்ததாகிறது. எல்லாவிதச் சுவைகளுடன் கூடிய உணவு நல்லுணவு எனப் பாராட்டப்படுகிறது. எல்லாவிதமான உணவுச் சத்துக்களோடு கூடிய உணவும் நல்லுணவு என அங்கீகரிக்கப்படுகிறது. தனியாக ஒரு சுவை நெடிது திருப்தியை அளிக்காது. அறுசுவையும் நிறைந்துள்ள உணவே திருப்தியை உண்டுபண்ணுகிறது. இதேபாங்கில் தொண்டு என்னும் அரிய செயல் கடவுள் வழிபாட்டில் இடம்பெற்றிருக்க வேண்டும். கடவுள் வழிபாட்டைப் புறக்கணித்துவிட்டு வெறும் தொண்டில் மட்டும் ஈடுபட்டிருப்பது போதாது. நிரந்தரமான திருப்தியோ,

பேரானந்தமோ அதினின்று உருவெடுக்காது. தெய்வ வழிபாட்டிலுள்ள ஏனைய பகுதிகளோடு தொண்டு இணைக்கப் பெறுகிறபொழுதே அது நிலைத்த திருப்தியைத் தருகிறது. மனிதனை உயர்நிலைக்கும் எடுத்துச் செல்ல அது வல்லதாகிறது. ஆதலால் தொண்டை ஏனைய ஆத்ம சாதனங்களினின்று பிரித்துவிடலாகாது.

கேள்வி: (217)

"நெஞ்சமே யினிப் பாவனா தீதமாய்
நின்றிடின் றெனினிற்பா
யெஞ்சு றாதகல் புராணபா வனையையோர்ந்
திலையெனி னுலகெல்லா,
மஞ்சனக்களன் மேனியென் றோர்ந்திலை
யெனினருள் சுரந்தெம்பால்
வஞ்சமற்றிடும் படிக்கிவண் அடைந்ததோர்
வடிவையோர்ந் துய்வாயே"

என்ற வைராக்கிய சதகப் பாடலில் கூறியுள்ள நான்கு வகையான உபாசனைகளையும் அவைகளை அனுஷ்டிக்கும் முறைகளையும் விளக்க வேண்டுகிறேன்.

பதில்: சாதகன் ஒருவன் பரமானந்தத்தைப் பெறுவதற்கு மனதற்றவனாக வேண்டும். அது முடிந்தநிலை. அந்நிலையிலிருப்பதற்குச் சாதகன் தன் சாதனையை ஆழ்ந்து செய்துவரவேண்டும். மனம் பண்பட்டு ஆத்ம ஞானத்தில் திளைத்திருக்கும் சாதகனுக்கு அந்நிலையிலிருப்பது சாத்தியம். அப்படி மனதற்ற நிலையிலிருக்கச் சாத்தியப்படாத சாதகன் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கும் பரம்பொருளை அகண்டாகாரமாய்ப் பார்த்துப் பழகவேண்டும். "அலைகளைப் பார்க்காதே, சமுத்திரத்தைப்பார்" என்று சுவாமி விவேகானந்தர் கூறுவதுபோல் நாம ரூபங்களை மறந்து இப்பிரபஞ்சம் முழுதையும் ஒரே பொருளாகப் பார்த்துப் பழகவேண்டும். இந்த நிலையிலே இருந்து பழகும் மனதுக்கு ஏகாக்ரசிந்தை மிக விரைவில் கிட்டுகிறது. இந்த முறையை அனுஷ்டிப்பது கடினமாகத் தோன்றினால் பரம்பொருளைச் சாதகன் அஷ்ட மூர்த்தியாகப் பார்த்துப் பழகவேண்டும். நிலம், நீர், நெருப்பு,

அத்தகைய செயல் கடவுள் வழிபாட்டுக்கு ஒப்பானது. ஏனென்றால் தனக்காகவென்று செய்கிற செயல்களெல்லாம் மனிதனைப் பிரபஞ்ச வாழ்வில் பிணைக்கின்றன. தன்னை மறந்து பிறர்க்காகவென்று புரியும் பணிவிடைகள் மனிதனைப் பிரபஞ்ச வாழ்வினின்று பிரித்தெடுக்கின்றன. யான், எனது என்னும் செருக்கை அகற்றுகிற செயல் தொண்டு ஆகிறது. கடவுளைப் பற்றியோ, கடவுள் வழிபாட்டைப் பற்றியோ ஒன்றும் அறியாதவர்கள் சிலர் இப்பாங்கில் மக்களுக்குப் பணிவிடை புரிகின்றனர். இப்படிச் செய்கின்றவர்களும் பிறவிப் பெருங்கடலைத் தாண்டுகின்றனர். அப்படித் தாண்டுவதற்கு ஏதுவாயிருக்கும் செயல் தொண்டு ஆகிறது.

கடவுள் தத்துவத்தைப் பற்றி ஆத்ம சாதகர்கள் சிறிதளவாவது அறிந்திருத்தல் வேண்டும். ஆருயிர் அனைத்தும் இறைவனிடமிருந்து தோன்றி வந்துள்ளவைகள் என்னும் கொள்கை கடவுள் தத்துவத்தைப் பற்றிய ஞானமாகிறது. ஆருயிர்களுக்குப் புரிகிற பணிவிடைகளெல்லாம் ஆண்டவனுக்குரிய பணிவிடைகளாகின்றன என்னும் மனத்தெளிவும், கடவுள் தத்துவத்தைப் பற்றிய ஞானமாகிறது. அந்த ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட தொண்டில் ஒருபொழுதும் ஏமாற்றம் இல்லை. தொண்டு புரிகின்றவனை மக்கள் புறக்கணித்தாலும், எதிர்த்தாலும் கடவுள் தத்துவத்தை அறிந்திருக்கிறவனுக்கு ஏமாற்றமில்லை. வாழ்க்கையில் தோல்வியையும் அன்னவன் அறியான்.

கடவுள் வழிபாட்டின் ஏனைய பகுதிகளாகிய பக்தி, பஜனை, தியானம் ஆகியவைகளோடு கூடிய தொண்டே சாலச்சிறந்ததாகிறது. எல்லாவிதச் சுவைகளுடன் கூடிய உணவு நல்லுணவு எனப் பாராட்டப்படுகிறது. எல்லாவிதமான உணவுச் சத்துக்களோடு கூடிய உணவும் நல்லுணவு என அங்கீகரிக்கப்படுகிறது. தனியாக ஒரு சுவை நெடிது திருப்தியை அளிக்காது. அறுசுவையும் நிறைந்துள்ள உணவே திருப்தியை உண்டுபண்ணுகிறது. இதேபாங்கில் தொண்டு என்னும் அரிய செயல் கடவுள் வழிபாட்டில் இடம்பெற்றிருக்க வேண்டும். கடவுள் வழிபாட்டைப் புறக்கணித்துவிட்டு வெறும் தொண்டில் மட்டும் ஈடுபட்டிருப்பது போதாது. நிரந்தரமான திருப்தியோ,

பேரானந்தமோ அதினின்று உருவெடுக்காது. தெய்வ வழிபாட்டிலுள்ள ஏனைய பகுதிகளோடு தொண்டு இணைக்கப் பெறுகிறபொழுதே அது நிலைத்த திருப்தியைத் தருகிறது. மனிதனை உயர்நிலைக்கும் எடுத்துச் செல்ல அது வல்லதாகிறது. ஆதலால் தொண்டை ஏனைய ஆத்ம சாதனங்களினின்று பிரித்துவிடலாகாது.

கேள்வி: *(217)*

"நெஞ்சமே யினிப் பாவனா தீதமாய்
நின்றிடின் றெனினிற்பா
யெஞ்சு றாதகல் புராணபா வனையையோர்ந்
திலையெனி னுலகெல்லா,
மஞ்சனக்களன் மேனியென் றோர்ந்திலை
யெனினருள் சுரந்தெம்பால்
வஞ்சமற்றிடும் படிக்கிவண் அடைந்ததோர்
வடிவையோர்ந் துய்வாயே"

என்ற வைராக்கிய சதகப் பாடலில் கூறியுள்ள நான்கு வகை யான உபாசனைகளையும் அவைகளை அனுஷ்டிக்கும் முறைகளையும் விளக்க வேண்டுகிறேன்.

பதில்: சாதகன் ஒருவன் பரமானந்தத்தைப் பெறுவதற்கு மனதற்றவனாக வேண்டும். அது முடிந்தநிலை. அந்நிலை யிலிருப்பதற்குச் சாதகன் தன் சாதனையை ஆழ்ந்து செய்து வரவேண்டும். மனம் பண்பட்டு ஆத்ம ஞானத்தில் திளைத் திருக்கும் சாதகனுக்கு அந்நிலையிலிருப்பது சாத்தியம். அப்படி மனதற்ற நிலையிலிருக்கச் சாத்தியப்படாத சாதகன் அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கும் பரம்பொருளை அகண்டாகாரமாய்ப் பார்த்துப் பழகவேண்டும். "அலைகளைப் பார்க்காதே, சமுத்திரத்தைப்பார்" என்று சுவாமி விவேகானந்தர் கூறுவதுபோல் நாம ரூபங்களை மறந்து இப்பிரபஞ்சம் முழுதை யும் ஒரே பொருளாகப் பார்த்துப் பழகவேண்டும். இந்த நிலையிலே இருந்து பழகும் மனதுக்கு ஏகாக்ரசிந்தை மிக விரைவில் கிட்டுகிறது. இந்த முறையை அனுஷ்டிப்பது கடினமாகத் தோன்றினால் பரம்பொருளைச் சாதகன் அஷ்ட மூர்த்தியாகப் பார்த்துப் பழகவேண்டும். நிலம், நீர், நெருப்பு,

காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களும் சேர்ந்து அஷ்டமூர்த்தி என்று அழைக்கப்படுகின்றன. பரம்பொருள் இப்பஞ்சபூதங் களாகவும் மனம், புத்தி, அகங்காரமாகவும் ஆகியுள்ளார் என்று மனதை இவைகளிடத்து நிறுத்திப் பழகுவது மூன்றாவது உபாசனை முறையாகிறது. இந்த மூன்றையும் அனுஷ்டிக்கக் கடினமாக இருந்தால் சாதகன் தன் குருவிடத்தில் தன்னை முழுதும் ஒப்படைத்து அவரிடத்தில் அடிபணிந்து விட வேண்டும். இதுவே சாதகன் கையாளவேண்டிய நான்காவது உபாசனை முறையாகும். குருவிடத்தில் அடிபணிந்து விடுவ தென்பது குரு வார்த்தையில் நம்பிக்கை வைத்து மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் குருவுக்குத் தொண்டு புரிந்து வருதலாம். தன் குருவைச் சாதாரண மனித வடிவம் என்று கருதாது, பரம்பொருளே தன்னை உய்விக்கும் பொருட்டுத் தனக்கு உதவிபுரிய இக்குரு வடிவத்தில் இலங்கு கிறார் என்று சாதகன் தன் குருவைக் கருதவேண்டும். இத்தகைய நம்பிக்கையோடு குருவுக்குத் தொண்டுபுரிந்து வருவது குரு உபாசனை ஆகிறது.

மேற்கூறிய பாடலில் இந்த நான்குவித உபாசனை முறைகளும் அமைந்திருக்கின்றன. இவைகளுள் தன் மன இயல்புக்கு ஒத்த உபாசனை முறையைச் சாதகன் அனுஷ்டித்து வரலாம்.

கேள்வி: *(218)* ஆலயங்களில் ஏன் சமய போதனை முறையாகச் செய்யக்கூடாது?

பதில்: ஆலயங்களில் வழிபடச் செல்பவர்களுக்கிடையில் வாழ்க்கை முறை சரியாகக் கையாளப்படுகிறது. அதாவது சமய அனுஷ்டானம் தானாக நிகழ்கிறது. 'Practice is better than precept,' சமயத்தைப் போதிப்பதைவிடப் பழகுவது சாலச் சிறந்தது என்பது கோட்பாடு. 'The best way to preach Vedanta is to live Vedanta,' சமயக் கோட்பாடுகளை மக்களுக்கிடையில் புகட்டுதற்குச் சிறந்த உபாயமாக அமைந்திருப்பது சமயத்தின் அனுஷ்டானமாம் என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்திருக் கின்றார். இக்கோட்பாட்டின்படி ஆலய வழிபாட்டுக்குச்

செல்கின்ற பக்தன் ஒருவன் ஆங்கு முறையாக நடந்து கொள்வானாகில் தன் செயல் மூலம் மற்றவர்களுக்கு அவன் பாடம் புகட்டுகிறான். உடல், உள்ளம் ஆகிய இரண்டும் தூயவைகளாயிருப்பதற்கேற்ப ஆலயத்தினுள் பக்தனுடைய நடத்தையும் தூயதாயிருத்தல் வேண்டும். ஆலயத்தினுள் சென்ற பிறகு சிந்தையினுள் உலக எண்ணங்களை நுழையவிடலாகாது. மௌனமுற்றிருத்தல் அல்லது அடங்கிய குரலில் இறைவனுடைய நாமத்தை ஓதுதல் வழிபடுபவனுக்கு இன்றியமையாத செயல்களாம். கோயிலுக்குள் செல்லும் பக்தனொருவன் மற்றவர்களுக்கு எந்த விதத்திலும் இடைஞ்சல் செய்யலாகாது. சுயநலத்தைப் பின்னணியில் தள்ளிப் பிறர் நலத்தில் கண்ணும் கருத்துமாயிருத்தல் நல்ல வழிபாடாகிறது. மூர்த்தி தரிசனம் செய்தான பிறகு ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து தியானம் பண்ணவேண்டும். தியானம் பண்ண முடியாதவர்கள் மேலான எண்ணத்தில் ஈடுபட்டு உட்கார்ந்திருக்கலாம். இம்முறையில் நடந்து கொள்பவர்கள் தங்கள் செயல்களின் மூலம் நல்ல பிரசாரம் செய்கிறார்கள். Announce of practice is better than tonnes of tall talks - ஓர் இம்மியளவாவது அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவது வண்டி வண்டியாக வாய்ப்பேச்சுப் பேசுவதைவிட மேலானது என்று விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள்ளார்.

கேள்வி: *(219)* சமயங்கள் அனைத்துக்கும் வழிபடுவதற்குக் கோயில்கள் இருக்கின்றன. மற்ற சமயத்தவர்கள் கோயிலுக்குள்ளே வழிபாட்டுக்கு நேரே செல்லுகின்றனர். ஆனால் இந்துக்கள் மட்டும் கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்து பிறகு வழிபாட்டுக்குப் போகிறார்கள். அதற்குக் காரணம் யாதோ?

பதில்: இந்துக்களுடைய தேவாலய அமைப்பு அலாதியானது. மற்ற எந்தச் சமயத்தார்களும் கோயிலை இந்துக்கள் அமைத்து வைத்திருக்கிறபடி செய்யவில்லை. இந்து மதக் கோட்பாட்டுப் பிரகாரம் கோயிலமைப்பில் கருத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. அக்கருத்துக்களை அறிந்து கொண்டால் மக்கள் இந்து மதத்தையே அறிந்து கொண்டவர்கள் ஆவார்கள். கோயிலுக்குள் நுழையும்பொழுது ராஜகோபுரம்

முதலில் வருகிறது. அந்த ராஜகோபுரம் மனிதன் படைத்திருக்கும் ஸ்தூல சரீரத்திற்குச் சின்னமாகிறது. ராஜகோபுரத்தில் அமைந்துள்ள துவாரங்கள் மானுட சரீரத்திலுள்ள துவாரங்களுக்குப் புறச்சின்னங்களாகின்றன. சரீரத்தில் துவாரங்கள் பல இருந்தும் மனது என்னும் துவாரத்தின் வாயிலாகவே மனிதன் பரம்பொருளை நாடித் தியானம் பண்ணுவதற்குத் தன் உடலுக்குள்ளேயே மனதைச் செலுத்துகிறான். அதற்கு நிகராக ராஜகோபுரத்தில் உள்ளே செல்லுவதற்குத் துவாரம் ஒன்றுதான் இருக்கிறது. அது மனதைக் குறிக்கிறது. கோயிலுக்குள்ளே சென்ற பிறகு பலிபீடம் முதலில் வருகிறது. ஆங்கு வழிபடுகிறவன் வீழ்ந்து வணங்குவதின் வாயிலாகத் தன்னிடத்துள்ள சிறுமைகளையெல்லாம் பலிகொடுக்கிறான். அதன் பிறகு உட்பிரகாரத்தினுள் அவன் சுற்றி வருகிறான். அப்படிச் சுற்றி வருவது வலம் வருவது எனப் பகரப்படுகிறது. பிராணாயாமம் என்னும் சாதனத்தில் காற்றை உள்ளே வாங்குதற்கும், வெளிப்படுத்துதற்கும் ஏற்ற முறைகள் உண்டு. அங்ஙனம் காற்றை வாங்கவும், விடவும் செய்கிற செயல்களுக்குப் புறச்சின்னமாக அமைந்திருப்பது சுற்றி வருவதாம். இக்கோட்பாடு சுற்றி வருகிற எல்லாருக்கும் விளங்குவதில்லை. ஆயினும் பிராணாயாமம் என்னும் சாதனத்துக்குப் புறச்சின்னமாக அமைந்திருப்பது பிரதக்ஷிணம் வருவது, வலம் வருவது, சுற்றி வருவது என்னும் செயலாம். ஆத்ம சாதனம் புரிகிறவர்கள் பிராணாயாமம் பண்ணிய பிறகே தங்கள் உள்ளத்தினுள் இதய கமலத்தில் இருக்கும் கடவுளை வழிபாடு பண்ணுகிறார்கள். இதே கோட்பாடு இந்துக்களுடைய தேவாலயத்தில் அமைந்திருக்கிறது. கோயில் வழிபாட்டில் அமைந்துள்ள ஒவ்வொரு பகுதியும் ஆத்ம சாதனத்துக்குப் புறச்சின்னமாய் அமைந்திருக்கிறது. அந்த அமைப்பு அலாதியாக இந்து மதத்துக்கே உரியதாம். உலகிலுள்ள வேறு எந்த மதத்திலும் இந்த அமைப்பைக் காணமுடியாது.

கேள்வி: *(220)* மூல முதற்பொருள் என்று சொல்லக்கூடிய விநாயக மூர்த்தி, எல்லா இடங்களிலும் திறந்த வெளியில் வேம்பு, அரசமரத்தின் அடியில் மேடைமேல்

இருக்கிறார். ஆனால் மற்றப் பெயருள்ள தெய்வங்களுக் கெல்லாம் கோவில் கட்டி, மண்டபம், பிரகாரம், கோபுரம் கட்டி, பூஜை காலங்களில் திறந்தும், மற்ற காலங்களில் பூட்டியும், அலங்கார நகைகள் அணிவித்தும் பள்ளி அறை முதலிய முறைகளை வைத்தும் நடத்துகிற காரணம் என்ன? விநாயக மூர்த்தியைப்போல மற்றெல்லாத் தெய்வங் களையும் சாதாரணமாக எல்லா நேரங்களிலும் எல்லா மக்களும் தொழுவதற்குச் சௌகரியமாக அமைத்து வைத்தால் என்ன?

பதில்: உடலின் துணைகொண்டே உயிர்களை நாம் தெரிந்து கொள்கிறோம். உடல் அழிந்துபட்டுப்போனால் பிறகு உயிரைக் காணமுடியாது. உடலினுள் உயிர் இலங்கிக் கொண் டிருப்பதற்கு அறிகுறிகளும் உடலிலே தென்படுகின்றன. உயிர் நீங்கினால் உடல் பிணமாய் விடுகிறது. உடலை உயிரின் கோயில் எனலாம். உயிர்களனைத்துக்கும் உயிராயிருப்பவர் கடவுள். அப்பேருயிர் எந்த உடலிலே இலங்கிக் கொண்டிருக் கிறார் என்னும் கேள்வி எழக்கூடும். அகிலாண்டங்களும் ஒன்றுசேர்ந்து அவருடைய விராட் சரீரமாகிறது. இந்த சரீரத் தையே அவருடைய ஆலயம் என்றும் இயம்பலாம். உண்மையில் அண்டகோடிகளனைத்தும் சேர்ந்துதான் அவருக்கு ஆலயம் ஆகின்றன. பிறகு மனிதன் கட்டி வைத்துள்ள ஆலயங்கள் எல்லாம், தன்னுடைய திருப்திக்காகவேயொழிய கடவுளின் தேவையின் பொருட்டு அல்ல. மனிதன் கட்டுவித்துள்ள ஆலயங்கள் எல்லாம் உண்மையில் கடவுளுக்கு அவசியமில்லை. எங்கும் நிறைபொருளாகிய அவரைத் தான் கட்டிவைத்துள்ள ஆலயங்களுள் எழுந்தருளப் பண்ணியிருப்பதாக மனிதன் எண்ணித் திருப்தியடைகிறான். பொருள் மிகச் செலவிட்டுப் பெரிய கோயில்கள் கட்டுவது, விலையுயர்ந்த ஆடை ஆபரணங் களைக் கடவுள் வழிபாட்டில் பயன்படுத்துவது ஆகிய இவை யாவும் மனிதனுடைய திருப்திக்காகவென்று மனிதனால் அமைக்கப்பெற்றவைகள் ஆகின்றன. உண்மையில் கடவுளுக்கு இவையாவும் இன்றியமையாதவைகளன்று.

கடவுள் வழிபாட்டில் இரண்டு பகுதிகளை மக்கள் அமைத்து வைத்துள்ளார்கள். மனிதன் விரும்புகிற பொழுதெல்லாம்

விரும்புகிறபடி வழுத்துதற்கு எவ்விடத்தில் வேண்டுமானாலும் கணபதியின் ஆலயம் அமைக்கப் பெற்றிருக்கிறது. வழிபட விரும்புகிறவனுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் எளிதில் கணபதி ஆலயங்கள் மூலம் அமைத்து வைத்திருக்கிறார்கள். இனி, ஆடம்பரம் நிறைந்த மற்ற கோயில்களில் அமைந்துள்ள வழிபாட்டுமுறை இன்னொரு முறையில் மனிதனுக்குத் திருப்தியை உண்டுபண்ணுகிறது. ஏதோ குறிப்பிட்ட வேளையில்தான் தரிசனம் பெறமுடியும் என்றும், ஆராதனை முறைகளெல்லாம் ஐதிகத்துக்கு ஒப்ப நடைபெற்று வருகின்றன வென்றும் இப்படியெல்லாம் நியமனங்களை உண்டுபண்ணி விட்டால் அவை வேறு ஒருவிதத்தில் மக்கள் உள்ளத்தில் பக்தியை ஊட்டும். குறிப்பிட்ட வேளையில்தான் ஒரு பெரிய மனிதனைப் பார்க்க முடியும் என்றால் அப்படிப் பார்ப்பதற்கு விருப்பமுடையவர் ஆவலுடன் காத்திருக்கின்றனர். அப்படிக் காத்திருந்து காணுங்கால் உள்ளத்தில் உயர்ந்த உணர்வு தானாக உண்டாகிறது. விரும்பிய பொழுதெல்லாம் ஒரு பெரியவரைக் காணுதல் என்றால் காட்சிக்கு எளிமையின் மூலம் மதிப்புக் குறைந்து போய்விடுகிறது. உள்ளத்தில் ஆர்வமும் அப்பொழுது உண்டாவதில்லை. பெரிய பாதுகாப்புடன் அமைக்கப்பெற் றிருக்கும் ஆலயங்களுள் எழுந்தருளியிருக்கும் தெய்வத்தைத் தரிசனத்துக்கென்று அமைந்துள்ள வேளையில் முறையாகத் தரிசிக்குங்கால் பக்தியும், பேருணர்வும் உள்ளத்தில் ஓங்குகின்றன. இச்சீரிய நோக்கத்துடனே பெரிய ஆலயங்களில் கட்டுப்பாடோடு கூடிய வழிபாடுகளை அமைத்து வைத்திருக்கிறார்கள். பாமரர் மனதைப் பண்படுத்துதற்கு அத்தகைய வழிபாட்டு முறை நன்கு பயன்பட்டு வருகிறது. ஆதலால் அது முற்றிலும் வேண்டப் படுவதே. மனிதனுடைய மனதை உயர்நிலைக்கு உயர்த்துதற்கு என்னென்ன வழிபாட்டு முறைகளெல்லாம் தேவையோ அவைகளை ஆன்றோர் அமைத்து வைத்திருக்கின்றனர்.

மக்கள் இயல்பை அனுசரித்தே தெய்வ வழிபாடும் அமைக்கப்பெற்றிருக்கிறது. பிள்ளையாண்டான் ஒருவனோடு நாம் எப்பொழுது வேண்டுமானாலும், எவ்விடத்தில் வேண்டு மானாலும், எவ்விதத்தில் வேண்டுமானாலும் இணக்கம் கொண்டாடலாம். ஆனால் முதியோர்களுடன் அப்படித்

தொடர்பு வைக்க முடியாது. ஒழுங்குப்பாடுகள் சிலவற்றிற்கு உட்பட்டே அவர்களோடு இணக்கம் வைக்கிறோம். அதே கோட்பாடு கடவுள் வழிபாட்டிலும் அமைந்துள்ளது.

கேள்வி: *(221)* வழிபாட்டில் உருவ வழிபாடு சிறந்ததா? அருவ வழிபாடு சிறந்ததா?

பதில்: கடவுளுக்குக் கற்பனையாகவோ, ஒரு விக்கிரகத்தின் வாயிலாகவோ வடிவத்தை அமைத்துக்கொண்டு வழிபடுவது உருவ வழிபாடாகிறது. மனிதன் தானே உருவம் எடுத்துள்ளான். உருவம் எடுத்துள்ள மனிதனுக்கு உருவத்தின் வாயிலாகவே கடவுள் வழிபாடு பண்ணுவது மிகச் சுலபம்.

மற்றுக் கடவுள் பிரபஞ்சமெங்குமுள்ள அனைத்துமாய் உருவம் எடுத்திருக்கின்றார். எனினும் அந்த உருவங்களை யெல்லாம் கடந்த நிலையிலும் அவர் இருக்கின்றார். கடவுள் என்ற சொல் உருவங்களைக் கடந்திருப்பவரும் அவற்றின் உள்ளே இருப்பவரும் எனவும் பொருள்படுகிறது. கடந்த நிலையில் வைத்து அவரை வழிபடுகின்றவர்கள் அறிவு சொரூப மாகவும் ஆனந்தமயமாகவும் அவரைக் கருதுகின்றனர். இந்த இரண்டுவித வழிபாடுகளுள் உருவம் தாங்கியுள்ள மனிதனுக்கு உருவ வழிபாடே மிக எளிதில் கைகூடுகிறது. உருவ வழிபாடு அருவ வழிபாடு ஆகிய இரண்டினுள் யாருக்கு எது சிறந்தது எனத் தோன்றுகிறதோ அம்முறையில் அன்னவன் வழிபாடு செய்யலாம்.

கேள்வி: *(222)* கோயிலில் சிலவகைப் புஷ்பங்களை வழிபாட்டுக்குப் பயன்படுத்தலாம் என்றும், வேறு சிலவகைப் புஷ்பங்களைப் பயன்படுத்தலாகாது என்றும் நியமனங்கள் தோன்றியுள்ளன. அந்த நியமனங்களைப் பற்றி ஒன்றும் அறியாதவர்கள் என்ன செய்யவேண்டும்?

பதில்: புஷ்பங்களுள் எவைகளிடத்து நறுமணம் கமழு கின்றதோ, அல்லது எவைகளிடத்துத் தேன் உருவெடுக்கின்றதோ அவைகளையெல்லாம் கடவுள் வழிபாட்டுக்குப் பயன்படுத்தலாம் என்பது பொது விதி. இனி, இன்னின்ன புஷ்பங்கள் அல்லது பத்ரங்கள் இன்னின்ன தெய்வங்களுக்கு உகந்தவைகள் என்னும்

ஐதிகமும் வந்துள்ளது. இத்தகைய நடைமுறைகளினின்று மாறுபடுவது பிழையாகுமா? பாபமாகுமா? கடவுளுக்கு அபராதம் செய்த செயலாகுமா? இத்தகைய ஐயங்கள் எழுவது இயல்பு. ஆத்மசாதகன் ஒருவன் உலக ஐதிகத்தை அனுசரித்துப் போவது முறை. ஆனால் வசதியை முன்னிட்டோ, சூழ்நிலையை முன்னிட்டோ நெருக்கடியை முன்னிட்டோ ஐதிகத்தினின்று பிறழலாம். அதில் தோஷமில்லை; பாபமில்லை. தெய்வத்துக்குச் செய்த அபராதமும் இல்லை. ஏதேனும் ஓர் இடத்தில் ஏராளமாகத் துளசிப் பத்திரங்கள்தான் இருக்கின்றன. வில்வப் பத்திரங்கள் இல்லை என்று வைத்துக் கொள்ளுவோம். அத்தகைய சூழ்நிலையில் சிவ பக்தனொருவன் சிவ ஆராதனைக்குத் தாராளமாகத் துளசிப் பத்திரத்தைப் பயன்படுத்தலாம். அது தெய்வத்துக்குச் செய்த குற்றமாகாது. புஷ்ப வகைகள் சிலவற்றுள் நறுமணமும் இல்லை; தேன் கசிவதும் இல்லை. அத்தகைய புஷ்பங்கள் மட்டும் சில இடங்களில் அகப்படுகின்றன என்று வைத்துக்கொள்ளுவோம். அவைகளை மக்கள் வழிபாட்டுக்குப் பயன்படுத்துவதில்லை. அத்தகைய நடைமுறையை முன்னிட்டுப் பக்தனொருவன் தயங்கவேண்டியதில்லை. அகப்படுகிற எந்தப் புஷ்பத்தை வேண்டுமானாலும், எந்தப் பச்சிலையை வேண்டுமானாலும் தூவித் தெய்வத்தை வழுத்தலாம். அதில் தோஷம் ஏதும் உண்டாகாது. பக்தியில் மனிதன் கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டும். கையாளப்படுகின்ற புஷ்பம், பச்சிலை போன்ற பொருள்களில் கருத்தை மிகைபடச் செலுத்தலாகாது. சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப வழிபாட்டை எவ்விதமாகவேண்டுமானாலும் மனிதன் மாற்றியமைக்கலாம். அதற்கிடையில் அவ்வழிபாடு பக்தி நிறைந்ததாயிருக்குமாகில் அது பாராட்டத்தக்கது. கடவுளுக்கு அது உகந்தது ஆகிறது.

கேள்வி: *(223)* வடஇந்தியக் கோயில்களில் நாம் மூர்த்தியைத் தொட்டு வணங்கலாம். தென் இந்தியாவில் ஏன் அப்படியில்லை?

பதில்: வட இந்தியாவில் மூர்த்தியைத் தொட்டு வணங்கும் ஐதிகம் பல கோவில்களில் உண்டு. ஆனால் அம்பிகையின்

சந்நிதியில் மூர்த்தியைத் தொட்டு வணங்கும் ஐதிகம் இல்லை. எட்ட நின்றுகொண்டு அம்பிகைக்கு மலர்தூவி வணங்கலாம். காசியில் விஸ்வநாதன் சந்நிதியில் அவரவரே லிங்கத்திற்குக் கங்கா ஜலம் அபிஷேகம் செய்து, வில்வதளம் சாத்தி, வணங்கும் ஐதிகம் உண்டு. பூரி ஜகந்நாதத்தில் மூர்த்தியின் பாதத்தைத் தொடுவற்கு ஒப்பப் பீடத்தைத் தொட்டு வணங்கும் முறைமை உண்டு. அப்படிச் செய்வதால் மூர்த்தியின்கண் தெய்வ சாந்நித்தியம் ஓங்கும். அது குறைந்துபட்டுப் போகாது. அம்முறையைத் தென் இந்தியாவில் அனுஷ்டிப்பதும் உசித மாகும். புரோஹிதம் வேண்டும், ஆனால் பொதுமக்களுக்கிடை யில் பக்தி வளர்ச்சிக்குத் தடை பண்ணுகிற புரோஹிதத் தந் திரம் உதவாது. அதற்கேற்றவாறு சமயாசாரியர்கள் தோன்றி வந்து இப்பொழுதுள்ள முறையைத் திருத்தியமைப்பது அவசிய மாகிறது. தென் இந்தியாவில் பலப்பல கணபதி கோயில்களில் அவரவரே வழிபாடு செய்வதற்கு அனுமதியுண்டு. அதன் விளைவாகத் தெய்வ சாந்நித்தியம் ஓங்குகிறது. அது குறைவ தில்லை. இப்பொறுப்பை மக்கள்பால் ஒப்படைப்பதற்கு ஏற்பப் பக்தி ஓங்கும். சிரத்தை அதிகரிக்கும். வழிபடுபவர்களுடைய எண்ணிக்கையும் அதிகமாகும். ஆதலால் இத்தகைய சீர்திருத்தம் முற்றிலும் அவசியமானதே.

கேள்வி: *(224)* பாடல்பெற்ற கோயில்களில்தான் தரிசனம் செய்யவேண்டுமா? புதிய கோயில்களுக்குச் செல்லலாகாதா?

பதில்: கோயிலொன்றைக் கட்டி வைப்பதாலேயே அது அருளுக்கு உறைவிடமாகாது. கோயிலைப் பயன்படுத்துகிறவர் களுடைய பான்மையை முன்னிட்டே அதன்கண் அருள் ஓங்குகிறது அல்லது மறைகிறது. சான்றோர் ஒருவர் ஓரிடத்தில் ஆழ்ந்து ஆத்மசாதனங்கள் புரிந்துகொண்டிருந்தால் அவ்விடம் கோயிலாகிறது. ஆங்கு அருள் நிறைந்திருக்கிறது. பெரும்பாலும் பெரியோர்கள் தவம்புரிந்த இடங்களிலும், சமாதியடைந்த இடங்களிலும் கோயில் கட்டுகின்றனர். அவ்விடம் அருளுக்கு உறைவிடமாகிறது. பின்பு அவ்விடத்தில் கோயில் கட்டுவித்து மூர்த்தியொன்றை மேலோர் ஒருவர் பிரதிஷ்டை பண்ணுகிறார்.

அவருடைய ஆத்ம பரிபாகத்திற்கேற்பப் பிரதிஷ்டை பண்ணப் பட்ட மூர்த்தியிலும் அருள் சுரக்கிறது. அவ்விடத்தில் தெய்வக் காட்சி கண்டு பக்தர் ஒருவர் தெய்வத்தைப் பாராட்டிப் பாடுகிறார். அப்படிப் பாடல் பெறுவதன் மூலமாகவும் ஆங்கு அருள் ஓங்குகிறது. அங்ஙனம் அருள் ஓங்கப்பெற்ற கோயில் களுக்குச் சென்று பொதுமக்கள் தரிசனம் செய்தால் அவர்கள் உள்ளத்தில் பக்தி ஓங்குதற்கு அந்த அருள் நிறைந்த கோயில் முகாமையாகிறது. அருள் நிறைந்த புண்ணிய க்ஷேத்திரங் களுக்குச் சென்று வழிபாடு செய்வது நல்ல ஆத்ம சாதன மாகிறது.

புதிதாக அமைத்துள்ள கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்வதில் குறையொன்றுமில்லை. வழிபாடு அதிகரிப்பதற் கேற்ப ஆங்கு அருள்நிலை படிப்படியாக உருவெடுக்கிறது. புதியதாகக் கட்டப்பட்ட கோவில்களில் ஆயிரக்கணக்கான பேர் வழிபாடுசெய்ய ஆரம்பித்தால், அக்கோயிலும் நாளடைவில் புண்ணிய க்ஷேத்திரமாகிறது. ஆக, மக்களுடைய மனபரிபாகமே க்ஷேத்திரங்களில் அருள்நிலையை ஓங்குவிப்பதற்கு முகாமை யாகிறது.

கேள்வி: *(225)* மலரில் மணம் போன்று மக்கள் உள்ளத்தில் கடவுள் இருக்கிறார். அப்படியிருக்க மக்கள் ஏன் காசிக்கும் இராமேசுவரத்திற்கும் செல்கிறார்கள்? அதனால் புதிய நலன் ஏதேனும் பெறுகிறார்களா?

பதில்: கடவுள் எங்கும் நிறைபொருள். ஆதலால் அவர் எல்லார் உள்ளத்திலும் இருக்கிறார். ஆனால் அவர் உள்ளத்தில் குடிகொண்டு இருப்பதைச் சான்றோர் மட்டும் அறிகின்றனர். பொதுமக்கள் அவ்வுண்மையை அறியமாட்டார்கள். பொது மக்களுக்கு க்ஷேத்திர யாத்திரை முற்றிலும் அவசியம். காசிக் கும் ராமேசுவரத்திற்கும் போகிறவர்களுள் பெரும்பான்மையோர் கடவுள் பக்தியை அப்புண்ணிய க்ஷேத்திரங்களில் வளர்க் கின்றனர். அவரவர் வீட்டிலேயே அமர்ந்திருந்தால் பக்தி உரு வெடுக்காது. மனிதன் முதலில் கடவுளுடைய சாந்நித்தியத்தைப் புண்ணிய ஸ்தலங்களில் சிறப்பாக உணருகிறான். அவனிடத்துப் பக்தி ஓங்குதற்கு ஏற்பக் கடவுளின் சாந்நித்தியத்தை எல்லா

இடங்களிலும் காண்கிறான். கடைசியாக அதைத் தன் உள்ளத்தின் உள்ளே காண்கிறான். தன் உள்ளத்தில் காணும் வரையில் புறநாட்டத்தை அவன் நிறுத்திவிடலாகாது. உள்ளத்தில் கண்ட பிறகு புறநாட்டம் தானாக நின்றுவிடுகிறது. ஆதலால் பொதுமக்கள் க்ஷேத்திர யாத்திரைக்குச் செல்ல உற்சாகம் ஊட்டவேண்டும்.

கேள்வி: *(226)* நல்லது எது கெட்டது எது என்று உடனே தெரிந்து கொள்ளாது காலம் தாழ்ந்து தெரிந்து கொள்பவர்கள், இயற்கையிலேயே சூக்ஷ்மமான அறிவு நிரம்பப் பெறாதவர்கள், இவ்விரு நிலையுடையவர்கள் தெய்வ வழிபாட்டுக்கு உகந்தவர்களா? அவர்களின் தெய்வ வழிபாட்டால் ஏதேனும் பலன் உண்டாகுமா? பிரம்மச்சரிய நிலையில் நிற்க அவர்கள் பெரும் விருப்பம் கொண்டால் அவ்விருப்பம் பூர்த்தியாகுமா?

பதில்: உயிர் வாழ்பவர்களுள் உணவு உண்பதற்குத் தகுதியுள்ளவர் யார், தகுதியற்றவர் யார் என்னும் கேள்விகளைக் கிளப்பினால் உயிர் வாழ்ந்திருப்பவர்களே அக்கேள்விகளுக்குத் தங்கள் செயலின் மூலமாக விடை விடுப்பார்கள். கங்கையில் நீராடத் தகுதியுடையவர் யார், தகுதியற்றவர் யார் என்னும் கேள்வியைக் கேட்டால் கங்காநதியின் இயல்பே இக்கேள்விக்கு விடை கொடுத்துவிடும். கங்கையினுள் யமுனை என்னும் புண்ணியநதி வந்து பாய்கிறது. கங்கைக்குள் வந்தான பிறகு யமுனை என்கின்ற பெயர் போய்விடுகிறது. அது கங்கை ஆய்விடுகிறது. வழிநெடுகச் சாக்கடைகள் பல கங்கைக்குள் வந்து விழுந்து கொண்டிருக்கின்றன. கங்கையில் விழுந்ததும் சாக்கடைகள் கங்கையாய் மாறி விடுகின்றன. அதே பாங்கில் கடவுளை வழுத்துகின்றவர்கள் எல்லாம் புனிதவான்கள் ஆய்விடுகிறார்கள். புனிதவான்களாவதற்குத் தகுதியுடையவர் யார், தகுதியற்றவர் யார் என்னும் கேள்வி எழ இடமில்லை. உயிர்கள் எல்லாம் கடவுளிடத்துப் போய்ச்சேர்ந்தே ஆக வேண்டும். கடவுளை நாடுகின்ற அளவு பிரம்மச்சரியம் முதலிய சீலங்கள் எல்லாம் தாமாக வந்தமைகின்றன. கடவுள் வழிபாடு ஒன்றே மனிதனை உய்விப்பதற்கு உற்ற உபாயம்.

கேள்வி: (227) நான் குருதேவரின் படம் வைத்து வழிபடுகிறேன். கூட இஷ்ட தெய்வமான முருகனை வழிபடலாமா? முதலில் யாருக்குப் பூஜை, நைவேத்தியம் செய்யவேண்டும்? இராமகிருஷ்ண அடியார்களுடைய வழிபாட்டு முறை எப்படி?

பதில்: வழிபாட்டுக்கு ஒரு வரையறை கிடையாது. எத்தனை மனிதர்கள் இருக்கின்றார்களோ அத்தனைவித வழிபாட்டு முறைகள் இருந்து வருகின்றன. அவரவருக்குத் திருப்தியை உண்டுபண்ணும் முறையில் ஒவ்வொரு சாதகனும் வழிபாடு செய்து வரவேண்டும். குருவையும் வழிபடு தெய்வத்தையும் பக்கம் பக்கம் வைத்து ஆராதனை செய்யலாம். குருவுக்கும் கடவுளுக்கும் இடையில் எந்தவிதமான வேற்றுமையையும் சாதகன் ஒருவன் செய்வதில்லை. குருவின் துணைகொண்டே தெய்வத்தை அவன் அறியவல்லவனாகின்றான். முதலில் குருவைச் சிந்தித்து வழுத்திவிட்டுப் பிறகு இஷ்ட தெய்வத்தை வழுத்தலாம். நைவேத்தியத்தைத் தனித்தனியாகச் செய்யுமிடத்து முதலில் குருவுக்கும் பிறகு வழிபடு தெய்வத்துக்கும் அதைப் படைக்கலாம். ஆனால் குருவையும் கடவுளையும் ஒன்றாகக் கருதி நைவேத்தியத்தையும் ஒரே தடவையில் செய்து விடுவதும் பொருந்தும். பக்தியும் சிரத்தையும் நிறைந்த பாங்கில் ஒவ்வொரு சாதகனும் தனக்கு விருப்பமான வழிபாட்டு முறைகளைக் கையாண்டு வருவதே மிகவும் பொருத்தமானது. எத்தகைய மனம் கொண்டவர்களாக நாம் கடவுளை வழுத்துகிறோம் என்பதைத்தான் கடவுள் கணக்கில் எடுத்துக் கொள்கிறார். எத்தகைய ஆராதனை முறைகளை நாம் கையாண்டு வருகிறோம் என்பதை அவர் கருத்தில் எடுத்துக் கொள்வதில்லை.

கேள்வி: (228) தெய்வ சந்நிதானத்தில் சாதுக்கள் அல்லது மகான்களைக் காண நேர்ந்தால் கீழே விழுந்து நமஸ்காரம் செய்வது சரியா?

பதில்: பாரமார்த்திகப் பெருநிலையில் வைத்து ஆராய்ந்து பார்க்குமிடத்து எல்லா இடங்களிலும் எக்காலத்திலும் தெய்வ சாந்நித்தியம் நீக்கமற நிறைந்திருக்கிறது. ஆனால் அத்தகைய பாரமார்த்திகப் பேருணர்வைப் பொதுமக்களாகிய நாம்

அடையப்பெற்றவர்கள் அல்லர். கடவுளைச் சிறப்பாக ஆலயத்தி லேயே காண நாம் விரும்புகிறோம். அத்தகைய பயிற்சியைப் பெற முயலுகிற நாம் கடவுள் சந்நிதியில் மேலோர் கீழோர் ஆகிய எல்லோரும் கடவுளுடைய குழந்தைகளே என்று உணர்ந்து பழக வேண்டும். கடவுளுடைய சந்நிதியில் இருக்கும் பெரியோர்களை அங்கு வீழ்ந்து வணங்கலாகாது. சந்நிதியை விட்டு வேறு ஒரு இடத்தில் வந்து அவர்கள் அமர்ந்திருக்கும் பொழுதே வணங்க வேண்டும். கடவுள் சந்நிதியில் அவர்கள் பெரிதும் நின்றுகொண்டோ அல்லது நடந்துகொண்டோ இருப் பார்கள். அத்தருணம் வணங்குதற்கேற்றதன்று. சந்நிதியிலேயே பொருத்தமான ஓர் இடத்தில் அவர்கள் அமர்ந்திருப்பார் களாகில் அவர்களுக்கும் சந்நிதிக்கும் பொதுவாக சேர்த்து வணக்கம் செலுத்துதலில் குற்றமில்லை.

கேள்வி: *(229)* தனி வழிபாட்டிற்கும், கூட்டு வழிபாட்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன? இதில் எது சிறந்தது?

பதில்: தனி வழிபாடு, கூட்டு வழிபாடு ஆகிய இரண்டும் சாலச் சிறந்தவைகள். பள்ளிக் கூடத்துக்குச் செல்லும் சிறுவன் ஒருவன் பள்ளிக் கூடத்தில் மற்றவர்களுடன் சேர்ந்திருந்து படிக்கிறான். வீட்டில் தனியாகப் படிக்கிறான். இந்த இரண்டு பகுதிகளும் சேர்ந்ததே அவனுக்கு நல்ல படிப்பு முறை ஆகிறது. பள்ளிக் கூடத்துக்குச் செல்லாது வீட்டிலேயே தனி யாக ஆசிரியரை வைத்துக்கொண்டு கற்கும் மாணாக்கனுக்குப் பண்புகளனைத்தும் ஒன்றுசேர்ந்து அமைவதில்லை. பள்ளிக் கூடத்தில் புகட்டுவதைக் கிரகித்துக் கொண்டு வீட்டில் வாசிக் காது இருந்து விடுகிறவனுக்குக் கல்வி ஆழ்ந்து அமைவதில்லை.

இக்கோட்பாடு வழிபாட்டுக்கும் பொருந்தும். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்னும் முதுமொழி வந்துள்ளது. அப்படி ஆலயத்தில் தொழுவது ஒருவிதக் கூட்டுவழிபாடு ஆகிறது. காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு ஆத்ம சாதக னும் கடவுள் சிந்தனை பண்ணுவது தனித்த வழிபாடு ஆகிறது. இனி, ஒரேவிதமான பாங்குடையவர்கள் ஒன்று சேர்ந்து பஜனைகள் பாடுவது, இறைவனுடைய நாமங்களை ஓதுவது,

அவனுடைய பெருமைகளை ஆராய்ச்சி பண்ணுவது ஆகிய செயல்கள் சிறந்த கூட்டு வழிபாடு ஆகின்றன. சாதனத்தில் முன்னேற்றம் அடைவதற்கு அது முற்றிலும் அவசியமாகிறது. ஒரு உபமானத்தின் மூலமாக ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் கூட்டு வழிபாட்டை மிகவும் வற்புறுத்தியிருக்கிறார். கஞ்சா குடிகாரன் தனியாக அதை அனுபவிக்க விரும்புவதில்லை. மற்றவர்களுடன் கலந்து கொள்ளும்பொழுதே அவனுக்குத் திருப்தி மிக உண்டாகிறது. அதேபாங்கில் பக்தர்களும் மற்ற பக்தர்களுடன் கூடியிருந்து வழிபடுதலில் பெருமகிழ்வு அடைகின்றனர்.

இனி, சாதனத்தில் மிக உயர்ந்த நிலைக்குப் போயிருக்கிற வர்களுக்குக் கூட்டு வழிபாடு தேவையில்லை. அவர்கள் தங் களையே மறந்தவர்களாகப் பரபோதத்தில் திளைத்திருக்கின்றனர். தனிவழிபாடு, கூட்டுவழிபாடு என்கின்ற வேற்றுமைகளையெல் லாம் அன்னவர்கள் கடந்தவர்களாகின்றனர். அந்த நிலையை எட்டும் வரையில் இரண்டுவிதமான வழிபாடுகளும் அவசியம்.

கேள்வி: *(230)* ஆலயங்களில் அர்ச்சனை வழிபாடுகள் தேவையில்லை யென்றும், கருத்தால் நினைந்து, கண்களால் கண்டு, கைகளால் கட்டித்தழுவிக் கடவுட் சிலைகளை வழிபட வேண்டுமென்பது இராமலிங்க வள்ளலார் கருத்து என்று கூறப்படுகிறது. வள்ளலார் இங்ஙனம் கூறக் காரணம் யாது? இது குறித்துத் தங்கள் கருத்து என்ன?

பதில்: இறைவணக்கத்துக்கு எண்ணிறந்த முறைகளிருக் கின்றன. அவைகளுள் இன்னமுறை சிறந்தது, இன்னமுறை தாழ்ந்தது என்று பாகுபடுத்தலாகாது. எந்த முறையை ஊக்கத் துடன் கையாண்டாலும் அது ஆத்ம சாதகனுக்கு நலம் தருகிறது. அர்ச்சனை ஓர் அரிய ஆராதனை முறையாகும். ஆயிரக்கணக்கான பெயர்கள் இறைவனுக்கு அமைந்திருக் கின்றன. ஒவ்வொரு பெயரும் அவனுடைய மகிமையை ஏதேனும் ஒரு பாங்கில் விளக்கவல்லதாகிறது. ஆத்ம சாதகன் ஒருவன் அர்ச்சனையைத் தானே பண்ணுவது சிறந்தது. ஒரு நாமத்தை ஓதியதும் அதன் உட்கருத்தை அவன் மனதால் சிந்திக்கவேண்டும். அப்படிச் சிந்திப்பதே மலர் தூவுதல் என்னும்

புறச்செயலாக வடிவெடுக்கிறது. இறைவனுக்குரிய நாமங்களை யெல்லாம் ஓதி உணருமிடத்து அது சிறந்த ஆராதனை ஆகிறது. அதைப் புறக்கணிக்க வேண்டுமென்று ஆத்ம சாதகர் யாரும் பகரமாட்டார். இனி, கருத்தால் நினைந்து, கண்களால் கண்டு, கைகளால் கட்டித்தழுவுதல் ஆகிய இந்தப் பாங்கில் வழிபாடு செய்வதும் நல்ல வழிபாட்டு முறைகள் ஆகின்றன.

வள்ளலார் எந்தச் சந்தர்ப்பத்தில் எந்தச் சூழ்நிலையைக் குறித்து வழிபாட்டு முறைகளுக்கிடையில் வேற்றுமை கண்டார் என்பதைப் பற்றி நாம் உறுதிகூறமுடியாது. எனவே அதைப் பற்றி அபிப்பிராயம் ஒன்றும் நாம் தெரிவிக்க வேண்டியதில்லை.

கேள்வி: *(231)* கோவில்களுக்குச் சென்றால் அர்ச்சனை, அபிஷேகங்கள் நாமே செய்ய முடியாது. அதற் கான பூசாரிகளைக் கொண்டுதான் செய்ய வேண்டியதா யிருக்கிறது. அப்படிச் செய்வது பெரும்பாலும் நேர்மை யில்லாமலிருக்கிறது. அதற்காக நாம் செய்யாமல் விட்டு விடலாமா? நாம் நம் மனதைத் திருப்தி செய்துகொள் வதற்காக என்ன செய்ய வேண்டும்?

பதில்: நம் மனதுக்கு ஒத்துள்ள நல்ல அர்ச்சகர்கள் கோயில்களிலே அமைந்திராவிடில் நாம் அதைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. எங்கிருந்து அர்ச்சனை ஆரா தனை செய்தாலும் அது கடவுளுக்கு ஏற்புடையதாகிறது. ஓர் ஆலயத்துக்குச் சென்று அங்கே செய்கிற ஆராதனையைத் தான் அவர் ஏற்றுக்கொள்கிறார் என்பது உண்மையல்ல. அவரவர்க்கு உகந்த விதத்தில் வசதி வாய்ந்த ஏதேனும் ஓர் இடத்தில் இருந்துகொண்டு விரும்பியவாறெல்லாம் வழிபாடு செய்யலாம். புறத்தில் ஒரு விக்கிரகத்தை வைத்துக்கொண்டு அதன்மீது மலர் தூவி அர்ச்சனை செய்வதுதான் முறை என்கின்ற எண்ணத்தையும் அகற்றிவிட வேண்டும். மனதினுள் இருக்கும் தெய்வத்துக்கு மானச பூஜையாகச் செலுத்தும் அர்ச்சனை சாலச் சிறந்தது. சாதன் வகைகளைச் சரியாக அறிந்துகொள்ளாத பாமரர்களுக்கு ஆலயங்களிலே பாகிய பூஜை, அர்ச்சனை, ஆராதனை முதலியவைகள் தேவையாயிருக் கின்றன. சாதனக் கோட்பாடுகளை ஒரு சிறிதளவாவது

அறிந்திருக்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே மானச பூஜையாக அர்ச்சனை ஆராதனை செய்து கொள்ளுவது உத்தமம். வெளியூருக்குச் சென்றிருக்கும் ஒருவருக்குக் கடிதம் எழுதத் தெரியாதவர்களுக்குப் பிறர் கடிதம் எழுதித் தருகிறார்கள். தாங்களே கடிதம் எழுதத் தெரிந்திருக்கிறவர்கள் அதன் பொருட்டுப் பிறர் உதவியை நாடுவதில்லை. வழிபாட்டு விஷயமும் அத்தகையதே. ஆத்ம சாதகர்கள் அனைவரும் தங்களுக்குத் தாங்களே வழிபாடு செய்யக் கற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றனர். அப்படிச் செய்கின்ற வழிபாட்டில் குறைபாடு ஏதாவது அறியாமையினால் அமைந்துவிட்டால் அதைக் குற்றமாகக் கடவுள் கருதமாட்டார். ஆத்மசாதகன் அன்புடன் செய்கின்ற வழிபாடுகள் யாவையும் கடவுள் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறார். வழிபாட்டு முறை முற்றிலும் தனக்குப் பிடிபடவில்லையென்று யாரும் அதைவிட்டு விடலாகாது. தனக்குத் தெரிந்திருக்கிற அளவு அதைக் கையாளுதல் முற்றிலும் அவசியம்.

கேள்வி: *(232)* சிவ வழிபாடு செய்பவர் சிவலிங்கத்தைச் சிறப்பாக வைத்துள்ளனர். இதன் கருத்தென்ன?

பதில்: பெருநிலையொன்றை அடைதற்கு எத்தனம் எடுத்துக்கொள்ளுவது வழிபாடாகும். உயிர்களனைத்தும் தாம் தாம் அடைந்துள்ள நிலைகளில் திருப்தியடைந்து இருப்பதில்லை. ஏதேனுமொரு நிலையை எட்டியான பிறகு அது தங்களுக்குப் போதவில்லை என்பது ஓதாது உணரப்படுகிறது. அதற்கு மேலுள்ள ஏதேனுமொரு படித்தரத்தை அவர்கள் உணர்கின்றனர். உணர்ச்சிக்கேற்றவாறு முயற்சி எடுக்கின்றனர். அம்முயற்சிக்கு உறுதுணை ஆகவேண்டும் என்று பரவஸ்துவிடம் விண்ணப்பிக்கின்றனர். அப்படி வேண்டுவதை வழிபாடு என்கிறோம்.

பரவஸ்துவைப் பலப்பல பாங்குகளில் பக்தர்கள் உணர்கின்றனர். அவர்களுடைய பாங்குக்கேற்றவாறு பரவஸ்துவுக்குப் பெயர்கள் பல வழங்கப் பெற்றிருக்கின்றன. பல பெயர்களுள் சிவன் என்பதும் ஒன்றாகும். பெயருக்கேற்ற சின்னத்தையும் மக்கள் தங்களுக்குத் தாங்களே அமைத்துக்கொண்டு

இருக்கின்றனர். சின்னமொன்றைப் பார்த்தவுடன் அது குறிப்பிடுகிற வஸ்து ஞாபகத்துக்கு வருகிறது. நெடுஞ்சாலையில் மோட்டார் வண்டி ஓடும்பொழுது அதை ஓட்டுகிறவருடைய வசதிக்காகச் சில அடையாளங்கள் குறித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு பாதைகள் ஒன்றையொன்று குறுக்கிட்டுச் செல்வதற்கு ஒரு குறி இருக்கிறது. அடுத்து வருகிற மேடு பள்ளத்திற்கேற்ற குறிகள் இருக்கின்றன. வலப்பக்கம் அல்லது இடப்பக்கம் திரும்புதற்கேற்ற குறிகள் இருக்கின்றன. கார் ஓட்டுகிறவர்களுக்கு அக்குறிகள் நன்கு பயன்படுகின்றன. கடவுள் வழிபாடு செய்கிறவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு கடவுள் சிந்தனையை உள்ளத்தினுள் வரவழைத்துக் கொள்ளுகின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் செய்கின்ற வழிபாடானது உறுதிபெறுகிறது. சிவலிங்கம் சிவச் சின்னமாகிறது. கடவுளுக்கு உருவமில்லை என்பதை அச்சின்னம் ஞாபகமூட்டுகிறது. சிவனாருக்கு வடிவமுண்டு என்பதை நடராஜ விக்கிரகம் ஞாபகமூட்டுகிறது. கடவுள் வடிவத்தோடுமிருக்கிறார்; வடிவம் இல்லாதும் இருக்கிறார். வடிவமில்லாத நிலையே அவருடைய பெருநிலையாகிறது. சிவலிங்கத்தைப் பார்க்கும்போதெல்லாம் சிவஞாபகம் வருகிறது. அந்த நல்ல ஞாபகத்தை மனதிற்குக் கொண்டுவருவதற்கு அது மிகப்பொருத்தமான அடையாளமாகிறது. இதே பாங்கில் விஷ்ணுவை ஞாபகமூட்டுவதற்குச் சாளக்கிராமம் சிறந்த சின்னமாக அமைந்திருக்கிறது. சின்னங்களைத் துணையாகக் கொண்டு கடவுள் ஞாபகத்தை உறுதிப்படுத்துவது முறை. அதற்கு ஆன்றோர்கள் அனுமதி கொடுத்திருக்கின்றனர். நடைமுறையில் சின்னத்தின் பயனை ஒவ்வொரு சாதகனும் தானே அறிந்து கொள்ளுகிறான். தெய்வச் சின்னங்களை நன்கு பயன்படுத்துவதின் கருத்து இதுவாம். தெய்வச் சிந்தனையில் ஆத்மசாதகன் உறுதிபெறும் வரையில் தெய்வச் சின்னத்தை அவன் பயன்படுத்தி வரவேண்டும். சிவலிங்கத்தின் கீழ்ப்பகுதி ஆவுடையாள் என்றும் பெயர் பெறுகிறது. அது சக்தியின் சின்னமாகும். சிவமும் சக்தியும் இணைபிரியாதவைகள் என்பது கோட்பாடு. சக்தியில்லாது சிவம் இல்லை. சிவமில்லாது சக்தியில்லை. இவ்விரண்டு தத்துவங்களுள் சக்தி தத்துவம் உயிர்களை ஓம்பி வருகிறது. ஆ+உடையாள் என்பது உயிர்களை

அல்லது ஜீவாத்மாக்களை வளர்த்து வருபவள் என்பதாகிறது. சக்தியானவள் ஜீவர்களைத் தோற்றுவித்து வளர்த்து வருகிறாள். அவ்வுயிர்களைப் பக்குவப்படுத்திச் சிவனிடம் சேர்த்து விடுகிறாள். அச்செயல் செயற்கரிய பெரிய செயல் ஆகிறது. அதன் பொருட்டுச் சக்தி வழிபாடும் சிவ வழிபாட்டோடு கலந்திருக்க வேண்டும். ஒன்றைக் கடைப்பிடித்து மற்றதைப் புறக்கணித்து விடலாகாது. அம்மையப்பனாக இரண்டையும் இணைத்து வைத்தே வழிபட வேண்டும். இதுவே சிவலிங்கம் புகட்டுகிற கோட்பாடு ஆகும்.

கேள்வி: *(233)* சிவபெருமானுக்கு ஐந்து தலை, மகன் குமாரக் கடவுளுக்கு ஆறு தலை, பன்னிரு கை - இதில் ஏதேனும் கருத்து உண்டா?

பதில்: உருவமற்றது பரவஸ்து. அவ்வஸ்துவின் பாங்கைப் பாமரனுக்கு விளக்குதற்பொருட்டு அந்த ஒரு வஸ்துவைப் பல சொரூபங்களாகப் புராணங்கள் கற்பனை பண்ணுகின்றன. பல சொரூபங்களில் ஒன்றைத் தந்தையாகவும், மற்றொன்றைத் தாயாகவும், இன்னொன்றை மகவாகவும் கற்பனை பண்ணுவதும் புராணங்களின் போக்கு ஆகும். சிவனார் உருவமற்றவர்; அவயவங்கள் அற்றவர் என்னும் கோட்பாட்டைச் சிவலிங்கம் என்னும் சின்னம் விளக்குகிறது. அதே சிவம் ஐந்து தலைகளை உடைத்திருப்பது நான்கு திக்குகளிலும் மேலுமாய் அப்பொருள் வியாபித்திருக்கிறது என்னும் கோட்பாட்டை விளக்குகிறது. ஐம்பூதங்களாய் அப்பொருள் பரிணமித்து இருக்கிறது என்னும் கோட்பாட்டையும், ஐந்து முகங்கள் விளக்குகின்றன. ஐந்து முகங்களுக்கு ஒப்பப் பத்துக்கரங்கள் சிவனாருக்குத் தந்திருப்பதும் மானுட அமைப்பை அடிப்படையாகக் கொண்டேயாம். உருவமற்ற பொருளுக்கு உருவத்தைக் கொடுத்து அதன் வாயிலாக மெய்ப்பொருள் அமைப்பு என்னென்ன பாங்குடையது என்னும் கோட்பாடு விளக்கப்பெறுகிறது.

முருகக் கடவுளுக்கு ஆறு தலைகள் அமைத்திருப்பதன் வாயிலாக அப்பொருள் நான்கு திக்குகளிலும் மேல்நோக்கியும் வியாபித்து இருப்பதுமட்டுமன்று; அது கீழ்நோக்கியும் வியாபித்து இருக்கிறது என்னும் விளக்கத்தைச் சிலர் கொண்டு வருகின்றனர்.

அப்படியானால் சிவனார் கீழ்நோக்கி அமையவில்லையா என்னும் ஆக்ஷேபம் வருகிறது. ஆதலால் ஆறுமுகக் கடவுளுக்கு அத்தகைய விளக்கம் தருவது சிவசொரூபத்தை மட்டுப் படுத்துவதாக முடியும். குமரக்கடவுளுக்கு ஆறு தலைகள் அமைந்திருப்பது வேறு ஒரு தத்துவத்தை விளக்குகிறது. முற்றிலும் பண்பாடு அடைந்துள்ள ஜீவாத்ம தத்துவத்துக்கு முன்மாதிரியாக முருகக்கடவுள் இருக்கிறார். முற்றிலும் பண்பாடு அடைந்துள்ள ஜீவாத்மாவிடம் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. அவை முறையே மூலாதாரம்; சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தை, ஆக்ஞை எனப் பெயர் பெறுகின்றன. இந்த ஆறு ஆதாரங்களை ஆறு படைவீடுகள் என்று பகர்வதும் உண்டு. ஷட்சக்கரம் எனவும் அவைகள் பெயர் பெறுகின்றன. இந்த ஆறு ஆதாரங்களும் நிறைநிலை எய்துங்கால் ஜீவாத்மா, பரமாத்மாவில் ஒன்றுபடுவதற்குத் தகுதியுடையதாகிறது. அத் தகுதியை முன்னிட்டே குமரக்கடவுள் சிவகுமாரன் என்னும் பெயர் தாங்கி உள்ளான். ஆறு சிரங்களுக்கு ஒப்பப் பன்னிரு கரங்கள் படைக்கப்பெற்றவனாக அவன் கருதப்படுகிறான். அவயவங்கள் அற்ற பொருளுக்கு இங்ஙனம் அவயவங்கள் கற்பிப்பதும் தத்துவ விளக்கத்தின் பொருட்டேயாம். முருகக் கடவுள் ஆற்றல் தெய்வம். இரண்டு கரங்களைப் படைத்திருக்கிற மனிதன் அவைகளைக் கொண்டு என்னென்னமோ காரியங்களைச் சாதிக்கிறான். இனி பன்னிரு கரங்களையுடைய மூர்த்தி ஒருவர் எத்தகைய பேராற்றல் படைத்தவராக இருக்கக்கூடும் என்னும் கோட்பாடு விளக்கப்பெறுகிறது. இங்ஙனம் வடிவத்தின் வாயிலாக மேலாம் கோட்பாடுகள் மந்த அதிகாரிகளுக்கும் விளங்கும்படி உருவகப்படுத்தப்பட்டு இருக்கின்றன. ஆக சிவனார், முருகக்கடவுள் ஆகியவர்களுக்கு அவயவங்களை உருவகப் படுத்துவதன் வாயிலாகத் தத்துவங்கள் விளக்கப்படுகின்றன.

கேள்வி: *(234)* முருகனும், வீரபத்திரனும் சிவன் அம்சங்கள் என்றாலும் நாம் ஏன் வீரபத்திரனை மட்டும் வழிபடுவதில்லை?

பதில்: இக்கேள்விக்கு விடையாக உலக நடைமுறை ஒன்றைச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம். மானுடன் ஒருவன்

இருக்கிறான். அவன் அரசாங்கத்தில் போலீஸ் அதிகாரியாக உத்தியோகம் பார்க்கிறான். அந்த உத்தியோகஸ்தனுக்கு மகன் ஒருவன் இருக்கிறான். உத்தியோகம் பண்ணுகிற தந்தை சமுதாயத்திலுள்ள கெட்டவர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுக்கிறான். இத்தகைய தந்தையும் மகனும் ஓர் உறவினர் வீட்டுக்கு உறவாட அழைக்கப்பட்டனர். அங்கு வந்தவர்களுள் போலீஸ் உத்தியோகஸ்தர் ஏன் அழைக்கப்படவில்லை என்னும் கேள்வி எழலாகாது. தந்தையின் ஓர் அம்சமே மைந்தனானான் என்பது உண்மை. தந்தையின் ஓர் அம்சமே போலீஸ் உத்தியோகஸ்தன் ஆனான் என்பது உண்மை. தந்தை தானே போலீஸ் உத்தியோகஸ்தனாகச் சமுதாயக் கடமையைச் செய்தான். வீட்டுக்கு வந்தபிறகு யாண்டும் உள்ள பழைய மனிதனாகவே நடந்துகொண்டான். அதற்கிடையில் அவனுக்குப் பிள்ளையாகப் பிறந்தவன் மற்றும் ஒரு மூர்த்தியாயிருக்கிறான். அந்த விதத்தில் போலீஸ் உத்தியோகஸ்தனாக இருந்தது புதிய மூர்த்தியல்லன். இந்த உவமானத்துக்கு ஒப்பத் தக்ஷப்ரஜாபதியின் பொருந்தாத செயலைக் கண்டிக்கச் சிவபெருமான் தாமே வீரபத்திர மூர்த்தியாக வடிவெடுத்தார். அந்தச் செயலை முன்னிட்டுச் சிவன் தாமே வீரபத்திரன் என அழைக்கப்படுகிறார். சிவகுமாரனாக வந்துள்ள முருகனோ சிவமகிமைகளோடு கூடிய மற்றுமொரு மூர்த்தியாகிறான். ஆதலால்தான் சிவனை வழுத்துவதற்கொப்பச் சிவகுமாரனாகிய முருகனை வழுத்துகிறோம். ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காகச் சிவன் தாமே வீரபத்திரனாக வடிவெடுத்தார். அக்காரியம் முற்றுப் பெற்றதும் வீரபத்திர சொரூபம் சிவ சொரூபத்தில் ஒடுங்கலாயிற்று. அப்படி ஒடுங்கிப்போன அம்சத்தை ஒரு தனித் தெய்வமாக வைத்து வழிபடவேண்டிய அவசியமில்லை. அப்படி வழிபடுவது பொருந்தாது என்றே பகரலாம்.

கேள்வி: *(235)* நவராத்திரியின் இறுதி மூன்று நாட்கள் வங்காளத்தில் கொண்டாடப்படும் துர்க்கை பூஜையின் அடிப்படைக் கருத்து யாது?

பதில்: நவராத்திரி விழா நம்நாடு முழுதுக்கும் பொதுவாக உள்ள பெருவிழாவாகும். ஒன்பது நாள் வழிபாடு என இது

பொருள்படுகிறது. புரட்டாசி மாதம் அமாவாசையைத் தொடர்ந்து இந்த ஒன்பது நாட்கள் வருகின்றன. ஒன்பது நாட்களில் கடைசி மூன்று நாட்கள் மிக முக்கியமான இடம் பெற்றிருக்கின்றன. இந்த மூன்று நாட்களைச் சரஸ்வதி பூஜை என்றும் ஆயுதபூஜை என்றும் இயம்புவது தென்னாட்டவர்களுடைய ஐதிகமாகும். இதே மூன்று நாட்களைத் துர்க்கை பூஜை என்று பகர்வது வங்காளத்தின் ஐதிகமாகும். அன்னை பராசக்தி ஒன்பது நாட்களில் ஒன்பது வித சக்திகளாக வழுத்தப்படுகிறாள். அத்தகைய வழிபாடு நவசக்தி பூஜை என இயம்பப்பெறுகிறது. நவசக்திகளுள் துர்க்காதேவி என்னும் சக்தி எல்லாவிதமான மகிமைகளும் வாய்க்கப்பெற்றவளாக இருக்கிறாள். அவளுடைய மகிமைகளே பூலோக சம்பத்துக்களாக அமைந்துள்ளன. மகிஷாசுரனை சம்ஹாரம் செய்வது அவளுடைய முக்கியமான செயல். ஆதலால் அவள் மகிஷாசுர மர்த்தனி என்னும் நாமம் வாய்க்கப்பெற்றவளாக இருக்கிறாள். எருமையின் வடிவெடுத்துள்ள அரக்கன் என மகிஷாசுரன் என்னும் சொல் பொருள்படுகிறது. அவன் அக்ஞானத்தின் சொரூபம். சோம்பலும் துஷ்டத்தனமும் அவனுடைய இயல்புகள்; அக்ஞானத்தினின்று உருவெடுத்தவன் அவன். அத்தகையவனை ஒழித்தல் வேண்டும். மக்கள் எல்லாரும் சோம்பலையும் தீங்கையும் தகர்த்துத் தள்ளிவிட்டு ஊக்கத்திலும் நல்ல முறையில் உழைப்பிலும் ஈடுபட வேண்டும் என்னும் கோட்பாடு இந்த அரக்கனை அழிப்பதில் அடங்கியிருக்கிறது.

துர்க்காதேவி கைலயங்கிரியினின்று இந்நாட்களில் பூலோகத்திற்கு விஜயம் செய்கிறாள் என்பது ஐதிகம். அப்படி அவள் மண்ணுலகுக்கு வருகிறபொழுது தன்னந்தனியவளாக வருவதில்லை. தன்னுடைய செல்வர்களாகிய கணபதியையும், கார்த்திகேயனையும் தன்னோடு அழைத்து வருகிறாள். நல்லறிவுக்கு உறைவிடம் கணபதி, பேராற்றலுக்கு இருப்பிடம் முருகன். மூத்தவனைப்போன்று அறிவு படைத்தவர்களாகவும், இளையவனைப் போன்று ஆற்றல் படைத்தவர்களாகவும் உலக மக்கள் இருக்கவேண்டும். தன்னுடைய செல்வர்கள் வாயிலாக உலகத்தவர்களுக்கு அன்னை பராசக்தி இக்கோட்பாட்டை எடுத்து வழங்குகின்றாள். மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு அறிவும்

ஆற்றலும் படைத்தவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் உலக வாழ்வில் முன்னேற்றமடைய முடியும். அம்பிகையின் தோழிமார்களாகிய சரஸ்வதியையும், இலட்சுமியையும், துர்க்காதேவி தன்னோடு அழைத்துக்கொண்டு பூலோகத்திற்கு விஜயம் செய்கிறாள். கலைகளை வளர்ப்பதில் உலக மக்கள் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும் என்னும் கோட்பாட்டைச் சரஸ்வதி தேவியின் வாயிலாக அன்னை உலக மக்களுக்கு எடுத்துப் புகட்டுகிறாள். செல்வத்தை வளர்ப்பதில் மக்கள் பேரூக்கம் படைத்திருக்கவேண்டும் என்னும் போதனை யைத் திருமகளாகிய லட்சுமிதேவியின் வாயிலாக அன்னை பராசக்தி உலகத்தவர்க்கு நல்லறிவு புகட்டுகிறாள். பிறகு தானே பலப்பல ஆயுதங்களை உடைத்திருப்பதன் வாயிலாக, உலக வாழ்வைப் பெருவாழ்வாகப் பெருக்குவது வாழ்க்கையின் நோக்கம் என்பதை அம்பிகை அறிவுறுத்துகிறாள்.

கேள்வி: *(236)* கோயில்களில் விக்கிரகங்களுக்கிடையில் ஐந்துதலை நாகமும் இடம் பெறுகிறது. உலகில் எங்கேயாவது ஐந்துதலை நாகம் இருக்கிறதா? இல்லையெனில் இத்தகைய வழிபாட்டின் கருத்து யாது?

பதில்: நாகசர்ப்பம் கொடிய விஷமுடையது. ஆண்டு தோறும் நாட்டில் விஷப்பாம்பு தீண்டுவதின் விளைவாகக் கணக்கற்ற பேர் மடிந்து போகின்றனர். பழங்காலந்தொட்டு மரணத்துக்கு எதுவெல்லாம் காரணமாயிருந்ததோ அதை ஒரு தேவதையாகக் கருதி மக்களைக் கொல்லவேண்டாம் என்னும் பிரார்த்தனை நிகழ்ந்து வருகிறது. இது மிகமிகப் பழைய பழக்கம். இது ஒருபுறமிருக்க ஐந்துதலை நாகம் ஏதும் உலகில் இல்லை. அது ஒரு தத்துவத்துக்கு விளக்கமாக வந்து அமைந்திருக்கிறது. சான்று ஒன்று எடுத்துக்கொள்ளுவோம். சிவலிங்கம் ஒன்றை ஐந்துதலை நாகம் சுற்றிப்பிடித் துக்கொண்டு ஐந்து தலைகளும் ஒன்றுசேர்ந்து படம் விரித்துக் குடைபிடிப்பது போன்று லிங்கத்தின் மேல் தென்படுகிறது. சர்ப்பம் யாண்டும் சக்தியின் சொரூபம். ஏதேனும் ஒரு விதத்தில் சர்ப்பம் ஒவ்வொரு தெய்வத்தோடும் இணக்கம் கொண்டு இருக்கிறது. முருகனுடைய மயிலின் காலடியில்

நாகசர்ப்பம் ஒன்று படம் விரித்து ஆடுவதைக் காண்கிறோம். கணபதி, சர்ப்பத்தை இடுப்பில் கச்சையாகக் கட்டியிருக்கிறான். அன்னை பராசக்திக்குச் சர்ப்பம் சிறு கால் மோதிரமாக அமைந் திருக்கிறது. சிவனார் கழுத்தில் நாகசர்ப்பத்தை அணிந்திருக்கிறார். இவையாவிலும் பொருள் ஒன்று உண்டு. சக்தி பரவஸ்துவுக்கு அந்நியமானதன்று. தெய்வம் சர்வ சக்திமான் என்பது பேருண்மை.

இனி, நாகசர்ப்பம் ஐந்து தலைகளோடு கூடியிருப்பதன் கருத்து ஒன்று உண்டு. பரம்பொருளின் புறத்தோற்றமாகிய பிரபஞ்சமும் சக்தி மிக வாய்க்கப்பெற்றது. தன் சக்தியைப் பிரபஞ்சம் ஐம்பெரும் பூதங்கள் வாயிலாக விளக்கிக் கொண்டு இருக்கிறது. ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், நிலம் ஆகிய ஐம்பூதங்கள் மயமாக இயற்கை அமைந்திருக்கிறது. ஒவ்வொரு பூதமும் தன்னளவில் சக்தி மிக வாய்க்கப்பெற்றது. மனிதன் புரிகின்ற வழிபாடு அனைத்தும் பிரபஞ்ச வாழ்க்கை மயமாக அமைந்திருக்கிறது. பிரபஞ்ச வாழ்க்கைக்குப் புறம்பான எந்த விதத்திலாவது கடவுள் வழிபாடு செய்ய முடியாது. நிலையற்ற பிரபஞ்சத்தின் துணையைக் கொண்டு நிலைபேறுடைய பரவஸ்துவை வணங்குதல் வேண்டும் என்பதே ஐந்து தலை நாகத்தின் உட்பொருளாம். ஐம்பூதங்களையும் முறையாகப் பயன்படுத்துவது கடவுள் வழிபாடாகிறது. மனிதன் படைத் துள்ள ஐம்பொறிகளுள் ஒவ்வொரு பொறியும் ஒரு பூதத்தின் தன்மாத்திரை மயமாக அமைந்திருக்கிறது. அத் தன்மாத்திரைகள் ஐந்தும் 'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு' என்னும் மறைமொழியில் அடங்கியிருக்கிறது. உலகம் முழுவதும் இந்த ஐந்து புலன்களைக் கொண்டு பொருள்படுத்தப்படுகிறது. ஐம்பொறிகளை முறை யாகப் பயன்படுத்துவதும் கடவுள் வழிபாடாகிறது. ஆகவே மானுடன் ஒருவன் வாழ்வாங்கு வாழ்ந்து வருவானாகில் ஐந்து தலை நாகத்தை அவன் நன்கு வழிபடுகிறான் என்பது தேற்றம்.

கேள்வி: *(237)* சூரியனை நாள்தோறும் வழிபடுகிறோம். சந்திரனை ஏன் வழிபடுவதில்லை?

பதில்: சூரியன் சுயம்பிரகாசம் உடையவன். சூரியனிடத் திலிருந்து கிளம்பி வரும் வெப்பமும், வெளிச்சமும் உயிர்களின்

வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதவைகள் ஆகின்றன.

மற்றுச் சந்திரனோ சூரியனிடத்திருந்து பெற்ற வெளிச் சத்தைப் பிரதிபிம்பிக்கிறது. அது சுயம்பிரகாசம் வாய்ந்ததன்று. ஆதலால் உயிர்களை ஓம்பும் திறமை சந்திரனுக்கு இல்லை.

இனி, சூரியனிடத்துள்ள பல சிறப்புக்கள் பரம்பொரு ளாயுள்ள தெய்வத்திடத்துள்ள மகிமைகளுக்கு ஒப்பானவைகளா கின்றன. ஆகையினால்தான், சூரியனைச் சூரிய நாராயணன் என்று சிலாகித்துப் பேசுகிறோம். நாராயணன் ஆத்மப் பிரகாசம் வாய்ந்தவன். அந்தப் பிரகாசம் எதை முன்னிட்டும் மங்கவோ, பழுதுபட்டுப் போகவோ செய்வதில்லை. அத்தகைய ஆத்மப் பிரகாசத்திற்குக் கிட்டத்தட்ட நிகரானது சூரியப் பிரகாசம். அருள் துறையில் மகாநாராயணன் உயிருக்குயிராக இலங்கு கின்றான். சூரிய நாராயணனோ பிரபஞ்ச அமைப்பில் உயிருக் குயிராக இலங்குகின்றான். ஆதலால்தான் சூரியனைத் தெய் வத்துக்கு நிகராகக் கருதி மக்களாகிய நாம் அனைவரும் வழுத்தி வருகின்றோம்.

கேள்வி: *(238)* மணக்கோலத்தில் இருக்கும்பொழுது ஸம்ஹார தெய்வமாகிய ருத்திரன் அல்லது சிவனை வணங்குதல் முறையா? அவனை வணங்குவதால் அவன் அழிவுத் தெய்வமாய் இருப்பதால் வீட்டில் சச்சரவு நேருமல்லவா?

பதில்: மணம்புரிந்து கொள்ளுதலில் இரண்டு பாங்குகள் உள. ஒன்று காமநோய்க்கு வசப்பட்டது. மற்றது அக் காம நோயை இறைவனுடைய வழிபாடாகக் கருதி அதற்கேற்றபடி அதைப் பயன்படுத்துவதாம். காமம் படைக்கும் கடவுளின் செயல். காத்தல் காக்கும் கடவுளின் செயல். துடைத்தல் சிவன் செயல். இம்மூன்றனுள் பிறவிப் பிணியைப் பெருக்குவது படைத்தல் தெய்வமாகிய பிரம்மதேவனுடைய செயலாம். பிறப்பைத் தாண்டிப் பரமனுக்குரிய பரமபதத்தை அடைவது மானுட ஜன்மத்தின் முக்கியமான குறிக்கோள். ஆதலால்தான் படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவனை வழுத்தலாகாது என்னும் கோட்பாடு வந்துள்ளது. நம் நாடு முழுதும் அலசி

ஆராய்ந்து பார்த்தால் சம்ஹாரத் தொழில் புரிகின்ற சங்கரனுக்கும், மக்களை நிலவுலகில் வைத்து நல்ல பாங்கில் காத்து வருகின்ற நாராயணனுக்கும் எங்கும் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பிரம்மதேவனுக்கோ பெயரளவில் இரண்டு மூன்று இடங்களில் மட்டும் கோயில்கள் கட்டி வைத்திருக்கிறார்கள்.

பிரம்மதேவனை வழுத்தலாகாது என்னும் லட்சியத்தைப் புறக்கணித்துவிட்டு மக்களில் பெரும்பான்மையோர் அவனைத் தான் வழுத்தி வருகின்றார்கள். ஏனென்றால் காம நோயை வளர்ப்பதும், அதற்குட்பட்ட பாங்கில் வாழ்ந்திருப்பதும், படைத்தல் தெய்வத்தினுடைய வழிபாடாம். அதை மிகைபடக் கையாளுதலால் ஜனத்தொகை பண்டொரு காலத்தில் இருந்ததைவிடப் பன்மடங்கு அதிகமாயுள்ளது. இன்றைய சூழ்நிலையில் வீடு ஒன்றில் பிறப்பு நேர்வதைவிடச் சாவு நேர்வது உத்தமம். வீட்டில் சாவே நேராதிருந்தால் அந்த வீட்டின் கதி என்னாகும் என்பதை மனிதன் எண்ணிப் பார்ப்பதில்லை. ஓயாது நிகழ்ந்து வருகின்ற மரணத்தின் வாயிலாகவே உலகில் புதுமை காத்து வைக்கப்படுகிறது. ஆகையால் மரணத்துக்கு அஞ்சிச் சிவனை வழிபடாது இருந்தால் வீட்டில் மரணம் நேராது என்பது மௌடிகமானது. சாவுக்கு அஞ்சுபவன் கோழை. ஏதேதோ காரணங்களை முன்னிட்டு அவன் பயந்து சாவது திரும்பத் திரும்ப நிகழ்ந்துகொண்டிருக்கிறது. மரணத்திற்கு அஞ்சாதிருந்து அது தன்னை வந்து தாக்குகிறபொழுது மகிழ்வுடன் அம் மரணத்தை ஏற்றுக்கொள்பவனே வீரன். வீரனுக்கு மரணம் ஒருதடவைதான் வருகிறது. ஆனால் கோழைக்கோ அது பல தடவை வருகிறது. ஆகையினால் நல்ல வீரன் ஒருவன் காமத்தை வெல்லுதல் மூலம் அவனிடத்தில் உள்ள வீரத்தை நன்கு நிலைநாட்டுகிறான். மரணத்தை மகிழ்வுடன் ஏற்பதால் அடுத்த பிறவிக்குரிய வீரியம் என்னும் வித்தை இப்பிறப்பிலேயே பெற்றவனாகிறான்.

மக்கள் எக்காலத்திலும் காமத்துக்கு அடிமைப்படாதிருந்து நல்வாழ்வைக் காக்கும் தெய்வமாகிய விஷ்ணுவையும், பழுது பட்டுப்போன உடலைத் துண்டித்துத் தள்ளுகிற சங்கரனையும் வழுத்திப் பழகுவார்களாக.

கேள்வி: *(239)* கோயில்களில் நவக்கிரகங்கள் இருப்பதன் தத்துவம் என்ன?

பதில்: கோயில் ஒன்று பிரபஞ்ச அமைப்புக்கு முன்மாதிரி யாக அமைந்திருக்கிறது. ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது ஆகிய நவக்கிரகங்கள் பிரபஞ்சத்தில் இடம் பெறுகின்றன. அதை முன்னிட்டுத்தான் கோயிலினுள் நவக்கிரகங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஆனால் ஞானமார்க்கம், பக்திமார்க்கம் ஆகிய சன்மார்க்கங் களைக் கடைப்பிடிப்பவர்களுக்கு இந்த நவக்கிரகங்களில் கருத்தைச் செலுத்தவேண்டிய அவசியமில்லை. அவர்கள் யாண்டும் ஈசனுடைய அருளைச் சார்ந்திருக்கிறார்கள். மற்றுக் கர்ம காண்டத்தில் செல்லுகிறவர்கள் நவக்கிரகங்களைச் சார்ந் திருந்து அவைகளால் உண்டாகின்ற பலன்களில் நல்லவை களை நாடுதலிலும், கெட்டவைகளைத் தவிர்த்தலிலும் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். ஆக, தேவை ஏற்படுகின்ற வர்கள் கோயில்களில் அமைந்துள்ள நவக்கிரகங்களை வேண்டியவாறு பயன்படுத்திக் கொள்ளட்டும். ஆனால் ஈசனுடைய அருளைச் சார்ந்திருக்கின்றவர்கள் நவக்கிரகங்களைப் பயன்படுத்தமாட்டார்கள்.

வினைப்பயனை விரும்புபவர்கள் புண்ணிய பாபத்துக்கு உட்படுகிறார்கள். தாங்கள் செய்த தீவினையின் பயனை அனுபவிக்க நேரிடும்பொழுது அதிலிருந்து தப்பித்துக்கொள் வதற்கு நவக்கிரகங்களின் அனுக்கிரகத்தை நாடுகிறார்கள். அத்தகையவர்கள் வழிபடுவதற்கு நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. வினைப்பயனில் பற்று வைக்காதவர் களுக்குப் புண்ணியமும் இல்லை; பாபமும் இல்லை. அவர்கள் பிரபஞ்ச வாழ்க்கையிலிருந்து விடுபடுவதற்கு ஈசனுடைய அருளைச் சார்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஈசனிடமிருந்து ஞானமும் பக்தியும் வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள். ஞானத்தையும், பக்தியையும் நாடிப் போகின்றவர்கள் நவக்கிரக உபாசனை செய்வதில்லை.

கேள்வி: *(240)* யாழ்ப்பாணத்தில் விஷ்ணு கோயில் ஒன்றில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, பல்லாண்டு,

திருப்புகழ், பெரியபுராணம் ஆகியவற்றைப் பாராயணம் செய்கின்றார்கள். இது சரியா?

பதில்: பரமனைச் சிவன் என்றும் விஷ்ணு என்றும் பாகுபடுத்துவதில் மனிதன் தத்துவத்தைத் தாண்டி வரம்பு கடந்துபோய்விடலாகாது. சிவனாருக்காக அமைந்துள்ள பக்திப் பாடல்களைச் சிவன் கோயிலில்தான் பாடவேண்டும் என்பது குறுகிய மனப்பான்மை. அப்பரம்பொருளே ஹரிஹரனாகவும் சங்கர நாராயணனாகவும் இலங்குகின்றார். ஆதலால் விஷ்ணு கோயிலில் சிவனாருக்குரிய பாடல்களைப் பாடலாகாது என்பது முறையன்று. மனிதனுடைய உள்ளத்தைக் கவர்கின்ற பாடல்கள் அனைத்தையும் கோவில்கள் எல்லாவற்றிலுமே தாராளமாகக் கையாளலாம். இது பொதுமக்களுக்கேற்பட்டுள்ள கோட்பாடாகும். ஆனால் அந்தந்தத் தெய்வத்துக்குரிய பாடல்களை ஒரு சிலர் அதற்கேற்ற சந்நிதானத்தில் மட்டும் பாடுவதும் பாராட்டத்தக்கதேயாம். அப்படிப் பாடுவதன் மூலம் அந்தத் தெய்வத்தின் மீது பக்தி வளர்கிறது.

கேள்வி:*(241)* சஷ்டி விரதம், கிருத்திகை விரதம் ஆகியவற்றை எம்முறையில் அனுஷ்டித்தால் இல்லற வாழ்வில் ஈடுபட்டுள்ள ஒரு பெண் சிறந்த பலனை அடைய முடியும்?

பதில்: சஷ்டி விரதம், கிருத்திகை விரதம், சோம வார விரதம், சனி வார விரதம் ஆகியவைகள் பாராட்டப்படுபவைகளே. அவைகளுள் விருப்பமான ஒன்றிரண்டை எடுத்துக் கொண்டு தீவிரமாகக் கையாள மக்கள் எல்லாரும் கடமைப் பட்டிருக்கின்றனர். விரதம் அனுஷ்டிக்கின்ற நாளன்று காலையில் உணவு எதையும் உண்ணாது இருத்தல் வேண்டும். அன்று சிறப்பாக வழிபாட்டில் ஈடுபடவேண்டும். சுத்தமான சாத்விக உணவையே வழிபடு தெய்வத்துக்குப் படைத்து அதைப் பிரசாதமாக உற்றார் உறவினருக்கு வழங்குதலும் பிறகு தானும் அருந்துதலும் முக்கியமான கடமையாகும். பிற்பகலில் இரண்டு மணி நேரம் மௌனவிரதம் அனுஷ்டிக்க வேண்டும். மாலை அரை மணிநேரம் தியானம், ஜபம் முதலியவை செய்தல் முற்றிலும் இன்றியமையாத பகுதியாகிறது.

இரவில் சொற்ப ஆகாரம் மட்டும் ஏற்பது முறைமை. பிறகு வழிபடு தெய்வத்தைப் பற்றிய கோட்பாடுகளை வாசிக்கவோ அல்லது வாசிக்கக் கேட்கவோ செய்தல் வேண்டும். படுக்கப் போவதற்கு முன்பு பத்து நிமிடம் உட்கார்ந்து தியானம் செய்ய வேண்டும். இம்முறைகளைத் தீவிரமாக அனுஷ்டித்து வந்தால் அதனால் வரும் மனத் தெளிவும் தூய்மையும் தனக்கே நன்கு விளங்கும்.

கேள்வி: (242) **கோவிலுக்குச் செல்கின்றவர்கள் அங்குச் சிறிது நேரம் அமர்ந்து வருவதன் நோக்கம் என்ன? விளக்கம் அளிக்க வேண்டுகிறேன்.**

பதில்: புனிதமும் பண்பும் நிறைந்துள்ள இடமே ஆலயம் எனப்படுகிறது. அத்தகைய அருள் சூழ்ந்துள்ள இடத்தை நன்கு பயன்படுத்த மனிதன் கடமைப்பட்டிருக்கின்றான். வெறுமனே விரைந்து ஆலயத்துக்குச் சென்று மூர்த்தியை வழிபட்டுவிட்டு அவசரமாகத் திரும்பி வருவது பயனற்றதாம். உணவு உண்பதிலும் மிக்கது அதை முறையாகச் செரிப்பது. அதே பாங்கில் ஆலயத்திற்குச் செல்வதன் நோக்கம் மேலான கருத்துக்களை ஏற்பதும் அவைகளைத் தனக்குச் சொந்தமாக்கு தலுமேயாம். ஆலயத்திற்குச் செல்லும் பக்தன் ஒருவன் அமை தியாக ஆங்குச் சிறிது நேரம் அமர்ந்திருப்பானாகில் அப்படி அமர்வதனால் உண்டாகின்ற நலனைத் தானே அறிய வருகி றான். இதை முன்னிட்டே ஆன்றோர்கள் ஆலயத்துக்குச் செல்லுகின்றவர்கள் ஆங்குச் சிறிதுநேரம் அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும் என்னும் ஐதிகத்தை அமைத்து வைத்துள்ளார்கள். அப்படி அமர்ந்திருக்கும்பொழுது மற்றொரு காரியத்திலும் பக்தன் ஒருவன் ஈடுபடலாம். நாம் அண்மையில் கற்றுள்ள மேலான கருத்துக்களில் சில நம்முடைய உள்ளத்தில் தெளிவுறாமலும் உறுதிபெறாமலும் இருந்து வருகின்றன. ஆலயத்தில் அமர்ந்திருக்கும் பக்தன் ஒருவன் அத்தகைய மேலான கருத்துக்களைப் பழைய பாடம் கற்கின்ற முறையில் எண்ணிப் பார்ப்பானாகில் அதன் மூலம் அவன் அடைந்து வருகிற மனத்தெளிவு தனக்கே நன்கு விளங்கும். இதுவே இந்த ஐதிகத்தின் நோக்கமாம்.

கேள்வி: (243) ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் ஏன் திறந்து வைக்கப்படுகிறது?

பதில்: ஆத்ம சாதகனுடைய ஜீவிதத்தில் நித்திய கர்மம், நைமித்திய கர்மம் என்ற இரண்டுவிதக் கர்மங்கள் இருக்கின்றன. மாதம்தோறும் அனுஷ்டிக்கும் ஏகாதசி விரதம் நித்திய கர்ம மாகக் கருதப்படுகிறது. மார்கழி மாதம் கையாளும் வைகுண்ட ஏகாதசி விரதம் நைமித்திய கர்மமாக அனுஷ்டிக்கப்படுகிறது. பாமரர்கள் எல்லாருக்கும் பக்தியை ஊட்டுதற்கு அத்தகைய நைமித்திய கர்மம் நன்கு பயன்படுகிறது. அந்த நைமித்திய கர்மங்களில் ஒன்று அன்று திறந்து வைக்கப்பட்டுள்ள சொர்க்க வாயில் வழியாகப் போதலாம். அப்படிப் போவதால் உண்டாகும் நலன்களைக் குறித்து ஏராளமாகச் சொல்லப்படுகிறது. கோயில் வழிபாட்டில் இப்படிக் கையாளுகின்ற முறைகள் யாவும் பாமரர்களுக்கிடையிலும் பக்தியைப் பரப்புதற்பொருட்டேயாம். விவேகம் படைத்திருக்கிறவர்கள் அத்தகைய நம்பிக்கைக்கு இடைஞ்சல் ஏதும் செய்யலாகாது. நல்வாழ்க்கையில் ஈடுபடா திருப்பவர்களுக்கு விழாவின் வாயிலாக ஈடுபாட்டை உண்டு பண்ணுவது சாலச்சிறந்தது. நித்திய வழிபாடு ஆத்ம சாதகர் களுக்கு இன்றியமையாத பகுதியாகின்றது. உணவு உண்பது எங்ஙனம் உயிர் வகைகள் அனைத்துக்கும் நித்திய கர்ம மாகிறதோ அதேபாங்கில் கடவுள் வழிபாடும் ஆத்ம சாதகர் களுக்கு இன்றியமையாத நித்திய கர்மமாகிறது. பாமரர்கள் அதில் உற்சாகம் காட்டமாட்டார்கள். அவர்களிடத்து உற்சாகத்தை ஊட்டுதல் பொருட்டு நைமித்திய கர்மங்களைச் சிறப்பு வாய்ந்த சில நாட்களில் சான்றோர்கள் கையாளுகிறார்கள். அதைப் பார்க்கும் பாமரர்களும் அச்செயலில் ஈடுபடுகிறார்கள். அத்தகைய நல்ல மனப்பான்மையை ஊட்டும் செயல்களில் ஒன்றாக ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் வழியாக நடந்து போதல் என்னும் வழிபாடு இடம் பெறுகிறது.

கேள்வி: (244) ஆலயங்களில் உள்ள பலிபீடத்தின் தாத்பர்யம் என்ன?

பதில்: பலிதானம் என்பதன் பொருள் உயிர்களைக் கொல்லுதல் அன்று. தன்னிடத்திலிருக்கும் மேலானதைப்

பிறருக்குப் பயன்படும்படி வழங்குவது அல்லது கடவுள் வழி பாட்டில் பயன்படுத்துவது என்பதுதான் அதன் பொருள். கோயிலுக்குள்ளே நுழைந்தவுடன் பலிபீடம் என்னும் இடம் ஒன்று உண்டு. அந்தப் பீடத்தின் முன் ஆடவர்கள் சாஷ் டாங்கமாகவும் பெண்கள் பஞ்சாங்கமாகவும் வழிபடுதல் வேண்டும். அப்படி வழிபடுகின்றபொழுது வழிபடுகின்றவன் தன்னிடத்துள்ள சிறுமைகளை எல்லாம் ஒதுக்கித் தள்ளுவதாகச் சங்கல்பம் பண்ணவேண்டும் தன்னிடத்துள்ள மேன்மைகளை ஓங்குவிப்பதும் பின்பு அவைகளைக் கடவுள் வழிபாட்டுக் கென்றே பயன்படுத்துவதும் வாழ்க்கையின் சிறந்த நோக்கமாகும். வழிபடுகின்றவன் பலிபீடத்தின் முன் வணங்கும்பொழுது அத்தகைய மனப்பான்மையை வரவழைப்பது மிக நன்று. கோயிலுக்குப் போகும் முன் நீராடி உடலைச் சுத்தப்படுத்து வதற்கு ஒப்பாகக் கோயிலுக்குள் நுழைந்தான பிறகு பலி பீடத்தின் முன் வீழ்ந்து வணங்கும்பொழுது மனதைச் சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். இதுவே பலிபீடத்தின் நோக்கமாகும்.

கேள்வி: *(245)* கடவுள் வழிபாட்டில் மலர்களை மூர்த்தியின் திருவடியில் வைக்கிறோம். தீபாராதனையின் பொழுது வடிவம் முழுமைக்கும் காட்டுகின்றோம். இதன் கருத்தென்ன?

பதில்: மூர்த்தியின் வாயிலாகப் பக்தன் ஒருவன் செய்கின்ற வழிபாடு முழுதும் பரமனுக்குரியது என்று அவன் எண்ணு கிறான். அந்தராத்மாவாயிருந்து அவனுடைய எண்ணத்தை அறிகின்ற பரமன் அந்த எண்ணத்திற்கு அனுமதி தருகிறார். அன்பிற்கு அறிகுறியாகப் பக்தன் ஒருவன் மலர்களை இறை வனுடைய திருவடிகளில் சாத்துகின்றான். மூர்த்தியின் சிரசின் மீது மலர் சாத்துவதைவிட அவருடைய திருவடிகளில் சாத்துவது சாலச் சிறந்தது என்பதைப் பக்தன் உணருகின்றான். அத்தகைய உணர்ச்சி ஆமோதிப்பதற்குரியதாம். பிறகு தீபாரா தனை பண்ணுகின்றபொழுது இறைவனுடைய முகவிலாசத்தில் வெளிச்சத்தைக் காட்டி அடுத்தபடியாக அவன் சொரூபம் முழுதும் சுற்றிக்காட்டி முடிவில் அந்த ஞான வெளிச்சம்

எல்லையில் அடங்காதது என்பதற்கு அறிகுறியாக அவன் வட்டமிட்டுக் காட்டுகின்றான். ஆக, பக்தியின் விளைவும் ஞானத்தின் விளைவும் சாதகன் செய்கின்ற வழிபாட்டில் அடங்கியுள்ளன.

கேள்வி: *(246)* கற்பூர ஆரதி செய்வதன் தத்துவம் என்ன?

பதில்: பூஜையில் கையாளும் ஒவ்வொரு கிரியையும் மனதைப் பண்படுத்துவதற்காக அமைந்துள்ளது. பஞ்சேந்திரியங்களின் மூலம் புறவுலகுக்குச் செல்கின்ற மனதைத் தெய்வத்தின்பால் திருப்புவதற்குப் பூஜையில் சிலமுறைகள் கையாளப்படுகின்றன. மணியோசையும், இறைவனுடைய மகிமையை உருகிப் பாடுவதும் காது என்ற இந்திரியத்தின் மூலம் செல்லும் மனதைத் தெய்வத்தின்பால் திருப்புகின்றன. சாம்பிராணி, ஊதுபத்தி முதலிய தூபங்களைப் பூஜையில் கையாளுவது மூக்கு என்ற இந்திரியத்தின் மூலம் புறவுலகில் செல்கின்ற மனதைத் தெய்வத்தின்பால் திருப்புகிறது. மேனியில் விபூதி அணிவதும் தெய்வத்துக்குச் சாத்திய பூமாலையை மேனியில் அணிவதும் மேனியின் மூலம் புறவுலகுக்குச் செல்லுகின்ற மனதைத் தெய்வத்தின்பால் திருப்புகின்றன. தெய்வப் பிரசாதத்தை அருந்துவது நாவின் மூலம் புறவுலகுக்குச் செல்கின்ற மனதைத் தெய்வத்தின்பால் திருப்புகிறது. தீபத்தின் மூலமும், கற்பூர ஆரதியின் மூலமும், கண்மூலம் புறவுலகுக்குச் செல்லும் மனது தெய்வத்தின்பால் திருப்பப்படுகின்றது.

கற்பூரம் எரியும்பொழுது அது எடுத்துள்ள வடிவத்தை இழக்கிறது; காற்றோடு ஒன்றாகக் கலந்து விடுகிறது. அங்ஙனம் ஞானாக்னியால் நாம் எடுத்துள்ள ஸ்தூல, சூட்சும, காரண வடிவங்களை அழித்துவிட்டுப் பிரம்மத்தோடு கலந்துவிட வேண்டும் என்ற தத்துவம் கற்பூர ஆரதியில் அடங்கியிருக்கிறது. கற்பூரம் வெண்மையாக இருப்பது சுத்த மனதுக்குச் சின்னமாகும். சுத்தமான கற்பூரத்தை நெருப்போடு சேர்த்தால் அது வடிவத்தை இழந்து நெருப்பு மயமாகிவிடும். சுத்த மனதை ஞானாக்னி என்ற ஆத்ம சொரூபத்தோடு சேர்த்தால் அது அழிந்து ஞான சொரூபமாகிவிடுகிறது. மனதற்ற பரிசுத்த

நிலையே பரஞானமாகும் என்ற தத்துவம் கற்பூர ஆரதியில் அடங்கி இருக்கிறது.

நம் முன்னோர்கள் தத்துவத்தை விளக்குவதற்குக் கிரியைகளைக் கையாண்டார்கள். நாளாக நாளாகக் கிரியை களுக்கு அடிப்படையான தத்துவம் பின்னணிக்குப் போய் விட்டது. கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். கிரியைகளை மிகுந்த பணச் செலவில் செய்வதே வழிபாடாகும் என்ற கருத்தும் மக்களிடையே இடம் பெறலா யிற்று. கிரியைகள் அல்லது சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பொருள் திரட்டுவதும் வழிபாட்டில் இடம் பெற்றுவிட்டது. கற்பூரத்தை ஏராளமாகக் கொளுத்துவது பூஜை யென்று கருதுகின்றனர். கற்பூரத்தை ஏராளமாகக் கொளுத்து வதால் கோயிலின் சுவர்களில் கரிபடியும். எனவே கற்பூரம் கொளுத்துவதைச் சிறிய அளவில் செய்தால்போதும்.

கேள்வி: *(247)* ஆரதி எடுக்கும்பொழுது ஏன் மணி அடிக்கிறார்கள்? மணி அடிக்காது செய்யலாகாதா?

பதில்: பாடம் புகட்டுதற்கு மொழி கையாளப்படுகிறது. அப்பொழுது காது என்னும் பொறி ஒன்று மட்டும் பயன் படுத்தப்படுகிறது. புகட்டப்படுகிற விஷயம் கண்ணுக்கும் இலக்காகக் கூடியதாக இருந்தால் அது இன்னும் ஆழ்ந்து மனதில் படிகிறது. அப்பொழுது அது Audio visual education எனப்படுகிறது. புகட்டப்பெறுகிற விஷயம் ஒரே வேளையில் பல இந்திரியங்களுக்கு எட்டக்கூடியதாக இருந்தால் அதற் கேற்றவாறு அது மனதில் ஆழ்ந்து படிகிறது. அதே கோட்பாடு வழிபாட்டிலும் பயன்படுத்தப்படுகிறது. மணி அடிப்பதும், ஆரதி எடுப்பதும் ஆகிய இரண்டும் இணைத்து வைக்கப் பட்டிருக்கின்றன. இங்குமங்கும் பார்த்துக் கொண்டிருப்பவர் களுடைய மனதை மணியோசையானது வழிபடு மூர்த்தியின் கண் கவர்ந்திழுக்கிறது. அதே வேளையில் ஆரதி எடுப்பதைக் கண்கூர்ந்து பார்க்கிறது. வேறு ஓசைகள் மனதைச் சிதறடைய விடாது இலட்சியத்தின்கண்ணே செலுத்துதற்கு மணியோசை ஏற்ற கருவியாகிறது. ஆகையினால்தான் இவை இரண்டும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன.

கேள்வி: (248) கோவில்களில் பிரதோசம் கொண்டாடுவது ஏன்? அன்று நந்தியம் பெருமானுக்கு சிறப்பாக வழிபாடு நடப்பது எதற்கு?

பதில்: ஏகாதசி, பிரதோஷம், மாசிய சிவராத்திரி ஆகியவைகள் ஒன்றன்பின் ஒன்றாக மாதந்தோறும் தொடர்ந்து வருகின்றன. மாதத்தில் சுக்லபட்சம், கிருஷ்ணபட்சம் என்னும் இரண்டு பட்சங்களிருக்கின்றன. ஒரு பட்சத்துக்குப் பதினைந்து நாள். இந்தப் பதினைந்து நாட்களில் பௌர்ணமி அல்லது அமாவாசையைத் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு மக்களிடத்தில் சத்வகுணம் ஓங்கியிருக்கிறது. பிறகு ஐந்து நாளைக்கு ரஜோகுணம் முன்னணியில் வந்து நிற்கும். கடைசி ஐந்து நாட்களில் தமோகுணம் தலையெடுக்கும். அப்படித் தமோகுணம் தலையெடுக்கிற நாட்களில்தான் ஏகாதசி, பிரதோஷம், சிவ ராத்திரி முதலிய நாட்கள் வந்தமைகின்றன. அந்நாட்களில் உபவாசம் இருப்பது சிறந்த ஆத்ம சாதனமாகக் கருதப்படுகிறது. உபவாசம் அல்லது உண்ணாவிரதத்தின் மூலம் தமோகுணத்தின் வேகத்தைத் தணித்து விடலாம். முற்றிலும் உபவாசமிருக்க இயலாதவர்கள் ஏகாதசி நாளிலிருந்து சதுர்த்தசி நாள் ஆகிய நான்கு நாட்களுக்கு மிதமாக உணவு உண்டு பழகினால் தமோகுணத்தின் வேகத்தைத் தடுப்பதற்கும், மனதைப் பண்படுத்துவதற்கும் அது நன்கு பயன்படும்.

ஜீவாத்மாவின் பிரதிநிதியாக இருப்பது நந்திதேவன். ஆத்ம சாதனத்தில் தங்களைப் பண்படுத்துவதற்கென்றே ஜீவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். நந்திதேவரின் வழிபாட்டின் மூலமாக ஜீவர்கள் தங்களை உயர்நிலைக்கு உயர்த்திக்கொள்ளவேண்டும் என்னும் கோட்பாடு விளக்கப்படுகிறது.

கேள்வி: (249) கோயில்களுக்குத் தேங்காய், பழம் கொண்டு போவதின் பொருள் என்ன?

பதில்: கோயில்கள் ஒரு பாங்கில் மக்களுக்கிடையில் சமயத்தைப் புகட்டி வருகின்றன. மடாலயங்கள் மற்றொரு பாங்கில் மக்களுக்கிடையில் மதத்தைப் புகட்டி வருகின்றன. உண்மையை உள்ளபடி புகட்டுவது மடாலயங்களின் நோக்கமாகும். அவ்வுண்மைகளை நடைமுறையில் கொண்டு வருவதற்கு

உபாயங்கள் சில இருக்கின்றன. ஆலய வழிபாடு அவ்வுபாயங் களில் ஒன்று ஆகும். ஆலயத்துக்குக் கற்றவர்களும் மற்றவர் களும், மேலோரும் கீழோரும், முதியவர்களும் சிறியவர்களும் ஆகிய மக்கள் எல்லாரும் போகலாம். அவரவருக்கு உற்சாகத்தை யும், நல்லறிவையும் புகட்டுதற்குக் கோயில் வழிபாட்டில் இடங்கள் வகுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. சிறுவர்களுக்கு விளையாட்டுக்கு ஏதுவான வசதிகள் அமைந்திருக்கின்றன. மந்த அதிகாரிகளுக்கு வேடிக்கை, விநோதங்கள் ஆங்கு அமைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. விசாரித்துப் பார்க்கிற வர்களுக்குக் கோயில் அமைப்பின் வாயிலாகக் கோட்பாடுகள் பல புகட்டப்படுகின்றன. கடவுளை வழிபட விரும்புகிறவர் களுக்கு அனுஷ்டான முறைகள் பல அமைத்து வைக்கப் பட்டிருக்கின்றன.

வழிபாட்டுக்குக் கோயிலுக்குப் போகிறவர்கள் வெறுங்கை யோடு போகலாகாது. இறைவனுக்குப் படைப்பதற்கு நல்ல பண்டங்கள், பத்ரம், புஷ்பங்கள் முதலியன கொண்டு போக வேண்டும் என்னும் ஐதிகம் வந்துள்ளது. பத்ரங்களும், புஷ்பங்களும் தூய மனப்பான்மைக்கும், ஊக்கத்துக்கும் புறச்சின்னங்கள் ஆகின்றன. தேங்காயும் பழமும் தூய தின்பண் டங்கள் ஆகின்றன. தெய்வத்துக்குப் படைத்து மக்கள் எல்லா ருக்கும் பிரசாதமாகப் பங்கிட்டுக் கொடுப்பது இதன் நோக்க மாகிறது. சுயநலப்பற்றை ஒதுக்குதற்கும் உயிர்களுக்கிடையில் இணக்கத்தை உண்டு பண்ணுதற்கும் இச்செயல் உதவுகிறது. தனக்குரிய பொருள்களைத் தெய்வத்துக்கு உரியவைகள் என்று கருதி மனிதன் பொருள்கள் மீது வைத்துள்ள பற்றுதலை அகற்ற வேண்டும். தெய்வத்தின் பெயரால் தனியுடைமையைப் பொதுவுடைமையாக மாற்றவேண்டும்.

குழந்தைகளைப் பார்க்கப் போகிறவர்கள் வெறுங்கையோடு போகலாகாது என்னும் கோட்பாடு ஒன்றுண்டு. குழந்தை களோடு இணக்கம் பூணுதற்கு அவர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்குவது உற்ற உபாயமாகிறது. எந்தக் கோயில்களில் தின்பண்டங்கள் பிரசாதமாக ஏராளமாக வழங்கப்படுகின்றனவோ ஆங்குக் குழந்தைகள் ஆவலோடு செல்லுகின்றனர். குழந்தை களைக் கோயிலுக்குக் கவர்ந்திழுப்பதற்கு இது சிறந்த ஓர்

உபாயமாகிறது. மகிழ்வோடு தின்பண்டங்களை ஏற்கின்ற அதே வேளையில் மேலான கருத்துக்களையும் குழந்தைகள் சிரமமின்றிக் கோயில் வழிபாட்டின் மூலமாகப் பெறுகின்றனர். வாழ்வைத் தெய்வீக வாழ்வாக மாற்றியமைப்பதற்குக் கிரியா விசேஷங்கள் கோயில்களில் அமைந்திருக்கின்றன. ஓயாது படைப்புக்காகப் பண்டங்கள் வந்துகொண்டிருப்பதும், பரம னுக்குப் படைக்கப்பெற்றுள்ள நல்ல பண்டங்கள் மக்களுக் கிடையில் பிரசாதமாக வழங்கப்பெறுவதும் தெய்வீக உணர்வை வளர்ப்பதற்குச் சிறந்த உபாயங்கள் ஆகின்றன. எங்கெல்லாம் கோயில்களில் சிறப்பாகக் கிரியைகள் அமைந்திருக்கின்றனவோ, ஆங்கெல்லாம் தெய்வபக்தி விரிவடைந்து வருவதையும் கண்கூடாகக் காண்கிறோம். நானாவிதமான பொருள்களைக் கொண்டு கடவுள் வழிபாடு செய்வதால் உயிரோடு உயிர் வைக்கிற நல்லிணக்கம் ஓங்கி வளர்கிறது. இதுவே கோயில் வழிபாட்டின் மேலான அம்சமாகும். ஆதலால் ஐதிகத்தை அனுசரித்துக் கோயில் வழிபாட்டுக்குள்ள பொருள்களை மேலும் மேலும் கோயில்களுக்கு எடுத்துச் செல்லுவது நல்ல வழிபாட்டு முறையாகும்.

கேள்வி: *(250)* கடவுள் உள்ளத்தில் இருக்கிறார் என்றால் உள்ளத்தினுள் நினைத்தால் போதுமா? புறத்தே வழிபாடு செய்ய வேண்டாமா?

பதில்: நாம் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் காற்று நிறைந்திருக்கிறது. ஆகையினால் சுவாசிப்பதற்கு நாம் காற்றை எங்கும் எடுத்துச் செல்வதில்லை. வீட்டுக்குள் வசிக்கும்பொழுது காற்றை அங்கே சுவாசிக்கிறோம். வெளியில் வந்தால் அவ்விடத் திலும் காற்றைச் சுவாசிக்கிறோம். அதே விதத்தில் கடவுள் எங்கும் நிறைபொருள். அவரை அகத்திலும் வழிபடலாம். புறத்திலும் வழிபடலாம். ஆனால் அகத்தில் வைத்து அவரை வழிபடுவதற்கு ஏற்ற நல்ல பயிற்சி வேண்டும். ஆயிரக்கணக் கானபேர் ஆலயங்களுக்குச் சென்று அங்கே தங்களுக்குத் தெரிந்துள்ளபடி கடவுள் வழிபாடு பண்ணுகிறார்கள். அங்ஙனம் கடவுளைப் புறத்தே வைத்து வழிபடுவது சுலபம். ஆலயத்துக்குச் செல்லுகின்ற பலபேர்களுள் யாரோ சிலர்தாம்

இறைவனுடைய சாந்நித்தியத்தை ஆலயத்தினுள் உணர்கின் றனர். வழிபடுபவர்களுள் பெரும்பான்மையோர் செய்வது ஏதோ சமுதாயப் பழக்கவழக்கத்தை முன்னிட்டேயாம். இறைவனுடைய சாந்நித்தியத்தை ஆலயத்தினுள் உணர்ந்து பழகவேண்டும். பிறகு அப்பழக்கத்தை அனுசரித்து ஆலயத் தினுள் அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து அவனுடைய சாந்நித்தியத்தை உள்ளத்தினுள்ளே வைத்துத் தியானித்துப் பழகவேண்டும். அப்படிப் பழகுகின்றவர்களுக்கு உள்ளத் தினுள்ளே மனச்சாட்சியாக அவர் வீற்றிருப்பது விளங்குகிறது. பிறகு, கருவிகரணங்களை ஒடுக்கி வைத்துவிட்டு அகத்திலே தியானாவஸ்தையில் கடவுள் சாந்நித்தியத்தை உணர்ந்து பழகுவது நல்ல பயிற்சியாகும். அதே பயிற்சியைக் கோயில் வழிபாட்டிலும் பெற்று வருவது உசிதம். சாதனையின் ஆரம்ப தசையில் உள்ளவர்களுக்குப் புறத்தே வடிவத்தை வைத்து வழிபாடு செய்வது சுலபமாக இருக்கும். புறவழிபாட்டை முறை யாக ஆழ்ந்து செய்து வந்தால் அவ்வழிபாடு அகத்தில் ஆழ்ந்து பதிகிறது. புறத்தில் பார்த்த தெய்வ வடிவத்தைப் பிறகு அகத்தில் வைத்துப் பார்ப்பதும் வழிபடுவதும் சுலபமாக இருக்கும். எந்த மூர்த்தியின் வடிவத்தைத் தியானிக்கின்றோமோ, அந்த மூர்த்தியின் பெருமைகளெல்லாம் மனதுக்குத் தெளிவாக விளங்கும். மூர்த்தியின் பெருமைகளில் மனம் ஈடுபட்டுவிடுமாகில் அகவழிபாடு சிறப்பாக அமையும். சாதகர்கள் அவரவர்கள் மனபரிபாகத்துக்கு ஏற்பப் புறவழிபாட்டையோ அகவழிபாட் டையோ செய்து வரலாம். எனவே அகம் புறம் என்னாதபடி கடவுள் வழிபாட்டை யாண்டும் செய்துவருவது நல்ல பயிற்சி யாகும். கடவுள் உள்ளத்தில் இருக்கிறார் என்பது உண்மை யாயினும் அவருடைய சாந்நித்தியத்தை உள்ளத்தில் உணர்வது எல்லார்க்கும் சாத்தியமில்லை. வெறுமனே வாயால் கடவுள் உள்ளத்தில் இருக்கிறார் என்று சொல்லுபவர்கள் அவரை உள்ளத் தால் நினைத்தவர்களல்லர். புறவழிபாட்டின் மூலம் அவருடைய சாந்நித்தியத்தை உள்ளத்தில் உணர முயலவேண்டும். அகம், புறம் ஆகிய இரண்டு வழிபாடுகளை ஆழ்ந்து செய்து மனதைப் பண்படுத்தினால் அவர் உள்ளத்திலிருப்பதை நன்கு உணரலாம். அதன் பிறகு அவரை உள்ளத்தினுள் நினைப்பது சாத்தியமாகும்.

கேள்வி: *(251)* கடவுளிடத்துப் பக்தி கொண்டிருப்பது சிறந்ததா அல்லது பயபக்தி கொண்டிருப்பது சிறந்ததா?

பதில்: பயத்துக்குப் பிறப்பிடம் அக்ஞானம். மனிதன் எதையெதையோ குறித்துப் பயப்படுகிறான். மின்னல் மின்னுவதை, இடியிடிப்பதைக் குறித்து அஞ்சுபவர்கள் உண்டு. இயற்கையில் நிகழ்கிற பல நிகழ்ச்சிகளைக் குறித்துப் பயப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். அவைகளெல்லாம் கடவுளின் சீற்றம் என்று பொருள்படுத்துகிறவர்களும் உளர். இயற்கையின் நடைமுறைகளை உள்ளபடி அறிந்து கொள்ளுமளவு பயம் தானாக அகன்றுபோய் விடுகிறது. கடவுளிடத்து மனிதன் முதலில் பயபக்தி கொள்கிறான். கடவுளை நன்கு அறிந்துகொள்ளுமளவு, நன்கு நேசிக்குமளவு பயம் போய்விடுகிறது. கடவுளை அடைவதும் அபயம் அல்லது பயமின்மையைப் பெறுவதும் ஒன்றேயாம். ஆக, பயபக்தி அக்ஞானத்தில் தோன்றுகிறது. பயமற்ற பக்தி ஞான முதிர்ச்சியின் விளைவாகிறது. தூய அன்பு இருக்குமிடத்தில் பயமில்லை.

கேள்வி: *(252)* இந்துக்கள் கோயிலில் வழிபாடு செய்யும்பொழுது பால், தயிர், தேன் ஆகிய உணவுப் பொருள்களை அபிஷேகத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். இச்செயல் உணவுப்பொருள்களை விரயம் பண்ணுவது ஆகாதா?

பதில்: கடவுள் வழிபாட்டில் ஞானகாண்டம், கர்மகாண்டம் என இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஞானகாண்ட முறைப்படி வழிபாடு செய்கிறவர்களுக்கு விக்கிரகத்தின் மூலம் அபிஷேகம், ஆராதனை ஆகிய கிரியைகளுக்கு அவசியமில்லை. ஆனால் ஞானகாண்ட முறையைக் கையாளுதற்கான பரிபக்குவம் அடைந்திருப்பவர்கள் மிகச் சிலரே. மக்களில் பெரும்பான்மையோருக்குக் கர்மகாண்ட முறை முற்றிலும் அவசியமானது. அதைப் பக்தி பூர்வமாகக் கையாளுவதின் வாயிலாகப் பாமரர்களுக்குப் படிப்படியாகப் பக்தியும் ஞானமும் ஓங்குகின்றன. கோயிலில் பரதத்துவத்துக்குச் சின்னமாக விக்கிரகம் ஒன்றை அமைத்துக்கொண்டு அதன்கண் பரம்பொருள் எழுந்தருள வேண்டுமென்று கர்மகாண்ட முறைப்படி வேண்டிக்

கொள்ளப்படுகிறது. அந்த விக்கிரகத்தில் இறைவனுடைய சாந்நித்தியம் சிறப்பாக வீற்றிருக்கிறது என்னும் நம்பிக்கை மக்கள் உள்ளத்தில் ஆழ்ந்து ஊட்டப்பட்டிருக்கிறது. அது பாராட்டத்தக்க நம்பிக்கை, தத்துவத்துக்கு ஒத்தது. ஆயிரக் கணக்கான பேர் அன்புடனும் விசுவாசத்துடனும் மூர்த்தியின் கண் எழுந்தருளியிருக்கும் தெய்வத்துக்கு வணக்கம் செலுத்துகின்றனர்.

சத்து நிறைந்த நல்ல உணவுப் பொருள்களை அபிஷேகத்திற்குப் பயன்படுத்துவது ஐதிகமாக வந்துள்ள வழிபாட்டு முறையாகும். இம்முறையில் பொருள் நஷ்டத்துக்கு இடமில்லை. பால் அபிஷேகம் பண்ணுகிறபொழுது மற்றொரு பாத்திரத்தில் அது ஈசுவரப் பிரசாதமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதே விதத்தில் பஞ்சாமிர்தம், தேன், தயிர் ஆகியவைகள் பிரசாதமாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. வழிபாட்டுக்குக் குழுமியுள்ள மக்களுக்கிடையில் சுவை நிறைந்த இப்பண்டங்கள் பிரசாதமாக வழங்கப்படுகின்றன. தனி மனிதர்களுக்குரிய விலையுயர்ந்த பொருள்கள் ஈசுவரப் பிரசாதமாகப் பொதுமக்களுக்கு உரியன வாக்கப்படுகின்றன. இங்ஙனம் தனியுடைமை தெய்வத்தின் பெயரால் பொதுவுடைமை ஆக்கப்படுகிறது. அடுத்தபடியாக மனிதனிடத்திருந்து மனிதன் நேரே பொருளை ஏற்றுக்கொள்ளுகிறபொழுது கொடையாளன், ஏற்பாளன் என்னும் வேண்டப்படாத பாகுபாடுகள் வருகின்றன. நான் கொடையாளி என்கின்ற எண்ணம் கொடுப்பவனிடத்து வரலாகாது. இலவசமாக ஒருவரிடமிருந்து பொருளை நான் ஏற்றுக்கொண்டேன் என்ற இகழ்ச்சி இன்னொருவனுக்கு வரலாகாது. தெய்வத்துக்கு அபிஷேகம் செய்து ஈசுவரப் பிரசாதமாக வழங்குகின்ற இடத்துக் கொடையாளி என்கின்ற எண்ணமும் இலவசமாக ஏற்றுக்கொண்டேன் என்ற எண்ணமும் தவிர்க்கப்படுகின்றன. தெய்வ பக்தியே பொருளை வழங்கியவனிடத்தும், பொருளை ஏற்றவனிடத்தும் ஓங்குகிறது. ஆதலால் இந்துக்களாகிய நாம் ஆலய வழிபாட்டில் கையாண்டு வருகிற மேலாம் உணவுப் பொருள்களைக் கொண்டு செய்கிற அபிஷேகத்தைப் புறக்கணிக்கலாகாது. அதற்கு உற்சாகம் ஊட்டவேண்டும். எவ்விதத்திலும் பொருள்களுக்குச் சேதம் ஏற்படாது அபிஷேகத்தை நடாத்துவதில்

கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும். இம்முறை நம் ஆன்றோர்கள் வகுத்து வைத்துள்ள மேலாம் செயலாகிறது. இதில் பொருளாதாரப் பங்கீடும் கடவுள் பக்தியை வளர்க்கும் முறையும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன.

கேள்வி: *(253)* பால், பஞ்சாமிர்தத்தைக் கடவுளுக்குப் படைக்கின்றார்கள். அவற்றை அபிஷேகம் செய்வதால் பால், பழம் வீணாகின்றன. அதை ஏழைகளுக்குக் கொடுக்க லாகாதா?

பதில்: கடவுளுக்கு வந்துள்ள அடைமொழிகளுள் "உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி" என்பது ஒன்று. நம் போன்று கடவுள் உடல் படைத்தவர் அல்லர். உடலைப் பேணுதற்கு உணவு அவசியம். உடலை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு உறக்கம் அவசியம். கடவுளுக்குப் பரவஸ்து என்பது பெயர். பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டது என்பது அதன் பொருள். ஆதலால் பரவஸ்துவுக்கு மேனியுமில்லை. அதைப் போஷிப்பதற்கு உணவும் தேவையில்லை. ஆயினும் வழிபாட்டுக்காகப் பிரபஞ்சத்துக்கப்பால் இருக்கிற பொருளைப் பிரபஞ்சத்திலுள்ள ஒரு மூர்த்தியாக நாம் அமைத்துக் கொள்கின்றோம். நமக்கு விருப்பமாயுள்ள உணவுப் பொருள்களை நம் வழிபடு தெய்வத்துக்குப் படைக்கிறோம். உடலைத் தூய நிலையில் வைத்திருப்பதற்கு நாம் நீராடுகின்றோம். அதே விதத்தில் வழிபடு தெய்வத்துக்கு நாம் கொடுத்துள்ள வடிவத்தின் மூலம் அவரை நீராட்டுகிறோம். அதற்குமேல் அத்தெய்வத்துக்கு விதவிதமான அபிஷேகங்கள் செய்கிறோம். பால், தயிர், நெய், பஞ்சாமிர்தம், இளநீர், பன்னீர், சந்தனம் முதலியன முறையாகச் சொரிந்து தெய்வத்துக்கு அபிஷேகம் செய்கிறோம். இதில் அடிப்படைக் கோட்பாடு ஒன்று உண்டு: இப்படி அபிஷேகம் செய்வதால் உணவுப் பொருள்கள் பாழ்படுத்தப்படுவதில்லை. பால் அபிஷேகம் செய்யச் செய்ய மற்றோர் பாத்திரத்தில் அது சேகரிக்கப்படுகிறது. அபிஷேகத்துக்குரிய பொருள்களனைத்தும் இங்ஙனம் ஈசுவரப் பிரசாதமாகச் சேகரிக்கப்படுகின்றன. பிறகு அவையாவும் பிரசாதமாக மக்களுக்கு வழங்கப்படுகின்றன. உண்பதற்குரிய பொருள்களை

நேரே எடுத்து மக்களுக்கு வழங்கினால் அவைகள் பஞ்சேந்திரி யங்களால் நுகரப்படும் போகத்துக்குரியவைகள் எனக் கருதப் படுகின்றன. ஆனால் அதே பொருள்கள் கடவுள் வழிபாட்டில் கையாளப்படுகின்றபொழுது அவைகள் புனிதம் வாய்க்கப் பெற்றவைகளாகக் கருதப்படுகின்றன. புசிக்கிற பண்டத்தை நாவுக்கு இனியது எனப் பொருள்படுத்துவது ஒருவித மனப் பாங்கு. அதே பொருளை ஈசுவரப் பிரசாதமாக ஏற்கின்ற பொழுது மனப்பான்மை மேலானதாகத் திருந்தி அமைகின்றது. இங்ஙனம் பஞ்சேந்திரியங்கள் மூலமாக நுகர்கின்ற அனைத் தையும் தெய்வத்தோடு இணைத்து வைத்து நுகர்வது சாலச் சிறந்தது. மக்களுக்கிடையில் ஏழை, பணக்காரன் என்னும் வித்தியாசம் பாராட்டுவதில்லை. வழிபாட்டுக்காக வந்துள்ள அனைவர்க்கும் பிரசாதம் ஒழுங்காக வழங்கப்படுகிறது. அபிஷேகத்திற்காகவென்று அதற்குரிய பொருளைக் கொண்டு வருபவர் மிகச்சிலர். அப்படிக் கொண்டு வந்தவர்கள் அப் பொருள்களில் தனியுரிமை பாராட்டலாகாது. உரிமை பாராட்டி னால் அது கடவுள் வழிபாடு ஆகாது. அப்பொருள்கள் விநியோகிக்கப்படுவது பலப்பல பேர்களுக்கிடையில். இத்தகைய ஆலய வழிபாட்டில் சிறப்பு ஒன்று உண்டு. மக்களுக்குப் பயன்படுகிற பொருள்களைச் செல்வம் படைத்தவர்கள் தேவாராதனைக்கென்று கொடுக்கிறார்கள். இறைவனுக்காக வென்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள அப்பொருள்கள் வழிபடுவோர் பலருக்குப் பயன்படுகின்றன. கடவுளின் பெயரால் தனியுடைமை பொதுவுடைமையாக மாறுகிறது. பொருளைக் கடவுளுக்குப் படைக்கிறவன் அப்பொருள் தன்னுடையதென்ற உரிமையைத் தியாகம் பண்ணுகிறான். ஈசுவரப் பிரசாதமாக அப்பொருள்களை ஏற்கும் மக்கள் அவருடைய அனுக்கிரகத்தோடு கூடி தங்களுக்கு வந்துள்ளது எனக் கருதுகின்றனர். கொடையாளி என்ற உணர்ச்சியும் மனிதனிடத்திருந்து ஒரு பொருளை ஏற்றவன் என்கிற உணர்ச்சியும் அடிபட்டுப் போகின்றன. பொருள் தெய்வத்துக்குப் பணிவுடன் படைக்கப்படுகிறது. அருள் நிறைந்த அப்பொருள் பக்தி விசுவாசத்தோடு மக்களால் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. இம்முறையில் கொடுக்கிறவன் என்கிற செருக்குக்கு இடமில்லை; ஏற்றுக் கொள்ளுகிறேன் என்கிற சிறுமைக்கும்

இடமில்லை. ஆக, சான்றோர்களால் அமைக்கப்பட்டுள்ள கடவுள் வழிபாடானது தனியுடைமை பொதுவுடைமையாக மாறுவதற்கு ஏற்ற உபாயமாகிறது. இத்தகைய வழிபாட்டுமுறை யாண்டும் நலனை உண்டுபண்ணுகிறது.

கேள்வி: *(254)* ஹிந்துக் கோயில்களில் பிற மதத்தினரை ஏன் அனுமதிப்பது இல்லை? அனுமதிக்க லாமா? கூடாதா?

பதில்: சரித்திர பூர்வமாக இக்கேள்வியை ஆராயுமிடத்துச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு புறமதஸ்தர்கள் ஹிந்துக் கோயில்களைத் தாக்கவும், கொள்ளையடிக்கவும், அவற்றின் தூய்மைக்குப் பங்கம் பண்ணவும் முற்பட்டனர். அப்பொழுது தற்பாதுகாப்புக்காகக் கோயில்களில் பிரவேசிக்க சொந்த மதஸ் தர்களையே அனுமதித்தனர். பிறகு ஆங்கில அரசாட்சி வந்த பிறகு கொள்ளையடிக்கும் மனப்பான்மை மாறிப்போயிற்று. விக்கிரக ஆராதனையைக் குறித்துக் குற்றம் காணுகிற மனப் பான்மையும், ஏளனம் பண்ணுகிற மனப்பான்மையும் புற மதஸ்தர்களிடத்து வடிவெடுத்தன. ஆதலால் தற்பாதுகாப்பின் பொருட்டுப் புறமதஸ்தர்கள் யாருமே ஹிந்துக் கோயில் களுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை. கிரியா விசேஷங்களுடன் கோயில் வழிபாடு முழுதும் ஹிந்துக்களுக் காகவென்றே அனுஷ்டிக்கப்பட்டன. புறமதஸ்தர்களைக் கோயிலுக்குள் பிரவேசிக்கவொட்டாது காப்பாற்றி வைப்பது தங்களுடைய கடமை என ஹிந்துக்கள் உணர்ந்தனர். தெரிந்தோ, தெரியாமலோ புறமதஸ்தர்கள் கோயிலுக்குள் புகுந்துவிட்டால் தீட்டு ஏற்பட்டுவிட்டது என்று கருதி அதற் கேற்ற புரோக்ஷணம் போன்ற தூய சடங்குகளைக் கையாண்டு வந்தனர். சூழ்நிலையினால் தூண்டப்பெற்று ஹிந்துக்கள் தங்களுடைய ஆலயங்களைப் புறமதஸ்தர்களிடமிருந்து இதுகாறும் காப்பாற்றி வைத்தது முறை.

இப்பொழுது சூழ்நிலை மாறியிருக்கிறது. ஹிந்து மதத் தத்துவங்களை உள்ளபடி அறிந்து கொள்ள விரும்புகிற புற மதஸ்தர்கள் பலர் இருக்கின்றனர். ஏளனம் பண்ணும் மனப் பான்மை அகன்று போயிற்று. சிறப்புக்களை அறிந்து

கொள்ளும் மனப்பான்மை வளர்ந்து வருகிறது. அங்ஙனம் ஹிந்துமதத் தத்துவங்களை ஆலய வழிபாட்டின் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறவர்களை இனி நாம் ஆலயத்தினுள் வர அனுமதிக்க வேண்டும். அன்புடன் அவர்களை வரவேற்க வேண்டும். கோயில் அமைப்பிலும், கோயில் வழிபாட்டிலும் அடங்கியுள்ள மேலாம் கோட்பாடுகளை மற்றவர்களுக்கு எடுத்து விளக்கவேண்டும். ஐம்பொறிகளையும் மேன்மைப்படுத்துவதற்குப் பூஜாகிரியைகள் பயன்படுகின்றன. பூஜாகிரியைகளிலுள்ள தத்துவங்களையும் மற்றவர்களுக்கு எடுத்து விளக்கவேண்டும். அப்படிச் செய்வது நல்ல மதப் பிரச்சாரம் ஆகிறது. நல்ல மனப்பான்மையுடன் வருகிறவர்கள் ஹிந்து மதத்தில் அமைந்திருக்கிற மேலாம் கோட்பாடுகளை உள்ளபடி அறிந்து கொள்வார்கள். அங்ஙனம் அவர்களுக்கு ஆலய வழிபாட்டின் வாயிலாக நல்லறிவு புகட்டுவது நல்ல ஞானயக்ஞமாகும். அதைச் செய்ய நாம் இப்பொழுது கடமைப் பட்டிருக்கின்றோம்.

***கேள்வி: (255)* வடநாட்டிலுள்ள அநேக ஆலயங்களில் கடவுட்சிலைக்கும், பக்தர்களுக்குமிடையே குருக்கள் கிடையாது. அர்ச்சனையும் கிடையாது. ஆனால் தென்னாட்டிலுள்ள ஆலயங்களில் மேற்குறிப்பிட்ட இரண்டு கொள்கைகளும் உண்டு. இது குறித்துத் தங்கள் கருத்து யாது?**

பதில்: ஆலய வழிபாடு இந்தியாவில் வேத காலத்தில் இருந்ததில்லை. புராண இதிகாச காலங்களிலும் இந்தியாவில் ஆலய வழிபாடு என்பது இல்லை. சுமார் மூவாயிரம் வருஷங்களுக்கு இப்புறத்தில்தான் சிறிது சிறிதாக ஆலய வழிபாடு உருவெடுத்தது. இன்றைக்கு அதனுடைய நடைமுறையை இந்தியா முழுவதிலும் ஆராய்ச்சி செய்து பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். ஆங்காங்கு உள்ள தேசாசாரம் ஆலய வழிபாட்டோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இடைக்காலத்தில் இந்திய சமுதாயத்துக்குள் புகுந்துள்ள தீண்டாமை என்னும் பழக்கவழக்கம் வட இந்தியாவில் விடத் தென்னிந்தியாவிலே கட்டுப்பாடு மிக உடையதாக உருவெடுத்தது. தீண்டாமைக் கட்டுப்பாட்டின் உச்சநிலை இந்தியாவின் தென்மேற்குப் பகுதியில்

இருக்கும் கேரளத்தில் காணப்படுவதாயிற்று. ஆலயத்துக்குள் அர்ச்சகர்களைத்தவிர ஏனையவர்கள் சென்று அர்ச்சனை, வழிபாடு முதலியன செய்யலாகாது என்னும் கட்டுமானம் ஓரளவு தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டது. மற்றொரு காரணம் ஆகம விதிப்படி வழிபாடு செய்யும் பயிற்சி மேல் ஜாதியார்க்கிடையிலும் எல்லாரும் பெறாதிருந்ததேயாம். வட இந்தியாவில் சிவன் கோயிலுக்குள் எல்லாரும் சென்று தாங்களே ஆராதனை செய்யலாம். விஷ்ணு கோயிலில் குறிப்பிட்ட சில வேளைகளில் மூர்த்திக்குப் பக்கத்தில் சென்று புஷ்பாஞ்சலி செய்து வழுத்திவிட்டு வரலாம். தென்னிந்தியாவில் ஒரு சிறிய அளவுக்கு இப்பழக்கம் அனுமதிக்கப்பட்டிருந்தது. கணபதிக்கு யார்வேண்டுமானாலும் பூஜை செய்யலாம். மற்ற ஆலயங்களில் தகுதிவாய்ந்த அர்ச்சகர்களே ஆராதனை செய்ய வேண்டும் என்னும் நியமனம் ஏற்பட்டது. இனி, நாம அர்ச்சனையை அலாதியாகத் தென்னிந்தியாவிலேதான் சிறப்பாகக் காணலாம். வட இந்தியாவில் விஷ்ணு சகஸ்ரநாமம், சிவ சகஸ்ரநாமம் முதலியவைகளைப் பக்தர்கள் பாராயணம் பண்ணுகிற முறையில் பழகி வருகிறார்கள். எனவே ஆராதனை முறையும் அந்தந்த மாகாணத்தின் பழக்கவழக்கத்தை ஒட்டியதாக நடைபெற்று வருகிறது.

இப்பொழுது மக்களுக்கிடையில் மனப்பான்மை அதிவேகமாக மாறுபாடு அடைந்து வருகிறது. அதற்கேற்றபடி ஆலய வழிபாட்டையும் திருத்தியமைத்தாகவேண்டும். முன்பு எத்தனையோ தடவை வழிபாட்டு முறைகள் அறவே மாறியமைந்திருக்கின்றன. இனியும் அப்படி அமையப் போகின்றன. அந்த மாறுதல்களை யாரும் தடைசெய்து நிறுத்திவிட முடியாது. தீண்டாமைப் பழக்கம் இன்னும் சிறிது காலத்தில் அறவே மறைந்து போய்விடும். பொதுமக்கள் ஐக்கிய வணக்கம் பண்ணுதல் என்கின்ற புதிய ஏற்பாடு சிறிது சிறிதாக ஆங்காங்கு தோன்றி வருகிறது. வழிபாட்டுக்காகச் செல்லுகிற பொதுமக்கள் தாங்களே புஷ்பாஞ்சலி செய்கிற உரிமையையும், அர்ச்சனை செய்கிற உரிமையையும் பெற்றாகவேண்டும். ஆகம விதிப்படி குறிப்பிட்ட வேளைகளில் நித்திய பூஜைகளைச் செய்வது மட்டும் அர்ச்சகர்களுடைய கடமையாக இருக்கும். தங்கள்

விருப்பப்படி தெய்வத்தை வணங்குதற்குப் பொதுமக்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தாக வேண்டும். காலத்துக்கேற்ற மாறுதலுக்கு ஹிந்து மதம் எப்பொழுதும் இடந்தந்து வருகிறது.

கேள்வி: *(256)* சென்னையில் நடைபெற்ற பகுத்தறிவு மாநாட்டில் கோயில்களில் உள்ள ஆபாசமான உருவங்களின் நிழற்படங்களைக் காட்டி அவற்றை வைத்திருக்கலாகாதென தாக்கிப் பேசினர். இந்த உருவங்களை வைத்திருப்பது எவ்வகையில் பொருந்தும்?

பதில்: ஆகமவிதிப்படி கட்டுவிக்கப் பெற்றுள்ள ஹிந்து தேவாலயங்களில் வாழ்க்கைத் தத்துவங்கள் பல வெவ்வேறு விதங்களில் விளக்கப்பெற்று வருகின்றன. கோயில் அமைப்பில் அமைந்துள்ள பகுதிகள் அனைத்தையும் சரியாக ஆராய்ச்சி பண்ணினால் இகம் பரம் ஆகிய இருமைக்கும் உரிய விஷயங்கள் நன்கு விளக்கப் பெறுவன ஆகின்றன. ஆபாசமான உருவங்கள் அமைக்கப்பட்டிருப்பதை ராஜகோபுரங்களில் காணலாம். கோயில் அமைப்பில் ராஜகோபுரம் பிரபஞ்ச அமைப்புக்குப் புறச்சின்னமாகிறது. பிரபஞ்சத்தில் என்னென்ன இருக்கின்றன என்பனவற்றை ராஜகோபுரத்தில் காணலாம். விலங்கு, பறவை, மக்கள் ஆகிய உலகிலுள்ள உயிர் வகைகள் அக்கோபுரத்தில் இடம் பெறுகின்றன. வெவ்வேறு பாங்குடைய தேவர்களும் அசுரர்களும் ஆங்கு இடம் பெறுகின்றனர். கடவுளாலும், கடவுள் அருளுக்குப் பாத்திரமான பெருமக்களாலும் நிகழ்த்தப்பட்ட அரியபெரிய செயல்கள் வடிவங்கள் வாயிலாக ராஜகோபுரத்தில் விளக்கப்படுகின்றன. இவைகளுக்கிடையில் ஆபாசமான உருவங்களும் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. உலகில் என்னென்ன இருக்கின்றன என்பதை முறையாக விளக்கியாக வேண்டும் என்பது ஆகமநியதி. ஆபாசமான அமைப்புகள் உலகில் இருக்கின்றனவாதலால் அவைகளுக்கு ஆங்கு இடம் கொடுத்தாகவேண்டும். கேடுகளும் உலகில் இருக்கின்றன. பார்க்கத் தக்கவைகளும் தகாதவைகளும் உலகில் இருக்கின்றன. பார்க்கத் தகாதவைகளையே ஆர்வத்தோடு பார்க்கிற மக்களிருக்கிறார்கள். கோயிலுக்குச் செல்லுபவர்களுள் ஒருசிலர் ஆபாசமான உருவங்களையே ஊக்கத்தோடு

பார்க்கின்றனர். அப்படிப் பார்த்து அதில் திருப்தியடைகின்றனர். அவரவருக்கு விருப்பமானவைகளைக் கண்டுகளித்து திருப்தி அடைவது உயிர்வகைகளின் குறிக்கோள். அதற்கேற்ற சூழ்நிலைகளை இயற்கை கொடுத்திருக்கிறது. இயற்கைக்குச் சின்னமாக இருக்கிற ராஜகோபுரமும் அதே செயலைச் செய் கிறது. ஆபாசமானவைகளில் மனதைச் செலுத்துகிறவர்கள் கொஞ்சகாலத்திற்குப் பிறகு அவைகளைப் புறக்கணித்துவிட்டு நல்லவைகளில் கருத்தைச் செலுத்துகின்றனர். மக்களுக் கிடையில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதைக் காண்கிறோம். கோயிலுக்குச் செல்லுகிறவர்களுள் ஒரு கூட்டத் தார் ஆபாசமான பாங்கில் அமைக்கப்பட்டுள்ள உருவங்களை ஊக்கத்தோடு பார்ப்பது மட்டுமல்ல; ஆலயத்துக்கு வருகிற மக்களை ஆபாசமான கருத்தோடு கூர்ந்து பார்க்கிறவர்களும் இருக்கிறார்கள். இப்படி உலகம் போகிற போக்கை யாரும் தடுத்துவிட முடியாது. கொஞ்சகாலத்துக்கு மனது சிறுநெறியில் சென்று பிறகு பெருநெறிக்குத் திரும்புகிறது. உலகில் நிகழ்கிற இந்நிகழ்ச்சி ஆலயத்துக்குச் செல்வதிலும் நிகழ்கிறது. ஆலயத்துக்குச் செல்லுபவர்களெல்லாம் ஒரே மனப்பான்மை உடையவர்கள் அல்லர். மிக மட்டமான மனப்பாங்கிலிருந்து மிகமேலான மனப்பாங்கு வரையில் எல்லாப் படித்தரங்களிலும் உள்ள மனப்பாங்குகளை ஆலயத்துக்கு வருபவர்களுக்கிடையில் காணலாம். அவை யாவுக்கும் வேண்டுமென்றே ஆன்றோர்கள் ஆலய அமைப்பிலும் ஆலயக்கிரியைகளிலும் இடம் கொடுத்திருக்கின்றனர். அவரவர் பான்மைக்கேற்ப ஆலயத்தில் இருப்பவைகளையும் நடைபெறுபவைகளையும் கண்டுகளித்து மக்கள் மேல்நிலைக்கு வரவேண்டும் என்பது மேலோர் வகுத்து வைத்துள்ள திட்டமாகும். அந்தத் திட்டம் ஆலய அமைப்பிலும் நடைமுறையிலும் நிறைவேறி வருகிறது. ஆதலால் அறிவுடை யோர் ஆலயங்களில் அமைத்து வைக்கப்பட்டிருக்கின்ற சில ஆபாசமான படிவங்களைக் குறித்துக் கவலைப்பட வேண்டிய தில்லை. சன்மார்க்கத்தில் தீவிரமாகச் செல்லுகிறவர்கள் உலகி லுள்ள குறைநிலைகளைக் குறித்துக் கணக்கு போட்டுக்கொண் டிருக்கவில்லை. அவைகளைப் பொருள்படுத்தாது பெருநெறியில் போகலாயினர். உலகுக்குச் சின்னமாக இருக்கிற ஆலயத்திலும்

நலனும் கேடுகளும் ஆகிய பாங்குகள் யாவும் அமைந்துள்ளன. பொருந்தாதவைகளைப் புறக்கணித்துவிட்டு நலத்தில் தீவிரமாகக் கருத்தைச் செலுத்துவது வாழ்க்கையின் குறிக்கோளாகும். இத்தகைய குறிக்கோளை ஆலயம் நன்கு விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கிறது. நல்லார் ஆலயத்திலுள்ள நலன்களையே பயன்படுத்தி மேல்நிலைக்கு வருகின்றனர். இக்கோட்பாட்டைக் கருத்தில் வைத்துக்கொண்டு ஆலயத்தின்கண் உலகிலுள்ள நலன் கேடு அனைத்தையும் கோயிலில் பொருத்தி வைத்திருக்கின்றனர். அதைக் குறித்துப் பரந்த பாங்குடையவர்கள் மனக்கிலேசம் கொள்ளவேண்டிய அவசியமில்லை.

கேள்வி: (257) இறைவன் அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருப்பவனென்று கொண்டபின்னரும் எங்கேயோ இருக்கும் குறிப்பிட்ட லிங்கத்திலேதான் பரம்பொருள் விசேஷமாகக் குவிந்திருப்பதாகவும், குறிப்பிட்ட ஒரு தீர்த்தம்தான் பாப நிவர்த்தி செய்யத்தக்கது என்றும் கருதி ஏககாலத்தில் பல்லாயிரக்கணக்கான ஹிந்துக்கள் நாலாபுறங்களிலிருந்து ஆடவரும், பெண்டிரும், முதியவரும், குழவியருமாகக் கூடுவதால் பலவிதமான அசம்பாவிதங்கள் நிகழ்ந்து விடுகின்றன என்பதற்கு அண்மையில் நிகழ்ந்த கும்பமேளா உற்சவமே சான்றாகு மன்றோ? எனவே தத்தம் ஊர்களிலுள்ள பிரார்த்தனை ஸ்தலங்களுக்குச் சென்று முறைப்படி வழிபாடுகள் செய்து வருவதன் மூலம் இறையருளைப் பெறமுடியாதா?

பதில்: கடவுள் எங்கும் நிறைபொருள் என்பதை ஞானி காண்கின்றான். ஞானம் அடையப் பெறாதவனுக்கு அக்கோட்பாடு உண்மை என்று தெரியாது. கடவுள் வழிபாட்டின் பொருட்டு அவர்கள் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றாக வேண்டும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்னும் கொள்கை நம் போன்ற சாதாரண மனிதர்களுக்காக ஏற்பட்டுள்ளது. கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்று வெறும் ஏட்டுக் கல்வியினின்று ஒருவன் தீர்மானம் செய்துகொண்டு ஆலயத்துக்குப் போகாதிருப்பானாகில் அவன் தனது சோம்பலுக்கு ஆதாரம் தேடுபவன் ஆகிறான்.

இயற்கையில் குறிப்பிட்ட சில இடங்கள் குறிப்பிட்ட சில காரியங்களுக்குப் பயன்படுகின்றன. நோய்க்குச் சிகிச்சை செய்ய வேண்டுமென்று விரும்புபவன் அதன்பொருட்டு மருத்துவ மனைக்குப் போகவேண்டும். சில நோய்களை அகற்றுதற்கு அனுகூலமாயுள்ள சீதம் அல்லது உஷ்ணம் நிறைந்த இடத்தில் வாசம் செய்வது அவசியம் என்று ஏற்பட்டால் அதற்கேற்ற இடத்தை நாடிப் போகவேண்டும். அப்படிப் போகாவிட்டால் இயற்கை தரும் வசதிகளை மனிதன் பயன்படுத்தியவன் ஆகமாட்டான். நித்திய வழிபாட்டுக்கு அவரவர் ஊரில் உள்ள ஆலயம் போதும், விசேஷ வழிபாட்டுக்குப் புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போகவேண்டும்.

ஒவ்வோர் இடமும் மனிதனுக்கு ஒவ்வோர் எண்ணத்தை ஊட்டுகிறது. சந்தைக் கடையைப் பார்த்தால் பண்டம் வாங்குவதைப் பற்றிய எண்ணம் வருகிறது. பள்ளிக் கூடத்தைப் பார்த்தால் கல்வி கற்பதைப் பற்றிய எண்ணம் வருகிறது. இத்தகைய இடங்களை அந்தந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்து கிறோம். அதே பாங்கில் தேவாலயத்தைப் பார்த்தால் கடவுள் வழிபாட்டைப் பற்றிய எண்ணம் வருகிறது. பக்தி விசுவாசத் துடன் தேவாலயங்களுக்கு அடிக்கடி போய்க்கொண்டிருப்பவர்கள் கடவுள் வழிபாட்டை முறையாக அத்தேவாலயங்களில்தான் செய்கிறார்கள். எல்லா இடங்களிலும் அவர்கள் கடவுள் எண்ணத்திலேயே ஊறியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. தேவாலயத்திலோ மற்ற இடங்களைவிட அதிகமாகக் கடவுள் எண்ணம் வருகிறது. ஆதலால்தான் தேவாலயங்கள் முற்றிலும் அவசியமாகின்றன. உலகத்திலுள்ள எல்லாச் சமுதாயங் களிலும் தேவாலயங்கள் சிறப்புற்றிருப்பதைக் காணலாம். மக்களுக்கு அவைகள் தேவையில்லாது போய்விட்டால் அவ் வளவு சிரமப்பட்டு ஆலயங்களை அவர்கள் அமைத்திருக்க முடியாது. மற்றொரு விஷயமும் ஞாபகத்துக்குக் கொண்டுவரத் தகுதியுடையதாகிறது. உலகெங்கும் அமைந்துள்ள கட்டிடங்களி லேயே தேவாலயங்கள்தான் அழகுமிக வாய்ந்தவைகள், வண்ணத்தில் பெரியவைகள், மனிதனுடைய கலைத்திறமைகளை யெல்லாம் விளக்க வல்லவைகள். மனிதனுடைய மனதையும் நன்கு கவரவல்லவைகளாக அவைகள் இருக்கின்றன.

நலனும் கேடுகளும் ஆகிய பாங்குகள் யாவும் அமைந்துள்ளன. பொருந்தாதவைகளைப் புறக்கணித்துவிட்டு நலத்தில் தீவிரமாகக் கருத்தைச் செலுத்துவது வாழ்க்கையின் குறிக்கோளாகும். இத்தகைய குறிக்கோளை ஆலயம் நன்கு விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கிறது. நல்லார் ஆலயத்திலுள்ள நலன்களையே பயன்படுத்தி மேல்நிலைக்கு வருகின்றனர். இக்கோட்பாட்டைக் கருத்தில் வைத்துக்கொண்டு ஆலயத்தின்கண் உலகிலுள்ள நலன் கேடு அனைத்தையும் கோயிலில் பொருத்தி வைத்திருக்கின்றனர். அதைக் குறித்துப் பரந்த பாங்குடையவர்கள் மனக்கிலேசம் கொள்ளவேண்டிய அவசியமில்லை.

கேள்வி: *(257)* இறைவன் அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருப்பவனென்று கொண்டபின்னரும் எங்கேயோ இருக்கும் குறிப்பிட்ட லிங்கத்திலேதான் பரம்பொருள் விசேஷமாகக் குவிந்திருப்பதாகவும், குறிப்பிட்ட ஒரு தீர்த்தம்தான் பாப நிவர்த்தி செய்யத்தக்கது என்றும் கருதி ஏககாலத்தில் பல்லாயிரக்கணக்கான ஹிந்துக்கள் நாலாபுறங்களிலிருந்து ஆடவரும், பெண்டிரும், முதியவரும், குழவியருமாகக் கூடுவதால் பலவிதமான அசம்பாவிதங்கள் நிகழ்ந்து விடுகின்றன என்பதற்கு அண்மையில் நிகழ்ந்த கும்பமேளா உற்சவமே சான்றாகு மன்றோ? எனவே தத்தம் ஊர்களிலுள்ள பிரார்த்தனை ஸ்தலங்களுக்குச் சென்று முறைப்படி வழிபாடுகள் செய்து வருவதன் மூலம் இறையருளைப் பெறமுடியாதா?

பதில்: கடவுள் எங்கும் நிறைபொருள் என்பதை ஞானி காண்கின்றான். ஞானம் அடையப் பெறாதவனுக்கு அக்கோட்பாடு உண்மை என்று தெரியாது. கடவுள் வழிபாட்டின் பொருட்டு அவர்கள் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றாக வேண்டும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்னும் கொள்கை நம் போன்ற சாதாரண மனிதர்களுக்காக ஏற்பட்டுள்ளது. கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்று வெறும் ஏட்டுக் கல்வியினின்று ஒருவன் தீர்மானம் செய்துகொண்டு ஆலயத்துக்குப் போகாதிருப்பானாகில் அவன் தனது சோம்பலுக்கு ஆதாரம் தேடுபவன் ஆகிறான்.

இயற்கையில் குறிப்பிட்ட சில இடங்கள் குறிப்பிட்ட சில காரியங்களுக்குப் பயன்படுகின்றன. நோய்க்குச் சிகிச்சை செய்ய வேண்டுமென்று விரும்புபவன் அதன்பொருட்டு மருத்துவ மனைக்குப் போகவேண்டும். சில நோய்களை அகற்றுதற்கு அனுகூலமாயுள்ள சீதம் அல்லது உஷ்ணம் நிறைந்த இடத்தில் வாசம் செய்வது அவசியம் என்று ஏற்பட்டால் அதற்கேற்ற இடத்தை நாடிப் போகவேண்டும். அப்படிப் போகாவிட்டால் இயற்கை தரும் வசதிகளை மனிதன் பயன்படுத்தியவன் ஆகமாட்டான். நித்திய வழிபாட்டுக்கு அவரவர் ஊரில் உள்ள ஆலயம் போதும், விசேஷ வழிபாட்டுக்குப் புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போகவேண்டும்.

ஒவ்வோர் இடமும் மனிதனுக்கு ஒவ்வோர் எண்ணத்தை ஊட்டுகிறது. சந்தைக் கடையைப் பார்த்தால் பண்டம் வாங்குவதைப் பற்றிய எண்ணம் வருகிறது. பள்ளிக் கூடத்தைப் பார்த்தால் கல்வி கற்பதைப் பற்றிய எண்ணம் வருகிறது. இத்தகைய இடங்களை அந்தந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்து கிறோம். அதே பாங்கில் தேவாலயத்தைப் பார்த்தால் கடவுள் வழிபாட்டைப் பற்றிய எண்ணம் வருகிறது. பக்தி விசுவாசத் துடன் தேவாலயங்களுக்கு அடிக்கடி போய்க்கொண்டிருப்பவர்கள் கடவுள் வழிபாட்டை முறையாக அத்தேவாலயங்களில்தான் செய்கிறார்கள். எல்லா இடங்களிலும் அவர்கள் கடவுள் எண்ணத்திலேயே ஊறியிருக்கிறார்கள் என்று சொல்ல முடி யாது. தேவாலயத்திலோ மற்ற இடங்களைவிட அதிகமாகக் கடவுள் எண்ணம் வருகிறது. ஆதலால்தான் தேவாலயங்கள் முற்றிலும் அவசியமாகின்றன. உலகத்திலுள்ள எல்லாச் சமுதாயங் களிலும் தேவாலயங்கள் சிறப்புற்றிருப்பதைக் காணலாம். மக்களுக்கு அவைகள் தேவையில்லாது போய்விட்டால் அவ் வளவு சிரமப்பட்டு ஆலயங்களை அவர்கள் அமைத்திருக்க முடியாது. மற்றொரு விஷயமும் ஞாபகத்துக்குக் கொண்டுவரத் தகுதியுடையதாகிறது. உலகெங்கும் அமைந்துள்ள கட்டிடங்களி லேயே தேவாலயங்கள்தான் அழகுமிக வாய்ந்தவைகள், வண்ணத்தில் பெரியவைகள், மனிதனுடைய கலைத்திறமைகளை யெல்லாம் விளக்க வல்லவைகள். மனிதனுடைய மனதையும் நன்கு கவரவல்லவைகளாக அவைகள் இருக்கின்றன.

இந்தியாவில் கடவுள் வழிபாட்டுக்குரிய சிறப்பான இடங்களுக்கு மதிப்பு மிக உண்டு. அவைகள் பெரிதும் இயற்கையழகு வாய்ந்த இடங்களில் அமைந்திருக்கின்றன. அல்லது சான்றோர்கள் தவம் புரிந்த இடங்களில் அமைந்திருக்கின்றன. சான்றோர் பலர் கூடி ஓர் இடத்தில் உயர்ந்த எண்ணங்களை எண்ணுவார்களாகில் அந்த இடத்துக்கு அதனால் மகிமை ஏற்படுகிறது. ஆங்கு பக்தி விசுவாசத்துடன் செல்லுகின்றவர்களுடைய மனதைப் பண்படுத்தும் அருள் சக்தியும் அத்தகைய இடங்களுக்கு உண்டு. ஆகவே அவைகள் ஸ்தலங்கள் என்றும் தீர்த்தங்கள் என்றும் பெயர் பெறுகின்றன. புண்ணிய க்ஷேத்திரங்களில் பல்லாயிரம் ஆண்டுகளாக மேலாம் எண்ணங்கள் எண்ணப்பட்டு வந்துள்ளன. சில விசேஷமான நாட்களில் ஆங்குச் சென்று கடவுள் வழிபாடு செய்வதால் மக்கள் பெருநன்மை எய்துகின்றனர். நன்மை ஏற்படாத இடத்துக்கு வலிய அழைத்தாலும் யாரும் போவதில்லை. நன்மையேற்படுகின்ற இடங்களுக்குப் போகவேண்டாமென்று தடுத்தாலும் சிரமப்பட்டாவது மக்கள் ஆங்குப் போக முயலுகின்றனர். இதை மூட நம்பிக்கை என்பது பொருந்தாது. முஸ்லீம்களில் லக்ஷக்கணக்கான பேர் ஆண்டுதோறும் மக்கா, மதினாவுக்கு யாத்திரை போகின்றனர். அதே பாங்கில் கிறிஸ்தவர்கள் லக்ஷக்கணக்கானபேர் ரோமாபுரிக்கும் ஜெருசலத்துக்கும் வழிபாட்டின் பொருட்டுச் செல்லுகின்றனர். இந்தியாவில் ஹிந்துக்களுக்கோ புண்ணிய க்ஷேத்திரங்கள் பல இருக்கின்றன. சில இமயமலையின் உச்சியில் அமைந்திருக்கின்றன. தென் கோடியில் இராமேசுவரம், கன்னியாகுமரி முதலிய இடங்களும் புண்ணிய க்ஷேத்திரங்கள் ஆகின்றன. காசி, பிருந்தாவனம் முதலிய க்ஷேத்திரங்களுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பேர் ஓயாது யாத்திரை போய்க்கொண்டே இருக்கின்றனர். அப்படி யாத்திரை சென்று அவர்கள் அடைந்துள்ள நன்மைக்கு அவர்களுடைய மனத்திருப்தியே சான்றாகும். பொருளிலும் பெரியது மனத்திருப்தி. கெட்ட காரியங்கள் பலவற்றில் பணத்தை ஏராளமாக விரயம் செய்பவர்கள் இருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய வாழ்க்கை செப்பனிடப்படுவதில்லை. ஆலய வழிபாட்டிற்காகவென்று சிரமத்தைப் பொருட்படுத்தாது

இமயமலையில் நெடுந்தூரம் நடந்து செல்லுகின்றனர். அங்கிருந்து இராமேசுவரத்துக்கு வருகின்றனர். அதன் மூலம் வாழ்க்கை செப்பனிடப் பெறுகின்றவர் கணக்கில் அடங்காதவர் ஆகின்றனர்.

கும்பமேளாவில் அண்மையில் நிகழ்ந்த ஒரு விபத்தை முன்னிட்டு அது உதவாது என்று எண்ணலாகாது. இரயில் வண்டியில் விபத்து வந்துவிடுகிறது. அதனால் ரயில் வண்டிப் பிரயாணம் வேண்டாமென்று சொல்ல முடியாது. சந்தைக் கடையில் உயிர்ச்சேதம் ஏற்பட்டு விடுவதுண்டு. அதை முன் னிட்டுச் சந்தைக்குப் போகின்றவர்களை யாரும் தடுக்கமுடியாது. பயன்படுபவைகளை மக்கள் கையாண்டே தீருவர். தீர்த்த யாத்திரை பெரும்பான்மையோருக்கு நலத்தை விளைவிக்கிறது. ஆதலால் விபத்துக்களுக்கிடையிலும் அவர்கள் ஆங்குச் செல்வர். பணத்தை உடைத்திருந்து திருப்தியடைவதைவிட புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று பணத்தைச் செலவிட்டுத் திருப்தியடைகின்றனர். மக்கள் திருப்திக்காகவே பணம் இருக்கி றது. பணத்துக்காக மக்கள் இருக்கிறார்கள் எனலாகாது. கும்பமேளா போன்ற அரிய விழாக்கள் மக்களுக்கு முற்றிலும் தேவையானவைகள். கோடிக்கணக்கான மக்கள் உள்ள நம் நாட்டில் இதுபோன்ற ஒரு பெரிய விழாவில் நூற்றுக்கணக்கான பேர் அழிந்துபட்டுப் போனது பெரிய நஷ்டமல்ல. எத்தகைய மனப்பான்மையால் தூண்டப்பெற்று அத்தனை லக்ஷம் ஜனங்கள் ஆங்குக் கூடுகிறார்கள் என்று பார்க்கவேண்டும். அவர்களின் சீரிய மனப்பான்மையை என்றென்றும் பாராட்ட வேண்டும். சீரிய மனப்பான்மையைக் கடைப்பிடித்து சிலர் அழிந்துபட்டுப் போனது நஷ்டமாகாது. இந்தச் சீரிய மனப் பான்மை அழிந்துபட்டுப் போகுமானால் அது சமுதாயத்துக்குப் பெரிய நஷ்டமாகும். ஆகவே ஏதோ சிற்சில வேளைகளில் எதிர்பாராது ஏற்படும் விபத்துக்களுக்கிடையிலும் கும்பமேளா போன்ற பெருவிழாக்கள் நம் நாட்டில் பல்லாண்டு காலம் நிலைபெற்றிருப்பனவாகுக.

கேள்வி: *(258)* கிறிஸ்தவர்களின் ஆலயங்கள் விசால மாகவும், சுவாமியை நெருக்கடியின்றி நிதானமாகத்

தரிசிக்கும் வகையிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஹிந்துக்களின் கோவில்கள் பெரும் பொருட் செலவில் அமைக்கப்பட்டிருப்பினும் சுவாமி இருக்கும் இடம் மட்டும் இருட்டாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. இடமும் விசாலமின்றி நெருக்கடிபட ஏதுவாகிறது. இதனால் திருட்டும், சிறு குழந்தைகள் காலடியில் நசுங்கவும் ஏதுவாகிறது. இத்தகைய கோயிலமைப்பு அக்காலத்தில் கோயில் எடுப்பித்தோர் அறியாமையால் ஏற்பட்டதா? அல்லது அதற்கேற்ற காரணங்களும் உண்டா?

பதில்: ஆலய வழிபாட்டில் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள கொள்கையும், ஹிந்துக்களாகிய நாம் கொண்டுள்ள கொள்கையும் ஒன்றுபட்டவைகள் அல்ல. ஐக்கிய வணக்கத்துக்கென்றே கிறிஸ்தவர்கள் ஆலயங்கள் கட்டி வைத்திருக்கிறார்கள். தனி வணக்கம் பண்ணுகின்ற கிறிஸ்தவர்கள் அதற்காகவென்று ஆலயங்களுக்குப் போவதில்லை. அதை அவர்கள் தங்கள் வீட்டிலேயே செய்து கொள்ளலாம். ஐக்கிய வணக்கம் பாராட்டத்தக்கதே. அவர்கள் கையாளும் முறையைச் சமுதாய நலத்தின் பொருட்டு ஒரு சிறிதளவாவது ஹிந்துக்களாகிய நாமும் பின்பற்றலாம்.

ஆனால் ஹிந்துக்கள் தனித்தனியாக வணங்கும் முறையையே ஆலயங்களில் நெடுநாளாகக் கையாண்டு வந்திருக்கிறார்கள். அவரவர் சிரத்தைக்கும் பரிபாகத்துக்கும் ஏற்ப வழிபாட்டைப் பெருக்கவும், சுருக்கவும் செய்யலாம். ஹிந்துக்களுடைய ஆலயங்கள் தத்துவத்துக்கு விளக்கங்களாக அமைந்தவைகள். கண் மூடி மனது தியானத்தில் அந்தர்முகமாகச் செல்லுவது ஹிந்துக்களுடைய முக்கியமான வழிபாடு. கண்மூடி உள்முகமாகப் பார்த்தால் முதலில் ஒரே இருள்தான் தென்படும். இதற்குப் புறச் சின்னமாக வேண்டுமென்றே கோயில்களின் கர்ப்பக்கிரகங்களை இருள் சூழ்ந்தவைகளாக நம்மவர்கள் அமைத்து வைத்தார்கள். பிறகு ஆலயங்களுள் அவர்கள் காட்டித்தரும் ஜோதியும், தெய்வத்தின் வடிவங்களும் மனத்தகத்து நாம் காணவேண்டிய மெய்ப்பொருளின் புறச் சின்னங்களாகும். ஆகவே வழிபாட்டு முறையில் நமது லக்ஷியம் வேறு, அவர்களுடையது வேறு. நமது லக்ஷியத்துக்கு ஒப்பக்

கோயில்கள் இம்முறையில்தான் அமைந்தாக வேண்டும். விழாக்களில் பெருங்கூட்டமாகச் செல்லுகின்றவர்களைச் சிறு சிறு கூட்டமாக உள்ளே அனுப்பிவைப்பது நம் கடமையாகும்.

கேள்வி: *(259)* கோயில்களில் மிருகபலி இடுவது நாட்டுப்புறங்களில் வெகுநாளாக இருந்துவரும் பழக்கம். இதை நிறுத்திவிட வேண்டுமென்று சீர்திருத்தக்காரரும் துரைத்தனமும் முயற்சி செய்து வருகின்றனர். நல்லதுதான். ஆனால், இலட்சக்கணக்கான மிருகங்கள் நாள்தோறும் மனிதனுடைய வயிற்றுக்காகக் கொல்லப்படுகின்றன. அப்படியிருக்க, ஒரு குறிப்பிட்ட நிலையில் உள்ள பாமர பக்தன் தன் போக்குப்படி இறைவனுக்குப் புலால் படைப்பதில் என்ன தவறு உண்டு? சைவ உணவே சிவத்துக்கு ஏற்றதானால் கண்ணப்பன் கதையின் பொருள் என்ன?

பதில்: கடவுள் பிரபஞ்சத்தையெல்லாம் கடந்தவர். பஞ்ச பூதங்களாலாகிய உடல் அவர்க்கில்லை. ஆதலால் அவருக்குப் பசி, தாகம் கிடையாது. அத்தகையவர்க்கு உணவு படைப்பதில் பொருள் இல்லை. எனினும் அவர்க்கு உணவு படைக்கும் செயல் கிட்டத்தட்ட எல்லா மதங்களிலும் உண்டு. மனிதன் எதை அருந்துகின்றானோ அதைக் கடவுளுக்கு அர்ப்பணம் பண்ணி அவருடைய பிரசாதமாக அவன் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது கோட்பாடு. அப்படிச் செய்வதால் அந்த உணவு தூயது ஆகிறது. பக்தனுடைய முன்னேற்றத்துக்கு பகவத் பிரசாதமாக வந்துள்ள உணவே சாலச் சிறந்தது.

மனிதன் எதை உண்கின்றானோ அதைத் தான் வழிபடும் தெய்வத்துக்குப் படைத்துப் பிறகு தான் உண்ண வேண்டும். இன்னதைத்தான் கடவுளுக்குப் படை, இன்னதைப் படையாதே என்னும் கட்டுப்பாடு இல்லை. புலால் உணவு உண்கின்றவன் அதைத் தன் தெய்வத்துக்கு நைவேத்தியமாகப் படைப்பது பொருந்தும். தெய்வத்துக்கு உயிர்ப்பலி இடுவது நாட்டுப் புறங்களில் நிகழ்வது மட்டும் அல்ல. கல்கத்தா போன்ற பெரிய நகரங்களிலும் அச்செயல் பெரிதும் நிகழ்ந்து வருகிறது. புலால் உண்கின்றவர்கள் அதை எளிதில் விலக்கிவிட முடியாது. உலகிலுள்ளவர்கள் எல்லாம் புலால் உணவை ஒதுக்கிவிட

வேண்டியதும் அவசியம் இல்லை. பெரும்பாலோர் அவ்வுணவைக் காலமெல்லாம் உண்டு வருவார்கள். அப்படிச் செய்வது கீழ்மையென்றோ, பாபமென்றோ நாம் கருதலாகாது. புலால் உணவு மரக்கறி உணவு போன்று அவ்வளவு தூயதன்று. மரக்கறி உணவு உண்கின்றவர்களும், பால், தயிர், நெய் போன்ற மாமிசத்தினின்று வந்த உணவை விலக்கிவிட முடியாது. மானுட உடலுக்கு மாமிச உணவு இறைச்சி மயமாகவோ, பால், தயிர், நெய் மயமாகவோ முற்றிலும் அவசியமானது என்பது வெளிப்படை.

கண்ணப்ப நாயனார் தம் போக்குக்கு ஏற்பப் புலாலை இறைவனுக்குப் படைத்து மேன்மையடைந்தார். அதே சிவனார்க்குப் பூஜை செய்து வந்த அர்ச்சகர் தம் இயல்புக்கும் பண்புக்கும் ஒத்த உணவைச் சிவனார்க்குப் படைத்து வழிபட்டார். அர்ச்சகர் அடைந்த முன்னேற்றத்தைவிட வேடனா யிருந்த கண்ணப்பர் அதிகமாக முன்னேற்றம் அடைந்து விட்டார். அந்த ஜன்மத்திலேயே ஜன்ம சாபல்யம் அடைந்து விட்டார். அதிலிருந்து மறுக்க முடியாத ஓர் உண்மை வெளியாகிறது. மனிதன் எதை உண்கிறான் என்பது முக்கிய மானதல்ல. எத்தகைய ஒழுக்கமும், மனபரிபாகமும், பக்தியும் ஒருவனுக்கு அமைந்திருக்கிறது என்பதே முக்கியமானது. "ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்று அப்பர் பகர்ந்துள்ளார். இதையொட்டி இராமகிருஷ்ண பரமஹம்சர் பகர்ந்துள்ள கோட்பாடு ஒன்று உண்டு. ஒரு மனிதன் கனிகளையும், கிழங்குகளையுமே தின்று கொண்டிருப்பதற்கிடையில் புலனடக்கம் பழகாதிருப்பானாகில் அவன் கீழ்மகன் ஆகிறான். புலாலைப் புசித்துக் கொண்டிருப் பதற்கிடையில் பக்தியும் புலனடக்கமும் அமையப்பெற்றவனாக ஒருவன் இருப்பானாகில் அவன் மேலோன் ஆகிறான்.

கேள்வி: *(260)* தேவதைகளுக்குப் பலியிடும் வழக்கத்தை ஆதரிக்கலாமா? அத்தகைய விழாக்களுக்கு நன்கொடை அளிக்க மறுக்கலாமா?

பதில்: பலி என்னும் சொல் இக்காலத்தில் உயிர்ப்பலியை

மட்டும் குறிக்கிற குறுகிய பொருள்படுகிற சொல்லாகக் குன்றியிருக்கின்றது. உண்மையில் பலி என்னும் சொல் தெய்வத் துக்குப் படைக்கிற பண்பட்டுள்ள நிவேதனத்தையே குறிக்கிறது. வழிபாட்டுக்கு வந்தவர்கள் தேவாலயங்களுக்குள் பிரவேசித்த உடனே முதலில் பலிபீடத்தை அணுகுகிறார்கள். அதை அணுகியதும் வீழ்ந்து வணங்குகிறார்கள். அப்படி வணங்கும் பொழுது தங்களிடத்துள்ள சிறுமைகளையெல்லாம் பலி கொடுத்துவிட்டதாக அவர்கள் கருதுதல் வேண்டும். புதுப்பிக்கப் பட்டுள்ள மேலாம் பாங்குகளுடன் எழுந்திருப்பதாக அன்ன வர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இக்கோட்பாட்டின்படி உயிர்வதைக்கு இடமில்லை. இது பண்பாடு நிறைந்த வழிபாடு ஆகும்.

பண்டைக் காலத்திலிருந்து இக்காலம் வரையிலும் தெய்வத் திற்கு விலங்குகளையும், பறவைகளையும் கொன்று பலியிடும் பழக்கம் மக்களுக்கிடையில் இருந்து வருகிறது. இத்தகைய பழக்கத்தை அறவே நிறுத்திவிட முடியாது. நிறுத்திவிட வேண்டிய அவசியமும் இல்லை. மக்கள் எதை உணவாக உண்கின்றார்களோ அதைத் தாங்கள் வழிபடும் தெய்வத்துக்கு உகந்ததாகக் கொன்று படைப்பது அவர்களுடைய இயல்பு. அந்த இயல்பு மாறும் பரியந்தம் இந்தப் பழக்கமும் நின்று விடாது. ஆடு, கோழி முதலியவற்றைப் பலிகொடுத்து விழா எடுக்கும் பழக்கங்கள் நம்நாட்டில் இருந்து வருகின்றன. இது பொருந்தாத பழக்கம் என அறிகிறவர்கள் இதற்கு எந்தவிதமான அனுமதியும் தரலாகாது. பொருள் உதவியும் செய்யலாகாது. அமைதியாக அச்செயலில் ஈடுபடுகிறவர்களுடைய மனப்பான்மையை மாற்றியமைக்க முயலவேண்டும்.

கேள்வி: *(261)* தெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுப்பது முறையா? இது குறித்து தங்கள் கருத்து யாது? விளக்க வேண்டுகிறேன்.

பதில்: இயற்கையின் நடைமுறையை ஆராய்ந்து பார்த்தால் அதிசயம் ஒன்று வெளியாகிறது. நம்மால் கடைப்பிடிக்க முடியாத சில உண்மைகள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்று, எந்த உயிரையும் கொல்லாது வாழ்ந்திருத்தலாம்.

அப்படி எந்த உயிரையும் கொல்லாது வாழ்ந்திருப்பது யாருக்கும் சாத்தியமில்லை. எல்லா உயிர்களும் சுவாசித்தாக வேண்டும். சுவாசிக்கும்பொழுது அநேக உயிர்கள் மாண்டு போகின்றன. இந்த உயிர்க்கொலையை நம்மால் தடுத்து நிறுத்த முடியாது. வாழ்ந்திருப்பதற்குச் சுவாசிப்பது அவசியமாகிறது. எனவே வாழ்ந்திருப்பதற்கு உயிர்ப்பலி நிகழ்ந்தாக வேண்டும். இனி, ஓர் உயிர் வளர்ந்து ஓங்குதற்பொருட்டு ஏனைய உயிர்கள் மடிந்தாக வேண்டும். பாக்டீரியா என்னும் பூமியில் உள்ள உயிர்த்தத்துவம் மடிவதால் மரம், செடி, கொடிகள் என்னும் ஸ்தாவர உலகம் உயிர்பெற்று வளர்ந்து வருகிறது. இந்த ஸ்தாவர உலகமே பிறகு ஒன்றுக்கு ஒன்று இரையாகிறது. பிறகு ஸ்தாவர உலகம் அனைத்தும் ஜங்கம உலகத்துக்கு இரையாகிறது. அடுத்தபடியாக ஜங்கமங்களும் ஒன்றுக்கொன்று இரையாக்கிக்கொண்டு வருகின்றன. இது இயற்கையின் அமைப்பு. இதில் வாழ்ந்து வருகிற மனிதன் தன் வழிபடு தெய்வத்திற்கு எதையேனும் நிவேதனமாகப் படைக்கவேண்டிய நிர்ப்பந்தம் வருகிறபொழுது அவன் உயிர்த் தத்துவத்தைத் தான் உண்மையில் எடுத்துப் படைக்கிறான். அன்ன நைவேத்தியம் உயிர் மயம். ஆடு, கோழி உயிர் மயம். இவை இரண்டிலும் அன்ன நைவேத்தியம் நாகரிகமானதாகத் தோன்றுகிறது. மற்றது கீழ்த்தரமானதாகத் தோன்றுகிறது. எனினும் தெய்வத்துக்குப் படைத்தல் என்னும் செயலில் உயிரை ஒடுக்குதல் என்னும் கிருத்தியம் அமைந்திருக்கிறது. இதைத் தவிர்க்க யாருக்கும் இயலாது.

கேள்வி: (262) இவ்வுலகில் மிகப்பெரிய மதமாக உள்ளது கிறிஸ்தவ மதம். அதனுடைய அடிப்படைக் கொள்கைகள் சரியல்ல என்று நமது சக்கரத்தில் சுவாமிகள் எழுதி இருக்கிறார்கள். ஆனால் நமது இந்து மதத்திலும் இன்னும் பலர், கோவில் (அம்மன்) முன் ஆடு, கோழி, மாடுகளைப் பலியிடுகிறார்கள். மற்றும் பெரிய தெய்வ பூஜை என்று பன்றிகளைப் பலியிடுகிறார்கள். இவைகள் எல்லாம் நமது மதக்கோட்பாட்டிற்கு மட்டும் ஒவ்வுமா? இவ்வகைகள் எப்படிப் புகுந்தது என்பதையும், இவைகள்

சரியான வழிபாட்டு முறைகளா என்பதையும் விளக்க வேண்டுகிறேன்.

பதில்: உலகிலுள்ள மிகப்பெரிய மதங்களில் ஒன்று கிறிஸ்தவ மதம். ஆனால் அதில் புகட்டியுள்ள கோட்பாடுகள் எல்லாம் தத்துவத்துக்குப் பொருந்தியவைகள் என்று சொல்ல முடியாது. திருஷ்டாந்தமாகச் செத்தவர்கள் எல்லாரும் கடவுளுடைய தீர்ப்புத் தினம் வரையில் தூங்கிக் கொண்டிருக் கிறார்கள், தீர்ப்புத் தினத்தன்று அவர்கள் எல்லாம் ஏககாலத்தில் எழுந்திருப்பார்கள், கடவுளுடைய தீர்ப்புக்கு உட்பட்டு சொர்க்கம் அல்லது நரகத்துக்குப் போவார்கள், அதன் பிறகு அவர்களுக்குப் புதிய முயற்சிக்கு இடமில்லை, சாசுவதமான இன்பம் அல்லது துன்பத்தில் உழன்று கொண்டிருப்பார்கள் என்று அம்மதம் புகட்டுகிறது. இக்கொள்கை யுக்திக்கும் இயற்கையினுடைய நடைமுறைக்கும் பொருந்தியதன்று. இந்துமதம் புகட்டுகிறபடி செத்த ஜீவர்கள் கொஞ்ச காலத்துக்குப் பிறகு மறுபிறப்பு எடுப்பதுதான் அவர்களுடைய முன்னேற்றத்துக்கு முகாமை யாகும். வினைக்கு ஏற்ப அப்போதைக்கப்போது அவர்களுக்கு உண்டாகும் இன்பதுன்பங்களையே வினையின் தீர்ப்பு என்று மொழியவேண்டும். கடவுளின் தீர்ப்பு என்று பகரலாகாது.

ஹிந்துமதத்தில் மிக மிகக் கீழ்த்தரமான மூட நம்பிக்கை, கண்டனத்துக்குரிய பழக்கவழக்கங்கள் ஆகியவைகளுக்கெல்லாம் இடமிருக்கிறது. பண்பட்ட மேலான ஆத்ம சாதனங்களுக்கும் இடமிருக்கிறது. அத்வைத வேதாந்தம் வரையிலுள்ள சீரிய கோட்பாடுகளுக்கும் இடமிருக்கிறது. பிரபஞ்சத்திலுள்ள நலம் கேடு அனைத்தையும் ஹிந்துமதத்தில் காணலாம். ஆடு, கோழி, பன்றி ஆகியவைகளைப் பலியிட்டுத் திருப்தியடைகின்ற மக்கள் அச்செயல்களைச் செய்தே ஆகவேண்டும். அவைகளைச் செய்யா விட்டால் தாங்கள் கடவுள் வழிபாடு செய்ததாக உணரமாட் டார்கள். அத்தகைய மிகக் கீழ்த்தரமான வழிபாட்டு முறைகளில் துவக்கி மனபரிபாகம் அடைந்து படிப்படியாக அவர்கள் மேலான வழிபாட்டு முறைக்கு வருவதற்கு ஹிந்து மதம் இடம் கொடுத்திருக்கிறது. நமக்கு வேண்டாத பகுதிகளை நாம் வேண்டியவாறு கண்டிக்கலாம். ஆயினும் அத்தகைய புல்லிய வழிபாட்டு முறைகளை வேண்டுமென்று நாடுகின்றவர்களுக்கும்

ஹிந்துமதம் இடம் கொடுத்திருக்கிறது. இவையாவும் மனித இயல்போடு ஒட்டியிருப்பதால் இவைகள் மதத்தில் எப்படிப் புகுந்தது என்று யாராலும் பகரமுடியாது.

கேள்வி: *(263)* தேவலோகத்தில் மனிதர்கள் தொடர்பு வைக்க முடியாது என்றால் எதற்காகக் கோயில்களில் பூஜை செய்யவேண்டும்?

பதில்: சொர்க்கம் அல்லது தேவலோகம் என்பதும் நரகம் அல்லது தண்டனைக்குரிய இடம் என்பதும் நாம் வாழ்ந்து வரும் இந்த மண்ணுலகிலேயே இருக்கின்றன. அகண்டமாய்ப் பரந்துள்ள பிரபஞ்சத்தின் அமைப்பு யாண்டும் ஒரே பாங்குடையதாம். நீரின் பாங்கை ஆராய்தற்கு நாம் கடலெங்கும் சுற்றித்திரிய வேண்டிய அவசியமில்லை. அதே விதத்தில் பிரபஞ்சத்தின் அமைப்பை அறிந்து கொள்ளுதற்கு இந்த மண்ணுலகம் ஒன்றே போதுமானது.

மக்களுள் அவரவர் அடைந்துள்ள பரிபாகத்திற்கேற்றவாறு இந்தப் பிரபஞ்சமே மண்ணுலகாகவும், தேவலோகமாகவும், நரகமாகவும் காட்சி கொடுக்கிறது. மனிதன் எதை வழுத்து கிறானோ அந்த் மயமாக அவன் மாறியமைகின்றான். மண்ணுலகை மண்ணுலகாகவே பொருள்படுத்துகிறவன் கீழ் நோக்கியோ மேல்நோக்கியோ போவதில்லை. பின்பு இவை யாவும் கடவுளின் புறத்தோற்றம் எனக் கருதி இவைகளோடு வைக்கின்ற இணக்கத்தைப் பேரிணக்கமாகக் கருதுபவன் பண்பாட்டில் மேல்நிலைக்கு வருகின்றான். அதை முன்னிட்டே உலகில் தேவாலயங்கள் அமைந்திருக்கின்றன.

கேள்வி: *(264)* எல்லாமாக இருக்கின்ற இறைவனை மனிதன் ஏன் மனிதனாகச் செய்து வைத்துக் கொள்கிறான்?

பதில்: “உலகனைத்தும் ஆனாய் நீயே” என்பது இறைவனைப் பற்றிய கோட்பாடு. இறைவன் தன்னுடைய ஒரு சிறு பகுதியைக் கொண்டு உலகனைத்துமாய் இலங்குகிறான். வடிவங்களையெல்லாம் கடந்த நிலையே அவனுடைய நிஜ நிலையாகும். அதை யாராலும் அளக்க முடியாது. அதை அறிந்துகொள்ளவும் மனிதனுக்கு இயலாது. ஏனென்றால் அவன்

அகண்ட வஸ்து. பிரபஞ்சத்திலுள்ள வடிவங்களனைத்தும் அவனுடைய வடிவங்களாம். அவ்வுண்மையை மனிதன் அறவே புறக்கணிக்கவில்லை. கடவுள் மச்சமாகவும், ஆமையாகவும், பன்றியாகவும், நரசிம்மமாகவும் அவதரித்து இருக்கிறார் என்னும் கோட்பாட்டில் மற்ற வடிவங்களும் இடம்பெற்றிருக்கின்றன. இனி, கடவுளுக்கு வாகனங்களாகக் கருடன், மயில் போன்ற பறவைகளும், எலி, காளை, சிங்கம் போன்ற விலங்குகளும் இடம்பெற்றிருப்பது தத்துவத்துக்கு ஒத்திருக்கிறது. மரம், செடி, கொடிகளாகவும் இறைவன் இலங்குகிறான். ஆதலால் மரத்தைத் தெய்வமாக மனிதன் வழுத்தி வருவது காட்சியில் இருக்கிறது. அரச மரத்தைப் பிரதக்ஷணம் பண்ணுவது வழிபாட்டில் இடம் பெறுகிறது. இயற்கை முழுதையும் இறைவனுடைய தோற்ற மென்று பாவித்து வணங்குகிறோம். இத்தனை வடிவங்களுள் மானுட வடிவத்திற்கு மனிதன் சிறப்புக் கொடுத்திருப்பது முற்றிலும் பொருந்தும். சிற்றுயிர் பேருயிராகப் பரிணமித்து வருகிறது. பரிணாமத்தின் உச்சநிலை மானுட வடிவம். ஆதலால் மானுட வடிவத்தில் கடவுளைக் கற்பனை பண்ணுவது முறை. அதைத் தவிர மனிதனுக்குத் தன் வடிவமே சிறந்ததாகத் தோன்றுவது போன்று மற்ற உயிர்களுக்கும் அதனதன் வடிவம் சிறந்ததாகத் தோன்றும். "எவ்வுடல் எடுத்தார் அவ்வுடல் வாழ்க்கை இன்பம் எனவே, துன்பம் இலையென" என்பது ஆன்றோர் வாக்கு. இதுவே உண்மை. மனிதன் கடவுளைக் கற்பனை பண்ணுவது போன்று எருமை கடவுளைக் கற்பனை பண்ணுமானால் தன்னுடைய வடிவத்திலேயே அது கற்பனை பண்ணும். ஆனால் கடவுளைக் கற்பனை பண்ணும் பரிபாகம் சிற்றுயிர்களுக்கு இன்னும் வரவில்லை. இனிமேலும் அது வராது; கடவுள் தத்துவத்தைக் கிரகிக்கப் பண்பட்ட மனிதனுக்கே சாலுகிறது. மனிதன் கடவுளைத் தன் வடிவத்தில் கருதிப் பிறகு வடிவத்தையும் கடந்த நிலைக்குப் போகிறான். ஆதலால் அவனுடைய செயல் அங்கீகரிக்கப்படுகிறது.

கேள்வி: *(265)* தெய்வத்தின் தொடர்பு ஏற்படுவதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

பதில்: மனதில் இரண்டு வகை உண்டு. ஒன்று அசுத்தமனம்;

மற்றொன்று சுத்தமனம். அசுத்த மனதில் உலக ஆசை இடம் பெற்றிருக்கும். சுத்த மனம் தெய்வப்பற்று உடையதாக இருக்கும். அசுத்த மனம் விஷயாதிகளில் பற்றுக் கொண்டிருக்கும். சுத்த மன்ம் விஷயாதிகளில் இருந்து விலகித் தெய்வ நாட்டம் கொண்டிருக்கும். விஷயாதிகளில் உள்ள பற்றை நீக்கினால் மனம் தெய்வ சிந்தனையில் நிலைபெறும். தெய்வ சிந்தனையில் ஒன்றுபட்டு மனம் லயித்திருப்பதைத்தான் தியானம் என்று கூறலாம். எனவே தெய்வத்தோடு தொடர்பு கொள்வதற்கு முதலில் நாம் மனதைச் சுத்தம் செய்யவேண்டும். ஆசையை வளர்ப்பதற்குச் செயல்புரிகின்ற நாம் ஆசையை ஒழிக்கச் செயல்புரிய வேண்டும். ஆசையை வளர்க்கச் செயல்புரிவது உலகத் தொடர்பை வளர்க்கும். ஆசையை அழிக்கும் செயல் கடவுள் தொடர்பை உண்டாக்கும்.

நாம் உலகத்துக்கு வந்திருப்பது கடவுள் தொடர்பை ஏற்படுத்துவதற்காகும். "மானுடா, முதலில் நீ ஈசுவரனைத் தேடு; பிறகு நீ உலகக் காரியங்களில் ஈடுபடலாம்" என்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பகர்ந்துள்ளார். மானுட ஜன்மம் எடுக்கும் வரையில் பொறிகளின் மூலம் உலகத் தொடர்பை வளர்த்து வந்தோம். அதன் விளைவாக உலகப்பற்றும் உள் ளத்தில் வளர்ந்து வந்தது. உலகப்பற்றை வளர்ப்பதற்குப் பயன்பட்ட பொறிகளைக் கடவுள் பற்றை வளர்ப்பதற்கு இனிப் பயன்படுத்த வேண்டும். பொறிகளின் மூலம் புலனான விஷயங்களைப் போகத்துக்குரியவைகள் என்று எண்ணி அவைகளோடு தொடர்பு வைத்தோம். இனி, பொறிகள் மூலம் புலனாகின்ற விஷயங்கள் அனைத்தையும் கடவுள் சொரூபமாகக் கருதவேண்டும். கண்ணால் பார்க்கின்ற மானுட வடிவங்களைத் தாய் என்றும், தந்தை என்றும், மனைவி என்றும், கணவன் என்றும், புத்திரர்கள் என்றும், புத்திரிகள் என்றும் கருதி அவர்களை நேசித்து வந்தோம். அந்த நேசம் உலகத் தொடர்பை ஏற்படுத்துவதற்கு முகாமையாக இருந்தது. இனி, கண்களைக்கொண்டு காணும் மானுட வடிவங்களைத் தெய்வ வடிவங்களாகக் கருதி அவைகளை நேசிக்கவேண்டும். அந்த நேசம் கடவுள் தொடர்பை உண்டாக்குவதற்கு முகாமை யாக அமையும்.

வாழ்க்கையில் விவாஹம் என்னும் ஒரு சடங்கு நிகழ்கிறது. அதன் மூலம் உலகப் பந்தத்தை உறுதிப்படுத்துகின்ற சம்ஸ்காரம் நிகழ்கிறது. விவாஹம் என்னும் சடங்கின் மூலம் லௌகீக சம்ஸ்காரத்தை உண்டுபண்ணுவதைத் தவிர்த்துத் தெய்வீக இணக்கத்தை உண்டுபண்ணுதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் வழிகாட்டித் தந்துள்ளார். ஸ்ரீராமகிருஷ்ணர் அம்பிகையின் உபாசனையில் ஆழ்ந்து மூழ்கி உலகை மறந்திருந்தார். அவருக்கு உலகத் தொடர்பை உண்டுபண்ண விரும்பிய பெற்றோர்கள் அவருக்குத் தெரியாமல் விவாஹத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். விவாஹம் என்பது காம நுகர்ச்சியைத் தீர்த்துக் கொள்வதற்காக அமைவது அன்று. விவாஹம் என்பது மேலாம் லக்ஷியத்தில் மனதைச் செலுத்துவதற்குத் தடையாக இருக்கும் காமநுகர்ச்சியை அழித்துத் தள்ளுவதற்காக நிகழும் நிகழ்ச்சி யாகக் கொள்ளவேண்டும் என்பதைப் பரமஹம்சர் உலகுக்கு உணர்த்தியுள்ளார். தேவி உபாசனையில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்த தால் அவருடைய உள்ளத்தில் காம உணர்ச்சி அனைத்தும் தெய்வத்தின் மீதுள்ள பக்தி உணர்வாக வடிவெடுத்திருந்தது. அவருடைய உள்ளத்தில் காம நுகர்ச்சிக்குக் கிஞ்சிற்றும் இடம் இல்லை. அன்னை சாரதாதேவியின் உள்ளத்தில் அச்சிறு மிக்குத் தெரியாது காம உணர்வு இடம் பெற்றிருக்குமாகில் அதை அறவே துடைத்துத் தூய பக்தி உணர்வாக அதை மாற்றவேண்டுமென்று தேவியிடம் பரமஹம்சர் பிரார்த்தித்துக் கொண்டார். தேவியும் அதற்கு அருள் புரிந்ததாக உணர்ந்தார். அதன்பிறகு அவ்விருவர்களுக்கும் விவாஹம் என்னும் தெய்வச் சடங்கு நிகழ்ந்தது. ஆணும் பெண்ணும் ஆண்டவனிடத்தில் பக்தியைப் பெருக்குவதற்கென்று தங்கள் இருவர்களுக்கிடையில் செய்கின்ற ஒப்பந்தமாக விவாஹத்தை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று பரமஹம்சர் உலகுக்குப் புகட்டி உள்ளார். இந்த மனப்பான்மை ஆண்பாலர், பெண்பாலர் ஆகிய இருவர் களிடத்தும் வளர்ந்து வரவேண்டும். இங்ஙனம் வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு செயலின் மூலமும் கடவுள் தொடர்பை அமைத்துக் கொள்ளலாம். ☆

9. உருவ வழிபாடு

கேள்வி: (266) டில்லியில் நிர்வாணமாக சாதுக்கள் ஊர்வலம் போகின்றார்களாம். சிவலிங்க வழிபாட்டில் கீழான கருத்து இருக்கிறதாம். இப்படியெல்லாம் LIFE, THE READERS DIGEST ஆகிய அமெரிக்கப் பத்திரிகைகள் நம் நாட்டுப் பழக்கவழக்கத்தைத் தாக்கி எழுதியிருக்கின்றன. இதற்குத் தகுந்த பதில் சொல்வது ஹிந்துக்களின் கடமையல்லவா? சிவபெருமானை லிங்க ரூபமாக வழிபடுவதன் பொருள் என்ன?

பதில்: ஹ்ருஷிகேசம் போன்ற க்ஷேத்திரங்களில் நாகா சாதுக்கள் பெருங்கூட்டமாக நிர்வாணமாக ஊர்வலம் போவதுண்டு. அவர்கள் உடையணியாது இருந்து பழகி வருகின்றனர். தாங்கமுடியாத பனியிலும் உடலிலே துணி போட்டுக்கொள்வதில்லை. உலக மக்களுக்கிடையில் வரும்பொழுதும் உடலை மூடுவதில்லை. இது அநாகரிகமானது என்று ஒரு கூட்டத்தாருக்குத் தென்படலாம். அந்த சாதுக்களின் அடிப்படைக் கருத்தை ஆராய்ந்து பார்ப்போம். சிறு குழந்தைகள் நிர்வாணமாக இருக்கின்றன. அதைக்குறித்து அவைகள் வெட்கப்படுவதில்லை. தேகாத்மபுத்தி அல்லது உடல் உணர்ச்சி வருகின்றபோது சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் வெட்கம் வந்துவிடுகிறது. உடலை உடையால் மறைத்து வைக்கும் பாங்கு ஏற்படுகிறது.

திரும்பவும் உடல் உணர்ச்சியைத்தாண்டி அப்பால் செல்லுவது ஞானியின் குறிக்கோள். உடல் உணர்ச்சி இருப்பவனுக்கு ஞானம் இல்லை. ஏசுநாதரும் இக்கோட்பாட்டைப் பகர்ந்திருக்கிறார். உடலுணர்ச்சியைக் கடந்து செல்லுதற்கு நிர்வாணமாக இருக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. ஆயினும் அது

ஒரு சாதனம் என்பதைப் பெரியோர்கள் அங்கீகரித்திருக் கின்றனர். சாதுக்கள் நிர்வாணமாக ஊர்வலம் போவது காட்சிக்குக் காட்டுமிராண்டித்தனம் எனினும் கொள்கையில் அது மேலானது. அவர்களுடைய மனப்பான்மை கீழ்த்தரமான தன்று. மனப்பான்மையினின்றே ஒரு செயலின் மேன்மையையும் கீழ்மையையும் பொருள்படுத்த வேண்டும்.

அமெரிக்காவில் நிர்வாணமாகக் களியாட்டங்கள் நடப்ப துண்டு. அதைப்பார்க்கப் பலபேர் பொருள் கொடுத்துப் போகின்றனர். உடல் இன்பத்தை ஒட்டிய கீழான உணர்ச்சியை உண்டுபண்ணுவது அதன் நோக்கமாகும். அதனோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியர் செய்யும் செய்லில் மேன்மையையே யாண்டும் காணலாம்.

சிவலிங்க வழிபாட்டில் இரண்டு தத்துவங்கள் புதைந்து கிடக்கின்றன. ஒன்று கடவுளுக்கு அவயவம் இல்லை. குணம் குறியற்றது அது என்பதை விளக்குகிறது. மற்றது அது குறி யின் சின்னமாகும். சிவமும் சக்தியும் சேர்ந்து இயற்கையாகப் பரிணமிக்கிறது என்பது அதன் கோட்பாடு. உயிர்கள் தோன்று வதும் ஆண் பெண்ணின் சேர்க்கையாலே என்பதையும் அது குறிக்கிறது. இந்தச் சின்னத்தில் கீழ்மை காண்போர் தங்கள் உடல் சொரூபமே கீழ்மையின் தோற்றம் என்பதை மறந்துவிடலாகாது. கீழான செயலின் விளைவாகவே இத்தனை விதமான உடல்கள் தோன்றியிருக்கின்றன. அதைக் குறித்து மேன்மகன் வெட்கப்படவேண்டும் அப்படி வெட்கப்படுவ தற்குப் பதிலாக உடலைப் பாராட்டுதலிலேயே அவன் கண்ணும் கருத்துமாயிருக்கிறான். எனவே, அவன் கீழ்மையைப் போற்று கிறான் என்று பொருள்படுகிறது. ஒரு மனிதனைப் பார்த்த உடனே இவன் ஆண் பெண்ணின் சேர்க்கையின் விளைவு என்ற கீழான கருத்து நம் மனதில் உதிப்பதில்லை. இம்மனிதன் எத்தகைய பாங்குடையவன் என்பதையே நாம் பெரிதும் கருத்தில் எடுத்துக் கொள்கிறோம். மேன்மகன் ஒருவனைச் சந்திக்கும் பொழுது அவனுடைய மேன்மையே நமக்கு யாண்டும் ஞாபகத்துக்கு வருகிறது.

சிவலிங்கம் சிவசக்தியின் சேர்க்கைக்குச் சின்னம் என்றாலும் அதை வணங்குகின்றவர்களுடைய உள்ளத்தில் கீழான எண்ணம்

ஒன்றும் உதிப்பதில்லை; கணக்கற்ற மேலான எண்ணங்களே உதிக்கின்றன. அத்தெய்வம் எல்லாம் வல்லது, எங்கும் நிறைந்தது, உயிர்க்குயிராயிருப்பது, அதனிடத்திருந்தே அண்டம் யாவும் பிண்டம் யாவும் தோன்றி வந்துள்ளன என்ற எண்ணங்கள்தான் வழிபடுபவர் கருத்தில் உதிக்கின்றன.

இந்திய மக்களைச் சிறுமைப்படுத்தவேண்டுமென்று பிரசாரத்துக்காக எழுதிய அவதூறு நிறைந்த கட்டுரைகளைக்கண்டு நாம் மனம் கலங்கிவிடலாகாது. செடியில் முள் இருப்பது போன்று ஒவ்வொரு சமுதாயத்திலும் நலமும் கேடும் தென்படலாம். கேட்டைப் பொருள்படுத்தாது நலத்தையே நாடுவது நல்லோர் இயல்பு. கேடில்லாத சமுதாயம் உலகில் இல்லை. நமது சமுதாயத்தை ஆராய்ந்து பார்த்தாலோ பழக்கவழக்கத்திலும் மனப்பான்மையிலும் வேறு எந்தச் சமுதாயத்துக்கும் பின்வாங்கியதல்ல என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கேள்வி: *(267)* விநாயகர் பிறந்த தினத்தைச் சிவ மதத்தினர் யாவரும் வருஷந்தோறும் கொண்டாடுகிறார்கள். மூர்த்தியை மண்ணில் செய்து அதற்குப் பூஜை செய்து மறு தினமோ, மூன்றாம் நாளோ அதை ஆற்றிலோ, ஏரியிலோ, கடலிலோ போட்டுவிடுகிறார்கள். அதேபோன்று தசரா பூஜையிலும் காளிகாதேவியை மண்ணில் உருவாக்கிக் கொலு வைத்துப் பத்தாம் நாள் சமுத்திரத்தில் சேர்த்து விடுகிறார்கள். காளிகாதேவியை சமுத்திரத்தில் விட்ட பிறகு சிலர் தம்மையறியாது கண்களில் நீர் பெருக்கியதை நான் பார்த்திருக்கிறேன். இதன் ஐதிகத்தை விளக்க வேண்டுகிறேன்.

பதில்: விக்கிரகமே கடவுள் அல்ல; ஆனால் விக்கிரகத்தின் வாயிலாகக் கடவுள் வழுத்தப்படுகிறார் என்னும் கோட்பாடு இதினின்று நமக்கு நன்கு விளங்குகிறது. இதை நாம் நன்றாக அறிந்துகொள்ளுதற்கு நமது வாழ்க்கை நிகழ்ச்சியைச் சான்றாக எடுத்துக் கொள்வோம். ஒரு வீட்டில் குழந்தை ஒன்று பிறக்கிறது. அக்குழந்தையின் வரவைப் பிரீதியுடன் ஏற்றுக்கொள்கின்றனர். அக்குழந்தை உடல் எடுக்காவிட்டால் அதன்

ஆத்மசொரூபம் அக்குடும்பத்தாருக்கு விளங்காது. உடலின் மூலமாகவே உடலுக்குள்ளிருக்கும் ஆத்மாவை அவர்கள் பொருள்படுத்துகின்றனர். பிறகு அக்குழந்தையை வளர்ப்பதும், போஷிப்பதும், பாராட்டுவதும் மானுட ஆராதனையாகும். செத்தபிறகு உடலைக் கொண்டுபோய்த் தகனம் செய்துவிட்டு அல்லது பூமியில் புதைத்து விட்டுக் கண்ணீரும் கம்பலை யுமாகத் திரும்புகின்றனர்.

அதேபாங்கில் கட்புலனாகாத தெய்வத்தை ஒரு வடிவத்தில் எழுந்தருள வேண்டுமென்று வேண்டுகிறோம். நம் பொருட்டு அத்தெய்வம் அந்த வடிவத்தில் எழுந்தருளி இருப்பதாகப் பாவித்துப் போற்றுகிறோம். அத்தகைய விசேஷ ஆராதனை முற்றுப் பெற்றானபிறகு அந்த வடிவத்தினின்று தெய்வத்தை முதலில் மானசிகமாக விசர்ஜனம் செய்கின்றோம். அதாவது அத்தெய்வம் தனது யதாஸ்தானத்துக்குப் போய்விடும்படி அனுப்பி வைக்கிறோம். பிறகு தெய்வத்துக்குப் புறச்சின்ன மாயிருந்த வடிவத்தைக் கொண்டுபோய் நீரில் விட்டுவிடுகிறோம். தெய்வத்தை விட்டு நாம் பிரிந்து விட்டோம் என்கின்ற எண்ணம் வருகின்றபொழுது பக்தியின் விளைவாக மனம் நெகிழ்கிறது, கண்ணீர் பெருகுகிறது. நிலையற்ற மண் முதலிய பூதப் பொருள்களின் துணைகொண்டு நிலைபேறுடைய தெய்வத்தை வழுத்துதற்கு இத்தகைய உபாயத்தைக் கையாளுகிறோம். மண் பழையபடி மண்ணாகப் போய்விடுகிறது. அதில் உண்டுபண்ணிய வடிவத்தின் மூலம் தெய்வத்தை வழிபட்டதினால் தெய்வபக்தி நமக்கு அதிகரித்தது. அதுவே நாம் அடைந்த பயன் ஆகின்றது. உடலின் துணைகொண்டு உள்ளிருக்கும் ஆத்மாவை அறிந்துகொள்ள முயலுவது போன்று விக்கிரகத்தின் துணைகொண்டு கடவுளின் சாந்நித்தியத்தைத் தெரிந்துகொள்ள முயலுகின்றோம். அப்படி முயலுகின்ற பக்தர் களுக்கு விக்கிரகங்களின் மூலமாகவும் கடவுள் அருள் புரிகின் றார். இதுவே இத்தகைய ஆராதனைகளிலிருந்து நாம் அடையும் நலன் ஆகும். அநித்தியப் பொருள்களின் உதவியைக் கொண்டு நித்ய வஸ்துவை அறிந்துகொள்ள முயல் என்னும் கோட்பாடு இத்தகைய ஆராதனையின் மூலம் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்படுகிறது.

கேள்வி: *(268)* அம்பாள் ஊஞ்சளில் ஆட லக்ஷ்மி, சரஸ்வதி பக்கத்தில் நின்று வெண்சாமரம் வீசிக்கொண்டு நிற்கிறார்கள். பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் கைகூப்பி நமஸ்கரித்துக் கொண்டு அம்பிகையின் பாதத்திற்கு அடிப்பாகத்தில் நிஷ்டையில் உட்கார்ந்திருக் கிறார்கள். இதுபோன்று வரையப்பெற்றுள்ள படங்களைச் சில இடங்களில் பூஜை செய்கிறார்கள். இப்படத்திற்கு விளக்கம் தரக்கோருகிறேன்.

பதில்: மெய்ப்பொருளை சதாசிவம் என்று கருதுவது சைவமதக் கோட்பாடு. மெய்ப்பொருளை மஹாவிஷ்ணுவாகக் கருதுவது வைஷ்ணவமதக் கோட்பாடு. மெய்ப்பொருளை பராசக்தியாகப் பாராட்டுவது சக்திமதக் கோட்பாடு. இம் மூன்றுக்கும் மூலதத்துவம் ஒன்றே. மெய்ப்பொருளை ஒவ்வொரு மதமும் அதற்குரிய பெரிய பொருள்ளாகப் போற்றி வருகிறது. அப்பெரிய பொருளை ராஜராஜேஸ்வரி என்று சக்திமதம் போற்றுகிறது. அன்னை பராசக்தியின் பல அம்சங்களாக வந்தவர்கள் ஏனைய தெய்வங்கள் என்பது அம்மதத்தின் கோட்பாடு. லக்ஷ்மியும் சரஸ்வதியும் பராசக்தியின் அங்கங்களே. மும்மூர்த்திகளும் பராசக்தியின் புறத்தோற்றங்களே. எனவே சிலர் கைகூப்பி வணங்குகின்ற பாங்கில் இருப்பதும், சிலர் பணிவிடை செய்கின்ற பாங்கில் இருப்பதும் தத்துவ விளக் கத்துக்குப் பொருத்தமானவைகளேயாம். சிவபெருமானுக்குப் பணிவிடை செய்கின்ற பாங்கில் அம்பிகையும் கணபதியும் சுப்ரமணியமும் அமைந்திருக்கும் படக்காட்சி ஒன்று தத்துவத் தோடு பொருந்தியதாகும். அதேவிதத்தில் பராசக்தியைப் பாராட்டுகின்ற பாங்கில் ஏனைய தெய்வங்கள் அமைந்திருப்பதும் பொருத்தமானதே. சக்தி வழிபாடு செய்கின்றவர்களுக்கும் பக்தியைப் பெருக்குவதற்கு இத்தகைய படம் பெருந்துணை புரியும். ☆

10. ஜபம்

கேள்வி: *(269)* பகவானைவிடப் பகவானுடைய நாமம் பெரியது என்று கருதப்படுகிறது. ஒரு நாமமும் ஓர் ஊரும் இல்லானுக்கு எண்ணிறந்த நாமங்கள் சூட்டிக்கொள்ளலாம் என்றும் பகரப்படுகிறது. அவனுக்கு நாம் சூட்டுகிற நாமம் எப்படி அவனைவிடப் பெரியதாக முடியும்?

பதில்: பகவானுடைய நாமங்களில் இரண்டு பகுதிகள் உண்டு. அவனுடைய மகிமைகளை விளக்குவதற்காக நாம் கொடுக்கின்ற பெயர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு பகுதியாகிறது. பீஜமந்திரமாக அவனுக்கு இயல்பாயமைந்தது மற்றொரு பகுதி யாகிறது. நாம் கொடுக்கின்ற பெயர்களை மேலும் பெருக்கிக் கொண்டே போகலாம். அப்பெயர்களுக்கு அடிப்படையாயுள்ள கருத்துக்களை உணர்ந்து சொன்னால் அவை பயன்படும். பொருள் உணர்ந்து ஆயிரம் நாமங்கள் சொல்லி அர்ச்சனை செய்வது நல்லது. அதனால் இறைவனுடைய விபூதிகள் எல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றன. அம்முறையில் அவனுடைய மகிமைகளை எண்ணுமளவு மனது தூயதாகிறது. ஆலயங் களிலும் இதர இடங்களிலும் நாம அர்ச்சனைகள் அமைத்து வைத்ததின் கோட்பாடு இதுவேயாம். எல்லாத் தெய்வங்களுக்கும் ஆயிரக்கணக்கில் இங்ஙனம் சொற்கள் சேர்ந்திருக்கின்றன. அவையாவும் பகவானைவிடப் பெரியவைகள் அல்ல. அத்தனை பெயர்களுள் தெய்வத்தின் சொரூபத்துக்குப் பீஜமந்திரங்களாக அமைந்துள்ளவைகள் அலாதியானவைகளாம். ஈசுவரன் நித்தியப் பொருளாயிருப்பது போன்று இந்த நாமங்களும் நித்தியமான வைகள். சான்றுகள் சில எடுத்துக்கொள்வோம். ஓம் என்னும் பிரணவம், இராம மந்திரம், சிவ மந்திரம், நாராயண மந்திரம்

ஆகியவைகள் மனிதரால் உண்டுபண்ணப்பட்ட சொற்கள் அல்ல. இராமன் பிறப்பதற்கு முன்பும் இராம மந்திரம் உண்டு. இராம நாமம் என்பது சநாதனம். பீஜம் என்றைக்கும் அழியாத வித்து. அந்த வித்தினுடைய புறத்தோற்றம் தசரதராமன். ஆகவே இராமனைவிட இராம நாமம் மேலானது. இராமநாம ஜபம் தொடர்ந்து செய்து ஜப சித்தியடைகிறவர்கள் இராமனை அறியலாம். பரபிரம்மத்தை அறியலாம். வால்மீகி மகரிஷியைச் சான்றாக எடுத்துக்கொள்வோம். அவர் முதலில் வேடனாயிருந் தார். ராம என்னும் சொல்லை உச்சரிக்க முடியாத பாமரனாக இருந்தார். சிரமப்பட்டு அச்சொல்லை உச்சரிக்கக் கற்றுக்கொண் டார். அந்த மந்திரம் அவரை அறவே பண்படுத்தியது. அதை ஜபித்து அவர் பரபிரம்மத்தை அறிந்தார். பிறகு இராமனாய் அவதரித்த புருஷோத்தமனை அறிந்துகொள்ள அவருக்கு இயன்றது. மற்றொரு சான்று எடுத்துக் கொள்வோம். இராம மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருந்த ஆஞ்சனேயனுக்கு அலை கடலைத் தாண்ட இயன்றது. ஆனால் இராமன் தானே அக்கடலைக் கடந்து இலங்கை செல்லுதற்கு அணைகட்ட வேண்டியதாயிற்று. ஆக, பகவானுடைய நாமம் பகவானைவிடப் பெரியதே.

பகவானுடைய நாமத்தை வெறுமனே உச்சரித்துக்கொண் டிருந்தாலும், விளையாட்டுக்காகச் சொன்னாலும், சினத்தினால் சொன்னாலும் அத்தனைக்கும் பயன் உண்டு. பின்பு அதன் பொருளை உணர்ந்து பக்திபூர்வமாகச் சொன்னால் அது விரைவில் மனதைப் பண்படுத்துகிறது. ஆனால் அர்ச்சனைக் காக அமைந்த அத்தனை சொற்களையும் பொருளை உணராது ஓதுவதாலும் ஓதுவிப்பதாலும் நன்மை ஏற்படாது. பொருள் உணர்ந்து சில சொற்களைச் சொன்னாலும் அது நல்ல வழி பாடாகும். மந்திரமாக அமைந்துள்ள ஒரு சொல்லை ஓயாது உச்சரிக்கவேண்டும். அப்பொழுதுதான் அது ஜபம் என்னும் பெயர் பெறுகிறது. ஆனால் அர்ச்சனைக்கு அமைந்துள்ள பல சொற்களைப் பொருள் உணர்ந்து சொன்னால்தான் பயன்படும். பகவானுடைய நாமமாகிய ஒரு சொல் நம்மைப் பகவானிடம் கொண்டு சேர்க்குமாதலால் அது பகவானைவிடப் பெரியதே.

கேள்வி: *(270)* அர்த்தமின்றி வாக்கு இல்லை, பொருளின்றிப் பெயர் இல்லை. பொருளை அறியாமல் வெறும் நாமஜபம் எவ்வளவு வரைக்கும் பயனளிக்கும்?

பதில்: ஒவ்வொரு பதத்துக்கும் அர்த்தம் உண்டு. ஆனால் துவக்கத்திலேயே நாம் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. பதத்தை மட்டும் உச்சரித்துக் கொண்டே போனால் அது மனதைப் பண்படுத்தவல்லது. பண்பட்டான பிறகு அதன் அர்த்தம் மனதில் உதயமாகும். இதற்குத் தக்கசான்று வால்மீகி மஹரிஷி. இராமா என்னும் பதத்தை அவர் ஓயாது உச்சரித்தார். மனபரிபாகம் அடைந்தார், மஹரிஷி ஆனார். அப்பதத்தின் அர்த்தம் ஆகிய ராமசரிதம் முழுதும் அவர் மனதில் உதய மாயிற்று. ஆதிகாவியமாக இராமாயணத்தை அமைத்தார்.

"நற்றவா உனைநான் மறக்கினும் சொல்லு நா
நமசிவாயவே" என்கிறார் சைவசமயக் குரவர் ஒருவர்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

என்கின்றது திருமந்திரம். அர்த்தம் தெரியாது கடவுளுடைய நாமமாகிய மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே போனால் மன பரிபாகம் ஆய்விடுகிறது. பொருளும் பிறகு விளங்கிவிடுகிறது என்பதுதான் பெரியோர்கள் அனுபவத்தில் கண்டுள்ள உண்மையாகும். ஆகவே மந்திரங்களுக்கு அர்த்தம் தெரியா விட்டாலும் அவைகளை பக்தி சிரத்தையுடன் ஓயாது உச்சரிப்பதே முறை.

கேள்வி: *(271)* ஜபத்திற்கும், அர்ச்சனைக்கும் உள்ள வேறுபாடு யாது?

பதில்: ஆத்ம சாதனங்களனைத்தும் மனதை அடக்கு தற்கும், ஒருமுகப்படுத்துதற்கும் அமைந்தவைகளாம். மனதோ அலைந்து திரியும் பாங்குடையது. ஒரே பொருளில் அல்லது கருத்தில் அது நெடுநேரம் நிலைத்திருப்பதில்லை. அத்தகைய மனதை அடக்கிப் பழகுதற்கு அர்ச்சனையில் ஆரம்பித்துப் பிறகு ஜபத்துக்கு வரவேண்டும்.

கண்காட்சி ஒன்றைப் பார்க்கச் செல்கின்றவர்களுக்கிடையில் குறிக்கோள் ஏதுமில்லாதவர்கள் எல்லாப் பகுதிகளையும் கொஞ்சம் பார்த்து மகிழ்வார்கள். அதற்கு நிகர் அர்ச்சனை. ஏதேனும் ஒரு துறையில் ஆழ்ந்து ஈடுபடுகிறவன் தனக்குப் பயன்படுகிற அத்துறையையொட்டிக் காட்டப்படுகிற கண்காட்சியில் மட்டும் தன் பூரணக் கருத்தைச் செலுத்துவான். அதற்கு நிகரானது ஜபம்.

வழிபடுகிற தெய்வங்களுக்கு நாமங்கள் பல இருக்கின்றன. ஒவ்வொரு நாமத்தையும் தனித்தனியே சொல்லிக் கூடிய வரையில் அந்த நாமத்தின் கருத்தை உணர்ந்து மலர் தூவுவது தலைசிறந்த அர்ச்சனையாகும். உதாரணமாக, ஓம் சிவாய நம: ஓம் மஹா தேவாய நம: ஓம் சங்கராய நம: ஓம் உமா பதயே நம: இங்ஙனம் நிதானமாக நாமத்தைச் சொல்லி ஒவ்வொரு நாமத்தின் உட்கருத்தை உணர்வது அர்ச்சனையாகிறது. வழிபாடுகளுள் இது மிகச் சுலபமானது. அலைந்து திரிகின்ற மனதுக்கு ஒரே தெய்வத்தின் பல பாங்குகளை எடுத்து ஓதிக்கொண்டு போவதால் அம்மனதின் அலைச்சல் வழிபடு தெய்வத்தோடு சம்பந்தப்பட்டதாகவே இருக்கிறது.

இனி ஜபமோ, ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய என்று ஒரே நாமத்தை மனதிற்குள் அமைதியாக ஓதிக்கொண்டு இருப்பதாம். இத்தகைய ஜபம் தலைத்தரமானது. அர்ச்சனை அதற்கடுத்தபடியாக வந்தமைகிறது.

கேள்வி: *(272)* மந்திரங்களுள் சிறந்தது காயத்ரீ என்று சொல்லுவதற்குக் காரணம் யாது?

பதில்: மனிதன் ஏதேதோ எண்ணங்களை எண்ணிக் கொண்டிருக்கிறான். அவ்வெண்ணங்களுள் மனிதனை மேல் நிலைக்கு எடுத்துச் செல்லக்கூடியவைகளும் இருக்கின்றன; அவனைக் கீழ்மையில் ஆழ்த்தும் எண்ணங்களும் இருக்கின்றன. அப்படி அமையும் எண்ணங்கள் மனிதனுடைய பாங்கை அனுசரித்து இருக்கின்றன. "கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் எண்ணம்" என்று குறளை மாற்றியமைப்பதில் பிழை இல்லை. நல்லெண்ணமே எண்ணுபவன் மேன்மையுறுகிறான். தன்னுடைய தெய்வீக

இயல்புக்குத் தீங்கு பண்ணும் கெட்ட எண்ணங்களை எண்ணு பவன் சீர்கேடு அடைகிறான். மனிதனை மேல்நிலைக்கு எடுத்துச் செல்லும் எண்ணம் மந்திரம் எனப்படுகிறது. மனதை உறுதிப்படுத்துகின்ற எண்ணம் மந்திரமாகிறது. அந்த எண்ணத்துக்கு விளக்கமாக அமைவது சொல். எனவே சொல் மயமாக மந்திரம் அமைந்திருக்கிறது. அப்படி அமைந்திருக்கும் மந்திரங்களுள்

ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நः ப்ரசோதயாத்

என்பது காயத்ரீ மந்திரம்.

இதன் பொருள்: ஓம் அறிவைத் தீட்டுகின்ற அகத்தி லிருக்கும் அழுக்கை அகற்றுகின்ற அருள் ஒளியோடு கூடிய போற்றுதற்குரிய ஆக்கத் தெய்வத்தைத் தியானிப்போமாக என்பதாம். ஓம் என்பது தன்னளவில் மந்திரம். அதன் தலை சிறந்த பகுதியாக இந்தக் காயத்ரீ மந்திரம் அமைந்திருக்கிறது. ஓம் என்னும் ஓசையை இடையறாது உள்ளத்தில் எழுப்பிக் கொண்டிருப்பவன் மேலோனாகத் திருந்தியமைகிறான். அத்தகைய சக்தி வாய்ந்தது ஓயாது இயற்கை முழுதிலும் ஒலித்துக் கொண்டிருக்கிற பிரணவம் என்னும் அந்த ஓங்கார மந்திரம். ஏனைய மந்திரங்களனைத்துக்கும் இது ஆதிமூலமா யிருப்பதால் இதற்குப் பீஜமந்திரம் என்று பெயர். பீஜம் என்றால் வித்து. வித்திலிருந்து செடி முளைக்கிறது. அங்ஙனம் ஓங்காரத்திலிருந்து ஓசைகளனைத்தும், உலகமும் வந்துள்ளன. இனி காயத்ரீ மந்திரம் அறிவைத் தீட்டுவதால் இது மந்திரங் களனைத்திலும் தலைசிறந்தது எனக் கருதப்படுகிறது.

கேள்வி: *(273)* காயத்ரீ ஜபம் பெண்கள் செய்வது முறையா?

பதில்: காயத்ரீ ஜபம் பெண்கள் செய்யலாகாது என்னும் கட்டுப்பாடு இடைக்காலத்தில் வந்ததாகும். இந்தக் கட்டுப்பாடோ பொருளற்றது. காயத்ரீ ஜபம் பண்ணுவதால் அறிவு தீட்டப் பெறுகிறது. அறிவு அலாதியாக ஆண்களுக்கு மட்டும் உரிய தன்று. ஆண்பாலர், பெண்பாலர் ஆகிய இரு திறத்தாருக்கும்

நல்லறிவு இன்றியமையாதது. கல்வி எங்ஙனம் இரு திறத்தாருக்கும் நலன் தருகிறதோ அதே பாங்கில் காயத்ரீ ஜபமும் நலன் தரும்.

சிறிது காலத்திற்கு முன்பு நம் சமுதாயத்தில் பொருளற்ற குருட்டு நம்பிக்கை ஒன்று கையாளப்பட்டு வந்தது. பெண்களைப் படிக்க வைக்கலாகாது என்பதுதான் அந்தக் குருட்டு நம்பிக்கை. இன்றைக்கு அது அடிபட்டுப் போயிற்று. பெண்பாலர் காயத்ரீ ஜபம் பண்ணலாகாது என்கின்ற குருட்டு நம்பிக்கையும் அடியோடு அகலுதல் உசிதமாகிறது. அதன் வாயிலாகச் சமுதாயத்துக்குப் பெருமிதமாக நலனே உண்டாகும்.

கேள்வி: *(274)* மனம் குவியாமல் பன்னிரெண்டு அல்லது பதினாறு மணி நேரம் தினமும் இடைவிடாது சிவ, விஷ்ணு, குஹ, சக்தி ஆகிய பகவன் நாமங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது கதம்பமாகவோ சொல்லுவதில் பொருளுண்டா?

பதில்: மனம் குவியப்பெற்றால் அது ஞானத்துக்குத் தகுதியுடையதாகிறது. அலைவீசும் தடாகத்தில் எப்பொழுது அமைதி ஏற்படுகிறதோ அப்பொழுதே தடாகத்தின் கீழ்ப் பகுதியாக இருக்கிற தரை தென்படுகிறது. அதே விதத்தில் மனம் ஒடுங்கப்பெற்ற நிலையில் ஆத்ம சொரூபம் ஒளிர்கிறது. ஆனால் மனது எளிதில் ஒடுங்குவதில்லை. அது கூத்தாடிக் கொண்டே இருக்கிறது. கூத்தாடுகின்ற மனதை அடங்கி யிருக்கச் செய்வது மிகக் கடினமானது. நல்ல காரியங்களில் கூத்தாடும்படி அதைத் தூண்டலாம். இறைவனுடைய பல நாமங்களைச் சொல்லி அது கூத்தாடிக்கொண்டிருக்குமாகில் சிறிது சிறிதாக அதற்கு நல்ல பயிற்சி வருகிறது. கெட்ட விஷயங்களில் கூத்தாடுவதைவிடப் பகவத் விஷயங்களில் கூத்தாடுவது சாலச் சிறந்தது. நல்ல காரியங்களில் கூத்தாடுகின்ற மனதுக்கு தெளிவும் அமைதியும் விரைவில் வந்துவிடும். எனவே அடங்காத மனதைப் பகவத் விஷயங்களில் வேண்டிய வாறு அலைந்து திரியும்படி விட்டுவிடலாம். பரிபாகம் அடை வதற்கு அது உற்ற உபாயமாகும். ஆதலால் அப்படி அலைந்து திரிவதே ஒரு நல்ல சாதனமாகிறது. பின்பு ஒருவன் மணிக்

கணக்காக ஜபம் செய்கிறான் என்றால், மனம் அடங்கா விட்டாலும் நெடுநேரம் ஜபம் பண்ணுதல் என்ற பயிற்சியே அவனுக்கு மன அமைதி பெறுதற்கு நாளடைவில் உதவி செய்யும்.

கேள்வி: *(275)* ஸ்தூல பஞ்சாட்சரத்திற்கும், சூக்ஷ்ம பஞ்சாட்சரத்திற்கும் உள்ள வேற்றுமை என்ன? எந் நிலையில் உள்ளவர் எதைக் கைக்கொள்ளவேண்டும்? இல்லறத்தார் எதைக் கைக்கொள்ள வேண்டும்? ஒரு நிலையிலுள்ளார் தாங்கள் கைக்கொள்ள வேண்டியதை விட்டுவிட்டு மற்றதைக் கைக்கொண்டால் அதனால் விபரீதம் ஏதேனும் உண்டா?

பதில்: ஓம் நமசிவாய என்பது பஞ்சாட்சரம். இது வேதத்தில் அமைந்துள்ளது. சிவ உபாசனை செய்கிறவர்கள் இதைத்தான் முறையாக ஜபிக்கவேண்டும், இதையே தியானம் பண்ணவேண்டும். பக்தி மார்க்கத்தில் செல்லுகின்றவர்களுக்கு ஸ்தூல பஞ்சாட்சரம் என்பதும், சூக்ஷ்ம பஞ்சாட்சரம் என்பதும் இல்லை. ஆனால் யோக மார்க்கத்தில் செல்லுகின்றவர்கள் இத்தகையப் பாகுபாட்டைச் செய்து வைத்திருக்கின்றனர். அதற்குத் தக்க காரணமும் உண்டு. ஓம் நமசிவாய, நமசிவாய, சிவாயநம, சிவா, வாசி இப்படி மாத்திரைகளை சுருக்கிக் கொண்டு போகப் போக அது சூக்ஷ்மமாகிறது. பிராணாயாமம் செய்கின்றவர்களுக்குப் பூரகம், கும்பகம், ரேசகம் என்னும் பகுதிகளைப் பழகுகின்றபொழுது ஒவ்வொன்றுக்கும் எத்தனை மாத்திரை காலம் தருவது என்னும் கேள்வி எழுகிறது. காலத்தை வெறும் எண்ணிக்கையால் அளப்பதற்குப் பதிலாக மந்த்ர உச்சாரணையினால் அளப்பதுண்டு. மந்த்ரம் சூக்ஷ்ம மாகும்பொழுது மாத்திரை குறைந்துபோய் விடுகிறது. உச்சரிப் பதற்கு எளியதாய் விடுகிறது. பிராணாயாம நிபுணர்கள் இந்தக் கோட்பாடுகளைச் சாதகனுக்கு ஏற்ற பிரகாரம் மாற்றியமைத்துத் தருவார்கள். ஆனால் எந்த சாதகனுக்கு எத்தகைய பிராணா யாமம், அதற்கேற்ற மந்த்ரம் எது என்னும் கேள்விகளைப் புஸ்தகங்களின் வாயிலாகவோ, பத்திரிகைகளின் வாயிலாகவோ நாம் தீர்த்துவைக்க முடியாது. புஸ்தகங்களைப் படித்துப்

பிராணாயாமம் செய்கின்றவர்களுக்குப் பெரும்பாலும் கேடு விளைகிறது. பக்தியில் ஈடுபட்டு எல்லோரும் ஓம் நமசிவாய என்னும் பஞ்சாட்சரத்தை வேண்டியவாறு உச்சரிக்கலாம். "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாய" என்னும் பக்திக் கோட்பாட்டை வேண்டியவாறு கையாளலாம். பக்தி சாதனத்துக்குக் குடும்பி என்றும் துறவி என்றும் பாகுபாடு இல்லை.

குருவிடமிருந்து உபதேசம் பெறாமலும், பஞ்சாட்சர ஜபம் செய்யலாம். பலர் அப்படிச் செய்து பெருநிலைக்கு வந்திருக் கிறார்கள். நள்ளிரவில் தூக்கம் வராத வேளையில் இறைவனு டைய நாம ஜபம் செய்துகொண்டிருப்பது மிக நல்லது.

கேள்வி: *(276)* கடவுளின் திருநாமத்தைத் தினந்தோறும் தவறாமல் காலை மாலை இருவேளைகளிலும் ஜபம் செய்பவர்கள் அடையும் நிலை யாது?

பதில்: பாமரராகிய நாம் கடவுளைக் கண்டவர்கள் அல்லர். ஆனால் கடவுளினுடைய திருநாமத்தை நாம் அறிந் திருக்கிறோம். கடவுள் பெரியவரா, அவர் திருநாமம் பெரியதா என்று அராய்ச்சி செய்துள்ள பெரியோர்கள் பலர் இருக் கின்றனர். அவர்கள் எல்லோரும் ஏகோபித்து முடிவு செய் திருப்பது கடவுளைவிடப் பெரியது கடவுளின் திருநாமம் என்பதாம். அத் திருநாமம் நம் கைவசம் உளது. எவ்வளவுக் கெவ்வளவு நாம் அதை ஓதுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நலன் அடைகின்றோம். நம்பிக்கை வைத்துப் பக்தி விசுவாசத் துடன் ஓதுபவர்க்கு மனத்தூய்மை விரைவில் வந்தமைகிறது. உணர்வற்று ஓதுபவரும் நாளடைவில் மனத்தெளிவு பெறுகின் றனர். மனந்தெளிந்தவர்களே கடவுள் மகிமையையும் பிறகு கடவுள் சொரூபத்தையும் சுவானுபூதியில் பெறமுடியும். ஆக, மனம் தெளிவு அடைவது நாம ஜபத்தின் விளைவாம்.

கேள்வி: *(277)* மந்திரங்களை உச்சரிப்பதில் தவறு ஏற்படலாமா?

பதில்: இறைவனுடைய நாமத்தைச் சொல்வதற்கு நம் அனைவருக்கும் உரிமை உண்டு. தெய்வ மந்திரங்களை

உச்சரிக்கும்பொழுது தீய சம்ஸ்காரங்கள் நாசமடைகின்றன. குழந்தை ஒன்று பேசிப் பழகும்பொழுது அம்மாவை, 'அம்' என்றும் அப்பாவை 'அப்' என்றும் அரைகுறையாக மழலைச் சொல்லில் கூறும். அம்மழலைச் சொல்லைக் கேட்டுத் தாயும் தந்தையும் பெருமகிழ்வு அடைவார்கள். ஆனால் அக்குழந்தைக்கு அறிவு வருகின்றபொழுது அம்மா என்றும், அப்பா என்றும் திருத்தமாகச் சொன்னால்தான் பெற்றோர்கள் மகிழ்வு அடைவார்கள். அங்ஙனம் மொழி தெரியாதபொழுதோ, உச்சரிப்புத் தெரியாதபொழுதோ மந்திரங்களைப் பக்தி விசுவாசத்துடன் எப்படி உச்சரித்தாலும் அதற்குப் பலன் உண்டு. மனதில் உண்மையான பக்தியும் விசுவாசமும் இருக்கவேண்டும். இதற்குச் சான்று வால்மீகியாவார். "ராமா" என்னும் மந்திரத்தை அவர் "மரா" என்று உச்சரித்து முனிபுங்கவர் ஆனார். முனி புங்கவர் ஆன பிறகு அவர் பிழையில்லாது தெளிவாக மந்திரத்தை உச்சரித்தார். மந்திரங்களின் உச்சரிப்பை அறிந்து பிழையில்லாது உச்சரிப்பதுதான் முறை. மனிதன் அங்ஙனம் பிழையில்லாது உச்சரிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். கற்றுக் கொள்ளும்வரையில் மந்திரத்தைப் பக்தியுடனும், விசுவாசத் துடனும் உச்சரிக்கவேண்டும். மந்திரம் உச்சரிக்காமல் ஒரு நாளும் இருக்கக் கூடாது. சரியான உச்சரிப்பை அறிந்து பக்தி சிரத்தையுடன் மந்திரங்களை உச்சரித்தால் அதற்கேற்ற பலன் விரைவில் நமக்குக் கிடைக்கும்.

கேள்வி: *(278)* மந்திரம் ஓதுவது நோயைப் போக்குமா?

பதில்: உடலுக்கும் உள்ளத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உடலை ஸ்தூலம் என்றால் உள்ளம் சூக்ஷ்மமாகின்றது. உடல் திடகாத்திரமாக இருந்தால் உள்ளமும், உறுதியுடன் செயல்புரியும். உடல் நோய்வாய்ப்பட்டாலோ பலஹீனம் அடைந்தாலோ அது உள்ளத்தையும் பாதிக்கும்.

உடல்நோய் வந்துவிட்டால் அதைப் போக்க மருத்துவரை நாடுகின்றோம். உள்ளத்தில் துன்பம் என்னும் நோய் வந்து விட்டால் அதைப் போக்குவதற்கு வைத்தியரிடம் மருந்து இல்லை. உள்ளத்தில் உண்டாகும் துன்பம் என்னும் நோயைப் போக்குவதற்கு இறைவனுடைய நாமங்கள் அல்லது மந்திரங்கள்

மருந்தாக அமைகின்றன. உள்ளம் துன்பத்தால் பாதிக்கப்படும் பொழுது அது உடலையும் பாதிக்கிறது. மந்திர உச்சாரணையின் மூலம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தவேண்டும். உள்ளத் தூய்மை அடைவதற்கேற்ப உடலும் ஆரோக்கியம் உடையதாக மாறி அமையும்.

உடல்நோயைவிட உள்ளத்துக்கு வரும் துன்பம் என்னும் நோய் மிகக் கொடியது. மந்திர ஜபத்தால் உள்ளத்தைப் பக்குவப்படுத்திவிட்டால் உடலுக்கு நோய் வந்தாலும் அதைப் பொருட்படுத்தாத நிலையை எய்திவிடலாம். தீவினையை அழிப்பதற்கு மந்திரங்கள்தாம் சிறந்த மருந்தாகும். “சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்” என்பது திருமூலர் வாக்கு. மந்திரம் ஓதுவது மனதிலுள்ள தீவினையைப் போக்குவதோடு நம்மைத் தெய்வ சொரூபமாகவும் ஆக்குகிறது. சிவநாமத்தை ஓதினால் சிவசொரூபமாகலாம் என்பதைச் “சிவ சிவ என்றிடச் சிவகதி தானே” எனத் திருமூலர் கூறுகிறார். மந்திர சக்தியினால் நம்மிடத்திலுள்ள கேட்டையெல்லாம் நீக்கி நம்மைப் புனித வான்கள் ஆக்கிக்கொள்ளலாம்.

கேள்வி: *(279)* “நம” என்ற சொல் பெரும்பாலும் இறுதியில் வர நமசிவாய என்ற சொல்லில் மட்டும் முன் அமைந்திருப்பதின் பொருள் என்ன?

பதில்: இறைவனுடைய திருநாமத்தை இரண்டு வித சாதனங்களில் பயன்படுத்துகிறோம். ஒன்று ஜபம்; மற்றது அர்ச்சனை. ஜபம் பண்ணுதற்கு ஒரே நாமத்தை வைத்துக் கொள்ளுகிறோம். அர்ச்சனைக்கோ ஆயிரக்கணக்கான நாமங்கள் இருக்கின்றன. அர்ச்சனை பண்ணும்பொழுதெல்லாம் ‘நம’ என்னும் சொல் இறுதியில் வருகிறது. சிவாய நம, ருத்ராய நம, மஹாதேவாய நம - இப்படி வருபவைகளெல்லாம் அர்ச்சனைகள். அர்ச்சனைக்கு அமைந்துள்ள நாமங்கள் யாவும் ஜபத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. ஜபத்துக்குரிய மந்த்ரங்களை உச்சரிக்கும்பொழுது “நம” என்னும் சொல் முதலில் வருகிறது. நமசிவாய, நமோ நாராயணாய, நமோ பகவதே வாசுதேவாய ஆகியவைகள் மந்த்ரங்கள் ஆகின்றன. மந்த்ரங்களுக்கும் ஏனைய அர்ச்சனை நாமங்களுக்கும் முதலில்

ஓங்காரத்தைச் சேர்த்துக்கொள்ளுவது முறை. ஆக, ஓம் நமசிவாய, ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ பகவதே வாசுதேவாய - இங்ஙனம் உச்சரிப்பது முறை. அர்ச்சனையில் 'நம' என்னும் சொல்லை இறுதியில் வைக்கிறோம். ஓம் என்னும் பிரணவத்தை முதலிலும் வைக்கலாம். இறுதியிலும் வைக்கலாம். ஓம் சிவாய நம:, ஓம் கங்காதராய நம: என்றும் இயம்பலாம் அல்லது சிவாய நம ஓம், கங்காதராய நம ஓம் என்றும் இயம்பலாம். அர்ச்சனைக்கு நம் இஷ்டம்போன்று ஓங்காரத்தை முன்போ பின்போ வைக்கிறோம். 'நம' என்னும் சொல்லை இறுதியில் வைத்திருக்கிறோம். ஆனால் மந்த்ர ஜபத்துக்கு ஓம் என்னும் பிரணவமும் நம என்னும் சொல்லும் முதலிலேயே வந்துவிடுகின்றன. 'நம' என்னும் சொல்லுக்குப் பொருள் போற்றி அல்லது வணக்கம் என்பதாம். வடமொழிக்கு ஒப்பத் தமிழிலும் அர்ச்சனை பண்ணலாம். சிவனே போற்றி, அரனே போற்றி, இறைவா போற்றி என்று வணங்குவது முறை. ☆

11. பிரார்த்தனை

கேள்வி: *(280)* பிரார்த்தனை செய்யும்பொழுது சில சமயங்களில் பொருள் தெரியாத சம்ஸ்கிருத சுலோகங் களைச் சொல்லுகிறோம். மனம் அதில் ஈடுபடுவதில்லை. அப்படிச் செய்வது பொருந்துமா?

பதில்: பிரார்த்தனையில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று, நமக்குத் தேவையாய் இருப்பதைத் தெய்வத்திடம் கேட்பது. குழந்தை ஒன்று தனக்குத் தேவையாய் இருப்பதைத் தாயிடம் கேட்கிறது. அப்படிக் கேட்பதற்குத் திருந்திய மொழி அவசியம் இல்லை. மொழி எதுவாயிருப்பினும் உணர்ச்சியே முக்கியமானது. குழந்தையின் உணர்ச்சியைத் தாய் அறிந்து கொள்கிறாள். அதன் அவாவை அவள் நிறைவேற்றுகிறாள். பக்தனுடைய பாங்கும் அத்தகையது. பக்தன் தன் வழிபடு தெய்வத்தினிடமிருந்து உலக சம்பத்து எதையும் கேட்பதில்லை. தன் பக்தி மேலும் மேலும் அதிகரிக்க வேண்டும் என்பது ஒன்றே அவனுடைய பிரார்த்தனை. தனக்குத் தெரிந்துள்ள எந்த மொழியில் வேண்டுமென்றாலும் தெய்வத்திடம் அவன் தன் தேவையை வெளியிடலாம். தாய் தன் குழந்தையின் உணர்ச்சியை அறிந்துகொள்வது போன்று தெய்வம் பக்த னுடைய மனநிலையை அறிந்துகொள்கிறார். பக்தனுக்குத் தேவையாய் இருப்பதை அவர் கொடுத்தருளுகிறார். அதற்கு மொழியைவிட உணர்ச்சியே சிறந்த உபாயமாக வந்தமைகிறது.

இனி, பிரார்த்தனைக்கு ஆன்றோர்கள் அமைத்துள்ள சில பாடல்களைப் பயன்படுத்துகிறோம். சம்ஸ்கிருதத்தில் அமைந்துள்ள சுலோகத்துக்குச் சான்றாக ஒன்றை எடுத்துக் கொள்ளுவோம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மீது சுவாமி விவேகானந்தர்

சம்ஸ்கிருதத்தில் குரு ஸ்தோத்திரம் அமைத்திருக்கிறார். அந்த ஸ்தோத்திரத்தின் பொருள் எல்லார்க்கும் விளங்குவதில்லை. பொருள் விளங்காவிட்டாலும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மீது அந்த ஸ்தோத்திரத்தை உலகெங்கும் உள்ள பலபேர் பாடுகின்றனர். அப்படிச் செய்வது முற்றிலும் பொருந்தும். அர்த்தம் விளங்கா விட்டாலும் அது அனுபூதிமானுடைய வாக்கு. ஆதலால் அதற்கு அதிகத் தெய்வீகச் சக்தியுண்டு. அர்த்தம் தெரியாது அதை ஓதினாலும் அதனால் பயன் உண்டு. அதற்கு நிகராகத் தமிழ் மொழியில் ஆப்த வாக்கியங்கள் இருக்கின்றன. தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி ஆகியவைகள் அனுபூதிமான் களுடைய ஆப்த வாக்கியங்கள் ஆகும். தமிழில் அமைந்திருக் கின்றனவெனிலும் அப்பாடல்கள் எல்லாப் பகுதிகளும் எல்லார்க்கும் அர்த்தமாவதில்லை. அர்த்தமாகாவிட்டாலும் பக்தி பூர்வமாக அவைகளைப் பாடுதல் முறை. அப்படிப் பாடுவதால் மனம் பரிபாகம் அடைகிறது. இனி அத்தகைய சுலோகங் களுக்கும் செய்யுள்களுக்கும் அர்த்தம் தெரிந்து ஓதினால் அதைவிடச் சிறந்தது. சிறுவர்களுக்கும் சிறுவர்கள் போன்ற மனப்பான்மை படைத்திருக்கின்றவர்களுக்கும் சில பாடல்களின் உட்பொருள் விளங்குவதில்லை. விளங்காததைக் குறித்து அவர்கள் கவலைப்படவேண்டியதில்லை. பக்திபூர்வமாக அப்பாடல்களைப் பாடுவதே நல்ல சாதனம் ஆகிறது. பொருள் உணர்ந்து பகர்வது தலைத்தரமான பிரார்த்தனை. பொருள் உணராதவிடத்தும் பக்தி ததும்பும் பாங்கில் ஆன்றோர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஸ்தோத்திரங்களையும் பக்திப் பாடல் களையும் நன்கு பயன்படுத்தலாம். அது நல்ல ஆத்ம சாதனம் ஆகிறது. மனதின் ஈடுபாடு மொழியோடு சம்பந்தப்பட்டிருக் கலாம் அல்லது சம்பந்தப்படாமலும் இருக்கலாம். தாய் பாடுகிற தொட்டில் பாட்டில் மொழிப் பகுதி, உணர்ச்சிப் பகுதி ஆகிய இருபகுதிகள் இருக்கின்றன. அவ்விரு பகுதிகளையும் தாய் அறிகிறாள். ஆனால் குழந்தைக்கு மொழிப்பகுதி பயன்படுவதில்லை; உணர்ச்சிப் பகுதி முற்றிலும் பயன்படுகிறது. உணர்ச்சியின் வாயிலாகத் தாய் தன் குழந்தைக்கு நல்லி யல்பை ஊட்டுகிறாள். அத்தகைய உணர்ச்சி கடவுளைப் பற்றியதாய் இருக்குமாகில் அது பக்தி.

கேள்வி: *(281)* பிரார்த்தனையின் பொருள் தெரியாத விடத்தும் பயன் உண்டா?

பதில்: பிரார்த்தனையில் இரண்டு பகுதிகள் உள. முதலாவது இறைவனுடைய மகிமையைப் பாராட்டுதல். அவனுடைய விபூதிகளையும் கல்யாண குணங்களையும் வியந்து போற்றுதல். இரண்டாவது நமக்குத் தேவையாக இருக்கும் நலனை இறைவனிடம் பரிந்து விண்ணப்பித்துக் கேட்பதாம். தாயினும் சாலப் பரிந்து நம் பிரார்த்தனைக்குச் செவிசாய்க்கும் இறைவன் வேண்டியதை வேண்டியாங்கு வழங்கி அருள்கின்றான். இயற்கையின் நடைமுறைகள் முழுதும் இறைவனுடைய திருவிளையாடல்கள். அவைகளை ஆன்றோர் பலமுறைகளில் விளக்கியுள்ளார்கள். அவைகளில் சில பகுதிகள் மட்டும் நமக்கு விளங்குகின்றன. வேறு சிலபகுதிகள் நமக்கு விளங்குவதில்லை. விளங்கியவை, விளங்காதவை ஆகிய யாவையும் பக்தி பூர்வமாக ஓதுவது நல்ல பிரார்த்தனையாகும். விளங்காதவைகளை ஆராய்ந்து எவ்வளவு விரைவில் கற்றுக்கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அந்தப் பிரார்த்தனை நம் மனதைத் திருத்தியமைக்கிறது. "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்து" என்பது பிரார்த்தனையைப் பற்றிய ஆப்த வாக்கியமாகும். பிறகு குழந்தையொன்று மழலைச் சொல்லின் வாயிலாகத் தனக்குத் தேவையாய் இருப்பதைத் தன் தாயிடம் மன்றாடிக் கேட்பது போன்று நமக்கு நலன் தரும் அனைத்தையும் நாம் தெய்வத்திடத்து நல்ல பாடல்கள் வாயிலாகவோ, உணர்ச்சி ததும்பும் சொற்கள் வாயிலாகவோ கேட்பது முறையாகும்.

இவை யாவுக்கும் மேலே இறைவனுடைய திருநாமத்தை ஓயாது ஜபிப்பது நல்ல பிரார்த்தனையாகும். அவனுடைய திருநாமங்களில் சிலவற்றிற்கு நமக்கு அர்த்தம் விளங்குகின்றது. வேறு சிலவற்றிற்குப் பொருள் ஒன்றும் புலப்படுவதில்லை. அப்படி இருந்தாலும், அவனுடைய நாமத்தை ஓயாது உச்சரிப்பதன் வாயிலாக நாம் நலன் அடைகின்றோம். உண்ணும் உணவில் பொருந்தியது எது, பொருந்தாதது எது என்பது ஆராய்ச்சிக்காரனுக்கு விளங்குகிறது. மக்களில் பெரும்பான்மையோர் அதில் கருத்துச் செலுத்துவதில்லை. ஆயினும்

உணவின் தரம் மனிதனுடைய உடலைப் பண்படுத்த வல்லதாம். அந்த முறையில் இறைவனுடைய திருநாமத்தை ஓதுதற்கு ஏற்ப மனிதன் ஆத்மபரிபாகம் அடைகின்றான்.

கேள்வி: *(282)* நண்பர்களுடைய கஷ்டத்தையோ நோயையோ போக்குவதற்காக, அவர்கள்மீதுள்ள அன்பினால் சுயநலமின்றிப் பிரார்த்தனை பண்ணுவது காமியப் பிரார்த்தனையோடு சேருமா? பரமஹம்சதேவர் தாமே கேசவரின் நோய் நீங்க வேண்டும் என்று இளநீரும் சர்க்கரையும் படைப்பதாகக் காளியிடம் வேண்டிக் கொள்கிறாரே? இது அவர் நமக்குக் காட்டித்தந்த பாடம் தானே? நாமும் ஏன் அப்படிச் செய்யக்கூடாது?

பதில்: பரமஹம்சதேவர் செய்ததும் ஒருவிதமான காமியப் பிரார்த்தனையேயாம். ஆனால் அவர் அதைத் தம்முடைய உற்றார் உறவினரை முன்னிட்டுச் செய்யவில்லை. பரம்பொருளிடத்துப் பக்தி பூண்டிருந்த ஒருவரைக் குறித்துச் செய்தார். கேசவசந்திரசேனர் மறைந்துபட்டுப் போனால் பாரமார்த்திகப் பெரிய விஷயங்களைப் பற்றிப் பின்பு நான் யாருடன் பேசுவேன் என்ற கவலை அப்படிப் பிரார்த்தனை பண்ண என்னைத் தூண்டியது" என்று அவர் செயலுக்கு அவரே விளக்கம் கொடுத்திருக்கின்றார். அத்தகைய பிரார்த்தனையை நம் நண்பர்கள் பொருட்டு நாம் செய்யலாகாது எனத் தடுப்பது முறையன்று. ஆயினும் பக்தியிலும் ஞானத்திலும் முதிர்ந்து மேலே போகப்போக அத்தகைய பிரார்த்தனைகள் தாமாக நின்றுவிடுகின்றன. இந்தச் சரீர வாழ்க்கையை வைத்துக் கொண்டு "இறைவா, நீ நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்னும் அதீதநிலை தானாக வந்தமைகிறது. பிரபஞ்ச சம்பந்தமான கவலைகளனைத்தையும் கடந்தவர்கள் செயல் அத்தகையதாம்.

கேள்வி: *(283)* தர்ம சக்கரத்தில் கடவுளுக்கு அர்ச்சனை செய்வதைப்பற்றி வெளியாயுள்ள கேள்விக்கு விடை தருகின்றபொழுது சொந்த நலத்துக்கு அர்ச்சனை செய்வதைவிட உலக நன்மைக்கு அர்ச்சனை செய்வது

சிறந்ததென்று தெரிவித்திருந்தீர்கள். இதைக்குறித்து நான் ஒரு பெரியவரிடம் பேசினேன். அவர் இக்கருத்துக்கு ஒத்துக்கொள்ளவில்லை. உலக நன்மையைப்பற்றி மனிதன் கவலைப்பட வேண்டியதில்லை. உலக நடைமுறையை மாற்றியமைக்க அவனுக்கு இயலாது. அவனுடைய குறுகிய பிரயத்தனத்தைக்கொண்டு தன்னுடைய நலத்தையும் தனது உற்றார் உறவினருடைய நலத்தையும்தான் அவன் பெற முடியுமென்று அப்பெரியவர் தெரிவித்தார். எனவே கடவுளிடம் இயலாத காரியத்தைப் பற்றிக் கேட்கலாகாது. இயலுகிற தனது சொந்த நலத்தைப் பற்றி வேண்டிக் கொள்வதுதான் முறை என்று அவர் தெரிவித்தார். அதைப் பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

பதில்: உலகம் யாண்டும் தன்போக்கில் போய்க் கொண்டிருக்கிறது. அதை மாற்றவோ திருத்தியமைக்கவோ மனிதனுக்கு இயலாது என்பது உண்மை. ஆனால் எந்த ஆத்ம சாதகன் பரநலத்துக்கென்று பாடுபடுகின்றானோ அவனடைகின்ற முன்னேற்றம் சுயநலத்துக்காகவென்று பாடு படுகின்றவனுக்கு அமைவதில்லை. சுயநல நாட்டம் மனிதனுக்கு மேலும் மேலும் பந்த பாசத்தை உண்டுபண்ணுகிறது. பர நலத்துக்கென்றே உழைக்கின்றவர்களுக்கு வினைத்தளைகள் கட்டவிழ்ந்து போய்விடுகின்றன. மானுடப் பிறவியின் உயர்ந்த குறிக்கோள் வினைகளையெல்லாம் கடந்து கடவுளை அடைவதாம். கடவுளே வேண்டுதல் வேண்டாமையிலாத அதீத நிலையிலிருக்கிறார். பக்தன் ஒருவன் தனக்கென்று வேண்டு தலைத் தவிர்த்துவிட்டு உலகெலாம் நலனடைந்திருக்கட்டும் என்று வேண்டுதலின் மூலம் பரந்த மனப்பான்மையைப் பெறுகிறான். பிறகு அந்த மனப்பான்மையையும் கடந்துள்ள வேண்டுதல் வேண்டாமையில்லாத அதீத நிலைக்குப் போய்விடு கிறான். தனக்கென்று வேண்டுவதைவிடச் சிறந்தது தன் குடும்பத்துக்கு வேண்டுமென்று பிரார்த்திப்பது. அதைவிட மேலானது தன் ஊரார் அனைவருடைய நலத்துக்காகவென்று பிரார்த்திப்பது. அதிலும் மேலானது தன் நாட்டு மக்கள் அனைவருடைய நலத்துக்காகவென்று வேண்டுவது. உலகனைத்தும் நலனடைய வேண்டுமென்று பிரார்த்திப்பது

பிரார்த்தனைகளுள் உயர்ந்தது. மனிதனுக்குப் பூரண மனபரிபாகம் அத்தகைய பிரார்த்தனையிலிருந்து உண்டாகிறது. உலகத்தை மாற்றியோ, திருத்தியோ அமைப்பதைப் பற்றிய கேள்விக்கு ஈண்டு இடமில்லை. ஆத்ம சாதகன் ஒருவன் எத்தகைய பரந்த மனப்பான்மை உடையவனாக இருக்கவேண்டு மென்பதே கேள்வி. உலக நன்மையை எண்ணியெண்ணிச் சுயநலத்தை மறந்திடுபவனே மேலோன் ஆகிறான்.

கேள்வி: *(284)* இராமலிங்க வள்ளலார் எல்லா உயிர்களும் இன்புற்றிருக்கவேண்டும் என்று பிரார்த்தனை பண்ணினார். ஆனால் அவரே "நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்" என்று தனக்கு மட்டுமே பிரார்த்தனை செய்தார். இது முரண்பட்டதாகக் காணப்படுகிறதே.

பதில்: பக்தன் ஒருவனுடைய மனப்பான்மை யாண்டும் ஒரே பாங்கில் இருப்பதில்லை. வானத்தில் மேகமானது வெவ் வேறு வடிவெடுப்பது போன்று பக்தனுடைய மனதும் வெவ் வேறு நிலைகளை மாறிமாறி எடுத்துக்கொள்கிறது. பக்தன் ஒருவேளையில் ஆனந்தத்தில் மூழ்கியிருக்கிறான். மற்றொரு வேளையில் அவன் அருள்தாகம் எடுத்து ஆறாத் துயரத்தில் ஆழ்ந்து கிடக்கிறான். இத்தகைய முரண்பாடு பக்தன் ஒரு வனிடம் வரலாமா என்று நாம் கேட்பது முறையன்று. ஏனென் றால் பக்தியின் போக்கில் எல்லாவிதமான மனநிலைகளுக்கும் இடமுண்டு. இராமலிங்க வள்ளலார் ஒரு மனநிலையில் இருந்துகொண்டு எல்லா உயிர்களும் இன்புற்று இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை பண்ணினார். மற்றொரு மனநிலையில் இருந்துகொண்டு நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும் என்று பிரார்த்தனை பண்ணினார். அது தம்முடைய சுயநலத்துக்காகச் செய்த பிரார்த்தனை என்று நாம் பொருள் படுத்தலாகாது. நான் என்னும் சொல்லில் அவர் போன்ற பக்தர்கள் உயிர்கள் அனைத்தையுமே ஒன்றுபடுத்திப் பேசுகின் றனர். பக்தி ஓங்குதற்கு ஏற்பச் சுயநலம் தானாக மறைந்துபட்டுப் போகிறது. சுயநலம் படைத்திருப்பவர்களுக்குப் பராபக்தி இல்லை. பராபக்தி ஓங்கி இருப்பவர்களுக்குச் சுயநலம் இல்லை. இதுவே பக்தியைப் பற்றிய கோட்பாடு. ஆதலால் வள்ளலாரிடம்

அவர் பண்ணிய பிரார்த்தனைகளில் முரண்பாடு ஏதும் இல்லை. உயிர்கள் அனைத்தின் பிரதிநிதியாக இருந்து நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும் என்று அவர் பிரார்த்தனை பண்ணினார்.

நான் என்னும் சொல் எல்லாராலும் கையாளப்படுகிறது. ஆனால் அந்தச் சொல்லுக்கு விளக்கம் எல்லார்க்கும் ஒரே பாங்கில் அமைவதில்லை. பெரும்பான்மையோர் நான் என்னும் சொல்லுக்கு இலக்காகத் தங்கள் உடலை வைத்துக்கொள்ளுகின்றனர். இன்னும் சிலர் தங்களுடைய ஜீவவியக்தி முழுதையும் நான் என்னும் சொல்லுக்கு இலக்காக வைத்துக்கொள்ளுகின்றனர். நான் என்னும் சொல்லைக் கிருஷ்ண பரமாத்மா தமது கீதையில் ஏராளமாகக் கையாளுகிறார். ஆங்கு நான் என்னும் சொல் தேவகியின் மகனாகிய கிருஷ்ணனைக் குறிப்பதன்று. அது ஈசுவரனைக் குறிக்கிறது. தத்துவ அமைப்பே அதற்குச் சான்று ஆகிறது. பக்தன் ஒருவன் நான் என்னும் சொல்லைக் கையாளுவானாகில் அவன் அதில் ஜீவகோடிகள் அனைத்தையும் ஒன்றுபடுத்தியே இயம்புகிறான். சூரியனுடைய முன்னிலையில் இருளுக்கு எப்படி இடமில்லையோ அப்படிப் பக்தன் பகரும் நான் என்னும் சொல்லில் சுயநலத்துக்கு இடமில்லை.

கேள்வி: (285) கடவுள் எல்லாரையும் படைத்தார். காப்பாற்றுவது அவர் கடமை. கடவுளிடம் ஒன்றும் கேட்கலாகாது என்ற கொள்கை உண்டு. தேவையானவைகளைக் கடவுளிடம் கேட்கலாகாதா?

பதில்: கடவுள் எல்லாரையும் படைத்தார் என்பது உண்மை. ஆனால் படைப்பின் உட்பொருளை நாம் அறிந்துகொள்ளவேண்டும். குயவன் களிமண்ணுக்குப் புறம்பாயிருந்துகொண்டு அம்மண்ணில் பாண்டங்களை வனைவது போன்று கடவுள் நமக்குப் புறம்பாயிருந்து நம்மைப் படைக்கவில்லை. கடவுள் தாமே உலகனைத்தும் ஆகியிருக்கிறார். ஆதலால் அவர் நமக்குப் புறம்பானவர் அல்லர்; நாம் அவருக்குப் புறம்பானவர் அல்லர். இது கோட்பாடு. அறியாமையினால் நாம் கடவுளுக்குப் புறம்பானவர் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறோம். அவருக்கும் நமக்கும் உள்ள தொடர்பை

அறிதலும், அதில் நிலைபெற்று இருத்தலும் வாழ்க்கையின் குறிக்கோள்.

கடவுள் தாமே உலகனைத்தும் ஆகியிருக்கிறார். உயிர்கள் அனைத்தையும் காப்பாற்றி வருகிறார். பழுதுபட்டுப்போன பழைய உடல்களைக் களைதல் வேண்டும். உடலின் மரணம் அதற்கு உற்ற 'உபாயமாகிறது. ஆதலால் கடவுள் உயிர்களை மரணத்தின் வாயிலாகப் புதுப்பிக்கிறார். இச்செயல் இடையறாது இயற்கையெங்கும் நிகழ்ந்து வருகிறது.

நமக்குத் தேவையானவைகளைக் கடவுளிடமிருந்து கேட்பதைப் பற்றிய கோட்பாடுகள் இரண்டு உள. அவ்விரண்டு கோட்பாடுகளுக்கும் காமியப் பிரார்த்தனை, நிஷ்காமியப் பிரார்த்தனை என்னும் பெயர்கள் வந்துள்ளன. "இறைவா, என்னை நோய் நொடியினின்று காப்பாற்று; எனக்குச் சொத்து சுகத்தைத் தா; ஆயுள் ஆரோக்கியத்தைக் கொடு; உணவு உடை ஆகியவைகளைக் கொடு"-இப்படிக் கேட்பது காமியப் பிரார்த்தனையாகும். பிரார்த்தனைகளுள் காமியப் பிரார்த்தனை மிக மட்டமானது. நாம் கேட்டாலும் கேளாவிட்டாலும் கடவுள் நம்மைப் பேணிவருகிறார். உயிர்கள் அனைத்தையும் பேணிவருகிறார். உலகெங்கும் இவ்வுண்மையை நாம் கண்டு வருகிறோம். பெற்றெடுத்த தாய் தந்தையர் தம்முடைய மக்களைத் தாமாகவே பேணி வருகின்றனர். தங்களை ஆதரிக்க வேண்டும் என்று குழந்தைகள் பெற்றோரிடம் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. பிறந்துள்ள மக்கள் கேளாமலேயே பெற்றெடுத்த உலகத் தாய் தந்தையர் தங்கள் சந்தானத்தைச் சம்ரக்ஷிப்பது போன்று கருணாகரனாகிய கடவுள் உலகனைத்தையும் காப்பாற்றி வருகிறார். உயிர்வகைகள் உய்வு அடைவதற்குப் பஞ்ச பூதங்கள் துணைபுரிவதே இதற்குச் சான்று ஆகிறது. பூதங்கள் மயமாயிருந்து இறைவன் உயிர்களைப் பேணிவருகிறார். பக்தி மார்க்கத்தில் செல்லுகிறவர்கள் கடவுளிடம் காமியப் பிரார்த்தனை பண்ணலாகாது. "இறைவா, என்னை நல்லவனாகத் திருத்தி அமை. எனக்குப் பக்தியையும் ஞானத்தையும் கொடு. என்னிடத்து விவேகத்தையும், வைராக்கியத்தையும் வளர்த்து வா"- இப்படிப் பிரார்த்தனை பண்ணுவது நிஷ்காமியப் பிரார்த்தனையாகும். ஆத்மசாதகர்கள் நிஷ்காமியப்

பிரார்த்தனை மட்டும் செய்கிறார்கள். காமியப் பிரார்த்தனையை அவர்கள் ஒருபோதும் கையாளுவதில்லை. கடவுளிடம் ஒன்றும் கேட்கலாகாது என்பதன் பொருள் அதுவேயாம். பக்தர்கள் கடவுளிடம் ஒன்றும் கேட்பதில்லை. மற்றவர்கள் கேட்கலாம். அதில் இழுக்கு இல்லை. ஆயினும் அதில் உண்மை ஒன்று புதைந்திருக்கிறது. கேட்பவர்களுக்கும் கேளாதவர்களுக்கும் உலக சம்பத்துக்கள் வந்து வாய்க்கின்றன. ஆனால் அதற்கேற்ற முயற்சியெடுத்துக்கொள்வது முற்றிலும் அவசியம். பாடுபடாது உலகப் பொருள்களைப் பெறமுடியாது.

பிறகு பக்தி சாதனத்தில் சாதகன் மேலோங்குகிறபொழுது அவன் நிஷ்காமியப் பிரார்த்தனையையும் நிறுத்தி விடுகிறான். கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணுவதற்குப் பதிலாகத் தன்னுடைய உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் அவன் கடவுளுக்கே அர்ப்பணம் பண்ணுகிறான். அவன் வாழ்ந்திருப்பது கடவுளுக்காக; பணிவிடை பண்ணுவது கடவுளுக்காக. ஆருயிர்ப் பணிவிடை ஆண்டவன் பணிவிடையில் அடங்கி விடுகிறது. கைம்மாறு கருதாது பணிவிடை பண்ணுவது பக்தனுடைய பாங்கு. பகவானுடைய பெருமைகளைப் புகழ்ந்து அதில் பூரித்து இருப்பது பக்தனுடைய பிரார்த்தனை ஆகிறது. எனவே கடவுளிடமிருந்து எதையும் கேட்பதற்குப் பதிலாகத் தன்னிடத்துள்ள அனைத்தையும் பக்தன் கடவுளுக்கு அர்ப்பணிக்கிறான். இந்த நிலையை எட்டுவது வாழ்க்கையின் குறிக்கோள்.

கேள்வி: *(286)* உயிர்களைப் படைத்து நடாத்திச் செல்பவர் கடவுள். மக்கள் தங்கள் ஆசைகள் நிறைவேறப் பிரார்த்தனை செய்வது சரியா?

பதில்: தெரிந்த ஒன்றைக் கொண்டு தெரியாத ஒன்றை ஆராய்ச்சி பண்ணுவது பொருந்தும். குழந்தையொன்று தனக்கு வேண்டிய ஒன்றைத் தாய் தந்தையரிடம் கேட்கிறது. கொடா விட்டால் அது அடம்பண்ணுகிறது. இந்த உரிமை மகவாகப் பிறந்த உயிர் ஒன்றுக்கு உண்டு. அதேவிதத்தில் நமக்கு வேண்டியதைத் தெய்வத்திடத்துப் பிரார்த்தனை பண்ணுவது முறைமை. ஆனால் பிரார்த்தனை பண்ணுவதில் மற்றொரு

முறைமை உண்டு. தெய்வத்திடத்தில் நாம் எதைக் கேட்கிறோமோ அதற்குத் தகுதியுடையவர்களாக நம்மை நாம் செய்து கொள்ளவேண்டும். இதற்கு இரண்டொரு சான்றுகள் எடுத்துக் கொள்வோம். வீட்டு அறையின் கதவு, ஜன்னல்களை மூடி வைத்துக்கொண்டு நல்ல காற்று வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தனை பண்ணுவது மடமை. ஜன்னல்களையும் கதவுகளையும் திறந்துவைத்தால் நல்ல காற்று அறைக்குள் தானாகவே வருகிறது. நீரில் நீந்த விரும்புகிற ஒருவன் வெறும் பிரார்த்தனை பண்ணிக் கொண்டிருந்தால் போதாது. அவன் நீந்திப் பழகவேண்டும். அதற்கிடையில் அத்துறையில் தன் திறமை ஓங்கவேண்டுமென்று பிரார்த்தனை பண்ணலாம். இக் கோட்பாடு கல்வித்துறைக்கும் பொருந்துகிறது. மானுடன் ஒருவன் எதற்குத் தகுதியுடையவனாகத் தன்னைச் செய்து கொள்கிறானோ அதை ஈசன் கொடுத்து உதவுகிறார். ஜீவப் பிரயத்தனமும் ஈசனின் அனுக்கிரஹமும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. ஆதலால் பிரயத்தனம் பண்ணாது வெறும் பிரார்த்தனை மட்டும் பண்ணிக்கொண்டிருப்பது போதாது. பிரயத்தனத்துக்கேற்ற பலனைப் பரமன் கொடுத்து உதவுகிறார்.

கேள்வி: *(287)* ஒரு காரியம் நிறைவேறவேண்டுமெனப் பிரார்த்தனை பண்ணுகிறோம். காரியம் நிறைவேறுகிறது. ஆயினும் பல சோதனைகள் வருகின்றன. ஏன் சோதனைகள் வருகின்றன?

பதில்: உயிர்களனைத்தும் அவரவர் ஆசைகளை நிறைவேற்றுதல் பொருட்டு இவ்வுலகினுள் வந்துள்ளார்கள். பெரும்பாலும் சற்று முன்னது பின்னதாக எல்லாருடைய ஆசைகளும் நிறைவேறப் பெறுகின்றன. அதன் விளைவாகப் புதிய ஆசைகளும் உள்ளத்தில் வடிவெடுத்து வருகின்றன. ஆசைகள் நிறைவேறப் பெறுவதாலேயே எல்லார்க்கும் வாழ்வில் பற்றுதல் மிக உண்டாகிறது. ஆசைகளை நிறைவேற்றுதற்கேற்ற தகுதியுடையவர்களுக்கு வெற்றி விரைவில் கிடைக்கிறது. தகுதியற்றவர்களுக்குத் தகுதியாகும் பரியந்தம் ஆசைகள் நிறைவேறப் பெறமாட்டா. படிப்படியாகத் தகுதியடைந்து வருகின்றவர் காரியம் நிறைவேறப் பெறுவதும் படிப்படியாகவேயாம்.

அப்படிப் படிப்படியாகப் பயன் பெறுவதைச் சோதனை என்கிறோம். சிறு குழந்தைகள் உட்காரவும் எழுந்து நிற்கவும் நடக்கவும் முயலுகின்றன. ஆனால் அந்த முயற்சியில் அவைகள் அடையும் வெற்றி விதவிதமானது. அதற்குக் காரணம் அந்தந்தக் குழந்தை படைத்துள்ள தகுதியேயாம்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ஆகப் பெறின்"

என்பது மறைமொழி. இக்கோட்பாடு வாழ்க்கையில் எல்லாப் படித்தரங்களிலும் எல்லார்க்கும் பொதுவானதே.

இமயமலையில் எவரெஸ்ட் சிகரத்தை எட்டச் சில கூட்டங்கள் சில ஆண்டுகளாக முயன்று வந்தன. ஆறாவதோ ஏழாவதோ கூட்டந்தான் இறுதியில் அம்முயற்சியில் வெற்றி கண்டது. ஏனைய கூட்டங்கள் அடைந்த தோல்விக்குக் காரணம் யாது என்று ஆராய்ச்சி செய்யப்பட்டது. முதல் கூட்டம் செய்த பிழையை இரண்டாவது கூட்டம் திருத்தியமைத்தது. இரண்டாவது கூட்டம் செய்த பிழையை மூன்றாவது கூட்டம் திருத்தியமைத்தது. இங்ஙனம் ஒவ்வொரு தோல்வியும் அடுத்த வெற்றிக்கு முகாமையாயிற்று.

வாழ்வு என்பது இடையறாத முயற்சியாம். முயற்சியில் தோல்வியும் வெற்றியும் மாறிமாறி அமைவது இயல்பு. இங்ஙனம் உயிர்களனைத்தும் ஒரே லட்சியத்தை நாடிப் பலப்பல துறைகளில் பலப்பல முறைகளில் முயன்று வருகின்றன. அதன் வாயிலாக அனுபவமும் அறிவும் வளர்கின்றன. நல்ல அறிஞன் நல்லமுறையில் முயன்று உடனுக்குடனே வெற்றி காண்கிறான். ஏனையவர்கள் தோல்வியின் வாயிலாக அனுபவத்தையும் அறிவையும் புதியதாகப் பெற்றுவருகிறார்கள். இறுதியில் எல்லாரும் ஏதேனும் ஒரு பாங்கில் பக்குவப்பட்டு முன்னேற்றமடைவது திண்ணம். இதுவே வாழ்க்கையைப்பற்றிய கோட்பாடாம்.

கேள்வி: *(288)* இக்காலத்தில் ஒரு காரியம் நிறைவேற வேண்டுமெனில் கைக்கூலி கொடுக்கின்றோம். அதற்கு நிகராகக் கடவுளிடத்தில், காணிக்கை செலுத்துவதாகப்

பிரார்த்தனை பண்ணுகிறோம். இது பொருத்தமானதா? இல்லையா?

பதில்: மனிதனுக்குக் கைக்கூலி கொடுப்பதும் கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவதாகப் பிரார்த்தனை பண்ணுவதும் ஆகிய இரண்டு செயல்களும் பாராட்டத்தக்கவைகள் ஆகமாட்டா.

என்றைக்கு அரசாங்கம் வாக்காளர்களின் வாக்கைப் பெறுவதற்குக் கைக்கூலி கொடுக்க ஆரம்பித்ததோ அன்றைக்கே சமுதாயத்தில் கேடுகள் அதிவிரைவில் வடிவெடுக்கலாயின. கைக்கூலி வாங்கிக்கொண்டு காரியங்களை நிறைவேற்றி வைப்பது இன்றைக்குச் சர்வ சாதாரணமாய்விட்டது. பணம் படைத்திருப்பவன் நலம் கேடு ஆகிய எதை வேண்டுமென்றாலும் சாதிக்கலாம் என்னும் எண்ணம் சமுதாயத்தில் வலுத்து வருகிறது. ஆயினும் நலனைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்க முடியாது. நல்ல செயல்களுக்கு முட்டுக்கட்டை போன்று இடைஞ்சல்களை அகற்றுதற்கு மட்டும் கைக்கூலி பயன்படுகிறது. அதற்குமேல் மனிதனிடத்து இயல்பாக அமைந்திருக்கும் மேலான நோக்கமே அவனை நலனில் தூண்டுகிறது. கைக்கூலி அதற்கு உதவமாட்டாது. நல்லியல்பு படைத்திருக்கிற மேலோனுக்குக் கைக்கூலி கொடுக்க முயன்றால் அவன் அதை ஆமோதிக்க மாட்டான். தன் போக்கில் செய்யவேண்டிய நலனையும் செய்ய அவன் மறுத்துவிடுவான். எனவே நல்லார்க்கிடையில் கைக்கூலி ஒருபொழுதும் ஆதிக்கம் செலுத்தமாட்டாது.

உலகக் காரியங்களுக்கு உலகப் பற்றுதலில் உழன்று வருகிற மக்களுக்கிடையில் கைக்கூலி கொடுத்து விரும்பியதையெல்லாம் சாதிக்கலாம். நலன் ஒன்று மட்டும் அப்பாங்கில் நிறைவேறாது. இன்றைக்கு நம் நாட்டிலுள்ள ஆட்சிமுறையை மாற்றி அமைத்தாலொழியக் கைக்கூலி வாங்கிக்கொண்டு காரியங்களைச் செய்துகொடுக்கும் தீமையை அகற்ற முடியாது.

நல்லார்க்கு எங்ஙனம் கைக்கூலி கொடுத்து எக்காரியத்தையாவது சாதிக்க முடியாதோ அதே பாங்கில் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தி அவருடைய அருளைப் பெறமுடியாது. மக்களில் சிலர் கோயிலுக்குச் சென்று கோரிக்கை செய்யவும், அது நிறைவேறுதல் பொருட்டுக் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தவும் பிரார்த்தனை பண்ணிக்கொள்ளுகிறார்கள்.

பண்ணிய பிரார்த்தனைப் பிரகாரம் காரியம் நிறைவேறினால் காணிக்கையையும் செலுத்துகிறார்கள். மற்று காணிக்கை செலுத்தியதின் விளைவாகக் காரியம் ஒன்று நிறைவேறிற்று எனக் கருதுவது பிழை. காணிக்கை செலுத்தாதிருந்தாலும் நிறைவேற்று தற்குரிய காரியங்கள் தாமாகவே நிறைவேறுகின்றன. அது மனிதனுடைய தகைமையைப் பொறுத்ததாம்; ஒருநாளும் செய்கிற' காணிக்கையைப் பொறுத்தது அன்று.

இனி, அறிவுடையோர் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தி ஒரு காரியம் நிறைவேற வேண்டுமென்று ஒருநாளும் பிரார்த்தனை பண்ணமாட்டார்கள். "இறைவா, இன்ன காரியத்தில் நான் ஈடுபடுகிறேன். அது எனக்கு நலம் தருமாகில் உன்னுடைய திருவுளம் அதற்கு ஒத்ததாயிருக்குமாகில் அக்காரியம் இனிது நிறைவேறட்டும்" என்பதுதான் அறிஞர்கள் செய்யும் கோரிக்கையாகும்.

பாமரர்க்கிடையில் சிலர் காணிக்கை செலுத்திப் பிரார்த்திப்பதுதான் முறை என்று கருதுகின்றனர். அத்தகைய நம்பிக்கை உடையவர்களுக்கிடையில் அறிஞர்கள் ஏதேதோ சொல்லிக் குழப்பத்தை உண்டுபண்ணலாகாது. மனிதன் எதற்குத் தன்னைத் தகுதியுடைவனாகப் பண்ணிக்கொள்ளுகிறானோ அதுவே அவனுக்குத் தற்செயலாய் வந்து வாய்க்கிறது. கடவுள் சகாயத்தால் அது வந்து வாய்த்தது என்று கருதுதலில் பிழையில்லை.

கேள்வி: *(289)* இறைவனுக்கு நன்றி கூறலைப்பற்றிய குறிப்புகள் அனைவரும் படித்து உணரவேண்டிய அற்புதக் கருத்துக்கள். ஆனால்,

1. கீதையில் இறைவன் நான்குவித மக்கள் என்னைப் பஜிக்கின்றனர் என்று சொல்லி ஆர்த்தனை முதலாவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2. ஹிந்து சமயத்தினர் கோடானுகோடி பேர்கள் திருப்பதி, பழனி போன்ற ஸ்தல தேவதைக்கு வேண்டிக் கொள்வதும் வேண்டுதலை நிறைவேற்றுதலும் சர்வ சாதாரண விஷயமாயிற்றே. இந்தச் சம்பிரதாயத்தை நீக்கி விடுவது பொதுநலமாகுமா? பல மக்களுடைய சிறு தெய்வ

விசுவாசத்தையும் குலைப்பது சரியாகுமா? இது குறித்து தங்கள் கருத்து யாது?

பதில்: இக்கேள்வியில் எழுந்துள்ள கோரிக்கை முதலியவைகளைக் காமியப் பிரார்த்தனை என்ற தர்ம சக்கரத்தின் அதே இதழில் பாகுபடுத்தியிருக்கிறோம். பெரும்பாலோர் காமியப் பிரார்த்தனைக்கே தகுதியுடையவர்கள். நிஷ்காமியப் பிரார்த்தனையில் ஈடுபடுவர்கள் மிகமிகச் சிலரே.

न बुद्धिभेदं जनयेत् अज्ञानां कर्मसङ्गिनाम् ।

என்பது கீதையில் பகவானுடைய வாக்கு. அவிவேகத்தால் கர்மப்பற்று வைத்திருக்கும் பாமரருடைய உள்ளத்தில் மனக் குழப்பத்தை உண்டுபண்ணி விடலாகாது என்பது அதன் கருத்து. காமியப் பிரார்த்தனை பண்ணுகிறவர்கள் தங்கள் போக்கில் அங்ஙனம் செய்து கொண்டிருக்கட்டும். நாளடைவில் காமியப் பிரார்த்தனையை ஒதுக்கி வைத்துவிட்டு அதைவிட மேலானதாகிய நிஷ்காமியப் பிரார்த்தனைக்கு அவர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள் என்பது அதன் கருத்து.

பிறவிப் பிணி வேண்டாமென்றும், துக்கம் நிறைந்த இவ்வுலக வாழ்க்கை வேண்டாமென்றும் விண்ணப்பிக்கின்றவர்களைத்தான் சரியான ஆர்த்தன் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வுலக வாழ்க்கையே வேண்டும், அது துன்பம் கலவாததாக இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றவன் சரியான ஆர்த்தன் ஆகமாட்டான். பொருள் தனக்கு வேண்டுமென்று கேட்கின்றவன் நல்ல அர்த்தார்த்தி அல்ல. அவன் சுயநலத்தைப் பெருக்குகின்றான். சுயநலத்தைப் பெருக்குவது கடவுள் வழிபாட்டுக்குப் புறம்பானது. சுந்தரமூர்த்தி நாயனார் கடவுளிடமிருந்து செல்வம் கேட்டார். ஆனால் அதைத் தமக்கென அவர் கேட்கவில்லை. அடியார்களுடைய கைங்கர்யத்துக்கென்றே கடவுளிடம் போராடி அதைக் கேட்டார். அந்தப் பாங்கில் கடவுளிடம் செல்வம் கேட்பதில் குறையில்லை. தான் உண்டு உடுத்துக் களித்திருக்க வேண்டும் என்னும் கீழான நோக்கத்துடன் கடவுளிடம் பொருளுக்காக விண்ணப்பிப்பது கயவர் செயல். பக்தர்கள் அங்ஙனம் செய்யலாகாது.

இனி, தர்மப்பிரசாரம் செய்கின்றவர்கள் காமியப் பிரார்த்தனையில் ஈடுபடுவது மிகக் கீழ்த்தரமானதென்றும்,

அதினின்று நிலைத்த நலன் மனிதனுக்கு ஏற்பட்டுவிடாது என்றும் யுக்திபூர்வமாக மக்களுக்கு எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றனர். தங்கள் முயற்சியால் பெறக்கூடியதைக் கடவுளிடமிருந்து கேட்கலாகாது. என்பதைத் திரும்பத்திரும்ப மக்களுக்குக் காட்டித்தருவது நம் கடமையாகும். கடவுள் நமக்குச் செல்வத்தைக் கொடுத்திருக்கிறார், சுகத்தைக் கொடுத் திருக்கிறார், ஆரோக்கியத்தைக் கொடுத்திருக்கிறார் என்கின்ற எண்ணங்களை எவ்வளவுக்கெவ்வளவு ஒதுக்கி வைக்கின் றோமோ அவ்வளவுக்கவ்வளவு நம்முடைய விவேக வளர்ச்சிக்கு அது பெரிதும் பயன்படும். சிற்றுயிர்கள் தம் போக்கில் வேண்டிய, தமக்கேற்ற செல்வங்களைப் பெற்றிருக்கின்றன. சுகத்தையும் ஆரோக்கியமான வாழ்க்கையையும் அவைகள் பெற்றிருக்கின்றன. இவைபோன்று அற்ப உலக சம்பத்துக்களைக் குறித்துக் கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணுவதும், பிறகு அதற்கு நன்றி கூறுவதும், அந்த நன்றியைப் பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்வதும் விவேகமற்ற விளையாட்டுப் பிள்ளை களின் செயலாகும். நன்னெறியில் செல்லுகின்றவர்கள் அத்த கைய சிறுநெறி சாரலாகாது என்றும் அதில் திருப்தியடைந் திருக்கலாகாது என்றும் காட்டித் தருவது சான்றோர் கடமையாகும்.

கேள்வி: *(290)* "இறைவா, இன்றைக்குரிய அப்பத்தை எமக்குத் தாரும்" என்ற பிரார்த்தனையை ஏன் செய்ய லாகாது?

பதில்: பிரார்த்தனையைக் கடவுளிடம் செய்கிறோம். அப்படிச் செய்வதில் இரண்டுவிதம் உண்டு. ஒன்று காமியப் பிரார்த்தனை; மற்றது நிஷ்காமியப் பிரார்த்தனை. ஆத்மசாத கர்கள் நிஷ்காமியப் பிரார்த்தனை மட்டும் செய்யவேண்டும். "ஈசா, எனக்குப் பக்தியைத் தா; ஞானத்தைத் தா; நல்லொழுக் கத்தைத் தா; கீழான இயல்புகள் என் உள்ளத்தினின்று எடுபட்டுப் போகும்படி அனுக்கிரஹம் பண்ணு; பாரமார்த்திக நாட்டம் என்னுள்ளத்தில் வளர்ந்து கொண்டேயிருப்பதற்கு அருள்புரிவாயாக!"-இத்தகைய பிரார்த்தனை நிஷ்காமியப் பிரார்த்தனை ஆகிறது. இவைகள் மூலம் ஆத்மசாதகன் கடவுள்

நாட்டத்தில் மேலோங்குகிறான். இப்பண்புகளைப் பெறுதற்கு மானுட முயற்சியும் வேண்டும். இறைவனுடைய அனுக்கிரஹமும் வேண்டும். கடவுளுடைய அருள் மானுட முயற்சிக்கு உறு துணையாகுமாகில் சாதனம் எளிதில் கைகூடுகிறது. மனதின் சிற்றியல்புகளை ஒதுக்கித் தள்ளுவது சுலபமாகிறது. கடவுள் நாட்டம் பூண்ட மேலோர்கள் எல்லாரும் நிஷ்காமியப் பிரார்த் தனையிலேயே கருத்தைச் செலுத்தினர்.

மனிதன் தன்னுடைய முயற்சியால் பெறக்கூடிய ஒன்றைப் பிறரிடமிருந்து தானமாக ஏற்பது பொருந்தாது. தன்னுடைய முயற்சியால் பெறக்கூடிய ஒன்றைத் தெய்வத்திடமிருந்து வரமாகக் கேட்பதும் பொருந்தாது. குழந்தையொன்று தாய் தந்தையரிடம் கெஞ்சிக் கேட்டாலும், கேளாதிருந்தாலும் அக்குழந்தைக்குத் தேவையாயுள்ள உணவைப் பெற்றோர்கள் பாங்குடன் படைக்கின்றனர். உணவு படைக்க அவர்கள் கடமைப்பட்டிருக்கின்றனர். படைத்த உணவுக்குக் குழந்தை யானது தாய் தந்தையருக்கு நன்றி செலுத்துவது பொருளற்றது. சின்னஞ்சிறு வயதில் உணவுக்காகப் பெற்றோரைச் சார்ந்து இருப்பது பிள்ளைகளின் பாங்கு ஆகும். வயது முதிர்ந்த பிறகு தாங்களே பொருள் சம்பாதித்து உணவைத் தேடிக் கொள்ளவேண்டும். வயது முதிர்ந்தவர்கள் பொருள் சம்பாதியா திருப்பதும், போஷணைக்காகப் பிறரைச் சார்ந்து இருப்பதும் பாராட்டத்தக்க பான்மை ஆகாது. விருத்தாப்பிய தசையிலுள்ள தாய் தந்தையருக்கு உணவும் உடையும் கொடுத்து அன்புடன் அவர்களை ஆதரிப்பது மைந்தர்களுடைய கடமை ஆகிறது. அப்படி அவர்கள் செய்கிற கடமைக்குப் பெற்றோர்கள் நன்றி செலுத்த வேண்டிய அவசியமில்லை. நன்றி செலுத்துவது மேல்நாட்டுப் பழக்கவழக்கம். ஆதரித்து வருவதற்காகப் புதல் வனுக்கோ, புதல்விக்கோ பெற்றோர் நன்றி செலுத்துவது இந்தியப் பண்பு அன்று.

இனி, கடவுளிடம் இன்றைக்குரிய உணவை எங்களுக்குத் தாரும் என்று பிரார்த்தனை பண்ணுவது பொருளற்றது. நடப்பன, பறப்பன, நீந்துவன ஆகிய உயிர் வகைகள் அனைத் துக்கும் உணவு அகப்படுகிறது. அப்படி அது அகப்படுவது இறைவனை வேண்டுவதால் அன்று. அந்தந்த உயிர் எடுத்துக்

கொள்ளுகிற முயற்சியின் விளைவாக உணவு கிடைக்கிறது. முயற்சி எடுத்துக்கொள்ளாது, "இன்றைக்குரிய அப்பத்தை எமக்குத் தாரும்" என்று பிரார்த்தனை பண்ணினால் கடவுள் உணவை அனுப்பி வைப்பாரா? அவர் ஒருபொழுதும் அப்படிச் செய்வதில்லை. பிரார்த்தனை பண்ணினாலும் சரி, பண்ணாவிட்டாலும் சரி, உணவுக்காக முயற்சி எடுத்துக்கொள்ளுகிறவர்களுக்கு அது அகப்படுகிறது. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் முயற்சியால் அது அகப்படுகிறது. முயற்சியால் பெறுகிற ஒன்றை விண்ணப்பித்துப் பெறுவது பொருளற்றது. விண்ணப்பம் செய்கிறவர்களுக்கெல்லாம் உணவு அகப்படுகிறது என்பது உண்மையன்று. விண்ணப்பித்த மாத்திரத்தில் உணவு அகப்படுகிறதென்றால் பலபேர் சோம்பேறிகளாகிவிடுவார்கள். அன்னவர்கள் விண்ணப்பித்து உணவு உண்டுவிட்டு, வெறுமனே அமர்ந்து இருப்பர். அப்படிச் சோம்பலுற்றிருப்பது சரியன்று. முறையாகப் பாடுபட்டுச் சம்பாதித்து உணவு உண்பது முறைமை. தான் தேடிய உணவுக்குக் கடவுளுக்கு நன்றி செலுத்துவது மேல்நாட்டவர்களுடைய போக்கு. அப்படி நன்றி செலுத்துவதும் பொருளற்றது. உணவு கிடையாது கணக்கற்ற பேர் பட்டினி கிடக்கின்றனர். அத்தகையவர்களுக்கு உணவை வழங்காது பணம் படைத்திருக்கிற ஒரு கூட்டத்துக்கு கடவுள் உணவு படைக்கிறார் என்னும் குருட்டு நம்பிக்கையை வைத்துக் கொண்டு அவருக்கு நன்றி செலுத்துவது அவரை ஏளனம் பண்ணுவதற்கு நிகராகும். மேல்நாட்டவர்களுள் மத அனுஷ்டானம் பண்ணுகிறவர்கள் உணவுக்காகக் கடவுளிடம் விண்ணப்பம் செய்வதையும், உண்ட உணவுக்குக் கடவுளிடம் நன்றி செலுத்துவதையும் ஒரு மதச்சடங்காக அனுஷ்டித்து வருகின்றனர். நாம் அதை ஆமோதிப்பதில்லை. கடவுளுக்கும் நமக்கும் உள்ள இணக்கம் உணவு ஒப்பந்தத்தைப் பொறுத்ததன்று; உணவு ஒப்பந்தம் எந்த உயிர்க்கும் தேவையில்லை. ஒப்பந்தமில்லாமலேயே உயிர்கள் அனைத்தும் வாழ்ந்து வருகின்றன. நம் உயிர்க்கு உயிராய் இருப்பவர் கடவுள். நம் அறிவுக்கு அறிவாய் இருப்பவர் கடவுள். அப்பேரிணக்கத்தை நிலை நாட்டுவது கடவுள் வழிபாடு ஆகும். அவரிடம் அப்பம் கேட்பது பொருளற்றது.

கேள்வி: *(291)* சென்னையிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரி பத்திரிகைகளில் நன்றி கூறல் (Thanks Giving) என்ற தலைப்பில் கீழே கண்ட விவரப்படி தினசரி வருகிறது. ஹிந்துக்களை மூட நம்பிக்கை உள்ளவர்கள் என்று கூறும் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளின் சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு காண்கிறது. ஒரே நபர், ஒரே பத்திரிகையில், ஒரே விஷயத்திற்கு, இரண்டு நாள் பத்திரிகையில் அடுத்தடுத்து நன்றி கூறியுள்ளார்; மேலும் கூறிக்கொண்டே வருகிறார். ஒரு நபர் முதல்நாள் தன் மகன் குணமடைந்ததற்கும், மறுநாள் தன் மகள் குணமடைந்ததற்கும் "Our long delayed..." என்றும் குறிப்பிடுகிறார். இதன் உட்கருத்தையும் நோக்கத்தையும் விளக்கக் கோருகிறேன்.

"The Mail" dated July 23,1956.

1. "Most grateful thanks to sister Alphonsa and Saint Pius X for favours."

2. "Our grateful thanks to Rev. Fr.Baker for the miraculous recovery of our son Loy"

"The Mail" dated July 24,1956.

1. "Most grateful thanks to Sister Alphonsa and Saint Pius X for favours"

2. "Our long delayed but heartfelt thanks to Rev. Fr. Baker for the miraculous recovery of our daughter Molly."

பதில்: பிரார்த்தனை என்பது எல்லாச் சமயங்களுக்கும் ஒப்பமுடிந்த ஆத்ம சாதனமாகும். பிரார்த்தனையின் மூலம் ஜீவாத்மாக்கள் பரமாத்மாவோடு தொடர்பு வைக்கின்றன. பிரார்த்தனையில் இரண்டு பிரிவுகள் உண்டு. நிஷ்காமியப் பிரார்த்தனை ஒரு பிரிவு. அது மிக மேலானது. முற்றிலும் மனபரிபாகம் அடைந்தவர்களே நிஷ்காமியப் பிரார்த்தனை பண்ணுகிறார்கள். பக்தி வேண்டும், ஞானம் வேண்டும், ஈசுவரனுடைய அருள் வேண்டும். இப்படியெல்லாம் வேண்டுவது நிஷ்காமியப் பிரார்த்தனையாகும். கடவுளின் அருளை உள்ளபடி அறிகின்ற ஜீவன் தனக்கு ஆயுள்வேண்டுமென்றோ, இவ்வுலக இன்பங்கள் வேண்டுமென்றோ, நோயற்ற வாழ்வுவேண்டும்

என்றோ பிரார்த்திப்பதில்லை. தனக்கு அற்ப ஆயுள் அமைந்திருந்தால் அதைக் குறித்துப் பக்தன் வருந்துவதில்லை. இவ்வுலக வாழ்க்கையில் அவன் வறுமையே வடிவெடுத்திருந்தாலும் அதைக்குறித்து அவனுக்குக் கவலை ஒன்றுமில்லை. உடல் நோய்வாய்ப்பட்டிருப்பதைக் குறித்து அவன் சஞ்சலப்படுவதும் கிடையாது. இவ்வுலக வாழ்க்கையில் என்னைக் கருவியாக வைத்துக்கொண்டு, "ஈசா நீ நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்பது மெய்யன்பனுடைய பிரார்த்தனையாகும்.

இனி, காமியப் பிரார்த்தனை என்பது அடுத்த படியில் வருகிறது. உலகப்பற்றுடையவர்கள் காமியப் பிரார்த்தனையைத் தான் செய்வார்கள். செல்வம் வேண்டும், ஆயுள் ஆரோக்கியம் வேண்டும், நோயினின்று குணம் பெறவேண்டும். இப்படியெல்லாம் உலகப் பற்றுடையவர்கள் கடவுளிடம் பிரார்த்திப்பார்கள். அப்படிப் பிரார்த்தனை பண்ணுவதால் அந்தப் பிரார்த்தனைகளுக்கெல்லாம் கடவுள் செவிசாய்க்கிறார் என்பது உண்மையல்ல. ஒரு ஜீவனுக்கு இவ்வுலக வாழ்க்கையிலேயே எத்தருணத்தில் எது தேவையோ அதை மட்டும் கடவுள் கொடுத்தருள்கின்றார். மனிதன் வேண்டியதையெல்லாம் கடவுள் கொடுப்பதில்லை. வேண்டியது ஒன்றைக் கடவுள் கொடுத்தருளாது போய்விட்டால் இறுதியில் அதுவும் தன்னுடைய நன்மைக்கென்றே மனம் தெளிந்திருப்பது கடவுள் நம்பிக்கை வைத்திருப்பவர்களுடைய கடமையாகும். ஆபத்தான நேரங்களில் வருந்திக்கொண்டிருக்கும் பல உயிர்கள் கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணினாலும் பண்ணாவிட்டாலும் அந்நோய்களினின்று விடுபடுவதை உலக நடைமுறையில் காணலாம். கடவுளிடத்து ஓயாது பிரார்த்தனை பண்ணியபிறகும் சிலர் நோயினின்று தப்பித்துக்கொள்ளாது மாண்டு போவதையும் காணலாம். நோயினின்று தப்பித்துக்கொண்டதனால் கடவுள் கிருபை புரிந்திருக்கிறார் என்று பகர்வது கடவுளிடத்துள்ள ஒரு குறைபாட்டை மறைமுகமாக விளம்பரப்படுத்துவதாகும். பிரார்த்தனை பண்ணுகின்ற எல்லாரும் நோயினின்று தப்பித்துக் கொள்வதில்லை. அப்பொழுது கடவுள் அந்நோயை நீக்க வல்லமையற்றவராய்ப் போய்விட்டார் என்று முடிவுகட்ட வேண்டிவரும்.

பிரார்த்தனைகளையெல்லாம் அமைதியாகவும் ஆடம்பரமின்றியும் விளம்பரமின்றியும் தன் மனதுக்குள்ளேயே செய்து கொண்டால் போதும். அதைக் கடவுள் அறிகிறார் என்று ஆன்றோர்கள் அனைவரும் பகர்ந்திருக்கின்றனர். ஏசுநாதரும் அங்ஙனமே பகர்ந்திருக்கின்றார். பொய் வேஷக்காரர்கள் நடுவீதியில் நின்றுகொண்டு விளம்பரத்துக்காக என்று பிரார்த்தனைகள் செய்வார்கள். அது கடைத்தரமான வழிபாடு. பக்தன் ஒருவன் அத்தகைய ஆடம்பரமான விளம்பரம் நிறைந்த வணக்கங்களில் ஈடுபடலாகாது என்று ஏசுநாதர் எச்சரிக்கை மிகச் செய்திருக்கிறார். பத்திரிகைகளில் இத்தகைய விளம்பரங்கள் போடுகின்றவர்கள் கடவுளுக்கு உகந்த பக்தர்கள் ஆகமாட்டார்கள். தங்களிடத்துச் சிறப்பான பக்தி இருக்கிறதென்றும், கடவுளுடைய அருளும், சான்றோர்களுடைய ஆசிகளும் தங்களுக்குச் சொந்தமாய் இருக்கிறதென்றும் விளம்பரம் பண்ண விரும்புகின்றவர்களே இப்படிச் சமாசாரப் பத்திரிகைகளில் பொருளற்ற விஷயங்களை வெளியிடுவார்கள். இது ஏசுநாதருடைய போதனைக்கு முரண்பட்டது. ஒரு மனிதன் எந்த மதத்தைச் சேர்ந்திருக்கின்றான் என்பது பெரிதல்ல; எத்தகைய மனப்பான்மை படைத்திருக்கிறான் என்பதே மிக முக்கியமானது. ஈண்டு எடுத்துக்காட்டியுள்ள சமாசாரப் பத்திரிக்கை விளம்பரம் போலி பக்திக்கு எடுத்துக்காட்டாகும். மெய்யன்பர்கள் இத்தகைய செயல்களில் ஒருபொழுதும் ஈடுபடமாட்டார்கள். விளம்பரமின்றி இறைவனுடைய அருளை நாடி இறைவன் நமக்கு எதைச் செய்துவைத்தாலும் அது நம்முடைய நலத்துக்காகத்தான் என்று மனம் தெளிந்திருப்பதே மெய்யன்பர்களுடைய செயல் ஆகும்.

கிறிஸ்தவர்களுக்கிடையில் மற்றொரு நம்பிக்கையுண்டு. தாங்கள் வணங்கும் தெய்வம்தான் மெய்யான கடவுளாம். அவரை வணங்காதவர்களுக்கெல்லாம் செத்த பிறகு விமோசனம் கிடையாது என்பது அவர்களுடைய கொள்கை. அந்த மெய்யான கடவுள் கிறிஸ்தவர்கள் எல்லார்க்கும் நோய் வராது தடுக்கவும், கூன், குருடு, செவிடு, பித்து முதலியன இல்லாது கிறிஸ்தவர்களைச் சிருஷ்டிக்கவும் செய்து வருவாராகில் அந்த மெய்க்கடவுளின் ஆற்றலுக்கும் கருணைக்கும் அது நல்ல

எடுத்துக்காட்டு ஆகும்., மற்றவர்களைச் சத்திய வேதத்துக்கு அழைத்துச் செல்வதற்கும் அது சிறந்த உபாயமாகும். மறுமையில் கிறிஸ்தவர்களை மட்டும் காப்பாற்றுதற்கென்று காத்திருக்கிற மெய்க்கடவுள் இம்மையில் இந்தச் சிறிய உதவியை ஏன் செய்யாதிருக்கிறார்? ☆

12. சரணாகதி

கேள்வி: *(292)* "எச்சில் இலையைப்போல இவ்வுலகத்தில் வாழ். அது காற்றின் வசப்பட்டுள்ளது. சில வேளைகளில் வீட்டுக்குள்ளேயும் வரும். சில வேளைகளில் அசுத்தமான இடங்களுக்கும் போகும். இப்போது நீ இங்கிருக்கும்படி ஏற்பட்டிருக்கிறது. சரியென்று திருப்தியோடு இரு. ஈசுவரன் உன்னை இதைக்காட்டிலும் நல்லதான வேறிடத்தில் கொண்டுபோய் வைத்தால் அப்போது 'சித்தம்' என்று அங்கும் இருக்கவேண்டும். கொஞ்சங்கூடப் பந்தப்படாமல் அவனுடைய இச்சைப் பிரகாரமே நடக்க உட்படு. எல்லாக் காரியங்களும் யதாக்கிரமமாக நிகழட்டும்" என்று பகவான் சொல்லுகிறார். இதை அனுசரிக்கும்போது ஸத் கர்மங்களைப்பற்றி எந்தவிதமாக நினைத்து எப்படித் தொழில் செய்யவேண்டும்?.

பதில்: பரமஹம்சர் பகர்ந்துள்ள இந்த உபதேச மொழி கடவுளிடம் அடைக்கலம் புகுந்துள்ளவர்களுக்குப் பொருந்துகிறது. கடவுளிடம் அடைக்கலம் புகுதல் ஆத்ம சாதனத்தின் முடிவான செயல் ஆகிறது. ஆத்ம சாதனத்தின் ஆரம்பதசையில் இருப்பவர்களுக்குத் தாங்கள் இன்னதைச் செய்யவேண்டும், இன்னதைச் செய்யலாகாது என்கின்ற ஞான விசாரம் இருக்க வேண்டும். கேடுடையவைகளை அறவே அகற்றிவிட அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்; நலத்தைத் தீவிரமாக நாடுவதும் அவர்களுடைய பொறுப்பு ஆகிறது. ஸத் கர்மங்களைச் செய்தலிலேயே நாம் கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும். விளக்கப்பட்டுள்ள கர்மங்களை அறவே ஒதுக்கிவிடவேண்டும். கடவுள் சாந்நித்தியத்துக்குப் பக்கத்தில் போகும்பொழுது நலம்,

கேடு ஆகிய இரண்டும் ஒரேபாங்கில் காட்சிகொடுக்கும். மலையுச்சியிலிருந்து சம தரையைப் பார்த்தால் கீழே உள்ள மேடு மடுவெல்லாம் ஒப்பமாய் இருப்பவை போன்று தென்படும். ஆனால் கீழே தரையில் நடந்துகொண்டு இருப்பவர்களுக்கு மேட்டுக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் நன்கு தென்படும். நல்வினை தீவினை ஆகிய இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் நமக்கு இப்பொழுது நன்கு புலப்படுகின்றது. தீவினையை அகற்றி நல்வினையைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பது நம் கடமை. கடவுளின் அருகில் சென்று நம்மை நாம் அவரிடம் ஒப்படைத்து விடுகின்றபொழுது எச்சில் இலையைப் போன்று இருக்கின்ற கோட்பாடு பொருந்தும். நம்மைக்கொண்டு அவர் எதைச் செய்துகொண்டாலும் அது அவருடைய திருவுளத்தின் திட்டம் என்பது நமக்கு விளங்கும். 'நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்னும் கோட்பாடும் அப்பொழுது நன்கு விளங்கும். ☆

13. வாழ்க்கை நடைமுறைத் தத்துவம்

கேள்வி: ***(293)*** **வாழ்க்கைத் தத்துவம் நம் வாழ்க்கை யின் குறிக்கோளாகுமா?**

பதில்: இன்புற்றிருப்பது பெரும்பான்மையோருக்கு வாழ்க் கையின் குறிக்கோளாகிறது. இன்புற்றிருப்பதற்கு ஏதுவாயுள்ள பொருள் வசதி, இட வசதி, சூழ்நிலை வசதி ஆகியவைகளை அவர்கள் தேடிக்கொள்கின்றனர். வாழ்க்கையில் அத்தகைய அமைப்பு வாய்க்குமானால் அது போதும் என்று அதிலேயே அவர்கள் நாட்டம் கொள்கின்றனர். ஆனால் அத்தகைய கொள்கை வாழ்க்கைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தன்று. தனியாக இன்புற்று வாழ்ந்திருக்க நாடுவது மனிதன் ஒருவனுடைய நாட்டமன்று. உயிர்வகைகள் அனைத்தும் இன்பத்தை நாடுகின்றன. அவ்வுயிர்கள் அனைத்துக்கும் அந்த நோக்கங்கள் ஒருவாறு நிறைவேறுகிறது.

மற்று, மானுட வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் இன்புற்றிருப்பது அன்று. வாழ்க்கையை மேலாம் வாழ்க்கை யாகப் படிப்படியாகப் பண்படுத்துவதே பாராட்டத்தக்க குறிக் கோளாகும். கல்வி கற்கப் பள்ளிக்கூடத்துக்குப்போவது சிறு வர்கள் சிலர்க்குத் துன்பமாகத் தோன்றுகிறது. வீட்டில் விளை யாடிக்கொண்டிருப்பதில் அவர்கள் இன்பம் காண்கின்றனர். இத்தகைய இன்பம் பாராட்டத்தக்கதன்று. மனிதன் மேல் நிலைக்குப் போக இத்தகைய இன்பம் உதவாது. புலனடக்கம் பழகுதலில் பலர் ஈடுபடுவதில்லை. மனம்போன போக்கிலேயே வாழ்வை அவர்கள் கொண்டு செலுத்துகின்றனர். ஐம்பொறிகள்

வாயிலாக இன்புற்று இருப்பதிலேயே மனது அவர்களைத் தூண்டுகிறது. அப்படிப் பெறுகிற இன்பம் மனிதனைப் படிப் படியாகக் கீழ்மையில் ஆழ்த்துகிறது. வாழ்க்கைக்குத் தேவையா யுள்ள வசதிகளையெல்லாம் தேடி வைத்துக்கொண்டு சுக ஜீவனம் பண்ணுபவர்கள் இருக்கிறார்கள். அத்தகைய சுக ஜீவனம் ஆதரவற்றது. நொடிப் பொழுதில் தான் பெற்றுள்ள வசதிகள் கைநழுவிப் போகக் கூடும். எதிர்பாராது மனிதன் நோய்க்கு ஆளாகக்கூடும். இத்தகைய இக்கட்டுகளைச் சமாளிக்கச் சுகஜீவனம் உதவமாட்டாது.

கேள்வி: *(294)* நவீன வாழ்க்கை முறைப்படி அவரவர் அலுவல்களில் பெரும்பகுதியை இரவில்தான் செய்து முடிக்க இயலுகிறது. ஆகையால் அதிகாலை துயில் எழுந் திருக்க சாத்தியப்படுவதில்லை. சூழ்நிலையை அனுசரித்து உழைப்பாளி பிந்தி எழுந்திருப்பது பொருந்துமல்லவா?

பதில்: பண்டைக்காலத்து வாழ்க்கை முறைக்கும் நவீன வாழ்க்கை முறைக்கும் வேற்றுமையிருப்பது உண்மைதான். பண்டைக்காலத்து மனிதன் பொழுது படிந்த பிறகு பல அலுவல்களை நிறுத்திவைக்க வேண்டியதாயிற்று. வீதி முழு துக்கும் நல்ல வெளிச்சம் கொடுக்க அக்காலத்தில் தீப வசதி போதவில்லை. வீட்டுக்குள்ளேயும் தம் விருப்பம்போன்று விளக்கேற்றிவைக்க அக்காலத்து மக்களுக்கு இயலவில்லை. வெளிச்சக்குறைவு பலவிதமான வேலைகளுக்கு இடைஞ்சலா யிருந்தது. இன்றைக்கோ நிலைமை வேறு. ஊர் முழுதையும் மின் விளக்கானது பகல்போன்று செய்துவைத்து விடுகிறது. பகலில் சூரிய வெப்பத்தின் கொடுமையுண்டு. இரவில் அது கிடையாது. ஆகவே பல அலுவல்களைப் பகலில் விட இரவில் நன்கு கவனிக்கலாம். தொழிற்சாலைகளில் பொருள் களை உண்டுபண்ணுதல், சமாசாரப் பத்திரிகைகள் அடிப்பது, இரண வைத்தியம் செய்வது இவைபோன்ற பல அலுவல்களை இரவில் நன்கு செய்து முடிக்கலாம். ஆகவே நவீன வாழ்க்கை முறையில் ஈடுபட்டிருப்பவர்கள் இரவில் படுக்கப்போக நெடு நேரம் ஆய்விடுகிறது. அத்தகையவர் அதிகாலையில் எழுந்திருக்க இயலாது போய்விடும் என்பதும் உண்மை.

இது சம்பந்தமாக இரண்டு பேருண்மைகளை நாம் ஞாபகத்துக்குக் கொண்டுவரவேண்டும். மனிதன் நல்ல உழைப் பாளியாகவேண்டும் என்பது ஒன்று. உழைப்பே மனிதனுக்கு ஆக்கத்தை உண்டுபண்ணுகிறது. முறையாக உழைக்கிற மனிதன் முன்னேற்றமடைகிறான். முறைதவறி உழைக்கிறவனோ சிறிது சிறிதாகத் தற்கொலை செய்துகொள்கிறான். அத்தகையவனுக்கு மன அமைதியில்லை. உடல் திட்பம் தேய்கிறது. மக்களோடு நல்லிணக்கம் பண்ண அவனுக்கு அவகாசமில்லை. பணம் தேடும் யந்திரமாக அவன் ஆய்விடுகிறான். அவன் வாழ்க்கைப் பயனை அறியாத உழைப்பாளியாகிறான். இரண்டாவதாக, இராக்காலத்தை ஓய்வுக்கும் உறக்கத்துக்குமாகப் பயன்படுத்துவதுதான் இயற்கை யளித்துள்ள வசதி. இரவில் தூக்கத்தைக் குறைத்துப் பகலில் அதிகம் தூங்குபவன் ஆரோக்கியத்தை இழந்துவிடுகிறான். அறிவு வளர்ச்சி அத்தகையவனுக்குத் தடைப்படுகிறது. அதிகாலையில் நான்கு மணிக்குப் பிரம்மமுகூர்த்தம் எனப்படுகிறது. அப்பொழுது ஆத்ம சாதனம் செய்புவர் மனத்தெளிவு பெறுகின்றனர். மனிதனுக்கு ஏற்பட்டுள்ள அலுவல்களில் மிக முக்கியமானது சான்றோன் ஆதல். அதற்கேற்ற சாதனங்களைச் செய்தற்கு முற்றிலும் பொருந்திய நேரம் அதிகாலையாகும். ஆக, அதி காலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்க மனிதன் கடமைப் பட்டிருக்கிறான். நோயாளி ஒருவனே இவ்விதிக்கு விலக் காகிறான். அதிகாலையில் தெளிந்த மனதுடன் எழுந்திருத்தற் பொருட்டு முன்னிரவில் மனிதன் படுத்துறங்குதல் நன்று. முன்னிரவில் தூங்குகின்ற தூக்கமே பின்னிரவில் தூங்குவதை விட அதிகம் ஓய்வு தரக்கூடியது. ஆகவே சுமார் பத்து மணிக்குப் படுக்கச் சென்று காலையில் நான்கு அல்லது ஐந்து மணிக்குள் எழுந்திருப்பது இயற்கைத் தாய் அளிக்கும் வசதிகளை நன்கு பயன்படுத்துவதாகும். அதிகாலையில் எழுந்திருக்கும் பழக்கம் எல்லாவிதமான முன்னேற்றத்துக்கும் துணைபுரியும். காலை வேளையில் தூங்கிக் கொண்டிருப்பவனுக்குத் தமோகுண வளர்ச்சி அதிகரிக்கும். அவனுடைய அறிவுவளர்ச்சி தடைப்படும். ஒரு மனிதன் ஒரு மாதம் அதிகாலையில் எழுந்திருந்து நல்ல அனுஷ்டானங்கள் செய்து பார்க்கவேண்டும். இன்னும் ஒரு மாதம் காலையில் தூங்கியிருந்து தன் உள்ளத்தில்

வடிவெடுக்கும் பாங்குகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இப்படிச் சீர்தூக்கிப் பார்த்தால் அதிகாலையில் துயில் எழுதலில் உண்டாகும் சிறப்பு தனக்கே விளங்கும். சூழ்நிலை எதுவாயினும் அதை நல்வாழ்வுக்கு உரியதாக அமைத்துக் கொள்ளுதலே சான்றோரது இயல்பாகும். அதிகாலையில் எழுந்திருத்தல் என்னும் நல்வாழ்வுத் திட்டத்தை எத்தகைய சூழ்நிலைக்கும் பறிகொடுத்து விடலாகாது. பகலிலும் இரவிலும் செய்கிற எல்லாத் தொழில்களும் நல்வாழ்வுக்கு உற்ற துணையாக வேண்டும். யாண்டும் வைகறையில் துயில் எழுந்திருந்து தெய்வம் தொழுதல் வேண்டும்.

கேள்வி: *(295)* ஜீவியத்தை இன்சூர் செய்வது அறநெறிக்கு மாறானதா? கடவுள் இட்ட திட்டத்திற்கு அது முரண்படுவதாகுமா?

பதில்: குடும்பத்தை நிர்வகித்துவரும் ஒருவர் தனது காலத்துக்குப் பிறகு குடும்பத்திலுள்ளவர்களுக்குப் பொருளாதார நெருக்கடி பெரியது ஒன்றும் ஏற்படாதிருத்தல் பொருட்டு தனது ஜீவியத்தை இன்சூரன்ஸ் செய்துகொள்கிறார். லௌகிக அமைப்பை ஆராயுங்கால் இது பாராட்டத்தக்க நல்ல ஏற்பாடே. உதவி இல்லாதவர்களுக்கு ஒரு கம்பெனியின் மூலமாக ஒரு சுமாரான உதவி கிடைக்கிறது.

ஆனால் பக்தி மார்க்கத்தில் தீவிரமாகப் போகிறவர்கள் தங்களுடைய வாழ்க்கையை இன்சூரன்ஸ் செய்வதில்லை. செய்வதும் பக்திக்குப் பொருந்தாது. பக்தர்கள் கூடிய வரையில் குடும்ப வாழ்க்கையில் சிக்கலான பிரச்னை இல்லாது பார்த்துக் கொள்கின்றனர். அதற்குமேல் அவர்கள் முற்றிலும் தெய்வத்தையே நம்பி இருக்கின்றனர். தெய்வ நம்பிக்கை ஒன்றே அவர்களுடைய இன்சூரன்ஸ் பாலிசி ஆகும்.

கேள்வி: *(296)* ஒருவர் ஒரு கொள்கையைப் பொது மக்களுக்குப் போதிக்கின்றார். ஆனால் அவர் மனைவி அக்கொள்கைக்கு நேர்மாறாக நடக்கின்றாள். ஆதலால் அவருடைய மனைவியே அவ்வாறு நடந்து கொள்ளும் பொழுது அவர் பொதுமக்களுக்குப் போதிப்பது தகுமா?

பதில்: பிறருக்குப் போதிப்பதற்கு முன்பு ஒரு கொள்கைக்கு ஒப்ப ஒரு மனிதன் தானே ஒழுகவேண்டும். பேச்சின்மூலம் புகட்டுகின்ற கொள்கையைவிட வாழ்க்கைச் செயலின் மூலம் புகட்டுதலே சிறந்தது. பிறகு எடுத்துக்கொண்ட கொள்கையும் வாழ்க்கையை மேலானதாக மாற்றக்கூடிய சீர்படைத்ததாக இருக்கவேண்டும். தன் சொந்த வாழ்க்கையில் ஒருவனுடைய கொள்கை முற்றிலும் ஒன்றுபட்டு விடுமாகில் அதைச்சார்ந்து மனைவியும் கணவன் வழிக்குத் திரும்புவது திண்ணம். ஏனென்றால் சீரிய இல்வாழ்க்கையில் கணவனும் மனைவியும் வடிவில் இருவர் எனினும் கருத்தில் ஒன்றுபட்டவர்களாக இருக்க வேண்டும். இக்கருத்து வேற்றுமை இருக்கும்வரை இல்வாழ்வில் இனிமை இராது. வீட்டுக்குத் தலைவனாக இருப்பவன் தனது திண்மையினால் மனைவியின் மனப்பான்மையை மாற்ற வல்லவனாக வேண்டும். பிறகு உலகத்தவர்களையும் தன் வழிக்குத் திருப்புவது அவனுக்குச் சாத்தியமாகும்.

கேள்வி: *(297)* மக்களுக்காகச் சேவை செய்வது சிறந்ததா? சேவையை மறந்து தியானம் செய்வது சிறந்ததா?

பதில்: உடல்தாங்கி இருக்குமளவு கர்மம் நிகழ்ந்தாக வேண்டும். கர்மத்தைச் சுயநலத்தோடும் செய்யலாம்; சுயநல மற்றும் செய்யலாம். சுயநலத்தோடு செய்யும் கர்மம் ஆசையையும் அகங்காரத்தையும் வளர்க்கிறது. ஆசையும், அகங்காரமும் தியானத்துக்கு இடையூறுகள் ஆகின்றன. சுயநலமற்றுச் செய்கின்ற கர்மம் சித்த சுத்தியை உண்டுபண்ணுகின்றது. சித்தம் சுத்தி அடைகின்றபொழுதுதான் தியானம் கைகூடுகிறது. மக்களைத் தெய்வ சொரூபமாகப் பாவித்து மக்களுக்குச் சேவை செய்வது சித்தத்தைச் சுத்திபண்ணுகின்றது. நர சேவையை நாராயண சேவையாகச் செய்யவேண்டும் என்று விவேகானந்த சுவாமிகள் கூறியுள்ளார்.

தியானம் செய்வது அவ்வளவு சுலபமன்று. இப்பிரபஞ்சம் அனைத்தும் ஈசனுடைய சொரூபமாகும். ஈசனைக் குறித்துத் தியானம் பண்ணுவதும் உயிர்களின் நலத்தைக் குறித்துத் தியானம் பண்ணுவதும் ஒன்றே. "லோகா: ஸமஸ்தா: சுகினோ பவந்து" என்பது உயிர்களின் நலத்தைக் குறித்துச் செய்யும்

பிரார்த்தனையாகும். பிறகு உயிர்களின் முன்னேற்றத்திற்கான காரியங்களைக் காயத்தைக்கொண்டு செய்வதும் கடவுள் வழிபாடேயாகும். காயத்தை மக்கள் சேவையில் ஈடுபடுத்துவது காயத்தைக் கொண்டு செய்யும் வழிபாடாகும். மக்கள் நலனைக் குறித்துப் பேசுவதும், பிரார்த்திப்பதும் வாயால் செய்கின்ற வழிபாடாகும். உயிர்களெல்லாம் நலன் அடையட்டும் என்று தியானம் செய்வது மனதால் செய்யும் வழிபாடாகும். மனிதன் தன்னிடத்திலுள்ள மனம், வாக்கு, காயம் என்னும் முக் கரணங்களையும் வழிபாட்டில் ஈடுபடுத்துதல் வேண்டும். கர்மம் பக்தி ஞானத்தின் மூலமாக முக்கரணங்களையும் வழிபாட்டில் ஈடுபடுத்திப் பழக்கவேண்டும். மக்களுக்குச் சேவை செய்வதும், தியானம் செய்வதும் மனமாசை நீக்கிப் பரத்தோடு நம்மை லயப்படுத்தவேண்டும்.

இருபத்து நான்கு மணிநேரமும் தியானம் செய்து கொண்டிருக்க முடியாது. மக்கள் சேவையில் ஈடுபட்டு மனதைச் சுத்தி செய்துகொண்டு தியானமும் செய்து வரவேண்டும்.

கேள்வி: *(298)* மானுட வாழ்வில் தானம் பண்ணுவது அவசியமா? அவசியமென்றால் எத்தகைய தானம் பண்ண வேண்டும்?

மானுட வர்க்கம் தனித்தனியாக வாழும் வியக்திகளைக் கொண்டது அன்று. சமுதாய வாழ்க்கையே மானுடர்க்கு ஏற்றதாம். உலகெங்கும் சமுதாயங்கள் இக்கோட்பாட்டின்படி அமைந் திருப்பதைப் பார்க்கின்றோம். சேர்ந்து வாழ்ந்திருக்கும் மக்கள் விலங்கின் மந்தை போன்று அமைந்தவர்கள் அல்லர். விலங் குகள் சேர்ந்து வாழ்ந்திருந்தாலும் அதனதன் செயலை அது அதுவே செய்து சாதித்துக்கொள்கிறது. மக்களினம் அத்தகைய தன்று. Distribution of Labour அல்லது அந்தந்த மனிதனுக்கேற்ற சுயதர்மம் மக்களுக்கே உரியதாம். ஆசிரியர் பாடம் புகட்டுகிறார். டாக்டர் வைத்தியம் பண்ணுகிறார். உழவன் பயிர்த்தொழில் பண்ணுகிறான். தச்சன் மர வேலை பண்ணுகிறான். இத்தகைய தனித்தனித் தொழில் மானுட சமுதாயத்திற்கே உரியதாம். சேர்ந்து வாழும் உயிர்வகைகள் இங்ஙனம் அததற்குரிய வேலை யைப் பிரித்துச் செய்யமாட்டாது.

மக்களுள் ஒரு சிலர்க்குச் சம்பாதிக்க இயலாது. அங்கஹீனர்கள், வயோதிகர்கள், நோய்வாய்ப்பட்டிருக்கிறவர்கள் ஆகியவர்களுக்கு ஏனையவர்கள் உணவு தேடித்தரக் கடமைப் பட்டிருக்கின்றனர். இங்ஙனம் மனிதன் அலாதியாகத் தனக் கென்றே வாழ்பவன் அல்லன். அவனுடைய வாழ்வு ஏனையவர் களுக்கும் பயன்பட்டாகவேண்டும். அப்படிப் பயன்படுவதே தானம் எனப்படுகிறது. சமுதாயத்தில் இருக்கும் ஒருவன் தன் உழைப்பினால் பிறர்க்குப் பயன்படலாம். இச்செயல் சிரமதானம் எனப்படுகிறது. தான் சம்பாதித்துள்ள பொருளில் ஒரு சிறு பகுதியைப் பிறர் நலனுக்காகவென்று ஒதுக்கி வைக்கலாம். இது திரவியதானம் அல்லது பொருள்தானம் எனப்படுகிறது. தான் பெற்றுள்ள கல்வியைக் கைம்மாறு கருதாது பிறர்க் கெடுத்துக் கொடுக்கலாம். இது வித்யாதானம் எனப்படுகிறது. ஏதேனும் ஒருவிதத்தில் தன்னுடைய ஜீவிதம் பிறர்க்குப் பயன்படும்படி வாழ்ந்திருப்பவனே நல்ல குடிமகன் ஆகிறான்.

பாடுபட்டுச் சம்பாதிக்க இயலாதவர்களுக்கும் வழிப்போக்கர் களுக்கும் ஸ்தல யாத்திரை போகிறவர்களுக்கும் பயன்படும்படி அன்னசத்திரம் அல்லது தர்மசாலை அமைத்து வைப்பது முற்றிலும் தேவை. பண்பட்டுள்ள மேன்மக்கள் ஓர் ஊரி லிருந்து மற்றோர் ஊருக்கு வரும்பொழுது ஆங்கு இருப்பவர்கள் அங்ஙனம் வந்தவர்களுக்கு விருந்தோம்புதல் என்னும் உபசாரம் பண்ணக் கடமைப்பட்டிருக்கின்றனர். விருந்தோம்புதல் தானத்தில் மேலானது. அப்படி வந்துள்ள பெருமக்களின் அறிவுத் திறனையும் அனுபவங்களையும் உள்ளூரார் நன்கு பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

"இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்" என்பது ஆன்றோர் வாக்கு. இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே பொருள் சம்பாதிக்கும் நல்ல நிலைமையில் உள்ள ஒவ்வொருவரும் ஏதேனும் ஒருவிதத்தில் சமுதாயத்திற்குப் பயன்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். பாடுபட இயலாத வர்கள் பணிவிடை பண்ணிச் சமுதாயத்திற்கு நல்ல தொண்டர்கள் ஆகலாம். வெறும் ஒட்டுண்ணிகளாக நல்லார்கள் ஒரு பொழுதும் இருக்கமாட்டார்கள். இனி, அன்னசத்திரத்தில் கூன், குருடு, செவிடு ஆகிய அங்கஹீனர்களுக்கு அன்னதானம்

செய்யவேண்டும். உழைக்கும் பாங்குடைய ஒருவன் சோம்பித் திரிந்து யாசகனாக வருவானாகில் அவனை நல்வழியில் தூண்டவும் வேண்டும். அன்னம் படைக்கவும் வேண்டும். அன்ன சத்திரங்களில் இன்னொரு போக்கில் மக்களுடைய பாங்கைத் திருத்தியமைக்கலாம். கோயில் குளத்துக்கோ, அன்ன சத்திரத்துக்கோ, தெருக்களுக்கோ பணிவிடை பண்ணுகிறவர் களுக்கு நல்ல உணவு என்றும், பணிவிடை பண்ண மறுக்கி றவர்களுக்கு இடைத்தரமான உணவு என்றும் புகட்டி ஒரு சிலரைப் பொதுநலப் பணிவிடையில் ஈடுபடுத்தலாம். வெறும் சோம்பேறிகளுக்கு உணவு அளிப்பதைவிட இம்முறை மேலா னது. அங்கஹீனர்களும் அவரவர் போக்கில் ஏதேனும் ஒரு சிறு பணிவிடை பண்ணிப் பழகுதற்குச் சந்தர்ப்பத்தை உண்டு பண்ணித் தருவது சாலச் சிறந்தது. "பாடுபட்டு உண்ணும் பாங்குடைய நான் இலவசமாக உணவு ஏற்றுக்கொள்ள மாட்டேன்" என்னும் மனப்பான்மையை யாசகர்களுக்கிடையில் ஊட்டுவது நல்ல சமுதாயச் சேவையாகும். ஒரு செயலும் செய்யமுடியாது மெலிந்திருப்பவர்களுக்கு முறையாக உணவு கொடுக்கச் சமுதாயம் கடமைப்பட்டிருக்கிறது. உழைக்க வல்ல வனை உழைக்கும்படித் தூண்டி அவன் தரத்திற்கேற்ற உழைப் பாளியாக அவனைத் திருத்தியமைக்கவும் சமுதாயம் கடமைப் பட்டிருக்கிறது.

உயிர் வாழ்ந்திருக்கும் மக்கள் எல்லாருக்கும் சமுதாயத்தில் உணவு உண்டு. ஆனால் யாருக்கு என்ன பாங்கில் உணவு படைத்தல் வேண்டும் என்னும் தீர்மானத்தை அன்னசத்திர நிர்வாகிகளே அமைத்தல் வேண்டும். இந்தப்பாங்கில் மானுட சேவை பண்ணப் பண்பட்டுள்ள மக்கள் எல்லாரும் கடமைப் பட்டிருக்கின்றனர்.

_கேள்வி: (299)_ எங்கள் வீட்டில் பெருச்சாளி வந்து தொந்திரவு செய்துகொண்டேயிருந்தது. பெரிய எலிக் கூண்டு வைத்துப் பிடிக்க முயற்சித்தோம். முடியவில்லை. அது சாமான்களைச் சேதப்படுத்தி விட்டு ஓடிவிட்டது. விவசாய ஆபீஸில் கொடுக்கும் எலி மருந்தை ஒரு வடையில் தடவிக் குறிப்பிட்ட இடத்தில் வைத்திருந்தோம்.

இரவில் எலி வந்து சாப்பிட்டு இறந்து விட்டது. காலையில் இறந்து கிடந்ததைப் பார்த்தவுடன் அந்த உயிர்க்குச் சாந்தி உண்டாகட்டும், நல்லபிறவி கிடைக்கட்டும் என்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டேன். இந்தச் சம்ப வத்துக்காக எங்கள் வீட்டில் உள்ள சிலரும், எங்கள் ஊரில் வசிக்கும் பெரியார் ஒருவரும் "நீ ஒரு ஜீவனைக் கொலை செய்து விட்டாய், சன்மார்க்கத்தில் இருப்பவர்கள் செய்யும் செய்கையல்ல இது. ஆகையால் நீ செய்த குற்றத்திற்காக உடனே பிராயச்சித்தம் தேடு. ஒரு நாள் பூராவும் விரத மிருந்து ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும்" என்று கண்டிக்கிறார்கள். இதுபோன்ற உபத் திரவம் கொடுக்கும், தீமையைப் பயக்கும் துஷ்ட ஜந்துக்கள் வந்தாலும் கொலை செய்தல் கூடாது என்கிறார்கள். இல் லறத்தில் இருப்பவர்கள் இதுபோன்ற துஷ்ட ஜந்துக்கள் உபத்திரவம் கொடுக்க வந்தால் அவைகளை அழித்தல் கூடாதா? இல்லறத்தில் இருந்துகொண்டு சன்மார்க்கத்தில் இருக்கலாம் என்று முயற்சிப்பவர்களின் கடமை யாது? வாழ்க்கை நடத்துவது எவ்விதம்?

பதில்: கொஞ்ச காலத்துக்கு முன்பு ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்க நாதர் சந்நிதியில் ஒருவகைக் காட்சியும் நிகழ்ச்சியும் தென்பட்டுக் கொண்டிருந்தன. கரப்பான் பூச்சி என்ற ஒரு வகை அசுசியான பூச்சி ஆயிரக்கணக்கில் ஸ்ரீரங்கநாதருடைய விக்கிரகத்தின் மீது ஊர்ந்து கொண்டிருக்கும். பாதாதிகேசம் வரையில் தீபா ராதனை காட்டும் பொழுது திருமாலின் விக்கிரகத்தின்மீது இவைகள் எங்கும் நிறைந்திருக்கின்றன என்பதைக் காணலாம். காட்சிக்கு அருவருப்பானது அப்பூச்சி. அழுக்கு நிறைந்த இடத்தில்தான் அது ஏராளமாக உற்பத்தியாகிறது. சேவிக்கச் செல்லும் பக்தர்களுக்குப் பகவானுடைய சரணாமிருதம் வழங்கு கின்றபொழுது அந்த சரணாமிருதத்தை வைத்திருக்கும் பெரிய பாத்திரத்திலும் சிலவேளைகளில் அப்பூச்சிகளில் இரண்டொன்று வீழ்ந்து செத்துக்கிடக்கும். அதைக்குறித்து ஆக்ஷேபம் சொல்லு வதைப் பக்திக்கு முரண்பட்ட செயல் என்று பலர் கருதி வந்தார்கள். ஆலயத்துக்குள் இருந்த அப்பூச்சிகளுக்கு ஆங்கே ஒரு சிறப்புப் பெயரும் தரப்பட்டது. ஆராதனை செய்கின்றவர்கள்

அதை லக்ஷ்மிப்பூச்சி என்று அழைத்தார்கள். ஏன் அத்தகைய பெயர் அதற்கு இடவேண்டும் என்று கேட்டபொழுது, திரு மாலின் மார்பிலே தங்கியிருப்பதற்குத் திருமகள் ஒருத்திக்குத் தான் உரிமையுண்டு. கரப்பான் பூச்சி தாராளமாக ரங்கநாத ருடைய மார்பிலும், உடலெங்கும் ஊர்ந்து செல்லுவதால் அதை அங்ஙனம் அழைக்க வேண்டுமென்று விளக்கினார்கள். அப்பூச்சிகளையெல்லாம் கொன்றுவிட வேண்டுமென்று சிலர் அபிப்பிராயம் சொன்னபொழுது அதற்கு ஆட்சேபம் பிறந்தது.

இன்றைக்கு அப்பூச்சிகள் ஆங்குத் தென்படுவதில்லை. லக்ஷ்மியின் புறத்தோற்றமாக வந்து ஆயிரக்கணக்கில் ஊர்ந்து திரிந்தவைகள் திடீரென்று அப்பிராகிருத சரீரம் பெற்றுத் திருமகளிடத்துத் திரும்பவும் அவைகள் அந்தர்தானம் ஆய் விட்டன என்று சொல்லுவதற்கில்லை. நிகழ்ந்த செயல் இது வாகத்தான் இருக்கக்கூடும். யாரோ சிலருக்குத் திடீரென்று நல்லறிவு தோன்றியது. மதத்தின் பெயரால் நிலைபெற்றிருந்த மூடநம்பிக்கையையும், அசுசியான ஆசாரத்தையும் ஒழித்துவிட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். பிலிட் (Flit) போன்ற விஷவஸ்துவை மூலஸ்தானத்தில் வியாபிக்கச் செய்து அக்கரப் பான் பூச்சிகளையெல்லாம் அறவே கொன்று விட்டார்கள். மேலும் இடையிடையே அப்படி ஆங்கு பிலிட் முதலியன அடித்து இப்பூச்சிகள் விருத்தியாகாவண்ணம் தடுப்பது அறிவுடையோர் செயல் ஆகின்றது. சமயத்தின் பெயரால் ஆரோக்கியத்துக்கு விக்கினம் உண்டுபண்ணும் அசுசியான ஜீவஜந்துக்கள் விருத்தியடைய இடந்தரலாகாது. கோயிலுக்குள் கற்பூரத்தை எரிப்பதிலும் கருத்து ஒன்று உண்டு. அது ஞானத்துக்குச் சின்னமாயிருப்பதல்லாமல் நச்சுப்பூச்சிகளைக் கொல்லும் சக்தி அதன் புகைக்கு உண்டு.

சாக்கடைகளிலும், வீட்டு வாசல்களிலும், புறவடையிலும் பினைல் முதலிய கிருமிநாசினியை அடிக்கடி உபயோகப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நமக்கு நாமே நோயை வரவழைத்துக்கொள்வோம். கிருமிநாசினியை உபயோகப்படுத்து வதால் கோடிக்கணக்கான சிற்றுயிர்களைக் கொல்கிறோம். சிலர் இவ்வுண்மையை அறிந்துகொள்ள ஆயத்தமாய் இல்லை. அறிந்து கொண்டால் அது அவர்களுடைய மனச்சாட்சியை

உறுத்துகின்றதாம். பொது அறிவு படைத்திருக்க வேண்டிய நாம் இவ்வுண்மையை அறிந்துகொள்ளவும் வேண்டும். நோயைப் பெருக்கும் கிருமிகளை அறவே அழிக்கவும் முற்பட வேண்டும். அது நாம் செய்யக்கிடக்கும் கடமையாகின்றது.

நமக்கு உணவுப் பொருள்களை உண்டுபண்ணுவதற்காகக் கிருஷி செய்கிறோம். பயிர்பச்சைகளை அழித்துவிடும் பூச்சிகள் இடையிடையே தோன்றி வருவதுண்டு. அவைகளை அழிப்பதற்கான முறைகளைக் கையாண்டு லக்ஷக்கணக்கிலும் கோடிக் கணக்கிலும் அவைகளை நாம் அழித்தாக வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நமக்கு உணவுப்பொருள் கிடையாது போய் விடும். இப்பிரபஞ்சத்தில் தோன்றியுள்ள உயிர்களெல்லாம் ஒன்றை அழித்துத்தான் மற்றது நிலைபெற்றிருக்க முடியும். இவ்விதிக்கு மனிதன் விலக்காக முடியாது. இவ்விதிக்கு எந்த ஞானியும் விலக்காக முடியாது. இவ்விதிக்குச் சன்மார்க்கத்தில் செல்கின்றவனும் விலக்கு ஆக முடியாது.

எலி, பெருச்சாளி முதலியன மனிதனுடைய உணவில் பங்கெடுக்க முயல்கின்றன. மனிதனுக்கே உணவு போதாதிருக்கின்ற இக்காலத்தில் எலிகளுக்கும், பெருச்சாளிகளுக்கும் இடமளிப்பது பொருந்தாது. "உன் உணவுப் பொருளை நீ காப்பாற்றி வைத்துக்கொள். அவைகளை ஏன் கொல்லுகின்றாய்" என்று ஒருசிலர் இயம்பலாம். அவைகளுக்கு உணவு கொடுக்க மறுப்பதும், அவைகளைக் கொன்று விடுவதும் ஒன்றே. இக் கோட்பாட்டை அறிந்து கொள்ள இயலாதவர் வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்துகொள்ள இயலாதவர் ஆகின்றனர். மகன் ஒருவனுக்கு உணவு கொடுக்க மறுப்பது அவனைக் கொல்லுதற்குச் சமானமாகிறது. பட்டினிகிடந்து சிறிது சிறிதாக அது உயிர்துறக்கும்படி செய்வதைவிட அத்தகைய சிற்றுயிர்களை உடனே கொன்றுவிடுவதுதான் வாழ்க்கைத் தத்துவம்.

இரண்டு உயிர்கள் சேர்ந்தாற் போன்று உயிர் வாழ்ந்திருக்க முடியாதென்றால் எதன்பொருட்டு எது சாவது என்னும் கேள்வி பிறக்கிறது. வலிவு படைத்ததே வாழ்க்கைக்குரியது. (Survival of the fittest) என்னும் கோட்பாட்டைப் பிரபஞ்சம் முழுதிலும் காணலாம். பொதுநலத்தின் பொருட்டுப் பாட்டனாரையும், ஆசாரியரையும் கொன்றுவிடு என்று கிருஷ்ண பகவான்

அர்ஜுனனுக்கு உபதேசித்த நாடு இது. அத்தகைய நாட்டில் எலி, பெருச்சாளி முதலியவைகளைக் கொல்லுகின்றவன் பட்டினி கிடந்து பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்னும் மயக்கம் மலிந்து கிடக்கிற காலம் வந்துவிட்டது. சன்மார்க்கம், துன்மார்க்கம் ஆகிய கேள்விகள் எழ ஈண்டு இடமில்லை. மனிதவர்க்கத்தைக் காப்பாற்றுதற் பொருட்டுச் சிற்றுயிர்களை அகற்று. அப்படிச் செய்யாதவன் வாழ்க்கைக்குத் தகுதியற்றவனாகின்றான். மனிதன் முதலில் ஆக்கம் நிறைந்த வாழ்க்கை வாழத் தெரிந்து கொள்ளட்டும். அதைத் தெரிந்து கொண்டான பிறகு சன்மார்க்கத்தில் செல்லுதற்கும் அவன் தகுதி உடையவனாகின்றான். உற்சாகத்துடன் நக்சுப்பூச்சிகளையும் அசுசியான உயிர் வகைகளையும், மனிதனுடைய வாழ்க்கைக்கு இடைஞ்சலாய் இருக்கின்ற சிற்றுயிர் வகைகளையும் பெருவாரி யாக அழிக்க மனிதன் கற்றுக்கொள்வானாக. மதத்தின் பெயரால் கோழைத்தனம் வேண்டாம்.

கேள்வி: *(300)* ஒரு பாம்பு தன் உணவுக்காக ஒரு தவளையைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. தவளையை விடுவித்தாலும் அல்லது இரையாகத் தின்றுவிட விட்டு விட்டாலும் இரண்டும் பாபமாகத் தோன்றுகிறது. இந்த நிலையில் மனிதன் எப்படி நடந்து கொள்ளவேண்டும்?

பதில்: ஓர் உயிர் மற்றோர் உயிரைத் தின்று வாழ்ந்திருப்பது இயற்கையின் திட்டம். செடியும் கூட பாக்டீரியா என்னும் உயிர்ப்பொருளை மண்ணினின்று எடுத்துத் தின்றுகொண்டிருக் கிறது. இயற்கையின் நடைமுறையில் நாம் தலையிடவேண்டிய அவசியமில்லை. நமக்கு ஏற்பட்டிருக்கும் கடமைகளை நாம் முறையாகச் செய்துகொண்டிருப்பதே போதுமானது. நம் செய லில் தீமை குறைந்தும் நன்மை அதிகரித்தும் இருக்கும்படி நாம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

கேள்வி: *(301)* தர்ம சக்கர இதழில் மார்க்கண்டேயன் என்னும் தலைப்பில் 6-வது காட்சியில் மார்க்கண்டன் "பல்லியை விரட்டினால் பட்டினி போடுவதாகும். நான் இயற் கையில் தலையிடமாட்டேன்'' என்று சொன்னதாக

இருக்கிறது. ஆனால் ஒருவன் தவறித் தண்ணீரில் விழுந்து விட்டால் அது இயற்கை என்று சும்மா இருந்துவிட்டாலோ, ஒருவருக்கொருவர் அரிவாளால் வெட்டிக் கொள்ளும் போது அதுவும் இயற்கை என்று சும்மா இருந்தாலோ என்ன ஆவது?

பதில்: இயற்கையின் நடைமுறை என்னும் கோட்பாடு உணவை ஏற்று உயிர் வாழ்ந்திருப்பது என்பதாகிறது. ஆனால் ஒருவன் கிணற்றில் விழுந்துவிடுவது அத்தகைய செயலன்று. அது ஆபத்துக்குரிய தற்செயல். அவனைப் பாதுகாக்காவிட்டால் உயிருக்கு நஷ்டம். பல்லியானது பூச்சியைப் பிடிக்கும் விஷயத்தில் ஒன்றுக்குத் துணைபுரிந்தால் மற்றதுக்கு அது தீங்கு ஆகும். உணவு தேடி உயிர் வாழ்ந்திருக்கும் விஷயத்தில் உயிர்களின் இயல்புக்கேற்ற பிரகாரம் நடந்து கொள்ளட்டும் என்று விட்டுவிடுவதே முறை. புலியினிடத்திருந்து மான் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயலுகிறது. தப்பித்துக் கொள்ளுதலில் சில வேளைகளில் அது வெற்றி பெறுகிறது; வேறு சில வேளைகளில் அது தோல்வியடைகிறது. புலி போன்ற கொடிய ஜந்துக்களிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளுதற்கு நாமும் முயலவேண்டும். இயற்கையின் நடை முறை என்று நம்முடைய உடலைத் துஷ்ட ஜந்துக்களுக்குப் பலிகொடுப்பது முறையன்று. தற்செயலாய் புலியின் வாயில் அகப்பட்டுக் கொண்டால் அறிவுடையோர் அதைக் குறித்து வருந்தவேண்டிய அவசியமில்லை. விவேகானந்த சுவாமிகள் கண்கூடாகக் கண்ட காட்சி ஒன்று ஈண்டு ஞாபகத்துக்கு வருகிறது. இமயமலைச் சாரலில் வசித்திருந்த சாது ஒருவரைப் புலி வந்து இரையாகத் தூக்கிக்கொண்டு போனது. அதன் வாயில் அகப்பட்டுக் கொண்டவர் "சிவோஹம், சிவோஹம்" என்று ஆனந்தமாக அரற்றிக் கொண்டுபோனார். வனத்தினுள் நெடுந்தூரம் சென்ற பிறகு அச்சத்தமும் ஒடுங்கியது. கங்கையின் இக்கரையிலிருந்து அவ்வரிய காட்சியைக் கண்ட விவேகானந்த சுவாமிகள் அந்தச் சாதுவின் உயர்ந்த மனநிலையைக் குறித்துப் பாராட்டினார். அந்த மனநிலைக்குப்போவதற்கு முன்பு தற்பாது காப்புச் செய்துகொள்வது இயல்பு. அதுவும் இயற்கையினுடைய நடைமுறையாகும்.

ஒருவரையொருவர் வாளால் வெட்டிக் கொல்லுதல் காமக் குரோதங்களை முன்னிட்டு எழுந்த செயலாகும். அப்படிச் செய்யலாகாது என்று தடுத்து அவர்களைச் சமாதானப்படுத்துவது நம் கடமையாகும். எது தர்மம், எது அதர்மம் என்பதை முறையாக அறிந்துகொண்டவர்கள் எந்தெந்தச் சந்தர்ப்பத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை நன்கு அறிவார்கள். அச்செயல்களைக் குறித்து ஒரு பட்டியல்போட்டுப் பகர்வது அசாத்தியம். தர்மத்தை உள்ளபடி அறிந்து அதன்படி ஒழுகுதல் நம் கடமையாகும்.

கேள்வி: *(302)* "ஞானயோக விளக்கம்" என்னும் புஸ்தகத்தில் "ஒரு சமூகத்தைப் புனிதம் நிறைந்ததாகச் செய்ய விரும்பினால் அதிலுள்ள ஆடவரையும் மகளிரையும் பாலிய விவாகத்தின் மூலம் உடல் வலிவு அற்றவர்களாக்கி விடவேண்டும்" என்று கண்டுள்ளது. அதனால் சமூகம் இவ்வுலக வாழ்க்கை வசதிகளை அடையமுடியாமல் செயலற்ற நிலைமைக்குச் சென்று விடாதா? "உடல் உறுதி பெற நின்று, உள்ளே ஆண்மை உணர்ச்சி கிளரும்போது, உபநிடதங்களின் பொருளையும் ஆத்மனின் மகிமையையும் முன்னினும் நன்கு அறிவீர்" என்று சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு தெரிவிக்கிறது. இந்த முரண்பட்ட கருத்துக்களின் பொருள் என்ன? தக்க சான்றுகளுடன் விளக்குவீர்களாக.

பதில்: ஞானயோக விளக்கத்தில் கொடுத்திருக்கிற கருத்துக்களையெல்லாம் ஒன்றோடொன்று தொகுத்து ஆராய்ச்சி பண்ணினால் முரண்பாடு தென்படாது. ஒவ்வொரு சீரமைப்பிலும் அனுகூலம், பிரதிகூலம் ஆகிய இரண்டு பகுதிகள் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. பொதுமக்களுக்கிடையில் பால்ய விவாகம் ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்குப் பயன்படுகிறது. சிறு வயதிலேயே யார் யாருக்கு வாழ்க்கைத் துணை என்னும் எண்ணம் உறுதிபெற்று விட்டால் பிறகு மனது பிறமனை விழைதல் என்னும் தீங்கில் அதிகமாகச் செல்லுதல் இல்லை. ஆனால் காதல் விஷயத்தில் மனம்போகிற போக்கிலெல்லாம் போவதற்குப் பால்ய விவாகம் இடம் தருவதில்லை.

பால்ய விவாகம் செய்து கொள்கின்றவர்களுக்கு வாழ்க்கையில் மற்றொரு சீரிய லக்ஷியத்தைப் புகட்டுதல் அவசியமாகிறது. அந்த லக்ஷியத்துக்கு எடுத்துக்காட்டாக இருப்பவர்கள் ராமனும் சீதையும். சிறுவயதிலேயே அவர்கள் விவாகம் செய்துகொண்டார்கள். எனினும் சுமார் இருபது வருஷத்துக்கு அவர்கள் பிரம்மச்சரிய விரதத்தைக் கடைப்பிடித்து வந்தனர். அதன் விளைவாக அவர்களுக்கு மகப்பேறாக வாய்த்த லவன், குசன் ஆகிய இருவரும் உடலுறுதி, மனத்தெளிவு, பராக்கிரமம், வீரியம், நிறைஞானம் ஆகிய மேன்மைகளெல்லாம் வாய்க்கப் பெற்றவர்களாக இருந்தார்கள். உபநிஷதம் சொல்லி வைத்திருக்கிற மேலாம் கோட்பாட்டுக்கு ராமனுடைய குடும்ப வாழ்வே நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது. மாந்தர் அனைவர்க்கும் இளமையில் விவாகம் செய்துகொண்ட ராமனும் சீதையும் நல்ல எடுத்துக்காட்டு ஆகின்றனர். ஆனால் இன்றைக்கு இந்திய சமுதாயத்தில் உள்ளவர்கள் அப்பெருமக்களைப் பின்பற்றுவதில்லை. பால்ய விவாகம் செய்துகொண்டு இளம் வயதிலேயே மகப்பேறு பெற ஆரம்பித்து விடுகின்றனர். அதன் விளைவாக நாட்டு மக்களில் பெரும்பான்மையோருக்கு உடல் திடம் குன்றியிருக்கிறது. ஒழுக்கத்தில் அவர்கள் சிறப்புற்றிருக்கின்றனர். உடல் மென்மையடைந்திருப்பதே அதற்கு சான்றாகிறது. இங்ஙனம் நலமும், கேடும் ஒவ்வொரு வாழ்க்கைத் திட்டத்திலும் வெவ்வேறு விதங்களில் சேர்ந்தே அமைந்து விடுகின்றன. கேடுகளைக் குறைத்து நலன்களை அதிகப்படுத்தும் வாழ்க்கைத் திட்டமே சாலச் சிறந்தது. ஆனால் அது ஸ்ரீ தசரத ராமன் போன்ற யாரோ சிலருக்குத்தான் வாய்க்கிறது. பெரும்பான்மையோர் ஒருவிதத்தில் நலனைப் பெற்றால் மற்றொரு விதத்தில் கேட்டுக்கும் ஆளாகின்றனர். இதைத்தான் உலகெங்கும் நாம் கண்டு வருகிறோம். கேட்டைக் குறைத்து நலனைப் பெருக்கும் வாழ்க்கைத் திட்டத்தை அனுஷ்டிப்பவர்களே நல்ல விவேகிகள் ஆகிறார்கள். ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரு சிலராவது நல்ல வாழ்க்கைத் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவரவேண்டும்.

கேள்வி: *(303)* தபோதனர்களான மகரிஷிகள் இராம பிரானுக்கு அஸ்திரங்கள் கொடுத்து உதவியதாக

இராமாயணம் கூறுகின்றது. இதைக் கேட்க மனம் சஞ்சலப் படுகிறது. கொலைக் கருவிகளான அஸ்திரங்களை மகரிஷிகள் தவிர்ப்பதற்கு மாறாக அவற்றை ஆதரித்துப் போற்றினர் என்பது நமது சமயப் பண்பாட்டுக்குப் பொருத்தமாக இல்லையே?

பதில்: முதலில் நமது தெய்வங்களின் சொரூபங்களைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். ஒவ்வொரு தெய்வத்திடத்தும் ஆயுதங்கள் இருக்கின்றன. அந்த ஆயுதங்களெல்லாம் நாச காரிகளாகவே அமைந்திருக்கின்றன. அழிக்கும் கருவிகள் அவைகள். கட்டுதற்கும் நிர்மாண வேலைக்கும் உரிய ஆயுதங் களாக அவைகள் அமையவில்லை. சிவபெருமானுடைய திரிசூலம் நிர்மாண வேலைக்குரியதல்ல. அழித்தற்கே உரியதாகும். மஹாவிஷ்ணுவின் கதையும் அத்தகையதே. அவரிடத்துள்ள சக்கரம் ஆக்கவேலையை விட அதிகமாக அழிவு வேலையையே செய்து வருவதாகப் புராணங்களில் காண்கிறோம். முருகவேளு டைய தண்டாயுதமும் வேலாயுதமும் சிட்சைக்கென்றே அமைந்த வைகள். கணபதியிடத்துள்ள பாசம் கட்டிப்பிடிப்பதற்கு உரியது. அங்குசத்தினுடைய செயல் தடைப்படுத்துதற்கும் சில வேளை களில் நேர்மையில் செலுத்துதற்கும் உதவுகிறது. அம்பிகையினி டத்துள்ள ஓங்கிய வாள் வெட்டுவதற்கென்றே அமைந்திருக் கிறது. இவையாவும் நம் இந்தியப் பண்பாட்டுக்கு முரண்பட்ட வைகள் என்று ஏன் கூறலாகாது? துருவி ஆராய்ந்து பார்த்தால் தெய்வத்திடத்துள்ள நாசகாரி ஆயுதங்கள் வாழ்க்கையைப்பற்றிய பரமதத்துவம் ஒன்றை விளக்குகின்றன. கீழ்மையை அகற்றுமளவு வாழ்வு தானாக மேலோங்குகிறது. கீழ்மையை அகற்றுதற் கென்றே இந்த ஆயுதங்களெல்லாம் அமைந்திருக்கின்றன. வாழ்க்கையில் நாம் செய்யக்கிடக்கும் கடமைகளுள் கீழ்மையை அகற்றுதலே மிக முக்கியமான செயல் ஆகிறது. ஓயாது சிறுமையைச் சிதைத்துக்கொண்டிருப்பது வாழ்க்கைத் திட்டம். தெய்வங்களின் ஆயுதங்களே அக்கோட்பாட்டை விளக்குகின்றன.

ஸ்ரீராமபிரான் மேன்மையைப் போற்றுதற்கும் கீழ்மையை அகற்றுதற்கும் மண்ணுலகில் பிறந்து வாழ்ந்து வந்தார். ரிஷிகள் பலரைச் சந்தித்ததும் அவர்களோடு உறவாடியதும் அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மேலான நிகழ்ச்சிகளாகும்.

தவம் புரிந்து கொண்டிருந்த ரிஷிகள் தவத்தின் விளைவாகச் சில பயங்கரமான ஆயுதங்களைக் கண்டறிந்து கொண்டனர். ஆனால் அவைகளைத் தாங்களே கையாளவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஏனென்றால் வாழ்க்கையில் தாங்கள் கொண்டிருந்த லக்ஷியம் நன்மை, தீமை ஆகிய இரண்டும் கலந்துள்ள இப்பிரபஞ்ச வாழ்க்கையைக் கடந்து அப்பால் போதலாம். அவர்கள் கண்டறிந்த கொடிய ஆயுதங்களைச் சாமான்ய மனிதர்களிடம் கொடுத்துவிட்டால் அவர்கள் அவ்வாயுதங்களை முறைதவறிச் சுயநலத்துக்காகப் பயன்படுத்தி உலகுக்குப் பெருங்கேடு விளைவித்து விடுவார்கள். சுயநலம் படைத்துள்ள சாமான்ய மக்களுக்கு ரிஷிகள் அந்த ஆயுதங்களை எடுத்து வழங்கவில்லை. ஸ்ரீராமரோ கொடியவர்களைக் கண்டித்தல் பொருட்டே உலகில் அவதரித்தார். அனாவசியமாக அவர் எந்த உயிருக்கும் தீங்கு செய்தது கிடையாது. தீவிரமான நடவடிக்கை அவர் யார்மீதாவது எடுத்திருந்தால் அத்தகைய நடவடிக்கைக்கு முற்றிலும் அவசியம் இருந்ததும் நாம் அறிந்து கொள்ளவேண்டிய விஷயமாகும். ஸ்ரீராமபாணம் ஒருபொழுதும் வீண்போவதில்லை. ஸ்ரீராமபாணம் ஒருபொழுதும் முறைதவறிப் போனதுமில்லை. எனவே நுட்பமானவைகளாகவும் பெரிய நாசகாரிகளாகவும் இருந்த அஸ்திரசஸ்திரங்களை அகஸ்தியர் போன்ற மகரிஷிகள் ஸ்ரீராமபிரானிடம் ஒப்படைத்து வைத்திருந்தார்கள். அவைகளையெல்லாம் ஸ்ரீராமபிரான் உலகின் நன்மைக்காகவென்றே பயன்படுத்தினார். எனவே மகரிஷிகள் பயங்கரமான ஆயுதங்களை ஸ்ரீராமபிரானிடம் ஒப்படைத்ததும் ஸ்ரீராமபிரான் அவைகளையெல்லாம் உலகின் நன்மையின் பொருட்டே பயன்படுத்தியதும் நமது இந்தியப் பண்பாட்டுக்கு முற்றிலும் பொருத்தமான நிகழ்ச்சிகளேயாம்.

கேள்வி: *(304)* பீமன் எதையும் விளையாட்டாகக் கொள்கிறான். நாமும் வாழ்க்கையில் எல்லாவற்றையும் விளையாட்டாகக் கொண்டால் வாழ்க்கையைச் சரியாக நடத்த முடியுமா?

பதில்: வாழ்க்கையில் நிகழ்கிற சம்பவங்களை விளையாட்டாகக் கருதுவது பீமன் ஒருவனுடைய செயல் மட்டுமன்று.

காலமெல்லாம் சிறுவர்கள் வாழ்க்கையை விளையாட்டாகக் கருதி வருகிறார்கள். இதற்குப் பொருத்தமான சம்பவங்கள் இரண்டைச் சான்றுகளாக எடுத்துக்கொள்ளலாம். வீட்டில் முதியோர் ஒருவர் மாண்டுபோனால் மரணத்துக்குரிய சடங்கு களையெல்லாம் பெரியவர்கள் செய்து முடிக்கின்றனர். அச் செயல்களையெல்லாம் பார்த்து வருகிற சிறுவர்கள் சில நாட் களுக்குப் பிறகு தங்களுள் ஒருவனைச் செத்தவனாக வைத்துக் கொண்டு பெரியோர் செய்த சடங்குகளையெல்லாம் சிறியோர் களும் விளையாட்டாகச் செய்வார்கள். செத்தவன் போன்று கிடப்பவனைச் சூழ்ந்து கொண்டு விளையாட்டாக அழுதல், விளையாட்டாக அவனை ஸ்மசானத்துக்குச் சுமந்து செல்லுதல், விளையாட்டாக அவனைத் தகனம் பண்ணுதல் ஆகிய நிகழ்ச்சி களைச் செய்வார்கள். ஆதலால் சிறுவர்களுக்கு உண்மையான மரணமும் விளையாட்டுக்காக வைத்துக்கொண்ட மரணமும் ஒன்றேயாம். துக்கத்துக்குரிய செயல் சிறுவர்கள் உள்ளத்தில் துக்கத்தை உண்டு பண்ணுவதில்லை. வாழ்க்கை முழுதுமே அன்னவர்களுக்கு விளையாட்டு. இனி, வீட்டில் விவாகச் சடங்கு நிகழ்ந்தால் அதே சடங்கைச் சில நாட்களுக்குப் பிறகு விளையாட்டாகச் சாதிப்பார்கள். அதில் விசித்திரம். உண்மையான விவாகத்தில் மணமகனுக்கும், மணமகளுக்கு மிடையில் உண்மையாகவே பால் வேற்றுமை உண்டு. விளை யாட்டாக நிகழ்கிற விவாகத்திலோ இரு சிறுவர்கள் அல்லது இரு சிறுமிகள் மணமக்களாகக் கருதப்படுவார்கள். உடன் பிறந்த சிறுவனும் சிறுமியும் சில வேளைகளில் மணமக்களாக அமைக்கப்பெறுவார்கள். இதுவே சரியான விளையாட்டாகிறது.

பீமன் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளனைத்தையும் விளை யாட்டாகக் கருதி வந்தது உண்மை. ஆனால் பாண்டவர்களும், திரௌபதியும் ஹஸ்தினாபுரத்தில் சபை நடுவே பெரும் அவ மானத்துக்கு ஆளானபோது பீமன் அதை விளையாட்டாகக் கருதவில்லை. அக்கணமே அவன் சீற்றம் கொண்டு கௌர வர்களைத் தாக்கிப் பழிக்குப்பழி வாங்க முயன்றான். அப்படிச் செய்தது விளையாட்டாகாது. கொடிய வினையாகவே அவன் கருதினான். பிறகு வனவாசத்துக்குப் பாண்டவர்கள் உட்பட்ட பொழுது பீமன் அதை விளையாட்டாகக் கருதவில்லை.

அனாவசியமாக வனத்தில் வருந்திக் கிடப்பானேன். ஹஸ்தினா புரத்தின்மீது க்ஷத்திரிய தர்மத்தின்படி ஆக்கிரமித்துச் சென்று போர்புரிந்து தங்களுக்குரிய இராஜ்யத்தைத் திருப்பி எடுத்துக் கொள்ளலாம் என்று தமையனுக்கு ஆலோசனை கூறினான். தமையன் யுதிஷ்டிரன் அதற்குச் சம்மதம் கொடுக்கவில்லை. ஆதலால் ஒரு பருவம் வரையில் பீமனுக்கு நலம் கேடுகள் யாவும் விளையாட்டாகத் தென்பட்டன. அவன் முதியவனான பிறகு வாழ்க்கையில் வந்த நிகழ்ச்சிகள் யாவையும் விளையாட்டாகக் கருதவில்லை. அனுகூலமான நிகழ்ச்சிகளை விளையாட்டாகவும் பிரதிகூலமான நிகழ்ச்சிகளைக் கேடுகளாகவும் கருதலாயினன்.

வாழ்க்கையை எவ்வாறு கருதவேண்டும் என்னும் கோட்பாட்டைக் கிருஷ்ணபரமாத்மா தம்போக்கில் வாழ்ந்து காட்டுகிறார். சின்னஞ்சிறு வயதில் கண்ணன் என்பது கிருஷ்ணனுக்கு அமைந்திருந்த செல்லப்பெயர். கண்ணனாக இருந்தபொழுது வாழ்வை அவன் விளையாட்டாக மக்களுக்கு எடுத்து அதை விளக்கினான். முதியவனான பிறகு வாழ்க்கையைக் குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் வைத்து ஒரு போராட்டமாக விளக்கிக் காட்டினான். இந்த இரண்டு காட்சிகளிலும் நமக்கு நல்ல பாடம் கிட்டுகிறது. வாழ்வை விளையாட்டாகக் கருதுவாயானால் நீ யாண்டும் நல்ல விளையாட்டுப் பிள்ளையாக இருந்து வா. விளையாட்டுப் பிள்ளைக்கு ஜனனத்திலும் மரணத்திலும் பந்தபாசமில்லை. குருக்ஷேத்திரச் செய்தியை முன்மாதிரியாக எடுத்துக்கொள்வாயானால் தலைத்தரமான வீரனாக இருந்து வாழ்வு என்னும் போராட்டத்தை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவா என்பதைப் பாடமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த இரண்டு கோட்பாடுகளிலும் மேன்மை மிளிர்கிறது. மனிதன் உலகில் பற்றற்று வாழவேண்டும். மகிழ்ச்சியுடன் செயல்களில் ஈடுபடவேண்டும். திண்ணியனாயிருந்து அரிய பெரிய செயல்களைச் சாதிக்கவேண்டும். ஆக, ஞானியர்களுக்கும் உலகத்தவர்களுக்கும் கண்ணன் காட்டியுள்ள இவ்விரண்டு வழிகளும் மேலானவைகளே. ஆதியோடந்தமாக இவ்விரண்டினுள் எதை வேண்டுமானாலும் கடைப்பிடிக்கலாம் அல்லது இளமைப் பருவத்தில் வாழ்வைப் போராட்டமாகவும் வைத்துக்

கொள்ளலாம். எந்தப் பான்மைக்கு முதன்மை கொடுத்தாலும் அதில் வல்லவனாகிற பொழுதே மானுடன் ஒருவன் தான் கொண்டுள்ள பான்மையை நன்கு நிறைவேற்றுவான். இதுவே நம் எல்லார்க்கும் பாடமாகும்.

கேள்வி: *(305)* கடவுள் ஒருவரே கர்த்தா. அவர் கையிலிருக்கும் கருவி நாம். அவர் ஆட்டுவித்த விதம் நாம் ஆடுகிறோம் என்று இருக்கச் சிலர் கொலை, களவு, துரோகம் முதலிய பாப கர்மம் செய்கிறார்கள். அந்தப் பாப கர்மத்திற்குக் காரணகர்த்தா யார்?

பதில்: கடவுள் ஒருவரே கர்த்தா என்னும் கோட்பாட்டை நாம் புஸ்தகத்தில் படிக்கிறோம். பிறர் சொல்வதைக் கேட்கிறோம். நம்முடைய அனுபவத்தில் நாம் காணும் காட்சி இதுவல்ல. முதலில் கடவுளை நாம் கண்டாக வேண்டும். கடவுளுக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பை அனுபூதி வாயிலாகத் தெரிந்தாகவேண்டும். அதன் பிறகு இக்கேள்வியை விமர்சனம் செய்கிற இடத்துக் கடவுளின் ஆணையின்றி இப்பிரபஞ்சத்தில் எதுவும் நிகழ்வதில்லை என்பது நமக்குக் கண்கூடாக விளங்கும்.

இப்பொழுது நாம் உள்ள நிலையில் நம் செயலுக்கு நாமே கர்த்தா. அவருடைய மனப்பான்மைக்கு ஏற்ப நாம் கர்மம் புரிந்து வருகின்றோம். ஆற்றங்கரையில் சாது ஒருவர் உட்கார்ந்திருந்தார். பிரவாகத்தில் தேள் ஒன்று மிதக்கிக்கொண்டு வந்தது. ஐயோ பாவம் என்று அதைக் காப்பாற்ற கையில் அள்ளி எடுத்தார். நீர் கீழே போன்பிறகு கையிலிருந்த தேள் அவர் கையைக் கொட்டியது. உடனே கையை உதறினார். பழையபடி தேள் நீரில் விழுந்தது. திரும்பவும் அதன்மீது இரக்கம்கொண்டு நீரோடு அள்ளி அதை வெளியில் எடுத்தார். இரண்டாந்தடவையும் அது கொட்டியது. கையை உதறினார். தேள் தரையில் விழுந்து நகர்ந்து போய்விட்டது. கஷ்டத்திலும் சாது தன் இயல்பைக் காட்டினார். காப்பாற்றப்பட்ட நிலையிலும் தேள் தன் இயல்பைக் காட்டியது. இங்கு அவரவர் செயலுக்கு அவரவர் கர்த்தா. தன் இயல்புக்கேற்பத் திருடன் களவாடுகின்றான். கொலைபாதகன் மற்றவர்களைக் கொல்கிறான். நம் காட்சியில் வைத்துப் பார்க்குமிடத்து அவரவர் இயல்புக்கும்

பரிபாகத்துக்கும் ஏற்ப உயிர்கள் நலன்களையும், கேடுகளையும் செய்து வருகின்றன.

பிரபஞ்சத்தின் நடைமுறை முழுவதையும் நாம் அறிந்திருந் தாலும் அறியாதிருந்தாலும் அது கடவுளின் திட்டமே, கடவுளின் விளையாட்டே. நல்ல நாடகம் ஒன்றில் விதவிதமான பாத்திரங்கள் இருக்கவேண்டும். நாடகத்தில் எல்லாரும் நல்லவர்களாக இருந்துவிட்டால் நாடகத்தில் சுவை இராது. பிரபஞ்சம் என்கின்ற நாடகத்தில் எண்ணிறந்த இயல்புடைய உயிர் வகைகள் இருக்கின்றன. இந்தப் பெரிய திட்டத்தில் களவுக்கும், கொலைக்கும், வஞ்சகத்துக்கும், நோய்க்கும், பஞ்சத்துக்கும், போராட்டத்துக்கும் இடமுண்டு. சாந்தத்துக்கும், அன்புக்கும், ஜீவகாருண்யத்துக்கும் இங்கு இடமுண்டு. நலம் கேடுகள் ஆகிய எல்லாச் செயல்களுக்கும் ஈசுவர சிருஷ்டியில் இடமுண்டு. ரோஜாச்செடியில் அழகிய பூ இருப்பது போன்று கொடிய முள்ளும் இருக்கிறது. பிரபஞ்சத்தைப் பற்றிய உண்மை இதுவே. கொடிய செயல்களும் பிரபஞ்சத்தின் பெரிய திட்டத்தில் தகுந்த இடம் பெற்றிருக்கின்றன. பிரபஞ்ச நடைமுறைக்கு அவைகள் முற்றிலும் அவசியமானவைகள். பசுவின் மடியில் பால் இருப்பதும் பிரபஞ்ச நடைமுறைக்குத் தேவை. பாம்பின் பல்லில் விஷம் இருப்பதும் பிரபஞ்சத்தின் நடைமுறைக்குத் தேவை. நமது முன்னேற்றத்துக்குத் தீமைகளும் மறைமுகமாகத் துணைபுரிகின்றன என்பதை நாம் அறிந்து கொண்டால் கொலைபாதகர்களைக் குறித்தோ திருடர்களைக் குறித்தோ வஞ்சகர்களைக் குறித்தோ நாம் மயக்கம் கொள்ளமாட்டோம்.

கேள்வி: *(306)* பிறர் நம்மைத் துன்புறுத்தும்போது எல்லாம் ஈசன் செயல்; அவன் செயல் நன்மைக்கேயன்றோ என்று சகித்துக் கொள்ள விரும்பினாலும் நடைமுறையில் சாத்தியமாவதில்லை. இதற்குக் காரணம் பூர்வ ஜன்ம புண்ணிய பலமில்லாததாலா?

பதில்: ஞானத்தை அடைந்தவன் பிறர்க்குத் தீங்கு செய்வதில்லை. ஞானத்தை அடைய முயலுகிறவன் பிறர்க்குத் தீங்கு செய்யாதிருந்து பழகுகிறான். இவ்விருவர்களுடைய முயற்சிகளில்

வேற்றுமை மிக உண்டு. பிறர் எனப்படுபவர்களெல்லாம் ஞானியினுடைய காட்சியில் கடவுள் மயம் ஆய்விடுகின்றனர். கடவுள் ஒருவரே எண்ணிறந்த வடிவங்களில் இலங்குகின்றார் என்னும் உண்மையைச் சுவானுபவத்தில் காண்பவன் ஞானி. அவனுக்குப் பிறர் என்பார் யாருமில்லை. தெய்வம் ஒருவரே ஞானியின் காட்சியில் யாண்டும் உளர். எனவே அவன் பிறர்க்குத் தீங்கு செய்வதைப் பற்றிய பேச்சு எழ இடமில்லை. மற்றவனுக்குப் பிறர் பிறராகவே தோன்றுகின்றனர். அவர்களுக்குத் தீங்கு செய்யாதிருப்பது நல்லொழுக்கமாகிறது. ஆனால் பிறரால் தனக்கு இன்னல் வருங்கால் அதை எதிர்த்துத் தீங்குக்குப் பிரதி தீங்கு செய்வது மானுட இயல்பு. சாதகன் முற்றிலும் பக்குவம் ஆவதற்கு முன்பு அக்குறைபாடு அவனிடம் இருக்கும். பூர்வ ஜன்ம புண்யபுலனை ஈண்டு நிகழும் வாழ்க்கைச் செயலோடு இணைக்கவேண்டிய அவசியமில்லை. வேண்டுமென்றே பிறர்க்குத் தீங்கு செய்யலாகாது. பிறர் தனக்குத் தீங்கு செய்வதை ஞானிபோல் நடந்து கொள்வதற்காகச் சகித்துக் கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. நிறைஞானம் வந்த பிறகு தனக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் தான் தீங்கு செய்யாத பெருநிலை இயல்பாக வந்துவிடுகிறது. அப்பெருநிலையை அடைவதற்கு முன்பு தீங்கை எதிர்க்க வேண்டும்; தீங்கு செய்பவனை நல்வழிக்குக் கொண்டுவர வேண்டும்; அவனைக் கெடுத்துவிட முயலலாகாது.

கேள்வி: *(307)* சமுதாயத்தில் உள்ள நல்லவர்கள் தீமைகளைக் கண்டு ஒதுங்கி இருந்து விடுகிறார்களே? தீமைகளைத் தடுக்குமாறு அவர்களைக் தூண்டுவது எப்படி?

பதில்: "நன்மை கடைப்பிடி" என்பது கோட்பாடு. தீமைகளைத் தவிர்க்க மனிதன் கடமைப்பட்டிருக்கின்றான். தீமைகளைத் தவிர்க்கும் நிலையில் இருக்கின்றவன் அதற்கேற்ற முயற்சி எடுத்துக்கொள்ளாது ஒதுங்கி இருப்பது பொருந்தாது. ஒதுங்கி இருப்பதற்குக் காரணங்கள் சில இருக்கலாம். அச்சம், ஊக்கமின்மை, மந்த புத்தி போன்ற சிறுமைகள் அதற்குக் காரணங்களாக வந்தமையலாம். நல்வழியில் செல்கின்றவன் தீவிரமாகத் தன் கடமையில் ஈடுபடுவதற்கிடையில் இத்தகைய

மந்த அதிகாரிகளைத் தட்டி எழுப்பி அவர்களையும் நல்வழியில் தீவிரமாக முயலும்படி தூண்டுதல் போடவேண்டும்.

கேள்வி: *(308)* துஷ்டனைக் கண்டால் தூர விலகு. துஷ்டனோடு இணக்கம் கொண்டு அவனைத் திருத்தியமை - இவற்றில் எதைக் கடைப்பிடிப்பது?

பதில்: தொற்றுநோய் பிடித்துள்ள ஒருவனிடத்திருந்து ஏனையவர்கள் விலகியிருப்பது முற்றிலும் அவசியம். விலகி யிராவிட்டால் அந்நோய் எல்லார்க்குமிடையில் பரவுவதற்கு அவகாசம் தருகிறோம். பொதுமக்கள் அப்படிச் செய்யலாகாது. ஆனால் டாக்டர் ஒருவர் தொற்று நோய் பிடித்துள்ள ஒரு வனோடு தொடர்பு கொண்டே ஆக வேண்டும். அன்னவ னுக்குச் சிகிச்சை பண்ணுவது டாக்டருடைய கடமை. அக் கடமையைச் செய்யாத டாக்டர் அந்த ஸ்தானத்திற்குத் தகுதி யுடையவர் ஆகார். தமக்கு வேண்டிய தற்பாதுகாப்பை அமைத் துக்கொண்டு டாக்டர் தொற்றுநோயினின்று நோயாளியைக் குணப்படுத்துகிறார்.

துஷ்டனைப்பற்றிய கோட்பாடும் கிட்டத்தட்ட இதே பாங்குடையது. துஷ்டனுக்கு நிகரான பாம்பினிடத்திருந்தும், புலியினிடத்திருந்தும் பொதுமக்கள் விலகியிருக்கவேண்டும். ஆனால் பாம்பையும், புலியையும் எதிர்த்து மாய்க்க வல்லவன் அவைகளைப் பார்த்து மருண்டு ஓடலாகாது. அவைகளை ஒழிப்பது வல்லவர் கடமையாகும். துஷ்டன் ஒருவனோடு இணங்குவதால் ஏனையவர்கள் தங்களையறியாது துஷ்டத் தனத்தைத் தங்களிடம் வரவழைத்துக் கொள்கின்றனர். அப்படிச் செய்வது சரியன்று. துஷ்டனைச் சமாளிக்கும் அறிவுத்திறன் வாய்க்கப்பெற்றவன் அவனோடு உறவாடி அவனை நல்வழிக்குத் திருப்பவேண்டும். நல்வழிக்குத் திரும்பமாட்டேன் என்னும் பிடிவாதத்துடன் தீயவழியிலேயே போகின்றவனை முறையாகத் தடுத்துவைக்கவேண்டும். இல்லையேல் சமுதாயத்திற்கே அக்கொடியவனால் தீங்கு நேரிடும்.

கேள்வி: *(309)* "பிறர்க்குத் தீங்கு செய்யாதே; கோபம் கொள்ளாதே" என்கிறார்கள். கோபித்துக்கொள்ளவேண்டிய

சூழ்நிலை வருகிறது. கேடு செய்தால்தான் நம் கடமையைச் செய்தவர்கள் ஆகின்றோம். இந்நிலையில் சும்மா இருப்பது முறையா?

பதில்: 'கோபத்துக்கு அடிமையாகாதே' என்பது கோட்பாடு. கோபத்துக்கு அடிமை ஆகிறவர்கள் கோபித்துக்கொண்டிருக்கிற வேளையில் தீங்கையே விளைவிக்கின்றனர். நலனை விளைவிக்க அவர்களால் இயலாது. முற்றிலும் தன்னடக்கம் பழகியிருக்கிறவர்கள் கோபித்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலை வாய்க்கின்றவிடத்து வேண்டுமென்றே கோபத்தைப் பயன்படுத்துகின்றனர். அந்த நிலையில் அவர்கள் கோபத்துக்கு அதிபதிகளாக இருக்கின்றனர். அடிமைகளாவதில்லை. அந்தப் பாங்கில் கோபத்தை வரவழைத்துப் பயன்படுத்தலாம். அங்ஙனம் கோபத்தைப் பயன்படுத்துதலில் நலன் யாவும் உண்டு; கேடு ஏதுமில்லை. குழந்தை செய்த குற்றத்தைக் கண்டித்தல் பொருட்டுத் தாய் வேண்டுமென்றே கோபித்துக் கொண்டவள் போன்று நடந்துகொள்ளுகிறாள். சரியாகப் பாடம் படிக்காத மாணாக்கன் மீது கோபித்துக்கொண்டவர் போன்று ஆசிரியர் நடந்துகொள்கிறார். அங்ஙனம் வரவழைக்கப்பட்ட கோபத்தில் கேடு ஒன்றுமில்லை. அந்நிலையில் கோபித்துக்கொள்ளாது வெறுமனே உட்கார்ந்திருப்பது பொருந்தாது. கொலைபாதகனொருவன் பிறரைக் கொன்று அவருடைய பொருளை அபகரித்துக்கொள்ளுகிறான். கொலை, களவு ஆகிய இரண்டும் பொருந்தாத செயல்கள். அத்தீயசெயல்களைச் செய்தான பிறகு அவன் மறைந்திருந்து தப்பித்துக்கொள்ள முயலுகிறான். சில நாட்களுக்குப் பிறகு துப்பறிகிறவர்கள் கொலைபாதகனைக் கண்டுபிடிக்கிறார்கள். அவனுடைய செயலை விசாரணைக்குக் கொண்டுவருகிறார்கள். நீதிமன்றத்தில் அவன் விசாரிக்கப்படுகின்றான். அவன் செய்த குற்றமெல்லாம் வெளியாகிறது. பிற உயிரை வாங்கியதற்குத் தண்டனையாக அவனுக்கு மரண தீர்ப்பு வாய்க்கிறது. மரணத் தீர்ப்பு கொடுத்த நீயாயாதிபதி தீச்செயல் செய்தவர் ஆகமாட்டார். கொலையாளிகளை எல்லாம் மன்னித்துக்கொண்டே போனால் சமுதாயத்தில் கொலைச் செயல்கள் அதிகரிக்கும். கொலைகாரனுக்கு மரணதண்டனை என்கிற தீங்கைச் செய்வதன் வாயிலாகச் சமுதாயத்தில் நலன்

நிலைநாட்டப்படுகிறது. ஒருவன் வம்புச் சண்டைக்கு வந்து மற்றொருவனைத் தாக்குகின்றான். அப்படித் தாக்குகிறவனுக்குச் சரியான பாங்கில் பிரதி தீங்கு செய்வது முறையாகிறது. கோழைத் தனத்தை முன்னிட்டோ அல்லது அஹிம்சா தர்மத்தின் பெயராலோ தீங்கு செய்தவனுக்குப் பிரதி தீங்கு செய்யா விட்டால் போக்கிரிகளுடைய போக்கிரித்தனம் அதிகரித்து கொண்டே போகும். அத்தகைய கேட்டைத் தவிர்ப்பதற்குப் பிரதிகேடு செய்வதே முறையாகும். இன்னும் சிலர் வாய்ச் சண்டையில் நிபுணர்களாயிருக்கிறார்கள். தக்க காரணமில்லாது பிறரை வாய்க்கு வந்தபடி திட்டுகிறார்கள். அப்படித் திட்டுகிறவர்களை எதிர்த்துத் திட்டுவது பொருந்தாது. அன்னவர்களுக்கு அடிகொடுத்து வாயடக்குவதே முறையாகும்.

கேள்வி: *(310)* தேன் ஈ பூவுக்குத் தீங்கு செய்யாமல் தேன் அருந்தும். அதுபோல் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாது மனிதன் வாழமுடியமா?

பதில்: தேன் ஈ புஷ்பத்தினின்று தேன் எடுப்பதன் வாயிலாகவும், மகரந்தத்தூள் எடுப்பதன் வாயிலாகவும் அந்தச் செடிக்கு அல்லது மரத்துக்கு ஓர் உபகாரம் செய்கிறது. புஷ்பத்திலுள்ள மகரந்தத் தூள்களுள் ஆண்தூள், பெண்தூள் என்னும் இருபால் தூள்கள் உள. ஒரு புஷ்பத்திலிருந்து மற்றொரு புஷ்பத்திற்கு ஈ போகிறபொழுது அதன் தேன் உறிஞ்சும் குழாயில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற மகரந்தத்தூள் வேறு புஷ்பத்திற்குப் போவதன் மூலம் அந்தப் புஷ்பத்தில் உண்டாகும் விதை உறுதி மிக வாய்க்கப்பெற்றதாகிறது. தேன் ஈயின் வாயிலாக அந்த உதவி ஸ்தாவரத்துக்கு உண்டாகிறது. ஆதலால் தேன் ஈ வேறு எந்த உயிர்க்கும் தீங்கு செய்யாது நலனே செய்யும் பாங்குடையதாக அமைந்திருக்கிறது. அத்தகைய அமைப்பை இயற்கையின்கண் காண்பது அரிதிலும் அரிது. பொதுப்பட உயிர் வாழும் ஜீவ ஜந்துக்கள் பரஸ்பரம் நலன் புரிந்து கொள்ளுவது ஒருபுறம் இருக்க ஏதேனும் ஒருவிதத்தில் வேறு சில உயிர் வகைகளுக்குத் தீங்கையோ அழிவையோ செய்யாது எந்த உயிரும் வாழ்ந்திருக்க முடியாது. அந்த நியதிக்கு மனிதனும் உட்பட்டவனாகிறான். மனிதன் உண்ணும்

உணவு உயிர்த்தத்துவம் நிறைந்தது. ஒவ்வோர் அரிசியிலும், இலையிலும், காயிலும் உயிர் இருக்கிறது. அத்தகைய உயிரைத் துடைத்துத் தள்ளாது மனிதன் உயிர் வாழ்ந்திருக்க முடியாது. எண்ணெய் அழிவதால் தீபம் எரிகிறது. அங்ஙனம் ஸ்தாவர ஜங்கம உயிர் வகைகளை அழிப்பதால் மனிதன் உயிர் வாழ்ந்திருக்கிறான். இத்தகைய கேட்டைத் தவிர்க்க அவனுக்கு இயலாது. தான் வாழ்ந்து வருவதில், கேட்டுக்கு ஈடாகத் தன்னுடைய ஜீவிதம் மற்றவர்களுக்குப் பயன்படும்படி வாழ்ந் திருப்பது ஒன்றே தான் விளைவித்த கேட்டுக்கு ஈடாகிறது.

மக்களுள் சிலர் பிறர்க்குத் தீங்கு செய்வதிலேயே ஊக்கம் படைத்திருக்கின்றனர். அது அரக்கத்தன்மை. முற்றிலும் அதைத் தவிர்க்க வேண்டும். உணவு உண்ணுதல் என்னும் செயலை மனிதன் ஒதுக்கிவைக்க முடியாது. அதனால் விளையும் தீங் கையும் தவிர்க்க அவனுக்கு இயலாது. அதற்கு ஈடாக அவன் பன்மடங்கு அதிகமாக உலகுக்கு தன் உழைப்பின் வாயிலாகப் பயன்பட்டு வருவதே தீங்கைக் குறைப்பதற்கு உற்ற உபாயமாம்.

கேள்வி: (311) **'பிறரிடத்துக் குற்றம் காணாதிருந்து பழகு' என்பது அன்னை சாரதாதேவியாரின் உபதேசமொழி. குற்றத்தை எடுத்துக்காட்டினால்தானே மற்றவர்கள் திருந்து வார்கள்.**

பதில்: அன்னை சாரதாதேவியார் தமது ஜீவிதத்தில் எந்த நல்லொழுக்கத்தைப் பழகினாரோ அதே நல்லொழுக்கத்தை அவர் மற்றவர்களுக்கும் எடுத்துப் போதித்தார். அவர் பரமஹம்ச தேவரோடு தக்ஷிணேசுவர ஆலயத்தில் வாழ்ந்திருந்தபொழுது தீவிரமான ஆத்ம சாதனங்களில் ஈடுபட்டிருந்தார். அக்காலத்தில் அவர் நிறை நிலாவைப் பார்த்து இங்ஙனம் பிரார்த்தனை பண்ணினார். "வெண்ணிலாவே! நீ உலகனைத்துக்கும் இனி மையையே வழங்குகிறாய். யாருக்கும் நீ இன்னாதது செய்வ தில்லை. உன்னைப் போல் நானும் மாசற்றவள் ஆவேனாக. வெண்ணிலாவே உன்னிடத்தும் ஆங்காங்குச் சிறு கறைகள் தென்படுகின்றன. அத்தகைய மாசு ஏதும் என் உள்ளத்தில் படியாதிருக்கும்படி நீ என்னை ஆசிர்வதிப்பாயாக. யாரிடத்துமே நான் குற்றம் காணலாகாது. ஆங்காங்கு இருக்கும் குணங்களே

என் உள்ளத்தில் படிவனவாகுக" இது அன்னையாரின் பிரார்த்தனை. அதன்படியே அவருடைய ஜீவிதம் புனிதமானதாக அமைந்திருந்தது. எத்தகைய குணக்கேடரிடத்தும் கேடு காணாத தூய மனம் படைத்தவராக அவர் வாழ்ந்திருந்தார்.

பிற்காலத்தில் அன்னையாரின் தோழியாகிய யோகினி அம்மை வேலைக்காரி ஒருத்தியிடம் அமைந்திருந்த குறைகளை முன்னிட்டு அவள் மீது சீற்றம் கொண்டு வன்மொழிகளை வேண்டியவாறு கையாண்டாள். அதைக் கேட்ட அன்னையார் "யோகினி! யாண்டும் இன்சொற்களையே இனிது எடுத்து வழங்கு. யாரையும் கடிந்துகொள்ள வேண்டாம்" என்றார். அதற்கு மறுமொழியாக யோகினி அம்மை கொடுத்த விடையாவது: "தாயே நான் ஏன் கோபித்துக் கொள்ளுகிறேன் என்பதைத் தங்களிடம் சொல்லுதலில் பயன் ஏதுமில்லை. பிறர் செய்த குற்றத்தை எவ்வளவு தான் எடுத்து விளக்கினாலும் தாங்கள்தாம் அதைக் குற்றமாகக் கருதுவது இல்லையே." அருள் அன்னையார் இயம்பிய மறுமொழியாவது: "குற்றம் காணுகிற பாங்கிலேயே உலகம் போய்க்கொண்டிருக்கிறது. நான் ஒருத்தி மட்டும் குற்றம் காணாவிட்டால் அது உலகத்துக்கு நஷ்டம் ஆகாது."

அன்னையார் படைத்திருந்த பொறுப்புணர்வும் அருள் நிலையும் உலகைப் பெரிதும் ஒழுங்குபடுத்துவதற்கு உதவின. அன்னையார் கையாண்டு வந்த பூமாதேவிக்கு நிகரான பொறை நிலையை வேறு யாரும் எளிதில் பெறமுடியாது. ஆயினும் உலகிலுள்ள குறைநிலைகளை நிறைநிலைகளாக மாற்றியமைப்பதற்கு அன்னையார் கையாண்ட முறையே சாலச்சிறந்த முறையாகும்.

இனி, நம் போன்றவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான் ஈண்டு எழுகிற கேள்வியாகும். நாம் நெருங்கிப் பழகுகிற மக்களிடத்துக் காணும் குறைகளை அன்போடும், அனுதாபத்தோடும் எடுத்துக் காட்டலாம். அப்படிக் காட்டுதலிலும் சீர்மை ஒன்று உண்டு. ஏளனம் பண்ணுகிற போக்கிலோ, அவமானப்படுத்துகிற போக்கிலோ குற்றத்தை எடுத்துக்காட்டினால் அதனின்று நலன் ஏதும் விளையாது. தக்க சந்தர்ப்பம் பார்த்து அமைதியாகவும், மறைமுகமாகவும்

அதை நம்மோடு சம்பந்தப்பட்டவர்களிடம் எடுத்துக் காட்டுவது சிறந்த முறை.

நமக்கு வேற்றாராக இருப்பவர்களிடம் காண்கிற குறை களைப் பெரிதும் கருத்தில் வாங்கிக் கொள்ளலாகாது. பார்க்கு மிடமெல்லாம் குறைகாண்கிற மனப்பான்மையை நாம் வளர்த் தால் நாம் ஒருபொழுதும் முன்னேற்றம் அடையமாட்டோம். அகத்தில் இருப்பதைத்தான் நாம் புறத்தில் காண்கிறோம். அகத்தில் தெய்வீகத்தை வளர்க்க வளர்க்கப் புறத்திலும் அத் தெய்வீகத்தைக் காணும் நல்லியல்பு தானாக வந்து வாய்க்கிறது.

கேள்வி: *(312)* வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் பல பிரச்னைகள் தோன்றுகின்றன. அப்போது கடவுளைச் சார்ந்திருப்பதா? கடமையைச் செய்வதா? அல்லது நாமே ஆராய்ச்சி செய்து பார்ப்பதா?

பதில்: அறிவைத் தீட்டிப் பலப்படுத்துவது வாழ்க்கையின் குறிக்கோள். நாள்தோறும் வடிவெடுக்கிற பிரச்னைகள் அறி வைத் தீட்டுதற்குப் பயன்படுகின்றன. பள்ளிக்கூடத்து உபாத்தி யாயர் மாணாக்கனுக்குக் கணக்குப்போட வீட்டு வேலை தருகிறார். அவன் தானே முயற்சி செய்யாது தன் வீட்டிலுள்ள முதியோர்களைக் கொண்டு வீட்டுக்கணக்கை முடிப்பானாகில் அதன் மூலம் அவன் அறிவு வளர்ச்சியடையாது. தான் உண்ணும் உணவைத் தானே ஜீரணம் பண்ணுதற்கு நிகராக முயன்று அவரவர் அறிவை அவரவரே முன்னேறச் செய்யவேண்டும். பிரச்னைகளைத் தீர்ப்பதற்குக் கடவுளைச் சார்ந்திருப்பது முறை யன்று: அது கடவுளின் செயலும் அன்று. கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணுவதன் வாயிலாக நாம் நம்முடைய திறமையைப் பலப்படுத்துகிறோம். பின்பு திறமையைக்கொண்டு நமக்குண்டாகும் பிரச்னைகளை நாமே சரிப்படுத்த வேண்டும். இது விஷயத்தில் முதியோர்களுடைய அபிப்பிராயம் கேட்கலாம்.

கேள்வி: *(313)* நாள்தோறும் வாழ்வாங்கு வாழ முயற்சி செய்கிறோம். அன்போடு வாழ்வைத் துவக்கினாலும் கோபம் வருகின்றது. இதன் காரணம் என்ன?

பதில்: வாழ்வாங்கு வாழ்ந்து வருவதாலேயே கோபம்

வராது என்று உறுதிகூற முடியாது. அன்போடு வாழ்கின்றவர் களுக்கும் சிலவேளைகளில் அடங்காத கோபம் வருகிறது. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்ளலாம். தாய் ஒருத்தி தான் பெற்றெடுத்த குழந்தையை அன்போடு வளர்த்து வருகிறாள். ஆயினும் சிலவேளைகளில் அக்குழந்தையை அவள் சினந்துகொள்கிறாள். அக்குழந்தையை அவள் அடிக்கவும் செய்கின்றாள். அக்குழந்தைக்கு அன்போடு கழுத்தில் தங்கச் சங்கிலி ஒன்றை அவள் அணிவிக்கிறாள். அந்தத் தங்கச்சங்கிலி உடலிலிருப்பதைக் குழந்தை ஆமோதிப்பதில்லை. கழுத்தினின்று அதைக்கழற்றி எடுத்து அது தூர வீசிப்போடுகிறது. அதைப் பார்த்த தாய்க்குக் கோபம் வருகிறது. குழந்தையின் கன்னத்தில் இரண்டு அறை அறைகின்றாள். குழந்தையின் கழுத்தில் மீண்டும் அந்தச் சங்கிலியை எடுத்து மாட்டுகிறாள். அடி பொறுக்கமாட்டாத குழந்தைக்கு அச்சங்கிலியின் மீது விருப்பம் இல்லாவிட் டாலும் அடிக்குப் பயந்துகொண்டு அதைப் போட்டுக்கொள்கிறது.

குழந்தையை அன்போடு வளர்க்கிற தாய் ஏன் அதை அடித்தாள் என்னும் கேள்வி வருகிறது. இக்கேள்விக்குப் பொருத்தமான விடை ஒரு கோட்பாட்டில் அடங்கியிருக்கிறது. தடைப்பட்ட ஆசை கோபமாக வடிவெடுக்கிறது. குழந்தைக்குத் தங்கச்சங்கிலி போட்டுப் பார்க்கவேண்டும் என்பது தாயின் ஆசை. அத்தகைய ஆசை குழந்தைக்கு இல்லை. ஆயினும் தாய் பூண்டிருந்த ஆசைக்கு அது பங்கம் பண்ணியதால் அது அடியுண்டது; துன்பத்துக்காளானது. எனவே எங்கெல்லாம் ஆசைக்குத் தடை வருகிறதோ அங்கு அது சினமாக வடிவெடுக் கிறது. சினம் பொல்லாதது. ஆசைக்கு அடிமையாய் இருப் பவர்கள் எல்லாரும் சினத்துக்கு ஆளாவார்கள். ஆசையை வென்றவர்களே கோபத்தையும் வெல்ல வல்லவர்களாகிறார்கள்.

கேள்வி: *(314)* குடிப்பது போன்ற பழக்கம் இறைவனின் படைப்புத் தானே? ஏன் அது புறக்கணிக்கப்படவேண்டும்?

பதில்: இறைவனுடைய படைப்பில் இரண்டுவிதப் பாங்குகள் இருக்கின்றன. உயிர்களை உய்விக்கும் பாங்கு நலன் எனவும் உயிர்களைப் பாழ்படுத்தும் பாங்கு தீங்கு எனவும் பாகுபடுத்தப்படுகின்றன. தீங்கு போன்று தென்படும்

ஒரு செயல் அதற்குப் பொருத்தமான சூழ்நிலையில் நலனாக வந்தமைகிறது. எனவே, இறைவனுடைய சிருஷ்டியில் அமைந்துள்ள செயல்களில் முற்றிலும் கெட்டது என்றோ முற்றிலும் நலன் என்றோ எதையும் பாகுபடுத்த முடியாது. நலனையும் கேட்டையும் சரியாகப் பாகுபடுத்துதற்கு அளவை யாக மற்றொரு கூறு அமைந்திருக்கிறது. சுயநலத்தைப் புறக் கணிக்கும் செயல்கள் எல்லாம் நலன் தரும் செயல்கள் என்றும் சுயநலத்தை வளர்க்கும் செயல்கள் எல்லாம் கேடுடையவை எனவும் வைத்துக்கொள்வது முற்றிலும் அவசியம்.

வெறியை உண்டுபண்ணும் கள்குடி தன்னளவில் கெட்டது. மிகைபடக் குடிக்கிறவன் மனத்தடுமாற்றம் அடைகின்றான்; விவேகத்தை இழக்கிறான். குடித்துப் பழகியவனுக்கு அதை ஒதுக்கிவைக்க இயலுவதில்லை. ஆகையினால் கள்குடி என்னும் கெட்ட செயலுக்கு அவன் அடிமைப்படுகின்றான்; அறிவை இழக்கின்றான். தனக்குத்தானே கேட்டைத் தேடிக்கொள்கின் றான். ஆதலால் குடிக்கும் பழக்கத்தைக் கெட்டதாக வைத்து அதை நிராகரித்தல் அவசியம். ஆனால் சில வேளைகளில் அளவாக அளந்தெடுத்துக் குடிக்கும் மதுபானம் மனிதனுக்கு உற்சாகத்தை ஊட்டுகிறது. சரீரத்துக்குண்டான ஆயாசத்தை நீக்குகிறது. அதன் பொருட்டு ஔஷதம் போன்று ஒரு சிலர் மதுபானத்தைப் பயன்படுத்தலாம். குளிர்ப் பிரதேசத்தில் வசிப் பவர்களுக்கு மதுபானம் ஒரு போக்கில் நலனைத் தருகிறது. அவர்களுடைய கொள்கை We drink but we don't get drunk- நாங்கள் மதுபானத்தை மருந்துக்கு நிகராக ஏற்கிறோம். ஆயினும் நாங்கள் மிகைப்படக் குடித்து மயக்கத்துக்கு ஆளாவ தில்லை என்பதாம். அவர்கள் செய்யும் முறையில் மதுபானம் பண்ணுவது பிழையாகாது. ஆயினும் மருந்து எங்ஙனம் ஆரோக்கியமாய் இருப்பவர்களுக்குத் தேவை இல்லையோ அதேவிதத்தில் மதுபானமும் மக்கள் எல்லார்க்கும் தேவையாக மாட்டாது. அதைத் தவிர்ப்பதே சாலச்சிறந்தது.

கேள்வி: *(315)* ரோஜாச் செடியானது நாள்தோறும் நல்லெண்ணத்துடன் தொடப்படுமானால் அதனிடத்துள்ள

முள்ளானது இல்லாமல் போய்விடுமா? தெளிவிக்க வேண்டுகிறேன்.

பதில்: இயற்கையின் பாங்கை நல்லெண்ணத்தைக் கொண்டு மாற்ற முடியாது. பசுவைக் கோமாதாவாகக் கருதுவது நம் நாட்டு ஐதிகம். பசுவைக் குளிப்பாட்டும் பொழுதும், அதற்குத் தீனி போடுகிறபொழுதும் அதனிடத்திருந்து பால் கறக்கிற பொழுதும் நல்லெண்ணத்தோடேயே அது தொடப்படுகிறது. ஆயினும் பசுவானது காலமெல்லாம் பசுவாகவேயிருக்கிறது. அது மனிதனாவதில்லை. ஸ்ரீ ரமண மஹரிஷி ஒரு பசுவை நாள்தோறும் தடவிக் கொடுத்து வந்தார். அதற்கு வாழைப்பழம் ஊட்டி வந்தார். அதனால் அப்பசு ஞானவான் ஆகவில்லை. ரோஜாச் செடியினின்று பரம பக்தர்கள் நல்லெண்ணத்துடனும், பக்தி பரவசத்துடனும் மலர் கொய்துகொண்டே வருகின்றனர். நல்லெண்ணத்துடன் ரோஜாச் செடிக்கு நீர் பாய்ச்சுகின்றனர். கிளைகளைத் துப்புரவு பண்ணுகின்றனர். வேர்ப்பகுதியைத் தொட்டு எரு விடுகின்றனர். அக்காரணங்களை முன்னிட்டு ரோஜாச் செடியினின்று முள் மறைந்து போகவில்லை. இன்னும் எத்தனை வருஷங்களுக்கு எத்தனை பரம பக்தர்கள் ரோஜாச் செடியைத் தீண்டி வந்தாலும் அதன் முள் அதைவிட்டுப் போகாது. முள் மயமாயிருப்பது ரோஜாச்செடியின் பாங்கு. அதை நல்லெண்ணத்தோடு தொடுவதால் அது வேறு ஓர் இனம் ஆகாது. ரோஜாச் செடி யாண்டும் முள் உடைத்த தாகவே இருக்கும். நல்லெண்ணத்தோடு தொடுவதின் மூலம் இயற்கையினுடைய பாங்கை யாருமே மாற்ற முடியாது.

கேள்வி: *(316)* இப்பிரபஞ்சத்தில் முன்னேற்றம் அடைதற்பொருட்டு உயிர் வகைகளுக்கிடையே ஏற்படும் போட்டி பொருந்துமா?

பதில்: இப்பிரபஞ்சம் முழுவதும் போட்டி மயமாய் அமைந்திருக்கிறது. ஸ்தாவரங்களாகிய மரம், செடி, கொடி களுக்கிடையிலும் போட்டி நிகழ்ந்து வருகிறது. வலிவு படைத்தவைகள், வலிவு அற்றவைகளை ஒழித்து அல்லது ஒதுக்கித் தள்ளி முன்னேற்றமடைகின்றன. புழு, பூச்சி முதலிய ஜங்கமங்களுக்கிடையில் போட்டியைக் காண்கின்றோம். நீரில்

வாழ்பவைகளுக்கிடையில் போட்டி நிகழுகிறது. பறவைகளுக் கிடையில் போட்டி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. விலங்கு இனங்களுக்கிடையிலும் இதே திட்டம் நிகழ்ந்து வருகிறது. கடைசியாக மக்களுக்கிடையிலோ போட்டிக்கும், போராட்டத் திற்கும் முடிவே கிடையாது. இங்ஙனம் பிரபஞ்சம் முழுதும் போட்டி மயமாக இருக்கிறது. ஆகவே இது பொருந்துமா என்னும் கேள்விக்கு இடமில்லை. உயிர் வாழ்பவைகளுக்கு இடையிலுள்ள அடிப்படைத்திட்டம் போட்டி. வலிவு படைத்த வைகளே வாழ்க்கைக்குத் தகுதி உடையவைகளாய் இருந்து வருகின்றன. போட்டியில் பலதடவை தோல்வியடைந்தாலும் திரும்பத் திரும்பப் போட்டி போட்டுத் தன்னைத் தகுதியுடைய தாக ஒவ்வோர் உயிரும் அமைத்துக் கொள்ளுகிறது. போட்டி மயமாயிருப்பது சிருஷ்டி. அமைதி மயமாயிருப்பது பிரளயம். சிருஷ்டிக்கு வந்துள்ளவைகள் போட்டி போட்டே ஆக வேண்டும். அதை நிறுத்துபவர்கள் அழிந்துபட்டுப் போவார்கள். வாழ்க்கைக்குத் தன்னைத் தகுதியுடையவனாக அமைத்துக் கொள்ளுதல் என்பதன் உட்பொருள் வாழ்வு என்னும் போராட் டத்தில் வெற்றிகரமாக ஈடுபடத் தன்னை ஆயத்தப் படுத்துதலேயாம்.

போட்டியிட்டு மேல்நிலைக்கு வருகிற மனிதன் பிறகு தன்னிடத்துள்ள நலன்களையெல்லாம் மனமுவந்து பிறர் முன்னேற்றத்திற்காக வழங்குகிறான். சுயநலத்திற்காக வாழாது பரநலத்துக்கெனவே அவன் வாழ்ந்திருக்கிறான். அவன் செயல் யக்ஞம் அல்லது வேள்வி எனப்பெயர் பெறுகிறது. அத்தகைய செயலின் விளைவாக அவன் பிறவிப் பெருங்கடலைக் கடந்து அதீத நிலைக்குப் போகிறான். இதுவே பிரபஞ்ச வாழ்வைப் பற்றிய உண்மை. ஆதலால் உயிர் வகைகளனைத்தும் போட்டியின் வாயிலாகத் தங்களுடைய தரத்தை மேன்மைப் படுத்தி வருவனவாகுக. மேலாம் நிலையை எட்டியான பிறகு தாங்கள் படைத்துள்ள நலன்கள் யாவையும் பிறர் நலனுக்காக வழங்கி வாழ்வை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். வழங்கு தற்கான பெருநிலையை அடைந்திருப்பவர்கள் அரியரிலும் அரியர். அந்நிலையை எட்டும்வரையில் மக்கள் போட்டி யிடுவதை நிறுத்த முடியாது.

கேள்வி: (317) Motivation is an important factor in psychology. What should be the motive for higher life?

மனோதத்துவ சாஸ்திரம் அல்லது உள நூலில், நோக்கம் முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. வாழ்க்கையில் மேன்மையுறுவதற்கு மனிதன் கொள்ளவேண்டிய நோக்கம் யாது?

பதில்: மக்கள் எல்லாரிடத்தும் வெவ்வேறு விதமான நோக்கங்கள் இருக்கின்றன. பணக்காரன் ஆகவேண்டும் என்பது ஒருவனுடைய நோக்கம், பண்டிதன் ஆகவேண்டும் என்பது மற்றொருவனுடைய நோக்கம். இங்ஙனம் கீர்த்தி, அந்தஸ்து, பதவி ஆகிய நோக்கங்களால் தூண்டப்பெற்று அவைகளைப் பெற மனிதன் முயன்று வருகிறான். பெறுகிற பேறுகளுள் தெய்வீகப் பெற்றியே சாலச் சிறந்தது. கொடிய விலங்கின் பாங்கைப் பெறுதலும் கீழோனாக இருப்பதும் மேலோனாவதும் ஆகிய பாங்குகளனைத்தும் மனிதனுக்குச் சாத்தியம். இத்தனை விதச் சாத்தியங்களுள் தெய்வீகப் பெற்றியோடு இலங்குவது சாதனங்களுள் ஒப்புயர்வற்ற பெரிய நிலையாகும்.

"அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்."

என்பது வேதவாக்கு. மக்கள் தாமே இந்த வாக்குக்கு எடுத்துக்காட்டாக யாண்டும் இலங்கிக் கொண்டிருக்கின்றனர். உயிர்கள் அனைத்தையும் அன்போடு நேசித்தல், தன்னுடைய வாழ்வு மற்றவர்களுக்கு நல்ல விதத்தில் பயன்படும்படி பணி விடை பண்ணுதல், கடவுள் பக்தியை வளர்த்தல் ஆகிய பேரியல்புகளைக் கையாளுவதன் மூலம் மனிதன் மேலோன் ஆகலாம். ☆

நாணல் ஒன்று தன்னளவில் நீரின்மீது மிதக்கிறது. அதன்மீது ஒரு சிறு குருவி உட்கார்ந்தாலும் அது மூழ்கிப்போம். ஆனால் பெரிய மரக்கட்டை ஒன்றோ தான் மட்டும் மிதப்பது அல்ல. அது மிதக்கும் பொழுது பலபேர் அதன்மீது உட்கார்ந்திருக்கவும் இடங்கொடுக்கிறது. தங்கள் சொந்த முக்தியைக் கவனித்துக் கொள்பவர்கள் நாணல் போன்றவர்கள் . உலகை உய்விக்க வந்த பெருமக்கள் பெரிய மரக்கட்டை போன்றவர்கள்.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்